எலிசா

டேவிட் ரோப்பர்

1. தேவனுடைய நாளுக்கான அவருடைய மனிதர்
   (1இராஜாக்கள் 9:14-21: 2இராஜாக்கள் 2:1-18)
2. பெரிய காரியங்களைச் செய்த மனிதர்
   (2இராஜாக்கள் 2:19-25: 8:4)
3. மூன்று இராணுவங்களைக் காப்பாற்றிய மனிதன்
   (2இராஜாக்கள் 3:1-27)
4. ஒரு குடும்கத்தைக் காப்பாற்றிய மனிதர்
   (2இராஜாக்கள் 4:1-7)
5. ஜீவனைக் கொடுத்த மனிதர்
   (2இராஜாக்கள் 4:8-17)
6. ஜீவனை உயிர்ப்பித்த ஒரு மளிதர்
   (2இராஜாக்கள் 4:18-37: 8:1 , 5)
7. ஜீவனைப் பாதுகாத்த ஒரு மனிதர்
   (2இராஜாக்கள் 8:1-6)
8. பகிர்ந்துகொண்ட ஒரு மனிதன்
   (2இராஜாக்கள் 4:38-44)
9. கரிசனைப்பட்ட ஒரு மனிதன்
   (2இராஜாக்கள் 6:1-7)
10. ஒரு வாழ்வை ஆசிர்வதித்த மனிதன்
   (2இராஜாக்கள் 5:1-19)
11. வாழ்க்கை ஆசிர்வதிக்கப்பட்ட ஒரு மனிதன்
   (2இராஜாக்கள் 5:1-17)
12. வாழ்க்கை சபிக்கப்பட்ட ஒரு மனிதன்
   (2இராஜாக்கள் 4:14, 27, 29, 42, 43, 5:5, 10, 14-16, 19-27: 6:15: 8:4,5)
13. கண்களை திறந்த மற்றும் கண்களை மூடிய ஒரு மனிதன்
   (2இராஜாக்கள் 6:8-17)
14. இரக்கத்தைக் காண்பித்த ஒரு மனிதன்
   (2இராஜாக்கள் 6:18-23)
15. சத்தியத்தை பேசிய ஒரு மனிதன்
   (2இராஜாக்கள் 6: 24-7:20)
16. நற்செய்தியைப் பகிர்ந்து கொண்ட மனிதர்கள்
   (2இராஜாக்கள் 7:3-16)
17. துக்கித்து அழுத ஒரு மனிதன்
   (2இராஜாக்கள் 8: 7-10:36)
18. அழிக்கப்பட முடியாதிருந்த ஒரு மனிதன்
   (2இராஜாக்கள் 11:1-13:25)

1

தேவனுடைய நாளுக்கான அவருடைய மனிதர்

[1 இராஜாக்கள் 19:14–21; 2 இராஜாக்கள் 2:1–18]

எலியாவின் ஊழியம் சிறப்பானதாயிருந்தது. அவருடைய முயற்சியின் விளைவாக, வட இராஜ்யத்தில் பாகாலியம் கட்டுப்படுத்தப்பட்டது. ஆகாபின் குமாரனாகிய யோராம் ஆட்சிக்கு வந்த போது, "தன் தகப்பன் பண்ணுவித்த பாகாலின் சிலையை அகற்றிவிட்டான்" (2 இராஜாக்கள் 3:2ஆ). இருப்பினும், யோசபேல் உயிரோடிருக்கும் வரையிலும், பாகால் வழிபாடு தொடர்ந்து கொண்டிருந்தது (காண்க 1 இராஜாக்கள் 16:31; 2 இராஜாக்கள் 10:18-28). யெரோபெயாம் திரும்ப அறிமுகப்படுத்தின விக்கிரக வழிபாடு உட்பட, மற்ற தீமைகள் தொடர்ந்துகொண்டுதானிருந்தன (2 இராஜாக்கள் 3:3). இந்த நாட்கள் இன்னும் கலக்கம் நிறைந்த நாட்களாகவே இருந்தன. தேவனுக்கு இஸ்ரவேலில் இன்னும் அவருடைய மனிதர் தேவைப்பட்டார்.

எலிசா அந்த நாளுக்கான தேவனுடைய மனிதராய் இருந்தார். எலியாவை போன்று இவர் நன்கு அறியப்பட்டவரல்ல. இருப்பினும் அவர் ஒரு ஆச்சரியமான மனிதராயிருந்தார். 2 இராஜாக்கள் புத்தகத்தை வாசியுங்கள்; எலிசாதான் இப்புத்தகத்தின் கதாநாயகன். இராஜாக்களின் வாழ்க்கையைக் குறித்தல்ல, இவருடைய வாழ்க்கையே பிரதானமாய் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எலிசாவின் ஊழியத்தில் நிகழ்ந்த ஏறக்குறைய இருபது நிகழ்வுகள் வேதாகமத்தில் பதியப்பட்டுள்ளன. அவருடைய வாழ்வு பற்றிய நம்முடைய பாடம், அவர் தீர்க்கதரிசியாய் அழைக்கப்பட்டதிலிருந்து துவங்குகிறது.

தேவன் தெரிந்து கொண்ட மனிதர்
(1 இராஜாக்கள் 19:14-21)

புகார்களும் - பதில்களும்

எலிசாவைப்பற்றி முதன் முறை 1 இராஜாக்கள் 19 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். சோர்ந்துபோன எலியா ஓரேப் மலை குகையொன்றில் அடைபட்டு கிடக்கிறார். அவர் பாகாலின் தீர்க்கதரிசிகளை கர்மேல் மலையில் தோற்கடித்தார், ஆனாலும் இஸ்ரவேல் தேசத்தில் அவர் மாற்றத்தை காணவில்லை. அவர் நான்கு புகார்களை தேவனிடத்தில் வைத்தார்:

> *சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய*

தீர்க்கதரிசிகளை பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள், நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் (வசனம் 14).

யெகோவா எலியாவின் புகார்களுக்கு ஒவ்வொன்றாக பதில் அளித்தார். முதலாவது, "இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்" என்று தீர்க்கதரிசி கூறினார். தேவன் அவரிடம் "ஆசகேலைச் சீரியாவின் மேல் ராஜாவாக அபிசேஷகம்பண்ணு என்றார்" (வசனம் 15). சீரியாவின் மேல் ராஜாவாக ஆசகேல் இஸ்ரவேல் தேசத்தை தண்டிப்பார்.

எலியாவின் இரண்டாவது புகார், கர்த்தருடைய பலிபீடங்கள் இடித்து தள்ளப்பட்டு விட்டன என்பதாயிருந்தது. ஆகாபும் யேசபேலும்தான் இந்த தெய்வ நிந்தனையான செயலை தூண்டிவிட்டவர்களாயிருந்தனர். இதற்கு பதிலுரைப்பாக, கர்த்தர் யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணு என்றார் (வசனம் 16அ). யெகூ ஆகாபின் அரசாட்சியை அழித்து, பாகால் வணக்கத்தை ஒழித்துப்போடுவான்.

மூன்றாவதாக, "இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தால் கொன்றுபோட்டார்கள் என்றார்" (வசனம் 14ஈ). இதற்கு பதிலுரைப்பாக, கர்த்தர், "இதைப் பற்றி கவலைப்படாதே, வேறு ஒருவரை நான் பணி அமர்த்துவேன்" என்றார். அவர் எலியாவைப்பார்த்து "ஆபேல்மெ - கொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு" என்றார் (வசனம் 16ஆ).

எலியாவுக்கு கொடுக்கப்பட்ட உத்தரவுகள் அவனுக்கான ஊழிய கட்டளைகளாயிருந்ததுபோல, எலிசாவுக்கான பணிபொறுப்புகளாயும் இருந்தன. இது தொடர்பாக சில கருத்துக்கள் சொல்வது அவசியமாயிருக்கிறது. துவக்கமாக, "அபிஷேகம்பண்ணுதல்" என்ற வார்த்தை உருவகநடையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வழக்கமான அபிஷேகம் பண்ணும் விதம் ஒருவருடைய தலையின்மேல் ஒலிவ எண்ணெயை ஊற்றுவதாக இருந்தது; நமக்கு தெரிந்தவரை யேகூவின் தலையின்மேல் எண்ணை ஊற்றப்பட்டது, அது எலியாவினால் செய்யப்படவில்லை (2 இராஜாக்கள் 9:1-6). "அபிஷேகம் பண்ணுதல் என்பதின் அடிப்படை பொருள் ... தேவனுடைய பணிக்காக *பிரித்துவைப்பது* என்பதை நினைவில் வையுங்கள்."[1]

மேலும், எலியா தேவனுடைய பணிக்கென பிரித்துவைத்து ஏற்படுத்தின மூவரில் எலிசா ஒருவராக இருந்தார். மற்ற இருவர் - ஆசகேல் மற்றும் யெகூ - இவர்கள் எலிசாவினாலும் அவருடைய மாணவர் ஒருவராலும் பணிநியமனம் செய்யப்பட்டனர் (காண்க 2 இராஜாக்கள் 8:7-15; 9:1-10). கீழ்வரும் வரைபடம் தொடர் நிகழ்ச்சியை விவரிக்கும்:

எலியா → எலிசா (1 இராஜாக்கள் 19:19-21)
↓
எலிசா → ஆசகேல் (2 இராஜாக்கள் 8:7-15)
↓
மாணவர் → யெகூ (2 இராஜாக்கள் 9:1-10)

தேவனுடைய கண்ணோட்டத்தில், எலியா இதை எல்லாம் செய்தார். எலியாவின் வேலைக்காரன் (எலிசா) ஆசகேலை பணியமர்த்தின போது, அது எலியா அவனை பணியமர்த்தினதாகவே இருந்தது. அதேபோல், எலிசாவின் வேலைக்காரர் யெகூவை அவருடைய கட்டளைப்படி பணியமர்த்தின போது, அது எலிசா தாமே செய்ததாயிருந்தது. மறுபடியுமாக, செயல் முறையில் எலியா எலிசாவின் மூலம் செயலாற்றினார்.

ஓரேப் மலையில் தேவன் எலியாவுக்கு செய்த பதிலுரைப்புக்குத் திரும்புவோம்: "சம்பவிப்பதாவது, ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனை யெகூ கொன்றுபோடுவான், யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்றுபோடுவான்" (1 இராஜாக்கள் 19:17). நம்முடைய பாடங்களின் படிப்பினூடே ஆசகேல் மற்றும் யெகூவின் இரத்தம்சிந்தும் நடவடிக்கைகளை நாம் பார்ப்போம். எலிசாவின் ஊழியம் அடிப்படையில் ஆவிக்குரியதாக இருக்கும்போது, அவர்களுடைய வேலை சரீரம் சார்ந்தாக இருக்கும். "அநீதியானவர்களை" "மரணத்திற்கு உட்படுத்துவதற்கு" எலிசா பயன்படுத்தும் பிரதான "ஆயுதம்," "தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொள்ளுதலாயிருக்கும்" (எபேசியர் 6:17; காண்க எபிரேயர் 4:12). அந்த வசனம் கீழ்ப்படியாதோருக் கெதிரான நியாயத்தீர்ப்பை அறிவிக்கும்.

எலியா நான்காவது புகாரை கூறினார்: தான் மாத்திரம் மீந்திருப்பதாக கூறினார். "பாகாலுக்கு முடங்காதிருக்கிற" … "7,000 பேர் இஸ்ரவேலில் இன்னும் மீந்திருக்கிறார்கள்" என்பதை தேவன் உறுதிசெய்தார் (1 இராஜாக்கள் 19:18). கர்த்தருடைய வார்த்தைகள் எலியாவை பெலப்படுத்தின. "அப்படியே அவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போய், …" என்று வசனம் 19 கூறுகிறது. மீண்டுமாக, அவர் இஸ்ரவேலில் தேவனுடைய மனுஷரானார்!

சவால்கள் - மற்றும் மறுமொழிகள்

எலியா தேவனுடைய கடைசிகட்டளைக்கு முதலில் கீழ்ப்படிந்தார் (வசனம் 16ஆ). வளமான யோர்தான் பள்ளத்தாக்கின் வடமுனையிலுள்ள ஆபேல்மெகோலேக் பட்டணத்தை அடைகிற வரை சுமார் 150 மைல்கள் வடக்கு நோக்கி பயணித்தார் (இப்புத்தகத்தில் உள்ள வரைபடத்தை காணவும்). "சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை கண்டுபிடிக்கிறவரை அந்த பகுதியை தேடினார்" (வசனம் 19ஆ). நாம் எலிசாவின் ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றி சிறிதளவே அறிகிறோம். பாகாலுக்கு முடங்காதிருந்த "7,000" பேரில் இவரது குடும்பமும் ஒன்றாக இருந்தது. அவனுடைய பெற்றோர் அவனுக்கு "எலிசா" என பெயரிட்டனர், அதன் பொருள் "என் தேவன் இரட்சிப்பானவர்" அல்லது "என் தேவன் இரட்சிக்கிறார்" என்பதாகும்.[2]

எலியா முதன்முறை எலிசாவை கண்டபோது, அவர் ஏர் உழுதுகொண்டிருந்தார் (வசனம் 19இ). மூன்றரை ஆண்டு வரட்சி இப்போது தான் முடிவுக்கு வந்தது. (1 இராஜாக்கள் 17:1; 18:1, 2, 41-45; காண்க யாக்கோபு 5:17, 18), ஆகவே மூன்றாண்டுகளில் இது அவர்களுடைய முதல் விளைச்சலாக இருக்கும்! எலிசாவுக்கு முன்பாக, "பன்னிரண்டு ஏர்கள் இருந்தன, அவன் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருந்தான்" (வசனம் 19ஈ). வாக்கிய அமைப்புப்படிபார்த்தால், எலிசா மற்ற பதினொரு ஏர் ஓட்டிகளையும் ஏதோ ஒரு வகையில் வழிநடத்திக் கொண்டிருந்தார் என தெரிகிறது எலிசாவின்

குடும்பத்திற்கு பன்னிரண்டு ஏர் மாடுகள் சொந்தமாக இருந்திருக்குமானால் - அவர்களுக்கு வேலைக்காரரும் இருந்தார்கள் - அப்படியானால் அவர்கள் செல்வ செளிப்பான ஒரு குடும்பமாக இருந்தார்கள்.

நடைபெறும் "நேர்காணல்" வழக்கத்துக்கு மாறானது. எலியா எலிசாவை பார்த்து எதுவும் சொல்லவில்லை. அவன் இருந்த இடத்திற்கு அவர் சென்று, "அவன் மேல் தன் சால்வையை போட்டான்" (வசனம் 19உ). எலியாவின் சால்வையானது ஆட்டுத் தோல், ஆட்டு ரோமம் மற்றும் பிற கடினமான பொருள்களால் உருவான எளிய மேல் ஆடையாயிருந்தது. செப்துவஜிந்த்தின் (பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு) 2 இராஜாக்கள் 2:8ல் "சால்வை" என்பதற்கு பதிலாக "ஆட்டுத்தோல்" என்றுள்ளது. மோசே கோலை பயன்படுத்தினது போல, எலியா சால்வையை பயன்படுத்தினார். எலியாவின் சால்வையானது "பணிஅடையாள வில்லை"யாகவும் மற்றும் அற்புதங்களை செய்வதற்கான கருவியாகவும் மாறியிருந்தது.

அந்த காட்சியை கற்பனை செய்து பாருங்கள்: ஒரு நாள் எலிசா ஏர் உழுதுகொண்டிருக்கையில், எங்கிருந்தோ கரடுமுரடான தோற்றமுடைய ஒரு முதியவர் தோன்றுகிறார். அந்த மனிதர் அவனை பார்த்து, இரவில் போர்வையாக பயன்படுத்தியதால் கிழிந்துபோன, உடல் வியர்வையினாலும் பிரயாண புழுதி யினாலும் நனைந்துபோன, கரடு முரடான சால்வையை தனது தோள்களில் இருந்து எடுத்து, ஒரு வார்த்தையும் சொல்லாமல், அந்த சால்வையை எலிசாவின் தோள்களின் மேல் போட்டார்.

இந்த விநோதமான செயலுக்கு நான் எப்படி பதிலுரைத்திருப்பேன் என்பது எனக்கு தெரியாது. ஆனால் ஏதோ ஒரு வகையில் எலியாவின் செயலின் முக்கியத்துவத்தை எலிசா புரிந்து கொண்டார். ஒருவேளை தேவன் அவனுக்கு தெய்வீகமான புரிந்துகொள்ளுதலை கொடுத்திருக்கலாம். சாத்தியமான வகையில், எலிசா எலியாவைப் பற்றியும் அவருடைய புகழ்மிக்க சால்வையைப் பற்றியும் அறிந்திருந்த நிலையில், இந்த செயலின் அர்த்தம் என்ன என்பதை அறிந்திருந்தார். நடைமுறையில் முதிய தீர்க்கதரிசி சொன்னது, "நீ என்னை பின்பற்றி வா, இப்போது நீ என் சால்வையின் கீழ் இருப்பதுபோல, நான் உன்னை பராமரிப்பேன். எனது பணியிடத்தை நிரப்பும்படி உனக்கு நான் பயிற்சி கொடுப்பேன் என்பதாக இருந்தது."

எலியா எலிசாவின் மேல் தன் சால்வையை போட்ட பிறகு, அவர் சாலை வழியே நடந்து சென்றார். எலிசா உடனே பதிற்செய்தார். தேசத்தை அழித்துக் கொண்டிருந்த ஆவிக்குரிய புற்றுநோய் பற்றி அவர் உள்ளம் வருந்திக் கொண்டிருந்திருக்கும். "அப்பொழுது அவன் மாடுகளை விட்டு, எலியாவின் பிறகே ஓடி, நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவு கொடும், அதற்குப் பின் உம்மைப் பின்தொடர்வேன் என்றான்" (வசனம் 20அ). வேறு வார்த்தையில் சொல்வதென்றால், "நான் போக ஆயத்தமாயிருக்கிறேன். எனது பெற்றோரிடம் பிரியாவிடை சொல்லிவர எனக்கு ஒரு நிமிடம் கொடுங்கள்."

இந்த வேண்டுகோளுக்காக எலிசா குறைகூறப்பட்டார். அவர், "கலப்பையின் மேல் தன் கையை வைத்து" பிறகு "பின்னிட்டுப் பார்க்கிற" ஒரு சீஷனுக்கு ஒப்பிடப்பட்டார் (காண்க லூக்கா 9:61, 62). 1 இராஜாக்கள் 19ஆம் அதிகாரத்தில் சொல்லப்படும் எலிசாவுக்கும் லூக்கா 9ஆம் அதிகாரத்தில் சொல்லப்படும்

சீஷராக விரும்புகிறவர்களுக்குமான வித்தியாசம் அவர்கள் இருதயங்களின் ஈடுபாட்டைபொறுத்தது. லூக்கா 9:57-62 இல் குறிப்பிடப்படுகிறவர்கள் சாக்குபோக்கு சொன்னார்கள். ஆனால், எலிசா சாக்குபோக்கு எதுவும் சொல்லவில்லை. தேவனுடைய ஊழியத்தில் எலியாவை பின்பற்றுவதற்கு தன் வாழ்வை அற்பணிக்க அவர் ஆயத்தமாயிருந்தார்.

அதற்கு அவன்; "போய் திரும்பி வா, நான் உனக்குச் செய்ததை நினைத்துக் கொள்" என்றான் (1 இராஜாக்கள் 19:20ஆ). இந்த வார்த்தைகள் பல விதங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. ஆனால், எலியா எலிசாவுக்கு தனது பெற்றோர் மற்றும் நண்பர்களிடம் பிரியாவிடை பெற்று விரைவில் திரும்பிவர அனுமதித்தார் என்று தோன்றுகிறது. "நான் உனக்குச் செய்ததை நினைத்துக் கொள்?" என்று சொன்ன திலிருந்து, எலியா பின்வரும் கருத்தை உணர்த்தியிருக்கலாம், "நான் உன்னை தீர்க்கதரிசியாக இருக்கும்படி அழைத்துள்ளேன், நீ உன் குடும்பத்தோடுள்ள எல்லா உறவுகளையும் முறித்துக் கொள்ள வேண்டும் என்பது அதின் பொருள் அல்ல, நீ என்ன செய்யப்போகிறாய் என்பதை அவர்களிடம் எடுத்துரைத்த பின்பு; என்னோடு வா."

> *அப்பொழுது அவன் [எலிசா] இவனை [எலியாவை] விட்டுப் [பெற்றோரிடத்திற்குப்] போய், ஓர் ஏர் மாடுகளைப் [அவன் உழவுக்குப் பயன்படுத்தின] பிடித்து அடித்து [பலியிட்டு] ஏரின் மரமுட்டுகளால் [மரநுகமும் கலப்பையும்] அவைகளின் இறைச்சியை [பலியில் பயன்படுத்தாத பகுதி] சமைத்து ஜனங்களுக்குக் கொடுத்தான்; அவர்கள் சாப்பிட்டனர் (வசனம் 21அ).*

நான் வாழும் பகுதியில், எலியா "தனக்கு பின்னால் தன் பாலங்களை எரிந்து விட்டான்" என்று சொல்வோம். அவர் இனிமேலும் ஒரு விவசாயியாக இருக்கமாட்டார்; வாழ்க்கையின் அந்த பகுதி முடிந்துவிட்டது. பிரிவு உபச்சார விருந்துக்கு பிறகு, "... அவன் எழுந்து, எலியாவுக்குப் பின் சென்று அவனுக்கு ஊழியஞ் செய்தான்" (வசனம் 21ஆ).

எலிசா அடுத்து வந்த 10ஆண்டுகளாக எலியாவோடு பயணித்து, தனக்கு முன்பிருந்த ஊழியத்திற்காக தன்னை ஆயத்தம் செய்தார். 2 இராஜாக்கள் 2ஆம் அதிகாரம் வரை நாம் எலிசாவை குறித்து எதுவும் வாசிப்பதில்லை, ஆனால் கிடைக்கும் சில தகவல்கள் "நான் உம்மை பின் தொடர்வேன்" (வசனம் 20; காண்க 2 இராஜாக்கள் 2:2) என்று தான் சொன்னபடி அவைகளுக்கானவைகளை அவர் செய்து கொண்டிருந்தார் என்று என்னை நம்பும்படி செய்கிறது. நீங்கள் 1 இராஜாக்கள் 20 - 2 இராஜாக்கள் 1 வரையுள்ள பகுதியை வாசிக்கையில் அது எலிசா எலியாவோடு பின்வரும் தத்ரூபமான காட்சிகளில் உடன் இருந்தார் என்பதை படம் பிடித்து காட்டுகிறது:

- *எலியா நாபோத்தின் திராட்சை தோட்ட விஷயத்தில் ஆகாப் இராஜாவை எதிர்கொண்டது (1 இராஜாக்கள் 21).*
- *அகசியா இராஜாவால் அனுப்பப்பட்ட படையை எலியா எதிர் கொண்டது (2 இராஜாக்கள் 1).*

எப்படியிருப்பினும், எலிசா எலியாவோடு "உடன் தீர்க்கதரிசியாக" அல்லது

“இரண்டாம் நிலை தளபதியாக” செல்லவில்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள். 1 இராஜாக்கள் 19:21ன்படி, எலிசா எலியாவுக்கு “ஊழியம் செய்தான்.” எலிசா ஒரு வேலைக்காரனாக உடன் சென்றார். எலியாவுக்கு அவர் என்ன செய்தார்? எலியாவின் தேவைகள் எவைகளாக இருப்பினும் அவைகளையெல்லாம் அவர் சந்தித்தார். 2 இராஜாக்கள் 3:11 இல் எலிசா எலியாவின் கைகளுக்கு தண்ணீர் வார்த்தவனாக விவரிக்கப்பட்டுள்ளான் - இது ஒரு எளிய பணி.

அந்த 10 ஆண்டுகளில், எலிசா நேரடி பணி பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தான். பின்னர் தீர்க்கதரிசியின் புத்திரர், “எலியாவின் ஆவி எலிசாவின் மேல் இறங்கியிருக்கிறது” என்று சொன்னார்கள் (2 இராஜாக்கள் 2:15). எப்படியிருப்பினும், எலிசா எலியாவின் சால்வையை பெற்று யோர்தான் நதி தண்ணீரை அடிப்பதற்கு முன்பாகவே அவரது ஆவியைபெற்றவராக இருந்தார். அவர் நீண்ட, குளிர்ந்த இரவுகளை வெளியில் தீர்க்கதரிசிகளோடு செலவிட்டபோதே எலியாவின் ஆவியில் பங்குபெற்றவராக இருந்தார். ஒரு தீர்க்கதரிசியாயிருப்பது எப்படிப்பட்டது என்பதை அவர் எலியாவோடு புளுதி படிந்த வட இராஜ்யத்தின் போராட்டங்களினூடே சென்றபோதே கற்றுக் கொண்டார்.

தேவன் அங்கீகரித்த மனிதர்
(2 இராஜாக்கள் 2:1-18)

ஒரு முதிய தீர்க்கதரிசி இல்லம் செல்கிறார்

இறுதியாக, கர்த்தர் “எலியாவைச் சுழல் காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளும்” வேளை வந்தது (2 இராஜாக்கள் 2:1அ). நியமிக்கப்பட்ட நாளில், எலியா கில்காலிலிருந்து பெத்தேலுக்கும், பெத்தேலிலிருந்து எரிகோவுக்கும் பயணம் செய்தார் (வசனங்கள் 1, 2, 4). இந்த இடங்கள் யூத வரலாற்றில் நினைவுகூரத்தக்கவைகள், ஆனால் தீர்க்கதரிசியானவர் “தன் மலரும் நினைவுகளினூடே செல்லவில்லை.” இந்த ஒவ்வொரு பட்டணத்திலும் தீர்க்கதரிசிகளின் பள்ளிகள் இருந்தன (காண்க வசனங்கள் 3, 5; 4:38). எலியா அநேகமாக அந்த மாணவர்களை சந்தித்து நெருக்கடியான நாட்களில் விசுவாசத்தில் நிலைத்திருங்கள் - என்ற இறுதி கட்டளையை கொடுக்க விரும்பியிருக்கலாம்.

இந்த பள்ளிகளிலிருந்த மனிதர்கள், “தீர்க்கதரிசிகளின் புத்திரர்” என அழைக்கப்பட்டார்கள் (2:3, 5, 7, 15). “தீர்க்கதரிசிகளின் புத்திரர்” என்பது ஒவ்வொருவரும் தீர்க்கதரிசியாயிருந்த ஒரு தந்தையை உடையவராயிருந்தார் என்று பொருள்படாது. “புத்திரர்” என்பது “இந்த குணாதிசயங்களில் பங்கு பெற்றவராயிருந்தார்” என்று பொருள்படும் எபிரேய வழக்கு சொல்லாகும். இந்த மனிதர் தீர்க்கதரிசி பயிற்சியாளர்களாயிருந்தார்கள். ஆவியினால் ஏவப்படாத பாரம்பரியப்படி, எலியா இந்த பயிற்சி திட்டங்களை துவங்கினார். எலிசா தனது ஊழியகாலமெல்லாம் இந்த பள்ளிகளுடன் நெருங்கிய உறவை பராமரித்து வந்தார்.

எலியாவின் இறுதி நாளில், ஒவ்வொரு முறையும் அடுத்த இடத்திற்கு செல்லும் முன்னர், அவர் எலிசாவை பார்த்து, “நீ இங்கே இரு; கர்த்தர் என்னை அந்த இடம் மட்டும் [அந்த இடத்தை குறிப்பிடுவார்] போக அனுப்புகிறார்”

என்றான் (வசனம் 2; காண்க வசனங்கள் 4, 6). எலியா ஒரு வேளை தனிமை யாக இருக்க விரும்பியிருக்கலாம், ஆனால் அவருடைய வார்த்தைகள் ஒரு பரிசோதனைக்காக சொல்லப்பட்டவைகள் போலிருந்தன. (ஒப்பிடுக ரூத் 1:11-13.) எலிசா தனது ஊழிய அர்ப்பணிப்பிலிருந்து விலகுவதற்கான வாய்ப்பை எலியா கொடுத்திருக்கலாம். அவர் ஒரு வேளை இப்படி கூறியிருக்கக் கூடும், "நீ உனது அர்ப்பணிப்பில் உறுதியாயிருக்கிறாயா? அப்படியானால், போராட்டங்கள் உனக்கெதிரே உள்ளன." எலியாவின் நோக்கம் எதுவாக இருப்பினும், எலிசா பின்வாங்க மறுத்துவிட்டார். அவர் ஒவ்வொரு முறையும், "நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்" என்றான் (2 இராஜாக்கள் 2:2, 4, 6).

இறுதியாக, கர்த்தர் எலியாவை யோர்தான் நதிக்கு அனுப்பினார் (வசனங்கள் 6, 7). தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஐம்பது பேர் எலியா மற்றும் எலிசாவை தொலைவிலிருந்து பார்த்தனர் (வசனம் 7). "எலியா தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்" (வசனம் 8அ) - மோசே செங்கடலின் மேல் தன் கோலை நீட்டினது போல (யாத்திராகமம் 14:16, 21). உடனே தண்ணீர், "இருபக்கமாகப் பிரிந்தது, அவர்கள் இருவரும் உலர்ந்த தரை வழியாய் அக்கரைக்குப் போனார்கள்" (2 இராஜாக்கள் 2:8ஆ) - யோசுவாவும் அவனுடைய சேனையும் முன்னதாக யோர்தான் நதியை கடந்தது போல இவர்களும் கடந்தனர் (யோசுவா 3:14-17).

அவர்கள் யோர்தானின் கிழக்குப் பகுதியை அடைந்தபிறகு எலியா எலிசாவை நோக்கி, "நான் உன்னைவிட்டு எடுத்துக் கொள்ளப்படுமுன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன கேள்" என்றான் (2 இராஜாக்கள் 2:9அ). எலிசா அநேக காரியங்களை கேட்டிருக்கலாம், ஆனால் அவர், "உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்" என்றான் (வசனம் 9ஆ). பின் விளைவுகள் எப்படி இருந்த போதிலும், எலியா தனது தைரியமான விசுவாசத்தின் ஆவியையும், உறுதியான கீழ்ப்படிதலையும், பாரபட்சமற்ற நீதியையும் மற்றும் எல்லாவற்றிக்கும் மேலாக தேவன் மேல் தனக்கிருந்த அசையாத விசுவாசத்தையும் காண்பித்திருந்தார். எலிசா, "உம்மிடத்திலுள்ள அந்த ஆவியை இருமடங்கு எனக்குத் தாரும்" என்று கேட்டான்!

"இருமடங்கு" என்ற வார்த்தை ஓரளவு கடினமாகத் தோன்றுகிறது. எலிசா தன் தலைவரைப் போல இருமடங்கு நல்லவரும் வல்லவருமாயிருக்க வேண்டினார் என்பதற்கான அடையாளம் இல்லை. அநேகமாக அவர், தான் எலியாவின் ஆவிக்குரிய வாரிசாக இருக்கும்படி கோரினார். யூத பிரமாணத்தின் கீழ் மூத்த மகனுடைய சுதந்திரம் "இருமடங்காக" இருந்தது (உபாகமம் 21:17). அந்த மகன் தன் தந்தையின் பெயரை நிலை நாட்டவும் அவர் வேலையைச் செய்யும் பொறுப்பாளியாயிருந்தான்.

அதற்கு எலியா, "அரிதான காரியத்தை கேட்டாய்," என்றான் (2 இராஜாக்கள் 2:10அ). அவர் "*நான்* உனக்குச் செய்யவேண்டியது என்ன, கேள்" என்று கூறியிருந்தார், *தேவனால்* மாத்திரமே கொடுக்கச் சாத்தியமான ஒரு வரத்தை எலிசா கேட்டிருந்தார். இருப்பினும், எலியா நிபந்தனையை நிறைவேற்றினால், அது அவனுக்கு கொடுக்கப்படும். அதற்கு எலியா, "உன்னை விட்டு நான் எடுத்துக்கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால்

உனக்கு கிடைக்கும்; இல்லாவிட்டால் கிடையாது" என்றான் (வசனம் 10ஆ). தேவன் பத்து ஆண்டுகளுக்கு முன்பு, எலிசாவை எலியாவின் பணியிடத்தை நிரப்பும்படி தெரிந்து கொண்டார் (1 இராஜாக்கள் 19:16). இருப்பினும், எலிசா எலியாவை பின்பற்றும் தனது அர்ப்பணிப்பில் உறுதியாயிருந்தால் மட்டுமே அது நிறைவேறும் (வசனங்கள் 20, 21). அவன் அவரோடு இறுதிவரை இருக்கவேண்டியதாயிருந்தது.

எலியாவும் எலிசாவும் யோர்தானிலிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்தனர். திடீரென, "இதோ, அக்கினி ரதமும் அக்கினி குதிரைகளும் தோன்றின" (2 இராஜாக்கள் 2:11அ). இது பரம சேனையை காட்சிப்படுத்தும் ஒரு முறையாயிருந்தது (காண்க 2 இராஜாக்கள் 6:17; சங்கீதம் 104:4). தூதர்கள் எலியாவை வீட்டுக்கு அழைத்துச் செல்ல வந்திருந்தனர் (காண்க லூக்கா 16:22)! இரதமும் குதிரைகளும் இருவரையும் பிரித்தது (2 இராஜாக்கள் 2:11ஆ). பலத்த காற்று வீசத் தொடங்கியது, ஆனாலும் புழுதி நிறைந்த சுழல் காற்றினூடே, எலிசாவால் தன் எஜமானை காண முடிந்தது (வசனம் 12அ). அப்பொழுது, "எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்" (வசனம் 11இ).

எலிசா, "என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே!" என புலம்பினான் (வசனம் 12ஆ). அவனுடைய வார்த்தைகள் தேவனுடைய பரலோகத்தின் சேனையை குறிக்காமல், எலியாவை மட்டும் குறிப்பதாயிருந்தது (ஒப்பிடுக 2 இராஜாக்கள் 13:14). எலியா தேவனுடைய ஒற்றை ஆள் இராணுவமாக இருந்தான், "உண்மையான இஸ்ரவேலின் வல்லமையான பாதுகாவலரும் மற்றும் ... அவர்களுடைய பெருமைமிக்க இராணுவ பாதுகாவலை விட அதிக மதிப்புள்ளவனாயிருந்தான்."[3]

எலிசா தன் அங்கியின் மேல் முனையை இரண்டு கைகளாலும் பிடித்து, ஒரு பெரிய துக்கத்தின் அடையாளமாக, இரண்டாக கிழித்தான் (2:12ஈ; காண்க ஆதியாகமம் 37:29; 2 சாமுவேல் 13:19; யோபு 1:20; 2:12). அவன் தன் ஆவிக்குரிய தந்தை தன்னிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டதால், ஒரு பிள்ளையைப்போல புலம்பினான். இஸ்ரவேலின் இரதங்களும் மற்றும் குதிரை வீரரும் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்று ஒரு தேசபக்தனாகவும் புலம்பினார்.[4]

ஒரு புதிய தீர்க்கதரிசி பணிக்குச் செல்கிறார்

எலிசா எலியா இருந்த இடத்தை கவனித்து பார்த்தான். தீர்க்கதரிசியின் சால்வை தரையின் மேல் விழுந்து கிடந்தது. எலியாவின் சால்வை நீங்கலாக, அவர் தொடர்பான அனைத்தும் அவரோடு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. எலிசா அந்த சால்வையை எடுத்துக் கொண்டு, யோர்தானை நோக்கி சென்றார் (2 இராஜாக்கள் 2:13). எலியாவின் கடைசி அற்புதம் இவரது முதல் அற்புதமாக இருக்கும்.

எலிசா சேறுநிறைந்த நீரோடையை அடைந்த போது, அவன் சால்வையை முறுக்கி, உரத்த சத்தமாய், "எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லி தண்ணீரை அடித்தான்"[5] (வசனம் 14அ). தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதில் எலியா சந்தேகம் தெரிவிக்கவில்லை. அவன் கேட்டதெல்லாம், "கர்த்தாவே, நீர் இங்கே இருக்கிறீரா? நான் இருமடங்கு பெற்றுக் கொண்டேனா அல்லது இல்லையா? எலியாவுக்கு தண்ணீர் இரண்டாக பிரிந்ததுபோல, இந்த தண்ணீர் எனக்கு பிரியுமா?"

அது பிரிந்தது! அவன், "தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்" (வசனம் 14ஆ). தேவன் இன்னமும் அங்கு இருந்தார் மற்றும் வல்லமையுடையவராக இருந்தார். அவர் இப்போது எலிசாவில் கிரியை செய்து கொண்டிருந்தார். தேவனுடைய பெரிய போர்வீரரின் மரணம் தேவன் மரித்துவிட்டார் என்று பொருள்படாது, வேலைக்காரன் மரித்துப் போனான், அவ்வளவுதான். சால்வையை எடுத்துக் கொண்டு முன்னேறிச் செல்லும் ஆண்களும் பெண்களும் இருக்கிறவரையில், தேவன் தொடர்ந்து கிரியை செய்வார்!

தீர்க்கதரிசியின் புத்திரர் இதை கவனித்துக் கொண்டிருந்தனர் (வசனம் 7). என்ன நடந்தது என்பது அவர்களுக்கு நிச்சயமாக தெரியவில்லை. இருப்பினும், எலியா கிழக்கு நோக்கி செல்லும் போது யோர்தான் இரண்டாக பிரிந்ததையும், இப்போது எலிசா மேற்கு நோக்கி செல்ல யோர்தான் இரண்டாக பிரிந்ததையும் அவர்கள் பார்த்திருந்தார்கள். அவர்கள் ஒரே ஒரு முடிவுக்குதான் வர முடியும்: "எலியாவின் ஆவி எலிசாவின் மேல் இறங்கியிருக்கிறது" (வசனம் 15அ). எலிசாதான் எலியாவின் பணிவாரிசாக தெய்வீகமாய் நியமிக்கப்பட்டவராக இருந்தார். அவர்கள் அவனுக்கு எதிர்கொண்டு போய் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கினார்கள் (வசனம் 15ஆ).

அவர்கள் எலியாவுக்கு சம்பவித்தது குறித்து இன்னமும் குழப்பத்தி லேயே இருந்தனர். முதியவரான தீர்க்கதரிசி கர்த்தருடைய ஆவியினாலே அங்கும் இங்கும் இரகசியமாக எடுத்துக் கொள்ளப்படுவது பற்றி நன்கு அறியப்பட்டிருந்தார் (1 இராஜாக்கள் 18:12; ஒப்பிடுக நடபடிகள் 8:39, 40). அவர்கள் எலிசாவை நோக்கி, "இதோ, உமது அடியாரோடே ஐம்பது பலவான்கள் இருக்கிறார்கள்; அவர்கள் போய் உமது எஜமானை தேடும்படி உத்தரவு கொடும்; ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் அவரை எடுத்து, பர்வதங்களில் ஒன்றின் மேலாகிலும், பள்ளத்தாக்குகளில் ஒன்றிலாகிலும் கொண்டுபோய் வைத்திருப்பார்" என்றார்கள் (2 இராஜாக்கள் 2:16அ). எலியாவை தேடுவது ஒரு காலவிரயம் என்பதை எலிசா அறிந்திருந்தார். முதலில், அவர் வேண்டாம் என்று கூறினார் (வசனம் 16ஆ). ஆனால் அவர்கள் இவர் சம்மதிக்கும் மட்டும் வலியுறுத்தி கேட்டுக்கொண்டிருந்தனர் (வசனம் 17அ). "அவர்கள் அவனை சம்மதிக்கப் பண்ணினார்கள்" என்று நாம் கூறலாம்.

அவர்கள் மூன்றுநாள் தேடினார்கள் (வசனம் 17ஆ). அவர்கள் எரிகோவுக்கு திரும்பின போது, எலிசா அவர்களை நோக்கி, "போகவேண்டாம் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா?" என்றான் (வசனம் 18). அவருடைய கடிந்துகொள்ளுதலில் "நான் சொல்லவில்லையா" என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. அதற்கு மேலாக: "நீங்கள் என்னை உங்கள் தலைவர் என்று ஒப்புக்கொண்டால், நீங்கள் என்னுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள பழகிக்கொள்ளவேண்டும்!" என்றான். எலிசா இப்போது நெருக்கடியான நாட்களில் யெகோவாவின் அதிகாரப்பூர்வமான பிரதிநிதியாக இருந்தார்.

தேவனுக்கு அவசியமாயிருந்த மனிதர்

மேலோட்டமான வித்தியாசங்கள்

நமது அடுத்த பாடத்தில், எலிசாவின் ஊழியம் பற்றி படிப்போம்.

எப்படியிருப்பினும், நான் இந்த பாடத்தை நிறைவு செய்வதற்கு முன்பு, எலிசா மற்றும் அவருக்கு முன் பணியிலிருந்தவரைப் பற்றி, ஒரு ஒப்பீடு செய்ய விரும்புகிறேன். இந்த இரு மனிதரும் தங்கள் ஆளுமையில் வித்தியாசபட்டவர்களாய் இருந்தார்கள் என்பதை கவனிப்பது கடினமானதாயிருக்கும்:

- எலியா பாலைவனக் குழந்தையும், உரோம உடை தரித்தவருமாயிருந்தார். எலிசா நிலத்தை பயிரிடுகிறவனாயும், இயல்பான உடை உடுத்தினவருமாயிருந்தார்.[6]
- எலியா ஒரு துறவி; அவரை கண்டு பிடிப்பது கடினம். எலிசா ஒரு குடும்பபாங்கானவர். தேவைப்படும் நேரத்தில் அவரை கண்டு பிடிப்பதில் மக்களுக்கு சிரமம் இருக்கவில்லை.
- எலியா அமைப்பு சாறா முறையில் (அதாவது, நாளின்/அவரது நாளின் அரசியல் மற்றும் சமூக கட்டுமானங்களுக்கு வெளியே) செயலாற்றினார். எலிசா, "இச்சமூக அமைப்புகளுக்கு" உட்பட்டு செயலாற்றினார்.
- எலியா தேவனுடைய நீதியை பிரதிபலிக்கையில், எலிசா தேவனுடைய இரக்கத்தை பிரதிபலித்தார். எலியா இடி மற்றும் மின்னல் போல் இருந்தார். எலிசா இதமான மழைச்சாரல் போலிருந்தார். எலியா கண்களை இருடாக்கும் வெளிச்சம் போலிருந்தார்; எலிசா உறுதி யான, எரியும் ஜுவாலை போலிருந்தார். எலியா போர்வீரரின் ஒளிரும் பட்டயம் போலிருந்தார்; எலிசா இதமாய் சுகமாக்கும் வைத்தியரின் கத்தி போலிருந்தான்.

இந்த இருவருக்கும் இடையிலிருந்த மாறுபட்ட ஆளுமைத் தன்மைகள், *தேவனால் எல்லா வகை மக்களையும் பயன்படுத்த முடியும்* என்பதை விளக்குகிறது. எலியா அவரது தலைமுறையில் தேவனுக்கு தேவையான வகை மனிதராயிருந்தார். எலிசா அவரது நாளில் தேவனுக்கு தேவையான வகை மனிதராயிருந்தார். நாம் இன்று தேவனுடைய ஊழியர்களை மதிப்பீடு செய்கையில் இதை புரிந்துகொள்ள வேண்டியது அவசியமானதாயிருக்கிறது. சிலர் கடந்த காலத்தின் அக்கினிமயமான பிரசங்கியார்களை விரும்புகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கான தேவை இன்னமும் இருக்கிறது. அதே சமயத்தில், தங்கள் "இதமான பதில்களால்" "கோபத்தை மாற்றக்கூடிய" ஊழியர்களும் நமக்கு தேவைப்படுகிறார்கள் (காண்க நீதிமொழிகள் 15:1). இரட்சிப்பதற்கான தேவனுடைய வல்லமை உரக்க பேசப்படும் சத்தத்தில் இல்லை, மாறாக, "ஆரோக்கியமான" (தேவனுடைய வசனத்திற்கு உண்மையாயிருத்தல்) வசனத்தை போதிப்பதில் உள்ளது (தீத்து 2:1, 8; காண்க ரோமர் 1:16).

நாம் தேவனுடைய பணியில் நமது ஆற்றலை மதிப்பீடு செய்கையில் இந்த உண்மையை மனதில் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. நாம் பிறரைபோல இல்லை என்பதற்காக, நமது பயன்பாட்டுத் தன்மையை குறைத்து மதிப்பிடக் கூடாது. மற்றவர்களுக்கு இருக்கும் தாலந்துகள் மற்றும் ஆளுமைத்தன்மை நமக்கு இல்லாதிருக்கலாம், ஆனால் நமக்கு சொந்தமான பெலன்கள்/சிறப்புகள் நம்மிடம் உள்ளன. கர்த்தருடைய சித்தத்தை செய்கிற எவரொருவரையும், மற்றும் தனது வாழ்வை அவருக்காக அர்ப்பணிக்கிற எவரொருவரையும், அவரால் பயன்படுத்த முடியும் என்பதை உணர்ந்து

கொள்வது முக்கியமானதாயிருக்கிறது.

அவசியமான ஒற்றுமைகள்

நாம் எலியா மற்றும் எலிசா ஆகியோருக்கு இடையிலான வேற்றுமைகளை பார்த்தோம். ஆனால் அவைகள் பெரும்பாலும் மேலோட்டமானவைகளாயிருந்தன. கர்த்தருக்காகவும் அவரது வழிகளுக்காகவும் வைராக்கியமாய் அர்ப்பணித்துக் கொள்வது என்று வரும் போது - இருவரும் ஒரே விதமாகவே இருந்தார்கள். அவருடைய நாளில் தேவனுக்கு தேவையாயிருந்த மனிதனாகிய எலிசாவின் குணாதிசயங்களை காண்போம்:

- *அவர் தேவனில் ஆழமான விசுவாசம் கொண்டிருந்தார்.*
- *அவர் தேவ பக்தியுள்ளவராயிருந்தார் (2 இராஜாக்கள் 4:9).*
- *அவர் தேவனுடைய சித்தம் செய்ய ஆவலாயிருந்தார் (1 இராஜாக்கள் 19:19, 20).*
- *அவர் கடந்த கால தொடர்புகளை முறித்துக் கொள்ள விருப்பமாயிருந்தார் (1 இராஜாக்கள் 19:21).*
- *அவர் ஊழியம் செய்ய ஆயத்தமாயிருந்தார் (2 இராஜாக்கள் 3:11).*
- *அவர் ஊழியத்திற்கு ஆயத்தப்பட பத்து ஆண்டுகள் ஆயினும், அவர் ஊழியத்தை விட்டு விட வில்லை. (சிலர் உடனடி பலன்கள், உடனடி நன்மைகள், உடனடி வெற்றியை விரும்புகிறார்கள்.)*
- *அவரை தனிமையில் விட்டு விடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் - எலியாவை இறுதி வரை பின்பற்றுவது என்ற தனது ஒப்படைப்பில் - அவர் உண்மையாக இருந்தார் (2 இராஜாக்கள் 2:2, 4, 6, 10-12).*
- *அவர் தனது பணிப்பொறுப்பு எவ்வளவு அதிகமாக இருக்கும் என்பதை அறிந்திருந்தபோதும், அதை ஏற்றுக் கொண்டார். ஒரு விக்கிரக ஆராதனை மலிந்த சமுதாயத்தில் யெகோவாவின் பிரதிநிதியாக இருப்பது என்பது அவரை பிரபலமானவராக மாற்றாது (காண்க 2 இராஜாக்கள் 2:23). இருப்பினும், எலிசா தேவன் தனக்கு முன்வைத்த பணிப் பொருப்பை ஏற்றுக்கொண்டார் (காண்க 1 இராஜாக்கள் 19:16; 2 இராஜாக்கள் 2:9).*

*மற்ற குணாதிசயங்களையும் நாம் சேர்க்க முடியும். உதாரணமாக, எலிசா மேலானவர் முதல் கீழானவர் வரை எல்லா வகை மக்களிலும் உண்மையான அக்கரையுள்ளவராக இருந்தார். எப்படியிருப்பினும், பட்டியலிடப்பட்ட குணாதிசயங்கள் போதுமானவைகள். *நீங்கள்* முதலில் உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்தால், உங்கள் தனித்தன்மை மற்றும் தாலந்துகள் எப்படிப்பட்டவைகளாயிருந்தாலும் ... தேவனானவர் உங்களை அவருடைய ஊழியத்தில் பயன்படுத்தமுடியும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்தி கூறுகிறேன்.*

முடிவுரை

"அதை பின்பற்றுவது கடினமான செயல்" என்ற ஒரு பழமொழி உண்டு, இந்த கருத்தானது, மேடையில் ஒரு கலைநிகழ்ச்சி அரங்கேறி, மற்றநிகழ்ச்சி உடனே அறங்கேற்றபட்ட பண்டைய நாட்களில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

ஒருவருடைய நடிப்பு பாராட்டி ஏற்றுக்கொள்ளப்படும் போது, அடுத்து வருபவர் முந்தினவரைப் போல நடிக்க முடியாவிட்டால், பார்வையாளர்கள் கூச்சலிடுவார்கள் என்பதை அறிந்திருப்பார். நன்கு நேசிக்கப்பட்ட ஒரு பிரசங்கியார் ஒரு பிராந்திய சபையிலிருந்து இடம் பெயரும் போது, அடுத்து வரும் பிரசங்கியார், "இதை பின்பற்றுவது கடினமான செயல்" என்பதை விரைவில் கற்றுக்கொள்கிறார்.

எலியாவை பின்பற்றுவது என்பது "ஒரு கடினமான செயல்." அவருடைய ஊழியம் பெரும்பாலும் வியக்கத்தக்க செயல்களை உள்ளடக்கியிருந்தது. அவர் யூத மக்களின் கதாநாயகனாக மாறினார். மேசியா வருவதற்கு முன்னர் அவர் வரவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்த்தனர் (காண்க மத்தேயு 17:10). இவர் மோசே மற்றும் இயேசுவோடு மறுரூபமலையில் நின்றார் (காண்க மத்தேயு 17:3).

"பின்பற்றுவதற்கு கடினமான செயல்" ஒன்று இருக்கும் போது நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களால் என்ன செய்ய முடியுமோ அதை செய்வீர்கள். தேவன் உங்களுக்கு அருளின தாலந்துகளை பயன்படுத்தி, சிறப்பானதை செய்வீர்கள். இதைத்தான் எலிசா செய்தார். அவர் எலியாவின் ஒரு மங்கலான பிரதியாக இருக்கவில்லை. அவர் தனது தலைவரின் ஒரு நிழலாகவோ அல்லது ஒரு ஒலி பிரதிபலிப்பாகவோ இருக்கவில்லை. அவர் தனக்கென ஒரு பாணியை கொண்டிருந்தார். அவர் அவருடைய நாளில் தேவனுக்கு தேவைப்பட்ட மனிதராயிருந்தார். நெருக்கடியான நாட்களில் தேவனுடைய மனிதராக - அவர் தன்னுடைய பணியை நிறைவேற்றினார். இதற்கு மேலாக தேவன் எவரிடம் எதுவும் கேட்பதில்லை.

ஆசிரியர்கள் மற்றும் பிரசங்கியார்களுக்கான குறிப்புகள்

நீங்கள் இந்த பிரசங்கத்தை பயன்படுத்தும் போது, ஒருவர் முதலில் தேவனுடைய பிள்ளையாக இல்லாமல், அவர் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றமுடியாது என்பதை வலியுறுத்தி சொல்வீர்கள். விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் எல்லாரும் தேவனுடைய குடும்பத்தில் "பிறக்கும்படி" அவர்களை உற்சாகப்படுத்துங்கள் (யோவான் 3:3, 5; நடபடிகள் 2:37, 38; கலாத்தியர் 3:26, 27).

இந்த பாடத்திற்கான பிற சாத்தியமான தலைப்புகள்: "பின்பற்றுவதற்கு ஒரு கடினமான செயல்," "ஒரு மாபெரும் மனிதரின் நிழலில் வாழ்வது," "எலியாவின் கைகளுக்கு தண்ணீர்வார்த்த மனிதன்," "இதைப் போன்ற ஒரு காலத்திற்கு" (காண்க எஸ்தர் 4:14), "ஜனங்களுக்கான ஒரு தீர்க்கதரிசி" மற்றும் "நமது காலத்திற்கான ஒரு தீர்க்கதரிசி."[7] (இந்த பாடத்தின் முடிவுப்பகுதி யில் பட்டியலிடப்பட்டுள்ள) எலிசாவின் பண்புகள் "தேவன் ஏன் எலிசாவை தெரிந்தெடுத்தார்" என்ற பிரசங்கத்திற்கு பயன்படுத்தமுடியும்.

குறிப்புகள்

[1]Joseph Hammond, "1 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1 & 2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950),

463. [2]பிற சாத்தியக் கூறுகள் விவாதிக்கப்பட்டுள்ளன, அவை "தேவன் இரட்சிப்பானவர்" அல்லது "தேவன் இரட்சிக்கிறார்" என்பதாகும். எலிசாவை பற்றி நாம் அறிந்திருக்கிற வேறு ஒரு காரியம் எலியாவைப் போல் இவரும் திருமணம் ஆகாதவராக இருந்தார். [3]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 196. [4]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadelphia: Herman Hooker, 1839), 31. [5]எலியாவின் சால்வை குறித்து இங்கு கடைசியாக வாசிக்கிறோம். எலிசா இதை மறுபடியும் எப்போதாவது பயன்படுத்தியிருந்தால், அதற்கான பதிவு இல்லை. அநேகமாக, அது தன் நோக்கத்தை நிறைவேற்றி விட்டது. [6]2 இராஜாக்கள் 2:12 இல் இது "துணிகளுக்கான" எபிரேய வார்த்தையால் குறிக்கப்படுகிறது. [7]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993).

2

பெரிய காரியங்களைச் செய்த மனிதர்

[2 இராஜாக்கள் 2:19-25; 8:4]

எலிசாவின் வேலை பிரமிப்பான எலியாவின் ஊழியத்தால் பரவலாக பிரபலமில்லாததாயிருந்தது. எலிசா புதிய ஏற்பாட்டில் ஒரு முறை மட்டும் (லூக்கா 4:27). குறிப்பிடப்பட்டிருக்கும்போது, எலியா முப்பது முறைக்கும் மேலாக குறிப்பிடப்பட்டுள்ளார். வேதாகம ஆசிரியர்கள் மற்றும் பிரசங்கியார்கள் "எலிசாவை" மனதில் வைத்துக் கொண்டு "எலியா" என்று அடிக்கடி குறிப்பிடுவது உண்டு (நானும் இதை செய்துள்ளேன்). அநேகர் எலிசாவின் ஊழியத்தின் நோக்கம், அவருடைய அற்புதங்களின் வீச்சு அல்லது அவருடைய தலைமுறையில் அவருடைய வாழ்க்கை ஏற்படுத்தின தாக்கம் இவற்றை அறியாதிருக்கின்றனர். இவருடைய ஊழியத்தின் கால அளவு எலியாவின் ஊழிய காலத்தை மிஞ்சியுள்ளது. (இவர் எலியாவின் பயிற்சியாளராக இருந்த பத்து ஆண்டுகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், இவருடைய ஊழிய கால அளவு ஐம்பது ஆண்டுகளாக இருந்தது.) மேலும், இருமுறைக்கும் மேலாக, எலியாவால் அற்புதங்கள் செய்யப்பட்டன என்பது போல, எலிசாவாலும் அற்புதங்கள் செய்யப்பட்டன என கூறப்பட்டுள்ளது.

ஒரு சமயத்தில் எலிசாவின் வேலைக்காரன் கேயாசி இஸ்ரவேலின் இராஜாவின் சமூகத்தில் இருந்தான். ஒருவேளை, அவன் தீர்க்கதரிசியின் ஒரு செய்தியோடு அங்கு அனுப்பப்பட்டிருக்கலாம். கேயாசி அங்கிருந்தபோது, இராஜா அவனிடத்தில் "எலிசா செய்த அதிசயங்களையெல்லாம் நீ எனக்கு விவரமாய்ச் சொல்" என்றான் (2 இராஜாக்கள் 8:4). எலிசா அங்கே இருந்திருந்தால், இராஜாவின் வார்த்தைகளை திருத்தி, "தேவன் செய்த பெரிய காரியங்கள்" என்று சொல்லியிருப்பார். எப்படியிருப்பினும், எலிசா "பெரிய காரியங்களை" செய்யும்படி தேவன் அவரை பெலப்படுத்தினார்.

எலிசா செய்த பல "பெரிய காரியங்களை" "உதவும் அற்புதங்களாக" நாம் கூறமுடியும். இந்த அற்புதங்களை பொறுத்தவரை, அதன் செய்தி என்னவென்றால், "தேவன் கரிசனைப்படுகிற ஒரு தேவனாயிருக்கிறார்" என்பதாகும். இருப்பினும், எலிசாவின் ஊழியத்தில் அபூர்வமாக இருண்டபகுதியும் இருந்தது. எலியாவின் ஆளுமைத்தன்மையிலிருந்து, இவரது ஆளுமைத் தன்மை வித்தியாசமானது. ஆனால் இவர் எப்போதுமே, "இனிமையும் மென்மையுமான" தீர்க்கதரிசியாயிருந்தார் என்று நாம் நினைக்கக்கூடாது. சர்வ வல்லவருக்கு எதிராக மக்கள் கலகம் செய்தபோது, எலிசா தேவனுடைய தண்டனையின் முகவராக செயல்பட்டார். ஆகவே, எலிசாவின் செய்தி இரு தன்மையுள்ளதாயிருந்தது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்:

- *தேவன், அவருடைய செய்தியாளர் மற்றும் அவருடைய செய்தியை மதித்து ஏற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.*
- *தேவன், அவருடைய செய்தியாளர் மற்றும் அவருடைய செய்தியை மதித்து ஏற்றுக்கொள்ள தவறினால் அப்பொழுது நீங்கள் சபிக்கப்படுவீர்கள்.*

இந்த பாடத்தில், எலிசா துவக்கத்தில் செய்த இரண்டு அற்புதங்கள் பற்றி படிப்போம். மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு செய்திகளை விவரிப்பதற்காக பரிசுத்த ஆவியானவர் தெரிந்து கொண்ட அற்புதங்களாக இவைகள் இருக்கக்கூடும்.

மதிப்பிற்குரியவர்கள் மேல் ஒரு ஆசீர்வாதம்: ஒரு நீரூற்று ஆரோக்கியமாக்கப்பட்டது (2:19-22)

இதற்கு முந்தைய பாடம் எலிசா எலியாவை வீணாக தேடின ஐம்பது தீர்க்கதரிசிகளின் புத்திரரை கடிந்து கொண்டதோடு முடிந்தது. அந்த நிகழ்வுக்கு பிறகு, தேவன் தான் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை அறியும்படி எலிசா எரிகோவில் காத்திருந்தார். அவருடைய முதல் வாய்ப்பு வருவதற்கு நீண்ட காலம் பிடிக்கவில்லை: பட்டணத்தின் மனிதர் ஒரு வேண்டுகோளோடு அவரிடம் வந்தனர் (வசனம் 19அ). எலிசா முன்னதாக, அணுகுவதற்கு எளிதானவர், இக்கட்டு நாட்களில் ஒருவர் இவரிடம் செல்லமுடியும் என அறியப்பட்டவர். தேவன் இன்னும் இப்படிப்பட்டவர்களின் அவசியத்தை உடையவராக இருக்கிறார்.

சாபம்

பின்பு அந்த பட்டணத்தின் மனுஷர் எலியாவை நோக்கி, "இதோ, எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்த பட்டணம் குடியிருப்புக்கு நல்லது" என்றார்கள் (வசனம் 19ஆ). யோர்தான் பள்ளத்தாக்கின் தென்பகுதியில் சவக்கடலின் கழிமுகப்பகுதியில் 10 மைல் வடமேற்கில் எரிகோ அமைந்திருந்தது. (இன்னொரு பக்கத்தில் வரைபடத்தைகாண்க.) இந்த பட்டணம் பாலஸ்தீனத்தின் பெரிய தூய நீரூற்றை சுற்றி வளர்ந்திருக்கிறது (இப்போது அயின் ஈஸ் சுல்த்தான் என அழைக்கப்படுகிறது); இது கரடுமுரடான நிலப்பரப்பிலுள்ள ஒரு பாலைவன நீரோடை "பேரீச்சம் மரத்தோப்புகள் [உபாகமம் 34:3], காட்டத்தி மரங்கள் நிறைந்தது [லூக்கா 19:4], வாசனை மரங்களின் நறுமணம் காற்றில் கலந்திருந்தது, ... மோவாபின் மலைகள் தூரத்தில் இருந்தன, எரிகோ (உண்மையாகவே) குடியிருப்புக்கு நல்லதாயிருந்தது."[1]

இருப்பினும், எரிகோவின் மக்களுக்கு ஒரு பிரச்சனை இருந்தது: "தண்ணீரோ கெட்டது, நிலம் பாழ்நிலம்" (வசனம் 19இ). வசனம் 19இல் "கெட்டது" என்பதற்கான எபிரேய வார்த்தை "தீமை"யானது என பொருள்படும்.[2] JB *வேதாகமத்தில் "அழுக்கானது" என்றுள்ளது. கெட்ட தண்ணீர் "நீரூற்றிலிருந்து" வந்தது (வசனம் 21) - அநேகமாக தற்போது குறிப்பிடப்பட்ட தூய நீரூற்றிலிருந்து வந்திருக்கலாம்.*

வசனம் 19ல் பாழ்நிலம் (கனியற்றது; NASB) *மற்றும் வசனம் 21ல் நிலப்பாழ்*

(கனியற்ற தன்மை; NASB) என மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தைகள் "கருச்சிதைவு" என்பதை குறிக்கும் வார்த்தையாக இருக்கிறது. சிலர் அது நிலத்தின் பயனற்ற தன்மையை குறிப்பதாகக்கருதுகின்றனர்; ஆனால், டோனால்ட் வைஸ்மேன் என்பவர் இந்த "எபிரேய வார்த்தை சாதாரணமாக மனிதரையும் கால் நடைகளையும்" குறிப்பிட பயன்படுத்தப்படுவதாக கூறுகிறார்.[3] CJB வேதாகமம் "நிலம் கருச்சிதைவுகளை ஏற்படுத்துகிறது" என கூறுகிறது. எது நிலத்தை பாதிக்கிறதோ, அது குடிமக்களையும் பாதிக்கிறதாயிருக்கிறபடியால், மாசுபட்ட தண்ணீர் இரண்டையும் பாதிப்பதாக இருந்திருக்கும்.

இந்த தண்ணீர் பிரச்சனை இரண்டு பண்டைய சாபங்களின் விளைவாக இருந்தது. இதில் முதல் சாபம் மோசேயால் பேசப்பட்ட பொதுவான சாபமாக இருந்தது. மோசே இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி, "இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லா கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதே போவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும்" (உபாகமம் 28:15). இது அந்த சாபங்களில் ஒன்றாக இருக்கிறது: "உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளும் சபிக்கப்பட்டிருக்கும்" (வசனம் 18).

இரண்டாவது, யோசுவா எரிகோவை அழித்தபின் குறிப்பான சாபத்தை பற்றி பேசியிருந்தார்: "இந்த எரிகோ பட்டணத்தைக் கட்டும்படி எழும்பும் மனுஷன் கர்த்தருக்கு முன்பாக சபிக்கப்பட்டிருக்கக்கடவன்" (யோசுவா 6:26அ). இந்த சாபம் இருந்த போதிலும், ஆகாப் இராஜாவின் ஆட்சியில் இந்த எரிகோ மறுபடியும் கட்டப்பட்டது (1 இராஜாக்கள் 16:34). மக்கள் தேவனுடைய வார்த்தையை மதியாமல் விட்டுவிட்டனர்; அதின் விளைவாக எரிகோவின் குடிமக்கள் துன்பத்தை அனுபவித்தனர். F. W. குருமாச்சர் என்பவர் அந்த சூழ்நிலையை இவ்விதம் காட்சிப்படுத்தினார்:

> பரிசுத்த பூமியின் பெரும் பகுதியான விளைச்சலுக்கேற்ற நிலம் கனியற்றதாக இருந்தது ... [ஆனால் இப்போது] பேரீச்ச மரங்கள் கவனிப்பற்று விழுந்து கிடக்கின்றன; தோட்டங்கள் இனிமேலும் நறுமண திரவியங்களை கொடுக்கவில்லை; ஒரு காலத்தில் கொழுமையாயிருந்த கால் நடைகள் புல்வெளிகளில் இளைத்துப் போயிருந்தன; மந்தைகள் தொழுவத்தில் ஈனுகின்றன; மக்களும் கூட வியாதியினாலும் இளவயது மரணத்தினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர்.[4]

இப்படியாக பட்டணத்தின் மக்கள் உதவி கேட்டு எலிசாவிடம் வந்தார்கள்.

ஆரோக்கியமாகுதல்

எலிசா அவர்களை நோக்கி, "ஒரு புதுத் தோண்டியை எடுத்து, அதிலே உப்புப்போட்டுக் கொண்டுவாருங்கள்" என்றான் (2 இராஜாக்கள் 2:20அ). ஏன் ஒரு புது தோண்டி? ஏனெனில், அது பொதுவான உபயோகத்தால் தீட்டுப்படாமல் இருந்தது.[5] எதற்காக உப்பு? ஒருவேளை, இஸ்ரவேலர் தேவனோடு கொண்டிருந்த உடன்படிக்கைக்கு உப்பு தொடர்புள்ளதாக இருந்தது (காண்க லேவியராகமம்

2:13). இதன் பின்னரும், நாம் வினவவேண்டும், ஒரு புதிய தோண்டி மற்றும் உப்புக்கு தண்ணீரை சுத்தம் பண்ணுவதில் என்ன சம்மந்தமிருக்கிறது? ஒரு பழைய தோண்டியில் கொட்டப்பட்ட உப்பு, ஒரு புதிய தோண்டியில் கொட்டப்பட்ட உப்பைப்போலவே தண்ணீரில் செயல்புரியாதா? எரிகோ வாசிகள் சவக்கடலிலிருந்து ஒரு பத்து மைல் தொலைவில் தான் வசித்துவந்தனர். உப்புத் தண்ணீர் தாவரங்களை வளரச் செய்வதில்லை, மாறாக, அது அவைகளை அழித்துவிடுகிறது என்பதை அறிந்திருந்தனர். மேலும், உப்புக்கு சுத்தப்படுத்தும் தன்மைகள் இருந்தாலும், அதை ஒரு நீரூற்றில் ஊற்றுவது அந்த தண்ணீரை மாசுபடுத்துமேயல்லாமல், தொடர்ந்து ஊறிக்கொண்டிருக்கும் நீரூற்றில் எந்த விளைவையும் ஏற்படுத்தாது. தண்ணீர் தூய்மைப்படுதல் நிரந்தரமாயிருக்காது.

கசப்பான தண்ணீரை மதுரமான தண்ணீராக மாற்ற தேவனானவர் வனாந்திரத்தில் மோசே ஒரு மரத்தை பயன்படுத்த செய்திருந்ததுபோல, எலிசா ஒரு புது தோண்டியையும் உப்பையும் பயன்படுத்தச் செய்தார் (யாத்திராகமம் 15:22-25) - ஏனெனில், தண்ணீர் நல்லதோ அல்லது கெட்டதோ, அதை மாற்றுவதில் புதிய தோண்டிகள், உப்பு மற்றும் மரக்கிளைகளுக்கு எந்த பங்களிப்பும் இல்லை. காரியங்களை மாற்றியமைக்கும் வல்லமையானது மனிதனுடைய செயல்முறையில் இருக்கவில்லை, தேவனுடைய நபர்த்துவத்திலேயே இருந்தது என்பதை எல்லாருக்கும் தெளிவாய் காண்பிப்பதற்காக இப்படி இருந்திருக்கலாம் (காண்க 2 இராஜாக்கள் 2:21ஆ).

அப்படியானால், தேவன் ஏன் எலிசாவை *ஏதொன்றையும்* பயன்படுத்தும்படி செய்தார்? யார் விசுவாசித்து, கீழ்ப்படிந்து பதில் செய்கிறார்களோ அவர்களையே தேவன் ஆசீர்வதிக்கிறார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக இப்படி இருந்திருக்கலாம். எலிசா தாமாக தோண்டி மற்றும் உப்பை கொண்டுவரவில்லை, அவன் பட்டணத்தின் மனிதரை அவைகளை கொண்டுவரும்படி செய்தான். "இது ஏன் இப்படி? இது எங்களுக்கு அறிவுடைமையாக தெரியவில்லை"? என மக்கள் பதில் செய்திருந்தால், என்னவாயிருக்கும். எலிசா கேட்டதை அவர்கள் கொண்டுவர மறுத்திருந்தால் என்ன நடந்திருக்கும்? தண்ணீர் அசுத்தமானதாக இருந்திருக்கும், அவர்கள் தொல்லைகள் தொடர்ந்து இருந்திருக்கும்.

தங்களுக்கு நன்மையுண்டாக, அவர்கள் தாமதிக்கவில்லை. அவர்கள் தோண்டி மற்றும் உப்பை எலிசாவிடம் கொண்டு வந்தனர் (வசனம் 20ஆ). பின்பு, "அவன் நீரூற்றண்டைக்குப் போய், உப்பை அதிலே போட்டு இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றான் (வசனம் 21). "இது இனிமேலும் மரணம் மற்றும் கருச்சிதைவை ஏற்படுத்தாது" என்று CJB கூறுகிறது.

2 இராஜாக்களின் ஆசிரியர்[6] இந்த கருத்தை சேர்ந்து கூறுகிறார்: "எலிசா சொன்ன வார்த்தையின்படியே, அந்த தண்ணீர் இந்நாள் வரைக்கும் [ஆசிரியர் வாழ்ந்து கொண்டிருந்த நாள்] இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று" (வசனம் 22). நாம் வாழும் இந்நாள் வரையிலும், தூய்மையான குளிர்ச்சியான தண்ணீர் *தொடர்ந்து* சுரந்து வருவதாக பல அதிகாரிகள் நம்புகிறார்கள். பழங்காலத்து எரிகோவை நீங்கள் சுற்றிப்பார்க்க நேர்ந்தால், "எலிசாவின் நீரூற்று" (அயின் ஈஸ் சுல்தான்) என்று ஒன்று உங்களுக்கு காண்பிக்கப்பட்டு, நீங்கள் அதில் நீர் பருகும்படி அழைக்கப்படுவீர்கள். T. E. மெஸ்கோம்ஸ்கி என்பவருடைய கூற்றுப்படி இந்த நீரூற்று, "எரிகோவை சுற்றியுள்ள மக்களுக்கு இன்னமும் ஒரு

தூய தண்ணீர் ஊற்றாக இருக்கிறது."[7]

தேவன் தம்மை மீண்டும் ஒரு இரக்கமுள்ள மற்றும் குணமாக்குகிறவராக விளங்கப்பண்ணியிருக்கிறார் (காண்க சங்கீதம் 103:3; 147:3; ஏசாயா 30:26). தேசம் சாபத்தின் கீழ் இருந்ததினால் (அது அப்படிதான் தோன்றுகிறது), அவர் அதை எலிசாவின் மூலம் நீக்கிப்போட்டார். தேவனுடைய தீர்க்கதரிசியை கனப்படுத்தியதின் மூலம், தேவனை கனப்படுத்தினவர்கள் அதினால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இதினால் உண்டான சந்தோஷத்தை குர்மாச்சேர் என்பவர் பின்வருமாறு காட்சிப்படுத்துகிறார்:

> வயல்கள் பழைய செழிப்பை பெற்றன. மனிதன் மற்றும் கால் நடைகள் வலிமையிலும் வாழ்விலும் மகிழ்ந்தன. பழைய அழிவின் சுவடுகள் மறைந்துவிட்டன; எரிகோவின் வாலிப மற்றும் வயோதிக மக்கள் மகிழ்ச்சி, சந்தோஷம் மற்றும் எழுச்சியான செயல்பாடுகளில் ஈடுபட்டது எங்கும் வெளிப்படையாக காணப்பட்டது. அறுவடை செய்கிறவர்களின் சந்தோஷ பாடல் ஓசை திராட்சை தோப்பு மலைகளுக்கிடையில் தொனித்தது; மேய்ப்பர், ஆடுகள் தன்னைச் சுற்றி துள்ளிக்குதித்துவரும் நிலையில் சம வெளியிலிருந்து தனது ஒற்றை புல்லாங்குழல் மூலம் பாட்டிசைத்து பதிலளித்தார். உள்ளூர் தோட்டக்காரர் எதிர்வரும் மிகுதியான அறுவடையை நினைத்து மகிழ்ந்தார். அவ்வழியே பிரயாணம் செய்தவர்கள் ... எரிகோவின் பொங்கிவரும் தண்ணீரைப் பாராட்டினர்.[8]

அவமரியாதைக்குரியவர்கள்மேல் ஒரு சாபம்: பரியாசக்காரர் தாக்கப்பட்டார்கள் (2:23, 24)

நாம் இப்போது தீர்க்கதரிசியை பரியாசஞ்செய்த வாலிபரை கரடிகள் தாக்கிய - எலிசாவின் வாழ்க்கையில் மிகவும் சர்ச்சைக்குரிய சம்பவத்திற்கு வருகிறோம். இந்த கதை உதவும் ஊழியம் செய்த எலிசாவை விட, அனல்பறக்கும் ஊழியம் செய்த எலியாவுக்கு நன்கு பொருந்தியிருக்கும். KJV மொழிபெயர்ப்பு பரியாசம் செய்தவர்களை "சிறு பிள்ளைகள்" என்று குறிப்பிடுவதின் மூலம் சர்ச்சையை இன்னும் பெரிதாக்குகிறது (2 இராஜாக்கள் 2:23; KJV). அப்படிப்பட்ட "உதவியற்ற, இனிமையான, களங்கமற்ற பிள்ளைகள்" விஷயத்தில் மக்கள் அனுதாபப்படுவதை கேள்விப்படுவது ஒரு வழக்கத்துக்குமாறான செயல் அல்ல.

இவர்கள் உண்மையில் குற்றமற்ற சிறுவர்களா இல்லையா என்பதை நாம் விவாதிப்போம் - ஆனால் அதற்கு முன்பு பரிசுத்த ஆவியானவர் ஏன் எலிசாவின் வாழ்வில் நடந்த இந்த சம்பவத்தை எழுதியுள்ளார் என்பதை கவனிப்போம். எலிசா தேவனுடைய பரிசுத்த பிரதிநிதி என்பதை உறுதிப்படுத்துவதற்காக இது ஒரு வேளை சேர்க்கப்பட்டிருக்கலாம். அவர் ஒத்துப் போகக்கூடியவர் மற்றும் உதவக்கூடியவர், ஆனால் அவர் பெலவீனமானவர் என்பது அதின் அர்த்தம் அல்ல. தேவனுடைய பிரதிநிதி என்ற வகையில், அவர் மதிக்கப்பட வேண்டியவராயிருந்தார். அவரை அவமதித்தவர்கள் தங்கள் அழிவுக்கென்று அப்படிச் செய்தார்கள்.

அவமரியாதையானவர்களின் கேலி

கதை துவங்குகிறது, "அவன் [எலிசா] அவ்விடத்தைவிட்டு [எரிகோ] பெத்தேலுக்கு போனான்" (வசனம் 23அ). யோர்தான் பள்ளத்தாக்கிலிருந்து பெத்தேல் மேடான நிலப்பகுதியில் அமைந்திருந்ததால் நீண்ட தூரம் செங்குத்தாக "ஏறிச்" செல்லவேண்டியிருந்தது. (*எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்களின்* வரைபடத்தை காண்க.) ஒரு சில நாட்கள் முன்பாக, எலிசா மற்றும் எலியா ஆகியோர் அங்குள்ள தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கு சென்றிருந்தனர். எலியா "எடுத்துக்கொள்ளப்பட" வேண்டியவராயிருந்ததை மாணவர்கள் அறிந்திருந்தனர் (காண்க 2:2, 3). உண்மையில் என்ன நடந்தது என்பது குறித்து தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு எலிசா விளக்கிச் சொல்ல விரும்பினார்.

இஸ்ரவேலின் வரலாற்றில் பெத்தேல் ஒரு புனிதமான இடமாயிருந்தது. அங்கே தான் யாக்கோபு வானத்திற்கு எட்டியிருந்த ஏணியின் சொப்பனங்கண்டான். பின்னர், அந்த இடத்திற்கு "பெத்தேல்" என பேரிட்டான். "பெத்தேல்" என்பது "வீடு" என்பதற்கான எபிரேய வார்த்தையையும் (ஆங்கிலத்தில் - "பெத்") தேவனை பொதுவாக குறிக்கக்கூடிய (ஏல்) என்ற வார்த்தையின் இணைப்பு வார்த்தையாக இருக்கிறது. ஆகவே, அந்த பெயர் "தேவனுடைய வீடு" என பொருள்படுகிறது (ஆதியாகமம் 28:10-19). துக்கப்படும் விதத்தில், தேவனுடைய வீடாயிருப்பதற்கு பதிலாக, அது தேவனற்ற விக்கிரக வழிபாட்டின் இடமாக மாறியிருந்தது. யெரோபெயாம் இராஜா, ஒரு பொற்கன்றுக்குட்டியை உருவாக்கி பெத்தேலில் வைத்து, அந்த பட்டணத்தை இஸ்ரவேலின் வடராஜ்யத்தின் விக்கிரக ஆராதனை மையமாக மாற்றினான் (1 இராஜாக்கள் 12:26-33; காண்க ஆமோஸ் 3:14; 4:4, 5).

எலிசா பெத்தேலை நெருங்கினபோது, "பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து, அவனைப் பார்த்து 'மொட்டைத் தலையா ஏறிப்போ; மொட்டைத்தலையா ஏறிப்போ' என்று சொல்லி நிந்தித்தார்கள்!" (2 இராஜாக்கள் 2:23ஆ). NASB வேதாகமம் "சிறு பிள்ளைகள்" என்பதற்கு பதிலாக "இளம் சிறார்கள்" என்ற வார்த்தையை கொண்டுள்ளது. "பிள்ளைகள்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரேய வார்த்தை பழைய ஏற்பாட்டில் வாலிபரை குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. யோசேப்பு தனது முப்பதுகளில் இருந்தபோது ஒருமையில் அவரை குறிக்க அந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (காண்க ஆதியாகமம் 41:12). இந்த வார்த்தை போவாஸின் அறுவடை பணியாளர்கள் (ரூத் 2:15), அப்சலோம் (2 சாமுவேல் 18:5), எரேமியா (எரேமியா 1:6,7), மற்றும் ஆகாபின் சேவகரை குறிப்பிட பயன்படுத்தப்பட்டது (1 இராஜாக்கள் 20:14). 2 இராஜாக்கள் 2 ஆம் அதிகாரத்தின் "பிள்ளைகள்" பன்னிரண்டு வயது முதல் இருபது வயதுக்கு இடையில் இருந்தார்கள் என்று பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் மதிப்பிட்டார்கள். அவர்களை விளையாட்டு பிள்ளைகள் என்று நினைத்து விடாதீர்கள். மாறாக, யெகோவாவின் தீர்க்கதரிசியை பயமுறுத்த முனைந்த துஷ்டத்தனமான இளைஞர்கள் என நினையுங்கள். இப்படிப்பட்டவர்களை குறிப்பிட எனது பகுதியில் "துஷ்டன்," "போக்கிரிகள்," "இளம் ரவுடிகள்," "இளங்குற்றவாளிகள்" மற்றும் இப்படிப்பட்ட பல வார்த்தைகள் உள்ளன. நீங்கள் வாழும் இடத்தில் ஒருவேளை இது போன்ற வார்த்தைகள் இருக்கின்றன. அங்கே குழந்தைத்தனமான களங்கமற்ற நிலை

இருக்கவில்லை; இவர்கள் பொறுப்புள்ள தனிநபர்களாயிருந்தார்கள்.

இந்த காட்சியை மனதில் வையுங்கள். எலிசா அந்த பட்டணத்திற்கு வந்து கொண்டிருந்தார் என்ற செய்தி பெத்தேலை எட்டியிருந்தது. எந்த நலமானதையும் செய்யாமல், பிரச்சனையில் மாட்டிக்கொள்கிற, தெருசுத்தும் கும்பல் மற்றும் இளம் அடியாட்களுக்கு செய்தி பரவியது. தீர்க்கதரிசி பட்டணத்தை நெருங்கிவர, இந்த துஷ்டரின் கும்பல் உள்ளிருந்து வந்தார்கள். "நாற்பத்திரண்டுபேர்" என்ற எண்ணிக்கை கதையில் பின்பகுயில் பயன்படுத்தப்பட்டது (2 இராஜாக்கள் 2:24); இது கேலி செய்தவர்கள் ஒரு பகுதியை மட்டும் குறித்தது. (பல இளைஞர்கள் கரடிகளிடமிருந்து தப்பி ஓடமுடிந்தது, ஓடினார்கள், ஓடியிருக்கக்கூடும் என நான் நினைக்கிறேன்.) கும்பலில் நூற்றுக்கணக்கானவர்கள் இருந்திருக்கலாம். நான் ஒரு சிறுவனாக இருந்தபோது, தனிநபர்கள் சில சமயம் என்னை கேலி செய்திருக்கிறார்கள். உங்களுக்கும் ஒருவேளை இப்படிப்பட்ட அனுபவங்கள் ஏற்பட்டிருக்கும். <u>நூற்றுக்கணக்கானவர்களை</u> கொண்ட ஒரு கும்பல் உங்களை துரத்திக்கொண்டு, கேலி செய்து கொண்டுவந்தால், அது எப்படிபட்டதாயிருக்கும் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அது ஒரு அச்சுறுத்தலாக இருக்கும்!

இந்த இளைஞர் பட்டாளம் எலிசாவை நோக்கி, "மொட்டைத்தலையா ஏறிப்போ, மொட்டைத்தலையா ஏறிப்போ!" என்று கத்தினார்கள். "ஏறிப்போ" என்ற முழக்கம் எலியா வானத்திற்கு ஏறிப்போனதை குறிப்பதாக சிலர் சிந்திக்கிறார்கள். அந்த சம்பவம் பற்றிய செய்தி பரவியிருந்தது மற்றும் இளைஞர்கள் அதில் தங்கள் நம்பிக்கையின்மையை தெரிவித்துக் கொண்டிருந்தார்கள்: "உன் எஜமான் வானத்திற்கு போய்விட்டதாக கூறுகிறாய், அப்படியானால் நீயும் ஏன் அங்கே ஏறிப்போகக்கூடாது?" (காண்க NCV.) எலிசா எரிகோவிலிருந்து பெத்தேலுக்கு பயணம் செய்ததை குறிப்பிடும் வசனம் 23ன் முதல் பகுதியிலுள்ள வார்த்தைக்கு இணையாக இருந்ததால், அவர்கள், "இங்கே பயணத்தை நிறுத்தாதே, போய்க்கொண்டேயிரு!" என்ற பொருளில் கூறியிருக்கலாம். எந்த அர்த்தத்தில் எடுத்துக்கொண்டாலும், எலியா பெத்தேலில் வரவேற்கப்படவில்லை என்பதை சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் எலிசாவை "மொட்டைத்தலையா" என்று குறிப்பிட்டார்கள். CJB "மேலே ஏறிப்போ, மொட்டையா! மேலே ஏறிப்போ, மொட்டையா!" என்று குறிப்பிடுகிறது. நான் எனது வழுக்கைத் தலையை குறித்து கிண்டலடிப்பதுண்டு. ("நான் எனது தலை முடி வெண்மையாக மாற வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் அது உதிர்ந்து விட்டது"), என் தலை "மின்னுகிறது" என்று மக்கள் கூறும்போது நான் இன்னமும் கூச்சப்படுகிறேன் ("தலை மின்னுவதால் அநேகமாக நான் குருடாகிவிட்டேன்"). நமது நாளில் விளையாட்டுக்காக சொல்லப்படும் கேலி பேச்சுக்கூட எலிசாவின் நாளில் மோசமான அவமான மாக கருதப்பட்டது. யூதர்கள் மத்தியில் ஒருவர் வழுக்கை தலையோடிருந்தது அரிது என்றும், அப்படி இருந்தது சிலரால் அவமானமாக கருதப்பட்டதாகவும் அறிஞர்கள் கூறுகிறார்கள் (காண்க ஏசாயா 3:17, 24).

இளைஞர்களால் எந்தவார்த்தை பேசப்பட்டதோ, அது அவ்வளவு முக்கிய மானதாக இருக்கவில்லை. குழந்தைகள், விடலைகள் அல்லது வாலிபர்கள் உதவியற்ற ஒரு ஆண் அல்லது ஒரு பெண்ணைச் சூழ்ந்து கொண்டு நிற்பதையும், கேலி செய்வதையும் ஒரு வேளை நீங்கள் பார்த்திருக்கலாம். இப்படி ஒரு நிகழ்வை

நீங்கள் பார்த்திருந்தால், அங்கே கேலியாக கூறப்படும் வார்த்தைகளை விட அவர்கள் காண்பிக்கும் வெறுப்பு மற்றும் தூஷணம் தான் சம்பந்தப்பட்டவரை அதிகம் பாதிக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

பெத்தேலின் விக்கிரக வணக்கத்தை தீர்க்கதரிசிகள் கண்டித்திருந்தனர் (காண்க 1 இராஜாக்கள் 13:1, 4); இப்போது அப்பட்டணத்தின் இளம் போக்கிரிகள் எலிசாவின் மேல் தங்கள் கோபத்தை காண்பிக்கின்றனர். மேத்யூ ஹென்றி என்பவர் இது குறித்து பின்வருமாறு கூறுகிறார்: "அதாவது, இந்த பிள்ளைகள் தாங்கள் போதிக்கப்பட்டபடி பேசினார்கள். குறிப்பாக, தீர்க்கதரிசிகளை தகாதவிதத்தில் பேசவும், கெட்ட வார்த்தைகள் பேசவும் தங்கள் விக்கிரக ஆராதனை செய்யும் பெற்றோரிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். இந்த இளம் தீயவர்கள் முதியோருக்கு எதிராக கூட்டம் கூடினார்கள்."[9] சில பெற்றோர்கள் இன்னமும் தங்கள் பிள்ளைகளுக்கு - வார்த்தைகள், செய்கைகள் மற்றும் எண்ணப்போக்குகள் மூலம் பிறரை பகைக்கும்படி - குறிப்பாக மாறுபட்ட இனக்குழு மக்களை, மாறுபட்ட நிறமுடையோரை அல்லது மாறு பட்ட சமூக அந்தஸ்து உடையோரை பகைக்கும்படி போதித்து வருகிறார்கள். எல்லா மக்களும் தேவசாயலாக படைக்கப்பட்டவர்கள் என பெற்றோரால் போதிக்கப்படும் பிள்ளைகள் பாக்கியவான்கள் (ஆதியாகமம் 1:26, 27; 9:6; காண்க 1 பேதுரு 2:17; NIV*).*

உண்மையாக பிரச்சனை என்னவென்றால், இந்த வாலிபர்கள் பிறரை மதிப்பதை கற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் வயதானவர்களை மதிக்கவில்லை. பெலவீனமானதென கருதப்பட்டவைகள் பேரில் அவர்களுக்கு பரிவு இருக்க வில்லை. தேவனுடைய தீர்க்கதரிசியை அவர்கள் மதிக்காதவர்களாய் இருந்தனர். பொதுவாக எவரையும் மதிப்பதில்லை என்பது தேவனைக் கூட மதிப்பதில்லை என்பதிலிருந்து உருவாகிறது.

வருந்துமளவுக்கு, எவரையும் மதிப்பதில்லை என்ற பாவம் இன்றும் இருக்கிறது. சில பிள்ளைகள் தங்கள் பெற்றோரை மதிப்பதில்லை (காண்க எபேசியர் 6:1-3), மற்றும் சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மதிப்பதில்லை (காண்க எபேசியர் 6:4). சில மனைவிகள் தங்கள் புருஷரை மதிப்பதில்லை (காண்க 1 பேதுரு 3:1-6), மற்றும் சில புருஷர்கள் தங்கள் மனைவிகளை மதிப்ப தில்லை (காண்க 1 பேதுரு 3:7; NIV*). சில வேலைக்காரர் தங்கள் எஜமானை மதிப்ப தில்லை (காண்க 1 பேதுரு 2:18; எபேசியர் 6:5-8), மற்றும் சில எஜமானர்கள் தங்கள் வேலைக்காரரை மதிப்பதில்லை (காண்க எபேசியர் 6:9). களவு மற்றும் புராதன சின்னங்களை அழித்தல் போன்றவற்றில் வெளிப்படுவது போல், சிலர் மற்றவர்களுடைய சொத்துக்களை மதிப்பதில்லை (காண்க ரோமர் 13:9). சிலர் மற்றவர்களுக்கிருக்கும் நற்பெயரை மதிப்பதில்லை, ஆகவே அவர்களுக்கெதிராக கோள்பேசி, புறங்கூறுகிறார்கள் (காண்க 1 பேதுரு 2:1). எங்கும் பரவியிருக்கிற மரியாதையின்மைக்கு மூல காரணம் என்ன? எலிசாவின் நாட்களில் காணப்பட்டது போல, தேவனுக்கும் மற்றும் அவரது வார்த்தைக்கும் மதிப்பு இல்லை என்பதிலிருந்து தான் இது தோன்றுகிறது. நீண்ட காலத்திற்கு முன்னர் தேவன் கேட்ட கேள்வியை அவர் இப்போதும் கேட்டுக்கொண்டிருக்கிறார்: "நான் பிதாவானால் என் கனம் எங்கே?" (மல்கியா 1:6).*

தகுதியான பலன்

ஒருவரை அவமானப்படுத்துவது துவங்கி, பொதுவாக கற்கள், குச்சிகள், சேறு மற்றும் கையில் அகப்படும் எதையும் கொண்டு தாக்குதல் என கும்பலின் செய்கைகள் கட்டுக்கடங்காமல் போகும். இந்த கும்பல் வாய் வார்த்தைகளோடு நின்றுவிட்டது. "அப்பொழுது அவன் திரும்பி அவர்களை பார்த்து ..." என நமது வசனம் கூறுகிறது (2 இராஜாக்கள் 2:24அ). அவர்கள் அவனை அருகாமையில் பின் தொடர்ந்து, தங்கள் வார்த்தைகளினால் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை இது கூறுகிறது. இந்த வார்த்தைகள் துவக்கத்தில் அவர் அவர்களுடைய வார்த்தைகளை பொருட்படுத்தாமலிருந்தார் எனவும் தோன்றுகிறது. அவர்கள் அவனை அவமானப்படுத்துவதில் உறுதியாயிருந்தபோது, அவன் நின்று, அவர்களைப் பார்த்து, "கர்த்தரின் நாமத்திலே அவர்களைச் சபித்தான்" (வசனம் 24ஆ).

"கர்த்தரின் நாமத்திலே சபித்தான்" என்பதின் பொருள், தேவன் இதை பார்த்துக்கொள்ளும்படி வேண்டினார் என்பதாகும். இந்த சபித்தலுக்காக எலிசா குற்றப்படுத்தப்படுகிறார். குறைந்தது, மூன்று கருத்துக்களை முன்வைக்கலாம்: முதலாவது, எலிசா பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்தார் என்பதை மனதில் வையுங்கள். புதிய ஏற்பாட்டில் நாம், "உங்களை துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள்" என்ற கட்டளை பெற்றுள்ளோம் (ரோமர் 12:14) - ஆனால் எலிசா புதிய ஏற்பாட்டின் சட்டத்தின் கீழ் வாழவில்லை.

இரண்டவதாக, தீர்க்கதரிசிகள் தேவனுடைய பிரதிநிதிகள் (அவருடைய நாமத்தில் பேசுபவர்கள்) என மோசேயின் பிரமாணம் போதித்தது. அவர்களை அவமானப்படுத்துவது மற்றும் அவர்களுடைய செய்தியை அவமானப்படுத்துவது என்பது கர்த்தரையே அவமானப்படுத்துவதாக கருதப்பட்டது (காண்க உபாகமம் 18:19). மேலும், கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலைசெய்யப்படவேண்டும் என பிரமாணம் போதித்தது (காண்க லேவியராகமம் 24:16). 2 நாளாகமம் 36:16இல் அதின் எழுத்தாளர், தேவன் ஏன் இஸ்ரவேலரை அடிமைத்தனத்திற்கு எடுத்துக்கொள்ளும்படி அனுமதித்தார் என கூறுகிறார்: "ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாதிபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டை செய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின் மேல் மூண்டது." இப்படியாக, பிரமாணத்தின்படி எலிசாவை நிந்தித்தவர்கள் தேவனை தூஷித்து, தேவ கோபத்திற்கு ஆளானார்கள்.

மூன்றாவதாக, தேவன் என்ன செய்யவேண்டுமென்பதை எலியா வற்புறுத்தினார் என்பதற்கான அறிகுறிகள் இல்லை. அவர் இந்த காரியத்தை தேவனுடைய கைகளில் விட்டுவிட்டார்.

தேவன் என்ன *செய்தார்?* தேவன் அவர்களுடைய "தீங்கற்ற குறும்பு செயலை" *கவனிக்காமல் விட்டுவிட்டாரா? அவர் அவர்களை பார்த்து புன்முறுவல் பூந்து, "பையன் என்றால் இப்படித்தான் இருப்பார்கள்" என்று கூறினாரா? இல்லை, இல்லை, இல்லை. "நீங்கள் எனக்குச் செவிகொடுக்க மனதில்லாமல், எனக்கு எதிர்த்து நடப்பீர்களானால், ... உங்களுக்குள்ளே வெளியின் துஷ்டமிருகங்களை வரவிடுவேன், அவைகள் உங்களை பிள்ளைகளற்றவர்களாக்கி ... விடும்" என தேவன் எச்சரித்திருந்தார் (லேவியராகமம் 26:21, 22அ). பெத்தேலின் விக்கிரக*

வழிபாடு மற்றும் முரட்டாட்டத்தில் மூழ்கிப்போன தகப்பன்மாரும் தாய் மார்களும் அந்த வார்த்தைகளின் பொருள் என்னவாயிருந்தது என்பதை புரிந்துகொள்வார்கள்.

பட்டணத்தினருகில் விலங்குகள் வசித்த ஒரு காடு இருந்தது. "உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டது" (2 இராஜாக்கள் 2:24இ). வெறித்தனமான கரடிகள் ... கிரீச்சிடும் பயஙகரம் ... பிராண்டும் கூர்மை யான நகங்கள் ... பிய்த்தெடுக்கும் பற்கள் ... அலறலின் சத்தம் ... பீறிட்டுவரும் இரத்தம் ... காயம்பட்டவர்கள் பட்டணத்தின் நுழைவாயிலை நோக்கி தலை தெரிக்க ஓடுவது ... குதறப்பட்ட உடல்பகுதிகள் தரையில் சிதறிகிடப்பது! என இப்படிப்பட்ட தெளிவான மற்றும் பயங்கரமான காட்சிகள் நம் மனதில் உருவாகாமல் நாம் அந்த வசனங்களை வாசிக்க இயலாது.

அந்த நாற்பத்திரண்டு பேருக்கு ஏற்பட்ட காயங்கள் எப்படிப்பட்டவைகள் என்பது நமக்கு நிச்சயமாக தெரியவில்லை. ஒருவேளை சிலர் மரித்தார்கள், சிலருக்கு எலிசாவை நிந்தித்த நாளை நினைவூட்டும்படி வாழ்நாள் எல்லாம் காயத்தின் தழும்புகள் இருந்தன. இந்த நாள் பெத்தேலில் பயங்கரமான, பயங்கரமான ஒரு நாளாய் இருந்தது. நிச்சயமாக அந்த பட்டணத்து குடிகளின் மனதில் மறக்க முடியாத நினைவுகளை ஏற்படுத்தின ஒரு நாளாய் இருந்தது.

இது தேவனிடத்திலிருந்து வந்த ஒரு நீதியான தீர்ப்பாய் இருந்தது என்பதை நீங்கள் ஒருபோதும் சந்தேகப்பட வேண்டாம். விதியின்படி, கரடிகள் அச்சுறுத்தப்படும் போது அல்லது பசியாயிருக்கும் போது மட்டும் மனிதரை தாக்கும். இரண்டு பெண் கரடிகள் கும்பலில் புகுந்து, வலது இடமாக அவர்களை பந்தாடி, காயப்படுத்தி அல்லது நாற்பத்திரண்டு பேரை கொன்று போடுமளவிற்கு அந்த கரடிகளுக்கு அசாதாரணமான சூழ்நிலைகள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை: "மோசம் போகாதிருங்கள், *தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார்*; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலாத்தியர் 6:7; என்னால் வலியுறுத்தப்படுகிறது; காண்க உபாகமம் 7:10) என பவுல் பின்னாளில் எழுதிய சத்தியத்தை அந்நாளில் பெத்தேலின் மக்கள் கடின மான ஒரு விதத்தில் கற்றுக் கொண்டார்கள். கரடிகள் செய்த செயலுக்காக, நீங்கள் யாரையும் குற்றப்படுத்துவீர்களா? அப்படியானால் எலிசாவை குற்றப்படுத்தாதீர்கள். ஆனால் கர்த்தரையே குற்றப்படுத்துங்கள்: "சகல ஞானம் நிறைந்த தேவனுடைய தீர்ப்புகளின்மேல் ஒரு எல்லைக்குட்பட்ட மற்றும் அழிந்துபோகும் மனிதன் அவைகள் தவறானவைகள் என்பது போல் தீர்ப்புச் செய்வதிலிருந்து விலகி இருக்க வேண்டும். ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்!"[10]

தேவன் பயங்கரமான, துக்ககரமான சம்பவங்களை, ஒரு புதிய சகாப்தம் துவங்குவதற்கு சற்று முன்னதாக, ஒரு புதிய சகாப்தம் துவங்குவதால், பழைய சட்டங்கள் மாறிப்போய் விடவில்லை என்பதை உறுதி செய்வதற்காக பயன்படுத்துகிறார்.[11] இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரத்தில் தேவனோடு ஒரு புதிய உறவுக்குள் வந்தபோது, ஒரு அந்நிய அக்கினியை அவருடைய பலிபீடத்தில் செலுத்தியதற்காக நாதப் மற்றும் அபியூ ஆகிய இருவரும் செத்தார்கள் (லேவியராகமம் 10). யோசுவா இஸ்ரவேலை வழிநடத்தும் தலைமைபொறுப்பை ஏற்றுக்கொண்டபோது, ஆகான் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதை களவாடியதினால் கொல்லப்பட்டான் (யோசுவா 7).

தாவீது இராஜா, எருசலேமை தனது புதிய தலைநகரமாக மாற்றியபோது, ஊசா தேவனுடைய பெட்டியை தொட்டதினால் அங்கே செத்தான் (2 சாமுவேல் 6:1-7). கிறிஸ்தவ யுகம் துவங்கினபோது கூட, தேவனுடைய கோபம் அனனியா மற்றும் சப்பீராள் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொன்னதால் அவர்கள் மேல் மூண்டது (நடபடிகள் 5). "தேவன் ஒரு காரியத்தை சொல்லும்போது, அதை உணர்ந்துதான் சொல்கிறார்! நீங்கள் தேவன் மற்றும் அவருடைய சித்தத்தை மதிக்க வேண்டும் அப்படி நீங்கள் செய்யாவிட்டால், துயரம் உங்களுக்கு காத்திருக்கிறது!" என்ற செய்தி மேற்கண்ட துயரமான சம்பவங்களினால் தெளிவாய் உணர்த்தப்படுகிறது.

பெத்தேலின் குடிமக்கள் இந்த பாடத்தை கற்றுக்கொண்டார்களா? நமக்கு நிச்சயமாக தெரியவில்லை. ஆனால் குறைந்தபட்சம் அதற்கு பின்பு அவர்கள் எலிசாவை அல்லது தேவனுடைய வேறு தீர்க்கதரிசி எவரையும் கேலி செய்யவில்லை என தெரிந்து கொள்கிறோம். உண்மையில், இந்த துயர சம்பவத்தின் செய்தி நாடெங்கும் பரவியிருந்தது, அதன்பிறகு *வேறு* எவரும் *வேறு* எந்த சந்தர்ப்பத்திலும் எலிசாவை கேலிசெய்ததாக நாம் வாசிப்பதில்லை. இந்த செய்தி மிகவும் தெளிவானது: "யெகோவாவை கனம்பண்ணுகிறவர்களுக்கு எலிசாவின் ஊழியம் ஜீவனைக் கொடுக்கிறதாயிருக்கும், ஆனால் அவரை நிந்திக்கிறவர்களுக்கு அது மரணமாயிருக்கும்."[12] "ஆகையால், தேவனுடைய *தயவையும் கண்டிப்பையும்* பார்" (ரோமர் 11:22அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

முடிவுரை (2:25)

எலிசா பெத்தேலில் தனது ஊழியத்தை (அது எதுவாக இருந்திருப்பினும்) முடித்த பிறகு, "அவன் அவ்விடத்தை விட்டு கர்மேல் பர்வதத்திற்குப்போய்," சேர்ந்தார் (வசனம் 25அ). தனது தலைவரின் மாபெரும் வெற்றியின் ஸ்தலமாக அது இருந்தது (1 இராஜாக்கள் 18). கர்மேல் பர்வதம் எலிசா ஓய்வு எடுக்கும் இடமாக மாறியிருந்தது (காண்க 2 இராஜாக்கள் 4:25), அவரது ஆவிக்குரிய பெலனை புதுப்பித்துக் கொள்ளும் இடமாகவும் இருந்தது. "அங்கேயிருந்து [முப்பது அல்லது அதற்கு கூடுதலான மைல்கள்] சமாரியாவுக்கு திரும்பினான்" (2:25ஆ), அங்கே அவருக்கு ஒரு வீடு இருந்தது (காண்க 6:24, 32). சமாரியாபட்டணம் இஸ்ரவேலின் வட இராஜ்ய தலைநகரமாகவும், ஆகாபின் மகன் யோராமின் குடியிருப்பு ஸ்தலமாகவும் இருந்தது. எலிசா அங்கே தங்கியிருந்து, தேசத்தில் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அறிவிக்கப்பட்டவனாய் இருந்தான். அதைப்பற்றி அடுத்தபாடத்தில் அதிகமாக எடுத்துரைப்போம்.

இந்த பாடத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள வேண்டும்? இரண்டு கரடிகளை நமது கொல்லைப்புறத்தில் கட்டிவைத்து, சுவிசேஷத்தை நிந்திக்கக் கூடியவர்களுக்கு எதிராக அவிழ்த்து விடுவதை அல்ல. மாறாக, விவாதிக்கப்படும் அடிப்படை சத்தியங்கள் இன்னமும் உண்மையாக உள்ளன என்பதை கற்றுக்கொள்ளவேண்டும்:

- தேவனை கனம்பண்ணுங்கள் மற்றும் அவருடைய காரியங்களை மதியுங்கள் - நன்கு பிழைத்து வாழுங்கள்.
- தேவனை கனவீனம் பண்ணுங்கள் மற்றும் அவருடைய காரியங்களை

கனவீனம் பண்ணுங்கள் - செத்து மடியுங்கள்.

நாம் தேவனையும், அவருடைய வார்த்தையையும் மதித்து நடக்க தவறுவோமானால், விலங்குகளால் நாம் கொல்லப்படமாட்டோம்; ஆனால் நாம் கீழ்ப்படியாமல் போகும் போது ஆவிக்குரிய முறையில் "மரித்துப்" போவோம் (எபேசியர் 2:1), மற்றும் நாம் மனந்திரும்பாற்போனால் நித்தியமாக "மரித்துப்" போவோம் (வெளிப்படுத்தின விசேஷம் 20:14, 15). நீண்ட காலத்திற்கு முன்பு, மோசே ஜனங்களை நோக்கி, "இதோ, ஜீவனையும் ... மரணத்தையும் ... இன்று உனக்கு முன்னே வைத்தேன்" என்றான் (உபாகமம் 30:15). அதே தெரிவு இன்றும் நமக்கு முன்பாக இருக்கிறது. நாம் எதை தெரிந்தெடுப்போம்?

குறிப்புகள்

[1]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1 & 2 Kings*, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 23. [2]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 197. [3]Ibid. [4]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 11. [5]Clyde M. Miller, *First and Second Kings,* The Living Word Commentary series, vol. 7 (Abilene, Tex.: A.C.U. Press, 1991), 314. [6]*2 இராஜாக்கள் நூலை யார் எழுதினார் என நமக்கு தெரியவில்லை. ஆவியினால் ஏவுதல் பெறாத யூத பாரம்பரியப்படி, எரேமியா இந்த நூலை எழுதினார்.* [7]T. E. McComisky, "Elisha, Eliseus," *The Zondervan Pictorial Encyclopedia of the Bible,* ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1975, 76), 2:291. [8]Krummacher, 14. [9]Matthew Henry, *Commentary on the Whole Bible,* ed. Leslie F. Church (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1961), 401. [10]Miller, 315.

[11]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 21. [12]J. H. Stek, "Elisha," in *The International Standard Bible Encyclopedia*, rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:71.

3

மூன்று இராணுவங்களைக் காப்பாற்றிய மனிதன்

(2 இராஜாக்கள் 3:1-27)

நமது முந்தைய பாடம் "பெரிய காரியங்களைச் செய்த மனிதன்" என்பதாயிருந்தது. அந்த பாடத்தில் படித்த - கெட்ட தண்ணீரை நல்ல தண்ணீராக்கினது மற்றும் கேலிக்கார கும்பலை சபித்தது ஆகிய அற்புதங்களை சிலர் "சிறிய அற்புதங்கள்" என வகைப்படுத்தலாம். இந்த பாடத்தில் நாம் காணப்போகிறபடி, தேவனை பொருத்தவரை, "பெரிய" மற்றும் "சிறிய" அற்புதங்கள் ஒன்றுபோலவே இருக்கின்றன. இருப்பினும், அற்புதங்களை வகைப்படுத்துகிறவருக்கு இந்த பாடத்தில் எலிசா செய்தது "பெரிய" அற்புத மாக இருக்கிறது: தேவன் மூன்று இராஜாக்கள் மற்றும் அவர்களுடைய இராணுவத்தைக் காப்பாற்ற - இஸ்ரவேலின் இராஜாவாகிய யோராம் (Jehoram) உட்பட - தீர்க்கதரிசியை பயன்படுத்தினார்.

எலிசா எலியாவிடம் ஊழிய பயிற்சி எடுத்துக்கொண்டது ஆகாபின் ஆட்சியில் துவங்கி, சிறிது காலம் அரசாண்ட அவன் மகன் அகசியா ஆட்சி காலம் வரை தொடர்ந்திருந்தது. எலிசாவின் சொந்த ஊழியமானது, ஆகாபின் மற்ற குமாரனான யோராமின் (Jehoram) ஆட்சி காலத்துவக்கத்தில் துவங்கியது. தீர்க்கதரிசியின் ஊழியம் யெகூ, யோவாகாஸ், யோவாஸ் ஆகியோரின் ஆட்சி காலத்தில் தொடர்ந்து இருந்தது. குறிப்பிட்டபடி, இந்த பாடத்தில் எடுத்துரைக்கப்படும் சம்பவம் யோராமின் (Jehoram) ஆட்சி காலத்தில் நடந்தது.

எலிசாவின் வாழ்வில் நடந்த சம்பவங்கள் எப்போதும் காலகிரமத்தின்படி ஒழுங்கு செய்யப்படவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். உதாரண மாக, 2 இராஜாக்கள் 5ஆம் அதிகாரத்தில், கேயாசி ஒரு தொழுநோயாளியாக மாறியிருந்தார் (வசனம் 27), ஆனால் அதிகாரம் 8இல் கேயாசி இராஜாவின் சமூகத்தில் இருந்தார் (வசனம் 4) - அவர் ஏற்கெனவே தொழுநோயாளியாக இருந்திருந்தால், இது சாத்தியமாக இருக்க வில்லை. மேலும், யோவாஸ் இராஜாவின் மரணம் சொல்லப்பட்டதையடுத்து (13:13) அவன் எலிசாவை சந்தித்த சம்பவம் சொல்லப்பட்டுள்ளது (வசனங்கள் 14-19). ஆகவே, எலிசாவின் வாழ்க்கையில் இப்போது நாம் படிக்கும் சம்பவம் எங்கே பொருந்துகிறது என நமக்கு உறுதியாக தெரியவில்லை. 2 நாளாகமம் 21:12-15இன்படி, யோசபாத் மரணமடைந்தபின் யோசபாத்தின் குமாரனுக்கு எலியாவிடமிருந்து ஒரு கடிதம் வருகிறது. ஆனால் 2 இராஜாக்கள் 3 (வசனம் 7)இல் சொல்லப்படும் கதையில் யோசபாத் ஒரு பகுதியாக இருக்கிறார். 2 இராஜாக்கள் 3ஆம் அதிகாரத்தில் சொல்லப்படும் இராணுவ படையெடுப்பு நடக்கையில், எலியா இன்னமும் உயிரோடிருந்தார் என்பதை இது காட்டுகிறது - மற்றும் எலிசா அவருடைய

பிரதிநிதியாக இராணுவத்தோடு இருந்தார் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

துல்லியமான காலக்கிரம ஒழுங்கு முக்கியமானதல்ல. வேதாகமத்தில் சம்பவங்கள் சொல்லப்பட்டுள்ளது காலக்கிரமப்படி இருக்காது, ஆனால் அது ஒருபோதும் ஒழுங்கில்லாமல் இராது. எலிசா எப்படி அவருடைய நாட்களில் இருந்த அதிகாரிகளோடு செயல்பட்டார் என்பதை விளக்குவதற்கு இப்போது இந்த கதை சொல்லப்பட்டுள்ளது. தேவன் எப்படி தமது பிள்ளைகளை பாதுகாப்பதற்கு அவரை பயன்படுத்தினார் என்பதை விளக்குவதற்கு இது இந்த பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒரு தாங்கமுடியாத சூழ்நிலை (3:1-10)

2 இராஜாக்கள் 1ஆம் அதிகாரத்தில் "அகசியா இறந்துபோனான்" என பதியப்பட்டுள்ளது (வசனம் 17அ). இவன் தன் தந்தை ஆகாபின் மரணத்தையடுத்து வட இராஜ்யமாகிய இஸ்ரவேலில் இராஜாவாகி கி.மு. 853-52 வாக்கில் இரண்டு வருடம் அரசாண்டான் (காண்க 1 இராஜாக்கள் 22:40, 51). அகசியா மரித்தபோது, "அவனுக்கு குமாரன் இல்லாதபடியினால், யோராம் [ஆகாபின் அடுத்த மூத்த மகன்] அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்" (2 இராஜாக்கள் 1:17ஆ). இது, "யூதாவின் இராஜாவாகிய யோசபாத்துடைய குமாரனான யோராமின் இரண்டாம் வருஷத்திலே நடந்தது" (வசனம் 17இ).

ஒரு நிமிடம் பொறுங்கள்! *யோராமின்* இரண்டாம் வருடத்தில் *யோராம்* ஆளத்துவங்கினான்? எலியாவின் ஊழியம் பிரிவுபட்ட இராஜ்யத்தின் காலத்தில் இருந்தது என்பதை நினைவில் வையுங்கள்: வட இராஜ்யமாகிய இஸ்ரவேல் (எலிசா வாழ்ந்து ஊழியம் செய்த பகுதி), மற்றும் தென் இராஜ்யமாகிய யூதா ஆகிய பகுதிகளில் ராஜாக்கள் இருந்தார்கள். இஸ்ரவேலில் யோராம் ஆட்சி செய்கையில், யூதாவில் யோராம் என்பவர் தன் தந்தையோடு ஆட்சி செய்து கொண்டிருந்தார் (ஒப்பிடுக 2 இராஜாக்கள் 1:17 மற்றும் 3:1). எவ்வளவு குழப்ப மாயிருக்கிறது! யூதாவின் (தென்பகுதி) ராஜாவை "யோராம்" (Jehoram) எனவும் இஸ்ரவேல் (வடபகுதி) ராஜாவை "யோராம்" (Joram) என சுருக்கி அழைப்பதும் ஒரு வேளை உதவியாக இருக்கலாம்.

இரண்டு இராஜாக்கள் 3 ராஜாவாகிய யோராமின் (Joram) கதையை கூறத்துவங்குகிறது.

> யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் பதினெட்டாம் வருஷத்தில் ஆகாபின் குமாரனாகிய யோராம் சமாரியாவிலே இஸ்ரவேலின் மேல் ராஜாவாகிப் பன்னிரண்டு வருஷம் [கி.மு. 852-841 வரை] ராஜ்யபாரம்பண்ணி, கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்; ஆனாலும் தன் தகப்பனைப்போலும் தன் தாயைப்போலுமல்ல; தன் தகப்பன் பண்ணுவித்த பாகாலின் சிலையை அகற்றிவிட்டான் (வசனங்கள் 1, 2).

ஆகாப் பாகாலுக்கு தான் கட்டின கோவிலில் அதற்கென ஒரு சிலையை செய்வித்திருந்தான் (காண்க 1 இராஜாக்கள் 16:32). யோராம் அந்த சிலையை அகற்றிவிட்டான், ஆனால் அழிக்கவில்லை. (யெகூ அதை எதிர்காலத்தில் அகற்றி அழிக்கவேண்டியதாயிருந்தது; காண்க 2 இராஜாக்கள் 10:27.)

"என்றாலும் இஸ்ரவேலை பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களை அவன் விட்டு நீங்காமல் அவைகளிலே சிக்கிக்கொண்டிருந்தான்" என்று 2 இராஜாக்களின் எழுத்தாளர் கூறுகிறார் (3:3). வேறு வார்த்தையில் கூறுவதென்றால், யெரோபெயாம் பெத்தேல் மற்றும் தாணில் நிறுவிய பொற்கன்றுக் குட்டிகளை தன் மக்கள் வணங்குவதை அவன் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான் (காண்க 1 இராஜாக்கள் 12:26-33; 13:33). அப்படிச்செய்வது அவனுக்கு அரசியல் ரீதியான அனுகூலமாக இருந்தது.

ஒரு பிரச்சனை

இது தான் பின்னனி; இப்போது நாம் நமது பாடத்திற்கு தயாராகிவிட்டோம். "மோவாபின் ராஜாவாகிய மேசா ஆடுமாடுகள் பெருத்தவனாயிருந்து, இஸ்ரவேலின் ராஜாவுக்கு இலட்சம் ஆட்டுக்குட்டிகளையும், இலட்சம் குறும்பாட்டுக்குட்டிகளையும் செலுத்திவந்தான்" (2 இராஜாக்கள் 3:4).[1] இஸ்ரவேலின் வடகிழக்கு எல்லையில் அமைந்திருந்த (*எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்களின்* வரைபடத்தை காண்க), மோவாப் தாவீது ராஜாவால் தோற்கடிக்கப்பட்டு காணிக்கை/கப்பம் கட்டும்படி செய்யப்பட்டிருந்தது (1 நாளாகமம் 18:1, 2). "ஆகாப் இறந்துபோனபின் மோவாபின் ராஜா இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோதமாய் கலகம் பண்ணினான்" (2 இராஜாக்கள் 3:5; காண்க 1:1). ஆகாபின் மரணத்தையடுத்த குழப்பமான காலத்தை (குறுகிய கால அகசியாவின் ஆட்சியின் போதும்) மேசா வரிசெலுத்தாமல் இருப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தினான்.

யோராம் ஆட்சிக்கு வந்தபோது, மதிப்புமிக்க வருவாய் ஆதாரங்களை புதுப்பிக்க தீர்மானமாயிருந்தான். முதலில் அவன் இஸ்ரவேலில் ஒரு சேனையை ஏற்படுத்தினான் (3:6). பின், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்திற்கு ஒரு செய்தியை அனுப்பினான் (வசனம் 7அ). யோராம் மோவாபை தென் பகுதியிலிருந்து தாக்க விரும்பினான் (வசனம் 8) - ஏனெனில் மோவாபின் தென்பகுதியை காட்டிலும் வடபகுதி உறுதியான பாதுகாப்பு ஏற்பாடுகளை கொண்டிருந்தது. அதை செய்வதற்கு அவர் யூதா வழியாக கடந்து செல்ல வேண்டியிருந்தது. அவன் யூதாவின் ராஜா யோசபாத்திடம் ஒரு வேண்டுகோள் வைத்தான்: "மோவாபின் ராஜா எனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினான்; மோவாபியர் மேல் யுத்தம் பண்ண, என்னோடுகூட வருகிறீரா?" என்று கேட்டனுப்பினான் (வசனம் 7ஆ).

முன்னதாக, யோராமின் தந்தை ஆகாப் ஆராமுக்கு (சீரியா) விரோதமாய் யுத்தம் செய்வதற்கு யோசபாத்தை கூலி பொருத்தியிருந்தான் (காண்க 1 இராஜாக்கள் 22:1-40). யோசபாத், ஆகாப் மற்றும் அகசியாவோடு செய்து கொண்ட ஒப்பந்தத்திற்காக கடிந்துகொள்ளப்பட்டிருந்தான். (காண்க 2 நாளாகமம் 19:1, 2; 20:35-37), ஆனால் அவர் காரியங்களை மெதுவாய் கற்றுக்கொள்கிறவராக இருந்தார். அவன் யோராமோடு யுத்தத்திற்குச் செல்ல சம்மதித்தான் (2 இராஜாக்கள் 3:7இ; ஒப்பிடுக 1 இராஜாக்கள் 22:4). இதற்கான ஒரு காரணம் மோவாப் சமீபத்தில் தன் நாட்டை தாக்கியதாக இருக்கலாம் (காண்க 2 நாளாகமம் 20:1-30) மற்றும் அது பற்றி அவன் இன்னும் கோபமாக இருந்தான்.[2]

ஒரு திட்டம்

யோசபாத், யோராமின் போர் யுக்தி பற்றி கேட்டான்: "எந்த வழியாய்ப் [மோவாபிற்கு] போவோம்?" என்று கேட்டான் (2 இராஜாக்கள் 3:8அ). அதற்கு அவன், "ஏதோம் வனாந்திர வழியாய்" என்றான் (வசனம் 8ஆ). யூதாவின் வழியாக தெற்கு நோக்கி சென்று, கிழக்கு திசையில் சவக்கடலின் தென்முனையை அடைந்து, மோவாபின் தென்திசையில் அமைந்துள்ள ஏதோமுக்குள் செல்வது திட்டமாய் இருந்தது (*எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்களின்* வரைபடம் காண்க). ஏதோம் யூதாவின் அடிமை தேசமாயிருந்தபடியால், அங்கே அவர்களுக்கு எதிர்ப்பு இருக்காது. அவர்கள் கூடுதலான படையாட்களை ஏதோமியரிடமிருந்து பணிக்கு அமர்த்த முடியும். பின்னர், ஏதோமிலிருந்து மோவாபின் தென் எல்லையை தாக்கலாம். இது ஒரு நல்ல போர் தந்திரமாக காணப்பட்டது. துக்ககரமாக, கர்த்தர் இது பற்றி என்ன நினைத்தார் என்பதை யாரும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள அக்கரைப்படவில்லை.

துவக்கத்தில் காரியங்கள் திட்டமிட்டபடி நடந்தன. யோராம் மற்றும் யோசபாத் ஆகியோரின் இராணுவங்கள் ஏதோமை அடைந்தது, அங்கே ஏதோமியரின்[3] இராஜாவும் அவன் சேனையும் இவர்களோடு கூடிக்கொண்டன (வசனம் 9அ). அதன் பிறகு அவர்கள் ஏதாமின் வனாந்தர வழியாய் மோவாபின் தென்பகுதி எல்லை நோக்கி முன்னேறிச் சென்றனர்.

ஒரு இக்கட்டான நிலை

மோவாபை காணக்கூடிய அளவு, "ஏதோமின் வனாந்திரத்தை அவர்கள் அடைந்தபோது" (வசனங்கள் 21-24), அவர்கள் ஏழு நாட்கள் பயணம் செய்திருந்தார்கள் (வசனம் 9ஆ) மற்றும், அவர்களுடைய தண்ணீர் விநியோகம் தீர்ந்து போயிருந்தது. புவியியலை நன்கு அறிந்தவர்கள் அந்த பகுதியில் நம்பதகுந்த ஒரு ஆறு ஓடுவதாக கூறுகின்றனர். சந்தேகத்துக்கிடமில்லாமல், யோராம் இராணுவத்திற்கு அந்த ஓடையிலிருந்து தண்ணீர் பெற்று புதுப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தான் - ஆனால் அது வறண்டுபோயிருந்தது.[4] "அவர்களை பின்செல்லுகிற இராணுவத்துக்கும் மிருகஜீவன்களுக்கும் தண்ணீர் இல்லாமற் போயிற்று" (வசனம் 9இ). பொதுவாக, மனிதர்கள் காற்றில்லாமல் மூன்று நிமிடம் வரை உயிர்வாழமுடியும், தண்ணீரின்றி மூன்று நாட்கள் உயிர் வாழ முடியும். மற்றும் உணவின்றி மூன்று வாரங்கள் வரை உயிர் வாழ முடியும்.[5] F. W. குருமாச்சர் என்பவர் சூழ்நிலையை பின்வரும் அதிர்ச்சியான வார்த்தைகளில் படம் பிடித்து காட்டுகிறார்: "மயக்கமுற்ற வீரர்கள் தரையில் தவண்டு விழுந்தனர்; பசி மற்றும் தாகத்தால் களைத்துப் போன குதிரையால் நகரமுடியவில்லை, கழுதைகள் பாரம் தாங்காமல் கீழே நசுங்கிப்போயின."[6] ஒரு சொட்டு இரத்தம் சிந்தப்படுவதற்கு முன்பே கூட்டணி தோல்வியை எதிர்நோக்கியுள்ளது.

யோராமுடைய பதிலுரைப்பு விசுவாசம் இல்லாத, பெலவீனமான விசுவாசமுடையோர் செய்வது போல இருந்தது: அவன் தேவனை குற்றப்படுத்தினான். "ஐயோ! இந்த மூன்று ராஜாக்களையும் கர்த்தர் மோவாபியரின் கையில் ஒப்புக்கொடுக்க வரவழைத்தாரே" என்றான் (வசனம் 10). அவனுடைய யூகங்களை கவனியுங்கள்:

- முதலாவது கர்த்தர் இந்த போர் கூட்டு முயற்சியை அங்கீகரித்தார்.

- இந்த ஆபத்தான நிலைக்கு அவர்களை கொண்டுவந்த திட்டத்திற்கு கர்த்தர் பொறுப்பாளியாய் இருந்தார்.
- அவர்களை அழிக்கும்படி கர்த்தர் இதையெல்லாம் செய்து விட்டார்.

இப்போது நிஜத்தை கவனியுங்கள்:

- இந்த கூட்டு போர் திட்டம் குறித்து கர்த்தரிடத்தில் கலந்து பேசப்படவில்லை.
- இந்த அழிவுக்குரிய திட்டம் யோராமினால் தீட்டப்பட்டிருந்தது.
- அழிப்பதற்கு பதிலாக, கர்த்தர் அவர்களை அவர்கள் மதியீனத்திலிருந்து காப்பாற்றுவார்.

ஒரு தீர்க்கதரிசி

அதிர்ஷ்டவசமாக, யோராமைக்காட்டிலும் யெகோவாவைப்பற்றின அறிவில் ஆழமாக வேரூன்றின ஒருவர் இருந்தார். தன் கொள்ளுத்தாத்தாவுக்கெல்லாம் கொள்ளுத்தாத்தாவாயிருந்த தாவீதின் விசுவாசத்தில் கொஞ்சத்தை கொண்டிருந்த யோசபாத், "நாம் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவரும் இங்கு இல்லையா?" என்று கேட்டான் (வசனம் 11அ; ஒப்பிடுக 1 இராஜாக்கள் 22:7). "ஒருபோதும் செல்லாதிருப்பதை விட, தாமதமாக செல்வது சிறந்தது" என்ற ஒரு பழைய பழமொழி நினைவுக்கு வருகிறது.

தேவனுடைய தீர்க்கதரிசி ஒருவர் அவர்களுடன் இருந்தாரா இல்லையா என்பதை இராஜாக்களில் ஒருவரும் அறிந்திருக்கவில்லை, ஆனால் ஒரு வேலைக்காரன் அறிந்திருந்தார். "எலியாவின் கைகளுக்கு தண்ணீர் வார்த்த சாப்பாத்தின் குமாரனாகிய எலிசா இங்கே இருக்கிறான் என்று இஸ்ரவேல் ராஜாவின் ஊழியக்காரரில் ஒருவன் மறுமொழியாகச் சொன்னான்" (வசனம் 11ஆ). எலிசா ஏன் இராணுவத்தோடு சென்றிருந்தான் என நமக்கு நிச்சயமாக தெரியவில்லை. ஆனால் தேவன் பிரச்சனை உருவாக்கக்கூடும் என்பதை எதிர் பார்த்திருந்து, தம்முடைய தாசன் அந்த காட்சியில் இருக்க விரும்பினார்.[7]

எலிசா யூதாவில் இல்லாமல், இஸ்ரவேலில் ஊழியம் செய்தபோதிலும் யோசபாத் இவரைக்குறித்து கேள்விப்பட்டு, இவரை சர்வவல்லவருடைய தீர்க்கதரிசி என அறிந்திருந்தார். யோசபாத், "கர்த்தருடைய வார்த்தை அவனிடத்தில் இருக்கிறது" என்றார் (வசனம் 12அ). NCV மொழிபெயர்ப்பில் "இவர் கர்த்தருடைய சத்தியத்தைப் பேசுகிறார்" என்றுள்ளது.

சட்டவிதிகளின்படி, ராஜாக்கள் குடிமக்களை தங்களிடத்தில் கொண்டுவரும்படி செய்தியாளர்களை அனுப்பினார்கள். மூன்று ராஜாக்களும் தங்களை தாழ்த்தி எலிசா தங்கியிருந்த "இடத்திற்கு போனார்கள்" (வசனம் 12ஆ) என்பது தண்ணீரில்லாத பாலைவனத்தில் அவர்கள் எவ்வளவு இக்கட்டில் இருந்தார்கள் என்பதை காட்டியது. அது பார்ப்பதற்குறிய ஒரு காட்சியாக இருந்திருக்க வேண்டும்: இராஜா உடையணிந்த மூன்று ராஜாக்கள் தாழ்மையான நிலத்தை பண்படுத்துகிறவர் ஒருவர் முன் நிற்கிறார்கள்.

ஒரு நிமிடம் இந்த சூழ்நிலையைப் பற்றி சிந்தியுங்கள். இங்கே பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் தங்கள் போர் கருவிகளோடு இருந்தார்கள். அந்த இராணுவத்தை காப்பாற்ற நீங்கள் ஒருவரை தெரிந்தெடுத்தால், நீங்கள்

யாரை தெரிந்தெடுப்பீர்கள்? போர்கருவிகள் இல்லாத, போர் கலையை கற்றிராத ஒருவரை நீங்கள் தெரிந்தெடுப்பது என்பது நிகழ சாத்தியமில்லாததாக இருந்திருக்கும். இருந்தபோதும், அந்த மனிதன்தான் தேவன் பயன்படுத்துபவராய் இருந்தார்.

ஒரு நடைபெற சாத்தியமில்லாத தீர்வு (3:13-19)

ஒரு கடிந்து கொள்ளுதல்

மூன்று ராஜாக்கள் என் முன் நின்று கொண்டிருந்திருப்பார்களானால், நான் செய்வதறியாது திகைத்துப்போயிருப்பேன் - ஆனால் எலிசா அப்படி இருக்கவில்லை. ராஜாக்களை எதிர்கொள்ளுதல் என்ற நிலை ஏற்பட்டபோது, அவர் தனக்கு முன்பு இருந்தவரைப் போல, அஞ்சாதவராயிருந்தார்.

அவர் முதலில் யோராமிடம் பேசினார்: "எனக்கும் உமக்கும் என்ன?" (வசனம் 13அ). "உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?" என்று CJBயில் உள்ளது. எலிசா ராஜாவை பார்த்து, "நீ உம்முடைய தகப்பனின் [ஆகாப்] தீர்க்கதரிசிகளிடத்திலும், உம்முடைய தாயாரின் [ஏசபேல்] தீர்க்கதரிசிகளிடத்திலும் போம்" என்றான் (வசனம் 13ஆ). யோராம் பாகாலின் சிலையை அகற்றியதின் மூலம் ஒரு நல்ல காரியத்தை செய்திருந்தார் (வசனம் 2), ஆனால் அவன் பாகால் வழிபாட்டை ஒழிப்பதற்கு உண்மையான முயற்சி எதுவும் எடுத்திருக்கவில்லை (காண்க 10:19). யோராமின் தாயார் யேசபேல் இன்னும் உயிரோடிருந்தாள். அவள் பாகால் வணக்கத்தில் வெறிபிடித்தவளாக இருந்தாள். பாகாலை பின்பற்றினவர்கள் அவன்தான் இயற்கைக்கான கடவுள் என்றும், மழையை கொடுத்தவன் என்றும் நம்பிக்கொண்டிருந்தார்கள் என்பதை நினைவில் வையுங்கள். எலிசா யோராமைப் பார்த்து உண்மையில் சொன்னதென்னவென்றால், "பாகால் உண்மையான தெய்வமாக இருந்தால், நீங்கள் ஏன் அவனிடம் தண்ணீருக்காக போகக்கூடாது? நீங்கள் என்னிடம் வருவதற்கு பதிலாக, அவனுடைய தீர்க்கதரிசிகளிடம் ஏன் போகக்கூடாது?"

எலிசாவின் இந்த சவாலின் தொனி இன்று ஒவ்வொரு தேசத்திலும் தொனிக்க வேண்டும். இலட்சக் கணக்கானவர்கள் கர்த்தரை விட்டு விலகி, உலக ஆசை, சிற்றின்பம் மற்றும் வெற்றி என்ற தங்கள் "தெய்வங்களிடம்" போய்விட்டார்கள். மனித இனத்தின் "இரட்சிப்பு" என்பது, அறிவியல், கல்வி மற்றும் தொழில்நுட்பத்தில் இருப்பதாக மற்றவர்கள் நம்புகின்றனர். எப்படி இருந்தாலும், பேரழிவு தாக்கும்போது, நீண்ட காலத்திற்கு முன் பாகால் செயல் அற்று இருந்ததுபோல, இவர்களுடைய நவீன "தெய்வங்களும்" செயல் அற்றவைகளாக இருக்கின்றன. இப்படியாக சிலர், "கர்த்தாவே எங்களுக்கு உதவிசெய்யும்!" என மண்டியிட்டு அவரிடம் கதறும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். "நீங்கள் ஏன் என்னிடம் வருகிறீர்கள்? ஒவ்வொரு நாளும் நீங்கள் 'சேவித்த' உங்கள் 'தெய்வங்கள்' இடம் செல்லுங்கள்! அவைகள் உங்களுக்கு உதவி செய்யட்டும் என அவர் கூறுவாரெனில், அது எவ்வளவு துயரமானதாக இருக்கும்!"

எலிசாவின் கடினமான வார்த்தைகள் யோராம் தாழ்மையை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அப்படி இருந்தது. அதற்கு அவன், "அப்படியல்ல, கர்த்தர் இந்த மூன்று ராஜாக்களையும் மோவாபியரின் கையில்

ஒப்புக்கொடுக்கிறதற்கு வரவழைத்தார்" என்றான் (வசனம் 13இ). இந்த பதில் அவன் முந்தி கூறிய கருத்து போலவே இருந்தது (வசனம் 10), ஆனால் நாம் ஒரு வித்தியாசமான வலியுறுத்தலைக் கேட்டிருக்க வேண்டும். ஒருவேளை யோராம் தேவனிடமிருந்து இரக்கத்தை பெற தகுதியற்றவனாக இருந்தான் என்பதை ஒப்புக்கொண்டான் - ஒருவர் அல்ல - மூன்று ராஜாக்கள் மிகுந்த நெருக்கடியில் இருந்தார்கள். ஒருவேளை அவர் இப்படிச் சொன்னார், "எனது குற்றங்களுக்காக மற்றவர்களை தண்டிக்க வேண்டாம்." ஒரு பண்டைய மொழிபெயர்ப்பு, "என்னுடைய பாவங்களை நினைக்க வேண்டாமென கெஞ்சுகிறேன், பதிலாக எங்கள் மேல் இரக்கமாயிருக்க கெஞ்சுகிறேன்."[8]

எலிசா இன்னமும் கலங்கின நிலையில் இருந்தார். அதற்கு எலிசா "நான் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் முகத்தை பாராதிருந்தால் நான் உம்மை நோக்கவுமாட்டேன், உம்மை பார்க்கவுமாட்டேன் என்று சேனைகளுடைய கர்த்தருக்கு முன் நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லு கிறேன்" என்றான் (வசனம் 14). CJBயில் "அல்லது உன்னைக் கவனிக்கவும் மாட்டேன்" என்றுள்ளது.

யோசபாத் பூரணனாக இருக்கவில்லை (காண்க 1 இராஜாக்கள் 22:43ஆ), ஆனால் கர்த்தரில் அடிப்படை விசுவாசத்தை அவன் பராமரித்திருந்தான் (காண்க 1 இராஜாக்கள் 22:43அ; 2 நாளாகமம் 17:3-6; 19:4-11; 20:5-21). மிகவும் முக்கியமாக, அவன் தாவீது ராஜாவின் சந்ததியில் வந்தவனாக இருந்தான். தாவீதின் குடும்பத்தை விட்டு தம்முடைய கிருபை விலகாது இருக்கும் என கர்த்தர் சத்தியம் பண்ணியிருந்தார் (2 சாமுவேல் 7:15, 16). ஒரு நல்ல மனிதருடைய செல்வாக்கு தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தது! இந்த பாடத்திற்கு "மூன்று இராணுவங்களை காப்பாற்றிய மனிதன்" என தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. உள்ளபடி, அந்த இராணுவங்களை காப்பாற்றியதில், எலிசா, யோசபாத் மற்றும் தாவீது ஆகிய மூன்று மனிதரின் பங்களிப்பு இருந்தது.

ஒரு வேண்டுகோள்

எலிசா ராஜாக்களிடத்தில், "இப்போதும் ஒரு சுரமண்டல வாத்தியக் காரனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" என்றான் (2 இராஜாக்கள் 3:15அ) - அதாவது, "கம்பிகள் கட்டப்பட்ட ஒரு கருவியை இசைக்கிறவன்."[9] NIVயில் "ஒரு சுரமண்டலக்காரன்" என்றுள்ளது. எலிசா ஏன் ஒரு சுரமண்டலக்காரன் தேவை எனக்கேட்டார் என நமக்கு தெரியாது. சில சமயங்களில் இசைக்கருவிகள் தீர்க்கதரிசன உரைத்தலோடு தொடர்பு படுத்தி சொல்லப்பட்டுள்ளது. (காண்க 1 சாமுவேல் 10:5; 1 நாளாகமம் 25:3), பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் உரைத்தலில், அது ஒரு பிரிக்க முடியாத பகுதியாக இருந்தது என்ற முடிவுக்கு சிலர் வருகிறார்கள். இந்த ஒரு சமயத்தில் மட்டும்தான் எலிசா இப்படி ஒரு வேண்டுகோளை வைத்தார்.

வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்கு எதிராக ஒரு முரட்டாட்ட வாழ்க்கை வாழ்ந்த யோராம் கர்த்தரை குறிப்பிட்டதால் எலிசா தொல்லைக்கு உள்ளாகி இருந்தார். அலுவலை தொடருவதற்கு முன்பு தன்னை அமைதிபடுத்த விரும்பி இருக்கலாம். தாவீது சவுல் ராஜாவை அமைதிபடுத்த ஒரு இசைக்கருவியை வாசித்தான் (1 சாமுவேல் 16:16, 23), மற்றும் "இசை ஒரு பண்படாத இருதயத்தை அமைதிப்படுத்துகிறது"[10] என்பதை நம்மில் அநேகர் அங்கீகரிக்கிறோம். (இதை

நான் மாற்றி கூறட்டும்: சில இசை என்னை அமைதிபடுத்துகிறது. ஆனால் நாகரீக "இசை" என அழைக்கப்படுவது எனக்குள் அதற்கு எதிரான பாதிப்பை ஏற்படுத்துகிறது!)

ஒரு தேவை

சுரமண்டலக்காரனை அழைத்ததில் எலிசாவின் நோக்கம் எதுவாக இருந்திருப்பினும். அது வேலை செய்தது. "சுரமண்ட வாத்தியக்காரன் வந்து வாசித்தபோது, கர்த்தருடைய கரம் அவன் மேல் இறங்கியது" (2 இராஜாக்கள் 3:15ஆ). அதாவது, கர்த்தருடைய ஆவி எலிசாவின் மேல் வந்து, குழப்பத்திற்கு தேவனுடைய தீர்வை கொடுக்கும்படி செய்தது. எது யெகோவாவின் "சாத்தியமில்லாத தீர்வாக இருந்தது"? வாய்க்கால்களை வெட்டுங்கள் என்பதே!

> *... "கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இந்த பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள்.[11] நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடு மாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (வசனங்கள் 16, 17).*

இதில் சொல்லப்பட்டுள்ள "ஆடுமாடுகள்" என்பவைகள் அவர்கள் புசிப்பதற்கு கொண்டு வந்தவைகளாயிருந்தன, "மிருகஜீவன்கள்" என்பவை சுமைசுமப்பவைகளாக இருந்திருக்கலாம். தேவனானவர் எல்லாருக்கும் எல்லாவற்றையும் வழங்குவார்; எல்லாரும் குடிப்பார்கள்.

"இது கர்த்தரின் பார்வைக்கு அற்பகாரியம்" என எலிசா சொன்னார் (வசனம் 18அ). NIV *இல் "இது கர்த்தரின் பார்வையில் ஒரு எளிதான காரியமாயிருக்கிறது" என்றுள்ளது. இது ஒரு "அற்பமான," "எளிதான காரியமாயிருந்தது"? மறுபடியும், இந்த காட்சியை மனதில் வையுங்கள்: வரண்டு வெடித்துப்போன நிலம், சுட்டெரிக்கும் வெயில், கருகிப்போன தாவரங்கள், வாரி இரைக்கும் புழுதி, இருதயம் விடாய்த்துபோன இராணுவம். அநேக மைல்களுக்கு தண்ணீர் இருக்கவில்லை. காற்று அல்லது மழைக்கான எந்த அறிகுறியும் இல்லை. இருப்பினும், பள்ளத்தாக்கை தண்ணீரால் *நிரப்புவது* "சுலபமான காரியம்" ஆக இருந்தது என எலிசா கூறினார். ஆம், "அது *கர்த்தரின்* பார்வை"யில் அப்படி இருந்தது. தேவனிடத்தில் "பெரிய" மற்றும் "சிறிய" அற்புதங்கள் என்றில்லை. அவருடைய பார்வையில் எல்லா அற்புதங்களும் சமமாகவே இருக்கின்றன.*

இன்று அற்புதங்களைச் செய்வதாக கூறுகிறவர்கள் இந்த கருத்தை புரிந்துகொள்ளவேண்டும். ஒருவர் "சுலபமான" ("அந்நியபாஷை" பேசுதல் போன்ற) அற்புதங்களை செய்ய துவங்கினால், பின்னர் அவரால் "கடினமான" அற்புதங்களை (இல்லாத ஒரு உடல் உறுப்பை உருவாக்குவது அல்லது மரித்தோரை எழுப்புவது போன்ற) செய்ய முடியும் என அவர்கள் வலியுறுத்துகிறார்கள். இவர்கள் உண்மையிலேயே பாஷைகளில் (அவர்கள் படித்திராத பாஷைகளில்) பேசக்கூடுமானால், அவர்களால் மரித்தவர்களையும் உயிருடன் எழுப்பமுடியும். இரண்டிலெதுவும் கர்த்தருக்கு "சுலபமானதாக" இருக்கிறது. அவர்களால் "கடினமான" அற்புதங்களை செய்ய முடியவில்லை

என்பது, அவர்கள் உண்மையிலேயே "சுலபமான" அற்புதங்களையும் செய்யாமல் இருக்கிறார்கள் என்பதையே நிரூபிக்கிறது.

மேலும் எலிசா, "மோவாபியரையும் உங்கள் கையிலே ஒப்புக்கொடுப்பார்" என்றான் (வசனம் 18ஆ). இத்தருணத்தில், இராணுவம் வெற்றி பெறுவதை அல்ல, தப்பிப்பிழைப்பதையே விரும்பியது. ஆனால் கர்த்தர் அவ்விரண்டையும் வாக்குத்தத்தம் செய்தார். அவர்களுடைய உயிரை காப்பாற்றும் அதே அற்புதம் மோவாபியரின் அழிவுக்கு காரணமாகவும் இருக்கும். ஒரு அற்புதம் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றும்போது, இரண்டு அற்புதங்களை ஏன் செய்யவேண்டும்?

மோவாபியர்களை அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கும் போது, இஸ்ரவேலர்கள், "சகல கோட்டைகளையும் சகல சிறந்த பட்டணங்களையும் தூர்த்து, நல்ல மரங்களையெல்லாம் வெட்டி, நீரூற்றுகளையெல்லாம் தூர்த்து, நல்ல நிலத்தையெல்லாம் கல் மேடுகளாக்கிக் கெடுப்பீர்கள்," என்றான் (வசனம் 19). ஒரு "நல்லமரம்" என்பது அநேகமாக ஒரு கனிதரும் மரமாக இருந்தது. அந்த நிலத்தை கற்களால் நிரப்புவது என்பது, அந்த நிலப்பரப்பு கற்பாங்கானதாக இருந்தது. நிலத்தில் பயிரிடுவதற்கு முன்பு, கற்களை தோண்டி எடுத்து, அப்புறப்படுத்தி, வயலில் ஒரு மூலையில் குவித்து வைத்தார்கள். இந்தக் கற்களை மீண்டும் நிலத்தில் பரப்பிவிடுவது, அதை பயனற்றதாக மாற்றி விடும். இந்த முறை "எரிந்துபோன நிலக் கொள்கை" எனப்படும்: "எதிரியானவன் பயன்படுத்துவதற்கு எதையும் விட்டு வைக்காதே." இந்த தண்டனையை பெற மோவாபியர்கள் தகுதியானவர்கள் என தேவன் தீர்மானித்தார்[12] (ஒப்பிடுக ஏசாயா 15 மற்றும் 16).

ஒரு இணையற்ற வெற்றி (3:20-25அ)

நிவாரணம்

ராஜாக்கள் போர்வீரரைக் கொண்டு வாய்க்கால்களை வெட்டியிருந்தார்கள். எலிசாவின் மேலுள்ள நம்பிக்கையினால் யோசபாத் இதை செய்தான். யோராம் அநேகமாக விரக்தியினால் இதைச் செய்தான். அவர்கள் நோக்கம் எதுவாக இருந்திருப்பினும், "மறுநாள் காலமே பலிசெலுத்தப்படும் நேரத்தில், இதோ, தண்ணீர் ஏதோம் தேச வழியாய் வந்ததினால் தேசம் தண்ணீரால் நிரம்பிற்று" (வசனம் 20). ஏதோமின் தூரமான மலைப்பிரதேசத்தில் அநேகமாக கடுமையான புயல்மழை ஏற்பட்டிருந்தது - அந்த தண்ணீர் வடதிசையில் ஓடி. போர்வீரர்கள் முகாம் அமைத்திருந்த இடத்தை நிரப்பியது. அந்த பள்ளத்தாக்கு சவக்கடலை நோக்கி சரிவாக இருக்கிறது என புவியியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதனால்தான், வாய்க்கால்களை வெட்டுவது அவசியமாக இருந்தது: தண்ணீர் வடிந்துபோவதற்கு முன் அதை தேக்கிவைக்கவேண்டும். J. T. ஹெட்லி என்பவர் அந்த சம்பவங்களை இவ்விதம் காட்சிப்படுத்துகிறார்:

> பொழுதுபோயிற்று, இரத்தவருணமான சூரியன் மேகங்கள் இல்லாத வானத்தில் மறைந்தது. அதின் கடைசி ஒளிக்கதிர் அகன்ற தண்ணீரில்லாத பாலைவனத்தில் விழுந்தது. விண்மீன்கள் தோன்றின, அமைதியான வானம் காற்றோட்டம் இல்லாத, தாகத்தில் சோர்ந்து, தூங்கிபோன இராணுவ

முகாம்கள் பக்கமாய் வளைந்திருந்தது. அவர்களைச் சுற்றி சகலமும் அமைதியாக இருந்தபோது, தூரத்திலிருந்த மலைகளில் மேகம் வெடித்து, கனமழை கொட்டியது. மழைத்தண்ணீர் கீழ் முகமாய் ஓடிவந்து, காய்ந்த வாய்க்கால் களை, ஓடைகளை நிரப்ப வெள்ளம் உருவாக, பள்ளத்தாக்கின் வழியாக வெள்ளநீர் பாய்ந்து கொண்டிருந்தது. எக்காள ஒலி போர்வீரர்களை அவர்கள் உறக்கத்திலிருந்து எழுப்ப, அவர்கள் கண்ணுக்கு எட்டியதூரம் எல்லாம் தண்ணீரை கண்டார்கள். காலை காற்றில் உறத்த சத்தம் கேட்க, அவர்கள் தங்கள் தகனிக்கும் தாகத்தை தீர்க்க - தண்ணீர்பருக விரைந்து ஓடினார்கள்.[13]

"மறுநாள் காலமே பலி செலுத்தப்படும் நேரத்தில்" (வசனம் 20) நடந்த சம்பவங்களின் விளக்கம் முக்கியமானது. சூரிய உதயத்தில், எருசலேம் தேவாலயத்தில், அந்த நாளின் முதல் பலியிடும் வேளையை இது குறிப்பதாக பலர் ஒப்புக்கொள்கிறார்கள். அநேகமாக, நேரத்தை குறிப்பதற்கு இந்த வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருக்கலாம். அப்படியானால், "சூரிய உதயத்தின் போது" என்று சொல்வது எளிதாக இருந்திருக்கும். எழுத்தாளர் எருசலேமில் ஆசாரியர்கள் செய்து கொண்டிருந்ததையும் கர்த்தர் ஏதோமின் வனாந்தரத்தில் செய்து கொண்டிருந்ததையும் தொடர்புபடுத்துகிறார். எனது தேசத்தில் நான் ஏறெடுக்கும் ஜெபம் நூற்றுக்கணக்கான, ஏன் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள தேசத்தின் சம்பவங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது!

தெய்வீக தண்டனை

வாக்குத்தத்தத்தின் முதல் பகுதி நிறைவேறிவிட்டது. இராணுவத்திற்கு தண்ணீர் கிடைத்துவிட்டது. இப்போது மோவாபியர் அவர்கள் கையில் கொடுக்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தத்தின் இரண்டாவது பகுதியை பற்றி என்ன? இஸ்ரவேல் இராணுவம் மோவாபை நோக்கி முன்னேறி சென்றபோது, "தங்களோடு யுத்தம் பண்ண ராஜாக்கள் வருகிறதை மோவாபியரெல்லாரும் கேள்விப்பட்டார்கள்." அவர்கள் உடனே எல்லாரையும் கூட்டிச் சேர்த்து, யுத்தம் செய்ய எல்லையில் நின்றார்கள் (வசனம் 21). தங்களை விரைவில் தாக்குவதற்கு சமவெளியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தை கண்ட போது பயப்பட்டார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

தண்ணீரால் வாய்க்கால்கள் நிரம்பியிருந்த அந்த காலையில், மோவாபிய வீரர்கள் "அதிகாலையில் எழுந்து," எதிரிபடையினர் முகாம் அமைத்திருந்த பள்ளத்தாக்கை பார்த்தார்கள். அவர்கள் தண்ணீரை பார்த்தார்கள், ஆனால் அந்த காட்சியை தவறாக அர்த்தப்படுத்தினார்கள். "சூரியன் தண்ணீரின் மேல் பிரகாசித்ததினால்," "அந்த தண்ணீர் அவர்களுக்கு இரத்தம்போல் சிவப்பாய் காணப்பட்டது" (வசனம் 22). தண்ணீர் சேற்றுடன் கலந்ததால் ஒரு வேளை சிவப்பாய் தோன்றியது. ஒருவேளை பள்ளத்தாக்கை சுற்றியிருந்த சிவப்பு மலை முகடுகளின் ஒளிபிரதிபலிப்பை அவர்கள் பார்த்தார்கள். ஒருவேளை சூரிய உதயத்தின் காட்சியை தண்ணீர் பிரதிபலித்திருக்கலாம்.

மோவாபியர்கள் தாங்கள் கண்டது தண்ணீர்தான் என்பதை நம்புவதற்கு காரணமில்லாதிருந்தது. அந்த ஆறு வறண்டு போயிருந்தது மற்றும் அதற்கு

முந்தைய இரவில் மழை பெய்யவில்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள் (வசனம் 17). எப்படியிருந்தாலும், அதை இரத்தம் என நம்புவதற்கு காரணம் இருந்தது. அவர்கள் எதிர்கொண்ட இராணுவகூட்டணி அசாதாரணமானது, சாதாரணமாக ஒருவருக்கொருவர் பகையாளிகளாக இருந்த நாடுகளை கொண்ட ஒரு கூட்டணியாக இருந்தது. "அதினால் அவர்கள்: இது இரத்தம், அந்த ராஜாக்கள் தங்களைத் தாங்களே வெட்டிக்கொண்டு மாண்டுபோனார்கள்" என்று அவர்கள் முடிவு செய்தனர் (வசனம் 23அ). மோவாபியர்கள் சமீபத்தில் யூதாவின்மேல் படையெடுத்தபோது தனிப்பட்ட முறையில் இப்படிப்பட்ட ஒரு அனுபவம் ஏற்பட்டது (2 நாளாகமம் 20:23) அவர்கள் இப்படிப்பட்ட ஒரு முடிவுக்குவரக் காரணமாய் இருந்தது.

மோவாபியர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் சத்தமிட்டு, "மோவாபியரே, கொள்ளைக்கு வாருங்கள்!" என்று சொன்னார்கள் (வசனம் 23ஆ). அவர்கள் தங்கள் கேடயங்களையும், பட்டையங்களையும் கீழேபோட்டுவிட்டு, கவனமின்றி இஸ்ரவேலரின் முகாமை நோக்கி ஓடுவதை நான் பார்க்க முடிகிறது. பட்டயங்கள் உறையிடப்பட்டிருந்தன, அவர்கள் மனம் யுத்தத்தின் மேல் இல்லாமல், யுத்த கொள்ளையின் மேல் இருந்தது. அவர்கள் கண்கள் ஆபத்து எங்கே இருக்கிறது எனத் தேடவில்லை, ஆனால் செல்வங்களைத் தேடின. அவர்கள் தாக்குதலை குறித்து கரிசனையாய் இராமல், முகாமை கொள்ளையிடுவதில் கரிசனையாய் இருந்தார்கள்.

அதே நேரத்தில், இஸ்ரவேலர் தங்கள் தாகத்தை தணித்துக் கொண்ட பிறகு, பதுங்கியிருந்து தாக்குவதற்கு (அநேகமாக எலிசாவின் அறிவுரைப்படி) ஒளிந்து கொண்டிருந்தார்கள். கொஞ்சமும் சந்தேகப்படாமல் எதிரி படைவீரர்கள் தங்கள் முகாமுக்குள் நுழைந்தபோது, "இஸ்ரவேலர் எழும்பி, மோவாபியரைத் தங்களுக்கு முன்பாக ஓடிப்போகத்தக்கதாய் முறியடித்தார்கள்" (வசனம் 24அ). திடீரென, சமவெளிப்பகுதியில் உண்மையான இரத்தம் வழிந்தோடியது. "அவர்கள் தேசத்திற்குள் புகுந்து, அங்கேயும் மோவாபியரை முறியடித்தார்கள்" (வசனம் 24ஆ). இஸ்ரவேலர்கள் மோவாபுக்குள் உட்புகுந்தபோது, "எதிரிக்கு ஒன்றும் விட்டுவைக்க வேண்டாம்" என்ற கொள்கையை, தங்களுக்கு கட்டளையிட்டபடி செய்துமுடித்தார்கள் (வசனம் 25அ).

ஒரு எதிர்பாராத பின் விளைவு (3:25ஆ-37)

ஒரு வெற்றி குறிப்போடு இந்த கதையை இங்கே முடிப்பது நலமாக தோன்றும். எப்படியிருப்பினும், வெற்றியானது கையிலிருந்து நழுவி விட்டதுபோல, ஒரு எதிர்பாராத பின்விளைவும் இருந்தது.

வென்றெடுத்த இஸ்ரவேலர்கள் கிராரேசேத்தை அடைகிறவரை முன்னெறிச் சென்றனர் (வசனம் 25ஆ). "முடிவாக, கற்சுவர்களுக்கு பின்னால் இருந்த கிராரேசேத் பட்டணம் மட்டும் மிஞ்சியிருந்தது" என CJB வேதாகமம் கூறுகிறது. சவக்கடலிலிருந்து கிழக்கில் பதினொரு மைல் தொலைவிலுள்ள இன்றைய கிராக் என்ற இடத்தோடு கிராரேசேத் தொடர்புபடுத்தப்படுகிறது (வரை படத்தை காண்க). "கிராரேசேத் என்பது மோவாபியரின் அரணான பட்டணங்களில் மிக முக்கியமானதாக இருந்தது"[14] (காண்க ஏசாயா 15:1; 16:7, 11; எரேமியா 48:36). G. ராலின்சன் என்பவர் கீழ்வரும் விளக்கத்தை தருகிறார்:

சூழ்நிலை மிகவும் வலிமையானது. கோட்டை சுவரானது செங்குத்தான மலையின் மேல் கட்டப்பட்டது, எல்லா புறங்களிலும் ஆழமான குறுகலான பள்ளத்தாக்குகளால் சூழப்பட்டிருந்தது, அந்த மலைகள் கோட்டைகளைவிட உயரமானவைகளாய் இருந்தன. மோவாபியர்கள் பெற்றிருந்த பண்டைய நிலப்பரப்பில், சந்தேகத்திற்கு இடமில்லாமல், இதுதான் மிகவும் வலிமையான ஒரு இடமாக இருந்தது.[15]

இஸ்ரவேலின் கவண்காரர்கள் அப்படிப்பட்ட கோட்டையின் மேல் சிறிதளவே பாதிப்பை ஏற்படுத்தி இருக்க முடியும் (2 இராஜாக்கள் 3:25இ).

நம்பிக்கையற்ற நிலை

மோவாபின் ராஜாவாகிய மேசா, கிராரேசேத் கோட்டைக்குள் பின்வாங்கிவிட்டான். அவன் ஒரு துணிச்சலான முடிவை எடுத்தான்: "யுத்தம் மும்முரமாகிறதென்று மோவாபியரின் ராஜா கண்டபோது, அவன் ஏதோமின் ராஜாவின்மேல் வலுமையாய் விழுகிறதற்குப் பட்டயம் உருவுகிற எழுநூறுபேரைக் கூட்டிக்கொண்டு போனான்" (வசனம் 26அ). ஏதோமியரின் படை ஒரு பெலவீனமான நிலையில் இருந்தது என ஒருவேளை அவர் நினைத்தார். மேலும் அவர் ஏதோம், மோவாபைப்போல ஒரு அடிமை நாடாக இருந்ததால், தனக்காக யுத்தம் செய்ய ஏதோம் ராஜாவை அமர்த்த முடியும் என நினைத்தார்.

அந்த முயற்சி தோல்வி அடைந்தபோது (வசனம் 26ஆ), மேசா ஒரு அதிர்ச்சியான (தேவனுடைய பிள்ளைகளுக்கு அதிர்ச்சியான) காரியத்தை செய்தார்: "அப்பொழுது அவன் தன் ஸ்தானத்தில் ராஜாவாகப்போகிற தன் சேஷ்டபுத்திரனைப் பிடித்து, அலங்கத்தின் மேல் அவனை சர்வாங்க தகனமாக பலியிட்டான்" (வசனம் 27) - மோவாபியரின் "அருவருப்பாகிய"/விக்கிரகமாகிய காமோசுக்கு பலியிட்டான் (காண்க எண்ணாகமம் 21:29; 1 இராஜாக்கள் 11:7, 33; 2 இராஜாக்கள் 23:13; எரேமியா 48:7, 13, 46). அஞ்ஞானிகள் தங்கள் யுத்தத்தின் தோல்விக்கு, தங்கள் "தெய்வங்கள்" கோபமாயிருந்தது தான் காரணம் என நம்பினர். அவைகளின் கோபத்தை தணிப்பதற்கு ஒரு வழி மனித பலி கொடுப்பதாகும். மேசாவின் தோல்வி நாசகரமானதாக இருந்தது, காமோசு தன் மேல் மிகவும் கோபமாயிருந்தது தான் இதற்கு காரணம் என்று முடிவுக்கு வந்தான். ஆகவே, அவன் தனக்குப்பின் தன் பட்டத்து இளவரசனாக வரவேண்டியவனை பலி கொடுக்க தெரிந்தெடுத்தான்! தேவனுடைய பிரமாணம் இப்படிப்பட்ட செயல்களை தவறு என கண்டித்துள்ளது (காண்க லேவியராகமம் 18:21; 20:3; எரேமியா 7:31), ஆனால் கர்த்தரை அறியாதவர்களின் இருதயத்தில் இருள் பெரிதாயிருக்கிறது.

பேரழிவு

அந்த வேதனையான காட்சியிலிருந்து நான் ஏமாற்றமான பின்விளைவுகளுக்கு விரைந்து போகட்டும். 2 இராஜாக்கள் 3:27ஆ வின்படி, "அப்பொழுது இஸ்ரவேலர் மேல் கடுங்கோபம் மூண்டதினால், அவர்கள் அவனை [மோவாப் ராஜா] விட்டுப் புறப்பட்டு, தங்கள் தேசத்திற்குத் திரும்பிவிட்டார்கள்." "கடுங்கோபம்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள

எபிரெய வார்த்தை "கோபம்" (CJB) அல்லது "ஆத்திரம்" (NIV) என மொழிபெயர்க்கப்படக்கூடும். இந்த வார்த்தையின் அர்த்தம் தொடர்பாக விளக்கவுரையாளர்கள் ஒத்துப்போகாதிருக்கிறார்கள். சிலர் "கடுங்கோபம்/ கோபம்/ஆத்திரம்" என்பவைகள் மோவாபியரின் கடுங்கோபமாயிருந்தது, மேசாவின் செயலால் தூண்டப்பட்டு இஸ்ரவேலரை விரட்டி அடித்தார்கள் என நினைக்கின்றார்கள்.

மற்றவர்கள் "கடுங்கோபம்" என்ற வார்த்தை அந்த அருவருக்கத்தக்க செயலை பார்த்த இஸ்ரவேலரின் செயல் விளைவாய் இருந்தது - அவர்கள் எதை பார்த்தார்களோ அதினால் தொல்லைபடுத்தப்பட்டு, வெறுப்புடன் திரும்பிவிட்டார்கள் என கூறுகிறார்கள். ஹெரால்டு ஸ்டிகர்ஸ் என்பவர் பின்வருமாறு ஆலோசிக்கிறார். "இஸ்ரவேல் தன் விக்கிரக வழிபாட்டிலிருந்து ஏன் திரும்ப வேண்டும் என்பதற்கு அந்த செயல் ஒரு சரியான பாடமாக அமைந்தது. ஆசிரியருக்கு இவ்விதமாக கேட்க தோன்றுகிறது: இஸ்ரவேல் இந்ச சம்பவத்தால் ஆழமாக உணர்த்தப்பட்டிருக்குமானால், தன் சொந்த விக்கிரக வழிபாட்டை விட்டுவிடும்படி, அது ஏன் போதுமான அளவு அதிர்ச்சியடையவில்லை?"[16]

எப்படி இருந்தாலும், C. F. கெயில் மற்றும் டெலிடெஸ் ஆகியோர் இப்படி சுட்டிக்காட்டுகிறார்கள். "இந்த சொற்றொடர் வருகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்," இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரெய வார்த்தையானது "மனிதன் பாவம் செய்வதால், தன் மீது தானே வரவழைத்துக் கொள்ளும் *தெய்வீகமான* தண்டனையைகுறிக்கிறது."[17] இது உண்மையாக இருக்கும் பட்சத்தில், மோவாப் ராஜா அந்த வெறுக்கத்தக்க செயலை செய்யும் அளவுக்கு அவரை "நிர்ப்பந்தித்த" இஸ்ரவேலின் மேல் கோபமாயிருந்தார் என்ற முடிவுக்கு சிலர் வருகின்றனர். தேவன் என்ன செய்யும்படி சொன்னாரோ, அதைத்தான் இஸ்ரவேலர் செய்தார்கள். (ஒப்பிடுக வசனம் 19 மற்றும் 25) ஆகவே இந்த விளக்கம் நியாயமானதாக தெரியவில்லை. மேலும் சிலர், யோசபாத் விக்கிரக நாடான வடபகுதி இஸ்ரவேலோடு மற்றொரு கூட்டணி அமைத்தது கர்த்தருக்கு பிரியமாயிருக்கவில்லை என ஆலோசிக்கின்றனர் - இது ஒரு காரணியாக இருந்திருக்கலாம்.

இன்னும் ஒரு சாத்தியக் கூறை நான் சொல்லட்டும். முரட்டாட்ட குணமுள்ள இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராமின் நிமித்தம் கடைசியாக, தேவ கோபம் இஸ்ரவேலின் மேலும் வந்தது. தேவன் யோசபாத்தினிமித்தம் இராணுவத்திலிருந்தவர்களின் உயிரை காப்பாற்றினார். தேவன் மோவாபியர் மேல் நீதியான தண்டனையை செலுத்த இராணுவ வீரர்களைக் கூட பெலப்படுத்தினார். இதை மனதில் வையுங்கள். யோராமின் படையெடுப்பு நோக்கம், மோவாபியரை மீண்டும் தனது இராஜ்யத்திற்கு வரி செலுத்தும்படி நிர்ப்பந்திப்பதாகும். தேவன் அந்த அளவுக்கு செல்ல விரும்பவில்லை. அப்படியாக, ஒரு முழுவெற்றி பெறாத நிலையில் தேவன் இராணுவத்தை பின்னுக்கு திரும்பவைத்தார். மோவாப் கல்வெட்டில், மேசா இந்த போரில் வென்றதாக கூறுகிறார். நமக்கு தெரிந்த வரை, மோவாப் மறுபடியும் ஒருபோதும் இஸ்ரவேலுக்கு வரி செலுத்தவில்லை. இங்கே நாம் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பாடம் இருக்கிறதா? ஆம், இந்த பாடம் இருக்கிறது: ஒரு தேவ பக்தியற்ற மனிதர் ஒரு பேரழிவை கொண்டு வருகையில், ஒரு தேவ பக்தியுள்ள மனிதர் ஒரு கூட்டு முயற்சிக்கு வெற்றியை கொண்டுவர முடியும் (வசனம் 14).

முடிவுரை

எலிசாவின் வாழ்வில் நிகழ்ந்த இந்த சம்பவத்திலிருந்து அநேக சத்தியங்கள் கற்றுக்கொள்ளப்படக்கூடும். ஆனால் நான் மூன்று சத்தியங்களை குறிப்பிட விரும்புகிறேன்.

- தேவன்தான் ஒரு தேசத்தின் பெலனாக இருக்கிறார் (வசனம் 13).
- தேவபக்தியுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் ஒரு தேசத்தின் நம்பிக்கையாய் இருக்கிறார்கள் (வசனம் 14).
- ஜெபம் ஒரு தேசத்தின் உயிரோட்டமாக இருக்கிறது (வசனங்கள் 11, 20அ).

இந்த மறுக்க இயலாத சத்தியங்கள் சில ஆத்தும பரிசோதனை செய்யும் கேள்விகளை கேட்க தூண்டவேண்டும்: நாம் கர்த்தரை சார்ந்து கொள்கிறோமா - அல்லது நாம் நமக்கென உருவாக்கின நம் சொந்த “தெய்வங்களை” சார்ந்து கொள்கிறோமா? நமது தேசத்தை ஆசீர்வதிக்கிற வகையான ஆண்கள் மற்றும் பெண்களாக நாம் உள்ளோமா அல்லது அதின் மேல் சாபத்தை கொண்டு வருகிறோமா? அழிவு நம்மை தாக்கும் போது, நாம் எங்கே திரும்புகிறோம்? சர்வ வல்லவரின் சித்தத்தை நாம் அறிந்து கொள்ள தேடுகிறோமா?

பிரசங்கியார் மற்றும் ஆசிரியர்களுக்கான குறிப்புகள்

இந்த பாடத்திற்கு சாத்தியமான மற்றொரு தலைப்பு, “தேவனுக்கு சுலபமான காரியம்.” இந்த பாடம் ஒரு பிரசங்கமாக பயன்படுத்தப்படுமானால், இதில் பயன்படுத்தப்பட்டுள்ள பல வசனங்களை ஒரு அழைப்பை அறிமுகப்படுத்த பயன்படுத்தமுடியும். உதாரணமாக, எலிசா “எனக்கும் உமக்கும் என்ன?” என கேட்டார் (வசனம் 13அ). இது இயேசு கிறிஸ்துவினுடைய அதிர்ச்சியான வாக்கியங்களை நமக்கு நினைப்பூட்டுகிறது. “நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்” (மத்தேயு 7:23). நியாயத்தீர்ப்பு நாளில், “எனக்கும் உனக்கும் என்ன? என்னைவிட்டு அகன்றுபோ, நான் ஒருக்காலும் உன்னை அறியேன்” என கேள்விப்படுவது பயங்கரமாய் இருக்குமல்லவா? நீங்கள் திருமுழுக்கு பெறவேண்டிய உணர்வடைந்த ஒரு விசுவாசியாக இருந்தால் (நடபடிகள் 2:38) அல்லது திருப்பப்படவேண்டிய தவறிழைத்த ஒரு கிறிஸ்தவராக இருந்தால் (காண்க கலாத்தியர் 6:1; நடபடிகள் 8:22), இன்றே அதை செய்யுங்கள்!

2 இராஜாக்கள் 3:11இல் உள்ள கேள்வி “கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவரும் இல்லையா” என்ற தலைப்பிலான பிரசங்கத்திற்கு வசனப்பகுதியாக பயன்படுத்தலாம். இந்த மூன்று ராஜாக்களும் கர்த்தரிடமாய் திரும்பவேண்டிய அவசியம் இருந்தது. அப்படியே, இன்றுள்ள எல்லா அரசியல் தலைவர்களும் செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது. இருப்பினும், இதை அவர்களோடு மாத்திரம் நாம் மட்டுப்படுத்தவேண்டாம். நாம் *எல்லாரும்* நமது பிதாவாகிய தேவனையும் அவருடைய வசனத்தையும் சார்ந்துகொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். யோராம் தேவனுடைய சித்தத்தை தீர்மானிக்க வழிவகை இல்லை என்பது போல் நடந்துகொண்டான் - ஆனால் அப்படிச் செய்ய வழி இருந்தது. இன்று மக்கள் தங்கள் வாழ்வுக்கான தேவ சித்தத்தை அறிந்து கொள்ள வழி

இல்லை என்பது போல் நடந்து கொண்டு இருளில் இடறுகிறார்கள். இருப்பினும் அதை அறிந்து கொள்வதற்கு ஒரு வழி இருக்கிறது: அது வேதாகமம். அதேபோல், பிரச்சனையில் அகப்பட்டுக்கொள்ளும்போது, தீர்வுக்காக எங்கு செல்வது என்பதை அறியாதிருக்கிறார்கள். அவர்கள் ஜெபத்தின் வாயிலாக தேவனிடத்தில் செல்லமுடியும் என்பதை அறியாதிருக்கிறார்கள். "என் பிரச்சனைகள் மிகவும் மோசமானவைகள்," "எனக்கு கர்த்தரால் கூட உதவமுடியுமா என நிச்சயமாக தெரியவில்லை" என எதிர்ப்பவர் இருக்கிறார்கள். உங்கள் பிரச்சனைகளில் உங்களுக்கு உதவி செய்வது தேவனுக்கு "அற்பகாரியம்" (வசனம் 18), ஒரு "சுலபமான காரியம்" (NIV), என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

குறிப்புகள்

[1]ஒரு பண்டைய கறுப்பு நிற உப்புபடிவங்களால் உருவான மோவாபிய கல் வெட்டு (ஆகாபின் தந்தை) ஓம்ரியின் காலத்திலிருந்து மேசா இஸ்ரவேலுடன் செய்த போர்கள் குறித்து கூறுகிறது - அவை மேசாவின் கோணத்தில் சொல்லப்பட்டுள்ளன. கல்வெட்டிலுள்ள எழுத்துக்களின் கடைசி வரிகள் அநேகமாக 2 இராஜாக்கள் அதிகாரம் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள போரை குறிக்கிறது. இதில் மேசா தான் வெற்றிபெற்றதாக அறிவித்துக் கொள்கிறான். [2]மற்றொரு காரணம் யோசபாத் தனது மகன் யோராம் (Jehoram) ஆகாபின் மகள் யோராமின் (Joram) சகோதரி அத்தாளியாளை திருமணம் செய்ய அனுமதித்திருந்தான். யோராம் ஒரு அர்த்தத்தில் இப்படியாக யோசபாத்தின் "குடும்பமாக" இருக்கிறான் (காண்க 2 இராஜாக்கள் 8:24-27; 2 நாளாகமம் 18:1). [3]ஏதோம் ஒரு அடிமை நாடாக இருந்தபடியால், அதற்கென ஒரு ராஜா இருக்கவில்லை. மாறாக, யோசபாத்தால் ஒரு துணைநிலை ஆளுநர் அங்கு நியமிக்கப்பட்டிருந்தார். இந்த ஆளுநருக்கு "ராஜா" என்ற கவுரவப்பட்டம் கொடுக்கப்பட்டிருந்தது (காண்க 1 இராஜாக்கள் 22:47). [4]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 303. [5]இந்த தகவல் 9 அக்டோபர் 2003 அன்று நடந்த CBS தொலைகாட்சி நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டது. [6]குர்மாச்சர் "கழுதைகள்" என்பதற்கு பதிலாக "ஒட்டகங்கள்" என குறிப்பிட்டுள்ளார். ஆனால், வல்லுனர்கள் இஸ்ரவேலர்கள் ஒட்டகங்களை பயன்படுத்தியதை சந்தேகிக்கின்றனர். F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 32. [7]முன்பு கூறியபடி, எலிசா எலியாவின் பிரதிநிதியாக வந்திருந்தார் என்பது சாத்தியமானது. அப்படியானால், கர்த்தர் எலிசாவை அனுப்பும்படி எலியாவுக்கு உத்தரவு கொடுத்திருந்தார். [8]Adam Clarke, *The Holy Bible with a Commentary and Critical Notes,* vol. 2, *Joshua - Esther* (New York: Abingdon-Cokesbury Press, n.d.), 488. [9]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tynadale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 200. [10]William Congreve (1670-1729), *The Mourning Bride* [1697], I.1; quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 291.

[11]ஆரம்பகால எபிரேய வசனபகுதியில் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. RSVஇல் "கர்த்தர் சொல்லுகிறதாவது, நான் இந்த வறண்ட ஆற்றுப்படுகையை குளங்கள் நிறைந்ததாக மாற்றுவேன்" என்றுள்ளது. பெரும்பாலான மொழிபெயர்ப்புகள் NASBக்கு இசைவாக உள்ளன. [12]வனாந்திர யாத்திரை காலத்தில் இருந்தே மோவாபியர்கள் இஸ்ரவேலருக்கு விரோதிகளாக இருந்தனர் (காண்க எண்ணாகமம் 22-25).

[13]J. T. Headley, *Sacred Heroes and Martyrs,* rev. and ed. J. W. Kirton (London: Ward, Lock, & Tyler, n.d.), 191. [14]G. Rawlinson, “2 Kings,” *The Pulpit Commentary,* vol. 5, ... *Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 46. [15]Ibid. [16]Harold Stigers, “2 Kings,” *The Wycliffe Bible Commentary,* ed. Charles F. Pfeiffer (Nashville: Southwestern Co., 1962), 343-44. [17]Keil and Delitzsch, 307. (Emphasis mine.)



4

ஒரு குடும்பத்தைக் காப்பாற்றிய மனிதர்

[2 இராஜாக்கள் 4:1-7]

கடந்த பாடத்தில் எலிசா வெளிப்படையான, பிரம்மியமான அற்புதத்தால் மூன்று இராணுவங்களை காப்பாற்றினார். இந்த பாடத்தில் அவர் எப்படி ஒரு அமைதியான, தனிப்பட்ட அற்புதத்தினால் ஒரு குடும்பத்தை காப்பாற்றினார் என்பதை பார்ப்போம். பின்புலச் சூழலானது, ஒரு சர்வதேச அமர்வு என்ற நிலையிலிருந்து ஒரு தனிப்பட்ட குடும்பம் என்ற நிலைக்கு மாறிவிட்டது. ஆகவே நாம் பிந்திய அற்புதத்தை முந்திய அற்புதத்திலும் மதிப்பு குறைந்ததாக காண வேண்டுமா? இல்லவே இல்லை! ஒரு குடும்பம் எப்படியோ அப்படியே ஒரு தேசம் இருக்கிறது என சொல்லப்பட்டுள்ளது. எதுவெல்லாம் ஒரு குடும்பத்தை வலிமைப்படுத்துகிறதோ, அதுவெல்லாம் ஒரு தேசத்தையும் வலிமைப்படுத்துகிறது, எதுவெல்லாம் ஒரு தேசத்தை வலிமைப்படுத்துகிறதோ, அதுவெல்லாம் உலகத்தை வலிமைப்படுத்துகிறது.

ஒரு குடும்பத்திற்கு உதவியதில் எலிசா தன் முன்னாள் தலைவர் எலியாவின் அடிச்சுவடுகளில் நடந்துள்ளார் (காண்க 1 இராஜாக்கள் 17:8-24). தேவன் குடும்பத்தை குறித்து அக்கரையுள்ளவராக இருக்கிறார், நாமும் அவ்விதமே இருக்க வேண்டும்! இந்த பாடம் நிறைவடைவதற்கு முன்பாக இன்று நாம் எவ்விதம் போராட்டங்கள் நிறைந்த குடும்பங்களுக்கு உதவமுடியும் என்பதை சிந்திப்போம்.

நம்பிக்கை அற்ற ஒரு குடும்பம் - பிறகு (4:1-7)

உடைந்த இருதயம்

இந்த கதை துவங்குகையில் எலிசா மீண்டும் இஸ்ரவேலில் இருந்தார். அநேகமாக அவர் தீர்க்கதரிசிகளின் பள்ளிகள் இருந்த ஒரு பட்டணத்தில் இருந்தார்: பெத்தேல், எரிகோ அல்லது கில்கால் (2 இராஜாக்கள் 2:3, 5; 4:38). அவர் அங்கே இருக்கையில், "தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ" (2 இராஜாக்கள் 4:1அ) அவரிடம் வந்தாள். இந்த ஸ்திரீயை பற்றிய விவரிப்பு, சில தீர்க்கதரிசி - பயிற்றுனர்கள் ("தீர்க்கதரிசிகளுடைய புத்திரர்") அமெரிக்காவில் "கல்லூரி வயது" (பதினெட்டு முதல் இருபத்தி இரண்டுவரை) என அழைக்கப்படுகிற வயதை விட வயதானவர்களாக இருந்தார்கள் என்பதை நமக்கு தெரிவிக்கிறது. மேலும் இந்த பயிற்சியாளர்கள் பிரமச்சாரிகளாக இருக்கவில்லை என்பதும் தெளிவாகிறது. சிலர், திருமணமான நிலையைவிட திருமணமாகாத நிலை பரிசுத்தமானது என கூறுகின்றனர், ஆனால் வேதாகமம் "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயிருக்கிறது" என போதிக்கிறது

(எபிரெயர் 13:4அ).

இந்த பெண் ஒரு துயரமான சம்பவத்தை சொல்லக் கூடியவளாக இருந்தாள். "உமது அடியானாகிய என் புருஷன் இறந்து போனான்; உமது அடியான் கர்த்தருக்கு பயந்து நடந்தான் என்பதை அறிவீர்; கடன் கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக்கொள்ள வந்தான்" என்று அவள் கதறியபோது, அவள் முகத்தில் வழிந்தோடிய கண்ணீரையும், நடுங்கும் குரலையும் பாருங்கள் (2 இராஜாக்கள் 4:1ஆ). அவள் தனது புருஷனை எலிசாவின் "அடியான்" என்றும் தன்னை பிற்பாடு எலிசாவின், "அடியாள்" எனவும் விவரித்தாள் (வசனம் 2). அவளும் அவர் கணவரும் எப்போதும் தீர்க்கதரிசியுடைய வசனத்தை கவனிக்கவும் அதற்கேற்றபடி நடக்கவும் ஆயத்த மாக இருந்தார்கள்.

பிறகு அவள் தன் கணவனை "கர்த்தருக்கு பயந்து நடந்தான்" என கூறினாள்: அவர் தேவன் மற்றும் அவருடைய வசனத்தை மதிக்கிறவராக இருந்தார். ஆவியினால் ஏவப்படாத யூத பாரம்பரியம் இவரை நூறு தீர்க்கதரிசிகளை குகைகளில் ஒளித்து வைத்து போஷித்த ஒபதியா என அடையாளப்படுத்துகிறது (காண்க 1 இராஜாக்கள் 18:3, 4).[1] ஆகாப் ராஜாவின் வீட்டு மேலாளர் ஒருவர் தீர்க்கதரிசி பயிற்சியாளராய் இருப்பார் என்பது நடைபெற சாத்தியம் இல்லாததாக தோன்றுகிறது. இந்த பெண்ணின் கணவர் ஒரு நல்ல *மனிதராக இருந்தார் என நாம் சொல்வோம். நல்ல மனிதருக்கு சோகம் நேரிடக்கூடுமா? ஆம். அது நேரிடக்கூடும். தங்கள் முழு இருதயங்களோடும் கர்த்தரை சேவிக்க முயற்சிக்கிறவர்களுக்கு இது உண்டாகுமா? ஆம். இது நேரிடக்கூடும் மற்றும் நேரிட்டுக்கொண்டிருக்கிறது.*

இந்த பெண்ணின் தேவபக்தியுள்ள கணவர் மரித்துவிட்டார் - அதுவே அவள் இருதயத்தை சுக்குநூறாக உடைத்திருக்கும். அவர் தன் வாழ்நாள் எல்லாம் தன் அருகாமையில் தன்னோடு இருப்பார் என அவள் எதிர்பார்த்தாள், ஆனால் இப்போது அவள் திடீரென வெறுமையாய் போய் விட்ட, பெரிய கட்டிலில் இரவில் அவள் தனிமையில் படுத்துகிடக்கிறாள். சோகம் இத்தோடு நிற்கவில்லை. அவளது கணவர் வளர்க்கப்பட வேண்டிய இரண்டு இளம் பையன்களை விட்டுச் சென்று விட்டார் (2 இராஜாக்கள் 4:1, 5). பண்டைய உலகில், கணவரை பறி கொடுத்த பெண்ணைவிட, அவரையும் இழந்து, அவரது ஆதரவற்றை பிள்ளைகளையும் வளர்க்கவேண்டிய நிலையில் இருந்த பெண்ணே மிகவும் உதவியற்றவளாக இருந்தாள். "ஒரு பெற்றோராய்" இருந்து இன்று பிள்ளைகளை வளர்ப்பது என்பது எவ்வளவு கடினமானதாக இருக்கக்கூடும் என்பதை உங்களில் சிலர் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் சந்திக்கும் சவால்களை நூறால் பெருக்கிக் கொள்ளுங்கள், அப்பொழுது எலிசாவின் நாட்களில் வாழ்ந்த விதவை தாய்மார்கள் எத்தனை துன்பங்களை அனுபவித்திருப்பார்கள் என்பது பற்றிய ஒரு புரிதல் உங்களுக்கு கிடைக்கும்.

சோகம் இன்னமும் மோசமானது: வருவாய் ஆதாரங்கள் இல்லாத நிலையில் அவளது கணவர் அவளை விட்டு சென்றது மட்டும் அல்ல, அவர் அவளை அதிக கடனிலும் விட்டுச் சென்று விட்டார். அது எப்படி ஏற்பட்டது என நமக்கு தெரியவில்லை. ஒருவேளை இது அவருடைய தவறாக இருந்தது. அநேக தேவனுடைய ஊழியக்காரர்கள் பொருளாதார காரியங்களில் மோசமான தீர்மானங்களை எடுத்திருக்கிறார்கள். அவளுடைய கணவர் மிகவும் தாராள

மனமுடையவராய் இருந்தார் என சொல்லப்பட்டதுண்டு. ஒபதியா தான் அவள் கணவராக இருந்தார் என்ற பாரம்பரியம் தொடர்பாக அவர் ஒளித்து வைத்த தீர்க்கதரிசிகளை பராமரிப்பதற்காக கடன் வாங்கினார் என ஜோசிபஸ் கூறுகிறார்[2] - மேலும் அவர் மரித்தபோது, அவள் அந்த கடனை திருப்பி செலுத்துவதற்கு வழிஇல்லாமல் போய்விட்டது.[3]

கணவர் இந்த காரியத்தில் தவறிழைக்கவில்லை என்பது சாத்தியமாயிருக்கிறது. தேவ தாசர்கள் அவமானப்படுத்தப்பட்ட ஒரு தேசத்தில் அவர் தேவ தாசராக இருந்தார். அவருடைய வருவாய் ஆதாரங்கள் எதுவாக இருந்தபோதிலும், அது குறைவானதாக இருந்திருக்க வேண்டும். ஒருவேளை அவருடைய முதலாளி அவருடைய சம்பளம் எல்லாவற்றையும் கொடுக்க தவறிவிட்டார். ஒருவேளை இவரிடம் கடன் பெற்றவர்கள் அதை திருப்பிச் செலுத்தவில்லை. ஒருவேளை அவர் தன் குடும்பத்தை பராமரிப்பதற்காக கடன்பெறவேண்டியிருந்தது - கடனை திருப்பி செலுத்திவிட முடியும் என்ற நம்பிக்கையில் - ஆனால் வாழ்க்கை நிச்சயமற்றது மற்றும் குறுகினது, அவருடைய நல்ல எதிர்பார்ப்புகள் அவரோடு மரித்துவிட்டன.

சோகத்தின் மேல் சோகம் வந்தது - ஆனால் அதிலெல்லாம் மிகவும் மோசமான சோகம் என்னவென்றால் அவளுடைய கணவருக்கு கடன் கொடுத்தவர் அவள் பையன்களை எடுத்துக்கொள்ள வந்ததுதான். இன்று நாம் ஒரு பிரபலமான கடன் வழங்கும் நிறுவனத்தில் கடன் பெறும்போது, விதியின்படி அவர்கள் ஜாமின் பெற்ற பிறகு தான் கடன் வழங்குகிறார்கள். அது பொதுவாக வீடு, நிலம் அல்லது வாகனம் போன்றவையாக இருக்கிறது. நாம் கடனை திருப்பி செலுத்தாவிட்டால், எதுவெல்லாம் ஈடாக வைக்கப்பட்டதோ அது எடுத்துக்கொள்ளப்படும். எலிசாவின் நாட்களில் “ஈடுமதிப்பாக” கருதப்பட்டது கடன் கொடுப்பவருடைய தனிப்பட்ட வேலைதிறன் மதிப்பாக இருந்தது. கடன் திருப்பி செலுத்தப்படாமல் இருந்ததானால், அந்த மனிதன் (அவனுடைய குடும்பமும்) எடுத்துக்கொள்ளப்படமுடியும் (காண்க மத்தேயு 18:25). இது மோசேயின் பிரமாணத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால், அடிமை வேலையின் வகை மற்றும் வேலை ஆண்டுகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன (காண்க யாத்திராகமம் 21:1, 2; லேவியராகமம் 25:39-41; உபாகமம் 15:1-11). (நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் இல்லாததற்காக நீங்கள் சந்தோஷப்படவில்லையா?) அந்த மனிதன் எடுத்துக்கொள்ளப்படுவது சாத்தியமாக இருக்கவில்லை, ஆகவே கடன் வழங்கியவர் கடனுக்காக அவன் பையன்களை பிடித்து செல்ல தீர்மானித்துவிட்டார்.

அந்த கடன் கொடுத்தவன் யார் என நமக்கு சொல்லப்படவில்லை. ஆவியினால் ஏவப்படாத ஒரு பாரம்பரியம், அவனை ஆகாப் ராஜாவின் மகனான யோராம் என அழைத்தது.[4] அவர் யாராக இருந்திருந்தாலும், வட ராஜ்யத்தில் உண்மையாய் இருந்தவர்கள் மேல் அவருக்கு அனுதாபம் இருக்கவில்லை. அவர் இருதயம் அற்றவராக இரக்கம் அற்றவராக மற்றும் பரிதாப உணர்வு அற்றவராக இருந்தார். அந்த பெண்ணின் மகன்கள் அவளுடைய ஜீவன்; அவர்கள் அவளுடைய கடைசி நம்பிக்கையாக இருந்தார்கள். “பிள்ளைகள் பெரியவர்களாகி வேலைகளை செய்கிறவரை நாம் உயிரோடு இருந்தால், நாம் நன்றாயிருப்போம்!” என அவள் சிந்தித்திருக்கலாம். கடன் கொடுத்தவன் இதைப்பற்றியெல்லாம் அக்கரைப்படவில்லை. அவன் ஏற்கனவே அவள் கணவர்

அவளுக்கு விட்டுச் சென்ற எல்லாவற்றையும் வீட்டிலிருந்து அபகரித்துவிட்டான் (காண்க 2 இராஜாக்கள் 4:2). அவன் அவள் கைகளில் இருந்து பிள்ளைகளை பிடுங்கிச் செல்வதற்கான தேதியை குறித்து விட்டான்.[5]

இப்படியாக, அந்த பெண் மற்றவர்களுக்கு உதவி செய்வதில் நன்கு அறியப்பட்ட அந்த மனிதரிடத்தில் வந்தாள் (காண்க 2 இராஜாக்கள் 2:19-22). அவள் அவரிடம் தன் இருதயத்தை ஊற்றிவிட்டாள். அவள் வேண்டுகோள் எதுவும் வைக்கவில்லை; ஆனால் மிகுந்த ஆவலான, பேசப்படாத "நான் என்ன செய்யட்டும்?" என்ற ஒரு கேள்வி காற்றில் மிதந்தது.

உதவி

எலிசாவை குறித்து இவ்வாறு சொல்லப்பட்டது, "அவரிடம் உதவி செய்யும்படி ஒருபோதும் இருமுறை கேட்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை."[6] "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என அவர் கேட்டார் (4:2அ). விதவைகள் மற்றும் திக்கற்றோர் தேவனுடைய இருதயத்தில் எப்போதுமே சிறப்பான ஒரு இடத்தை உடையவர்களாக இருந்தார்கள் (காண்க உபாகமம் 10:18; சங்கீதம் 146:9; யாக்கோபு 1:27). அவர், "திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதைவைகளுக்கு நியாயம் [அதாவது அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறவர்] விசாரிக்கிறவருமாயிருக்கிறார்" (சங்கீதம் 68:5). தேவனுடைய மனிதர் இப்படியாக உதவி செய்ய ஆயத்தமாக இருந்தார்.

எலிசா தான் என்ன செய்ய வேண்டுமென்று அந்த பெண் சொல்லுமளவுக்கு காத்திருக்கவில்லை. அதற்குப்பதிலாக, என்ன செய்யவேண்டுமென அவளிடத்தில் அவர் கூறினார். அவர் "வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல்" என கேட்பதின் மூலம் துவங்கினார் (வசனம் 2ஆ). அவள் வருத்தத்தோடு, "ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள்." "குடம்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரேய வார்த்தை அந்த குடுவை அளவில் சிறியது மற்றும்/அல்லது அதன் கொள்ளளவு குறைவாய் இருந்தது என்பதை உணர்த்துகிறது.[7] இப்படியாக NIV இல் "கொஞ்சம் எண்ணெய்" என்றுள்ளது. இந்த பெண் தன் சொந்த அடக்கத்திற்காக அதை பாதுகாத்து வைத்திருந்தாள் என சில விளக்கவுரையாளர்கள் நினைக்கின்றனர்,[8] ஆனால், பெரும்பாலானவர்கள் அது சமையல், மருத்துவம், பூசிக்கொள்ளுதலுக்குரிய மற்றும் அபிஷேகம் செய்வதற்குரிய பொதுவான ஒலிவ எண்ணெயாக இருந்தது என நம்புகின்றனர். எப்படியிருந்தாலும் அது எந்த வகையாயிருப்பினும் அந்த சிறிய குடுவையின் எண்ணெயை மாத்திரம் கடன்காரர் அவளுக்கு விட்டுவைத் திருந்தார்.

F. W. குருமாச்சார் அந்த வீட்டின் வெறுமையை பின்வருமாறு விவரிக்கிறார்: "வெற்று சுவர்கள், காலியான பொருள் வைக்கும் இடங்கள், மர இருக்கைக்கு முன்னால் இருந்த காலியான மேசை, வைக்கோல்படுக்கை மற்றும் வெறுமையான அறை."[9] அவளுக்கு ஒரு சிறிய அளவைத்தவிர, வேறு எதுவும் இருக்கவில்லை. இருப்பினும் அவளிடத்தில் கொஞ்சம் இருந்தது - ஒரு சிறிய குடுவையில் எண்ணெய் - அவளுக்கு இருந்ததை அவள் பயன்படுத்த வேண்டுமென தேவன் எதிர்பார்த்தார். இரண்டு பழமொழிகள் என் மனதிற்கு வருகின்றன: "தனக்குத் தானே உதவி செய்து கொள்கிறவர்களுக்கு தேவன் உதவி செய்கிறார்" மற்றும் "தேவன் அதில் இருக்கும்போது சிறிதளவுகூட பெரிதாயிருக்கிறது."

அப்பொழுது எலிசா, "நீ போய், உன்னுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கு" என்றான் (வசனம் 3). "பாத்திரங்கள்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரேய வார்த்தை ஒரு பொதுவான வார்த்தையாக இருக்கிறது. பல வகை அளவுகள், வடிவமைப்புகள் மற்றும் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட பொருள்கள் என எல்லா பாத்திரங்களையும் குறிப்பதற்கு அந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. அந்த ஒவ்வொரு பாத்திரத்திற்கும் இருக்கவேண்டிய ஒரே தகுதி அது காலியாக இருக்கவேண்டும்: அவர் அவளிடம் ஒரு சில பாத்திரங்களை அல்ல, அநேகம் பாத்திரங்களைக் கேட்டு வாங்க வேண்டும் என எச்சரித்திருந்தார் (வசனம் 3ஆ). இந்த அறிவுரைகள் மற்றும் அவைகளின் முக்கியத்துவம் நமக்கு பிறகு தெளிவாக தெரியவரும்.

இதை நீங்கள் எந்த கோணத்தில் பார்த்தாலும், எலிசாவின் அறிவுரைகள் விநோதமாக இருக்கின்றன. இந்த பெண் ஒருவேளை இப்படிச் சொல்லி எதிர்ப்பு தெரிவித்திருக்கலாம், "நான் என் பையன்களை இழக்கப் போகிறேன், நீங்கள் காலி பாத்திரங்களை சேகரிக்கச் சொல்கிறீர்களே!" - ஆனால் அவள் அப்படிச் செய்ய வில்லை. அவள் இப்படிக்கூட சொல்லியிருக்கக்கூடும், "எனது தொல்லைகளால் எனக்கு மனநிலை பாதிக்கப்பட்டுவிட்டது என என் அயலகத்தார் நினைக்கலாம். இந்த காலிப்பாத்திரங்களை வைத்து நீ என்ன செய்யப்போகிறாய் என்று அவர்கள் வினவினால், நான் அவர்களுக்கு என்ன பதில் கூறப்போகிறேன்?" - ஆனால் அவள் அப்படிக் கூறவில்லை. சில நேரங்களில் தேவனுடைய கட்டளைகள் நமக்கு அர்த்தமுடையவைகளாக இருக்கும், சில நேரங்களில் அப்படி இருக்காது - ஆனால் அவைகள் பற்றி நாம் என்ன சிந்தித்தாலும், அவைகள் எப்போதும் *சரியானவைகளாக* இருக்கின்றன.

எலிசா தன் அறிவுரைகளைத் தொடர்ந்தார்: "உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவை பூட்டி" (வசனம் 4அ). அவர் இந்த அற்புதம் ஒரு தனிப்பட்ட தனி நபர்களுக்கு உரியதாக இருக்க வேண்டுமென விரும்பினார். "அந்த பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து (உன்னிடத்திலுள்ள எண்ணெயை) நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான்" (வசனம் 4ஆ).

மகிழ்ச்சி

அந்த பெண் போய் (வசனம் 5அ) பாத்திரங்களை சேகரிக்க துவங்கினாள். பெரிய பாத்திரங்கள், சிறிய பாத்திரங்கள், நடுத்தர பாத்திரங்கள். பழைய மற்றும் புதிய பாத்திரங்கள், ஆடம்பரமான மற்றும் சாதாரண பாத்திரங்கள், பாத்திரங்கள் அநேகம் பாத்திரங்கள் என அவள் வீடு விரைவிலேயே அநேக பாத்திரங்களால் நிறைந்துவிட்டன. பிறகு அவள் முன் பக்க கதவை பூட்டினாள் (வசனம் 5ஆ). இதுபோல நடந்த அந்த சம்பவத்தை நான் கற்பனை செய்து பார்க்கிறேன்:

> அந்த பெண் தனது சிறிய எண்ணெய் குடுவையை எடுக்கிறாள், அவளைச் சுற்றி வைக்கப்பட்டிருந்த பாத்திர வரிசைகளுக்கு முன்பாக அது எவ்வளவு சிறியதும் முக்கியம் இல்லாததுமாக இருந்தது! அருகாமையிலுள்ள பாத்திரத்தில் அவள் கையால் அதை ஊற்றியபோது அவளால் நம்ப முடிய வில்லை. எண்ணெய் வழிந்து கொட்டத் துவங்கியது ... வழிந்தோடியது

... வழிந்தோடியது. அவளுடைய கண்கள் அகலமாயின, பெரியதாயின. பாத்திரம் நிரம்பி வழியும்மட்டும் எண்ணெய் கொட்டிக்கொண்டிருந்தது. அவள் தன் மகன்களை பார்த்து, "நீங்கள் சீக்கிரமாய் இன்னொரு பாத்திரம் கொண்டு வாருங்கள்!" என்றாள். பாத்திரம் நிறையுமட்டும் எண்ணெய் தொடர்ந்து கொட்டியது. பையன்கள் மூன்றாவது பாத்திரத்தை தங்கள் தாயிடம் கொண்டுவர ஓடினார்கள். தீர்ந்துபோகாத ஆதாரமூலத்திலிருந்து (வசனம் 5இ) பாத்திரம் பாத்திரமாக நிரம்பிக் கொண்டிருந்தபோது, அதிக துக்கத்தை கண்ட இந்த குடும்பத்திற்கு சந்தோஷம் திரும்ப வந்தது. பையன்களுடைய உற்சாக தொனியோடு தாயின் சிரிப்பு அலையும் சேர்ந்து கொண்டது. அவள் முகத்திலிருந்து சோக கோடுகள் மறைந்தன, அவளுடைய இருதயத்திலிருந்து சுமை எடுபட்டுப்போயிற்று.

இறுதியாக, அந்த பெண் தன் மகன்களில் ஒருவனை நோக்கி, "இன்னும் ஒரு பாத்திரம் கொண்டுவா" என்றாள். அதற்கு அவன்: "வேறே பாத்திரம் இல்லை" என்றான் (வசனம் 6அ). அவர்கள் சேகரித்திருந்த எல்லா பாத்திரங்களும் நிரம்பியிருந்தன. "அப்பொழுது எண்ணெய் நின்று போயிற்று" (வசனம் 6ஆ): சிறிய குடுவையிலிருந்து எண்ணெய் வழிந்தோடுவது நின்று போயிற்று; அது காலியாகிவிட்டது; அற்புதம் முடிந்துவிட்டது. "சில பாத்திரங்களை சேகரிக்காதே," என்ற அறிவுரையின் முக்கியத்துவத்தை அந்த பெண் இப்போது புரிந்து கொண்டிருப்பாள். ஊற்றப்படும் எண்ணெயின் அளவு அவள் சேகரித்து வைத்திருந்த பாத்திரங்களின் எண்ணிக்கையால் அளவிடப்பட்டிருந்தது.

நிகழ்ந்த பெரிய மற்றும் அற்புதமான சம்பவத்தை எலிசாவிடம் அறிவிக்க அப்பெண் விரைந்துசென்றாள் (வசனம் 7அ). மறுபடியும் அவள் கண்களில் கண்ணீர் வழிந்தோடியிருக்க வேண்டும். மற்றும் அவள் குரல் தளுதளுத்து போயிருக்க வேண்டும் - ஆனால் இந்த முறை வழிந்தது ஆனந்த கண்ணீராக இருந்தது மற்றும் அவள் தொனி ஆச்சரியத்தால் தளுதளுத்ததாய் இருந்தது. என்ன நடந்தது என்பதை அவள் தீர்க்கதரிசியிடம் அறிவிக்கையில், மறுபடியுமாக பேசப்படாத ஒரு கேள்வி எழுந்தது: "இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?" தெய்வீக வழிநடத்துதல் இல்லாமல் அவள் மேற்கொண்டு எதுவும் செய்ய விரும்பவில்லை.

அப்பொழுது அவன், "நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனைத் தீர்த்து, மீந்ததைக் கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம்பண்ணுங்கள்," என்றான் (வசனம் 7ஆ). "கடனை கட்டிவிடு"? கஞ்சத்தனமான, இரக்க மில்லாத, அவளுக்கு அன்பான பையன்களை அடிமைகளாக்க ஆயத்தமாக இருந்த அந்த ஜீவனின் கடனை அடைத்து விடவேண்டுமா? ஆம். வேதாகமம், நாம் நமது கடன்களை அடைத்துவிட வேண்டுமென போதிக்கிறது (ரோமர் 13:8அ; NIV). ஹென்றி பிளண்ட் என்பவர் பின்வருமாறு எழுதினார், "கடன் கொடுத்தவன் இரக்கமற்றவனாயிருந்தாலும், நீ அநீதியாக இராதே; மற்றவர்கள் நம்மிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது, நாம் அவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளின் தன்மையை மாற்றுவதில்லை"[10] (காண்க ரோமர் 12:21). W. T. ஹேமில்டன் இவ்விதம் கூறுகிறார், "ஒரு ஏமாற்றக் காரனிடத்தில் நேர்மையாய் நடப்பவரே [உண்மையில்] நேர்மையானவர்"[11]

கடன் செலுத்தித் தீர்ந்தபின்பு, அந்த பையன்கள் வளர்ந்து, தங்களையும் தங்கள் தாயையும் பராமரித்துக்கொள்கிற வரையிலும், அவர்களுக்கு போதுமானது மிஞ்சியிருந்தது.

வேதாகமத்தின் கதை அத்துடன் முடிகிறது, ஆனால் அதின் தாக்கத்தை சிந்திப்பது கடினமானது அல்ல:

> எண்ணெய் விற்பனை செய்யப்பட்டது. கடன்காரன் வந்தபோது, தாயும் பையன்களும் அவனுக்காக காத்திருந்தார்கள். அவள் நாணயங்கள் நிரம்பின ஒரு பையை அவன் கையில் திணித்து, "இதோ உன் பணம்!" என்றாள். அவன் வாயடைத்துப் போனான். என்ன, என்ன, என்ன என மெதுவாக முணகினான். அவள் அவனை நோக்கி, "எங்கள் தேவன் எங்களுக்காக கரிசனைப்பட்டார். உன்னுடைய கடினமான, கடினமான இருதயத்திலிருந்து எங்களை காப்பாற்றிவிட்டார். நீ உன் பணத்தை எடுத்துக்கொள், நான் என் பையன்களை என்னோடு வைத்துக்கொள்வேன்!" என்றாள். கடன்காரன் தலையை அசைத்துக்கொண்டு வெளியேறியதைப் பார்த்தபோது அவளுடைய முகத்தில் புன்னகை தவழ்ந்தது.[12]

நம்பிக்கையற்ற குடும்பங்கள் - இன்று

இந்த உணர்வை தட்டி எழுப்பும் கதையிலிருந்து நாம் கற்றுக் கொள்வதற்கான பாடங்கள் உள்ளனவா? ஆம், "நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4).

உடைந்த இருதயம்

இந்த கதை துவங்கியபோது, நாம் நம்பிக்கையற்ற ஒரு குடும்பத்திற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டோம். அது ஒரு தேவ பக்தியுள்ள குடம்பமாயிருந்தது, ஆனாலும் பெரும் துன்பம் வந்தது. இந்த பாவம் - நிறைந்த உலகில், சில நேரங்களில் நல்லவர்களுக்கு கெட்டகாரியங்கள் *நேரிடுகின்றன.* அன்பானவரின் மரணம் மற்றும் கடன் தொல்லையால் அந்த குடும்பம் வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தது. ஒரு குடும்பத்தை சின்னாப்பின்னமாக்குகிறவைகள் இவைகள் இரண்டு மட்டும் அல்ல. "உடல் நலக்குறைவு," "கைவிடப்படுதல்" மற்றும் "திருமணம் முறிவு" போன்றவைகளும் குடும்பங்களை நிலைகுலையச் செய்கின்றன.

அந்த விதவை தன் பிரச்சனைகளுக்காக தேவனை குற்றப்படுத்தவில்லை என்பதை கவனியுங்கள். மாறாக, அவள் உதவிக்காக தேவனிடம் திரும்பினாள். சிலர் வாழ்வில் பிரச்சனைகளால் சூழப்படும் போது, அவர்கள் தங்களுக்கு உதவி கிட்டும் ஆதார மூலங்களான தேவன், வேதாகமம் மற்றும் சபை ஆகியவற்றிலிருந்து தங்களை அந்நியப்படுத்திக் கொள்கிறார்கள். உங்கள் வாழ்வில் என்ன போராட்டங்கள் வந்தாலும், கர்த்தர் உங்களை நேசிக்கிறார் மற்றும் அவர் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறார் என்பதை ஒருபோதும் சந்தேகப்படாதீர்கள் (ரோமர் 5:8; எபிரேயர் 13:6; 1 பேதுரு 5:7).

உதவி

ஒரு குடும்பத்தின் சூழ்நிலை நம்பிக்கையற்றதாக இருக்கும் போது, நாம்

என்ன செய்யவேண்டும்? முதலாவது, அந்த விதவை செய்தது போல நமக்கும் பிரச்சனை இருக்கிறது என்பதை உணரும் அளவுக்கு நம்மை தாழ்த்த வேண்டும். சிலருக்கு குடும்ப பிரச்சனைகள் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்வது தர்மசங்கடமாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் பிரச்சனை இல்லை என்பது போல் காட்டிக்கொள்கிறார்கள். தங்கள் குறைவுகளை தேவைகளை அறிந்திருக்கிறவர்கள் மட்டுமே உதவி பெற முடியும் (வெளிப்படுத்தின விசேஷம் 3:20; காண்க சங்கீதம் 81:10ஆ).[13]

அதன்பிறகு, "நமக்கு இந்த பிரச்சனையை தீர்க்க *நம்மால்* முடிந்த எல்லாவற்றையும் செய்துவிட்டோமா?" என கேட்க வேண்டும். எலிசா அவளை நோக்கி, "வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல்?" என்றான் (2 இராஜாக்கள் 4:2). அவள் தன் ஆதாரவளங்களை பரிசோதிக்க வேண்டியிருந்தது. அவளிடத்தில் அதிகமாய் இருக்கவில்லை, ஆனால் கொஞ்சம் இருந்தது. அவள் தன்னிடத்தில் இருந்ததை உபயோகிக்க வேண்டியவளாக இருந்தாள் (காண்க யாத்திராகமம் 4:2; மாற்கு 6:38); அவள் தன் பாரத்தை சுமப்பதற்கு தன்னால் என்ன செய்யமுடியுமோ அதை செய்ய வேண்டியவளாக இருந்தாள் (காண்க மாற்கு 14:8அ; கலாத்தியர் 6:5). "சில நேரங்களில் உதவும் கரத்தை கண்டுபிடிப்பதற்கான சிறந்த இடம் உங்கள் கரம் முடியும் இடத்திலுள்ளது" என சொல்லப்பட்டதுண்டு. நமது கூற்றின்படி "தன் கையே தனக்குதவி" என கூறலாம். ஹேமில்டன் இவ்விதமாக எழுதினார்,

> ஒருவர் தனக்கிருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு, தன்னால் இயன்ற அளவு முன் செல்வாரெனில், பிறகு மற்றதை தேவன் பார்த்துக்கொள்கிறார். அந்த அளவு நாம் செல்வதற்கு முன்பு ... தான் பொறுப்பேற்றுக் கொள்வதாக தேவன் ஒருபோதும் வாக்குத்தத்தம் செய்யவில்லை. ஒருவர் தன் பாதை எந்த அளவுக்கு தெளிவாய் தெரிகிறதோ அதையும் தாண்டி முன் செல்ல விசுவாசத்தால் திட்டமிடவேண்டும். பின்னர் தன் ஆதாரவளங்கள் யாவும் செலவழிந்துபோகும் வரை முன் செல்ல வேண்டும். அந்த நிலையில், தேவன் பொறுப்பேற்றுக்கொள்வார். அதுவரைக்கும் அல்ல![14]

தனிப்பட்ட முறையில் உங்களால் முடிந்த அளவு எல்லாவற்றையும் செய்தபின்பு, அந்த பெண் எலிசாவினிடத்தில் வந்ததுபோல, நீங்கள் ஞானமுள்ள கிறிஸ்தவ நண்பர்களிடத்தில் உதவி, ஆலோசனை கேட்டு செல்லலாம் (காண்க கலாத்தியர் 6:2; நீதிமொழிகள் 1:5; 11:14; 12:15; 19:20; 27:9). பிரச்சனையில் அகப்படாதவர்கள் அதை தெளிவாய் புரிந்து கொண்டு, தீர்வுக்கான ஆலோசனைகளை கூறமுடியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் கர்த்தரிடத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. "கொஞ்சமாய் கடன்பெற வேண்டாம்" என்ற தலைப்பில் பல பாடங்கள் பிரசங்கிக்கப்பட்டுள்ளன (2 இராஜாக்கள் 4:3; KJV) அந்த பெண் எத்தனை குடங்களை கேட்டுவாங்கியிருந்தாளோ, அவைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, அவள் பெறப்போகிற ஆசீர்வாதங்களின் எண்ணிக்கையையும் அவளே தீர்மானித்தாள் என்ற கருத்து தெளிவுப்படுத்தப்பட்டது உண்டு. (இன்னும் நிறைய குடங்களை கேட்டு பெற்றிருந்தால் நலமாயிருந்திருக்கும் என அந்தபெண் சிந்தித்தாளா?) நம்முடைய

தேவன் தாராளமாய் கொடுக்கிற ஒரு தேவன் என வேதம் போதிக்கிறது (மத்தேயு 6:33; 7:7, 8; எபேசியர் 3:20). அவர் எந்த அளவு தாராளமாய் நம்மை ஆசீர்வதிப்பார் என்பது நாம் எந்த அளவு நிபந்தனை எதுவும் இன்றி அவரை விசுவாசிக்க விருப்பம் உடையவர்களாய் இருக்கிறோம் என்பதால் மட்டும் மட்டுப்படுத்தப்படுகிறது. நீங்கள் உங்கள் பிரச்சனைகளை அவரிடம் விட்டுவிட எப்போது கற்றுக் கொள்கிறீர்களோ, அப்போது "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை" உங்களால் அறிந்து கொள்ள முடியும் (பிலிப்பியர் 4:7).

சந்தோஷம்

நம்பிக்கையற்றதாக தோன்றுகிற ஒரு குடும்ப பிரச்சனை உங்களுக்கு இருக்கிறதா? உங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்யுங்கள் மற்றும் கர்த்தரை விசுவாசியுங்கள், அவர் உங்களுக்கு உதவி செய்வார். அவர் எவ்விதம் உங்களுக்கு உதவி செய்வார் என்பதை என்னால் கூற இயலாது. ஒரு வேளை அவர் அந்த பிரச்சனையை உங்களை விட்டு அகற்றிவிடுவார்; அல்லது ஒருவேளை அந்த பிரச்சனையை தாங்கிக்கொள்ள உங்களுக்கு உதவிசெய்வார். இதை மட்டும் நிச்சயமாக கூறலாம்: நீங்கள் அனுமதித்தால், அவரால் நிச்சயம் உதவி செய்யமுடியும். அவர் நிச்சயம் உங்களுக்கு உதவி செய்வார். முன்னதாக துக்கத்தால் மட்டுமே நிறைந்திருந்த, இப்போது மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கிற - நூற்றுக்கணக்கான - குடும்பங்கள் எனக்கு தெரியாவிட்டாலும் அப்படிப்பட்ட டஜன் கணக்கான குடும்பங்கள் எனக்குத் தெரியும்.

யாரேனும் ஒருவர் இவ்விதமாக ஆட்சேபிக்கலாம், "தேவன் விதவைக்கு உதவி செய்வதற்காக ஒரு அற்புதத்தை செய்தார், நாம் இப்போது அற்புதங்களின் காலத்தில் வாழ்வது இல்லை, அவர் எனக்கு எப்படி உதவி செய்ய முடியும்?" அற்புதங்களின் மூலமாக மட்டுமே தேவனால் கிரியை செய்யமுடியும் என சிந்திக்கிற அந்த தனிநபர் எவ்வளவு குறுகிய மனப்பான்மை உடையவராக இருக்கிறார்! தேவன் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தார். தான் விதித்துள்ள இயற்கை விதிகளால், அதை எப்படி இயக்குவது என்பதை அவர் அறிந்திருக்கிறார். இதை நாம் "தெய்வாதீனமான" அல்லது "தெய்வீக உதவி" என்று அழைக்கிறோம். ரோமர் 8:28 எனக்கு மிகவும் பிடித்த வசனப் பகுதிகளில் ஒன்று: "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."

மேத்யு ஹென்றி இவ்விதமாக எழுதினார், "இப்போது நாம் அற்புதங்களை எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் நாம் இரக்கங்களை எதிர்பார்க்கலாம்."[15] வாரன் வைர்ஸ்பி, "கர்த்தர் நம்முடைய கடன்களை நாம் அடைக்க ... அற்புதங்களை செய்வதில்லை, ஆனால் நாம் அவரை விசுவாசித்து கீழ்ப்படிந்தால் அவர் நம் தேவைகளை சந்திக்கிறார். நாம் எல்லாவற்றையும் அவருக்கு ஒப்புக்கொடுத்தால், கொஞ்சமானதை நீண்டகாலம் பயன்படும்படி செய்கிறார்"[16] என கூறுகிறார். குர்மாச்சர், "தேவன் தமது உதவிகளை சாதாரண முறையில் நமக்கு தருவதால், அது அதிசயத்தன்மை குறைந்ததாய் இருக்கிறதா?"[17] என வினவுகிறார். "இல்லை!" என நாம் நிச்சயமாக பதில் அளிக்கிறோம். "கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர், நம்முடைய தேவன் மன உருக்கமானவர்" (சங்கீதம் 116:5)!

முடிவுரை

தேவன் நீண்டகாலத்துக்கு முன்பு ஒரு குடும்பத்திற்கு உதவி செய்தார் - நீங்கள் அனுமதித்தால், அவர் உங்கள் குடும்பத்திற்கு உதவி செய்யக் கூடும். தேவனுடைய உதவியை பெற்றுக்கொள்வதை உறுதி செய்து கொள்வதற்கு, முதலில், உங்கள் உறவு தேவனோடு சரியாக இருக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இந்த பாடத்தின் நோக்கம் மக்கள் கிறிஸ்தவர்களாக மாற என்ன செய்யவேண்டும் என்பதை போதிப்பது அல்ல. ஆனால் இதி லிருந்து நமக்கு பொருந்தக் கூடிய சில கருத்துக்களை/பாடங்களை தரவழைக்க முடியும்:

- அந்த பெண் திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்கு கடன் பட்டிருந்தாள். நாம் ஒருபோதும் நம்மால் தீர்க்கமுடியாத அளவுக்கு, பாவம் என்னும் பெரும் கடனை சுமந்து கொண்டிருக்கிறோம் (காண்க ஏசாயா 64:6; ரோமர் 6:23அ).
- அந்த பெண்ணின் மகன்கள் அடிமைத்தனத்திற்கு உள்ளாகும் ஆபத்தால் பயமுறுத்தப்பட்டார்கள். நாம் பாவத்திற்கு அடிமைபட்டவர்களாக இருக்கிறோம் (காண்க தீத்து 3:3; 2 பேதுரு 2:19; ரோமர் 6:6).
- அந்த விதவைக்கு உதவியது போல, தேவன் நமக்கும் கிருபையின் உதவிகளை நல்கியுள்ளார் - ஆனால் முதலில் நம்மால் முடிந்ததை நாம் செய்யவேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். நாம் அவரை விசுவாசிக்கும்படி, திருமுழுக்கு பெறும்படி மற்றும் அதன்பிறகு அவருக்காக வாழும்படி கோருகிறார் (மாற்கு 16:16; ரோமர் 6:3-6; கலாத்தியர் 3:26, 27).
- நாம் தேவனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் நம்மை அர்ப்பணித்தால், இஸ்ரவேலில் அந்த விதவையின் காலி குடங்களை அவர் நிரப்பினது போல, நம்முடைய வெறுமையான வாழ்க்கையையும் நிச்சயமாக அவர் நிரப்புவார். அவர் நம்முடைய பாவங்களை நமக்கு மன்னிப்பார் (நடபடிகள் 2:38), நித்திய வாழ்வின் நம்பிக்கையை நல்குவார் (தீத்து 1:2), ஒவ்வொரு நாளிலும் நம்மை பெலப்படுத்தி நடத்துவார் (எபேசியர் 6:10).

தமது அன்பினால் (காண்க 1 தீமோத்தேயு 1:14) நம் "பாத்திரங்களை" நிரம்பி வழியப்பண்ணுகிறவரைத் துதியுங்கள் (காண்க சங்கீதம் 23:5)!

குறிப்புகள்

[1]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 202. Josephus indicated that this was the widow of Obadiah (*Antiquities* 9.4.2). [2]Ibid,202. [3]மற்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் இந்த பெண்ணை காப்பற்ற ஏன் வரவில்லை என்று வினவப்படமுடியும். 2 இராஜாக்கள் 4:38-44 எல்லா பயிற்சியாளர்களும் நிதி ஆதாரங்கள் இன்றி இருந்தார்கள் என்பதை காட்டுகிறது. [4]Adam Clarke, *The Holy Bible with a Commentary and Critical Notes,* vol. 2, *Joshua - Esther* (New York: Abingdon-Cokesbury Press, n.d.), 490. [5]அந்த பெண் "கடன்காரர் என் இரண்டு பிள்ளைகளையும் எடுத்து செல்ல வந்துவிட்டார்," என கூறினாள் (வசனம்

1ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஆனால் பிள்ளைகள் இன்னும் அவளோடு இருந்தார்கள் (வசனங்கள் 4-6). அநேகமாக கடந்த முறை அந்த கடன்காரர் வீட்டிலுள்ள பொருட்களை எடுத்துச் செல்ல வந்தபோது, நான் அடுத்தமுறை வரும்போது உன் பையன்களை பிடித்து சென்றுவிடுவேன் என கூறியுள்ளான். [6]Richard Newton, *Bible Models* (London: Hodder and Stoughton, 1887), 193. [7]C. F. Keil and F. Delitzsch, "1and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 309; G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1&2 Kings*, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 64. [8]Clarke, 491. [9]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 48. [10]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadephia: Herman Hooker, 1839), 52.

[11]W. T. Hamilton, "Borrow Not a Few," *The Preacher's Periodical* (April 1983): 14. [12]Adapted from Elaine J. Fletcher, *Elisha, the Miracle Prophet* (Washington, DC: Review amd Herald Publishing Association, 1960), 34. [13]Hamilton, 13. [14]Ibid., 14. [15]Matthew Henry, *Commentary on the Whole Bible,* ed. Leslie F. Church (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1961), 404. [16]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 29. [17]Krummacher, 52.

5

ஜீவனைக் கொடுத்த மனிதர்

(2 இராஜாக்கள் 4:8-17)

எலிசாவின் வாழ்வில் நன்கு அறியப்பட்ட சம்பவங்களில் ஒன்றாக இருப்பது, அவர் தங்குவதற்காக "தீர்க்கதரிசியின் அறை"யைக்கட்டி தந்து, அதினால் ஒரு ஆண்குழந்தையால் ஆசீர்வதிக்கப்பட்ட பெண்ணின் சம்பவமாகும். சிறுவர் வேத வகுப்புகளில் இந்த கதை அவர்களுக்கு பிடித்தமான ஒரு கதையாக இருக்கிறது. நான் இந்த சம்பவத்திலுள்ள நமது பாடத்தை "ஜீவனைக் கொடுத்த மனிதர்" என அழைக்கிறேன்.

விருந்தோம்பல் கொடுக்கப்பட்டது (4:8-11)

எலிசா இஸ்ரவேல் முழுவதும் அதிக அளவில் பயணம் செய்தார். அவர் அடிக்கடி பயணம் செய்த வழித்தடம் (வசனங்கள் 8, 9) ராஜாவின் கோடைகால அரண்மனை அமைந்திருந்த யெஸ்ரேலிலிருந்து (1 இராஜாக்கள் 18:46; 21:1), எலிசா பாகால்களின் (1 இராஜாக்கள் 18) தீர்க்கதரிசிகளை மேற்கொண்ட கர்மேல் பர்வதம் (2 இராஜாக்கள் 4:25), வரை அவரை நடத்தியது. அநேகமாக எலிசா தன் பொதுவான ஊழியத்தின் அழுத்தங்களிலிருந்து விலகி, ஓய்வு மற்றும் மதிப்பீடு செய்வதற்காக கர்மேல் பர்வதத்திற்குச் சென்றார்.

யெஸ்ரேலில் இருந்து மூன்று மைல் வடக்கில், கர்மேல் பர்வதத்திற்கு செல்லும் சாலையில் சூனேம் என்னும் ஒரு கிராமம் அமைந்திருந்தது (காண்க யோசுவா 19:18; காண்க வரைபடம்). சூனேம், "என்றும் பசுமையான ஒலிவத்தோப்புகள் மற்றும் கதிர்கள் அசைவாடும் தானிய வயல்கள்" மத்தியில் உயரமான மலைத் தொடரில் அமைந்திருந்தது. "அது பெரும்பாலும் விவசாயிகளை கொண்ட, வசதியான மற்றும் எளிமையான" ஒரு சிறிய பட்டணமாக இருந்தது.[1] புவியியல் ரீதியாக, யெஸ்ரயேல் மற்றும் சூனேம் பட்டணங்கள் சில மைல்கள் இடைவெளியில் அமைந்திருந்தன, ஆனால் தேவனுக்கு பயப்படும் காரியத்தில் அவைகள் ஒன்றுக்கொன்று தொலைவில் இருந்தன. யெஸ்ரயேல் நீண்ட காலமாகவே அரசு குடும்பத்தின் அக்கிரம மையமாக இருந்தது (காண்க 1 இராஜாக்கள் 21; 2 இராஜாக்கள் 9:30); ஆனால் சூனேம் கிராமத்தில், ஒரு சிலருடைய இருதயத்தில் விசுவாசத்தின் ஜுவாலை இன்னமும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

விருந்தோம்பலுக்கான ஒரு முன்மாதிரி

நமது கதையின் துவக்க வசனத்தில் சூனேமில் இருந்த விசுவாசிகளில் ஒருவர் குறிப்பிடப்படுகிறார்: "பின்பு ஒரு நாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும் போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ ..." (2 இராஜாக்காள் 4:8அ). இந்த பெண்ணின் பெயர் நமக்கு தெரியவில்லை. ஆனால் அவள் தாய்மை அடையும் வயதில் இருந்தாள் மற்றும் அவள் வயதான ஒரு கணவருக்கு

மணம்முடித்து கொடுக்கப்பட்டிருந்தாள் என்பது நமக்கு தெரிகிறது[2] (வசனம் 14). மேலும் அவர் ஒரு விவசாயி ஆக இருந்தார் (வசனம் 18). அவள் "கனம்பொருந்தியவள்" என நமக்குச் சொல்லப்படுகிறது. இந்த வார்த்தை அவளுடைய சமூக அந்தஸ்தை காட்டிலும் அவளுடைய செல்வநிலையை அதிகமாக குறிப்பிடுவதாக இருக்கும்.[3] NIV மொழிபெயர்ப்பு, "அவள் வசதியானவள்" ஆக இருந்தாள் என்று குறிப்பிடுகிறது. மிகவும் முக்கியமாக, விக்கிரக ஆராதனை மற்றும் அவபக்தி நிறைந்த தேசத்தில் அவள் கர்த்தருக்குள் வலிமையான விசுவாசம் உடையவளாக இருந்தாள் (காண்க வசனங்கள் 9, 16; 1 இராஜாக்கள் 19:18).

ஏதோ ஒரு விதத்தில், இந்த பெண் எலிசாவின் தொடர்பில் வந்தாள். ஒருவேளை எலிசா தான் பயணித்த ஒவ்வொரு பட்டணத்திலும் பிரசங்கம் செய்துவிட்டு செல்லக்கூடியவராக இருந்த நிலையில், அதை அந்தப்பெண் கேட்டிருந்தாள். அந்த சமயத்தில் அவர் நன்கு அறியப்பட்டவராக இருந்தபடியால், ஒருநாள் அவர் அந்த கிராமத்தின் வழியாக சென்றபோது, அவள் அவரை அடையாளம் கண்டு கொண்டாள். எப்படியிருந்த போதும், அவள் அவரை பார்த்து தன் வீட்டில் உணவருந்த வரும்படி அழைத்தாள். அந்த வசனப்பகுதி, "அவனை போஜனம் பண்ண வருந்திக்கேட்டுக்கொண்டாள்" என்று கூறுகிறது (2 இராஜாக்கள் 4:8ஆ). CJB மொழிபெயர்ப்பு, "அவள் வரும்படி வற்புறுத்தினாள்" என கூறுகிறது; NIV மொழிபெயர்ப்பு, "அவள் வற்புறுத்தி கேட்டுக்கொண்டாள்" எனவும்; NCV மொழிபெயர்ப்பு, "அவள் கெஞ்சி கேட்டாள்" எனவும் கூறுகிறது. "இல்லை என்ற பதிலை அவள் ஏற்றுக்கொள்ள மாட்டாள்" என இதை நான் வாழும் பகுதியில் கூறுவோம்.

எலிசா அவளுடைய அழைப்பை ஏற்பதில் மகிழ்ச்சியாக இருந்தார். பெரும்பாலான பிரசங்கியார்கள், வீடுகளுக்கு உணவருந்த அழைக்கப்படுவதை மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த சமயத்தில் எலிசா, கேயாசி என்ற ஒரு வேலைக்காரனை உடையவராக இருந்தார் (வசனம் 12). ஆகவே இந்த அழைப்பு என்பது இருவருக்கும் கொடுக்கப்பட்டிருந்தது.

நம்முடைய முந்தைய பாடத்தில், வறுமையிலிருந்த ஒரு பெண்ணுக்கு எலிசா உதவி செய்தார்; இந்த பாடத்தில் செல்வ சீமாட்டியான ஒரு பெண்ணுடன் சம்பந்தப்படுகிறார். "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (நடபடிகள் 10:34). எலியாவும் அப்படியே இருந்தார். அவர் அதிகாரமுடையோர் மற்றும் அதிகாரம் அற்றோர்; செல்வந்தர் மற்றும் வரியவர் என்ற பேதமின்றி அனைவருடனும் சாதாரணமாகப் பழகினார்.

உணவு அருந்திவிட்டு, எலிசா புறப்படுகையில், அந்த பகுதிக்கு வரும்போதெல்லாம் தன் வீட்டில் உணவருந்த வரும்படி அவள் வற்புறுத்தி அழைத்தாள். 8ஆம் வசனத்தின் இறுதி பகுதி, "அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்" என கூறுகிறது. அந்த வீட்டாரில் யார் சமையல் செய்தார்களோ, அவர்கள் சிறப்பான சமையல்காரராக இருந்திருக்கிறார்கள். பிரசங்கியார்கள் வீட்டில் சமைக்கப்படும் உணவுக்கான அழைப்பை விரும்பி ஏற்கிறார்கள்; ஆனால் உணவு ருசியற்றதாக அல்லது சாப்பிட முடியாததாக இருக்குமானால், மறுமுறை அங்கு செல்லாமல் இருப்பதற்கான காரணத்தை கண்டுபிடிப்பார்கள்.

வேதாகமம் சூனேமியாளுடைய வீட்டில் உணவைப் பற்றிய குறிப்புகள் எதையும் நமக்கு தெரிவிப்பதில்லை, ஆனால் உணவு மேசையில் நடந்த

உரையாடலை கற்பனை செய்வது கடினமானது அல்ல. எலிசா எலியாவோடு இருந்த ஆச்சரியமான ஆண்டுகள் - மற்றும் யெகோவா எவ்விதம் அவர்களோடிருந்தார் என்பது பற்றி அவர் கூறுவதை என்னால் கொஞ்சங்குறைய கேட்க முடிகிறது. அந்த பெண் புன்முறுவல் செய்த மற்றும் தலையை அசைத்த காட்சியை என்னால் காணமுடிகிறது. அவள் நிச்சயமாகவே தீர்க்கதரிசியின் திடமான விசுவாசத்தால் பெலப்படுத்தப்பட்டிருந்தாள், அவரும் தேவ பக்தியற்ற தேசத்தில் ஒரு விசுவாச பெண்ணை பார்த்ததால் உற்சாகப்படுத்தப்பட்டிருந்தார். ஒரே வகை விசுவாசமுள்ளவர்களோடு நாம் நேரம் செலவழிப்பது நமக்கு எவ்வளவு அருமையாயிருக்கிறது!

நீங்கள் கதையை வாசிக்கும்போது, அவள்தான் அந்த குடும்பத்தாரின் ஆவிக்குரிய காரியங்களில் பொறுப்பேற்று நடத்த வேண்டியிருந்தது என்பதை கண்டுபிடிப்பீர்கள் (வசனங்கள் 8, 9, 25). ஒரு கணவர் அல்லது தந்தைதான் அந்த குடும்பத்தின் ஆவிக்குரிய காரியங்களில் நடத்துனராக இருக்கவேண்டுமென வேதம் போதிக்கிறது (எபேசியர் 6:4), ஆனால் பல குடும்பங்களில் அப்படி இருப்பதில்லை. ஒரு பெண் தான் இந்த நிலையில் இருப்பதை காண நேர்ந்தால் என்ன செய்யவேண்டும்? சூனேமியப் பெண் செய்ததுபோல செய்யுங்கள்: உங்கள் விசுவாசத்தை பராமரித்துக் கொள்ளுங்கள் மற்றும் உங்கள் கணவர் சரியானதை செய்ய அவரை உற்சாகப்படுத்துங்கள் (காண்க 1 பேதுரு 3:1, 2).

ஒருநாள், "அவள் தன் புருஷனை நோக்கி இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்" என்றாள் (வசனம் 9). "பரிசுத்தம்" என்ற வார்த்தையின் பொருள் "பிரித்து வைக்கப்படுதல்" என்பதாகும். பழைய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில்தான் ஒரு தீர்க்கதரிசியை குறிப்பிடுவதற்கு "பரிசுத்தம்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.[4] *துக்ககரமாக*, தங்களை "தேவமனிதர்" என அழைத்துக்கொள்ளும் சிலர் பரிசுத்தவான்களாக *இருப்பதில்லை*. எலிசாவை அடிக்கடி சந்தித்ததில், அவர் உண்மையிலேயே "பிரித்து வைக்கப்பட்ட" தேவனுடைய சிறப்பு பிரதிநிதி என்பதை அவள் நன்கு புரிந்துகொண்டாள்.

அவள் தன் கணவரிடம் ஒரு ஆலோசனையை முன்வைத்தாள். "நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக்கூட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம்" என்றாள் (வசனம் 10). தனது வீட்டின் மொட்டை மாடியில் தீர்க்கதரிசிக்காக ஒரு சிறிய அறையை கட்ட விரும்பினாள் (CJB மொழிபெயர்ப்பை காண்க). தேவனுடைய தீர்க்கதரிசிகளின் எளிமையான வாழ்க்கை முறைக்கேற்ப - அங்கே சாமான்கள் வைக்கப்பட்டிருக்கும் - அது அவருக்கான பிரத்தியேகமான அறையாக இருக்கும். அது நெருக்கடியான மற்றும் பரபரப்பான உலக சூழலிருந்து விலகியிருப்பதற்கான ஒரு அடைக்கலமாக இருக்கும். (ஒருவருக்கான மரச்சாமான்கள் குறிப்பிடப்படுகின்றன, எலிசாவின் வேலைக்காரன் கேயாசிக்கும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கும் [வசனங்கள் 11, 12].)

இதற்கு கணவர் எப்படி பதிலுரைத்தார் என நமக்கு தெரியவில்லை. அவர் ஆர்வமாக பதிலளித்தாரா அல்லது தன் மூலம் மனைவியை உற்சாகப்படுத்துவதற்காக அவள் ஆலோசனையை ஒப்புக்கொண்டாரா? குறைந்தபட்சம் இந்த ஆலோசனைக்கு சம்மதித்தார் - அந்த அறை

கட்டிமுடிக்கப்பட்டது. அது அளவில் சுமாராக இருந்த போதிலும் - தேவையான எல்லாம் சரியான இடத்தில் வைக்கப்படுவதை அந்த பெண் உறுதி செய்தாள் என்பது உங்களுக்கு தெரியாதா? அந்த அறையை முதல் முதல் எலிசாவுக்கு காண்பித்து அது அவருக்குரியது என்று சொன்னபோது, அவள் முகத்திலிருந்த புன்முறுவலை என்னால் கற்பனை செய்யமுடிகிறது. எலிசா சந்தேகத்திற்கு இடமின்றி, மகிழ்ச்சியடைந்தார். அவர் அப்பகுதிக்கு வந்த போதெல்லாம். அவர் தங்கி ஓய்வு எடுப்பதற்கு இப்போது ஒரு இடம் இருந்தது (வசனம் 11). சூனேமிய பெண்ணின் இந்த தாராளகுணமுள்ள செயல், ஆயிரக்கணக்கானவர்களை உற்சாகப்படுத்தாமலிருந்தாலும், நூற்றுக்கணக்கானவர்கள் தங்கள் வீடுகளில் "தீர்க்கதரிசியின் அறைகளை" உண்டுபண்ணுவதற்கு அவர்களை ஏவியுள்ளது: ஊழியத்திற்கு வரும் பிரசங்கியார்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட பிரத்தியேக அறைகளாக அவைகள் இருக்கின்றன.

விருந்தோம்பலுக்கான ஊக்குவிப்பு

இந்த பெண்ணை விவரிப்பதற்கான ஒரு வார்த்தை உண்டு: *விருந்தோம்பல்.* "விருந்தோம்பலுக்குரிய" மற்றும் "விருந்தோம்பல்" ஆகிய வார்த்தைகள் "விருந்தினர்" என பொருள்படும் கோஸ்பஸ் என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வந்துள்ளது. "விருந்தோம்பல்" என்பது மற்றவர்களை வேறு ஒரு வார்த்தையில் கூறுவதானால் "விருந்தினர்களை" கனிவோடும் தாராளமனதோடும் நடத்துவதாகும். விருந்தோம்பல் என்பது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் முக்கியமான பாடமாக இருக்கிறது. மூப்பர்களுக்கான தகுதிகளில் ஒன்றாக விருந்தோம்பல் உள்ளது (1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:8). பேதுரு, "முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்" என்றார் (1 பேதுரு 4:9).

எபிரெயருக்கு எழுதின ஆசிரியர், "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" என்றார் (எபிரெயர் 13:2). இது அநேகமாக, ஆபிரகாம் ஆதியாகமம் 18இல் தேவதூதரை உபசரித்ததை குறிப்பிடுகிறது (வசனங்கள் 1-8, 16, 22; காண்க 19:1). நாம் இப்போதும் "அறியாமல்" தேவதூதரை உபசரிப்பது சாத்தியமா? எபிரெயர் 13:2 அதை கூறவில்லை; மாறாக நீண்ட காலத்திற்கு முன்னர் நடந்த சம்பவத்தை அது குறிப்பிடுகிறது. இன்றைக்கு அது சாத்தியமா அல்லது சாத்தியமில்லையா என்பதை சிந்திப்பதில் சிறிதளவே நோக்கம் இருக்கிறது - அது சாத்தியமாக இருந்தாலும், நாம் அதை ஒருபோதும் அறியாமல் இருப்போம்! இந்த வசனப்பகுதியின் கருத்து என்னவென்றால், நாம் ஒவ்வொரு அந்நியரையும் அவர் கர்த்தரிடமிருந்து நேரடியாக *வந்ததாக எண்ணி* நடத்த வேண்டும் (காண்க மத்தேயு 25:35, 38, 40)!

நீங்கள் ஒரு உபசரிப்பு மிக்க குடும்பத்தில் வளர்க்கப்பட்டிருந்தால், என்ன *அருமையான* நினைவுகளை நீங்கள் உடையவர்களாக இருக்கிறீர்கள்! "இன்னும் ஒருவரை உபசரிப்பதற்கு எப்போதும் வாய்ப்பு இருக்கிறது!" என ஒரு தந்தை கூற அநேகமாக அதை நீங்கள் கேட்டிருக்கலாம். ஒரு விருந்தினர்/பார்வையாளர் உணவு மேசைக்கு வரப்போகிறார் என்பதை அறிந்த தாயின் கண்கள் விரிந்ததை ஒரு வேளை நீங்கள் பார்த்திருக்கலாம். ஒரு பிரசங்கியார் ஞாயிறு மாலை உணவுக்கு வருகை தந்தது அல்லது தொடர் நற்செய்தி கூட்டங்களுக்காக வருகைதந்த சுவிசேஷகர் வீட்டில் தங்கியிருந்தது போன்ற சிறப்பான நினைவுகள்

சிலருக்கு வரலாம். ஆண்டுகளாக, கிறிஸ்துவுக்குள்ளான பல சகோதர, சகோதரிகள் அப்படியாக, அவர்கள் தந்தைமார் இரவு உணவு வேளையில் பிரசங்கியார்களோடு தேவன் மற்றும் அவருடைய வார்த்தையைக் குறித்து பேசிய நாட்களில், தங்களுடைய தனிப்பட்ட விசுவாசம் உருவாகி, வளர்ந்தது என்பதை என்னிடம் கூறியுள்ளார்கள்.

ஒருவேளை, சிலர் இப்படி சிந்தித்து தயங்கக்கூடும், "எனது வீடு விருந்தினரை வரவேற்கக்கூடிய அளவுக்கு நல்லதல்ல," அல்லது "நாங்கள் சாப்பிடவேண்டியதாயிருப்பதை மற்றவர்களுக்கு கொடுப்பதில் நான் சங்கடப்படுவேன்." எபிரெயர் 13:2ல் "உபசரித்ததுண்டு" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருந்தாலும், ஒரு எழுத்தாளர் அந்த வார்த்தை இன்று சில சமயம் பயன்படுத்தப்படுவதின் அடிப்படையில், உபசரிக்கும் குணத்தோடு இருப்பதற்கும், ஒருவரை "உபசரிப்பதற்கும்," வேறுபாடு உண்டு என குறிப்பிடுகிறார்.[5]

- விருந்தோம்பல் கூறுகிறது, "அதிகமோ அல்லது குறைவோ, என்னிடம் என்ன இருக்கிறதோ, அது தேவனுடைய ஒரு ஈவாக இருக்கிறது. அதை அவருக்காக பயன்படுத்த விரும்புகிறேன்," "என்னிடமுள்ளதை வைத்து நான் ஒரு பெரிய ஆள் என காட்டிக்கொள்வதற்காக அல்ல."
- விருந்தோம்பல் மெல்லிய குரலில் பேசுகிறது, என்னுடையது எல்லாம் உன்னுடையது, பயன்படுத்திக்கொள். "இது என்னுடையது, இதை பாராட்டு," என கூச்சலிடுவதற்குப் பதிலாக.
- விருந்தோம்பல் பாராட்டுகளை தேடாமல் சேவை செய்வதை தேடுகிறது.
- உலகப்பிரகாரமான "உபசரிப்பு" விருந்தினரை பதில் செய்ய கடமைப்பட்டவரென நினைக்க தூண்டுகையில், விருந்தோம்பல் பார்வையாளருக்கு தன் சொந்த குடும்பத்தில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

கையிலுள்ள பரிசுபொருளைவிட, இருதயத்திலுள்ள தாராளகுணமே சிறந்ததாக இருக்கிறது. இயேசுவானவர், "சீஷன் என்னும் நாமத்தினிமித்தம்," "ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்க கொடுக்கிறவனும்," "தன் பலனை அடையாமற்போகான்" என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார் (மத்தேயு 10:42). தேவன்தாமே நாம் எல்லாரும் விருந்தோம்பல் கலையை வளர்க்க நமக்கு உதவி செய்வாராக.

விருந்தோம்பலுக்கு பலன் கிடைத்தது (4:11-17)

நன்றி: ஒரு தேவை

ஒருநாள், "எலிசா அங்கே வந்து, அந்த அறை வீட்டிலே தங்கி, அங்கே படுத்துக்கொண்டிருந்தான்" (வசனம் 11), தனக்கு அளிக்கப்பட்ட விருந்தோம்பலை மகிழ்வுடன் அனுபவித்து கொண்டு, இதற்கு எந்த விதத்தில் நன்றியை தெரிவிப்பது என யோசித்துக் கொண்டிருந்தார். இயேசு கிறிஸ்து, "தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்கிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்" என்றார் (மத்தேயு 10:41அ).

"தீர்க்கதரிசிக்கேற்ற பலனை" அந்த பெண் பெற வேண்டிய தருணம் அது என எலிசா முடிவெடுத்தார்.

"அவன் தன் வேலைக்காரனாகிய கேயாசை நோக்கி: இந்த சூனேமியாளை அழைத்துக் கொண்டுவா" என்றான் (2 இராஜாக்கள் 4:12அ). இப்போதுதான் கேயாசை பற்றி முதல் முதலில் வாசிக்கிறோம். எலிசா எலியாவுக்கு ஊழியம் செய்ததுபோல் இவன் எலிசாவுக்கு ஊழியம் செய்தான் - ஆனால் இந்த இரண்டு வேலைக்காரரின் குணாதிசயங்களிலும் எத்தனை பெரிய வித்தியாசம் இருந்தது! இதை பற்றி பின்னர் அதிகம் கூறுவோம்.

கேயாசி, "அவளை அழைத்துக்கொண்டு வந்தான்; அவள் அவனுக்கு முன்பாக நின்றாள்" (வசனம் 12ஆ). எலிசா அவளிடம் பேசவில்லை. மாறாக, அவர் கேயாசியைப் பார்த்து: "இதோ இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேள் என்றான் (வசனம் 13அ). எலிசா அவளிடம் ஏன் நேரில் பேசவில்லை என்பது நமக்கு நிச்சயமாக தெரியவில்லை. (பின்னர், அவர் அவளிடத்தில் நேராக பேசினார். காண்க வசனங்கள் 15 மற்றும் 16.) அந்த சந்திப்பின் பின்புலம் படுக்கை அறையாக இருந்தபடியால், சில சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டியிருந்தன என பல எழுத்தாளர்கள் கருதுகின்றனர்.[6]

அந்த நாளின் பழக்க வழக்கங்களைப் பற்றி எனக்கு தெரியவில்லை, ஆனால் தேவனுடைய ஊழியக்காரர் எதிர்பாலினத்தவரை கையாளுவதில் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பது எனக்கு தெரியும். நான் ஒரு முழுநேர ஊழியராக இருந்த போது, ஒரு பெண் எனது வேத வகுப்புக்கு வந்தால், நான் எப்போதும் அறை கதவை திறந்து வைத்திருப்பேன். (சபை செயலரின் அலுவலகம் அருகாமையில் இருந்தது.) ஒரு பெண்ணின் வீட்டில் சந்திப்பதற்கு அல்லது வேத வகுப்பை நடத்துவதற்கு நான் ஒருபோதும் தனியே செல்வதில்லை, எனது மனைவி எப்போதும் என்னோடு சென்றாள். வேறு எந்த ஒழுக்க ரீதியான பிரச்சனைகளையும் விட பாலுணர்வு சம்பந்தப்பட்டவைகள் பிரசங்கியார்களை அதிகமாக அழித்திருக்கின்றன.

மறுபடியுமாக, எலிசா அந்தப் பெண்ணிடம் கூறிய வார்த்தைகளை பாருங்கள்: "இதோ, இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" (வசனம் 13அ). தமிழில் "சலக்கரணை" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை "கரிசனை"[7] அல்லது "ஆவலோடு" என பொருள்படும். இன்றைய நடைமுறையில், "நீ எங்களுக்காக மிகவும் *கரிசனையோடு* இருந்தாய்" என்று கூறுவோம். NIV மொழிபெயர்ப்பில், "நீ எங்களுக்காக இவ்வளவு சிரமங்களை ஏற்றுக்கொண்டாய்" என்றுள்ளது. CJB மொழிபெயர்ப்பு வசனம் 13இன் முதல் பகுதியை மொழிபெயர்த்துள்ள விதத்தை நான் விரும்புகிறேன்: "நீ எங்களுக்கு மிகவும் அதிகமான *உபசரிப்பை* காண்பித்துவிட்டாய்! நான் எனது *பாராட்டை* தெரிவிக்க உனக்கு என்ன செய்யவேண்டும்?" (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

நம்மில் பலர் அதிக உபசரிப்பு உள்ளவர்களாக மாறுவதற்கு முயற்சி செய்ய வேண்டிய அவசியம் உண்டு; நாம் *எல்லாரும்* மற்றவர்களை அதிகமாய் பாராட்டக்கூடியவர்களாக மாற வேண்டிய அவசியமுண்டு. அப்போஸ்தலனாகிய பவுல், "தேவசமாதானம் உங்கள் இருதயங்களில்

ஆளக்கடவது ... ; நன்றியறிதலுள்ளவர்களுமாயிருங்கள்" என்றார் (கொலோசெயர் 3:15). எபிரெயர் நிருபத்தின் ஆசிரியர், "அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் நன்றியை காண்பிப்போம் ..." என கூறுகிறார் (KJV தவிர பிற ஆங்கில மொழிபெயர்ப்புகளில்) (எபிரெயர் 12:28அ). பவுல் பொல்லாதவர்களை குறித்து விவரித்தபோது, இந்த குணாதிசயத்தையும் இணைத்து: "நன்றியறியாதவர்களையும்" என கூறினார் (2 தீமோத்தேயு 3:2).

C. E. மெக்கார்ட்னி, "நன்றியுணர்வு இல்லாதிருத்தல் என்ற பாவமே மிக பொதுவான பாவமாக இருக்கிறது"[8] என எழுதினார். ஒரு குறைகூறும் குணமுள்ளவன், "நீங்கள் நன்றியை (யுணர்வை) கண்டுபிடிக்க விரும்பினால், அதை அகராதியில் பாருங்கள்" என்றான்.[9] ஒரு சிறு குழந்தை கூட நூறுவரை எண்ண கற்றுக்கொள்கிறது; நாம் நமது ஆசீர்வாதங்களை எண்ண கற்றுக்கொள்ளவேண்டும்.

"நன்றி கூறுவதற்கு முன்னால், பெற்ற நன்மைகளை நினைத்துப்பார்ப்பது வருகிறது" என யாரோ ஒருவர் கூறியுள்ளார்.[10] நாம் காரியங்களை கருத்தாய் சிந்தித்தால், நாம் நன்றி சொல்வதற்கான நிறைய காரியங்கள் எப்போதுமே இருக்கின்றன என்பதை கண்டுபிடிப்போம். இதை எடுத்துரைக்கும் கதைகளை நான் விரும்புகிறேன். கடும் புயல் வீசிய ஞாயிறன்று ஜெபித்த மனிதனை பற்றி ஒரு கதை இவ்விதம் வருகிறது. அவர், "கர்த்தாவே இது போன்ற கடுமையான புயல் எப்போதும் வீசாமல் இருப்பதற்காக நன்றி"[11] என்றார். திருடரால் வழிமறிக்கப்பட்டு, பொருள்கள் களவாடப்பட்ட மேத்யு ஹென்றி என்பவருடைய கதை சுவாரஸ்யமானது அவர் தனது நாட்குறிப்பேட்டில், பின்வரும் வார்த்தைகளை எழுதிவைத்தார்:

> முதலாவதாக, இதற்கு முன்னர் ஒருபோதும் என் பொருட்கள் கொள்ளையடிக்கப்படாமல் இருந்ததற்காக நான் நன்றியுடையவனாக இருக்கட்டும்; இரண்டாவதாக, அவர்கள் என் பணப்பையை எடுத்துக்கொண்டபோது, எனது உயிரை எடுக்காமல் விட்டதற்காக நன்றி; மூன்றாவதாக, அவர்கள் என்னுடையது எல்லாவற்றையும் களவாடிச் சென்றிருந்தாலும், அது அவ்வளவு அதிகமாக இல்லாமல் இருந்ததற்காக நன்றி; நான்காவதாக, மற்றவர்களுடையது அல்ல. என்னுடையது (நான்தான்) தான் கொள்ளையடிக்கப்பட்டது, அதற்காக நன்றி.[12]

"மேல் தாடையில் ஒரு பல், கீழ்தாடையில் ஒரு பல் என இரண்டு நல்ல பற்களாவது மிஞ்சி இருக்கின்றன, எனது உணவை அவைகளால் நான் மென்று தின்கிறேன். அதற்காக நன்றி கர்த்தாவே" என ஜெபித்த ஒரு மூதாட்டியின் கதை சொல்லப்படுகிறது.[13]

சூனேமியாப் பெண் செய்தவைகளுக்காக எலிசா நன்றியுள்ளவராக இருந்தார். மற்றவர்கள் நமக்கு செய்கிறவைகளுக்காக நாம் நன்றியுடைவர்களாக இருக்க வேண்டும் மற்றும் அதை அவர்கள் செய்ய கடமைபட்டிருந்தார்கள் என்று எண்ணிவிடக்கூடாது. பைரி சரோன் என்பவர், "நன்மைகளை பெறுகிறவர் அதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது; நன்மைகளை செய்கிறவர் அதை ஒருபோதும் ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடாது" என்று எழுதினார்.[14] சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாய் இருக்கிற நம்முடைய தேவனுக்கு நாம்

எப்போதும் நன்றியுடைவர்களாக இருக்க வேண்டும் (யாக்கோபு 1:17). தனது கணவரின் கல்லறையை அடையாளப்படுத்திய கல்வெட்டில் ஒரு மலைப்பகுதி பெண்: "அவர் எப்போதும் என்னை பாராட்டினார்" என வடித்திருந்தாள்.[15] நம் ஒவ்வொருவரைக் குறித்தும் எப்போதும் இவ்விதமாக சொல்லப்படுமானால், அது ஆச்சரியமானதாக இருக்காதா?

நன்றியறிதல்: ஒரு செயல்

எலிசா தன் பாராட்டுதலை தெரிவித்த பிறகு, தான் அவளுக்கு என்ன செய்யக்கூடும் என வினவினார். "உங்களுக்கு நன்றி" என *சொன்னதோடு* அவர் நிறுத்திக்கொள்ள விரும்பவில்லை; அவன் தான் எவ்வளவு நன்றியுடையவராக இருந்தார் என்பதை *காண்பிக்க* விரும்பினார். அவன், "ராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேசவேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக்கேள்" என்றான் (2 இராஜாக்கள் 4:13ஆ). உலகில் எனது பகுதியில், நாங்கள் இதை பின்வருமாறு கூறுவோம், "உன்னைக் குறித்து ஒரு நல்ல வார்த்தை சொல்லிவைக்கட்டுமா?" இஸ்ரவேல் தேசத்தில் ராஜா மற்றும் சேனைத் தலைவர் ஆகிய இருவரும்தான் மிக அதிக அதிகாரம் உடையவர்களாக இருந்தார்கள். தீர்க்கதரிசி அவர்கள் இருவருடைய உயிரையும் காப்பாற்றியிருந்தார் (2 இராஜாக்கள் 3); ஆகவே அவர்கள் இவருக்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். இவருடைய நியாயமான வேண்டுகோளை மறுக்கமாட்டார்கள். ராஜாவிடத்தில் பேசுவதின் மூலம் அந்த பெண் மற்றும் அவளுடைய கணவர் ஆகிய இருவருக்கும் ராஜசமூகத்தில் எலியா நல்ல ஒரு இடத்தை பெற்றுத் தந்திருப்பார் அல்லது ராஜ மரியாதையை பெற்றுத் தந்திருப்பார் (வரிச் சலுகைகள் உள்பட[16]). அந்த பெண் மற்றும் அவள் கணவர் ஆகியோருடைய சட்ட உரிமைகளை நிலை நாட்டும்படி சேனைத்தலைவரை அவர் கேட்டிருக்கக்கூடும்.

நாட்டின் உயர்ந்த அதிகாரமுடையவர்களிடத்தில் செல்வாக்குள்ள ஒருவர் உங்களுக்கு இப்படிப்பட்ட அளிப்புகளை கொடுக்க முன்வந்திருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் பதிலுரைப்பு என்னவாக இருக்கும்? நீங்கள் எதைக் கேட்பீர்கள்? இந்த கேள்விகளுக்கான உங்கள் பதில் எதுவாக இருந்தாலும், அதை அந்த பெண்ணுடைய பதிலுரைப்போடு ஒப்பிட்டுபாருங்கள். அதற்கு அவள், "என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன்" என்றாள் (2 இராஜாக்கள் 4:13இ). அவள் தன் பதிலில் வாய்மொழி "சுறுக்கெழுத்தை" பயன்படுத்தினாள். CJB மொழிபெயர்ப்பு அவள் பதிலை இவ்விதம் விரித்து கூறுகிறது: "எனது சொந்த ஜனங்களின் நடுவில் நான் இருக்கும்படி, மகிழ்ச்சியாய் வாழ்ந்து வருகிறேன்." வேறு வார்த்தைகளில் கூறுவதெனில், "எனக்கு எந்த அரசு அல்லது இராணுவ சலுகைகளும் வேண்டாம். அரசரின் மாளிகையைவிட, சூனேமிலுள்ள எனது வீட்டையே நான் அதிகம் விரும்புகிறேன். என் குடும்பத்தார், நண்பர்கள் அல்லது அயலகத்தாரோடு எனக்கு எவ்வித சண்டை சச்சரவுகளும் இல்லை. நான் இங்கே மகிழ்ச்சியாய் வாழ்ந்து வருகிறேன்!" "எனக்கு எதுவும் பலன் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் இதை செய்யவில்லை. உங்களுடைய ஊழியத்தில் உதவி செய்ய எனக்கு கிடைத்த வாய்ப்பே போதும், அதுவே நல்ல பலனாக இருக்கிறது" என்பதையும் அநேகமாக அவள் உணர்த்தினாள். அவளுடைய பதிலை LB இவ்விதம் சுருக்கி கூறுகிறது: "நான்

பிரபூரணமான திருப்தியோடு இருக்கிறேன்."

நான் ஆச்சரியத்தில் திளைக்கிறேன். இந்த பெண் உபசரிக்கிறவளாக மட்டும் அல்ல, அவள் *திருப்தியுள்ள* ஒரு இருதயத்தையும் உடையவளாக இருந்தாள்! அவளுக்காக நான் ஒரு நினைவு சின்னத்தை எழுப்பி, அதின் அடியில் "ஒரு திருப்தியாயிருந்த பெண்" என்ற வார்த்தைகளை எழுத வேண்டும்போல் இருக்கிறது. வேதாகமம், "... உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்" என கட்டளையிடுகிறது (எபிரெயர் 13:5; KJV; காண்க பிலிப்பியர் 4:11; 1 தீமோத்தேயு 6:8); ஆனால் நம்மில் ஒரு சிலர் மட்டுமே இந்த இலக்கை எட்டுகிறோம். ஒவ்வொரு திருப்தியான இருதயத்திற்கும் திருப்தி என்றால் என்ன என்பதை ஒருபோதும் அறிந்திராத, அமைதியற்ற எண்ணிலடங்காத இருதயங்கள் இருக்கின்றன. நாம் நமக்கு இருக்கிறவைகள் போதுமென்ற மனநிறைவோடு வாழ்வதற்கு சூனேமியாளின் முன் உதாரணம் ஒருவேளை உற்சாகப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

இந்த சுருக்கமான பதிலுரைக்கு பின்பு, அநேகமாக அந்த பெண் அறையை விட்டு கடந்து சென்று விட்டாள். நான் எலிசாவாக இருந்திருந்தால், தோள்களை அசைத்து, "நான் முயற்சி செய்தேன்" என்று சொல்லிவிட்டு, அந்த காரியத்தை மனதில் வைக்காமல் விட்டிருப்பேன். ஆனால் தீர்க்கதரிசி தனது நன்றியறிதலாக *ஏதாகிலும்* செய்யவேண்டுமென தீர்மானமாயிருந்தார். "அவளுக்கு செய்யவேண்டியது என்ன?" என அவர் கேயாசியினிடத்தில் ஆலோசனை கேட்டார் (2 இராஜாக்கள் 4:14அ).

அவன், "அவளுக்கு பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன்" என்றான் (வசனம் 14ஆ). அந்த நாட்களில் மலடியாய் இருப்பது ஒரு சாபம் என கருதப்பட்டது (காண்க 1 சாமுவேல் 1:6, 7). இன்று பிள்ளையில்லாதிருப்பது வருத்தமானது, அன்று அது சோகமானதாயிருந்தது. ஒரு மகன் இல்லாமல் இருப்பது எப்படிப்பட்டது என்பதை ராபர்ட் வானோய் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:

> ... அந்த குடும்பத்தின் பெயர் அற்றுப்போகும் மற்றும் அதின் நிலபுலன்கள் மற்றும் இதர சொத்துக்கள் மற்றவர்களுக்கு போய்விடும். இந்த இளம் விதவைக்கு பாதுகாவலரோ அல்லது பராமரிப்பாளரோ இல்லாமல் இருப்பதால் அவளுடைய எதிர்காலம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது - பிள்ளைகள்தான் அந்த விதவைக்கு ஒரே சமூகப் பாதுகாப்பாக இருந்தார்கள் ...[17]

எலிசா தாமாகவே ஏன் இப்படிச் சிந்திக்கவில்லை? ஏனென்று என்னால் கூற இயலாது. ஆனால் சிலசமயம் காரியங்களை பிறரோடு பேசும்போது உதவியாக இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இதனால் நமக்கு தோன்றாத சில நல்ல (சிலவேளையில் "தெளிவான") ஆலோசனைகள் கிடைக்கும்.

கேயாசி கூறியதை எலிசா விரும்பினார். தீர்க்கதரிசி அந்த தேசத்தின் ராஜசமூகத்தில் ஒரு நல்வார்த்தை/பரிந்துரை அந்த பெண்ணுக்காக சொல்ல இயலாமல் போய்விட்டாலும், அவர் பரலோகத்தில் தேவ சமூகத்தில் "ஒரு நல் வார்த்தை" சொல்லக்கூடும்.[18] தன் வேலைக்காரன் மூலம் மீண்டும் அந்த பெண்ணை வரவழைத்தார் (2 இராஜாக்கள் 4:15அ). அவள், "வந்து

வாசற்படியிலே நின்றாள்" (வசனம் 15ஆ), தேவனுடைய ஊழியக்காரருக்கு எந்த நிந்தையும் வராதபடி இப்போதும் அவள் எச்சரிக்கையாயிருக்கிறாள்.

இம்முறை எலிசா அந்த பெண்ணிடம் நேரில் பேசினார். அப்பொழுது அவன்: "ஒரு பிராண உற்பத்தி காலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய்" என்றான் (வசனம் 16அ). NCV மொழிபெயர்ப்பில், "அடுத்த ஆண்டு இந்த நேரத்தில், உன் கரங்களில் ஒரு மகனை ஏந்திக்கொண்டிருப்பாய்" என்றுள்ளது.

அந்த பெண் திகைப்புற்றாள். அதற்கு அவள்: "ஏது? தேவனுடைய மனுஷனாகிய என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்றாள்" (வசனம் 16ஆ). பிற்பாடு, தனது பதிலை சுருக்கமாக, "எனக்கு அபத்தம் சொல்ல வேண்டாம்" என்று கூறினாள் (வசனம் 28). அவள் எலிசாவின் நேர்மையை சந்தேகிக்கவில்லை; நாம் கூறுகிறபடி "அந்த செய்தி உண்மையாய் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை" என அவள் நினைத்தாள். NIV மொழிபெயர்ப்பில், வசனம் 28இல், "எனக்கு நம்பிக்கை ஊட்டாதே" என வந்துள்ளது. அந்த பெண் தனக்கு எதுவும் தேவையாயிருக்கவில்லை. தன் வாழ்க்கை நிறைவாயிருந்தது என்பதை தெரிவித்திருந்தாள் - ஆனால் எவ்வளவு ஆழமாக அவள் ஒரு மகனை வாஞ்சித்தாள் என்பதை அவள் உணர்வுகள் வெளிப்படுத்தின. அவள் அநேகமாக நீண்ட காலத்துக்கு முன்பே நம்பிக்கை இழந்திருந்தாள் என்பதையும் அது அடையாளப்படுத்தியது. அவளுடைய பதிலை நாம் இவ்விதமாய் வேறு வார்த்தைகளில் கூறலாம்: "ஒருபோதும் சாத்தியமாயிராத ஏதோ ஒன்றைக்குறித்த ஒரு வாக்குத்தத்தத்தால் என்னை சித்திரவதை செய்யவேண்டாம்!" தூதர்கள் ஆபிரகாமினிடத்தில், சாராள் வயது சென்றவளாயிருந்தாலும் ஒரு குமாரனை கொண்டிருப்பாள் என கூறியபோது, சாராள் அளித்த பதில்தான் நமக்கு நினைவுக்கு வருகிறது (ஆதியாகமம் 18:10-12).

சாராளைக் குறித்து பேசும்போது, இந்த சூனேமிய பெண் அந்த நற்குணசாலியான மூதாதையரின் வழித்தோன்றலாக இருந்தாள் மற்றும் "கர்த்தரால் ஆகாத காரியம்" ஒன்றும் இல்லை என்பதை அவள் நினைவு கூர்ந்திருக்க வேண்டும். (ஆதியாகமம் 18:14). தேவனானவர் இடைபட்டு, ஒரு மலடியான பெண் பிள்ளை பெற பெலப்படுத்தினது இது முதல் முறை அல்ல - அல்லது இது கடைசி முறையாகவும் இராது (ஆதியாகமம் 18:1-15; நியாயாதிபதிகள் 13:2-24; 1 சாமுவேல் 1:1- 20; லூக்கா 1:5-25, 57-66).

கர்த்தர் அந்த பெண்ணை ஏமாற்றிவிடவில்லை. அந்த ஸ்திரீ "கர்ப்பந்தரித்து,[19] எலிசா தன்னோடே சொன்னபடி, ஒரு உற்பத்தி காலத்திட்டத்தில் ஒரு குமாரனை பெற்றாள்" (2 இராஜாக்கள் 4:17). உங்களுக்கு பிள்ளைகளோ அல்லது பேரப்பிள்ளைகளோ இருக்கிறார்களா? நீங்கள் ஒரு கைபிள்ளையை அல்லது சிறு குழந்தையை கவனித்திருக்கிறீர்களா? அப்படியானால், இந்த நிகழ்வின் சங்கிலித் தொடரை நீங்கள் எளிதில் கற்பனை செய்யக்கூடும்.

- அந்த பெண்ணுக்கு அவள் தாய்மை அடைந்திருந்ததை உணர்ந்தபோது ஏற்பட்ட சந்தோஷம், முதல் முறை கற்பத்திலிருந்த சிசு அவளை வயிற்றில் உதைத்தபோது அவளுக்கு ஏற்பட்ட அளவு கடந்த மகிழ்ச்சி.
- பிரசவத்திற்கு பிறகு, தன் கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கும் புதிய

மகனை முகத்தில் ஆச்சரியத்தோடு கீழே பார்க்கிறாள். பின் தேவனுடைய ஈவுக்காக அவருக்கு நன்றி செலுத்த மேலே பார்க்கிறாள்.

- அடுத்த முறை எலிசா அந்த வழியாய் பயணித்தபோது, தாய் தன் குழந்தையை பார்க்கும்படி அவரை அழைத்துச் செல்கிறாள்.
- அவரது அடுத்த வருகைகளின்போது, தாய் எலியாவிடம் அந்த குழந்தைக்கு முதல் பல்முளைத்தது பற்றி, அது பேசிய முதல் வார்த்தை பற்றி, எடுத்துவைத்த முதல் கால் அடிபற்றி பெருமையோடு கூறுகிறாள் - அந்த குழந்தை அவர்கள் காலடியில் மகிழ்ச்சியோடு விளையாடிக்கொண்டிருந்தது.

எலிசா முந்திய காலத்தில் வாழ்ந்த மாபெரும் தேவ மனிதர்களைப்பற்றிய கதைகளை கூறியபோது, அந்த சிறுவன் அவர் மடியில் அமர்ந்து அவைகளை கேட்டது சாத்தியமாயிருந்ததா? குறைந்தபட்சம் இந்த தாராளகுணமுள்ள பெண் மகிழ்ச்சியாய் இருந்ததைப் பார்த்து எலிசா புன்னகைத்தார் என நான் நம்புகிறேன். மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுப்பதில்தான் நமது உண்மையான மகிழ்ச்சிவருகிறது.

முடிவுரை

நாம் கதையை அடுத்த பாடத்தில் தொடருவோம், இந்த பாடத்தில் நமக்கு பொருந்தக் கூடிய பல சத்தியங்களை வலியுறுத்தினோம். ஆனால் இவற்றைவிட வேறு எதுவும் மிகவும் முக்கியமானதல்ல: உபசரிக்கவேண்டியவர்களாய் இருப்பதின் அவசியம் மற்றும் நன்றியுள்ளவர்களாய் இருப்பதின் அவசியம். நாம் அதிக நன்றியுடையவர்களாக இருக்கும்படியும் மற்றும் தேவனுக்கும் மற்றவர்களுக்கும் அதிகமாக நன்றி மற்றும் பாராட்டுதலை தெரிவிக்கிறவர்களாக இருக்கும்படியும் நாம் உற்சாகப்படுத்தப்பட்டோம் என நான் நம்புகிறேன்.

இதை நிறைவு செய்கையில், நமது வசனப்பகுதியிலிருந்து ஒரு கடைசி செய்தியை குறிப்பிட விரும்புகிறேன். சூனேமிய பெண் ஒரு மகனுக்கான எலிசாவின் வாக்குத்தத்தத்தை நம்புவதை கடினமானதாகக் கண்டாள். இருப்பினும், தீர்க்கதரிசி என்ன நிகழும் என்று சொன்னாரோ, அது துல்லியமாக அப்படியே நிறைவேறியது. தேவன் நமக்கு அவருடைய வசனத்தில் அற்புதமான வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார்:

- நாம் அவருடைய குமாரனை விசுவாசித்து, திருமுழுக்கு பெற்றால், நம் கடந்தகால பாவங்கள் எல்லாம் கழுவப்படும் (மாற்கு 16:16; நடபடிகள் 22:16).
- நாம் அவரை விசுவாசித்து, கீழ்ப்படிந்தால், அவர் நம்மோடு இருப்பார், நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார் (மத்தேயு 28:19, 20; எபிரெயர் 13:5).
- நாம் நம்மை சார்ந்து கொள்ளாமல், அவருடைய இரக்கங்களை சார்ந்து கொண்டு, உண்மையாய் வாழ்வோமானால் (எபேசியர் 2:4), கண்ணீரும் வேதனையும் இல்லாத இடமாகிய பரலோகத்தில், நாம் நித்தியமாக அவரோடு வாழும்படி, அவர் நம்மை அங்கே அழைத்துச்செல்வார் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 2:10; 21:3, 4).

சிலர் அந்த சூனேமிய பெண்ணைப்போல, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் "நிறைவேற கடினமானவைகள்" என கருதுகின்றனர். நீண்ட காலத்திற்கு முன்பு அந்த இரக்கமுள்ள பெண்ணுக்கு வாக்குத்தத்தங்களை நிறைவேற்றின கர்த்தர், நிச்சயமாகவே நமக்கான அவருடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என நீங்கள் நம்பிக்கை உடையவர்களாக இருக்கலாம். நீங்கள் உங்கள் வாழ்க்கை - மற்றும் உங்கள் நித்தியத்தை - அவரிடம் ஒப்புக்கொடுக்கலாம். நீங்கள் அவருடைய வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக மற்றும் விருப்ப மாக இருக்கிறீர்களா? அப்படியானால் இன்றே அவரண்டை வாருங்கள்!

குறிப்புகள்

[1]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 59. [2]*ஒரு இளம் பெண் ஏன் ஒரு வயதான மனிதருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள்? அநேகமாக, இது பெற்றோரால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமண மாக இருந்தது.* [3]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 203. [4]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 529. [5]Adapted from an article by Karen Maines, quoted in Robert J. Morgan, *Nelson's Complete Book of Stories, Illustrations, & Quotes* (Nashville: Thomas Nelson Publishers, 2000), 452. [6]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 310; G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1&2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 65; James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings,* James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 50. [7]Rawlinson, 65. [8]Quoted in Paul Lee Tan, *Encyclopedia of 7,700 Illustrations: Signs of the Times* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 1461. [9]Ibid. [10]Ibid., 1457.

[11]Ibid., 1456. [12]Quoted in James S. Hewitt, ed., *Illustrations Unlimited* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1988), 264. [13]Ibid., 263. [14]Quoted in Herbert V. Prochnow, *1400 Ideas for Speakers and Toastmasters* (Grand Rapids, Mich.: Baker Books, 1994), 114. [15]Hewitt, 264. [16]Wiseman, 204. [17]Vannoy, 529. [18]Matthew Henry, *Commentary on the Whole Bible,* ed. Leslie F. Church (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1961), 404. [19]*அவளால் எப்படி தாய்மை அடைய முடிந்தது என்பது பற்றிய குறிப்புகள் எதையும் வேதாகமம் கொடுக்கவில்லை. அந்த "வயதான" கணவரின் வாழ்க்கையில் ஒரு அற்புதம் நிகழ்த்தப்பட்டது என்பது எனது யூகம்.*

6

ஜீவனை உயிர்ப்பித்த ஒரு மனிதர்

[2 இராஜாக்கள் 4:18-37; 8:1, 5]

நாம் எலிசா மற்றும் சூனேமியாளைப்பற்றிய கதையின் படிப்பை தொடர்கிறோம். நாம் கடந்த பாடத்தில், எலிசாவை ஒரு ஜீவனை *கொடுக்கிறவராக* பார்த்தோம் - பயனாளி ஒரு ஆண் மகனை தேவனிடமிருந்து பெறுவதற்கு அவர் காரணமாக இருந்தார். இந்த பாடத்தில், நாம் தீர்க்கதரிசியை ஜீவனை *உயிர்ப்பிக்கிறவராகப்* பார்ப்போம். இந்த சம்பவம் பிற்பாடு குறிப்பிடப்படுகையில், இந்த மொழிநடை வார்த்தை பயன்பாடு மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது:

> ... எலிசா தான் *உயிர்ப்பித்த* பிள்ளையின் தாயாகிய ஸ்திரீயை நோக்கி ... (2 இராஜாக்கள் 8:1; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

> "செத்துப்போனவனை உயிர்ப்பித்தார் என்பதை அவன் (கேயாசி) ராஜாவுக்கு அறிவிக்கிறபோது, இதோ, அவர் *உயிர்ப்பித்த* பிள்ளையின் தாயாகிய அந்த ஸ்திரீ வந்து, தன் வீட்டுக்காகவும், தன் வயலுக்காகவும் ராஜாவினிடத்தில் முறையிட்டாள்; அப்பொழுது கேயாசி: ராஜாவாகிய என் ஆண்டவனே, இவள்தான் அந்த ஸ்திரீ; எலிசா *உயிர்ப்பித்த* இவளுடைய குமாரன் இவன்தான்" என்றான் (2 இராஜாக்கள் 8:5; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

உண்மையில், தேவன்தான் உயிர்ப்பித்தார் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். ஆனால் அவர் தம்முடைய உண்மையுள்ள ஊழியக்காரன் எலிசா மூலம் அதை செய்தார். இந்த பாடம் நிறைவடைவதற்கு முன்பாக, சூனேமியாளுக்கு உதவி செய்த அதே தேவனானவர், நமது வாழ்க்கையில் சோகம் வரும்போது நமக்கும் உதவி செய்ய வல்லவர் என்பதை நாம் வலியுறுத்தி கூறுவோம்.

மகிழ்ச்சி மற்றும் மன வேதனை (4:18-20)

மகிழ்ச்சி

கடந்த பாடம் முடிகிறவேளையில், அந்த பெண் ஒரு புதிய குழந்தையை உடையவளாக இருந்தாள். குழந்தை பேசின முதல் வார்த்தைகள் மற்றும் எடுத்து வைத்த முதல் அடிகள் என குழந்தையின் புதிய அனுபவத்தை ரசித்து, அந்த தாய் மகிழ்ந்த நாட்களை நாம் கற்பனை செய்வது கடினமானதல்ல.

இந்த பாடம் துவங்குகையில், பல ஆண்டுகள் கடந்து போயிருந்தன. 2 இராஜாக்கள் 4:18, "அந்த பிள்ளை வளர்ந்தான், ஒரு நாள் அவன் அறுப்பறுக்கிறவர்களிடத்திலிருந்த தன் தகப்பனண்டைக்குப் போயிருந்தான்" என கூறுகிறது. அந்த பையன் அநேகமாக விடலை பருவத்தின் கடைசிக்கட்டத்தில் அல்லது இருபதுகளின் துவக்கத்தில் இருந்தான் என்ற ஒரு அபிப்பிராயத்தை நாம் பெறக்கூடும். இருப்பினும் அவன் தாயின் மடியில் வைத்துக்கொள்ளக் கூடிய மற்றும் மாடிக்கு தூக்கிச் செல்லக்கூடிய அளவுக்கு "சிறியவனாக" இருந்தான் என்பதை பின்னர் கவனிக்கிறோம் (வசனங்கள் 20, 21). அவன், வசனங்கள் 26, 34ல் "பிள்ளை" மற்றும் "சிறுவன்" (வசனங்கள் 29, 31, 33, 35) என அழைக்கப்படுகிறான். அவன் வயலுக்கு தன் தகப்பனிடம் ஓடிச் செல்லுமளவுக்கு - நான்கு முதல் ஆறு வயதுக்கு உட்பட்டவனாக இருந்திருக்கலாம்.

மூன்று கருத்துகள் சொல்லப்படவேண்டியவைகளாக உள்ளன. முதலாவது, அவன் வயலுக்கு தன் தந்தையிடம் செல்ல தாய் அனுமதி கொடுத்ததாக அந்த வசனப்பகுதி சொல்வதில்லை. நான் மூன்று வயதாயிருந்த போது, எனது புத்தகங்களை எடுத்துக் கொண்டு, எனது பெற்றோரின் வீட்டை விட்டு, எனது தந்தை ஆசிரியராக பணியாற்றின சிறு பள்ளிக்கூடத்திற்கு நடந்து சென்றுவிட்டேன். (அப்போதுதான் அவர் முதல் முறையாக பாடம் நடத்தும் பணியை பெற்றிருந்தார். அவர் மிகவும் சங்கடத்திற்கு உள்ளானார்.) நமது கதையில் வரும் இளம் சிறுவன், தன் தந்தை இருக்கும் இடத்தை தெரிந்து கொண்டு, வீட்டை விட்டு தன் தாய்க்கு தெரியாமல் அங்கு சென்றுவிட்டான். இரண்டாவதாக, பையன் தன் தாயின் அனுமதியோடு சென்றிருந்தாலும், ஒரு வேலைக்காரன் துணைக்கு கூடச் சென்றிருப்பான். ஒருவேளை, அவனை தூக்கிக் கொண்டு திரும்பிய (வசனங்கள் 19, 20) வேலைக்காரன் அவனைக் கொண்டுபோயிருக்கக்கூடும். மூன்றாவதாக, வழக்கத்தின்படி, கிராமத்து சிறுவர்கள் சிறு வயதிலேயே விவசாய வேலைகளில் ஈடுபட்டார்கள். அறுவடை தொடர்பான விஷயங்களை தன் மகன் நேரில் பார்த்து அறிந்து கொள்ளவேண்டுமென அவன் தந்தை விரும்பியிருக்கலாம்.

எப்படியிருப்பினும், அறுவடை பணியாளர்களிடத்திலிருந்த தன் தந்தையிடம் அவன் சென்றுவிட்டான் (வசனம் 18). அது அறுவடை காலம், அந்த ஆண்டின் மிக அலுவலான காலம், அங்கு நடந்தவைகளெல்லாம் அந்த சிறுவனுக்கு வியப்பூட்டுவதாக இருந்திருக்க வேண்டும். தானியக் குவியல்கள் நடுவில் அவன் அங்கும் இங்கும் ஓடித்திரிகிற காட்சியை நான் பார்க்கிறேன். தன் முதுமையில் பிறந்த அந்த மகனை பாசத்தோடு அவ்வப்போது அந்த தந்தை கவனித்துக் கொண்டார் என்பதில் சந்தேகம் இல்லை.

மனவேதனை

திடீரென, ஒரு பேரழிவு தாக்கியது. அந்த சிறுவன் தன் தலையை பிடித்துக் கொண்டு, "என் தலை நோகிறது, என் தலை நோகிறது" என கதறியிருக்க வேண்டும் (வசனம் 19அ). அந்த பையனின் வியாதியைப் பற்றி நமக்கு நிச்சயமாக தெரியவில்லை. அறுவடை பணியாளர்களின் கருவிகளால் தலை காயம் ஏற்படவில்லை என கூறலாம் - ஏனெனில் தந்தை வெளியில் தெரியக் கூடிய ஒரு காயத்தை குறித்து கரிசனையுள்ளவராக இருந்திருப்பார். பெரும்பாலான

பழைய விரிவுரை நூல்கள் அவன் சூரிய உஷ்ணத்தால் மயக்கமடைந்தான் என யூகிக்கின்றனர் - அந்த வெயில் பகுதியில் அது சாத்தியமானதாக இருக்கிறது (காண்க சங்கீதம் 121:6; ஏசாயா 49:10). எப்படியிருப்பினும், "எஸ்டராயிலோன் சமவெளிப்பகுதியில் அறுவடை காலத்தில் சிறுவர்கள் சூரிய வெயிலால் மயக்கம் அடைவது அரிதான ஒரு சம்பவமாக இருக்கும்" என டொனால்ட் வைஸ்மேன் என்பவர் கூறுகிறார்.[1] இதற்கு மூளை வீக்கம் அல்லது மூளை கட்டி உள்ளிட்ட வேறு மருத்துவ விளக்கங்களும் இருக்கின்றன.[2] வியாதி எதுவாக இருந்தாலும் அன்பான தாயின் கவனிப்பால் குணமாக்க முடியாததாக அது இருக்கமுடியாது என தந்தை நினைத்தார். அவர் வேலையாட்களை மேற்பார்வை செய்வதற்காக வயலில் இருக்க வேண்டிய அவசியம் இருந்தது, ஆகவே அவர் வேலைக்காரனை நோக்கி, "இவனை இவன் தாயினிடத்தில் எடுத்துக்கொண்டுபோய்விடு" என்றான் (2 இராஜாக்கள் 4:19ஆ).

தன் மகன் வீட்டிற்கு தூக்கி வரப்பட்டது அந்த பெண்ணுக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்கும் (காண்க வசனம் 20அ). அந்த நாளின் காலையில் அவன் விளையாடுவதை அவள் ரசித்து பார்த்திருந்தாள்; அவள் அவனுடைய புன்னகை மற்றும் சிரிப்பின் சத்தத்தை கேட்டிருந்தாள். இப்போது அவன் வேலைக்காரன் கைகளில் முனகிக்கொண்டு படுத்துகிடக்கிறான். அந்த பையனை தன் கைகளில் ஏந்தி, தன் மடியில் கிடத்துகையில் பயம் அவள் இருதயத்தை கவ்வியிருக்க வேண்டும் (காண்க வசனம் 20ஆ). அவன், "அம்மா என் தலை வலிக்கிறது, என் தலை வலிக்கிறது, அதை தயவு செய்து நிறுத்துங்கள்!" என அவன் அழுதபோது அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவள் முன்னும் பின்னுமாக அசைந்து, ஒரு தாயின் ஆறுதலிக்கும் தொனிகளை எழுப்புவதை என் மனதில் நான் பார்க்கிறேன். அவள் ஈரத்துணியால் அவன் நெற்றியை இதமாக துடைத்து, முத்தங்களால் அவன் கன்னத்தை இதமாக்குவதை நான் பார்க்கிறேன்: "இவன் மரிக்க மாட்டான். இவன் நிச்சயம் மரிக்கமாட்டான்! தேவன் எனக்கு இவனை கொடுத்தார்; நிச்சயமாக இவன் என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படமாட்டான்!"[3] என கூறும் அவள் எண்ணச் சிதறல்களை நான் கற்பனை செய்கிறேன்: "தேவனே என் மகனை மரிக்க அனுமதியாதேயும்! என் மகனை மரிக்க விடவேண்டாம்!" என பரத்தை நோக்கி எவ்வளவாய் அடிக்கடி அவள் ஜெபித்திருப்பாள்.

அவளுடைய அன்பு, அவளுடைய சிறந்த முயற்சிகள் மற்றும் அவனை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கான அவளுடைய உள்ளம் உருகிய ஜெபங்கள் ஆகியவை இருந்தபோதிலும், அவன் மிகவும் பெலவீனமான வனாக மாறிவிட்டான். அவனுடைய அழுகுரல் மெல்லியதாக, மெல்லியதாக மாறி, இறுதியில் அது நின்று போய்விட்டது. அவன் இறுதியாக ஒரு பெருமூச்சு விட்டான் மற்றும் அவன் சிறிய உடல் சில்லிட்டுபோய்விட்டது. நம்முடைய வசனப்பகுதி சுருக்கமாக, "அவன் மத்தியானமட்டும் அவள் மடியில் இருந்து செத்துப்போனான்," என கூறுகிறது (வசனம் 20ஆ, இ). வேதாகம அற்புதங்களை விசுவாசியாதவர்கள் அந்த பையன் சுயநினைவு இழந்திருந்தான் என கூறுகிறார்கள், ஆனால் "[ஆவியானவரால் ஏவப்பட்ட] வரலாற்று ஆசிரியர் இதை விட அதிக தெளிவாக கூறியிருக்க முடியாது":[4] அவன் "செத்துக்கிடந்தான்" (வசனம் 32ஐயும் காண்க).

குழந்தைகள் - களங்கமற்ற குழந்தைகள் - மரிக்கக்கூடுமா? நாம் ஒவ்வொரு

நாளும் இதை பார்க்கிறோம். அவர்கள் ஏன் மரிக்கிறார்கள்? ஏனெனில் நாம் பாவத்தால் பாதிக்கப்பட்ட உலகில் வாழ்கிறோம். நீண்ட காலத்திற்கு முன்பு, ஆதாம் மற்றும் ஏவாளிடம், அவர்கள் விலக்கப்பட்ட கனியை புசித்தால், "சாகவே சாவார்கள்" என சொல்லப்பட்டது (ஆதியாகமம் 2:17). அவர்களுடைய கீழ்ப்படியாமையை தொடர்ந்து, "மரணம் எல்லாருக்கும் வந்தது ..." (ரோமர் 5:12); இது உலகம் தழுவிய ஒரு நிலையாக மாறிவிட்டது. "ஒரே தரம் மரிப்பது மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபிரெயர் 9:27). சிலர் முதிர் வயதில், சிலர் நடுவயதில் மற்றும் ஆம், சிலர் குழந்தை பருவத்திலும் மரிக்கிறார்கள். இப்படிப்பட்ட சோகங்கள், "... இனி மரணமும் இல்லை" என்ற பரலோக வீட்டிற்கான நம்முடைய வாஞ்சையை அதிகம் தூண்டுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 21:4), அங்கே நாம் நமது கரங்களில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட அருமையான சிறியவர்களோடு மீண்டும் இணைக்கப்படுவோம் (காண்க 2 சாமுவேல் 12:23).

ஒரு திட்டம் மற்றும் ஒரு வேண்டுகோள்? (4:21-31)

ஒரு திட்டம்?

தன் மகன் மரித்துவிட்டான் என்பதை சூனேமியப் பெண் உணர்ந்து கொண்டபோது எப்படி நடந்து கொண்டாள்? அவள் கண்ணீரில் நிலை குலைந்துவிடுவாள் என நாம் எதிர்பார்த்திருப்போம். அவள் தன்னோடு அழும்படி தன் நண்பர்களை அழைப்பாள் என எதிர்பார்த்திருப்போம். அவள் அந்த சிறுவனின் உடலை அடக்கத்திற்கு ஆயத்தமாக்கும்படி வேலைக்காரருக்கு அறிவுரை வழங்கியிருப்பாள் என எதிர்பார்த்திருப்போம். அவள் அதற்குப் பதிலாக விந்தையான ஒன்றை செய்தாள்: "அப்பொழுது அவள் ஏறிப்போய், அவனை தேவனுடைய மனுஷன் கட்டிலின்மேல் வைத்து, அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக்கொண்டுபோய்" (2 இராஜாக்கள் 4:21). அவள் துல்லியமாக எதற்காக அப்படிச் செய்தாள் என்பதை நான் அறிய விரும்புவேன்; அந்த தருணத்தில் அவள் நினைவுகள் என்னவாய் இருந்தன என்பதை துல் லியமாக அறிய விரும்புவேன். கீழ்வரும் கருத்துரைகள் அந்த சூழ்நிலையை விளக்கப்படுத்தலாம் அல்லது விளக்கப்படுத்தாமலும் போகலாம்:

(1) தீர்க்கதரிசியின் அறை அவளுடைய வீட்டிலிருந்த அறைகளில் யாரும் பிரவேசிக்கவியலாத அறையாக இருந்தது. அந்த பெண் பல மணி நேரங்கள் அங்கு இல்லாமல் இருக்கப்போகிறாள். எலிசாவின் அறையில் தன் மகனின் சரீரத்தை வைத்திருந்தால், அவள் வெளியில் சென்றிருக்கும்போது ஒருவரும் அதைத் தொந்தரவு செய்யமாட்டார்கள் என்பதில் அவள் நிச்சயமாயிருக்க முடியும். யூதர்கள் தங்களுடைய நடைமுறைப்படி மரித்தோரை அவர்கள் மரித்த அதே நாளில் அடக்கம் செய்தார்கள். அதற்கான ஆயத்தங்கள் செய்யப்படாமல் இருப்பதை அவன் தாய் விரும்பியிருக்கலாம்.

(2) தீர்க்கதரிசியின் அறை அந்த வீட்டின் மற்ற அறைகளைவிட பிரத்தி யேகமானவைகளில் ஒரு அறையாக இருந்தது என நாம் ஆலோசித்திருந்தோம் - ஆனால் அந்த பெண்ணின் படுக்கை அறை போன்ற பிரத்தியேகமான அறைகளும் இருந்திருக்கலாம். அந்த பெண் தன் மகனை தீர்க்கதரிசியின் *அறையில் வைத்து விட்டு, அவரை சந்திக்க சென்றது, அவள் எலிசா ஏதாவது*

ஒரு வகையில் இதில் இடைபடவேண்டுமென அவள் எதிர்பார்த்தாள் என்பதை சுட்டிக் காண்பிக்கிறது.

நாம் நமது பாடத்தை படிக்கையில் இந்த கருத்துக்களை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். அவள் தீர்க்கதரிசியின் அறையில் தனது மகனை வைத்த பிறகு, "தன் புருஷனிடத்தில் ஆள் அனுப்பினாள்" (வசனம் 22அ). அவள் தன் புருஷன் இருந்த வயலுக்கு சென்று, "நான் சீக்கிரமாய் தேவனுடைய மனுஷன் இருக்கும் இடமட்டும் போய்வரும்படிக்கு; வேலைக்காரரில் ஒருவனையும் ஒரு கழுதையையும் எனக்கு அனுப்ப வேண்டும்" என்றாள் (வசனம் 22ஆ). அவள் எலிசாவை, "தேவனுடைய மனுஷன்" என குறிப்பிட்டாள் (வசனம் 9).

அவள் ஏன் எலிசாவிடம் செல்ல விரும்பினாள் என வசனம் எதுவும் கூறுவதில்லை. அவள் தீர்க்கதரிசி இருந்த இடத்தை வந்து அடைந்தபிற்பாடு, தனது துக்கத்தை வெளிப்படுத்தினாள் (வசனம் 28), ஆனால் அவள் தன் மகனின் உடலை கைவிட்டுவிட்டு புகார் சொல்வதற்காக அந்த நீண்ட பிரயாணத்தை மேற்கொள்ளவில்லை. அவள் தன்னால் முடிந்த அளவு வேகமாக அந்த பிரயாணத்தை மேற்கொண்டது (வசனம் 24) மற்றும் எலிசா தன்னோடு அங்கு வரும்படி வேண்டிக்கொண்டது (வசனம் 30) தீர்க்கதரிசி தன் மகனின் உடல் அருகில் எவ்வளவு சீக்கிரமாய் வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் வந்து இருக்கும்படி அவள் விரும்பினாள் என்பதை காண்பிக்கிறது.

எலிசா தன் உணவு வேளைகளில் தன் எஜமானாகிய எலியாவைப் பற்றின கதைகளை கூறியிருப்பார் என முந்திய பாடத்தில் குறிப்பிட்டிருந்தோம். அப்படியானால், அந்த பிரமிப்பான சம்பவங்களில் எலியா சாரிபாத் ஊர் விதவையின் மகனை உயிர்ப்பித்த அந்த பிரமிப்பான சம்பவத்தையும் கூறியிருப்பார் (1 இராஜாக்கள் 17:17-24). வேதாகமத்தின் பதிவுகளை பொருத்தவரை, வேறு எவரும் இதற்கு முன் மரித்தோரை உயிர்ப்பித்த தில்லை, அதன்பின் உயிர்ப்பித்ததுமில்லை. சூனேமியாள் அந்த கதையை கேள்விப்பட்டிருந்தால், எலியாவின் மற்ற அற்புதங்களை எலிசா செய்ததுபோல, இதையும் அவர் செய்வார் என்ற நம்பிக்கை உடையவளாக இருந்தாள் (2 இராஜாக்கள் 2:14ஐ 2 இராஜாக்கள் 2:8 உடன் ஒப்பிடுக; 2 இராஜாக்கள் 4:1-7ஐ 1 இராஜாக்கள் 17:8-16உடன் ஒப்பிடுக). வைஸ்மேன் என்பவர், "அந்த பெண் தன் மகனை இழந்திருந்தாள் ஆனால் தன் விசுவாசத்தை இழக்கவில்லை"[5] என நம்பிக்கையோடு கூறுகிறார்.

அந்த பெண்ணின் நோக்கம் எதுவாக இருந்தபோதும், அவள் தீர்க்கதரிசியினிடத்தில் சென்று வருவதற்கு ஒரு வேலைக்காரர் மற்றும் ஒரு கழுதையை தன் புருஷனிடத்தில் கேட்டாள் (வசனம் 22ஆ). தீர்க்கதரிசி இருந்த இடத்திற்கு தன் மனைவி செல்ல விரும்பியதைப் பற்றி அவர் ஆச்சரியப்படவில்லை. அந்த நேரத்தைப் பற்றிதான் அவன் ஆச்சரியப்பட்டான். அப்பொழுது அவன், "இது அமாவாசியும் அல்ல ஓய்வுநாளும் அல்லவே; நீ இன்றைக்கு அவரிடத்துக்குப் போக வேண்டியது என்ன" என்று கேட்கச் சொன்னான் (வசனம் 23அ). ஓய்வுநாளும் அமாவாசியும் யூதருக்கு சமய நடவடிக்கைகளுக்கு உரிய நாட்களாக இருந்தன (காண்க யாத்திராகமம் 20:8-11; எண்ணாகமம் 29:6; நெகேமியா 10:32; சங்கீதம் 81:3). விக்கிரக ஆராதனை நிறைந்த அந்த பிராந்தியத்தின் விசுவாசமுள்ள மக்கள், அந்த நாட்களில் எலிசாவிடம் கூடிவந்தார்கள் என சொல்லப்பட்டது. எப்படியிருப்பினும், அந்த

சிறப்புநாட்களில் ஒன்றாக இல்லாத இந்த நாளில் தன் மனைவி தீர்க்கதரிசியிடம் செல்ல விரும்பியதுதான் அந்த கணவருக்கு சற்று குழப்பமாக இருந்தது.

அந்த பெண் இந்த கேள்விக்கு பதில் அளிக்கவில்லை. அதற்கு அவள், "எல்லாம் சரிதான்" என்றாள் (2 இராஜாக்கள் 4:23ஆ). "எல்லாம் சரிதான்" என்ற அவளுடைய வார்த்தை, தன் மகன் உயிர்ப்பிக்கப்படுவான் என்பதில் அவளுக்கு சந்தேகம் இருக்கவில்லை என்பதற்கு ஆதாரமாயிருக்கிறது என சிலர் கருதுகின்றனர். ஆனால் அவள் எலிசாவிடம் பேசிய முதல் வார்த்தை அப்படிப்பட்ட நம்பிக்கையை பிரதிபலிக்கவில்லை (வசனம் 28). தன் மகன் தேவனோடு இருந்தபடியால், எல்லாம் சரியாயிருக்கிறது என்ற பொருளில் அவள் பேசினாள் என மற்றவர்கள் நம்புகிறார்கள். ஒரு சிறிய குழந்தை மரிக்கும் போது, அவன் ஆத்துமா கர்த்தரோடிருக்கும்படி போகிறது என்பது உண்மைதான் (2 சாமுவேல் 12:23) - மற்றும் துயருறும் எந்த பெற்றோர்க்கும் இது மிக பெரிய ஆறுதலாக இருக்கிறது. எப்படியிருப்பினும் சூனேமியாள் எலிசாவிடம் பேசின மற்ற வார்த்தைகள் (2 இராஜாக்கள் 4:28) இது அவள் மனதிலிருந்தது என அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில்லை.

எபிரேய மொழியில், அந்த பெண் தன் புருஷனுக்கு ஒரு வார்த்தையில் பதிலளித்தாள்: ஷாலோம்.[6] ஷாலோம் என்பது அடிப்படையில் "சமாதானம்" என பொருள்படுகிறது.[7] "இது சில சமயங்களில், ஒருவருக்கு நிச்சயமான பதில் அளிப்பதை தவிர்ப்பதற்கு, அதே சமயத்தில், அவருக்கு திருப்திகரமான ஒரு பதிலை கொடுப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது."[8] நான் வாழும் பகுதி யில், இதே விதத்தில் சில முழுமையான பொருள் தராத வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவைகளில் சில, "அதை பொருட்படுத்தாதே" அல்லது "அதை பற்றி கவலைப்படாதே." ஆஸ்திரேலியர்கள், "அவள் சரியாகி விடுவாள், துணைவா!" ("அது சரியாகிவிடும்; நண்பா" என பொருள்படும்) என்ற சொற்றொடரை பயன்படுத்துகிறார்கள். உலகம் முழுவதிலும் மக்கள் இப்படிப்பட்ட வார்த்தை உபயோகங்களை கொண்டிருக்கிறார்கள்.

கணவர் மேலாதிகமாக ஏன் இது பற்றி விசாரிக்கவில்லை என சிலர் வியப்படைகிறார்கள். அவசரமான அறுவடை பணியால் அவருடைய கவனம் சிதறிப்போயிருக்கலாம். மேலும் அவர் தன் மகனைப் பற்றி எதுவும் கேட்க வில்லை என ஆச்சரியப்படுகிறார்கள். தன் மகனுக்கு எதுவும் பிரச்சனை இருந்தால், அவள் வீட்டைவிட்டு போகமாட்டாள் என அவன் அநேகமாக யூகித்திருப்பான்.[9] அவளுடைய வார்த்தைகளில் திருப்தியடைந்த அவன், அவள் வேண்டுகோளுக்கு சம்மதித்தான். வேலைக்காரன் மற்றும் கழுதையின் சேவை அறுவடை பணிக்கு தேவையாயிருந்தது ஆனால் ஒரு அரை நாளளவும் அவைகள் இல்லாமல் அவனால் சமாளிக்கக்கூடும்.

கழுதையின் மேல் சேணம் வைத்து ஏறி, தன் வேலைக்காரனை நோக்கி: "இதை ஓட்டிக்கொண்டுபோ; நான் உனக்குச் சொன்னால் ஒழிய போகிற வழியில் எங்கும் ஓட்டத்தை நிறுத்தாதே" என்றாள் (வசனம் 24). "ஓட்டு" என்பதின் பொருள். "இந்த கழுதையை எவ்வளவு வேகமாய் முடியுமோ; அவ்வளவு வேகமாய் ஓட்டிக்கொண்டுபோ என்பதாகும்." அவள் போக வேண்டிய இடம் கர்மேல் பர்வதமாகும் (வசனம் 25அ). அவளுக்கு முன்பாக ஒரு பதினைந்து முதல் இருபது மைல் தொலைவு பயணம் இருந்தது. எவ்வளவு சீக்கிரமாய் தீர்க்கதரிசியினிடம் செல்ல முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் செல்ல

விரும்பினாள். எலிசா கர்மேல் பர்வதத்தில் இருந்தார் என்பது அவளுக்கு எப்படி தெரிந்தது என நமக்கு தெரியவில்லை. ஒருவேளை, அவர் கடந்த முறை இந்த பரிச்சயமான ஓய்வு எடுக்கும் இடத்திற்கு வரும்வழியில் அவளுடைய வீட்டில் தங்கி சென்றிருக்கலாம்.

பல மணி நேர பயணத்திற்கு பிறகு, அவள் கர்மேல் பர்வதத்தை அடைந்தாள் (வசனம் 25அ). எலிசா தொலைவிலிருந்து அவளை பார்த்தான் (வசனம் 25ஆ). ஏதோ பிரச்சனை நடந்திருக்கிறது என்பதை எலிசாவால் உணர முடிந்தது. அவளுடைய விலங்கு ஓட்டிக்கொண்டு வரப்பட்டவிதம், அவ்வளவு வசதி யானவள் அதில் ஏறிவந்த விதம் ஏதோ பிரச்சனை என்பதை உணர்த்தியது. நாம் ஒருவரை கலக்கமுற்றவராக காணும்போது, அவருக்கு அல்லது அவளுக்கு ஏதோ துயரம் நிகழ்ந்திருக்கிறது என்பது தான் நம் மனதில் வரக்கூடிய முதல் எண்ண மாக இருக்கிறது. இப்படித்தான் எலிசா யூகித்தான். தன் வேலைக்காரனாகிய கேயாசியை பார்த்து: "அதோ சூனேமியாள் வருகிறாள், நீ அவளுக்கு எதிர் கொண்டு ஓடி, நீ சுகமாயிருக்கிறாயா? உன் புருஷன் சுகமாயிருக்கிறானா? அந்த பிள்ளை சுகமாயிருக்கிறதா? என்று அவளிடத்தில் கேள் என்றான்" (வசனங்கள் 25இ, 26அ).

கேயாசி ஓடிப்போய் அவளை சந்தித்து, எலிசா தன்னிடம் கேட்கும்படி கூறிய கேள்விகளை கேட்டபோது, அவள் "சுகந்தான்," என்றாள் (வசனம் 26ஆ). மறுபடியுமாக, மூல வசனத்தில் அவள், "ஷாலோம்,"[10] என்றாள். மறுபடியுமாக அவள் பதில் தெளிவற்றதாகவே இருந்தது. உலகில் நான் வாழும் பகுதியில், ஒருவர் மற்றொருவரிடம் அவர் எப்படி இருக்கிறார் என வினவினால், "பரவா யில்லை" என்பதே ஒரு பொதுவான பதிலாக இருக்கும். இது "நான் சுமாராக இருக்கிறேன்" என்பதிலிருந்து, "நான் அவ்வளவு சுமாராக சரியாக இல்லை, ஆனால் நான் அதைப் பற்றி பேச விரும்பவில்லை" என்பது வரை எந்த அர்த்தத்தை வேண்டுமானாலும் கொடுக்கும். கடைசியாக சொல்லப்பட்டிருப்பது அந்த பெண்ணின் தற்போதைய உணர்வுகளை பிரதிபலிப்பதாக இருக்கும். அவள் தன் போராட்டங்களை தீர்க்கதரிசியை தவிர பிறரிடம் கூற விரும்பவில்லை.

ஒரு வேண்டுகோள்?

அவள் மலை அடிவாரம் வந்து சேர்ந்த போது, எலிசா இருந்த இடம் மட்டும் ஏறிச்சென்றாள். துக்கத்தால் மேற்கொள்ளப்பட்டவளாய், அவள் அவருக்கு முன்பாக நிலைகுலைந்து, "அவள் காலைப் பிடித்துக்கொண்டாள்" (வசனம் 27அ). பாதத்தில் விழுவது என்பது ஒருவருடைய தாழ்மை மற்றும் சார்ந்திருத்தலை குறிக்கிறது (காண்க லூக்கா 5:8; மாற்கு 5:22; 7:25). பாதங்களை தழுவுதல் என்பது நெருக்கமான ஒரு செயலை காண்பிக்கிறது (காண்க மத்தேயு 28:9).

கேயாசி பெண்ணின் இந்த செயல் அவ்வளவு கவுரமானதாக இருக்கவில்லை என நினைத்தான். அப்பொழுது கேயாசி, "அவளை விலக்கிவிடவந்தான்" (வசனம் 27ஆ; ஒப்பிடுக மத்தேயு 19:13). தேவனுடைய மனுஷன், "அவளைத் தடுக்காதே; அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது; கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்து வைத்தார் என்றான்" (2 இராஜாக்கள் 4:27ஆ). ஏதோ ஒரு துயரமான சம்பவம் அவளுக்கு நேரிட்டிருந்தது, ஆனால் அது என்ன என்பது எலிசாவுக்கு தெரிந்திருக்கவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. ஆவியினால்

ஏவப்பட்டு பேசினவர்கள் கூட, ஒரு நாளில் இருபத்தி நான்கு மணிநேரமும் இயற்கைக்கு மேம்பட்ட விதத்தில் நடத்தப்படவில்லை.

இறுதியில் அந்த பெண் பேசியபோது, அவள் தன் துக்கத்தை வெளிப்படுத்தினாள். அவள் தன் மனவேதனையை ஊற்றிவிட்டாள். அப்பொழுது அவள், "நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரனை வேண்டும் என்று கேட்டதுண்டா?" "எனக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்று நான் சொல்ல வில்லையா" என்றாள் (வசனம் 28; காண்க வசனம் 16). அவளுடைய அருமை யான குமாரன் கேட்கப்படவுமில்லை மற்றும் எதிர்பார்க்கப்படவுமில்லை; இப்போது அவன் மறைந்துபோய்விட்டான்! கர்த்தர் தமது "கிருபையின் சிறப்பு செயல்விளக்கமாக மற்றும் அவருடைய வார்த்தையின் நம்பகத் தன்மையின் அடையாளமாக அவர் தந்தவனை அவர் எப்படி எடுத்துக்கொள்ளக்கூடும் என்ற கேள்வியால் அவள் வாதிக்கப்பட்டாள்."[11] உண்மைபொருளில் "நான் இதை புரிந்து கொள்ளவில்லை! இது எனக்கு ஏன் சம்பவிக்கிறது?" என கேட்டாள். எலிசா இந்த பெண்ணின் வார்த்தையால் எளிதில் இடறலடைந் திருக்கலாம். ஆனால் அவர் அவ்விதம் இடறலடையவில்லை, துக்கத்தால் மேற்கொள்ளப்படுகிறவர்கள் அதின் எல்லைக்கே போய் உணர்ச்சிவசப்பட்டு பொருத்தமற்றவைகளை பேசக்கூடியவர்களாயிருக்கிறார்கள் (காண்க 1 இராஜாக்கள் 17:18), அதை அவர் புரிந்து கொண்டார்.

அவளுடைய வார்த்தைகளில் இருந்து ஏதோ ஒரு பயங்கரமான காரியம் அவள் மகனுக்கு நேரிட்டிருந்தது என்பது தெரிகிறது, ஆனால் என்ன சம்பவத் திருந்தது என்பது தான் தெரியவில்லை. அந்த மகன் மரித்துவிட்டான் என்பதை எலிசா புரிந்திருந்தாரா அல்லது அவனுக்கு ஏதோ ஒரு வியாதி அல்லது காயம் ஏற்பட்டிருந்தது என அவர் சிந்தித்திருக்கக் கூடுமா? பதிவு செய்யப்படாத கூடுதல் தகவல்களை அந்த பெண் சேர்ந்திருந்தாளா?[12] கர்த்தர் தீர்க்கதரிசிக்கு கூடுதல் புரிந்து கொள்ளுதலை கொடுத்தாரா? இந்தக் கேள்விக்கு நாம் உறுதி யாக பதில் கூற இயலாது.

அந்த பையனுடைய விஷயத்தில் என்ன தவறு நடந்திருந்தாலும், *ஏதோ ஒன்று* - அவசரமாக செய்யப்படவேண்டி இருந்தது. அப்பொழுது அவன் கேயாசியை பார்த்து: "நீ உன் இடையை கட்டிக்கொண்டு ... , உன் வழியே போ" (2 இராஜாக்கள் 4:29அ). "இடையை கட்டிக் கொள்" என்பது "நீ உன் கால்களை எடுத்து வைத்து, வேகமாய் ஓடுவதற்காக உன் கயிற்றை உன் இடுப்புப்பட்டையோடு பொருத்திவிடு" என பொருள்படும். [NIV மொழிபெயர்ப்பை காணவும்], (ஒப்பிடுக 1 இராஜாக்கள் 18:46). மேலும் எலிசா, "வழியில் ஒருவனைச் சந்தித்தாலும் அவனை வினவாமலும், உன்னை ஒருவன் வினவினாலும் அவனுக்கு மறுமொழி சொல்லாமலும் போய்" (2 இராஜாக்கள் 4:29ஆ; ஒப்பிடுக லூக்கா 10:4). நலம் விசாரிக்கும் சம்பிரதாயங்கள் அதிக நேரத்தை எடுத்துக் கொள்பவைகளாகும். தீர்க்கதரிசி தன் வேலைக்காரனிடம் எவ்வளவு விரைவாக செல்லமுடியமோ அவ்வளவு விரைவாக அந்த பெண்ணின் வீட்டிற்கு செல்லும்படியும் மற்றும் *எதுவும்* அவனை தாமதப்படுத்த அனுமதிக்க வேண்டாம் எனவும் கூறியிருந்தான்.

எலிசா கேயாசியிடம் தன் தடியை கொடுத்திருந்தான் (வசனம் 29அ). மேலும் அவர் அந்த தாயின் வீட்டை சேரும்போது, அவன் "தன் தடியை பிள்ளையின் முகத்தின் மேல் வை" என கூறியிருந்தான் (வசனம் 29இ). எலியாவின் சால்வை

அவனுடைய அதிகாரத்தின் அடையாளமாயிருந்தது: அநேகமாக எலிசாவுக்கு அவன் ஊன்றுகோல் அடையாளமாயிருந்தது (ஒப்பிடுக யாத்திராகமம் 4:1-4; 14:16; 17:5, 6, 8-13). எலிசா ஏன் கேயாசிக்கு இந்த அறிவுரைகளை வழங்கினார்? எலிசா மற்றும் அந்த பெண் ஆகியோருக்கு ஒரு பாடத்தை போதிப்பது மற்றும் இப்படிப்பட்ட காரியங்கள் *பலனளிக்காது* என்பதை காட்டுவதுதான் இதன் நோக்கமாக இருந்தது என்று சிலர் நம்புகிறார்கள்.[13] எப்படியிருப்பினும், ஆவியானவரால் ஏவப்பட்ட பதிவு அந்த பெண் கூறிய எல்லாவற்றையும் கொடுத்துள்ளது எனவும் கர்த்தர் அந்த பிரச்சனையின் உண்மையான விபரத்தை எலிசாவுக்கு "மறைந்திருந்தார்" எனவும் நாம் யூகிக்கிறோம் (2 இராஜாக்கள் 4:27), அந்த தடியின் பிரசன்னம்/பயன்பாடு பிரச்சனை எதுவாயிருப்பினும் - அந்த பிள்ளைக்கு உதவ*முடியும்* என எலிசா நினைத்தார்.[14] அது உண்மையெனில், அவன் கேயாசியை தடியுடன் தனக்கு முன் அனுப்பினார், ஏனெனில் வேலைக்காரன் இளைஞனும் வேகமாக செல்லக்கூடியவனுமாய் இருந்தான்.

அந்த தாய் எலிசாவின் வார்த்தைகளிலிருந்து அவர் தாமே தன் வீட்டுக்கு வருவதில்லை என்பதை உணர்த்தினார் என நினைத்தாள். அந்த பெண், "நான் உம்மை விடுகிறது இல்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்கிறேன்" என்று கூறியபோது அவள் கண்களில் ஒளி பிரகாசித்ததா (வசனம் 30அ; ஒப்பிடுக 2 இராஜாக்கள் 2:2, 4, 6)? வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "நீங்கள் வராமல் நான் போகமாட்டேன்!" என கூறினாள். தீர்க்கதரிசி சூனேமுக்கு போக எண்ணியிருந்தாரோ அல்லது இல்லையோ, "அப்பொழுது அவன் எழுந்திருந்து அவள் பின்னே போனான்" (வசனம் 30ஆ). மறுபடியும் அந்த பெண் தன் வேலைக்காரனையும் தன் கழுதையையும் மற்ற விலங்கோடு துரிதப்படுத்துவதை பார்க்கிறோம்: தீர்க்கதரிசியானவர் அவர்கள் வேகத்திற்கு ஈடு கொடுத்து பின்னே செல்ல முயற்சிக்கிறார்.

அந்த நேரத்தில் கேயாசி அந்த பெண்ணின் வீட்டை அடைந்து, தீர்க்கதரிசியின் அறையை நோக்கி படிகளில் ஓடி, "அந்த தடியை பிள்ளையின் முகத்தின்மேல் வைத்தான்" (வசனம் 31அ). இந்த பொறுப்பு தனக்கு கொடுக்கப்பட்ட அவனுக்கு ஒரு மெய்சிலிர்க்கும் அனுபவமாக இருந்தது. "ஆனாலும் எந்த சத்தமும் இல்லை, எந்த உணர்ச்சியும் இல்லை" என்ற நிலை அவனுக்கு எவ்வளவு ஏமாற்றமாக இருந்திருக்கும் (வசனம் 31ஆ). "உயிரோடிருப்பதற்கான எந்த அடையாளமுமில்லை" என NEB கூறுகிறது. அவன் படிகளில் வேகமாய் இறங்கி அந்த பெண்ணையும் எலிசாவையும் சந்தித்தான். அவன் தன் தலையை அசைத்துக் கொண்டு தன் எஜமானை நோக்கி, "பிள்ளை விழிக்கவில்லை" என அவன் அறிவித்ததை நான் பார்க்கிறேன் (வசனம் 31இ). ஒருவேளை அந்த பெண் தனக்குள் தானே, "இந்த தடியின் நிவாரணம் பயன்படாது! அதினால் தான் நான் எலிசா தானே வரவேண்டுமென வற்புறுத்தினேன்!" என சிந்தித்தாள்.

சோதனை மற்றும் வெற்றி (4:32-37)

சோதனை

அந்த பெண் மற்றும் அந்த மனிதர் ஆகியோர் பயணத்தை தொடர்ந்தனர். இறுதியாக, வீட்டை வந்தடைந்தனர். பையன் நண்பகலில் மரித்துவிட்டான்

(வசனம் 20), - அதன் பின் தாய் கர்மேலுக்கு பயணித்தார் - ஆகவே இப்போது அது பிந்தின மாலைவேளையாக இருந்திருக்கும். சாதாரணமாக, எலிசா இப்படிப்பட்ட ஒரு பயணத்தின் பிறகு தன் அறைக்கு ஓய்வு எடுக்க சென்றுவிடுவார். இம்முறை அவருக்கு ஓய்வெடுக்க நேரமில்லை. எலிசா வீட்டிற்குள் வந்தபோது, "இதோ, அந்த பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக்கிடந்தான்" (வசனம் 32). இந்த பிரச்சனையின் ஆழத்தை எலிசா புரிந்து கொண்டது இப்போது தான் முதல் முறையாக இருந்திருக்கும். அந்த பிள்ளை எந்த பாவமும் அறியாமல் தூங்குவதுபோல் கட்டிலில் செத்துக்கிடந்த காட்சி அவன் உள்ளத்தை உடைத்திருக்க வேண்டும்.

எலிசா உள்ளே போய் கதவை பூட்டினான் (வசனம் 33அ; ஒப்பிடுக வசனம் 4அ), அந்த தாய் மற்றும் கேயாசி ஆகியோரை வெளியே விட்டுவிட்டான் (ஒப்பிடுக 1 இராஜாக்கள் 17:19, 23). அவன் சிறுவனோடு தனியாக இருந்தபோது, அவன் "கர்த்தரை நோக்கி வேண்டுதல்" செய்தான் (2 இராஜாக்கள் 4:33ஆ). அவன் தாய் தன்னை கர்மேலில் சந்தித்ததிலிருந்து அவன் ஜெபித்துக் கொண்டுதான் இருந்தான். இப்போது அவன் அந்த சூழ்நிலையை நேரில் பார்த்தபின்னர், அவன் ஜெபங்கள் அதிக ஊக்கமானவைகளும் அதிக கவனமானவைகளுமாக இருந்திருக்கும்.

அவன் "கிட்டப்போய், தன்வாய் பிள்ளையின் வாயின் மேலும், தன் கண்கள் அவன் கண்கள் மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின் மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப்படுத்துக் கொண்டான்; அப்பொழுது பிள்ளையின் உடல் அனல் கொண்டது" (வசனம் 34). எலிசா ஏன் இந்த விநோதமான காரியத்தை செய்தார்? அநேகமாக, அவருடைய எஜமான் இவ்விதம் தான் மரித்துப்போன ஒரு பையனை உயிர்ப்பித்திருந்தார் (காண்க 1 இராஜாக்கள் 17:21, 22). எலியாவைப் பற்றிய ஒரு பாடத்தில், தீர்க்கதரிசி சாரிபாத் ஊர் விதவையின் மகனை உயிர்ப்பித்தது தொடர்பாக பின்வருமாறு எழுதியிருந்தேன்:

> *இதற்கு முன் ஒருபோதும் இது நிகழவில்லை என்பதை நினைவில் வையுங்கள் ... எலியாவின் நாள்வரை பல்லாயிரக்கணக்கான மக்கள் அடக்கம் செய்யப்பட்டு வந்திருக்கிறார்கள்; ஒருவர் கூட உயிரடைந்து வந்தது இல்லை ... எலியா சாத்தியமில்லாததை செய்ய முயற்சி செய்து கொண்டிருந்தார் ... இதற்கு முன் இப்படி செய்யப்பட்டது என எந்த ஒரு முன் உதாரணமும் இருக்கவில்லை கடைப்பிடிப்பதற்கு எந்த கையேடும் இருக்கவில்லை. ...*
>
> *மரித்தோரை உயிரோடெழுப்புவது எப்படி என்பதாக ஒரு கையேடு எலியாவுக்கு இல்லாமல் இருந்ததால், அவர் என்ன செய்தாரோ அது "உன்னால் என்ன முடியுமோ அதை செய்" என்ற தலைப்பின் கீழ்வந்தது. அநேகமாக, தன் சரீர சூட்டை பயன்படுத்துவது அவருக்கு நியாயமாக, கண்டது, ஆகவே அவர் அப்படிசெய்தார். மேலும், அந்த பையன் உயிரோடு எழுந்த பின், அதில் அவர் திருப்தியடைந்தார் என நினைக்கிறேன். அதினால் அவர் அதை எலிசாவிடம் தெரிவித்தார், மேலும் எலிசா பிற்பாடு அதே காரியத்தை செய்தார் (2 இராஜாக்கள் 4). இது அவ்விதம் செய்யப்பட வேண்டியதாயிருந்ததா? அநேகமாக இல்லை. ...[15]*

நமது கதை தொடர்கையில், எலிசா தேவனிடம் ஜெபித்துக் கொண்டிருந்தார் என்பதை மறந்து விடாதீர்கள் (2 இராஜாக்கள் 4:33). சால்வையினால் தண்ணீரை அடிக்க, அது பிரிந்ததற்கும் (2:14) அல்லது உப்பை கொட்டியதற்கும், கெட்டுப்போன தண்ணீர் தூய்மை அடைந்ததற்கும் என்ன சம்மந்தமோ (2:21) அதே சம்பந்தம் தான் எலிசா சிறுவன் குப்புறப்படுத்துக் கொண்டதற்கும் அவன் உயிரடைந்ததற்கும் இருக்கிறது. வல்லமை என்பது ஒரு சடங்கில் அல்ல ஆனால் அது ஒரு உறவில் இருக்கிறது: தேவனோடு எலிசாவுக்கு இருந்த உறவு. வல்லமை அவனுடைய தேவனிடத்திலிருந்து வந்தது.

வெற்றி

எலிசா சிறுவன் மேல் குப்புறப்படுத்தபின்பு, சிறுவனுடைய உடல் "அனல் கொண்டது" (4:34), ஆனாலும் உயிரடைந்ததற்கான எந்தவித அறிகுறியும் இருக்க வில்லை. தீர்க்கதரிசி படுக்கையிலிருந்து எழுந்து இங்கும் அங்கும் உலாவினார் (வசனம் 35அ), அநேகமாக அடுத்து என்ன செய்வதென்றறியாத நிலையில் அப்படிச் செய்தார். அவருடைய ஜெபங்கள் மிகவும் ஊக்க மானவைகளாக மாறின. இறுதியாக, எலியாவின் செயல்முறையை இன்னொரு முறை செய்ய தீர்மானித்தார். மறுபடியுமாக அவர் அந்த சிறுவனின் உடல்மேல் குப்புறப்படுத்துக் கொண்டார் (வசனம் 35ஆ). இந்த முறை அவர் முயற்சிகளுக்கு பலன் கிடைத்தது. "அப்பொழுது அந்த பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான்" (வசனம் 35இ).

எழுத்தாளர்கள் ஏழுமுறை தும்மியதில் சிறப்பு அர்த்தங்களை கண்டுபிடிக்க முயல்கின்றனர்.[16] சில பழைய வியாக்கியான புத்தகங்கள் தும்மல்களால் விஷத்தன்மையுள்ள பொருட்கள் வெளியேறியது பற்றி பேசுகிறார்கள் - ஆனால் சாத்தியமான உயிருக்கு ஆபத்தான வியாதிகளில் விஷத்தன்மையுள்ள பொருட்கள் இருந்ததாக விவாதிக்கப்படவில்லை. மருத்துவ ரீதியான ஒரு விளக்கம் தேவையானால், அந்த பையன் புழுதி நிறைந்த அறுவடை களத்தில் இருந்த போது நோய்வாய்ப்பட்டான், அவனுடைய நாசிகள் மற்றும் முககாற்றறைகள் இன்னும் புழுதி மற்றும் மகரந்த துகள்களாலும் நிறைந்திருந்தன.[17] யூதர்களுக்கு புனிதமான எண்ணாக கருதிய ஏழில் ஏதோ உருவக அர்த்தம் இருப்பதாக சிலர் காண்கிறார்கள். "எப்படிப்பார்த்தாலும், மக்கள் பெரும்பாலும் இரண்டு முறைதான் தும்முகிறார்கள்" என அவர்கள் கூறுகிறார்கள். நாம் மறைபொருளான அர்த்தங்களை தேடவேண்டும் என இந்த வசனப்பகுதியில் எதுவும் சொல்லப்படவில்லை. சாட்சி கூறுகிற ஒருவர் ஏழு முறை தும்மியதை ஒரு தற்செயல் நிகழ்வாக கூறுவார். எலிசா என்ன நிகழ்ந்தது என்பதை கேயாசியிடம் கூறினார். பதிலுக்கு வேலைக்காரன் அதை பிறரிடம் கூறினான் (காண்க 8:4, 5).

வேதவசனத்தில் அந்த பையன் ஏன் தும்மினான் என்பது பற்றி ஒரு எளிமை யான விளக்கம் இருக்கிறது: அதாவது, அந்த பையன் மறுபடியும் சுவாசித்தான் என்பதற்கு அது நிரூபணமாக இருந்தது! அவன் தும்மியது மட்டுமல்ல, அவன் கண் விழித்தும் பார்த்தான்! உயிர் அவன் உடலுக்கு மறுபடியும் திரும்பி வந்துவிட்டது! தேவனுடைய வல்லமையினால் எலிசா, "செத்துப்போனவனை உயிர்ப்பித்தார்" (8:5)! இந்த சிறுவன் தனது நண்பனான தீர்க்கதரிசியைப் பார்த்து புன்னகைப்பதையும் - எலிசா அவனை பார்த்து பதிலுக்கு புன்னகைப்பதையும்

நான் பார்க்க முடிகிறது.

கேயாசி அவசியம் ஏற்பட்டால் உள்ளே செல்வதற்காக கதவுக்கு வெளியே தன்னை நிறுத்தியிருந்தான். அப்பொழுது எலிசா: கேயாசியைக் கூப்பிட்டு, "அந்த சூனேமியாளை அழைத்துக் கொண்டு வா" என்றான் (4:36அ). அந்த தாய் மாடிப்படியில் ஏறிவருகையில், என்ன எதிர்பார்ப்பது என அவளுக்கு தெரியவில்லை. எலிசா எலியா செய்த அற்புதங்களை தானும் செய்திருந்தார் என அவள் நம்பியிருந்தாள், ஆனால் அவள் மறுபடியும் ஏமாற்றமடைவதைப் பற்றி அஞ்சியிருப்பாள். அவள் கதவண்டையில் வந்தபோது, எலிசா படுக்கையில் கிடந்த பையனை சுட்டிக் காண்பித்து - அவன் இப்போது உயிரோடிருக்கிறான் - "உன் குமாரனை எடுத்துக் கொண்டுபோ" என கூறியபோது அவளுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகியிருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள் (வசனம் 36ஆ).

அந்த தாய் படுக்கையை நோக்கி ஓடியிருப்பாள் என நாம் எதிர்பார்க்கலாம். அதற்கு பதிலாக, அவள் நன்றியுணர்வோடு பாதத்தில் விழுந்தாள் (வசனம் 37அ). அதன் பிறகு, அதன் பிறகு மட்டுமே அவள் தன் அன்பான மகனை கைகளில் எடுத்துக் கொண்டுபோனாள் (வசனம் 37ஆ). அதற்கு பிறகு அவள், "வெளியே போனாள்" என வசனம் கூறுகிறது (வசனம் 37இ), அவள் கன்னத்தில் ஓடின ஆனந்த கண்ணீரை நாம் கற்பனை செய்யலாம். இதற்கு முன்பு, அந்த பையன் அவளுக்கு மிகவும் விலையேறப்பெற்றவனாக இருந்தான், இப்போதோ அவனோடிக்கிற ஒவ்வொரு இமைப்பொழுதும் கர்த்தரிடத்திலிருந்து வந்த ஒரு சிறப்பான ஆசீர்வாதமாக இருக்கிறது. நாட்கள் நகர்ந்து செல்ல, தன் மகன் பெலசாலியாக மற்றும் உயரமானவனாக வளர்ந்ததை அவள் கவனித்தபோது, அவள் நிச்சயமாக பரலோகத்தை தன் நன்றி பெருக்கால் நிரப்பினாள்.

குழப்பம் மற்றும் ஆறுதல்

குழப்பம்

அந்த பெண் தன் மகனை பறிகொடுத்தது - அதை தொடர்ந்து அவளுக்கு ஏற்பட்ட குழப்பம் மற்றும் துக்கம் ஆகியவை பற்றிய காட்சியை நாம் காண்கையில் உங்களில் சிலர் உங்களை அவளோடு அடையாளப்படுத்திக் கொண்டிருப்பீர்கள். அநேகமாக, உங்கள் வாழ்க்கையில் சோதனைகள் நேரிட்டுள்ளன, அவைகள் ஏன் ஏற்பட்டன என்பதை புரிந்து கொள்ள முடியாமல் நீங்கள் தடுமாறிக் கொண்டிருக்கிறீர்கள். ஒருவேளை உங்கள் குடும்பத்தை ஆதரித்துக்கொண்டிருந்த வேலையை நீங்கள் இழந்து விட்டீர்கள். உங்கள் மருத்துவ செலவுகள் உங்கள் சேமிப்பை கரைத்துவிட்டன. பிள்ளைகளை வளர்க்கும் பொருப்பை உங்கள் மேல் திணித்துவிட்டு, உங்கள் துணை உங்களை அம்போ என கைவிட்டு போயிருக்கலாம். சூனேமியாளுக்கு நேரிட்டதுபோல், நீங்கள் நேசித்த ஒரு பிள்ளை மரித்துபோயிருக்கலாம். உங்கள் சோகம் எதுவாக இருந்தாலும் இவ்விதமாய் கதறி அழவேண்டுமென உங்களுக்கு தோன்றலாம், "என்னால் இதை புரிந்து கொள்ள முடியவில்லை! இது ஏன் எனக்கு சம்பவித்துக் கொண்டிருக்கிறது?"

ஆறுதல்

சோகம் உங்களை சிதைத்துக் கொண்டிருக்குமானால், நீங்கள் நமது வசனப்பகுதியின் இரண்டு விளக்கங்களிலிருந்து ஆறுதலடையலாம்: (1) அந்த தாய் எலிசாவிடம் புகார் கூறியபோது, தீர்க்கதரிசியானவர் அவளை கடிந்து கொள்வில்லை. நீங்கள் பிரச்சனைகளில் மூழ்கிப்போய்விட்டதாக உணரும்போது, - தேவனானவர் உங்களை புரிந்து கொள்கிறார் மற்றும் அவர் இன்னமும் உங்களை நேசிக்கிறார். (2) முடிவில், தேவன் அந்த தாயின் மன சஞ்சலத்தை அழித்துவிட்டார் மற்றும் அவளுக்கு எல்லாம் சரியாக மாறின. 2 இராஜாக்கள் 4:18-37இல் செய்யப்பட்டபடி, தேவன் உங்களுடைய பிரச்சனைகளை எடுத்துப்போடுவார் என என்னால் வாக்குறுதி எதுவும் கொடுக்கவியலாது, ஆனால் உங்கள் கடினமான சூழ்நிலைகளைத் தாங்கவும் மற்றும் அவைகளை மேற்கொள்ளவும் அவர் உங்களுக்கு பெலத்தை கொடுக்க வல்லவராயிருக்கிறார் என்ற வாக்குறுதியை என்னால் கொடுக்கமுடியும். தேவனானவர் இன்னமும், "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28), என்ற இந்த வசனத்தின்படி செயல்படுகிற தேவனாக இருக்கிறார்.

தங்கள் வாழ்நாளெல்லாம் விசுவாச வாழ்க்கை வாழ்ந்தவர்கள் இந்த முக்கியமான கொள்கையை கற்றிருக்கிறார்கள்: காரியங்கள் எப்போதும் அவைகள் காணப்படுகிறபடி இருப்பதில்லை. இதை விளக்குகிற ஒரு கதையை நான் சமீபத்தில் கேள்விப்பட்டேன்.[18] 1900ஆவது ஆண்டுகளில் வாழ்ந்த ஒரு மனிதன் ஒரு சொகுசுக் கப்பலின் முதல் பயணத்தின்போது, இசைக்கலைஞராக பணி அமர்த்தப்பட்டார். இது மிகப்பெரிய ஒரு கவுரவம். அவர் உணர்வுமயப்பட்டவராக இருந்தார். அவர் தனக்கு முன்பாக, தன் இசைக்கருவிகளை கப்பலுக்கு அனுப்பிவைத்தார்; அவர் கப்பல் செப்பனிடும் துறைக்கு வந்துகொண்டிருந்தபோது, அவர் கடத்தப்பட்டு, ஓரியன்ட் என்ற இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். அவருடைய எண்ணங்கள் எப்படிப்பட்ட எதிர்மறையானவைகளாக இருந்திருக்கும் என ஒருவர் யூகிக்க முடியும்: "இது எனக்கு ஏன் நடந்து கொண்டிருக்கிறது? இது எனது மிகப்பெரிய வாய்ப்பாக இருந்தது, ஆனால் என்ன ஆயிற்று என்று பாருங்கள்! எனது வாழ்க்கை அழிந்துபோய்விட்டது! இது ஏன் எனக்கு நடந்தது? ஏன்?" ஒருவழியாக, அந்த மனிதன் அங்கிருந்து தப்பி, சீனாவுக்கு சென்று கொண்டிருந்தார். அங்கே தான் பயணிக்கவிருந்த கப்பல் - டைட்டானிக் - மூழ்கிவிட்டது என கேள்விப்பட்டான், அதில் 1500 பேர் உயிரிழந்தனர்.[19] அந்த மனிதன் தன்னை கடத்தினவர்களுக்கு ஒரு நன்றி குறிப்பு அனுப்பவில்லையா என நான் சந்தேகப்படுகிறேன், தனக்கு நேரிட்ட துன்பம் தொடர்பான அவன் எண்ணப்போக்கு மாறிவிட்டது என்பது உங்களுக்கு தெரியாதா?

ஆண்டுகளினூடே, பல கிறிஸ்தவர்கள் தங்களுக்கு நேரிட்ட கடந்தகால ஆபத்தை குறித்து என்னிடம் சொல்லியிருக்கிறார்கள் - பின்னர் அந்த சோகங்கள் தங்களுக்கு அப்போது நேரிடாமல் இருந்திருந்தால், இப்போதைய ஆசீர்வாதங்கள் தங்களுக்கு இருந்திருக்காது என்பதையும் கூடவே குறிப்பிட்டார்கள்.[20] சில சமயங்களில், "எனக்கு நேரிடச் சாத்தியமான மிக சிறந்த காரியமாக இது இருந்தது!" என கூட குறிப்பிட்டார்கள்.

அந்த துயருறும் தாய் நமது கதையில், தன் இருதயத்தில் "எல்லாம் - சரி"யாக இருந்தது என *உணரமுடியாமலிருந்தபோதிலும்,* (வசனம் 28) இரண்டு முறை "சுகம்தான்" என கூறினாள் (வசனம் 26; காண்க வசனம் 23). பிற்பாடு, அவள் நடந்ததை திரும்பி பார்த்து, "அப்போது நான் அதை உணராதிருந்த போதிலும், உண்மையில் எல்லாம் சரியாகவே *இருந்திருக்கிறது!*" என வியந்து கூறினாளா? நீங்கள் ஒரு உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையாக இருப்பீர்களானால், நீங்களும் - எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எந்த சூழ்நிலையிலும் "எல்லாம் சுகம்தான்!" என நம்பிக்கையோடு கூறலாம்.

> சமாதானம் ஒரு ஆற்றைப்போல் என் வழியில் வந்தபோதும்,
> துக்கங்கள் கடல் அலைபோல் என்மேல் மோதிய போதும்;
> என் பங்கு எதுவாக இருந்தபோதும்,
> "எல்லாம் சுகம், என் ஆத்துமாவோடு எல்லாம் சுகம்" என கூற
> நீர் எனக்கு போதித்தீர்.[21]

கர்த்தரிலுள்ள உங்கள் விசுவாசத்தை பராமரியுங்கள் மற்றும் தொடர்ந்து அவரை சார்ந்திருங்கள், "எல்லாம் சுகம் தான்" என்ற இந்த வார்த்தைகள் உங்கள் வாழ்வின் குறிக்கோளாகட்டும். தேவன் நீதிமான்களிடம் "உங்களுக்கு நன்மையுண்டாகும் என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள்" என்பதை ஏசாயா தீர்க்கதரிசி உறுதியாக கூறும்படி செய்தார் (ஏசாயா 3:10). உங்கள் கர்த்தருக்கு நீங்கள் உண்மையாயிருங்கள், "அப்போது நீங்கள் நெருங்கி வரும் ஒவ்வொரு துயரகாலத்திலும் அல்லது எதிர்ப்புகள் மத்தியிலும் அல்லது மனசோர்வின் வேளையிலும் எல்லாம் நலமாக இருக்கிறது என்று நம்பிக்கையோடு கூறலாம்; மரிக்கும் தருவாயிலும் எல்லாம் உங்களுக்கு நலமாக இருக்கும்; நியாயத்தீர்ப்பின் நாளிலும் அதைத் தொடர்ந்து வரும் நித்தியத்திலும் உங்களுக்கு எல்லாம் நலமாயிருக்கும்."[22]

முடிவுரை

இந்தப் பாடத்தை நான் முடிக்கிற வேளையில், நான் கேயாசி அந்த பெண்ணிடம் கேட்ட கேள்வியை "நீ சுகமா*யிருக்கிறாயா*" என கேட்க விரும்புகிறேன். உங்களுக்கும் தேவனுக்கும் இடையில் எல்லாம் சரியாக இருக்கிறதா? உங்கள் ஆத்துமா நலமாயிருக்கிறதா? "உலகம் உங்களை பார்த்து புன்முறுவல் செய்யும், நண்பர்கள் உங்களைப் புகழ்ந்து பேசலாம், ஆனால் உங்கள் சொந்த இருதயம் உங்களை ஏமாற்றலாம்."[23] ஆனால் தேவனோடு உங்களுக்கு உள்ள உறவு சரியாக இல்லாமல் இருக்குமானால், உங்கள் வாழ்க்கையில் எதுவுமே சரியாக இருக்க முடியாது. அவர் உங்களை தன் பிள்ளையாக அணைத்துக்கொள்வதற்கு அன்பின் கீழ்ப்படிதலோடு நீங்கள் அவரிடம் வரவேண்டிய அவசியம் இருக்கிறதா (மாற்கு 16:16; எபிரெயர் 5:9) நீங்கள் ஒரு கீழ்ப்படியாத பிள்ளையாக (கலாத்தியர் 3:26, 27)? அல்லது தவறிழைத்த பிள்ளையாக இருந்தீர்களா? அப்படியானால், நீங்கள் அவரிடம் திரும்ப வேண்டிய அவசியமிருக்கிறது (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9). உங்கள் ஆவிக்குரிய நிலை எதுவாக இருப்பினும், அவருடைய கிருபை மற்றும் இரக்கம் ஆகியவற்றின் மேல் உங்களை ஊற்றிவிடுங்கள், அப்போது நீங்கள் என்

வாழ்க்கையில் "எல்லாம் நலமாயிருக்கிறது" என கூற முடியும்!

குறிப்புகள்

[1]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 204. [2]Charles B. Clayton, ed., "headache," *The American Medical Association Home Medical Encyclopedia* (New York: Random House, 1989), 1:507. Aneurysm *என்பதுஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள இரத்த நாளங்களின் வீக்கம், இந்த சம்பவத்தில், அது மூளையிலுள்ள ஒரு இரத்த நாளத்தின் வீக்கமாக இருந்திருக்கலாம்.* [3]Adaped from J. T. Headley, *Sacred Heroes and Martyrs*, rev. and ed. J. W. Kirton (London: Ward, Lock, & Tyler, n.d.), 194. [4]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1&2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 66. [5]Wiseman, 204. [6]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 311. [7]C. H. Irwin, *Irwin's Bible Commentary* (Philadelphia: John C. Winston Co., 1928), 116. [8]Keil and Delitzsch, 311. [9]*அந்த பெண் தங்கள் மகன் மரித்துவிட்டான் என்பதை ஏன் கணவரிடம் கூறவில்லை? ஒருவேளை அவர் அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை வலியுறுத்துவார் என பயந்திருந்தாள். ஒருவேளை தன் கணவரிடம் தங்கள் மகன் மரித்த கதையைச் சொல்லும்போது, அவனை உயிரோடு காண்பிக்க முடியுமென நம்பியிருந்தாள்.* [10]Keil and Delitzsch, 311-12.

[11]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible*, ed., Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 530. [12]The fact that Gehazi knew where to go in the house to lay the staff on the boy's face (v. 31) may indicate that the woman gave additional details. [13]Keil and Delitzsch, 312-13. [14]*ஒரு சமயத்தில், பவுலின் உடைப்பகுதிகள் வியாதியஸ்தர்மேல் பட அவர்கள் சுகமானார்கள் (காண்க நடபடிகள் 19:11, 12).* [15]David Roper, "When Roof Caves In," in "Elijah, 1," *Truth for Today* (August 1993): 24. [16]*"கிரேக்க வசனப்பகுதியில் (பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு) தும்முதல் என குறிப்பிடப்படுவதில்லை. ஆனால் எலிசா ஏழு முறை அந்த பையன் மேல் குப்புறப்படுத்தார் என சுட்டிக்காட்டுகிறது"* (Clyde M. Miller, *First and Second Kings*, The Living Word Commentary series, vol. 7 [Abilene, Tex.: A.C.U. Press, 1991], 328). [17]*எனது வகுப்பில் கலந்து கொண்ட ஒரு மருத்துவ செவிலியர், வயல்வெளியின் தூசியினால் தூண்டப்பட, பிள்ளைகள் ஆஸ்துமாவினால் மரிப்பது இன்றும் சாத்தியமானது என சுட்டிக்காட்டினாள்.* [18]This story was related to me by Angi (Roper) Lovejoy, Edmond, Oklahoma, 22 July 2003. Angi read the story on a display at the Titanic exhibit in Oklahoma City, Oklahoma. [19]The Titanic, the largest passenger ship ever built at the time, sank on its maiden voyage after striking icebergs (14-15 April 1912). [20]*நீங்கள் உங்களுடைய அல்லது மற்றவர்களுடைய அனுபவத்திலிருந்து ஓரிரு உதாரணங்களை சேர்க்கலாம்.*

[21]Horatio G. Spafford, "It Is Well with My Soul," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [22]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadelphia: Herman Hooker, 1839), 81. [23]Ibid., 79.

7

ஜீவனைப் பாதுகாத்த ஒரு மனிதர்

[2 இராஜாக்கள் 8:1–6]

எலிசா மற்றும் சூனேமியா ஆகியோருடைய கதை சம்பவம் தேவனுடைய தீர்க்கதரிசியை ஒரு ஜீவனைக் கொடுக்கிறவர், ஜீவனை உயிர்ப்பிக்கிறவர் மற்றும் ஜீவனைப் பாதுகாக்கிறவர்[1] *என நமக்கு காண்பிக்கிறது. அவனுக்கு உபசரிப்பு செய்த பெண் ஆண் குழந்தையால் ஆசீர்வதிக்கப்பட்டபோது, அவனை ஜீவனை கொடுத்தவராக கண்டோம். தேவனுடைய வல்லமையால் அந்த பையனை அவர் உயிர்ப்பித்த போது, அவரை ஜீவனை உயிர்ப்பிக்கிறவராக கண்டோம். இந்த பாடத்தில் நாம் இவரை ஜீவனைப் பாதுகாக்கிறவராகக் காண்போம். ஏனெனில், தேவன் அவனுடைய வார்த்தைகளையும் செல்வாக்கையும் அந்த பெண் மற்றும் அவள் மகனைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தினார்.*

இந்த எல்லா நிகழ்வுகளிலும் கர்த்தர் தான் உண்மையில் ஜீவனைக் கொடுத்தார். ஜீவனை உயிர்ப்பித்தார் மற்றும் ஜீவனைப் பாதுகாத்தார் என்பதை மறந்துவிடாதீர்கள்; எலிசா வெறுமனே அவருடைய முகவராக செயல்பட்டார். தேவனானவர் இன்றும் நம் ஜீவனின் மூலாதாரமாக இன்னும் இருக்கிறார். அவர் சரீர ஜீவனின் மூலாதாரமாக இருக்கிறார்: அவர், "எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் ... கொடுக்கிறவர்" என பவுல் எழுதினார் (நடபடுகள் 17:25). அவர் ஆவிக்குரிய ஜீவனின் மூலாதாரமாக இருக்கிறார்: "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என இயேசு வலியுறுத்தி கூறினார் (யோவான் 10:10). அந்த சூனேமியப் பெண்ணைப்போல, மறுபடியும் மறுபடியும் நாம் "ஜீவனுள்ள தேவனால்" ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் (1 தீமோத்தேயு 4:10). நாம் இந்தப் பாடத்தை நிறைவு செய்வதற்கு முன்பாக, நீங்கள் இந்த கிருபை நிறைந்த தேவனுடைய அளிப்புகளை உங்களுக்கு அனுகூலமாக எடுத்துக் கொண்டீர்களா இல்லையா என நான் கேட்பேன்.

பஞ்ச காலத்தில் தேவனுடைய பாதுகாப்பு (8:1, 2)

இந்தப் பாடத்திற்காக நாம் 2 இராஜாக்களின் பல அதிகாரங்களை விட்டுவிட்டு, அதிகாரம் 8க்கு செல்கிறோம். எலிசா சூனேமியாளின் மகனை உயிர்ப்பித்து பல ஆண்டுகளாகிவிட்டன. இந்த காலத்தில், எலிசா மற்றும் கேயாசி ஆகியோர் நிச்சயம் அந்த பெண் கொடுத்த உபசரிப்பைத் தொடர்ந்து அனுபவித்து வந்தார்கள். மேலும் இந்த ஆண்டுகளில், அந்த பெண்ணின் வயதான கணவர் அநேகமாக மரித்துவிட்டார்.[2]

இந்த கதை துவங்குகையில், எலிசா தன் உபசரிப்பால் தேவனுக்குப் பணிவிடை செய்த அந்த பெண்ணை முகம்முகமாய் சந்திக்கிறான். அநேகமாக கர்மேலுக்கு செல்லும் வழியில் அல்லது அங்கிருந்து திரும்பும் வழியில் அங்கே தன்

பயணத்தை நிறுத்தினான். "எலிசா தான் உயிர்ப்பித்தப் பிள்ளையின் தாயாகிய ஸ்திரீயை நோக்கி: நீ உன் வீட்டாரோடுங்கூட எழுந்து புறப்பட்டுப்போய் எங்கேயாகிலும் சஞ்சரி; கர்த்தர் பஞ்சத்தை[3] வருவிப்பார்; அது ஏழுவருஷம் தேசத்தில் இருக்கும் என்று சொல்லியிருந்தான்" (வசனம் 1).

"*கர்த்தர்* பஞ்சத்தை" வருவிப்பார் என்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். பஞ்சம் என்பது ஒரு தெய்வீக தண்டனையாயிருந்தது. தேவன் ஜனங்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் முதல் கட்டளை, "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்பதாயிருந்தது (யாத்திராகமம் 20:3), ஆனால் வடராஜ்யம் அந்த கட்டளையை புறக்கணித்துவிட்டது.

> "இவ்விதமாய் ... நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து ... உங்கள் வானத்தை இரும்பைப்போலவும் உங்கள் பூமியை வெண்கலத்தை போலவும் ஆக்குவேன் ... உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்கமாட்டது" என கர்த்தர் எச்சரித்திருந்தார் (லேவியராகமம் 26:18-20).

தேவன் தமது ஜனங்களை தண்டிக்கவும் (காண்க ஆகாய் 1:9-11) அவர்களை மனந்திரும்ப அழைக்கவும் பஞ்சத்தைப் பயன்படுத்தினார் (காண்க 1 இராஜாக்கள் 8:35-40). தேவன் எலியாவின் நாட்களில் ஒரு மூன்றரை ஆண்டு பஞ்சத்தை அனுப்பியிருந்தார் (காண்க 1 இராஜாக்கள் 17:1; யாக்கோபு 5:17); அவர் அதை இப்போது இரட்டிப்பாக்குவார்: இந்த பஞ்சம் ஏழு ஆண்டுகள் நீடித்திருக்கும் (ஒப்பிடுக ஆதியாகமம் 41:27). எலிசா வரவிருக்கும் பெரிய நாசத்தின் கஷ்டத்திலிருந்து அந்த பெண்ணை காப்பாற்ற விரும்பினார். அவர் அவளிடத்தில் குடும்பத்தாரோடு வெளியேறி, பஞ்சம் முடிகிறவரை வேறு ஒரு இடத்தில் வாழும்படி கூறியிருந்தார் (ஒப்பிடுக ரூத் 1:1, 6).

"விக்கிரக வழிபாட்டினிமித்தம் தேசத்தின் மேல் தண்டனை வந்ததானால், அது இந்த பெண்ணின்மேல் ஏன் வரவேண்டும்? அவள் விக்ரக ஆராதனையால் குற்றப்படவில்லையே" என்ற ஒரு ஆட்சேபனை எழுகிறது. நீங்கள் இந்தப் பாடத்தை இதுவரை கற்றுக்கொள்ளாமலிருந்தால், நீங்கள் இப்போது கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது: மனுக்குலம் யாவும் ஒன்றாக கட்டப்பட்டுள்ளது (காண்க ரோமர் 14:7), மேலும் ஒருவரை எது பாதிக்கிறதோ அது மற்றவரையும் பாதிக்கிறது. பாவம் இந்த உலகத்தை சபித்துவிட்டது (காண்க ஆதியாகமம் 2:17; ரோமர் 5:12), மற்றும் அதினால் நாம் யாவரும் பாடுபடுகிறோம் - நிரபராதியும் குற்றவாளியோடு பாடுபடுகிறார். இந்த உண்மைக்கான உதாரணங்கள் என் மனதை நிரப்பியிருக்கின்றன. ரோமானியாவில் கிருமி நீக்கம் செய்யப்படாத ஊசிகளால் தடுப்பூசி போட்டுக்கொண்ட குழந்தைகள் எய்ட்ஸ் நோயை பெற்றதும் இதில் அடங்கும். எலிசா இந்த பெண் தேசத்தினுடைய பாவத்தின் சில விளைவுகளிலிருந்து தப்பியிருக்கும்படி விரும்பினார். ஆகவே அவள் இஸ்ரவேலை விட்டுப் போகும்படி கேட்டுக்கொண்டார்.

சூனேமியாளுக்கு, தீர்க்கதரிசியின் அறிவுரைகள் கீழ்ப்படிவதற்கு சுலபமாக இருந்திருக்காது. அவள் தன் குடும்பம் மற்றும் நண்பர்களுடன், இருந்த இடத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தாள் (காண்க 2 இராஜாக்கள் 4:13). மேலும்

எலிசா பேசிய அந்த காலகட்டத்தில், அங்கு பஞ்சத்துக்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை: புற்கள் பசுமையாயிருந்தன, பூக்கள் பூத்து குலுங்கின, வயல்கள் இன்னும் தானியத்தை விளைவித்தன. அவளுடைய முழு குடும்பத்தையும் வேறு ஒரு நாட்டிற்கு குடிபெயரச் செய்வது என்பது ஒரு விசுவாசத்தின் கிரியையாக மட்டுமே இருக்கும். முன்னதாக, அந்த பெண் தீர்க்கதரிசியின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வதற்கு தடுமாறினாள் (2 இராஜாக்கள் 4:16, 28). ஆனால் இப்போது அவள் தயங்கவில்லை. அவள், "தேவனுடைய மனுஷன் சொன்ன வார்த்தையின்படி செய்து, தன் வீட்டாரோடுங்கூட புறப்பட்(டாள்)" (2 இராஜாக்கள் 8:2அ). நிகழ்ந்த சோகங்களும் அதன் பின் விளைவுகளும் அவள் விசுவாசத்தைப் பெலப்படுத்தியிருந்தன. நமக்கும் உபத்திரவங்கள் இதை செய்யக்கூடும் (காண்க ரோமர் 5:3, 4; யாக்கோபு 1:2, 3).

அவள், "தன் வீட்டாரோடுங்கூடப் புறப்பட்டு, பெலிஸ்தரின் தேசத்தில் போய் ... சஞ்சரித்தாள்" (2 இராஜாக்கள் 8:2ஆ). பெலிஸ்தியர்கள் தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதிகளாயிருந்தார்கள் (காண்க 1 சாமுவேல் 4:10; 13:5); ஆனால் நமது கதையின் இந்த காலகட்டத்தில், இஸ்ரவேல் ஆராமுக்கு எதிராக (சீரியா) யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது (2 இராஜாக்கள் 5:2; 6:8, 24), பெலிஸ்தியருக்கு எதிராக அல்ல. "பெலிஸ்தியரின் தேசம்" கடற்கரையில் அமைந்திருந்தது (வரை படத்தை காண்க). பஞ்சகாலத்தில், மலைசார்ந்த உட்பிரதேசத்தைப் போல், வளமான பெலிஸ்திய சமவெளி பிரதேசம் அதிகம் பாதிக்கப்படாது. மேலும், அந்த மக்கள் தங்களுக்கு தேவையான சரக்குகளை கடலிலிருந்து பெறுவது சாத்தியமாயிருந்தது. ஆகவே, அந்த பெண் அங்கே குடிப்பெயரத் தீர்மானித்தாள் (2 இராஜாக்கள் 8:2இ).

தவறாக நடத்தப்பட்டபோது தேவனுடைய உதவி (8:3-6)

"ஏழுவருஷம் சென்ற பின்பு," பஞ்சம் நீங்கினபின்பு, அவள் பெலிஸ்தரின் தேசத்தை விட்டுத் திரும்ப வந்து ... (வசனம் 3அ). அவள் சூனேமுக்கு வந்தபோது, அவள் அதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும். வேறு ஒரு குடும்பம் அவள் வீட்டில் வசித்துக்கொண்டிருந்தது! வேறு யாரோ அவள் வயலில் வேலை செய்துகொண்டிருந்தார்கள்! மனச்சாட்சி இல்லாத அயலகத்தார் அல்லது பேராசையுள்ள உறவினர்கள் அந்த சொத்தை அபகரித்துவிட்டார்கள், அல்லது அது அரசரால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது (காண்க 1 இராஜாக்கள் 21:15). ஆதரவற்ற விதவைகள் எப்போதுமே இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்கள் (காண்க ஏசாயா 10:2; மத்தேயு 23:14).

முன்னதாக, எலிசா அந்த பெண்ணின் சார்பாக இராஜாவிடம் பேச விருப்பம் தெரிவித்திருந்தான் (2 இராஜாக்கள் 4:13), ஆனால் அதை அவள் நிராகரித்திருந்தாள். இப்போது, அவள் தாமாகவே தன் சொத்தைத் திரும்ப பெறும் முயற்சியில் ராஜாவிடம் மன்றாட வேண்டியிருக்கிறது (8:3ஆ). டொனால்ட் வைஸ்மேன் என்பவரின் கூற்றுப்படி, "நிலவழக்குகளின் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் அரசர் இருந்தார்."[4] அந்த பெண் தன் கோரிக்கையை வைக்க ஆயத்தப்படுகையில், அநேகமாக அவள் அச்சப்படுபவளாக இருந்தாள். நடைமுறையில், பெண்களின் வார்த்தைகளுக்கு அரச சமூகத்தில் சிறிதளவே மதிப்பிருந்தது.

தேவன் தனக்காக வழியை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார் என்பதை சூனேமியாள் அறியாதிருந்தாள். அவள் ராஜா சமூகத்திற்கு செல்கையில், "அந்நேரத்தில் ராஜா, தேவனுடைய மனுஷனின் வேலைக்காரனாயிருந்த கேயாசியுடன் பேசி ..." (வசனம் 4அ). கேயாசி ஏன் அங்கிருந்தார் என்பது நமக்கு தெரியவில்லை. ஒருவேளை, எலிசா ராஜாவுக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கலாம். ஒருவேளை ராஜா தீர்க்கதரிசியின் செயல்பாடுகளில் ஆர்வமுற்று, அதை அதிகம் அறிந்துகொள்ள அவன் வேலைக்காரனை வரவழைத்திருக்கலாம்.[5] காரணம் எதுவாயிருப்பினும், கேயாசி ராஜாவோடிருந்தான் மற்றும் அவர், "எலிசா செய்த அதிசயங்களையெல்லாம் நீ எனக்கு விபரமாய் சொல்" என்றான் (வசனம் 4ஆ).

அந்த ராஜா யாராக இருந்தார் என்பது நமக்கு உறுதியாக தெரியவில்லை. "ஏழு வருடம் பஞ்சம் யோராம் ஆட்சியின் மத்தியில் ஏற்பட்டிருந்தது"[6] ஆகவே 2 இராஜாக்கள் 8:1-6இல் குறிப்பிடப்பட்ட ராஜா யோராமாக இருந்தார். யெகூ என்றழைக்கப்பட்ட பிந்திய ராஜாவாகவும் அவர் இருந்திருப்பது சாத்தியமானது.[7] உண்மையில், *யார்* ராஜாவாய் இருந்தார் என்பது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை.[8] இந்த வசனப்பகுதியின் தேவனுடைய நோக்கம் ராஜாக்களை காட்சிப்படுத்துவதல்ல, ஆனால் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை எவ்விதம் பலனளிக்கப்படுகிறதென்பதை விளங்கப்பண்ணுவதாக இருந்தது.

யோராம் அரசராக இருந்திருந்தால், எலிசா தன் இராணுவத்தை ஏதோமின் வனாந்திரத்தில் எப்படி காப்பாற்றினார் என்பதை அவர் ஏற்கனவே அறிந்திருந்தார். மற்ற அற்புதங்கள் பற்றியும் அவர் கேள்விப்பட்டிருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை. இப்போது அவர் அது பற்றிய முழு விபரங்களையும் கேட்டார். ராஜா இவ்வளவு ஆர்வமாய் தன்னிடம் கேட்டது குறித்து கேயாசி மெய்சிலிர்த்துப்போனார். எலிசா எவ்விதம் மாசுப்பட்ட தண்ணீரை நன்னீராக்கினார் என்பதை, தீர்க்கதரிசி எவ்விதம் கொஞ்சம் எண்ணெயை பெருகச் செய்தார் என்பதை மற்றும் தன் வழுக்கை தலையை கேலிசெய்த இளம் விஷமிகள்மேல் தண்டனை வர எப்படி காரணமாயிருந்தார் என்பதையெல்லாம் அவன் ராஜாவிடம் கூறுவதை நான் கற்பனை செய்கிறேன் (ராஜாவுக்கு வழுக்கைத் தலை இருந்திருந்தால், அவர் அந்த கடைசி கதையை ரசித்திருப்பார்). எலிசா எவ்விதம் மரித்த பையனை உயிர்ப்பித்தார் என்பதுதான் அவன் கூறியவைகளில் முக்கியமானதாகும்! அற்புதங்களை செய்கிறவர்கள் மத்தியில் கூட மரித்தோரை உயிர்ப்பிப்பது என்பது ஒரு அன்றாட நடவடிக்கையாக இருக்கவில்லை. மரித்தோர் உயிர்ப்பிக்கப்பட்டதற்கான மூன்று பதிவுகள் மட்டுமே பழைய ஏற்பாட்டில் உள்ளன (1 இராஜாக்கள் 17; 2 இராஜாக்கள் 4; 13), இவைகளில் இரண்டு எலிசாவுடன் தொடர்புடையவைகள்.

கேயாசி உணர்ச்சி மேலிட்டவராக சம்பவங்களை சொல்லிக் கொண்டிருந்தபோது, வேறுயாருமல்ல, அந்த பெண் மற்றும் அவள் மகன் ஆகிய இருவரும் ராஜாவின் சிங்காசன அறையில் உட்பிரவேசித்தார்கள் (2 இராஜாக்கள் 8:5அ)! அது ஒரு தற்செயலான இணை நிகழ்ச்சியாக இருக்கவில்லை, ராஜா அந்த பெண்ணின் காரியத்தில் நல் அபிப்பிராயம் உருவாகவும், அதினால் அவள் வேண்டுகோளை அவர் பரிசீலிக்கவும் தேவனானவர் செய்த ஏற்பாடுகளாயிருந்தன. இதை நாம் தேவனுடைய *தெய்வாதீனமான* உதவி என அழைக்கிறோம் (ரோமர் 8:28): தேவன் இயற்கை நியதிகள் வாயிலாக தம்

மக்களின் தேவைகளை சந்திப்பதாக இருக்கிறது. அவருடைய வழிகள் எவ்வளவு ஆச்சரியமானவைகளாக இருக்கின்றன!

கேயாசி அந்த பெண்ணை பார்ப்பதில் ஆச்சரியப்பட்டார். அவர் அவளைச் சுட்டிக்காண்பித்து, உணர்வு மேலிட்டவராய் "இராஜாவாகிய என் ஆண்டவரே, *இவள்தான்* அந்த ஸ்திரீ; எலிசா உயிர்ப்பித்த இவளுடைய குமாரன் இவன்தான்" என்றான் (2 இராஜாக்கள் 8:5ஆ; வலியுறுத்தல் என்னுடையது). "நீங்களே அவளை கேளுங்கள்!" என்பது உணர்த்தப்பட்ட ஆலோசனையாயிருக்கிறது. ஆட்சியாளர் கதையை உறுதி செய்துகொள்ள அவளிடம் கேட்டார். அநேகமாக, அந்த பெண் தன் முகத்தில் புன்முறுவலை உடையவளாய், தன் அன்பு மகன் மேல் தன் கரங்களை போட்டவளாய், அவள் உதடுகளிலிருந்து அடிக்கடி வந்த அந்த கதையை மறுபடியும் சொன்னாள் (வசனம் 6அ).

ராஜா மிகவும் திருப்தியடைந்தார். "தனது தீர்க்கதரிசிகள் மூலமாக கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்தவர்கள், எவ்விதமாக கர்த்தருடைய உதவி மற்றும் ஆசீர்வாதங்களை பெற்றார்கள் என்பதற்கு இந்த விதவை மற்றும் அவள் மகன் ஆகியோர் வாழும் முன் உதாரணங்களாய் இருந்தார்கள்."[9] ஜீவன் மற்றும் மரணத்தின்மேல் அதிகாரம் பெற்றிருந்த ஒரு மனிதனோடு நெருக்கமாக உறவு கொண்டிருந்த அந்த பெண்ணுக்கு தயவு செய்ய ராஜா தீர்மானித்தார். உண்மையில், அவள் கேட்டதற்கும் *அதிகமாக* செய்ய ராஜா தீர்மானித்தார். அவள் தனது சொத்து தனக்கு திருப்பித்தரப்பட வேண்டுமென கேட்டாள்; அவர் அதினால் ஏற்பட்ட லாபத்தையும் அவளுக்கு திருப்பித்தருவார்.[10] அப்பொழுது ராஜா அவளுக்கு ஒரு "பிரதானியை நியமித்து," "அவளுக்கு உண்டானது எல்லாவற்றையும், அவள் தேசத்தை விட்டுப்போன நாள்முதல் இதுவரைக்கும் உண்டான அந்த வயலின் வருமானம் அனைத்தையும் அவளுக்கு கிடைக்கும்படி செய்" என்றார் (வசனம் 6ஆ).

அந்த பெண் உண்மையில் மகிழ்ச்சியோடு அரசரின் அரண்மனையை விட்டு சென்றாள். அவளுடைய வயல் அவளுக்கு திருப்பி கொடுக்கப்பட்டு விட்டது, எலிசாவோடு இருந்த ஐக்கியத்திற்காக நன்றி. இப்போது அந்த தீர்க்கதரிசிக்கு அவள் வீட்டில் இருமடங்கு வரவேற்பு கிடைத்தது பற்றியும், அவர் அந்த கிராமத்தின் வழியாய் பயணித்த போது, அங்கே தொடர்ந்து மகிழ்ச்சியான நேரங்களை செலவிட்டார் என்பது பற்றியும் நாம் நம்பிக்கையுடையவர்களாயிருக்கலாம். இந்த ஆர்வமான குறிப்போடு, உணர்வைத் தூண்டும் இந்த எலியா மற்றும் சூனேமியாள் ஆகியோருடைய கதையை நிறைவு செய்ய வேண்டும்.

முடிவுரை

நான் இந்தப் பாடத்தை நிறைவு செய்கையில், நம் *தேவன் நமக்கு* ஜீவனைக்கொடுக்கிறவராக, ஜீவனை உயிர்ப்பிக்கிறவராக, மற்றும் ஜீவனைப் பாதுகாக்கிறவராக இருக்கிறார் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். இந்த மூன்று கருத்துக்களை நாம் நமது சரீரபிரகாரமான ஜீவனுக்குப் பொருத்தப்பார்க்கலாம்: தேவன் நமது பிறப்பில் நமக்கு சரீரபிரகாரமான ஜீவனை அருளுகிறார் (காண்க ஆதியாகமம் 2:7; நடபடிகள் 17:25), அவர் தமது இரக்கமுள்ள ஆசீர்வாதங்களால் நம் சரீர ஜீவனை போஷிக்கிறார் (மத்தேயு 5:45), மற்றும் ஒரு நாளில் அவர் மரித்தோரின் ஜீவனை உயிர்ப்பிப்பார் (யோவான்

5:28, 29). எப்படியிருப்பினும், ஆவிக்குரிய வாழ்க்கைத் தொடர்பாக, சிறப்பான விதத்தில் இதை பொருத்திப்பார்க்க விரும்புகிறேன்:

- *தேவன் ஆவிக்குரிய ஜீவனின் மூலாதாரமானவராக இருக்கிறபடியால், அவரே நமக்கு ஆவிக்குரிய ஜீவனைக்கொடுக்கிறார் (காண்க யோவான் 17:3). அவருடைய கிருபையினால், பாவத்தில் மரித்தோர் கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள் (எபேசியர் 2:5).*
- *தேவன் ஆவிக்குரிய ஜீவனைப் பாதுகாக்கிறவராக இருக்கிறார். பவுல், "ஏனென்றால், நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" என்றார் (2 தீமோத்தேயு 1:12).*
- *தேவன் நம் ஆவிக்குரிய ஜீவனை உயிர்ப்பிக்கிறவராக இருக்கிறார். நாம் நமது பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரண்டை வரும்போது, அவர் இரட்சிப்பின் சந்தோஷத்தை நமக்கு திரும்பக் கொடுப்பார் (காண்க சங்கீதம் 51:12).*

தேவன் நீங்கள் ஜீவனை உடையவராக இருக்க விரும்புகிறார் ... ஆனால் நீங்கள் அவருடைய தாராளமான ஈவுகளை உங்களுக்கு அனுகூலமாக்கிக் கொண்டீர்களா?

- *"கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை" பெறும்படி (ரோமர் 6:23), நீங்கள் ஒரு உணர்வடைந்த பாவியாக (நடபடிகள் 2:36-38), "கிறிஸ்துவுக்குள்" ஞானஸ்நானம் பண்ணப்பட்டீர்களா? (ரோமர் 6:3; கலாத்தியர் 3:26, 27).*
- *கர்த்தர் உங்களை ஒவ்வொரு நாளும் பெலப்படுத்தும் படியாக (எபிரெயர் 13:5, 6); அவர் உங்கள் பாவங்களை நீக்கி சுத்திகரிக்கத்தக்கதாக (1 யோவான் 1:7); நீங்கள் "புதிதான ஜீவன்" உள்ளவர்களாக அவரோடு நடக்கிறீர்களா? (ரோமர் 6:4).*
- *நீங்கள் நீதியின் மார்க்கத்திலிருந்து தப்பிப்போயிருந்தால் (யாக்கோபு 5:19, 20), நீங்கள் மனந்திரும்பி, அறிக்கையிட்டு மற்றும் ஜெபித்து கர்த்தரிடம் திரும்பிவிட்டீர்களா? (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9), அப்போது அவர் உங்கள் ஆத்துமாவை சீர்பொருந்தப்பண்ணுவார் (காண்க கலாத்தியர் 6:1; சங்கீதம் 80:3, 7, 19)?*

தேவன் உங்களுக்காக வைத்திருக்கிற ஜீவனைப் பெற நீங்கள் என்ன செய்ய வேண்டுமென உங்களுக்கு தெரியுமா? அப்படியானால், நீங்கள் அதை செய்வதை ஒத்திப்போடவேண்டாம்! "ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதை செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக்கோபு 4:17).

குறிப்புகள்

[1]Adapted from Joseph L. Gardner, ed., *Who's Who in the Bible* (Pleasantville, N.Y.:

Reader's Digest Association, 1994), 99. [2]*கணவர் உயிரோடு இருந்திருந்தால், தன் வயலை மீட்டுக்கொடுக்கும்படி அவர் அரசரிடம் மன்றாடியிருப்பார். அந்த பெண் அந்த முறையீடு செய்ய வேண்டியிருந்ததால் (2 இராஜாக்கள் 8:3, 5), அநேகமாக அவள் கணவர் மரித்துப்போயிருந்தார். அவர்கள் குடும்பம் பெலிஸ்தியாவில் இருந்தபோது அவர் மரித்திருக்கக் கூடும், வசனம் 1இல் எலிசா அந்த பெண்ணிடம் மட்டும் பேசி, உன் வீட்டாரை என குறிப்பிட்டிருப்பது, அவர்கள் பெலிஸ்தியாவுக்கு இடம் பெயர்வதற்கு முன்பே அவள் கணவர் மரித்திருந்தார் என்பதைக் காட்டுகிறது.* [3]*இது அநேகமாக 2 இராஜாக்கள் 4:38ல் குறிப்பிடப்பட்ட அதே பஞ்சமாக இருக்கிறது, இப்பகுதியை நமது அடுத்த பாடத்தில் நாம் காண்போம்.* [4]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary*, Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 213. [5]*யோராம் மற்றும் எலிசா ஆகியோருக்கிடையேயான கசந்துபோன உறவை நாம் பரிசீலிக்கையில் (காண்க 2 இராஜாக்கள் 3:13, 14), ராஜா எலிசாவைப் பற்றி அறிய விரும்பியிருந்தால், அவர் எலிசாவை வரவழைப்பதிலும் அவர் வேலைக்காரனை வரவழைப்பதை அதிகம் விரும்பியிருப்பார்.* [6]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 333. [7]Wiseman, 213. [8]James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings,* James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 96. [9]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 536. [10]*இது ஏழுவருட பஞ்சமாக இருந்ததால், லாபம் மிக குறைவாகவே இருந்திருக்கும்; ஆனால் யாரோ ஒருவர் கூறியபடி, "ஒன்றும் இல்லை என்பதை விட கொஞ்சம் இருக்கிறது என்பது சிறப்பானது."*

8

பகிர்ந்துகொண்ட ஒரு மனிதன்

(2 இராஜாக்கள் 4:38-44)

எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு ஒரு அமைதியான "உதவி செய்யும்" அற்புதத்தால் எலிசாவின் ஊழியம் துவங்கியது: எரிகோவின் மாசடைந்த தண்ணீரை நன்னீராக்கியது. அதை தொடர்ந்து, இராணுவங்களைக் காப்பாற்றியது மற்றும் ஒரு பையனை மரணத்திலிருந்து உயிர்ப்பித்தது என அதிக பிரமிக்கத்தக்கச் சம்பவங்கள் நிகழ்ந்தன. நாம் இந்த பாடத்தில், எலிசா வினுடைய ஊழியத்தின் ஒரு பகுதியாக இருந்த எளிய உதவும் அற்புதங்களுக்கு திரும்புவோம். நாம் இரண்டு அற்புதங்களைக் குறித்து சுருக்கமாய் படிப்போம். இவை இரண்டும் உணவு சம்மந்தமானவைகள். நான் அவைகளை பகிர்ந்து கொள்ளும் *அற்புதங்கள் என நினைக்கிறேன்.*

எலிசா பகிர்ந்து கொண்டார்

எலிசா தனது கூழைப் பகிர்ந்துகொண்டார் (4:38-41)

இந்த கதை "எலிசா கில்காலுக்கு திரும்பிப் போய் இருக்கையில்" என துவங்குகிறது (வசனம் 38அ). கில்கால் யோர்தான் பள்ளத்தாக்கில், எரிகோவின் அருகில் அமைந்திருந்தது (வரைபடத்தை காண்க). தீர்க்கதரிசிகளின் பள்ளி ஒன்று அங்கிருந்தது, இந்த பள்ளியானது தீர்க்கதரிசியால் தவறாமல் பார்வையிடப்பட்டிருக்கும். நமது கதையின் சமயத்தில் "தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று" (வசனம் 38ஆ). இந்த ஏழுவருட பஞ்சம் அநேகமாக 8:1ல் குறிப்பிடப்பட்ட அதே பஞ்சமாக இருக்கிறது. இந்த பஞ்சம் இஸ்ரவேலின் குடிகளை அவர்கள் விக்கிரக வழிபாட்டினிமித்தம் தண்டிக்கவும் மற்றும் மனந் திரும்பும்படி இணங்கச்செய்யவும் கர்த்தரால் வந்தது.

எலிசா இந்த பஞ்சக் காலத்தில் சூனேமியாளை வேறு ஒரு இடத்திற்கு அனுப்பியிருந்தார் (8:1, 2), ஆனால் அவரும் தீர்க்கதரிசி - பயிற்சியாளர்களும் அந்த தேசத்தில் இருந்துவிட்டார்கள். ஆபத்து காலத்தில் தன் குடும்பத்தைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவிட்டு, ஆபத்தை சந்திப்பதற்கு தான் மட்டும் அங்கேயே தங்கிவிடுகிற ஒரு தந்தையை நான் நினைவுகூருகிறேன். ஒரு தீர்க்கதரிசியின் வாழ்க்கை முறையை கடைப்பிடிக்கிறவர்களுக்கு, அவர்கள் வாழ்க்கை ஒருபோதும் சுலபமாக இருந்ததில்லை (காண்க 4:1); குறிப்பாக பஞ்சக் காலத்தில், இருமடங்கு கடினமாக இருந்திருக்கும். F. W. குருமாச்சர் என்பவர் கில்கால் பகுதி எவ்விதம் பாதிக்கப்பட்டிருந்தது மற்றும் பயிற்சியாளர்கள் எவ்விதம் இருந்திருப்பார்கள் என்பது தொடர்பாக கீழ்வரும் ஒரு வார்த்தைச் சித்திரத்தைத் தீட்டியுள்ளார்.

> அழகான தேசத்தை அடையாளங்காண்பது கடினம், அழிவு அந்த அளவுக்கு இருந்தது. ஒரு காலக்கட்டத்தில் கண்ணுக்கு எட்டுகிறவரை

> பொன்நிற வயல்களில் கதிர்கள் சாய்ந்தாடின. அறுவடையின் மிகுதியான தானியங்களை எடுத்துச் செல்லும் சுமை தாங்க முடியாத வாகனங்கள் எத்திசையிலும் இருந்ததைப் பார்த்தோம். திராட்சை மற்றும் மாதுளங்கனிகளின் சுமை தாங்க முடியாமல், கிளைகள் கீழ்நோக்கிச் சாய்ந்திருந்தன.
>
> ஆனால் இப்போதோ எவ்வளவு பெரிய மாற்றம்! வயல்கள் வெரிச்சோடிக் கிடக்கின்றன; புல்வெளிகள் சாய்ந்து வெடித்து கிடக்கின்றன; கதிர் அரிவாள் கூரை சுவரில் துருப்பிடித்து கிடக்கிறது; பெரும்பகுதியான மக்கள் பஞ்சத்தின் கொடுமையை சகித்து வருகின்றனர். எலிசா சந்தித்த தீர்க்கதரிசிகளின் புத்திரர்கூட இந்த துயரத்தை பகிந்து கொண்டார்கள்.
>
> எலிசா கில்காலுக்கு வந்தபோது, அந்த சிறிய சமுதாயத்தை துக்கம் பாதித்திருந்தது, சிறிதளவே இருந்த பொருட்கள் தீர்ந்து போயிருந்தன. அவர்கள் தோட்டங்கள் வறண்டுவிட்டன, அவர்கள் பணப்பைகளும் காலியாகிவிட்டன.[1]

கில்காலிலிருந்த மாணவர்கள் எலிசாவின் வருகையை எதிர்பார்த்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த முறை அவர் வந்தபோது, சீக்கிரமாக அவர்கள் அவனுக்கு முன்பாக அமர்ந்து (வசனம் 38இ), அவனுடைய ஞானமுள்ள வார்த்தைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வயிற்றுக்கு உணவில்லாமல் இருக்கலாம், ஆனால் எலிசா அவர்கள் ஆத்துமாக்களை போஷித்தார். தேவனுடைய வார்த்தைத் தொடர்பான பொதுவான போதனையுடன், அவர்கள் வாழ்க்கை எவ்வளவு கடினமானதாகப் போனாலும் கர்த்தருக்கு உண்மையாய் இருக்கும்படியும் உற்சாகப்படுத்தினான். அவர்கள் தங்கள் வாழ்க்கையை யெகோவா தேவனுக்காக அர்ப்பணம் செய்திருந்தபோதும், ஏன் பாடுபடவேண்டியிருந்தது என்ற கேள்விக்கும் அவர் அநேகமாக பதிலளித்தார்.

ஒரு சமயத்தில் எலிசா இது உணவு உட்கொள்வதற்கான நேரம் என முடிவுசெய்தார். நூற்றுக்கணக்கான வயிறுகளின் பசியால் ஏற்படும் கடகட என்ற சத்தத்தை அவர் கேட்டார் (வசனம் 43). (பசியாயிருக்கிற மனிதருக்கு போதிப்பது கடினமானது.) அநேகமாக, அது அந்த நாளின் உணவு வேளையாயிருந்தது. எலிசா, "தன் வேலைக்காரனை நோக்கி; நீ பெரிய பானையை அடுப்பிலே வைத்துத் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குக் கூழ்காய்ச்சு" என்றான் (வசனம் 38ஈ). "அவருடைய வேலைக்காரன்" அவர் கில்காலுக்கு வரும்போது அவருக்கு பணிவிடை செய்ய நியமிக்கப்பட ஒரு மாணவனாக இருந்திருக்கலாம், ஆனால் அந்த வார்த்தை அநேகமாக கேயாசியை குறித்தது (வசனம் 12). அந்த "பெரிய பானை" என்பது மிகப்பெரிதான, சமூகத்திற்கான மற்றும் எல்லா நோக்கங்களுக்குமான பாத்திரமாயிருந்தது. நான் சிறுவனாயிருந்தபோது எனது அயலக சமூகத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பெரிய இரும்பு பானை இருந்தது. இந்த பானை சமையல் செய்ய; பாத்திரம் கழுவ, துணி துவைக்க, குளிக்க மற்றும் சோப்பு தயாரிக்க போதுமான சுடுநீர் தயாரிக்கவும் பயன்படுத்தப்பட்டது. பள்ளிக்கூடத்தின் "பெரிய பாத்திரம்" இது போன்ற ஒன்றாக இருந்திருக்கலாம்.

எலிசா அந்த பள்ளியின் விருந்தினராக இருந்தபடியால், வழக்கமாக மாணவர்களே அவருக்கு உணவளித்திருப்பார்கள். எலிசா உணவு தயாரிப்பதற்கான முன்முயற்சியை மேற்கொண்டது அவர் உணவின் முக்கியமான உட்பொருளை வழங்கினார் என்பதை குறிக்கிறது. அவர் ஒரு பிரபலமானவராக

இருந்ததால், மக்கள் அவ்வப்போது அவருக்கு சில பொருட்களை கொண்டுவந்து கொடுத்தார்கள் (வசனம் 42). அவரிடத்தில் அதிகமாக இருந்திருக்காது; ஆனால் என்ன இருந்ததோ, அதை அவர் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள விருப்பம் உடையவராக இருந்தார்.

கூழ்காய்ச்சுபவர்கள் சுவைக்காக, கூழைக் கெட்டியாக்க ஒரு துண்டு இறைச்சியை பொன்னிறமாக வறுத்து பின் அதோடு காய்கறிகளை சேர்ப்பார்கள். இறைச்சித் துண்டு கிடைக்காத நிலையில் முழுமையான சைவ கூழும் சுவையானதாக மற்றும் சத்தானதாக இருக்கக்கூடும். எலிசாவின் வேலைக்காரன் கூழ்காய்ச்சும் வேலையை துவங்கிய பின், ஒவ்வொரு பயிற்சியாளரும் தன்னிடமிருந்த உட்பொருட்களை உள்ளே கொட்டினார்கள் (காண்க வசனம் 39). நான் இரவு நேர வெளிப்புற முகாம்களில் இருந்திருக்கிறேன், அங்கு "கோபோ கூழ்" மாலை நேர முக்கிய உணவாக வழங்கப்பட்டது. ஒவ்வொரு நபரும் உணவை கொண்டுவந்தார்கள். அந்தப் புட்டிகளிலிருந்ததெல்லாம் ஒரு பெரிய பாத்திரத்தில் போடப்பட்டு, வெளியில் நெருப்பு மூட்டி சூடுபடுத்தப்பட்டது. நாங்கள் அதிக பசியுடையவர்களாயிருந்திருந்தால், இதனால் விளையும் உணவானது பொதுவாக உண்ணுதற்குரியதாக இருந்தது.

கில்காலிலிருந்த ஒரு மாணவரிடத்தில் கூழில் போடுவதற்கு எதுவும் இருக்கவில்லை, ஆகவே, "அவன் கீரைகளை பறிக்க வெளியிலே போனான்" (வசனம் 39ஆ). பல காட்டுச் செடிகள் உட்கொள்ளத்தக்கவைகளாயிருந்தன. எனது தந்தை சில சமயம் இரவு உணவில் சேர்ப்பதற்காக "கீரைகளை" கொண்டு வரும்படி அருகிலுள்ள வயலுக்கு அனுப்பியிருக்கிறார். இஸ்ரவேல் பஞ்சத்தின் பிடியில் சிக்கியிருந்ததால் (வசனம் 38), காய்கறிகள் கிடைப்பதென்பது அரிதாகவிருந்தது. அந்த மனிதன் "பேய் கொம்மட்டிக் கொடியில்" "காய்களை" கண்டபோது, அவை கூழில் சேர்ப்பதற்கு அருமையானவைகள் என நினைத்து அவன் சந்தோஷப்பட்டதை நான் கற்பனை செய்கிறேன் (வசனம் 39ஆ, இ). அவன் "அதன் காய்களை மடிநிறைய அறுத்துவந்தான்" என அந்த வசனம் கூறுகிறது (வசனம் 39இ). கோழிப்பண்ணையில் முட்டைகளைச் சேர்க்க பாட்டியம்மா தனது மேல் உடையை பயன்படுத்தியதுண்டு. அதே விதத்தில், இந்த மனிதன் தன் உடையின் கச்சையோடு கூடிய முன்பகுதியில் காய்களை நிரப்பினான்.

இந்த "காய்கள்" என்ன காய்களாக இருந்தன என்பது தொடர்பாக பல யூகங்கள் இருந்திருக்கின்றன, ஆனால் நமக்கு தெரிந்ததெல்லாம் அவைகள் சாவுக்கேதுவானவைகளாயிருந்தன என்பதுதான் (வசனம் 40). உலக முழுவதிலும் தீங்கற்றதாய் தோன்றுகிற, அதே சமயத்தில் விஷத்தன்மையுள்ள தாவரங்கள் உள்ளன. எனது மனத்திற்கு வருகின்ற ஒரு உதாரணம் காளான்களைப் பற்றியதாகும். நான் காளான்களை விரும்புகிறேன் - ஆனால் சிலவகை காளான்கள் உட்கொள்ளப்பட்டால் - உங்களை கொன்றுவிடக்கூடும். கதையில் உள்ள மனிதனைபோல, எனக்கு உண்ணுதற்குரிய காளான் எது, விஷத்தன்மையுள்ள காளான் எது என்று எனக்கு தெரியாது, ஆகவே உங்கள் இரவு உணவுக்கு காளான்களை சேகரிக்க என்னை காட்டுக்குள் அனுப்புவது சரியான அறிவுரையாக இருக்காது.

உணவு தயாரிப்பில் தனது பங்களிப்புக்கு நன்றியுள்ளவனாக, அவன் அந்த காய்களை, "அரிந்து கூழ்பானையிலே போட்டான்" (வசனம் 39இ). "அது

இன்னதென்று அவர்களுக்கு தெரியாதிருந்தது" என அந்த வசனம் கூறுகிறது (வசனம் 39ஈ), அவர்களில் எந்த ஒரு மாணவராவது உள்ளூர் செடிகொடிகளைப் பற்றிய அறிவு உடையவராக இருந்திருந்தால், அவர் காய்களை அரிகிறவராக, கூழை கிண்டிவிடுபவராக இருந்திருக்கமாட்டார்.

கூழ் கலவை கொப்பளித்து கொதித்தபோது, அதின் வாசனை அந்த பகுதி யில் பரவியிருக்கலாம். நாக்கில் எச்சில் ஊறத் தொடங்கின. பல நாட்களில் அல்லது பல வாரங்களில், பலருக்கு இதுதான் நல்ல மற்றும் முதல் உணவாக இருந்திருக்கலாம். ஒரு வழியாக, கூழ் ஆயத்தமாகிவிட்டது. தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக, அவருக்கு நன்றி செலுத்திய பிறகு,[2] "சாப்பிட அதை ஜனங்களுக்கு வார்த்தார்கள்" (வசனம் 40அ). அங்கே போஷிக்கப்பட வேண்டிய அநேகர் இருந்ததால், பொது பயன்பாட்டிற்கான நிறைய பாத்திரங்களில் பகிர்ந்து கொள்ளும்படியாக, அந்த கூழை வார்த்தார்கள். அந்த மனிதர்கள் ஆவலுடன் சிறிய ரொட்டித் துண்டை கூழில் தோய்த்து, தங்கள் வாய் அருகே கொண்டு போவதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன் (வசனம் 40ஆ).

அந்த அமைதியான சூழ்நிலை திடீரென சிதைந்தது. அந்த மனிதர் எலிசாவை நோக்கி, "தேவனுடைய மனுஷனே, பானையில் சாவு இருக்கிறது" என்று சத்தமிட்டார்கள் (வசனம் 40இ)! "பானையில் சாவு இருந்தது" என்பது அவர்களுக்கு எப்படி தெரிந்தது? அந்த கூழ் வித்தியாசமான வாசனை அல்லது கசப்பு சுவை உள்ளதாக இருந்திருக்கலாம். உள்ளூர் செடிகொடிகளை அறிந்தி ருந்த மாணவர்களில் ஒருவர், அந்த கூழ் கலவையில் விஷத்தன்மையுள்ள காய்கறி இருப்பதை கவனித்து இருக்கலாம். அவர்கள் யோசிக்க தொடங்கினார்கள். அவர்களில் சிலருக்கு வயிற்று குமுட்டலும், வாந்தியும் ஏற்படத் துவங்கி இருக்கலாம் அவர்கள், "சாப்பிடக் கூடாமல்" இருந்தார்கள் என வசனம் சுருக்க மாய் கூறுகிறது (வசனம் 40ஈ). இரவு உணவு பேராபத்தாக மாறிவிட்டது!

உணவு தட்டுப்பாடு இருந்த நிலையில், அவர்கள் அந்த கூழை வெளியில் கொட்டிவிட தயங்கினார்கள் - ஆனால் வேறு என்ன தான் செய்ய முடியும்? எலிசா அவர்களை நோக்கி, "மாவை கொண்டுவர"ச் (பெரிது பெரிதாக அரைக்கப்பட்ட தானிய மாவு) சொன்னான் (வசனம் 41அ). மறுபடியுமாக, தீர்க்கதரிசி பிரச்சனையை தீர்க்க மற்றவர்களை ஈடுபடுத்தினான். எலிசாவினிடத்தில் மாவு கொண்டுவரப்பட்டபோது, "அதை பானையிலே போட்டார்" (வசனம் 41ஆ). தானிய மாவை கூழில் போடுவதற்கும், கூழின் விஷத்தன்மையை முறிப்பதற்கும் என்ன சம்மந்தமிருக்கிறது? மாசடைந்த தண்ணீரில் உப்பு கொட்டப்பட்டதற்கும் அது தூய்மையடைந்ததற்கும் என்ன சம்மந்தமோ அதே சம்மந்தம்தான் (2 இராஜாக்கள் 2:19-22) - கர்த்தருடைய செயலாற்றல் தவிர - வேறு எந்த சம்மந்தமும் இல்லை. மீண்டுமாக, வல்லமை செயல்முறையில் இருக்கவில்லை, ஆனால் எலிசா தேவனோடு கொண்டிருந்த உறவில் இருந்தது.

பின்பு எலிசா, "ஜனங்கள் சாப்பிடும்படி அவர்களுக்கு வார்" என்றான் (வசனம் 41இ). சில மாணவர்கள் அந்த கிண்ணத்தை சந்தேகத்துடன் கவனிப்பதை நான் பார்க்கிறேன். பின்பு தைரியமாக ஒருவர் ஒரு ரொட்டித்துண்டை அதில் தோய்ப்பதை நான் பார்க்கிறேன்: எச்சரிக்கையுணர்வோடு, அவர் அதை தன் வாயில் போட்டார். முகத்தை சுளித்துக்கொண்டு, மெதுவாக மென்று - நிதானித்து - விழுங்கினார். பின்பு சிரித்தமுகத்துடன், "மிகவும் ருசிக்கிறது"

என அறிவித்தார்! "அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற்போயிற்று" (வசனம் 41ஈ). உடனே எல்லாரும் கூழ்கிண்ணத்தில் கை வைத்தார்கள் மற்றும் சிறிப்பொலி ஆகாயத்தை நிரப்பியது - இது எல்லாமே எலிசா தன் உணவை பகிர்ந்து கொள்ள விரும்பியதால் ஏற்பட்டதாயிருந்தது.

எலிசா தன் அப்பத்தைப் பகிர்ந்து கொண்டார் (4:42-44)

அடுத்த கதையும் அநேகமாக எலிசா கில்காலில் இருந்தபோது சம்பவித்தது, "பின்பு பாகால் சலீஷாவிலிருந்து ஒரு மனுஷன் ... வந்தான்" (வசனம் 42அ) பாகால் - சலீஷா என்பது "சலீஷா பகுதியில் இருந்த ஒரு இடமாக இருந்தது," கில்காலின் வட மேற்கு பகுதியில் அமைந்திருந்த நாடாக இருந்தது[3] (காண்க 1 சாமுவேல் 9:4). (வரைபடம் காண்க.) "ஒரு மனுஷன் தேவனுடைய மனுஷனுக்கு முதற்பலனான ... அப்பங்களை கொண்டு வந்தான்" (2 இராஜாக்கள் 4:42ஆ). "முதற்பலன்" என்பவைகள் அறுவடையிலிருந்து கிடைத்த விளைச்சல் மற்றும் கர்த்தருக்கு கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தது. சாதாரணமாக, முதற்பலன்கள் ஆசாரியர்களுக்கு கொண்டு செல்லப்பட்டன (லேவியராகமம் 23:10), ஆனால் இஸ்ரவேலில் உண்மையான ஆசாரியர்கள் இருக்கவில்லை. தங்களை இன்னமும் தேவனுக்கு அர்ப்பணித்திருந்தவர்கள், "எலிசாவை - தங்கள் உடன்படிக்கையின் கர்த்தருடைய - உண்மையான பிரதிநிதியாகப் பார்த்தார்கள்,"[4] இப்படியாக அந்த மனிதன் தீர்க்கதரிசிக்கு முதற்பலன்களை கொண்டுவந்தான்.

அந்த மனிதன், "வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டுவந்தான்" (2 இராஜாக்கள் 4:42ஆ). நீங்கள் "சாக்குப்பை" என வாசிக்கும்போது, பெரிய துணிப்பையை (100 பவுண்ட் உணவு தானியம் பிடிக்கக்கூடிய) நினைக்க வேண்டாம். "சாக்குப்பை" என மொழிபெயர்க்கப்பட்டிருப்பது, ஒருவர் தன் பொருட்களை எடுத்துச்செல்ல பயன்படுத்தும் (பணப்பை போன்றது) பையை குறிக்கிறது. மீண்டும் நீங்கள் "அப்பங்கள்" என்று வாசிக்கும் போது, சுடப்பட்ட ஒரு பெரிய அப்பத்தை நினைத்துக்கொள்ள வேண்டாம். மாறாக, சிறிய அப்ப உருளைகளை நினையுங்கள். மேலும் வாற்கோதுமை என்பது ஒரு சாதாரண தானியமாக இருந்தது, அப்பம் சுடுவதற்கு விரும்பப்படத்தக்க தானியமாக இருக்கவில்லை. எப்படியிருப்பினும், தேசம் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது என்பதை மறக்க வேண்டாம். "இருபது வாற்கோதுமை அப்பங்களும் தாள் கதிர்களும்" நன்கொடையாளர் தரப்பில் ஒரு உண்மையான பலியை பிரதிநிதித்துவப் படுத்தியிருக்கும். அவைகள் அந்த மனிதனின் தேவ பக்திக்கும் மற்றும் அவன் எலிசாவின் மேல் கொண்டிருந்த மரியாதைக்கும் சாட்சியாக இருந்தது.

ஐந்து வாற்கோதுமை அப்பங்கள் என்பது ஒரு சிறுவனுடைய மதிய உணவுக்கு மட்டுமே போதுமானதாகவிருந்தது (காண்க யோவான் 6:9). இருபது வாற்கோதுமை அப்பங்களும் தாள் கதிர்களும் எலிசா மற்றும் அவருடைய வேலைக்காரனுக்கு இரண்டு நாட்களுக்கு மிகவும் குறைவாகவே போதுமானதாயிருந்திருக்கும். அந்த பரிசுப்பொருளை தீர்க்கதரிசி தனக்காக வைத்திருந்தால் யாரும் அவரை குற்றப்படுத்தியிருக்க மாட்டார்கள் - ஆனால் அவர் பகிர்ந்து கொடுப்பதில் நம்பிக்கையுள்ள ஒரு மனிதராக இருந்தார். தனக்கிருந்த எதையும் அவர் தன்னுடையது என கருதவில்லை (காண்க

நடபடிகள் 4:32), மாறாக, அதை கர்த்தருடையது என நினைத்தார் (சங்கீதம் 24:1; காண்க யோவான் 3:27; 1 கொரிந்தியர் 4:7) மேலும் அவைகளை குறைவிலுள்ளவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் விரும்பினார். இப்படியாக அவர் தன் வேலைக்காரனை நோக்கி, “ஜனங்களுக்கு சாப்பிடக் (வாற்கோதுமை அப்பங்களையும் தாள் கதிர்களையும்) கொடு” என்றான் (2 இராஜாக்கள் 4:42ஈ). இங்கே “ஜனங்கள்” என குறிப்பிடப்படுபவர்கள் அநேகமாக முந்தைய சம்பவத்தில் எலிசாவால் போஷிக்கப்பட்ட பயிற்சி - தீர்க்கதரிசிகளாய் இருந்தார்கள்.

வேலைக்காரன் சந்தேகப்பட்டான். அதற்கு அவனுடைய பணிவிடைக்காரன்: “இதை நான் நூறுபேருக்கு முன் வைப்பது எப்படி?” என்றான் (வசனம் 43அ). அந்த “பணிவிடைக்காரன்” அநேகமாக கேயாசியாக இருந்தான்; வார்த்தைகள் அந்த மனிதனுடைய உலகக் கண்ணோட்டத்திற்கு பொருந்துகிறது (காண்க 5:20-27). இந்த வேலைக்காரன் நடந்த கொண்டவிதம், இயேசு கொஞ்சம் உணவைக் கொண்டு ஆயிரக்கணக்கானவர்களை போஷிப்பதற்கு முன்பு அவருடைய சீஷர்கள் கூறியதை நமக்கு நினைவுபடுத்துகிறது (காண்க மத்தேயு 14:17; மாற்கு 6:37; யோவான் 6:8, 9).

கேயாசியின் கண்ணோட்டம் புரிந்து கொள்வதற்கு எளிதானது. பசியோடிருக்கும் நூறு மனிதருக்கு முன்பாக ஒரு இருபது சிறிய அப்பத்துண்டுகளை வைப்பது, அவர்களுடைய வயிற்றை நிரப்புவதற்கு பதிலாக அதிக ஏமாற்றத்தை கொடுக்கிறதாக இருக்கும்; ஒவ்வொருவருக்கும் ஒரு சிறிய துண்டுதான் கிடைக்கும். ஒவ்வொருவரும் ஒரு முறை மட்டும் விழுங்குவதற்குரியதைப் பெற்றிருப்பார்கள். பின் உணவு தீர்ந்து போயிருக்கும். வேறு ஒரு எண்ணமும் வேலைக்காரன் மனதில் இருந்திருக்கலாம். “நாம் நமது உணவை பிறருக்கு கொடுத்துவிட்டால், *நாம்* எதை சாப்பிடுவோம்?” எப்படியிருந்தாலும், கேயாசியின் வேலை, கேள்வி கேட்பதல்ல, மாறாக கீழ்ப்படிவதாக இருந்தது. ஒரு விதவையின் எண்ணெய்யை வர்த்திக்கச் செய்ய (4:1-7), மற்றும் ஒரு இராணுவத்திற்கு தண்ணீர் விநியோகம் செய்ய (2 இராஜாக்கள் 3:9-20) தேவன் பயன்படுத்தின ஒரு மனிதருக்கு ஊழியம் செய்கிறோம் என்பதை அவர் மறந்துவிட்டாரா?

“இருபது சிறிய அப்பத்துண்டுகளை கொண்டு நூறு மனிதர்களைப் போஷிக்க என்னால் முடியாது, ஆகவே இது செய்யப்பட முடியாது!” என்று கேயாசி சிந்தித்திருக்கலாம். இப்படி சிந்திப்பது பொதுவானதுதான், ஆனால் அதில் ஒரு பெலவீனம் இருக்கிறது. யாரோ ஒருவர் நான் ஒரு நாளில் இத்தனை மைல்கள் பயணம் செய்ய வேண்டுமென என்னிடம் கூறுவதாக வைத்துக்கொள்வோம். நான் என் தலையை அசைத்துக்கொண்டு, “ஒரு நாள் முழுவதும் ஓடினாலும், இரவுக்கு முன்பாக அந்த தொலைவை என்னால் எட்டமுடியாது!” என கூறுகிறேன். ஆனால் எனக்கு அறிவுரை கூறிய மனிதர், “நீங்கள் இதை உங்கள் சொந்த பெலத்தால் செய்ய வேண்டியதில்லை! நீங்கள் பயணம் செய்வதற்கான ஒரு வசதியை உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறேன்!” என பதிலளிக்கிறார். நான் கால் நடையாக ஒரு நாளில் எவ்வளவு தொலைவு பிரயாணம் செய்ய முடியும் என்பதில் சில அளவீடுகள் இருப்பது உண்மைதான் - ஆனால் எனக்கு ஒரு குதிரை அல்லது சரக்கு வண்டி அல்லது ஒரு வாகனத்தை கொடுங்கள், சூழ்நிலை வலிமையாக மாறிவிடுகிறது. கேயாசியைப்போல், பலர் *தேவனுடைய*

உதவியால் தங்களால் என்ன சாதிக்கக்கூடும் என்பதை பரிசீலிக்காமல், தங்களால் என்ன செய்யக்கூடும் என்பதை மட்டும் பரிசீலிக்கிறார்கள்.

"அதை ஜனங்களுக்கு சாப்பிடக் கொடு" என வேலைக்காரனுக்கு திரும்ப கட்டளையிட வேண்டியதாயிருந்ததில் எலிசா கொஞ்சம் எரிச்சலடைந்தாரா என சிந்திக்கிறேன் (வசனம் 43ஆ). "சாப்பிட்டபிற்பாடு இன்னும் மீதியுண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றும் தீர்க்கதரிசி கூடுதலாகக் கூறினார் (வசனம் 43இ). "கர்த்தர் சொல்லுகிறார், இதில் தேவன் ஈடுபடுகிறார் என்பதையும் மற்றும் தேவனாலே எல்லாம் கூடும்" என்பதையும் நாம் அறிந்து கொள்ளச் செய்கிறது (மத்தேயு 19:26). "இன்னும் மீதி உண்டாயிருக்கும்" என்பது ஒவ்வொருவரும் சாப்பிடமுடியும் என்பது மட்டுமல்ல, ஒவ்வொருவரும் திருப்தியாக சாப்பிடமுடியும் எனவும் பொருள்படுகிறது.

கேயாசி "அவர்களுக்கு [நூறு மனிதர்கள்] முன்பாக அதை [வாற்கோதுமை அப்பம் மற்றும் தாள் கதிர்] வைத்தான்" (வசனம் 44அ). அப்போது அவன் முறுமுறுத்தானா என நான் சிந்திக்கிறேன். "முணுமுணுத்தல், முணுமுணுத்தல் ... இது அர்த்தமற்றது! ... முணுமுணுத்தல், முணுமுணுத்தல் ... நான் செய்த அறிவில்லாத செயல் ... முணுமுணுத்தல், முணுமுணுத்தல்." வேலைக்காரனுக்கு விசுவாச குறைவு இருந்தபோதிலும், கூட்டத்திலிருந்தவர்கள் தங்களுக்கு வேண்டியமட்டும் சாப்பிட்டார்கள், கர்த்தர் முன் உரைத்தபடியே - உணவு இன்னும் எஞ்சியிருந்தது (வசனம் 44ஆ). இயேசுவானவர் ஒரு சில அப்பங்கள் மற்றும் மீன்களைக் கொண்டு திரளானவர்களை போஷித்த அந்த தருணங்கள் நமக்கு மீண்டும் நினைவுபடுத்தப்படுகின்றன (மத்தேயு 14:20; 15:37).

இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது என்று வசனப்பகுதி நமக்கு எதுவும் சொல்வதில்லை. வார்க்க வார்க்கக் குறையாத குடத்திற்குப் பதிலாக (2 இராஜாக்கள் 4:1-6), எடுக்க, எடுக்க, குறையாத சாக்கு பையிலிருந்து கேயாசி உணவை எடுத்துக் கொண்டிருந்தான். இருப்பினும் இது நடந்தது, அவனும் மற்றவர்களும் (உணவு உண்ட நூறு பேரும்) முடிவு இல்லாமல் தொடர்ந்து உணவு அளிப்பு இருந்து கொண்டிருந்ததைப் பார்த்து மேலும் மேலும் வியப்படைந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?

இவ்விதமாக, தேவன் தம்மை விசுவாசிப்பவர்களுக்கு தம்முடைய கரிசனை மற்றும் பாதுகாப்பை விளங்கப்பண்ணுகிறார் (காண்க மத்தேயு 6:33). இந்த சந்தர்ப்பத்தில், அவர் எலிசாவின் தாராளமனமுள்ள பகிர்வின் மூலம் அதை செய்தார். எலிசா தன்னிடத்தில் அதிகமாக இருந்தாலும் சரி, மிக குறைவாக இருந்தாலும் சரி, தன்னிடத்திலிருந்ததை பிறரோடு பகிர்ந்துகொள்ளத் தயங்காத ஒரு மனிதராக இருந்தார்.

நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும்

நமது வசனப்பகுதியை கவனிக்கையில், பல செயல் விளக்கங்கள் மனதில் வருகின்றன. உதாரணமாக, தேவன் கிருபையால் அவருடையவர்களுக்கு அருளும் அவரது அளிப்புகளில் நாம் கவனம் செலுத்தக்கூடும். பயிற்சி - தீர்க்கதரிசிகள் அந்த கூழை குடித்தபின், அடுத்த வேளை உணவு எங்கிருந்து வரும் என அவர்கள் ஆச்சரியப்பட்டிருக்கலாம். அப்போது கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது மற்றும் ஒரு மனிதர் சாக்கு பையில் வாற்கோதுமை அப்பங்களையும் மற்றும் தானியத்தையும் வைத்துக்கொண்டு நின்றார்! ஆண்டுகளாக, பல

கிறிஸ்தவர்கள் எதிர்பாராத இடத்திலிருந்து உதவி வந்த வரையிலும், இந்த நெருக்கடியை அல்லது அந்த நெருக்கடியை நாம் எப்படி சமாளிக்கபோகிறோம் என்று தவித்துக்கொண்டிருந்தார்கள். "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோமர் 8:32).

மேலும், நம்மை சூழ்ந்துள்ள மறைவான அபாயங்களைப் பற்றி பேசுவதற்கு நாம் "பானையில் சாவு இருக்கிறது" என்ற சொற்றொடரை இரவல் வாங்க தூண்டப்படுவோம். ஒரு சிலருக்கு "தீங்கற்றதாய்" தோன்றுகிற காரியங்களில் "பயங்கரமான ஆபத்துகள்" ஒழிந்துள்ளன:

- பல சினிமா படங்கள் மற்றும் தொலைகாட்சி நிகழ்ச்சிகள், சில புத்தகங்கள் மற்றும் இசை நாடாக்கள்.
- புகைத்தல், குடித்தல் மற்றும் சட்ட விரோதமான போதை பொருட்களை பயன்படுத்துதல்.
- பொருளாசை மற்றும் பொதுவான உலகபிரகாரமான வாழ்க்கை முறை.
- ஆவிக்குரிய அறியாமை மற்றும் ஆவிக்குரிய தவறுகள்.

ஆம், நாம் படித்த வசனப்பகுதிகளிலிருந்து பல செயல்விளக்கங்களை எடுத்துக்கொள்ளமுடியும் - ஆனால் நான் நாம் பின்பற்ற வேண்டிய எலிசாவின் தாராள குணத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

பகிர்ந்து கொள்ளுதலின் முக்கியத்துவம்

பகிர்ந்து கொள்ளுதல் கற்றுக்கொள்வதற்கு ஒரு சுலபமான பாடம் அல்ல. எனது மூத்த மகள் சிண்டி, மூன்று வயதானவளாயிருந்த போது, அவளுடைய வேத வகுப்பு ஆசிரியர் பகிர்ந்து கொள்ளுதல் பற்றிய ஒரு பாடத்தை போதித்துள்ளார். இந்த பாடத்தை கைக்கொள்வதற்கு ஏதுவாக, வகுப்பில் இருந்த பிள்ளைகள் தங்கள் பொம்மைகளை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. சிண்டி, அருகிலிருந்த சிறு பெண்பிள்ளையிடம் நடந்து சென்று, அவள் கையிலிருந்த பொம்மையைப் பறித்துக் கொண்டு, அவள் சிறிய காலை மிதித்து கொண்டு, "*என்னோடு* பகிர்ந்து கொள்!" என்று கூறினாள்.

பகிர்ந்து கொள்ளுதல் எப்போதும் நமக்கு விருப்பமான பயிற்சியாக இல்லாதிருப்பினும் - கர்த்தர் தமது கட்டளையாலும் முன் உதாரணத்தினாலும் அதை செய்யும்படி கூறுகிறார். யோவான் ஸ்நானகன் தம்மை பின்பற்றுவோரை நோக்கி, "இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன்" என்றான் (லூக்கா 3:11). எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள், "காணியாட்சிகளையும் ஆஸ்தி களையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்" (நடபடிகள் 2:45). பவுல் உணவு தேவனால் படைக்கப்பட்டதென்று கூறுகிறார். "விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்கள் ..." (1 தீமோத்தேயு 4:3). "நன்மை

செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும்" தீமோத்தேயு போதிக்க வேண்டியவராயிருந்தார் (1 தீமோத்தேயு 6:18). எபிரெயர் நிருபத்தின் ஆசிரியர், "அன்றியும், நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்" என போதித்தார் (எபிரெயர் 13:16அ).

பிறரோடு பகிர்ந்து கொள்வது தொடர்பாக பல வசனப்பகுதிகள் போதிக்கின்றன:

> *ஆகையால், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம் (கலாத்தியர் 6:10).*

> *திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன் (எபேசியர் 4:28).*

> *ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? (யாக்கோபு 2:15, 16).*

பகிர்ந்து கொள்ளுதல் பல சந்தர்ப்பங்களை நமக்கு கொண்டுவருகின்றன:

- *சகலமும் தேவனுக்கு சொந்தமானதெனவும், நாம் பெற்றிருப்பவைகளுக்கு நாம் உக்கிராணக்காரராக மட்டும் இருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் உண்டாகியிருக்கிறது.*
- *எல்லாவற்றையும் நம்மோடு பகிர்ந்து கொள்கிற தமது மிகவும் விலையேறப்பெற்ற "பொக்கிஷமாகிய" தமது குமாரர் இயேசு கிறிஸ்துவையே நம்மோடு பகிர்ந்துகொண்ட தேவனைப் போல மாறு வதற்குறிய சந்தர்ப்பம் நமக்கு கிடைக்கிறது.*
- *நமது அன்பை நடைமுறையில் மற்றவர்களுக்கு தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது.*
- *மற்றவர்களை சந்தோஷப்படுத்துகிற சந்தர்ப்பம் நமக்கு கிடைக்கிறது.*
- *சுயநலத்திற்கெதிரான வாழ்நாள் போராட்டத்தில் முன்னேறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. பகிர்ந்து கொள்வது நம்மில் பலருக்கு கடினமா யிருப்பதற்கு காரணம் என்னவெனில், நாம் சுயத்தை மையமாகக் கொண்டு செயல்படுவதுதான். "நாம் கடினமாக உழைத்து இவைகளை பெற்றுள்ளோம், இது நமக்குரியது, இதை நாம் ஏன் வெளியில் கொடுக்க வேண்டும்?" என்பது நமது கேள்வியாகவுள்ளது. நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக, தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள தேவன் நமக்கு உதவி செய்வாராக.*

"சிலர் வாழ்க்கையின் தேவைகளுக்காக முயற்சி கூட செய்வது இல்லை:

பிறரின் உதவியால் வாழ்வதில் அவர்கள் திருப்தியடைகிறார்கள். நிச்சயமாக, அப்படிப்பட்டவர்களோடு பகிர்ந்து கொள்ள நாம் கடமைப்பட்டவர்கள் அல்ல. என சில ஆட்சேபனைகள் எழுப்பக்கூடும்!'' இல்லை, நாம் உதவி செய்யவேண்டியதில்லை. "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால், அவன் சாப்பிடவும் கூடாது ..." என பவுல் போதிக்கிறார் (2 தெசலோனிக்கேயர் 3:10அ). எப்படியிருப்பினும், மற்றவர்களுடைய சூழ்நிலையை குறித்து நாம் நிச்சயமாக அறிந்திருப்பது சாத்தியமல்ல. மற்றவர்களை குறித்து தீர்ப்பு செய்வதில் நாம் குற்றவாளிகளாக மாறாதபடி ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். நாம் தவறுவோமானால், நன்மை செய்கிற பகுதியில் தவறுவோமாக.

பகிர்ந்து கொள்ளுதலின் ஆசீர்வாதங்கள்

இதை கருத்தாய் சிந்தியுங்கள்: எலிசா பகிர்ந்து கொண்டதற்காக உபத்திரவப்பட்டாரா? அவர் அடுத்த வேளை உணவின்றி இருந்தாரா? அவர் பட்டினியோடிருந்தாரா? இல்லை. தேவன் அவருக்கு தேவையானவைகளை தந்து ஆசீர்வதித்தார் - மேலும் தன்னால் மற்றவர்களுக்கு எந்த காரியங்களிலெல் லாம் உதவி செய்ய முடிந்தது என்பதை அறிந்து அவர் மனநிறைவடைந்தார்.

உதாரத்துவமாய் பகிர்ந்து கொள்கிறவர்கள் ஒரு ஆச்சரியமான சத்தி யத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள்: பகிர்ந்து கொள்வதால் நாம் நஷ்டமடைவ தில்லை. நாம் பகிர்ந்து கொள்கிற சில காரியங்களில் இதை தெளிவாய் அறிந்தி ருக்கிறோம். நாம் நமது மகிழ்ச்சியை பகிந்து கொண்டால், நமது மகிழ்ச்சி அதி கமாய் பெருகுகிறது, ஆனால் அது குறைவதில்லை. நாம் நமது கருத்துக்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டால் அதிக கருத்துக்களை உடையவர்களாக மாறுகிறோம். அவைகள் குறைந்துபோவதில்லை. எனது நண்பர் ஒருவர் ரோஜா மலர்கள் விஷயத்திலும் இந்த கொள்கை உண்மையாக இருப்பதாக என்னிடம் கூறியுள்ளார். அவர் ஒரு ஆண்டின் துவக்கத்தில் பூக்கும் ரோஜா மலர்களை வெட்டி எடுத்து மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிறார். இவ்விதமாக ரோஜா புதர் அந்த பருவகாலம் முழுவதும் ரோஜா மலர்களைக் கொடுக்கத்தக்கதாக தூண்டப்பட்டிருந்தது என கூறினார்.

நாம் பகிர்ந்து கொள்கிற மற்ற காரியங்களில், உதாரணமாக பணம் மற்றும் உடமைகள் ஆகியவற்றை பகிர்ந்து கொள்வதில் இந்த கொள்கை அவ்வளவு தெளிவாக தெரியாதிருக்கலாம். இருப்பினும், நமது கர்த்தர் அது உண்மை யாயிருக்கிறது என்பதை உறுதி செய்கிறார். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் ... நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என நமது ஆண்டவர் இயேசு போதித்தார் (லூக்கா 6:38). மறுபடியுமாக அவர், "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என போதித்தார் (நடபடிகள் 20:35).

> *"பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும்*

பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்" என பவுல் எழுதினார் (2 கொரிந்தியர் 9:6-8).

முடிவுரை

பகிர்ந்து கொள்வதை நாம் ஒரு பழக்கமாக மாற்ற வேண்டுமென்றும், நமக்குள்ளதை பகிர்ந்து கொள்ள எலியாவின் முன்மாதிரியினால் நாம் ஏவப்படவேண்டுமென்றும் நான் ஜெபிக்கிறேன். "ஒவ்வொரு நாளிலும் சிறிதளவாவது பகிர்ந்து கொள்வதே, அதிக அளவில் பகிர்ந்து கொள்வதற்கான வழியாயிருக்கிறது" என யாரோ ஒருவர் கூறியுள்ளார்.[5]

சுவிசேஷம் - இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி - இது தான் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான செய்தியாயிருக்கிறது. நாம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கும் மற்றும் சாவுக்கேதுவான கூழ் உணவுக்கும் சில ஒப்பீடுகளை சிலர் காண்கின்றனர்:

- கொம்மட்டிக் காய்கள் பானையில் சாவைக் கொண்டு வந்ததுபோல - பாவம் நம் வாழ்வில் பிரவேசிக்கும் போது, அது ஆவிக்குரிய மரணத்தை கொண்டுவருகிறது.
- தீர்க்கதரிசிகளின் புத்திரர் எதுவும் செய்யக் கூடாமல், வேதனையில் கதறியது போல, நாமாகவே நமது சூழ்நிலையை மாற்றியமைக்க இயலாதவர்களாக இருக்கிறோம்.
- அந்த கூழ் உணவின் விஷத் தன்மை நீக்கப்பட்டது போல, அவரிடத்தில் திரும்புகிறவர்களின் பாவங்களை இயேசுவின் இரத்தம் நீக்கி சுத்தி கரிப்பதற்காக, தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- உணவைக் கொண்டு வருவதில் எலிசா, மாணவர்களை ஈடுபடுத்தியது போல, நமது இரட்சிப்பில் நாம் ஒரு பகுதியை உடையவர்களாயிருக்க தேவன் அனுமதிக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நாம் விசுவாசிக்கவேண்டும் (யோவான் 3:16), நாம் நமது பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் (லூக்கா 13:3), கிறிஸ்துவில் நமது விசுவாசத்தை அறிக்கை செய்யவேண்டும் (மத்தேயு 10:32), கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும் (மாற்கு 16:16), மற்றும் "முடிவுபரியந்தம்" உண்மையாய் வாழவேண்டும் என கர்த்தர் எதிர்பார்க்கிறார் (மத்தேயு 10:22).

தான் பகிர்ந்து கொண்டதிலிருந்து மற்றவர்கள் பயனடைந்ததை பார்த்து, எலிசா புன்முறுவல் பூத்திருக்க வேண்டும். அதேபோல் நான் சுவிசேஷத்தை உங்களோடு பகிர்ந்துகொள்வதால், உங்கள் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவதைக்காட்டிலும் வேறு எதுவும் என்னை அதிக மகிழ்ச்சியுள்ளவனாக்காது.

குறிப்புகள்

[1]Adapted from F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 71. [2]இது குறிப்பிடப்படவில்லை, ஆனால் இப்படிப்பட்ட ஒரு

ஜெபத்தை ஏறெடுத்தல், அந்த சமூகத்தின் வழக்கமான ஜெபமுறையாக இருந்திருக்கலாம். [3]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 315. [4]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 531. [5]Eleanor Doan, comp., *Speakers Sourcebook* (Grand Rapids, Mich.: Ministry Resources Library, Zondervan Publishing House, 1960), 224.

9

கரிசனைப்பட்ட ஒரு மனிதன்

[2 இராஜாக்கள் 6:1–7]

எழுத்தாளர்கள் கதைகளின் நீளத்திற்கு தக்கதாக அதை வகைப்படுத்துகின்றனர். சில "சிறு கதைகள்" என அழைக்கப்படுகின்றன. கதைகள் மிகவும் சிறியவைகளாக இருந்தால், அவைகள் "சிறிய சிறு கதைகள்" என அழைக்கப்படுகின்றன. இந்தப் பாடம், அரசின் உயர் அதிகாரிகளுடன் கொண்டிருந்த செயல்பாடுகள் தொடர்பாக நீண்ட விபர பதிவுகளை கொண்ட எலிசாவைப் பற்றிய ஒரு "சிறிய சிறு கதையை" மையமாகக் கொண்டுள்ளது. இது முந்திய பாடத்தோடு சரியாய் பொருந்துவதால், நமது பாடவரிசையில் இதை நான் இங்கே வைத்துள்ளேன். நான் அந்த பாடத்தை "பகிர்ந்து கொண்ட ஒரு மனிதன்" என அழைத்தேன் மற்றும் இந்தப் பாடத்தை "கரிசனைப்பட்ட ஒரு மனிதன்" என அழைக்கிறேன்.

இது சுருக்கமான ஒரு பதிவாக இருக்கிறபடியாலும் மற்றும் "முக்கியத்துவம் இல்லாத" ஒரு பிரச்சனையைப் பற்றி பேசுவதாக கருதப்படுவதாலும் இது, "எலிசாவை பற்றி சொல்லப்பட்டுள்ள கதைகளில் மிகவும் அற்பமான கதை" என அழைக்கப்பட்டது உண்டு.[1] எலிசாவின் வாழ்வு பற்றிய சில தொகுப்புகள் இந்த கதையைப் பற்றி கருத்து எதுவும் கூற விரும்பவில்லை, மற்றவைகள் ஓரிரு வார்த்தைகள் கூறிவிட்டு அப்படியே விட்டுவிட்டார்கள். இருப்பினும், பர்டன் கோப்மேன் என்பவரின் கூற்றுப்படி, "அந்த புகழ்மிக்க தீர்க்கதரிசி செய்த அற்புதங்களிலேயே இது மிகவும் முக்கியமான ஒரு அற்புதமாய் இருக்கிறது, ஏன்? இது ஏழை மக்களின் இருதயங்களை அழுத்திக்கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கான தேவனுடைய கரிசனையை வலியுறுத்துகிறது."[2]

ஒரு "அற்பமான" பிரச்சனை, அப்படித்தானே!

மனிதன் என்ன செய்யக்கூடும்

நம்முடைய கதை துவங்குகையில், எலிசா மறுபடியும் எரிகோவின் தீர்க்கதரிசிகள் பள்ளியில் "தீர்க்கதரிசிகளின் புத்திரரோடு" இருந்தார் (காண்க 2:5), இந்தப்பட்டணம் யோர்தான் நதிக்கு அருகில் இருந்தது (காண்க 6:2). எலிசாவின் ஊழியம் எந்த அளவு வெற்றி பெற்றிருந்தது என்பது, அவருடைய மாணவர்கள் தங்கும் விடுதியில் இட வசதி போதவில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர்கள் எண்ணிக்கை பெருகியிருந்தது தெளிவாக காட்டுகிறது. "தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி: இதோ, நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது" என்றார்கள் (6:1). திருமணமாகியிருந்த மாணவர்கள் அநேகமாக தனி குடியிருப்புகளில் தங்கினார்கள் (காண்க 4:1-7), ஆனால் திருமணமாகாத தீர்க்கதரிசிகள் ஒன்றாக வாழ்ந்திருக்கலாம். குறைந்த பட்சம், அவர்களுக்கு ஒரு பொது கூடுகை இடம்

மற்றும் உணவு உண்ணும் அறை இருந்தது (காண்க 4:38-44). அந்தக் கட்டிடம் அவர்கள் எண்ணிக்கைக்கு போதுமானதாக இருக்கவில்லை. இது ஒரு நல்ல பிரச்சனை தான், ஆனால் வளர்ச்சி தொடரவேண்டுமானால், இது உடனே தீர்க்கப்பட வேண்டும்.

பயிற்சி தீர்க்கதரிசிகளிடத்தில் ஒரு ஒப்பந்ததாரரை அமர்த்தி பெரிய வசதியான ஒரு கட்டிடத்தை கட்டுமளவுக்கு நிதிவசதி இருக்கவில்லை. அப்படியானால், இந்த பிரச்சனை எப்படித் தீர்க்கப்படமுடியும்? அவர்களே அதை கட்டிக்கொள்ள வேண்டும். அவர்கள் எலிசாவை நோக்கி, "நாங்கள் யோர்தான் மட்டும் போய் அவ்விடத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு உத்திரத்தை வெட்டி, குடியிருக்க அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை உண்டாக்குவோம்" என்றார்கள் (வசனம் 2அ). பண்டைக்கால எழுத்தாளர்கள் கூற்றுப்படி, யோர்தான் நதிக்கரையில் வில்லோ, பாப்லோர் மற்றும் டாமரிக்ஸ் போன்ற மரங்கள் மற்றும் புதர்கள் அதிக அளவில் இருந்தன.[3] அந்த மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்திருந்த காரணத்தால், தாங்கள் உடல் உழைப்பு கைவேலை செய்யக் கூடாத அளவுக்கு தாங்கள் "பெரியவர்கள்" என அவர்கள் சிந்திக்கவில்லை என்பதை கவனியுங்கள். அநேக ஆராதனை கூடங்கள் அதை யார் பயன்படுத்துவார்களோ அவர்களாலே கட்டப்பட்டுள்ளன.

எலிசா அவர்களை பார்த்து, "போங்கள்" என்றான் (வசனம் 2ஆ). ஆனால் மாணவர்களில் ஒருவன் அவரும் தங்களோடு வரும்படி கேட்டுக்கொண்டான் அவர்களில் ஒருவன்: "நீர் தயவு செய்து உமது அடியாரோடே வரவேண்டும்" என்றான் (வசனம் 3அ). அந்த வேண்டுகோள் மரியாதை மற்றும் பாசத்தைச் சுட்டிக்காட்டுகிறது. (சில ஆசிரியர்கள் தங்களோடிருப்பதை மாணவர்கள் விரும்பி ஏற்க மாட்டார்கள்.) அதற்கு தீர்க்கதரிசி, "நான் வருகிறேன்" என்று சொல்லி, "அவர்களோடே கூடப்போனான்" (வசனங்கள் 3ஆ, 4அ).

அவர்கள் யோர்தான் நதியை அடைந்தபோது, அவர்கள் தங்களுக்கு மரத்தாலான ஒரு அறை வீட்டைக் கட்டுவதற்கு, "மரங்களை வெட்டினார்கள்" (வசனம் 4ஆ) அநேகமாக, எலிசாவும் அந்த மாணவர்களோடு சேர்ந்து வேலை செய்தார். கடந்த காலத்தில், சுவிசேஷ ஊழியர்கள் விவசாய சமூகங்களில் சுவிசேஷக் கூட்டங்கள் நடத்திய போது, பகல் நேரங்களில் அவர்கள் வயல்களில் வேலை செய்துவிட்டு, இரவு நேரங்களில் பிரசங்கம் செய்தார்கள்.

மனிதனால் செய்ய முடியாதது

கோடாரிகளின் சத்தத்தை நான் கேட்கிறேன், மற்றும் மாணவர்களின் நெற்றியில் வியர்வை வழிவதையும் பார்க்கிறேன். திடீரென, அவர்களில் ஒருவனிடமிருந்து ஒரு கூக்குரல் வருகிறது. "ஒருவன் ஒரு உத்திரத்தை (அதை செய்வதற்கான மரம்) வெட்டி விழுத்துகையில் கோடாரி தண்ணீரில் விழுந்தது" (வசனம் 5அ). இது அரிதாக நடக்கிற காரியம் அல்ல (காண்க உபாகமம் 19:4, 5); சாதாரணமாக, அது ஒரு பிரச்சனையை ஏற்படுத்தாது. நான் விடலைப்பருவத்தி லிருந்தபோது, அடுப்பெறிக்க விறகு வெட்டவேண்டியிருந்தது. எனது கோடாரி எப்போதாவது அதன் கைப்பிடியிலிருந்து கழன்று விழுந்திருக்கிறது. நான் அதை கண்டுபிடித்து, கைப்பிடியில் பாதுகாப்பாக "பொருத்தி," மீண்டும் மரம் வெட்டியிருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில், பயிற்சியாளர் யோர்தான் நதி யின் ஓரத்தில் மரம் வெட்டிக்கொண்டிருந்தார் மற்றும் "கோடாரி தண்ணீரில்

[குழம்பிய நீர்] விழுந்தது" (2 இராஜாக்கள் 6:5ஆ). அந்த மனிதன் எலிசாவை நோக்கி, "ஐயோ என் ஆண்டவனே! அது இரவலாக வாங்கப்பட்டதே" என்று கூவினான் (வசனம் 5இ).

உங்களுக்கு இது ஒரு பெரிய பிரச்சனையாக தோன்றலாம் அல்லது அப்படி தோன்றாமலும் இருக்கலாம், ஆனால் அந்த மனிதனுடைய இடத்திலிருந்து அந்த சூழ்நிலையை பாருங்கள். அவன் அருகாமையிலுள்ள இரும்பு கடைக்கு சென்று, வேறு ஒரு கோடாரியை வாங்கிவந்து, காணாமற்போனதற்கு பதிலாக அதை பொருத்துவதற்கான சாத்தியம் இல்லாமல் இருந்தது. அந்த தேசத்தில் இரும்பு சாமான்களின் பற்றாக்குறை இருந்தது (காண்க 1 சாமுவேல் 13:22), மற்றும் அவைகள் அதிக விலையுள்ளவைகளாயிருந்தன. கோடாரிகள் அதிக அளவில் புழக்கத்தில் இருந்திருந்தாலும், நிச்சயமாக பொருத்துவதற்கு இந்த மனிதனால் ஒரு மாற்று கோடாரியை வாங்கி இருந்திருக்க முடியாது. அவன் கோடாரியை இரவல் வாங்கவேண்டிய அவசியத்தில் இருந்தான். "இரவல் வாங்கினான்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை அவன் "கெஞ்சினான்" என பொருள்படும். அந்த கோடாரியை அவன் இரவல் வாங்குவதற்கு முன்பாக, அந்த எஜமான உரிமையாளரை *கெஞ்சவேண்டியிருந்தது* - இப்போது அது போய்விட்டது!

இன்று சிலர் தாங்கள் இரவல் வாங்கும் பொருட்களைக் குறித்து கவலையீனமாக இருக்கிறார்கள், ஆனால் மோசேயின் பிரமாணம் இரவல் வாங்குவதை கடுமையாக கருதியது. ஒரு மனிதன் இரவல் வாங்கினது தொலைந்து போனால், அதற்கு அவன் பதிலீடு செய்ய வேண்டும் (காண்க யாத்திராகமம் 22:14) - வருமையில் வாடின இந்த மாணவரால் அதை செய்வது சாத்தியமில்லாததாக இருந்தது. இப்படியாக, "ஒரு கொத்தடிமையாக வேலை செய்து அந்த பொருளின் மதிப்பை ஈடு செய்யும் சூழ்நிலையை அவன் சந்திக்க வேண்டியவனாக இருந்தான்."[4] ஆமோஸ் 2:6ன்படி இஸ்ரவேலின் அவபக்தியுள்ள ஜனங்கள் மனித வியாபாரம் செய்யக்கூடியவர்களாக "எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கு" விற்கக்கூடியவர்களாக இருந்தார்கள். இந்த இளம் மனிதனுக்கு இது ஒரு நிஜமான மற்றும் கடுமையான பிரச்சனையாகவிருந்தது. ஆகவே அவன் எலிசாவிடம் கதறினான்.

எலிசா அந்த மனிதனிடம், "அது எங்கே விழுந்தது?" என்று கேட்டான் (2 இராஜாக்கள் 6:6அ). கர்த்தர் சில சமயங்களில் தீர்க்கதரிசிக்கு இயற்கைக்கு மேம்பட்ட அறிவை புரிந்துகொள்ளுதலை கொடுத்திருந்தார் (5:25, 26; 6:8-12), சிலசமயம் அவர் அதை கொடுக்கவில்லை (4:27). கர்த்தர் தீர்க்கதரிசிக்கு அதை இயல்பான விதத்தில் அவர் தேடி எடுக்கக்கூடிய தகவல்களை கொடுக்கவில்லை. ஆகவே பாதிக்கப்பட்ட மாணவனிடம் கோடாரி தண்ணீரில் எங்கே விழுந்தது என்று கேட்டார்.

அந்த மனிதன் தண்ணீர் தெறித்து விழுந்த இடத்தைக் காண்பித்தான். "அவன் அந்த இடத்தைக் காண்பித்த போது, [எலிசா] ஒரு கொம்பை வெட்டி [அருகிலிருந்த மரத்திலிருந்து] அதை அங்கே [காண்பிக்கப்பட்ட இடத்தில்] எறிந்தான்" (6:6ஆ). அவன் அதை செய்தபோது, ஒரு அதிசயமான காரியம் நடந்தது: வசனப்பகுதி அந்த செயலை, "அந்த இரும்பை மிதக்கப்பண்ணி" என அழைக்கிறது (வசனம் 6இ).

யோர்தான் நதியில் அந்த நாளில் என்ன நடந்ததோ அதற்கான அறிவுப்பூர்வ

மான விளக்கத்தைக் கண்டுபிடிக்க அவிசுவாசிகள் போராடியிருக்கிறார்கள். அவர்கள் எலிசா ஏதோ ஒருவிதத்தில், அந்த தடியின் உதவியால், "கோடாரியை" "தூண்டில் போட்டு பிடிப்பதுபோல்" வெளியே எடுத்துவிட்டார் என்ற ஆலோசனையை முன்வைக்கிறார்கள்.[5] ஜீ. ராலின்சன் என்பவருடைய பதில் சரியாயிருக்கிறது: "பரிசுத்த எழுத்தாளர்கள் அது கையினால் எவ்வளவு லாவகமாக செய்யப்பட்டதென்ற விபரத்தை எழுதிவைக்க அக்கறைப்படவில்லை."[6]

ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளரின் மொழிநடை தெளிவாக உள்ளது: கடினமான, கெட்டியான இருப்பு கோடாரி *மிதந்தது*! அது தண்ணீரிலிருந்து வெளிவந்து ஒரு மிதவையை போல மிதந்தது! நான் ஆறுகளில் சில பாறைகளை வீசியிருக்கிறேன், அவைகளில் எதுவும் ஒரு போதும் மேலே மிதந்து வரவில்லை. எனது கையிலிருந்து இரண்டொரு கம்பிகள் நழுவி தண்ணீரில் விழுந்துவிட்டன, நான் அவைகளை ஒருபோதும் திரும்ப பார்க்கவில்லை. இது ஒரு உண்மையான அற்புதமாக இருந்தது என்பதை சந்தேகிக்க வேண்டாம். இது ஒரு அமைதியான, எளிய, பாசாங்கு இல்லாத, நிச்சயமான அற்புதமாக இருந்தது, இருப்பினும் ஒரு அற்புதமாகவே இருந்தது!

அவருடைய வழக்கத்தின்படி, எலிசா அற்புதத்தின் பயனாளியை அதில் ஈடுபடுத்தினார். அவர் அந்த வாலிபனை நோக்கி, "அதை எடுத்துக்கொள்" என்றான் (வசனம் 7அ). அந்த வகையில், இயற்கையின் விதிகள் அதில் ஈடுபடுத்தப்படவில்லை என்பதை அந்த மனிதன் அறிந்து கொள்வான். அந்த மாணவன் தண்ணீருக்குள் சென்று "தன் கையை நீட்டி அதை எடுத்துக் கொண்டான்" (வசனம் 7ஆ). அவன் தன் நன்றியறிதலை தெரிவித்த பிறகு, கோடாரியை பொருத்திக் கொண்டு மீண்டும் வேலைக்குச் சென்றான் - இம்முறை ஆற்றிலிருந்து தொலைவில் இருந்த ஒரு மரத்தை வெட்டிச்சென்றான்!

இன்றைய "அற்பமான" பிரச்சனைகள்

இது ஒரு அற்பமான பிரச்சனை, இதை கர்த்தரிடத்தில் எடுத்துச் செல்ல தேவையில்லை என நீங்கள் உணருவது சாத்தியமானதா? "அவர் முழு உலகைப் பற்றியும் கரிசனை உடையவராக இருக்கிறார் மற்றும் அவர் தேசிய பிரச்சனைகள் மற்றும் சர்வதேச நெருக்கடிகளை கையாள வேண்டியிருக்கிறது, ஆகவே என்னுடைய சிறிய போராட்டங்களுக்காக அவரை சிரமப்படுத்துவது அவசியமற்றதாக இருக்கும்" என நீங்கள் சிந்தித்திருக்கலாம். நமது கதையிலிருந்து இதை கற்றுக்கொள்ளுங்கள், அவருடைய பிள்ளைகளுக்கு எது கரிசனையாக இருக்கிறதோ அது தேவனுக்கும் கரிசனையுள்ளதாக இருக்கிறது.

இதை நான் எழுதும் போது, எனது மனைவியும் நானும் எங்கள் மகள் ஏஞ்சி, அவள் கணவர் டேன் மற்றும் அவர்கள் புதிதாய் தத்தெடுத்துள்ள குழந்தை எலியா ஆகியோரோடு நேரம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். அவ்வப்போது, எலியா அழுகிறான் (குழந்தைகள் செய்வதுபோல). ஒருவேளை அவன் பசியாக இருக்கலாம் அல்லது அவன் தன் கால் உடை மாற்றப்பட விரும்புகிறான் அல்லது அழவேண்டும் போலிருந்து அழுகிறான். அவனுடைய தாயும் தந்தையும் "இது அழுவதற்கு அற்பமான காரணம்" என்று சொல்லி, அவனை திட்டினார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்பது உங்களுக்கு தெரியும். அவர்கள் தங்கள் கரங்களில் அவனை ஏந்திக்கொண்டு, ஆறுதல்படுத்தி, அவனுடைய தேவைகள் எவ்வளவு

"சிறிதாக" இருந்தாலும் அவைகளைச் சந்திக்கிறார்கள். "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (1 யோவான் 3:1அ).

உலகத்தை கவனித்துப் பாருங்கள். தேவன் "பெரிய" காரியங்களுக்காக எவ்வளவு கரிசனைப்படுகிறாரோ, அவ்வளவாய் "சிறிய" காரியங்களுக்காகவும் கரிசனைப்படுகிறார். "வானத்திலுள்ள மிகவும் அற்புதமான நட்சத்திரம் எப்படி கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளதோ, அதே கவனத்தோடு ஒரு வண்ணத்து பூச்சியின் சிறகுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன"[7] இதை நின்று சிந்தித்துப் பாருங்கள்: உண்மையில், உலகளாவிய பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சனைகள் உட்பட, எந்த பிரச்சனையும் கர்த்தருக்கு "பெரிய" பிரச்சனை அல்ல. அவிசுவாசி சந்திக்கும் "உலகை உலுக்கும்" பிரச்சனையைவிட, ஒரு விசுவாசி சந்திக்கும் "அற்பமான" பிரச்சனை தேவனுக்கு அதிக கரிசனையானதாயுள்ளது.

சிலர் "அற்பமானவை" என வகைப்படுத்தும் பிரச்சனை உட்பட ஒவ்வொரு பிரச்சனையையும் அவரிடம் எடுத்துச் செல்லும்படி வசனத்திற்கு வசனம் நம்மை உற்சாகப்படுத்துகிறது. அப்போஸ்தலனாகிய பவுல், "நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், *எல்லாவற்றையுங்குறித்து* உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்றார் (பிலிப்பியர் 4:6; என்னால் வலியுறுத்தப்படுகிறது). அப்போஸ்தலனாகிய பேதுரு, "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளை*யெல்லாம்* அவர்மேல் வைத்துவிடுங்கள்" (1 பேதுரு 5:7; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

முடிவுரை

நீங்கள் ஒரு தேவனுடைய பிள்ளையாக இருப்பீர்களானால், நீங்கள் கொண்டிருக்கும் எந்த பிரச்சனையையும் கர்த்தர் "அற்பமானதாக" எண்ணுவது இல்லை. "நாம் தேவனை நேசித்து, அவரை விசுவாசிப்போமானால், அவரிடம் உதவி கேட்டு ஜெபிக்கும் மிக தாழ்மையான ஜெபத்திற்குக் கூட பதிலளித்து, நமது மிகச் சிறிய தேவையைக் கூட நிறைவேற்றுவார்."[8]

தேவன் சிறப்பான தொடுவிதத்தில் நமது *ஆவிக்குரிய* பிரச்சனைகளைக் குறித்து - அவைகள் உலக சிந்தையுள்ளவர்களுக்கு எவ்வளவு "சிறிதாக" தோன்றினாலும், அவைகளின் மேல் அதிக கரிசனையுள்ளவராக இருக்கிறார். ஒரு ஆவிக்குரிய பிரச்சனை உங்களை வலுவாக இழுத்து கீழே தள்ளிக் கொண்டிருந்தால், தேவன் உங்களை தூக்கி எடுத்து நிறுத்தும்படியாக, நீங்கள் மனந்திரும்புதலோடும் மற்றும் தாழ்மையோடும் இன்றே அவரிடம் ஓடிச்செல்வீர்கள் என்று நான் ஜெபிக்கிறேன். கோடாரியை மிதக்கச் செய்தவர், உங்கள் பாவங்களை மேலே, தொலைவில் "பறந்து" போகச் செய்வார்!

குறிப்புகள்

[1]Robert C. Dentan, "Kings," *Layman's Bible Commentary,* vol. 7 (Richmond, Va.: John Knox Press, 1964), 83. [2]James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings,* James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 77. [3]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1&2 Kings,* ed. H. D. M.

Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 119. Rawlinson cited Josephus *Wars* 4.8.3 and Strabo *Geography* 15.1.2.41. [4]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible*, ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 533. The same idea is suggested J. H. Stek, "Elisha," in *The International Standard Bible Encyclopedia,* rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:71. [5]*எலிசா கோடாரியைப் பார்க்குமளவுக்கு தண்ணீர் தெளிவாக இருந்தது என சில "விளக்கங்கள்" யூகிக்கின்றன. அப்படி இருந்திருந்தால், மாணவர் தானே அதை எடுத்திருப்பார்.* [6]Rawlinson, 120. [7]Adapted from J. G. B., *Short Meditations on Elisha* (New York: Loizeaux Brothers, n.d.), 39. [8]Elaine J. Fletcher, *Elisha, the Miracle Prophet* (Washington, DC: Review and Herald Publishing Association, 1960), 43.

10

ஒரு வாழ்வை ஆசீர்வதித்த மனிதன்

(2 இராஜாக்கள் 5:1-19)

எலிசா புதிய ஏற்பாட்டில் ஒரு முறை மட்டுமே குறிப்பிடப் பட்டிருக்கிறான். இயேசுவானவர் நாசரேத்து ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தபோது, "எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல், அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை" என்றார் (லூக்கா 4:27). தங்களிடத்தில் தேவன் அக்கறையாயிருப்பதைப் போலவே புறஜாதியாரிடத்திலும் அக்கறையாயிருக்கிறாரென்பதை யூதர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று கிறிஸ்து விரும்பினார் ஆனால் அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கோ இக்குறிப்பு மிகுந்த கோபத்தை உண்டாக்கிவிட்டது (வசனம் 28) நாகமான் குணமான சம்பவம் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்த போதிலும் அது பிடித்தமான பழைய ஏற்பாட்டு விவரிப்புகளில் ஒன்றாய் இருந்ததில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. நாகமான் அந்நிய தேசத்தான், தேவ ஜனத்தின் பகைவன், அவர்களைப் பொறுத்தவரையில் அவன் குஷ்டரோகியாகவே செத்திருக்க வேண்டும்!

நாகமானின் சம்பவம் இஸ்ரவேலருக்கு பிடிக்காமல் இருந்திருக்கலாம் ஆனால் இன்றைய பிரசங்கிமார்களிடையே பிரபலமிக்கதாயிருக்கிறது. எலிசாவின் வாழ்விலிருந்து ஒரு பிரசங்கியாருக்கு ஒரே ஒரு பிரசங்கமிருக்குமானால், அது அநேகமாக நாகமானைப் பற்றியதாகவே இருக்கும். பிரசங்கம் தயாரிப்போரில் பலர் நாகமானுக்கும் இன்றைய பாவிகளுக்குமிடையே ஒப்புமைகளைக் காண்கின்றனர். போதிக்கவும் மற்றும் பிரசங்கிக்கவும் ஏராளமானவை இச்சம்பவத்தில் பொதிந்திருப்பதால் ஒற்றைப் பாடத்தில் நிறுத்துவது என்பது நியாயமாயிராது. எனவே நாகமானின் சம்பவத்திற்கு பல பாடங்களை அளிக்கப் போகிறோம். இந்தப் பகுதி, வேத வசனக் குறிப்பின் ஒட்டுமொத்த சாராம்சமாயிருக்கும்; அடுத்து வருவது, சுவிசேஷ விஷயத்தில் அதனை சம்பந்தப்படுத்திக்காட்டும். மூன்றாவது பாடம் இந்த சந்தர்ப்பத்தின்போது எலிசாவின் வேலைக்காரனான கேயாசியின் செயல்பாடுகளையும், அதன் பின்விளைவுகளையும் பற்றியதாயிருக்கும்.

இச்சம்பவத்தை நாம் படிக்கையில், இதன் முக்கிய நோக்கத்தைப் புரிந்து கொள்ளுதல் நமக்கு உதவிகரமாயிருக்கும், ஏதோ எலிசாவின் அற்புதங்களில் ஒன்றைப் பதிவு செய்துவைப்பதற்கென்று இச்சம்பவம் பத்திரப்படுத்தப்படவில்லை. அதுவுமன்றி, குஷ்டரோகத்திற்கான தெய்வீக சுகம் பற்றி விவரிப்பதற்காக இது வேதாகமத்தில் சேர்க்கப்படவுமில்லை. மாறாக, யூதனல்லாத ஒருவன் விக்கிரக ஆராதனையை விட்டு ஜீவனுள்ள தேவன்

பேரிலுள்ள விசுவாசத்திற்கு எவ்விதமாக மாறினான் என்பதைப் பற்றிய ஓர் உள்ளத்தைத் தொடும் ஓர் விபரம் இது.

நாகமானின் நிலை[1] (5:1-7)

ஓர் நோயாளி

2 இராஜாக்கள் 5 முக்கிய கதாபத்திரத்தை நமக்கு அறிமுகப்படுத்தும் வகையில் துவங்குகிறது: "சீரிய [ஆராம்] ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான். அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு (ஆராமிற்கு) இரட்சிப்பைக் கட்டளையிட்டார். மகா பராக்கிரமசாலியாகிய அவனோ ..." (வசனம் 1அ).

நாகமான் ஆராமின் குடிமகன் (ஒரு *அராமியன்*) என வசனம் 1 குறிப்பிடுகிறது, ஆனால் இயேசு அவனை, "*சீரியா* தேசத்தானாகிய நாகமான்" என அழைக்கிறார் (லூக்கா 4:27; என்னால் வலியுறுத்தப்படுகிறது). தமஸ்குவை தலைநகராகக் கொண்ட பாலஸ்தீனத்தின் வடக்கு மற்றும் வடகிழக்கு பிரதேசம் பழைய ஏற்பாட்டில் "ஆராம்" என குறிப்பிடப்பட்டிருந்து (2 இராஜாக்கள் 8:7 காண்க). புதிய ஏற்பாட்டுக் காலங்களில், இப்பகுதி "சீரியா" என அறியப்பட்டிருந்தது. (மத்தேயு 4:24; லுக்கா 2:2; நடபடிகள் 15:41; இந்நூலின் மற்றோரிடத்தில் உள்ள "எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்கள்" தேசப் படத்தைக் காண்க) இவ்வாறாக, சில மொழிபெயர்ப்புகள், பழையஏற்பாட்டில் "ஆராம்" என்பதற்கு பதிலாக "சீரியா" என்ற பதத்தை பயன்படுத்துகின்றன (2 இராஜாக்கள் 5:1ஐ காண்க; KJV).

எலியாவின் வாழ்க்கை பற்றிய நமது முந்தைய படிப்பில் ஆராம் தேசமானது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இஸ்ரவேலின் இராஜாவாக ஆகாப் ஆராமின் இராஜாவாகிய பெனாதாத்துடன் பல யுத்தங்களில் போரிட்டான் (1 இராஜாக்கள் 20:1-45; 22:1-44). அத்தகைய யுத்தங்களிலொன்றில், யாரோ ஒரு வில்வீரன் எய்த அம்பு அவனதுகவசத்தின் பலவீனமான பகுதியில் ஊடுருவியதால் ஆகாப் கொல்லப்பட்டான் (1 இராஜாக்கள் 22:34, 35) ஆயினும், எலிசாவின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டு ஆராம் குறிப்பிடப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். எஞ்சியுள்ள படிப்புகளில் ஆராமின் விரோதங்கள் புலப்படும். (2 இராஜாக்கள் 6:8, 24; 8:7, 28 காண்க). எலிசாவின் வாழ்வின் முடிவில் அந்தப்போராட்டம் தொடர்ந்து கொண்டுதானிருந்தது (2 இராஜாக்கள் 13:17-20ஆ காண்க).

நாகமான் ஆராமின் "சேனைத்தலைவனாய்" இருந்தான். NIV அவன் "படைத்தளபதி" என்று குறிப்பிடுகிறது. முந்தைய நாட்களில் இராணுவத்தை பெனாதாத் தலைமையேற்று நடத்தியிருந்தான் (1 இராஜாக்கள் 20:1, 26); ஆனால் படைக்கு தலைமையேற்று நடத்தும் பொறுப்பினை, "மகா பராக்கிரம சாலியாகிய" நாகமானிடம் அவன் ஒப்படைத்திருக்கக்கூடும். இராஜா நாகமானை "பெரிய மனுஷனாகவும்" "எண்ணிக்கையுள்ளவனாகவும்" கருதினான்.

"அவனைக் கொண்டு" - அதாவது, விக்கிரக ஆராதனைக்காரனாகிய தளபதி நாகமானைக் கொண்டு - "கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்" என்பதனை வாசிக்கையில் சிலர் வியப்படையலாம். தேசங்களின் விவகாரங்களில்

தேவன் தலையிட்டு தமது நோக்கம் நிறைவேற அவிசுவாசிகளையும் கூட பயன்படுத்த முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் (ஏசாயா 44:28; எசேக்கியேல் 30:24, 25; தானியேல் 4:25 பார்க்கவும்). எடுத்துக்காட்டாக, தேவஜனம் அவரைப் புறக்கணித்தபோது, சிலசமயங்களில் அஞ்ஞான தேசங்கள் அவர்களை நசுக்கும்படி அனுமதித்து அவர்களை தண்டித்துமிருக்கிறார் (2 இராஜாக்கள் 13:3 ஐக் காண்க). 2 இராஜாக்கள் 5:1ல் உள்ள "வெற்றி" (இரட்சிப்பு) ஆகாபையும் அவன் சேனையையும் ஆராம் தோற்கடித்ததைக் குறிப்பதாய் இருக்கலாம். ஏவப்படாத யூத பாரம்பரியத்தின்படி, ஆகாபைக் கொன்ற அம்பை எய்த வில்வீரன் நாகமான்தான்.[2]

நாகமானுக்கு ஓர் அசத்தும் அறிமுகப் பட்டியலுண்டு: அராமிய இராணுவத்தின் பிரதான படைத்தளபதி, பெரியவனும் மதிப்பிற்குரியவனுமாகிய மனிதன், பராக்கிரமசாலியான வெற்றி வீரன். அடுத்தாற்போல் இந்த முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தைகள் வருகின்றன: "அவனோ குஷ்டரோகியாயிருந்தான்" (வசனம் 1ஆ) .

வேதாகமத்தில் ''குஷ்டரோகம்'' என்பது பல்வேறு தரப்பட்ட உபாதைகளையும், நிலைமைகளையும் விவரிக்க பயன்படுத்தப்பட்ட பொதுவான வார்த்தையாகும். எப்போதுமே அது இன்று நாம் எதை குஷ்டம் [Hansen's disease] என்றழைக்கிறோமோ அதைக் குறிப்பிடுவதாயிராது. அவ்வாறிருப்பதனால், சில எழுத்தாளர்கள் நாகமானின் நிலவரத்தை மட்டுப்படுத்தி, அவனுக்கு வெறும் ஓர் கடும் தோல்வியாதி இருந்தது என குறிப்பிடுகின்றனர்.[3] நமது வசனப் பகுதியிலுள்ள பல விவரங்கள் அவன் ஓரளவிற்கு சாதாரணமான ஒரு மருத்துவ பிரச்சனையால் பாதிக்கப்பட்டவனல்ல என்றே சுட்டிக் காட்டுகின்றன. முதலாவதாக, குணம் பெறுவதற்காக நாகமான் மேற்கொள்ளத்தயாரான தீவிரமான பிரயத்தனங்கள், இரண்டாவதாக, இவ்வியாதிபற்றி இஸ்ரவேல் ராஜா கூறும் வார்த்தைகள், இது வாழ்வா சாவா என்ற நிலமையிலிருப்பதாகக் காட்டுகின்றன (வசனம் 7அ).

இறுதியாக, நாகமானின் குஷ்டம் வேறொரு மனிதனைப் பாதித்தபோது அவன், "*உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி*" என்று சொல்லப்பட்டுள்ளது (வசனம் 27; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பழங்கால மற்றும் தற்கால எழுத்தாளர்கள் "வெள்ளைரக" குஷ்டத்தை, இந்நோயின் "அதி தீவிர வடிவம்"[4] என்றும், "மிகுந்த ஆபத்தான வாதை" என்றும் குறிப்பிடுகின்றனர்.[5] "வெண்குஷ்டம்" என்பது "அதில் பாதிக்கப்பட்டவர், நவீன மருத்துவ விஞ்ஞானம் தொழுநோய் என்று குறிப்பிடுவதைப் போன்றதான ... ஒருவித சுகவீனப்படுத்தும் மரண நிறமுடையவராயிருப்பார்" என விளக்கம் தரப்பட்டுள்ளது.[6] மோசேயின் சகோதரியாகிய மீரியாம் குஷ்டரோகத்தால் தாக்கப்பட்டபோது அவள் "உறைந்த மழையின் வெண்மை போன்ற குஷ்டரோகியானாள்" (எண்ணாகமம் 12:10). அவளது சகோதரனான ஆரோன் அவள் "செத்து விழுந்த பிள்ளையைப் போல" இருந்ததாக கூறினான் (வசனம் 12). நாகமான் இதேவிதமாய் இல்லாதிருப்பினும், இதுபோன்ற ஓர் அவஸ்தையில் தான் அவனிருந்தான். குணப்படுத்தமுடியாத கோரமான வியாதியில் அவன் அவதியுற்று வந்தான் - "மெதுவாக என்றபோதிலும், நிச்சயம் சாகடிக்கும் நோய்."[7]

நாகமான் குணமடைய ஆராமின் வசதிகள் அனைத்தையும்

நிச்சயம் பயன்படுத்தி முடித்திருப்பான், ஆயினும் பலனில்லை. அராமிய மருத்துவர்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை; அவனது அந்நிய "தேவர்கள்" சக்தியற்றவர்களாயிருந்தனர். அவன் நம்பிக்கையிழந்தவனாயிருந்திருப்பான் என்பதில் எவ்வித ஐயமில்லை.

அனுதாபமுள்ள ஓர் சிறுபெண்

அப்போது எதிர்பாராத இடத்திலிருந்து உதவிவந்தது. 2ம் வசனத்தில், "சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள்; அவள் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள்" என நாம் வாசிக்கிறோம். ஆராமுக்கும் இஸ்ரவேலுக்குமிடையே தொடர்ச்சியான எல்லைப்போர்கள் நடந்து வந்தது.(2 இராஜாக்கள் 6:8, 9ஐ காண்க).[8] ஆராமிலிருந்து போர்வீரர்கள் இஸ்ரவேலுக்குள் அடிக்கடி திடீர் தாக்குதல் நடத்துவதுண்டு (காண்க 6:23ஆ) அத்தகையதொரு தாக்குதலில் அவர்கள் ஒரு சிறு பெண்ணை சிறைபிடித்து வந்திருந்தனர், அவள் நாகமானின் வீட்டில் அடிமையாயிருந்தாள்.

ஒரு கணம் உங்களை இந்தவேலைக்காரப் பெண்ணிண் நிலையில் வைத்துப் பாருங்கள். உங்கள் பெற்றோரின் அன்பின் கரங்களிலிருந்து நீங்கள் பறிக்கப்பட்டு, அந்நிய நாட்டிற்கு கடத்தப்பட்டிருக்கிறீர்கள். பிள்ளைப்பருவத்து விளையாட்டுகளில் களித்திருப்பதற்கு பதிலாக அடிமையாய் வேலை செய்ய வற்புறுத்தப்படுகிறீர்கள். சந்தோஷமான வீட்டில் வாழ்வதற்கு பதிலாக உங்கள் இருப்பிடம் சோகம் நிறைந்ததொரு வீடாயிருக்கிறது. தெய்வ பயமுள்ள ஒரு குடும்பத்தின் அங்கமாயிருப்பதற்கு பதிலாக போலி தெய்வங்களை வணங்குகிறவர்கள் உங்களை சுற்றியிருக்கிறார்கள். இந்தப்பெண் கசப்புடனும் எரிச்சலுடனும் எளிதாய் வாழ்ந்திருக்கலாம், ஆனால் அவள் அப்படியில்லை எனத் தெரிகிறது. அவள் தனது துர்பாக்கிய நிலைக்காக (சிலர் செய்வது போல்) தேவனைக் குறை கூறியிருக்கலாம், ஆனால் அவள் தனது விசுவாசத்தைக் காத்துக் கொண்டாள். தனது துர்பாக்கிய நிலைக்கு காரணமான மனிதன் மெதுவான கொடிய மரணத்தில் சாகப் போகிறனே என்று அவள் களிகூர்ந்திருக்கலாம், ஆனால் அவள் அப்படிச்செய்யவில்லை. தன்னைப்பற்றி விசனப்படுவதற்கு பதிலாக அவதிப்படும் தன் எஜமானனுக்காக பரிதாபப்பட்டாள்.

ஒரு நாள் அவள் நாகமானின் மனைவிக்காக வேலைகளை மேற்கொண்டிருந்தாள் - ஒருவேளை எஜமானியின் கூந்தலை வாரிக்கொண்டிருந்திருக்கலாம் - அப்போது அவள் திருமதி நாகமானிடம், "என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்! அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார்." எனக் கூறினாள் (வசனம் 3). இந்தப் பெண் எலிசாவைப் பற்றி அறிந்திருப்பதோடு மட்டுமல்லாமல், பழங்காலத்தில் காணப்பட்ட கொடிய வியாதிகளில் ஒன்றை அவன் குணமாக்கக்கூடும் என்ற விசுவாசத்தையும் கொண்டிருந்தாள் என்பது எனக்கு விசேஷித்ததாய் தோன்றுகிறது. எலிசாவின் பிரசித்தமிக்க விஷயங்களை அவளது பெற்றோர்கள் அவளிடம் சொல்லியிருக்கலாம். அவள் அந்நிய நாட்டிலிருந்திருக்கலாம். ஆனால் தான் யார் என்பதை மறந்துவிடவில்லை: தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இனத்தின். வல்லமையுள்ள தீர்க்கதரிசியை ஆசீர்வாதமாக பெற்ற மக்களில் ஓர் அங்கம்! மேலும். இந்தச் சிறுபெண்

தன்னை சிறைபிடித்தவர்களோடு தனது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ள மனமுள்ளவளாயிருந்தது என் மனதைத் தொடுகிறது. இந்த வேலைக்காரியைப் பற்றி நாம் அறிந்தது கொஞ்சமே, அவளது பெயர்கூட தெரியவில்லை, ஆயினும் அவள் பழைய ஏற்பாட்டின் மிகவும் விசேஷித்த தனிநபர்களில் ஒருத்தியாய் இருக்கிறாள்.

ஏதோ எதேச்சையாய் தான் சொன்ன கருத்தின் விளைவைக் கண்டு அந்த சிறுமி பிரமித்துப் போயிருக்கக் கூடும். நாகமானின் மனைவி இவள் சொன்னதை தன் புருஷனிடம் சொல்லி, பின்னர் அந்த போர்வீரன் இராஜாவிடம் போய் சிறுமியின் வார்த்தைகளை அப்படியே ஒப்பித்ததாகத் தெரிகிறது (வசனம் 4). சற்றும் தாமதிக்காமல் இராஜா, நாகமான் அந்த அதிசயம் செய்யும் தீர்க்கதரிசியைக் கண்டுபிடிக்க ஏற்பாடுகளைச் செய்தான் (வசனம் 5அ). நாகமான் ஓர் அடிமைச் சிறுமியின் யோசனையை கவனித்துக் கேட்பது அவனது இக்கட்டான நிலமையைக் காட்டுகிறது. நாகமானின் இம்முயற்சியில் இராஜா அளித்த உற்சாகம் என்பது தனது தளபதியின்மேல் ஆட்சியாளனுக்குள்ள நன்மதிப்பையும் கருத்தினையையும் காட்டுகிறது.

அதிகாரவர்க்கத்து மனோபாவமுடைய இராஜா, "அதிகாரபூர்வமான வழிமுறையில் செல்வது" அவசியம் என நினைத்துக் கொண்டான். தனது அரசவை மந்திரவாதிகள் தனக்கு கட்டுப்பட்டிருப்பதைப் போலவே எலிசாவும் இஸ்ரவேல் இராஜாவினிடத்தில் கட்டுப்பட்டிருப்பதாக நினைத்தான். ஆகவே நாகமான் இஸ்ரவேல் இராஜாவினிடத்தில் போகச்சொல்லி அந்தப் பேர ரசனுக்கு ஓர் கடிதமும் தயார் செய்தான் (வசனம் 5அ).

"பணத்தால் எதையும் வாங்கலாம்" என்ற உலகக்கருத்துடைய நாகமான், தீர்க்கதரிசியின் சேவைகளுக்கு தான் பணம் செலுத்தவேண்டியிருக்கும் என நினைத்துக் கொண்டான். அவ்வாறாக அவன் ஒரு சிறு செல்வத்தையும் சேகரித்து வைத்தான்: "பத்து தாலந்து வெள்ளியையும் ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும், பத்து மாற்றுவஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டுபோனான்" (வசனம் 5இ). பத்து தாலந்து வெள்ளியென்பது 750 பவுண்டு (340 கிலோகிராம்) எடையும், ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னானது 150 பவுண்டு (70 கிலோகிராம்).[9] எடையும் உள்ளது என மதிப்பிடப்படுகிறது. வெள்ளியின் விலைமதிப்பு 20,000 டாலர் மற்றும் பொன்னின் விலைமதிப்பு 60,000 டாலர் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.[10] பத்து மாற்று வஸ்திரங்களும்கூட மிகுந்த விலைமதிப்பள்ளவுள்ளவையாக இருந்திருக்கும் - விழாக்கள் மற்றும் இராஜாங்க நிகழ்ச்சிகளுக்குரிய விலையேறப்பெற்ற ஆடைகள்.

பீதியடைந்த இராஜா

எல்லாம் தயாரானபோது நாகமான் கிளம்பினான் (வசனம் 5ஆ). அவன் தனது பரிவாரத்தோடு தெற்கு - தென்மேற்காக நூறுமைல்கள் அல்லது அதற்கும் கூடுதலாக பிரயாணம் பண்ணி இறுதியில் இஸ்ரவேலின் தலைநகரான சமாரியா பட்டணம் வந்தடைந்தான். 6ம் வசனப்படி "இஸ்ரவேலின் இராஜாவினிடத்தில் [ஆராம் இராஜா அனுப்பிய] அந்த நிருபத்தைக் கொடுத்தான்" (வசனம் 6அ). இஸ்ரவேலரும் அராபியரும் எப்போதும் சண்டையிடுகிறவர்களாயிருக்கையில், நாட்டிற்குள் நுழையும் போது ஏன் நாகமானும் அவனது கூட்டமும்

தாக்கப்படவோ கைது செய்யப்படவோ இல்லை? எப்போதாவது பகை ஓய்ந்திருந்த ஒரு சமயத்தில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கலாம் (6:23ஆ காண்க). ஒருவேளை நாகமான் இஸ்ரவேலுக்குள் வந்தபோது, ஒரு இடைக்கால போர்நிறுத்தத்திற்கான சைகைகாட்டி[11] அத்துடன் இராஜாவிடம் பேசுவதற்கு அனுமதியும் கேட்டிருக்கலாம். எப்படியோ, இராஜாவின் அரமனைக்குச் செல்ல அவன் அனுமதிக்கப்பட்டான்.

நாகமான் தனது வேலையாட்கள், இரதங்கள், குதிரைகள் மற்றும் பொக்கிஷங்களைச் சுமக்கும் கோவேறு கழுதைகள் ஆகியவற்றுடன் சமாரியா பட்டணத்திற்குள் நுழைவதை சற்று கற்பனை செய்து பாருங்கள் (காண்க 5:5ஆ, 9அ). அந்தப் பரிவாரம் ஓர் அணிவகுப்பைப் போலக் காட்சியளித்திருக்கும்! அதில் வரும் பிரதான உருவமாகிய மனிதனின் மாம்சமோ "வெண் குஷ்டத்தால்" உருக்குலைந்து கிடப்பதைக் கண்ட குடிமக்கள் திகைத்துப் போயிருப்பார்கள். குஷ்டரோகிகள் மற்ற ஜனங்களைவிட்டு தனியே வைக்கப்படவேண்டுமென மோசேயின் நியாயப்பிரமாணம் கட்டளையிட்டிருந்தது (லேவியராகமம் 13:45, 46 காண்க), ஆனால் இங்கேயோ அவர்களின் தெருக்களினூடே ஓர் குஷ்டரோகி பகிரங்கமாக பவனி வந்து கொண்டிருக்கிறான்!

நாகமான் அரண்மனைக்கு வந்து சேர்ந்தவுடன், தான் கொண்டுவந்த பொக்கிஷங்களைத் தன் வேலையாட்களைக் கொண்டு திறந்து காட்டியிருப்பான் பின்னர் தனது கடிதம் இராஜாவிடம் கொண்டு செல்லப்படுகையில் காத்திருந்தான்.

அப்போது இராஜாவின் அரியணை (மன்றத்திற்கு) அறைக்கு காட்சி மாறுகிறது. பெனாதாத்திடமிருந்து ஓர் சாதுர்யமிக்க தூதுக்குழு வந்து கொண்டிருப்பதை அறிந்த நேரமுதல் இராஜா கலக்கமடைந்திருந்தான் (1 இராஜாக்கள் 20:2, 3 உடன் ஒப்பிடுக) - பிரத்தியேகமாக, அந்தத் தூதுக்குழுவிற்கு தலைவாயிருந்தவனோ இஸ்ரவேலின் சேனைகளை ஒருமுறைக்கு மேல் தோற்கடித்தவன் என்பதால்தான். வெறுப்பிற்குரிய அராமியர்களுக்கு வேண்டியதுதான் என்ன? அப்போது ஆராமின் ராஜமுத்திரை பதித்த கடிதம் ஒன்றை அரசவைப் பணியாள் ஒருவன் அவனிடம் சமர்ப்பித்தான். வாசிக்கத் துவங்கினபோதே இராஜாவின் கைகள் நடுங்கியதா? ஒருவேளை அவன் அவசியமான அரசியல் சொல்வருணனைகளை மேலோட்டமாக பார்த்துவிட்டு செய்தியின் மையக் கருத்திற்கு வந்திருப்பான்: "இந்த நிருபத்தை என் ஊழியக் காரனாகிய நாகமான் கொண்டு வருவான்; நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன்" (2 இராஜாக்கள் 5:6ஆ).

"இஸ்ரவேலின் இராஜா அந்த நிருபத்தை வாசித்தபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு" (வசனம் 7அ; ஒத்துப் பார்க்கவும் 2 சாமுவேல் 13:19; 2 நாளாகமம் 34:27; எஸ்றா 9:3; எரேமியா 36:24). ரொம்பவும் குழம்பிப் போன மன்னன் இவன்! இந்த இஸ்ரவேல் இராஜா யாரென்று உறுதியாய் தெரியவில்லை, ஆயினும் அநேகமாக நாம் ஏற்கனவே சந்தித்த ஒருவனாகத்தானிருக்க வேண்டும்: யோராம். "ஒரு மனுஷன் அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிடவேண்டும் என்று, அவன் (பெனாதாத்) என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா?" (2 இராஜாக்கள் 5:7ஆ) என்று அவன் உளறிக் கொட்டினான். அவன்

மனதில் ஒரே ஒரு முடிவுக்குதான் வர முடிந்தது: "இவன் என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்" (வசனம் 7இ; உடன் ஒப்பிடுக 1 இராஜாக்கள் 20:7). கவனத்திற்குரிய சுவாரஸ்யம் என்னவெனில், நாகமானின் குஷ்டரோக விஷயத்தில் ஒரு சிறு பெண் சட்டென்று எலிசாவை நினைத்தாள் ஆனால் ஒரு யூத இராஜா நினைக்கவில்லை.

நாகமானின் சுத்தமாகுதல் (5:8-14)

மன்னனைக் கலவரப்படுத்தும் எதுவும் மக்களைக் கலவரப்படுத்தும். ஒரு புகழ்பெற்ற விருந்தினர் வந்திருக்கும் செய்தி பட்டண முழுவதும் பரவி விட்டது. இப்போதோ இராஜாவின் கொந்தளிப்பின் சேதி ஆளுக்கு ஆள் பரவி முடிவில் தீர்க்கதரிசியை வந்தெட்டியது. "இஸ்ரவேலின் இராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்ட செய்தியை தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, ... அவன்: நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வானேன்? ... என்று இராஜாவுக்கு சொல்லியனுப்பினான்" (2 இராஜாக்கள் 5:8அ). இராஜா இவ்விஷயத்தில் மனோபாதிப்படைய தேவையில்லை என்றும், ஆராமிடமிருந்து எவ்வித தாக்குதலும் நிகழாது என்றும் உறுதியாய் தெளிவுபடுத்தினான். மேலும் எலிசா, "அவன் (நாகமான்) என்னிடத்தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்து கொள்ளட்டும்" என்றான் (வசனம் 8ஆ). அவனது வார்த்தைகள் "இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை நீயும்கூட *முடிவில் புரிந்து கொள்வாய்" என்று குறிப்பால் உணர்த்தின!*

அந்த கடிதத்திற்கு இராஜாவின் பிரதிபலிப்பு பற்றிய செய்தி நாகமானுக்கு எட்டியிருக்குமானால் அவன் பெருத்த ஏமாற்றமடைந்திருப்பான். இருப்பினும், தீர்க்கதரிசியின் *வீட்டிற்கு வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்டதால் அவனது நம்பிக்கை மீண்டும் துளிர்த்தது. அன்றியும், சமாரியாவிலுள்ள ஒரு* தீர்க்கதரிசி *தான் தன்னை குணமாக்கக்கூடும் என அவனது மனைவியின் சிறுவயது வேலைக்காரி குறிப்பிட்டுச் சொல்லியிருந்தாள். நாகமானின் பட்டாளம் அரண்மனை வட்டாரங்களை விட்டு வெளியேறிய பின்னர்தான் இராஜா ஓர் நிம்மதி பெருமூச்சு விட்டிருப்பான்.*

மீண்டும், நாகமானின் பரிவாரம் தெருக்களின் வழியாய் ஊர்வலமாகச் சென்று இறுதியில் எலிசாவின் எளிய வசிப்பிடம் சேரும்வரை சமாரிய மக்கள் விறைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். "அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான் (அதாவது, நின்று விட்டான்)" (வசனம் 9). தீர்க்கதரிசி தன் வீட்டிலிருந்து வெளிவரும்போது அவனது பாதங்களில் படைக்கும்படிக்கு தயாராக இருக்கும்படி தனது பணியாட்களை பொக்கிஷங்களுடன் நிறுத்தியிருந்தான்.

தெய்வீக நிவாரணம்

இருப்பினும் எலிசா காட்சியளிக்கவில்லை. அதற்கு பதிலாக, ஒரு வேலைக்காரனை அது கேயாசியாக இருக்கலாம் (வசனம் 20 காண்க), ஒரு செய்தியுடன் அனுப்பினான் (வசனம் 10). சில எழுத்தாளர்கள் தீர்க்கதரிசியின் மரியாதையின்மையப் பற்றி வியப்படைகின்றனர், ஆயினும், இத்தொடர்

சம்பவங்களின் நோக்கத்தை நினைவில் கொள்ள வேண்டும்.தேவன் நாகமானின் ஆத்துமாவை விட அவனது சரீரத்தின்மேல் அக்கறை கொண்டவரல்ல. மெய்யான தேவனென்று அவன் ஏற்றுக் கொள்ள முதலில் அவனுடைய இருதயம் ஆயத்தப்படுத்தப்படவேண்டும் அதற்கு தளபதி கற்றுக் கொள்ளவேண்டிய முதல் விஷயம் கீழ்ப்படிதல் ஆகும் (லூக்கா 14:11), அவன் மாம்சம் சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல் மாறுபதற்கு முன்பே (2 இராஜாக்கள் 5:14), அவனது இருதயம் ஒரு சிறுபிள்ளையின் இருதயத்தைப் போலாக வேண்டும் (மத்தேயு 18:3, 4).

கேயாசி கொண்டுவந்த செய்தி இதுதான்: "நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய்" (2 இராஜாக்கள் 5:10ஆ). " 'ஸ்நானம்பண்ணு' என்பதற்கான வார்த்தை இங்கே 'முழுகு' " என்பதாகும்.[12] வசனம் 14 அவன், "முழுகினபோது" என்கிறது; (CJB அவன் "தன்னை முழுக்கினான்" என்று கூறுகிறது.) நாகமான் ஏறத்தாழ 20 மைல்கள் பிராணம் செய்து யோர்தான் நதிக்கு வந்து அதில் ஏழு தரம் முழுகினால் அதன் விளைவுகளுக்கு தேவன் அளித்த உறுதி: உன் மாம்சம் மாறி நீ சுத்தமாவாய்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

ஏன் ஏழு முழுகுதல்கள் தேவைப்பட்டது? வேத வாக்கியங்களில் அடிக்கடி காணப்படுகிற ஏழு என்ற எண் (ஆதியாகமம் 2:2; யோசுவா 6:4 காண்க) பெரும்பாலும் பூரணம் அல்லது முழுமை என்ற பொருள் பொதிந்ததாயிருக்கிறது. எதுவும் நடைபெறாததாய் தோன்றிய போதிலும் திரும்பத் திரும்ப முழுகுகின்ற விசுவாசத்திற்காகத் தான் இச்சம்பவத்தில் பல முழுகுதல்கள் கட்டளையிடப்பட்டிருக்கலாம்.

ஆரம்ப பிரதிபலிப்பு

அறிவுறுத்தல்களுக்கு நாகமான் எவ்வாறு பதில்செய்தான்? அவன் "கடுங்கோபங்கொண்டு" (வசனம் 11அ)! தீர்க்கதரிசியின் நடத்தையால் அவன் அவமானமடைந்தான். படைத்தலைவனாகிய அவன் ஒரு முக்கியஸ்தன்; இவ்விதமாய் நடத்தப்படுவது அவனுக்கு பழக்கப்பட்டதல்ல! மேலும் தீர்க்கதரிசியின் அறிவுறுத்தல்களால் அவன் அவமதிக்கப்பட்டான்,

> "அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கருத்தருடைய[13] நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்
>
> குஷ்டரோகத்தை நீக்கி விடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம் பண்ணி சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவாற்றைப்பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ" என்று அவன் கூறினான் (வசனங்கள் 11ஆ, 12அ).

"தமஸ்குவின் தெளிந்த நதிகள், பனிபடர்ந்த ஏமானுஸ் மலைகளிலிருந்து ... அல்லது எர்மோன் பர்வதத்திலிருந்து பாய்ந்தோடின."[14] சுத்தமடைவதற்காக கழுவவேண்டுமென்றால், "சேறும் கொந்தளிப்புமான"[15] யோர்தானைக் காட்டிலும் நிச்சயமாக அந்த நதிகள் பொருத்தமானவைகளாகத் தெரிந்தது.

நாகமான் கோபமுற்றவனாக, கிளம்பிச் செல்வதற்கான உத்தரவுகளைப்

பிறப்பித்தான். தனது இரதத்தை சட்டென்று சுழற்றித் திருப்பி "உக்கிரத்தோடே திரும்பிப்போனான்" (வசனம் 12ஆ). அந்தப் பரிவாரம் கிளம்புகையில் எலிசா வெளியில் பாய்ந்து சென்று அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. நாகமானுக்கு அவன் ஒரு பரிகாரத்தை அளித்தான், ஆனால் அதனை அவன் ஏற்றுக்கொள்ள அவனை நிர்பந்திக்கவில்லை. அந்த சிப்பாய் தன் வாழ்நாளின் எஞ்சியுள்ள காலமெல்லாம் ஓர் குஷ்டரோகியாகவே வாழும் நிலைக்கு நெருங்கிவிட்டான்!

நல்லவேளையாக, அவனோடிருந்த மற்றவர்கள் மிகவும் தெளிவாக சிந்திக்கிறவர்களாயிருந்தனர். ஒரு வேலையாள் தளபதியை தீர்க்கதரிசியிடம் திசைதிருப்பிவிட்டாள்; இப்போது மற்ற பணியாட்களும் தீர்க்கதசி சொன்னவைகளுக்கு கீழ்ப்படியும்படி அவனை சம்மதிக்கப் பண்ணினார்கள். பெயர் குறிப்பிடப்படாத இந்த வீரர்கள் நாகமானை சிந்திக்க வைத்தனர்: "தகப்பனே அந்த தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்கு சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா?" (வசனம் 13அ). அதாவது அவர்கள் தங்கள் எஜமானைப் பார்த்து, "எக்கச்சக்கமான (கட்டுக்கடங்காத) (மிதமிஞ்சிய) பொருட் செலவுள்ள அல்லது மிகவும் கடினமான (சிக்கலான) அல்லது ஒருவேளை சாதனைக்குரிய ஆபத்தான ஒரு காரியத்தை செய்யும்படி அந்த தீர்க்கதரிசி சொல்லியிருப்பாரானால் என்ன செய்திருப்பீர்? இந்தக் கொடிய வியாதியிலிருந்து நீர் எதையும் செய்யத் துணிந்திருப்பீர் அல்லவா?" என்று கேட்டனர். நாகமான் ஒருவேளை வேண்டாவெறுப்பாகத் தன் தலையை ஆட்டியிருப்பான்.

தொடர்ந்து அந்த வேலைக்காரர், "ஸ்நானம் பண்ணும் அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும்போது, அதைச் செய்ய வேண்டியது எத்தனை அதிகம்?" என்று கேட்டார்கள் (வசனம் 13ஆ). வேறு விதமாய் சொல்வதாயிருந்தால், "பொருட்செலவுமிக்க காரியத்தைச் செய்யச் சொல்வதைவிட வேறு செலவின்றி இதற்கு நேரம் செலவழித்தால் போதுமே. சிரமமான ஒன்றை மேற்கொள்வதைவிட இந்தக் குறிப்புகள் தெளிவாகவும், எளிமையாகவும், கடைபிடிக்க எளிதாகவும் இருக்கின்றனவே. ஆபத்தான ஒரு விஷயத்தைச் செய்யச் சொல்லி நீர் சிக்கலில் மாட்டிக்கொள்வதற்கு பதில் இங்கே சம்பவிக்க வாய்ப்புள்ள அபாயங்கள் கேலியும் கடைசியில் ஏமாற்றம் மட்டும் தானே. இவ்விடம் வந்து சேருவதற்கு நீர் நெடுந்தூரமும், கடினமுமான ஓர் புனித யாத்திரை மேற்கொண்டாயிற்று. அந்த இருபது மைல் தூரம் பயணித்து தீர்க்கதரிசி சொல்வதை செய்தால் என்ன? நீர் இழக்கப்போவது என்ன - உமது பெருமையை மட்டும்தானே?"

இறுதி முடிவு

பணியாட்களின் விவேகம் ஜெயித்தது. நாகமானும் அவனது குழுவும் வடக்கே தமஸ்குவிற்கு கிளம்புவதற்கு பதிலாக சமாரியாவின் மலைப்பிரதேசங்களை விட்டு செங்குத்தாய் இறங்குகிற பள்ளத்தாக்குகளின் வழியாக ஆயிரம் அடி "தாழ்விற்கு இறங்கி" (வசனம் 14அ) ஆழமான யோர்தான் பள்ளத்தாக்கிற்கு வந்தனர். அந்த நிலப்பிரதேசத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அல்லது உட்பட்டு நாகமான் எவ்வளவு வேகமாக விரட்டியிருந்தாலும் அப்பயணத்திற்கு ஓரிரு நாட்களாவது பிடித்திருக்கும்.

மீண்டும் நாகமானும் அவனது கூட்டமும் இறுதியாக யோர்தானின் கரைகளில் வந்து நிற்கும் காட்சியை உங்கள் மனதில் சித்தரித்துப் பாருங்கள். நாகமான் தனது இராணுவ சீருடையைக் களைந்து, கலங்கிய தண்ணீருக்குள் உந்திநடப்பதைக் காணுங்கள். அவமானத்தால் அவன் முகம் சிவந்திருக்கும் அல்லவா? ஆற்றங்கரைகளில் கூட்டங்கூடும் அற்பர்களுக்கிடையே ஆங்காங்கே எழும் கேலிச்சரிப்பு அவனுக்கு கேட்டதா? இருந்தபோதிலும் தனது தலையும் தோள்களும் மட்டும் தெரியும்வரை அவன் உந்தி நடந்தான். பிறகு தன் கண்களை மூடி, மூச்சைப் பிடித்துக்கொண்டு, தண்ணீருக்குள் மூழ்கினான். தண்ணீர் முகத்தில் வழிந்தோட அவன் மேலெழும்பி மூச்சுவிட்டான். அவன் தனது தலைமயிர்த் தண்ணீரை உதறி, கண்களைத் தேய்த்துவிட்டு மீண்டும் தன்னை தண்ணீருக்குள் மூழ்கினான். இரண்டுமுறை, மூன்றுமுறை, நான்கு, ஐந்து, ஆறு - திரும்பத் திரும்ப அவன் தண்ணீருக்கடியில் மறைந்து போனான்.

கடைசியாக அவன் ஏழாவது முறை அடியில் சென்றான். இம்முறை அவன் மறுபடியும் தோன்றியபோது ஒரு ஆச்சரியமான காரியம் நிகழ்ந்திருந்தது! அந்த வசனப்பகுதி, "தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி, அவன் சுத்தமானான்" என்று கூறுகிறது (வசனம் 14ஆ). குஷ்டரோகம் மட்டுமல்ல, காலத்தின் சிதைவுகளும்கூட மறைந்துபோனது! அவனது தோல், முப்பது அல்லது நாற்பது வயதுடைய ஒரு மனிதனுடைய மாம்சம் போல் இல்லாமல், "ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல இருந்தது"!

நாகமானின் மாற்றம் (5:15-19அ)

நாகமானின் உடல் பிரமிப்பூட்டும்வகையில் மாறியிருந்தது - ஆனால் புதுப்பிக்கப்பட்ட தன் மாம்சத்தை அவன் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கையில் இதை விட விசேஷித்த ஓர் மாற்றம் அவன் மனதிலும் இருதயத்திலும் ஏற்பட்டது. ஆராமின் "தேவர்களின்" பூசாரிகளும்கூட செய்ய இயலாததை இந்த யெகோவாவின் தீர்க்கதரிசி செய்துவிட்டார். நாகமான் சாத்தியமான ஒரே முடிவுக்கு வந்தான்: ஆகையால் எலிசா மெய்யான ஒரே தேவனாகிய யெகோவாவின் ஓர் மெய்யான தீர்க்கதரிசியாகத்தான் இருக்க வேண்டும்!

நிலமையை மனக்கண்முன் கொண்டுவர முயலுங்கள். வெகுவாய் உள்ளம் நெகிழ்ந்த இம்மனிதன் தன் நாட்டை நெருங்குகையில், தரைமட்டும் குனிந்து பணிவாய் வணங்கி, தன் நன்றிக் கண்ணீரை தேவனுக்கு சமர்ப்பித்து மௌனமாய் தரையில் வீழ்ந்ததை கற்பனை செய்து பாருங்கள். "தேவனே நீர் எப்படிப்பட்டவர்!" என்பதுவே அவன் ஆத்துமாவின் பேச்சாயிருந்திருக்கும் (மொழியாய் இருந்திருக்கும்). பின்னர் நாகமான் புழுதியிலிருந்து எழுந்து, உடையை மாற்றிக்கொண்டு, இளமைத் துடிப்புடன் தன் இரதத்திற்குள் தாவி, சமாரியாவிற்கு திரும்பிச் செல்லக் கட்டளையிட்டான். "மீண்டும் சமாரியாவிற்கே" என்பது வரிசையிலுள்ளோருக்கு கடத்தப்பட்டு, படை கிளம்பியது. அது ஓர் வெற்றி பவனியாயிருந்தது - நாகமானுடையதல்ல, தேவனுடையது![16]

அபூர்வமான அறிக்கை

யோர்தானில் இருக்கும்போதே நாகமான் ஆராமுக்கு திரும்பிச் செல்லும் பாதையில் கால் தூரத்திலிருந்தான்; எனினும் உடனடியாக தமஸ்குவிற்கு திரும்பிப்போய் அவனது நற்சேதியை பகிர்ந்துகொள்வதற்காகவும், தான் புதிதாய்க் கண்டுகொண்ட விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கு பதிலாக, தனது பாராட்டைத் தெரிவிப்பதற்காகவும், தன் நடைகளை வந்தவழியே திரும்பினான். "அவன் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்திற்கு திரும்பி" (வசனம் 15அ).

இம்முறை அவனை சந்திப்பதற்கு எலிசா வெளியே வந்தான், "நாகமான் வந்து அவனுக்கு முன்பாக நின்று" (வசனம் 15ஆ) "இதோ இஸ்ரவேலில் இருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்" என்று சொல்லும்போது அந்த இராணுவ வீரனின் குரல் உணர்ச்சிப் பெருக்கால் நிரம்பியதாய் இருந்திருக்கும் (வசனம் 15இ). அவனது வாக்குமூலம் வியப்பிற்குரியதாயிருக்கிறது; அவன் யெகோவாவை இஸ்ரவேலின் தேவனாக மாத்திரமல்ல "பூமியெங்கும்" இருக்கும் ஒரே தேவனாக கண்டுகொண்டான்! அறிவு (அறிவொளியூட்டப்படா) பெருக்கமில்லா காலகட்டத்திலும் அவன் கர்த்தரின் (அகில அளவிலான உலகளாவிய) பிரபஞ்ச அளவிலான தன்மையைப் புரிந்து கொண்டான்! அவனது வார்த்தைகள் "பாகாலும் [யெகோவாவும்] ஆகிய இருவரும் தேவர்களா அல்லது [யெகோவா] மட்டும்தான் தேவனா என்ற தங்கள் கருத்தில் எப்போதுமே தடுமாற்றத்திலிருந்த இஸ்ரவேலரை அவமானப்படுத்தியது."[17]

தனது பாராட்டை வெளிப்படுத்தும் வண்ணமாக நாகமான் தான் கொண்டு வந்திருந்த பொன், வெள்ளி, வஸ்திரங்களை எலிசாவுக்கு அளிக்க முற்பட்டான்: "இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக் கொள்ள வேண்டும்" (வசனம் 15ஈ). இருப்பினும் தீர்க்கதரிசி மறுத்துவிட்டார்: "நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (வசனம் 16அ). அந்த போர் வீரன் வற்புறுத்திய போதிலும் பரிசுப்பொருட்களை நிராகரிப்பதில் அவன் உறுதியாயிருந்தான் (வசனம் 16ஆ).

சில சூழ்நிலைகளில் எலிசா பரிசுப்பொருட்களைப் பெறுவதற்கு எதிரானவராக இருந்ததில்லை (4:8-11, 42 காண்க), ஆனால் நாகமானிடமிருந்து எதையும் ஏற்றுக்கொள்வது உகந்ததல்ல என அவன் எண்ணினான். ஒருவேளை ஆராமிய போலித்தீர்க்கதரிசிகளைப் போன்று தான் கூலிக்காக வேலைசெய்பவனல்ல என்பதை அந்த போர்வீரன் புரிந்துகொள்ளவேண்டுமென்று அவன் விரும்பியிருக்கலாம். ஒருக்கால், இந்த குணமாகுதலுக்கு தேவன் அல்ல, தான்தான் காரணம் என்ற அபிப்பிராயத்தை அவன் விட்டுவைக்க விரும்பவில்லை எனலாம்.

வழக்கத்திற்கு மாறான வேண்டுதல்கள்

நாகமான் விடுத்த வேண்டுகோள்களோடு இச்சம்பவத்தின் இந்தப்பகுதி நிறைவடைகின்றது. முதலாவதாக அவன் எலிசாவிடம் "இரண்டு கோவேறு கழுதைகள் சுமக்கத் தக்க இரண்டு பொதி மண் உமது அடியேனுக்கு கட்டளையிட வேண்டும்; உமது அடியேன் இனி கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்கு

சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை" எனக் கேட்டான் (வசனம் 17). நாகமான் ஒரு பலிபீடத்திற்கான கட்டுமானப்பொருளாக அந்த மண்ணைக் கேட்டிருக்கக் கூடும் (யாத்திராகமம் 20:24 உடன் ஒப்பிடுக), அல்லது யெகோவாவிற்கு பலிசெலுத்துவதற்கான பலிபீடத்தின் ஆதாரப் பொருளாக (அடிப்பாகமாக) அதனை கேட்டிருக்கக் கூடும். வழக்கத்திற்கு மாறான இந்த வேண்டுகோளுக்கு வழக்கமாக அளிக்கப்படும் விளக்கம். "யெகோவா ஒரு பிராந்தியத்திற்குரிய தேவன் என்றும் அதனால் அவருக்கு இஸ்ரவேலிய மண்மீதுதான் பலிகளை செலுத்தவேண்டும்" எனவும் அந்த போர்வீரன் நினைத்தான் என்பதுவே - ஆனால் யெகோவா அகிலத்துக்கும் தேவன் என்ற அவனது அங்கீகரிப்பிற்கு இது முரண்பட்டுப்போகும் (வசனம் 15). மெய்யான தேவனோடு சம்பந்தப்பட்டிருப்பதால் ஒருவகையில் இஸ்ரவேலில் உள்ள மண் "விசேஷித்தது" என நாகமான் நினைத்தான் என்பது குறைந்தபட்சமாவது தெளிவாகத் தெரிகிறது (யாத்திராகமம் 3:5 உடன் ஒப்பிடுக) - அதில் கொஞ்சம் ஊருக்கு கொண்டுசெல்ல விரும்பினான். ஒவ்வொருவருடமும் "புனித பூமி"யிலிருந்து சுற்றுலா பயணிகள் ஊருக்கு கொண்டுவரும் நினைவுப் பொருட்களுடன் இதனை ஒப்பிடலாம்.

நாகமானை உறுத்திக் கொண்டிருந்த வேறொன்றும் அவன் உள்ளத்தி லிருந்தது. தனது புதிய விசுவாசத்திற்கும், உத்தியோகக் கடமைகளுக்குமிடையே போராட்டம் (மோதல்) இருக்குமென்பது எலிசாவை மீண்டும் காணச் செல்லுகையில் அவன் மனதில் பட்டது, பண்டைய உலகில், ஒரு ஜனத்தி ன் அரசாங்கத்திற்கு அந்த ஜனத்தின் "தெய்வம்" அல்லது "தெய்வங்களுக்கும்" இடையே ஓர் நெருக்கமான தொடர்பு இருந்தது. இவன் தனது உத்தி யோக சம்பந்தமான பங்கை நிறைவேற்றுவதை அது இராஜாவுடன் புறமத கோயில்களுக்குள் அவன் செல்வதையும் யெகோவா கண்டித்திடுவாரா? அவன் எலிசாவிடம் இவ்வாறாக கூறினான், "ஒரு காரியத்தையே கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக; என் ஆண்டவன் பணிந்துகொள்ள ரிம்மோன் கோவிலுக்குள் பிரவேசிக்கும்போது, நான் அவருக்கு கைலாகு கொடுத்து[18] ரிம்மோன் கோவிலிலே பணியவேண்டியதாகும்; இப்படி ரிம்மோன் கோவிலில் நான் பணிய வேண்டிய இந்தக் காரியத்தைக் கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக" (வசனம் 18). ரிம்மோன் என்பது பாகாலுக்கு இணையான (நிகரான) ஆராமைச் சேர்ந்த - பிரதான ஒன்றாயில்லாதபட்சத்தில் ஆராமின் முக்கிய தெய்வங்களில் ஒன்றாயிருந்தது.

தான் புதிதாய் கண்டுகொண்ட விசுவாசத்திற்கு ஏற்புடைய ஓர் வாழ்க்கை வாழ்வதில் உள்ள சவாலை புரிந்து கொண்டதற்காக - அதுவும் எதிர்கொள்ள விருக்கும் பிரச்சனைகளைப்பற்றிய கரிசனையுள்ளவனாயிருப்பதற்காக நாகமானை நான் மெச்சிக்கொள்ளத் தான் வேண்டும். இன்று கர்த்தரிடம் வருகின்ற சிலர் தாங்கள் வாழப்போகும் புதிய வாழ்வினைப் பற்றியும் அது தங்கள் முந்தைய வாழ்க்கை முறைமைகளுடன் எவ்விதம் முட்டிக்கொள்ளும் என்பதைப்பற்றியும் சொற்ப அறிவுள்ளவர்களாயிருக்கிறார்கள் (ரோமர் 6:3, 4).

என்றாலும், 18ம் வசனத்திலுள்ள நாகமானின் வார்த்தைகளைக் குறித்து நான் சத்தமிட்டுச் சொல்ல விரும்புவதென்னவெனில், "நீ உத்தேசிப்பதில் உள்ள அபாயங்களை நீ உணருவதில்லையா? ரிம்மோனை தெய்வம் என்று நீ நம்பாமலும் அவனுக்கு பலிகளை செலுத்தாலும் இருந்தாலும் [வசனம் 15ஐ

பார்க்கவும்], அவன் கோவிலுக்குள் நீ சென்று பணிவாயானால், நீயும் அவனை வணங்குவதாகத்தான் காணப்படுவாய், அவ்வாறாக, பிறர்மீது உனக்குள்ள நேர்மறை செல்வாக்கை நீ பயனற்றதாக்கி விடுவாய். மேலும் ரிம்மோன் வணக்கத்தோடு உள்ள நீடித்த தொடர்பு உன்னை மீண்டும் விக்கிரக ஆராதனைக்குள் இழுத்துப் போட்டு விடும். நெஞ்சார, உன்னை கெஞ்சிக் கேட்கிறேன், விக்கிரக ஆராதனை சம்பந்தப்பட்ட எதிலிருந்தும் எல்லாவற்றிலிருந்தும் நீ விலகியிரு!"

அப்படித்தான் நான் பதிலளித்திருப்பேன், ஆனால் எலிசாவோ எளிமையாக, "சமாதானத்தோடே போ" என்றான் (வசனம் 19அ). இதை வைத்துக் கொண்டு சிலர், ரிம்மோன் கோவிலுக்கு செல்வதற்கு நாகமானுக்கு தீர்க்கதரிசி அங்கீகாரம் அளித்தார் என கருதுகின்றனர், தவறோடு ஒத்துப்போதலை நியாயப்படுத்துவதற்காகவும் சிலர் இதனை பயன்படுத்துகின்றனர். ஆயினும், எலிசாவின் கூற்று அங்கீகாரத்தையோ அல்லது ஆட்சேபனையையோ வெளிப்படுத்துவதில்லை.[19] அது வெறும் ஒரு "பிரியாவிடைச் சொல்" ஆகும்.[20]

நாகமான் ரிம்மோன் கோவிலிக்குள் போவதை நிறுத்திவிடுமாறு எலிசா ஏன் வலியுறுத்தவில்லை என்ற கேள்வியை இது இன்னமும் விட்டு வைத்திருக்கிறது. இதோ அவரது மௌனத்திற்கு காரணமான சாத்தியக்கூறுகளில் சில:

- *அக்கணத்தில் எலிசா, நாகமானின் பிரமிப்பூட்டும் ஆவிக்குரிய முன்னேற்றத்தைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனான். ஆண்டவருக்கு அது ஒரு மாபெரும் வெற்றியாயிருந்தது!*
- *நாகமான் இன்னும் விசுவாசத்திற்கு புதியவனாகத்தான் இருக்கிறான் என்று எலிசா உணர்ந்திருந்தபடியால் தற்போது அவனால் சுமக்க முடிந்ததைவிட அதிக கனமான ஆவிக்குரிய பாரத்தை அந்த போர்வீரன்மேல் சுமத்த விரும்பவில்லை.*
- *ஏற்கனவே தனது செயல்பாடுகளில் உள்ள போராட்டத்தைப் பற்றிய போதுமான நுண்ணறிவு நாகமானுக்கு இருந்தபடியால் அவன் தொடர்ந்து ஆவிக்குரிய வகையில் வளர்ச்சியடைந்து பின்னர் தானாகவே ஒரு சரியான தீர்மானத்திற்கு வந்திடுவான் என்று எலிசா நம்பினான்.*

அநேகமாக மேற்சொன்ன காரணங்களால்- இன்னும் பிற காரணங்களால் எலிசா அச்சூழ்நிலையை அவ்விதம் கையாண்டான். இன்றும் கூட ஒரு நபர் முடிவாய் அறிந்துகொள்ள வேண்டிய அனைத்தையும் *அவரை ஞானஸ்நானப்படுத்துவதற்கு முன்னரே போதித்துவிட நாம் முற்படுவதில்லை. சில உபதேசம் -* அதிகப்படியான *உபதேசித்தல் - ஞானஸ்நானத்திற்கு பின்பு நடைபெறவேண்டியதாயிருக்கிறது (மத்தேயு 28:19, 20).*

முடிவுரை (5:19ஆ)

"சமாதானத்தோடே போ" என்று எலிசா கூறிய பின்பு ஆராமுக்கு திரும்பிச் செல்ல நாகமான், "புறப்பட்டான்" (2 இராஜாக்கள் 5:19ஆ). இந்தப் பாடத்தை நாம் முடிக்கையில், அவன் தமஸ்குவிற்கு திரும்பி வந்து சேர்ந்ததை நாம் நினைத்துப் பார்க்க விரும்புகிறேன். சமாரியாவிலுள்ள தீர்க்கதரிசியிடத்தில் அவனை போகச் சொன்ன அந்த யூத சிறுபெண்ணின் கண்ணோட்டத்தில் இந்த தொடர் சம்பவங்களை கற்பனை செய்து பாருங்கள்.

தனது ஆலோசனை உருவாக்கி விட்ட பரபரப்பைக் கண்டு அவள் திகைத்துப் போனாள். நாகமானும் அவனது கூட்டமும் பட்டணத்தை விட்டுக் கிளம்புகையில் தன் எஜமானியுடன் நின்று அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். நோயால் சிதைந்துபோயிருந்தாலும் தளபதியின் முகத்தில் ஓர் உறுதி காணப்பட்டது. நாட்கள் கடந்தபோது, என்ன சம்பவித்ததோ என அறிய அவள் ஆவலாயிருந்து, அநேக ஊக்கமான ஜெபங்களை ஏறெடுத்து வந்தாள். ஒருநாள் தளபதி நாகமான் வந்துவிட்டார் என்ற ஒரு ஆரவார சத்தத்தை அவள் கேட்டாள், வாசலை நோக்கி அவள் விரைந்து ஓடினாள். ஆரம்பத்தில் அவளுக்கு தன் எஜமானனை அடையாளம் தெரியவில்லை. அவனது சருமம் தெளிவாகவும், அவனது கண்கள் பளிச்சென்றும், அவனது முகத்தின் குறுக்கே ஓர் புன்னகையும் விரிந்திருந்தது. அவனது இரதம் வந்து நின்றபோது அவன் கீழே இறங்கி, அவள் அருகில் வந்து, குனிந்து நின்று பவ்வியமாக, "உனக்கு நன்றி" என்றான். மாலையில் குடும்பத்தோடு நாகமான் யெகோவா தேவனை நோக்கி ஜெபிக்க கூடி வரும்போது அவளையும் வரச் சொன்னான், மிகவும் நெருங்கிய அந்தக் கூட்டத்தில் அவள் அமர்ந்திருக்கையில் தானும் தனது ஜெபத்தை ஏறெடுத்தாள். திரும்பவும் அவள் ஓர் மகிழ்ச்சியான, தெய்வபயமிக்க குடும்பத்தின் அங்கமானாள்![21]

ஒருவனை விசுவாசத்திற்கு கொண்டு வரும்படி தேவன் புறமதத்தானாகிய அவனது வாழ்வில் செயல்பட்டிருக்கிறர். உன்னையும் அவரிடம் கொண்டுவரும் முயற்சியாக உனது சொந்த வாழ்விலும் அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் உனக்கு தேவை என்பதை நீ அறிந்துகொள்ளும்படி உனது இதயத்திலும் ஒருவேளை இந்தப்பாடத்தின் மூலம் அவர் கிரியை செய்திருப்பார். உனக்கு சரீர குஷ்டரோகம் இல்லாமலிருக்கலாம், ஆனால் கண்டிப்பாக "பாவம்" என்கிற ஆத்தும "புற்றுநோய்" உனக்கு இருக்கிறது (ரோமர் 3:23) - அது எவ்வித சரீர உபாதையையும் விட மிக மோசமானது (6:23). நாகமான் தனது தற்பெருமையை ஒதுக்கிவைத்துவிட்டு தேவன் கட்டளையிட்டதைச் செய்தான். நீயும் அதையே செய்யும்படி வேண்டுகிறேன் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38)!

குறிப்புகள்

[1]இந்த பாடத்திலுள்ள முக்கிய தலைப்புகள் James E. Smith, *The Books of History,* Old Testament Survey Series (Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 563, 565 லிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. [2]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadelphia: Herman Hooker, 1839), 83; Adam Clarke, *The Holy Bible wih a Commentary and Critical Notes,* vol. 2, *Joshua-Esther* (New York: Abingdon-Cokesbury Press, n.d.), 495. [3]நாகமான் யூத குஷ்டரோகிகளைப்போல தனிமைப்படுத்தி வைக்கப்படவில்லை என்பது இந்த முடிவுக்கு வருவதற்கான ஒரு விவாதமாக இருக்கிறது. யூதர்களுக்கு மோசேயின் பிரமாணத்தில் கொடுக்கப்பட்டிருந்த உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்திற்கான சட்டங்கள் சீரியர்கள் பெற்றிருக்கவில்லை என்பதை மனதில் வையுங்கள். [4]Merrill F. Unger, *The New Unger's Bible Dictionary,* ed. R. K. Harrison (Chicago: Moody Press, 1988), 357. [5]J. J. Reeve, "Elisha," *The International Standard Bible Encyclopedia*, ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans

Publishing Co., 1939), 2:935. [6]Clyde M. Miller, *First and Second Kings,* The Living Word Commentary series, vol. 7 (Abilene, Tex.: A.C.U. Press, 1991), 332. [7]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 317. [8]*பெரும்பாலான அமெரிக்க பார்வையாளர்கள் யூதர் மற்றும் அரபியருக்கிடையிலான இன்றைய நாளின் சிறுசிறு எல்லை போர்களை அறிந்திருக்கிறார்கள். உங்கள் பார்வையாளர்களுக்கு பொருத்தமான ஒரு ஒப்பீடு அல்லது ஒரு உதாரணத்தை பயன்படுத்துங்கள்.* [9]*இந்த தகவல் என்னுடைய* NIV *வேதாகம பதிப்பின் அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.* CJB*யில் "660 பவுன்டஸ் சில்வர்" என்றுள்ளது.* [10]Smith, 563. *நீங்கள் உங்கள் பகுதியில் விலையுயர்ந்த உலோகங்களை கையாளுகிறவர்களிடத்தில் விசாரித்து, அவைகளில் தற்கால மதிப்பை தெரிந்து கொள்ள விரும்புவீர்கள்.*

[11]*அமெரிக்க பார்வையாளர்கள் போர் நிறுத்த கொடியைப் பற்றி அறிந்திருக்கிறார்கள். நீங்கள் வாழும் பகுதியில் இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் சமிக்கைகள் இருக்கலாம்.* [12]James A. Montgomery, "Kings," *International Critical Commentary* (Edinburgh: T. & T. Clark, 1951), 375; quoted in James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings*, James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 68. [13]*நாகமான் தேவனுடைய பரிசுத்த நாமத்தை (*NASB *மொழிபெயர்ப்பில் "கர்த்தர்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) இந்தக் கதை முழுவதும் பயன்படுத்தினார். இஸ்ரவேலரின் தேவனை குறித்த ஓரளவு அறிவு அவருக்கு இருந்திருக்கிறது. அவர் அதை அந்த இளம் அடிமைபெண்ணிடமிருந்து கற்றுக்கொண்டாரா?* [14]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary*, Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 207. [15]E. K. Vogel, "Jordan," in *The International Standard Bible Encyclopedia,* rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:1122. [16]Much of this phrasing was taken from F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 152-53. [17]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible*, ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 532. [18]*கிழக்கத்திய ராஜாக்கள் பொது இடங்களில் நகரும் போது தன் வேலைக்காரனின் கையை பிடித்துக்கொண்டு நடப்பது ஒரு பழக்கமாக இருந்தது. "கைலாகு கொடுத்து" என்பது "சாய்ந்து கொண்டு இருத்தல்" என்பதை சுட்டிக் காட்டுகிறது. ராஜாவுக்கு "யார் கைலாகு கொடுத்தாரோ" அவர் ராஜாவுடைய நம்பிக்கையை பெற்ற நம்பிக்கைக்குறிய ஒரு ஆலோசகராக இருந்தார் (ஒப்பிடுக 2 இராஜாக்கள் 7:2).* [19]Keil and Delitzsch, 321. [20]Miller, 336.

[21]*இந்த வர்ணனை* Elaine J. Fletcher, *Elisha, the Miracle Prophet* (Washington, DC: Review and Herald Publishing Association, 1960), 48; and Theodora Wilson, *Virtue's Bible Stories* (London: Virtue & Co., n.d.), 300 *லிருந்து எடுக்கப்பட்டது.*

11

வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மனிதன்

(2 இராஜாக்கள் 5:1–17)

வேதாகமம் ஒரு கண்ணாடியைப்போல் வாழ்க்கையை பிரதிபலிக்கிறது. இதன் பக்கங்களினூடே நடந்து செல்லும் வண்ணமயமான நபர்களை நாம் கவனிக்கும்போது, நாம் நம்மை சுற்றிலுமுள்ளவர்களை - ஏன் நம்மையும் கூட பார்க்கிறவர்களாயிருக்கிறோம். நாகமானுடைய கதையில், அவன் நோயுற்றது, சுகத்தை தேடினது மற்றும் தேவனுடைய "மருந்து சீட்டு" அவனுக்கு ஒத்துக்கொள்ளாமல் போனது என சுவாரசியமான பல பிரதிபலிப்புகளைப் பார்க்கிறோம். நாகமான் அமைதியாகி இறுதியில் தீர்வை ஏற்றுக்கொண்டது போல் சிலர் காண்பிக்கப்படுவதை நாம் காண முடியுமென நான் நம்புகிறேன்.

நோய் கண்டறிதல் (5:1)

"அவனோ குஷ்டரோகியாயிருந்தான்"

நாகமான் பற்றிய ஒரு விவரிப்போடு கதை துவங்குகிறது. அவன் "சீரிய ராஜாவின் படைத்தலைவனாக இருந்தான்" (வசனம் 1அ). நாம் அவனை "நான்கு நட்சத்திரம் பெற்ற ஒரு தளபதியாக" நினைத்து பார்க்கலாம். "தன் ஆண்டவனிடத்தில் அவன் பெரிய மனுஷனாயிருந்தான்" (வசனம் 1ஆ). பெர்க்கிழி மொழிபெயர்ப்பு, "அவன் முக்கியமான அதிகாரியாயிருந்தான்" என கூறுகிறது. அவன், "அதிகமாய் மதிக்கப்படத்தக்கவனாயிருந்தான்" (வசனம் 1இ). நாம் பார்க்கிறபடி, அவன் தன் சக ஊழியர்களால் மதிக்கப்பட்டான் - அன்புகூரப்பட்டான். "அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பை கட்டளையிட்டார்" (வசனம் 1ஈ). அவன் ஒரு அவிசுவாசியாக இருந்தபோதும், தேவன் அவன் மூலமாய் கிரியை செய்திருக்கிறார். "அவன் மகா பராக்கிரம சாலியாக இருந்தான்" (வசனம் 1உ). அவன் போர் முனையில் பின்னால் நின்று ஆணையிடும் தலைவனாக இருக்கவில்லை. அவன் போரில் முன்னால் நின்று சண்டையிட்டு தனது தைரியத்தை நிரூபித்திருக்கிறான்.

"அவனோ" (ஆனால்) என்ற அந்த சிறிய வார்த்தைக்கு வருகிற வரையிலும் நாம் நாகமானின் மேல் பொறாமை கொள்ள சோதிக்கப்படுவோம். அந்த சிறிய எதிர்மறையான இடைச்சொல் எவ்வளவு சுலபமாக பிறரைப் பற்றிய நமது எண்ணத்தை மாற்றிவிடுகிறது!

- *"அவர் 'ஒரு நல்ல மனிதர்தான்,' ஆனால் அவர் ஒரு கெட்டகோபக்குணத்தைக் கொண்டிருந்தார்."*
- *"அவள் 'ஒரு நல்ல பெண்தான்,' ஆனால் அவளால் தன் நாக்கைக்*

கட்டுப்படுத்த முடியாது."

- *"அவருக்கு அருமையான தாலந்து இருக்கிறது மற்றும் அவர் கர்த்தருக்கு ஒரு பயனுள்ள ஊழியக்காரராக இருக்க முடியும், **ஆனால்** அவர் உலகத்தை வெறுக்க மறுக்கிறார்."*
- *"அவர் 'ஒரு சிறந்த பிரசங்கியார்தான்,' **ஆனால்** அவர் தான் பிரசங்கிக்கிறபடி வாழ்வதில்லை."*

நாகமானின் விவரிப்பின் கடைசியை பாருங்கள்: "அவனோ குஷ்டரோகியாயிருந்தான்" (வசனம் 1ஊ). இது ஒரு ஓவியர் மிக அழகான ஒரு முழு உருவப்படத்தை வரைந்தபின் தன் தூரிகையை கருப்பு வண்ணக் கலவையில் தோய்த்து, அந்த அழகிய உருவப்படம் முழுவதும் தெளித்து, அதின் அழகைக் கெடுத்துவிட்டதுபோலிருக்கிறது.

குஷ்டரோகம் பண்டைய உலகில் மிகவும் பயப்படக்கூடிய ஒரு வியாதி யாக இருந்தது. இஸ்ரவேலில், குஷ்டரோகிகள், "தீட்டு, தீட்டு!" என சத்தமிட வேண்டும் - அப்போது மக்கள் அந்த வழியிலிருந்து விலகிப்போய் விடுவார்கள் (லேவியராகமம் 13:45ஆ). குஷ்டரோகம் முதலில் தோன்றியபோது தோலில் மாற்றம் உண்டாகி, முடிவில் தோல் முழுவதும் நிறம் மாறிவிடுகிறது. உடல் உறுப்புகளின் ஓரங்களில் இவை உருவாகிறது. நோய் முற்றின நிலையில் சிறிது சிறிதாக, பாதிக்கப்பட்ட பகுதிகள் இற்று விழுந்து விடுகின்றன. விரல்கள், கால் பெருவிரல், காதுகள் அல்லது மூக்கும் கூட இல்லாத குஷ்டரோகிகளைப் பார்ப்பது என்பது ஒரு வழக்கத்திற்கு மாறான ஒரு காரியமாக இருப்பதில்லை.

நாகமானின் மீது எவ்வளவு தான் சிறப்புகள் குவிக்கப்பட்டாலும், ஒரு உண்மை மாறுவதில்லை: அவன் ஒரு குஷ்டரோகியாயிருந்தான். அவன் மேல் பொறாமைப் படுவதற்கு பதிலாக, சீரியா நாட்டின் கடைநிலை அடிமை கூட அவனுக்குப் பதில் அவனுடைய இடத்தில் இருப்பதற்கு மறுத்திருப்பான்.

"நீயோ ஒரு பாவியாயிருக்கிறாய்"

இன்று நாம் அதை செயல்படுத்தக் கூடுமா? சபையின் ஆரம்ப நாட்களிலிருந்து, குஷ்டரோகமானது பாவத்தின் உருவகமாக கருதப்பட்டது. வாரன் வையர்ஸ்பி என்பவர்,

> *குஷ்டரோகம் என்பது பாவத்தின் ஒரு காட்சியாக/படமாக இருக்கிறது என கூறும் நேரடியான வசனக் கூற்றுகள் இல்லாவிட்டாலும், நீங்கள் லேவியராகமம் 13ஆம் அதிகாரத்தை வாசிக்கையில் நீங்கள் அவைகளுக்கிடையிலான தெளிவான ஒப்புவமைகளை காணலாம். குஷ்டரோகத்தை போல, பாவமும் தோலைத் தாண்டி ஆழமாய் செல்கிறது (வசனம் 3), அது பரவுகிறது (வசனம் 7), அது தீட்டுப்படுத்துகிறது (வசனம் 45), அது தனிமைப்படுத்துகிறது (வசனம் 46) மற்றும் அது முற்றிலும் சுட்டெரிக்கப்படுவதற்கேதுவானதாயிருக்கிறது (வசனங்கள் 52, 57).[1]*

மற்றவர்களும் சில ஒப்புவமைகளை கவனித்திருக்கிறார்கள். கீழ்வரும் கருத்துக்கள் குருமாச்சார் என்பவரின் நூலிலிருந்து எடுத்தாளப்படுகிறது:

> இதை விட தெளிவான மற்றும் குறிப்பான ஒரு அடையாளத்தை பாவத்திற்காக நாம் கண்டுபிடிக்கமுடியாது. அதின் குணமாக்கபடமுடியாத நிலை - சாதாரண முயற்சிகள் மூலம் நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முடியாதவர்களாயிருக்கிறோம் என்பது உணர்த்துகிறது. இதின் தொற்றிக்கொள்ளும் தன்மை ஒரு பாவியான மனிதன் இன்னொரு பாவியின்மேல் கொண்டிருக்கும் பொல்லாத செல்வாக்கை காண்பிக்கிறது. அதின் வெறுக்கப்படும் தன்மை எல்லா பாவமும் தேவனுடைய பார்வையில் எவ்வளவு அருவருப்பாய் இருக்கிறதென்பதை நினைவுபடுத்துகிறது. குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட ஒருவர் பாளையத்திலிருந்து புறம்பாக்கப்பட்டு இஸ்ரவேல் ஜனங்களிடத்திலிருந்து பிரித்து வைக்கப்பட்டான்.[2]

"உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது ..." (ஏசாயா 1:6அ) என்று ஏசாயா இஸ்ரவேலின் பாவத்தை குறித்து எழுதினபோது அவர் குஷ்டரோகத்தை மனதில் வைத்து எழுதியிருக்கலாம்.

பாவத்திற்கும் குஷ்டரோகத்திற்குமிடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. தொழுநோய் ஒரு சிறிய விழுக்காடு மக்களை மட்டும் பாதிக்கும் வேளையில், பாவம் தங்கள் செயல்களுக்கு பொறுப்பேற்கும் நிலையிலுள்ள ஒவ்வொருவரையும் தொற்றிக்கொள்கிறது (ரோமர் 3:23). மேலும் ஒருவர் குஷ்டரோகியான போது, அது அந்த நபருக்கும் மற்றவர்களுக்கும் வெளிப்படையாக தெரிந்தது. ஆனால் பலர் இன்று தாங்கள் பாவிகளாக இருப்பதையும், தேவ கிருபை தேவைப்படும் நிலையில் இருப்பதையும் அறியாதிருக்கிறார்கள்.

நீங்கள் இன்னும் தேவனுடைய கிருபைக்கு உங்களை உட்படுத்தாதவரானால், உங்கள் ஆவிக்குரிய நிலையை குறித்து சிந்தித்து பாருங்கள். பவுல் தான் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பு இருந்த வாழ்க்கையை பின்வரும் வார்த்தைகளில் படம் பிடித்து காட்டுகிறார். "அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன் ... ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்" (ரோமர் 7:18, 19). பவுலுடைய வார்த்தைகளில் நீங்கள் உங்களை பார்க்க முடிகிறதா? நீங்கள் செய்ய விரும்புகிற நன்மையை நீங்கள் எப்போதாவது செய்ய தவறுகிறீர்களா? நீங்கள் செய்துவிட்ட சில காரியங்களுக்காக வெட்கப்படுகிறீர்களா? வேதாகமம் அந்த காரியங்களை "பாவம்" என அழைக்கிறது மற்றும் வேதாகமம் அந்த பாவங்கள் உங்கள் ஆத்துமாவை ஆக்கினைக்கு உட்படுத்திவிடும் என பறைசாற்றுகிறது (ரோமர் 6:23).

நாகமான் பல நல்ல குணாதிசயங்களை உடையவராக இருந்தான், ஆனால் "அவனோ குஷ்டரோகியாயிருந்தான்" என்ற ஒரு மோசமான உண்மைக்கு முன்பாக அவைகள் ஒன்றுமில்லாமல் போய்விட்டன. ஒரு வேளை நீங்கள் பாராட்டிற்குரிய பல நல்ல குணாதிசயங்களை உடைய ஒரு ஆணாக அல்லது ஒரு பெண்ணாக அல்லது ஒரு வாலிபப்பருவத்தினராக இருக்கலாம்; "ஆனால் நீங்கள் ஒரு பாவியாக இருக்கிறீர்கள்" என்ற ஒரு தப்ப முடியாத சத்தியத்திற்கு முன்பாக, உங்கள் நித்தியத்தை தீர்மானிக்கிற பிரச்சனைக்கு முன்பாக அந்த

சிறப்புகள் எல்லாம் மறைந்துவிடுகின்றன. நாகமான் தன் நிலையை குறித்து அறியாதவராக இருந்திருந்தால், தீர்க்கதரிசியை கண்டுபிடிப்பதற்கான அந்த பயணத்தை ஒருபோதும் மேற்கொண்டிருக்கமாட்டார். அதுபோல், நீங்களும் நான் ஒரு இழந்துபோன, என்னை நானே இரட்சித்துக் கொள்ள முடியாத ஒரு பாவி என்பதை ஒத்துக்கொள்ளாத வரையிலும் - நீங்கள் இரட்சிப்பை பெறுவதற்காக ஒருபோதும் கர்த்தரிடம் திரும்ப மாட்டீர்கள்.

"மருந்து சீட்டு" (5:2-12)

ஒரு பரிந்துரை

வசனம் 2இல் நாம் இஸ்ரவேலைச் சேர்ந்த ஒரு சிறு பெண்ணிடம் அறிமுகப்படுத்தப்படுகிறோம். "சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள்" (வசனம் 2அ). ஒரு சிறு பிள்ளையின் ஆற்றல் மற்றும் செல்வாக்கை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள். "அம்மா, தயவு செய்து எங்களோடு சபைக்கு வாருங்கள்!"; "அப்பா தயவு செய்து புகைப்பிடிப்பதை நிறுத்தி விடுங்கள்!" என்ற அவர்களுடைய மகன் அல்லது மகளின் வேண்டுகோளால் பல பெற்றோர்கள் திருந்தியிருக்கிறார்கள்.

இந்த யூதச் சிறுமி "நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள்" (வசனம் 2ஆ). அவள் கோபம் மற்றும் துக்கமாக இருப்பதற்கு, தன் எஜமானியை பகைப்பதற்கு மற்றும் விசுவாசத்தை இழந்து விடுவதற்கும் கூட பல காரணங்கள் இருந்தன. அவள் இதில் எதையும் செய்யவில்லை. பழிவாங்குவதை விரும்புவதற்கு பதிலாக, நாகமானுக்காக அவள் இருதயம் பரிதவித்தது (காண்க ரோமர் 12:19-21). ஒரு நாள், "அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார்" என்றாள் (2 இராஜாக்கள் 5:3). "சமாரியாவிலிருக்கிற அந்த தீர்க்கதரிசி" எலிசாவாக இருந்தார். சிறுமியின் விசுவாசம் அப்படியே நிலைத்திருந்தது, நம்பிக்கை இருக்கிறது என்பதை நாகமான் அறிந்து கொள்ள வேண்டும் என சிறுமி விரும்பினாள்.

நீங்கள் இன்னும் தேவனிடத்தில் திரும்பாதவர்களாக இருந்தால், நீங்கள் இழந்துபோனவர்களாக இருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்வது மிகவும் அவசியமாக இருக்கிறது; ஆனால் நம்பிக்கை இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதும் முக்கியமானதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் (வெளிப்படுத்தின விசேஷம் 1:6; காண்க 1 யோவான் 1:7)! கழுவப்படுதல் கிடைக்கக்கூடியதாக <u>இருக்கிறது</u> (காண்க யோவான் 15:3; எபேசியர் 5:26)!

> *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் ... அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது*

(எபேசியர் 1:3-7) என பவுல் எழுதினார்.

ஒருவேளை நீங்கள் இந்த சத்தியத்தை ஒரு சிறுவனிடமிருந்து கேட்டிருக்கலாம் அல்லது ஒரு நண்பரிடமிருந்து அல்லது ஒரு அயலகத்தாரிடமிருந்து கேள்விப்பட்டிருக்கலாம் அல்லது இதை முதன் முறையாக கேள்விப்பட்டுக்கொண்டிருக்கலாம். நீங்கள் யார் மூலம் கேள்விப்பட்டிருந்தாலும் சரி, அதை விசுவாசியுங்கள்!

எது என்னுடைய பாவத்தை கழுவமுடியும்?
இயேசுவின் இரத்தம் தானே;
எது என்னை மறுபடியும் பூரணமாக்க முடியும்?
இயேசுவின் இரத்தம் தானே.[3]

நீங்கள் கர்த்தரை நேசித்து, விசுவாசித்து கீழ்ப்படியும்போது (காண்க கலாத்தியர் 3:26, 27), அந்த விலையேறப்பெற்ற இரத்தத்தால் உங்கள் "பாவங்கள் கழுவப்படும்" (நடபடிகள் 22:16; காண்க மாற்கு 16:16; நடபடிகள் 2:38)!

சிறு பெண்ணின் வார்த்தைகள் நாகமானுக்கு சொல்லப்பட்டன; அவன் அதை ராஜாவுக்கு தெரிவித்தான் (2 இராஜாக்கள் 5:4). இந்த சிறு பெண்ணின் வார்த்தைகள் மிகவும் வினயமாக எடுத்துக் கொள்ளப்பட்டது என்பது அவளுடைய நற்குணத்தை பற்றி அதிகம் பேசுகிறது. அவள் தன் குடும்பம் மற்றும் தன் மக்களை விட்டு பிரிந்திருந்தாள். ஆனால் அவள் இன்னமும் ஒரு தேவனுடைய பிள்ளையைப்போல நடந்து கொண்டிருந்தாள். அவள் தன் உண்மைத்தன்மையை பராமரித்திருந்தாள்!

பதிலுரைப்பு

ஆயத்தங்கள் உடனே செய்யப்பட்டன. சீக்கிரமாக, நாகமான் ராஜாவிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒரு கடிதம், நூற்றுக்கணக்கான தாலந்து விலையேறப்பெற்ற உலோகங்கள் மற்றும் தமஸ்குவின் மிகச் சிறந்த கடைகளில் வாங்கப்பட்ட வஸ்திரங்களோடு புறப்பட்டான் (வசனம் 5).

நாகமான் தன் பயணத்தை துவங்குவதை நாம் பார்க்கும் போது, மக்கள் தங்கள் இரட்சிப்பு தொடர்பாக செய்யும் பொதுவான தவறுகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. நாகமானுடைய அடிப்படை தவறு என்னவென்றால், *அவன் தேவனுடைய சித்தத்தை செய்ய முயற்சித்தான் - ஆனால் அதை மனித வழியில் செய்ய முயற்சித்தான்.* உதாரணமாக, அவன் சுகத்தை விலை கொடுத்து வாங்கிவிட முடியுமென நினைத்தான். இன்றும் அநேகர் தங்கள் இரட்சிப்பை விலைகொடுத்து "வாங்க" அல்லது நற்கிரியைகளால் அதை "சம்பாதிக்க" முடியும் என சிந்திக்கிறார்கள் - ஆனால் ஒருவரும் ஒருபோதும் இரட்சிப்பை சம்பாதிக்கும் அளவுக்கு நல்லவர்களாக இருக்கமாட்டார்கள் அல்லது போதுமானதை செய்யக் கூடியவர்களாக இருக்க மாட்டார்கள் (காண்க எபேசியர் 2:8, 9; வெளிப்படுத்தின விசேஷம் 22:17). மேலும் நாகமான் முதலில் தவறான ஒரு நபரிடத்தில் செல்லக்கூடியவராக இருந்தான். தீர்க்கதரிசியிடத்தில் செல்வதற்கு பதிலாக ராஜாவிடத்தில் செல்லக்கூடியவராக இருந்தார் (காண்க 2 இராஜாக்கள் 5:6). அவ்விதமாகவே, பலர் தவறான மத அதிகாரங்களிடம் செல்

லக் கூடியவர்களாக இருக்கிறார்கள். தவறாத தேவனுடைய வார்த்தையிடம் செல்வதற்கு பதிலாக, குறைகள் நிறைந்த மனிதருடைய பாரம்பரியங்களிடம் செல்லக் கூடியவர்களாக இருக்கிறார்கள் (காண்க மத்தேயு 15:1-9).

நாகமானும் அவனைச் சேர்ந்தவர்களும் சமாரியாவுக்கு வந்து சேர்ந்த போது, சீரியா ராஜாவின் கடிதம் இஸ்ரவேல் ராஜாவிடம் கொடுக்கப்பட்டது. செய்தி இதுவாகத்தான் இருந்தது: "இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான்; நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன்" என்று எழுதியிருந்தது (2 இராஜாக்கள் 5:6). "இஸ்ரவேலின் ராஜா அந்த நிருபத்தை வாசித்தபோது, அவன் தன் வஸ்திரத்திரங்களைக் கிழித்துக்கொண்டு: 'ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிட வேண்டும் என்று, அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா?' " என்று கூறினான் (வசனம் 7அ). அதில் ஒரு கெட்ட எண்ணம் இருந்ததாக மட்டுமே ராஜாவால் பார்க்க முடிந்தது; யுத்தம் செய்வதற்கான ஒரு முகாந்தரத்தை சீரியா ராஜா தேடினதாக அவன் நினைத்தான். "இவன் என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்பதை சிந்தித்துப் பாருங்கள்" என்றான் (வசனம் 7ஆ).

இங்கே இதுதான் நடந்திருக்க *வேண்டும்*: ராஜா சிரித்துக் கொண்டே, "பாராட்டிற்கு நன்றி, ஆனால் இந்த விஷயத்தில் உதவி செய்யக்கூடியவன் நான் அல்ல. நீங்கள் இந்த பட்டணத்தின் எல்லையில் ஒரு சிறிய வீட்டில் வசித்து வரும் எலிசா தீர்க்கதரிசியிடம் செல்ல வேண்டியது அவசியம்" என சொல் லியிருக்க வேண்டும். அந்த சாத்தியக்கூறு அவனிடத்தில் உருவாகவில்லை. ஒரு சிறிய எபிரேய அடிமைச் சிறுமி தேவனுடைய தீர்க்கதரிசியை பற்றி சிந்தித்தாள், ஆனால் தேவனுடைய ஜனங்களின் மேல் ராஜாவாயிருந்தவன் அதை சிந்திக்கவில்லை.

தீர்வு

ராஜாவின் துன்பச் செய்தி எலிசாவை எட்டியது மற்றும் நாகமான் தன்னிடம் அனுப்பப்படும்படி தீர்க்கதரிசி கேட்டுக்கொண்டார் (வசனம் 8). "அப்படியே, நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான்" (வசனம் 9). தீர்க்கதரிசியின் தாழ்மையான இருப்பிடத்தை பரிவாரங்கள் வந்து சேர்ந்தபோது, ஏற்பட்ட குதிரைகளின் காலடிசத்தம், இரதங்களின் இரைச்சல், மற்றும் தோலுடையின் சத்தம் ஆகியவற்றை உங்களால் கேட்க முடிகிறதா? நாகமான் தனது மின்னும் உடைகளுடன், பெருமைவாய்ந்த இடுப்பு கச்சையுடன் அவனுடைய உலோகம் மற்றும் தோலால் ஆன ஆயுதம் மற்றும் தலைகவசத்தோடு தீர்க்கதரிசி தன் வருகையை கவுரவத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென தன் இரதத்தில் பெருமையுடன் அமர்ந்திருப்பதை நீங்கள் பார்க்கிறீர்களா?

எலிசா தன் வீட்டிலிருந்து வரவில்லை. ஒருவேளை நாகமான் தன் வருகையை அறிவிக்க எக்காளத்தை ஊதும்படி செய்திருக்கலாம். இருப்பினும் எதுவும் நடக்கவில்லை. இறுதியாக, ஒரு கதவு திறக்க ஒரு வேலைக்கார மனிதன் வெளியே வந்தான் (வசனம் 10அ). அவன் நீவப்படாத தாடி, கிழிந்துபோன மற்றும் ஒட்டுப்போட்ட அங்கியுடன் இருந்தான் என நான் காட்சிப்படுத்துகிறேன். அந்த செய்தியாளர் நாகமானை பார்த்து, "நீ போய்,

யோர்தானில் எழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய்" என்றான் (வசனம் 10ஆ).

ஏன் எலிசா தாமே வெளியே வரவில்லை? அவர் ஒருவேளை மற்ற காரியங்களில் அலுவலாயிருந்திருக்கலாம், ஆனால் அவர் நாகமானை குஷ்டரோகத்திலிருந்து குணப்படுத்த விரும்பியது போலவே, அவன் பெருமை யிலிருந்தும் அவனை குணப்படுத்த விரும்பினார் என்று நான் நினைக்கிறேன். தேவன் வெறுக்கிற காரியங்களின் பட்டியலில் பெருமை முதலாவது இடத்தி லிருக்கிறது (நீதிமொழிகள் 6:16-19; காண்க KJV).

எதிர்செயல்

எளிமையான அறிவுரைகளை கேட்டபோது, நாகமான் மிகவும் அதிகமாய் சந்தோஷப்பட்டாரா? இல்லை, அவர் "மிகவும் கோபப்பட்டார்" (2 இராஜாக்கள் 5:11அ). NIV மொழிபெயர்ப்பு "அவர் கோபப்பட்டார்" என்று கூறுகிறது; "அவன் கடுங்கோபம் கொண்டான், உருமினான்" என CEV மொழிபெயர்ப்பு கூறுகிறது. நாகமான் எல்லாவற்றையும் மறந்து விட்டு வீட்டிற்குச் செல்ல ஆயத்த மாயிருந்தான் (வசனம் 11ஆ). அவன் சீரியாவிலிருந்து புறப்பட்டு வந்தபோது அவன் மாம்சம் அழுகி விழுந்து கொண்டிருந்தது, அவன் அதே நிலையில் திரும்பி செல்வான். எவ்வளவு சோகமானது!

நாகமான், "அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை தொழுது, தன் கையினால் அந்த இடத்தை தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன்" என்றான் (வசனம் 11இ). எலிசா இப்படித்தான் செய்வார் என அவன் தன் மனதில் சில காரியங்களை திட்டம்பண்ணி வைத்திருந்தான்; தீர்க்கதரிசி ஒரு மந்திரத்தை முணுமுணுத்து சீரியாவில் கள்ள தீர்க்கதரிசிகள் செய்வது போல - விநோதமாக கையை அசைப்பார் என நினைத்திருந்தான். நாகமான் இன்னும் "தேவனுடைய சித்தத்தை மனிதனுடைய வழியில்" செய்வதில் பிடிவாதமாக இருந்தான்.

"நான் இப்படி நினைத்திருந்தேன்" என்பது ஒரு மனிதனுக்கு தொல்லைகளை கொண்டுவரும். நான் சிறுவனாயிருந்தபோது, சில பட்டாசுகளை வாங்கினேன். ஒரு பட்டாசின் பின் முனையில் ஒரு காற்றாடி பொருத்தப்பட்ட இயந்திரம் இருந்தது. அந்த காற்றாடி சுற்றி, அந்த கருவியை முன்னோக்கி உந்திதள்ளிவிடும் *என "நான் நினைத்தேன்." எங்கள் வீட்டு கொல்லைபுறத்தில் வெடிகளைப் பற்றவைத்தேன். அங்கே நிறைய மரங்களும் கொஞ்சம் வெற்றிடமும் இருந்தது. காலியிடத்தை நோக்கி போகும்படி, ஒரு மரத்தின் கீழ் அந்த பட்டாசை வைத்து, திரியை பற்றவைத்தேன். அது முன்னோக்கி பாய்ந்து செல்வதற்கு பதிலாக* மேல் நோக்கி *சென்று, ஒரு மரக்கிளையில் மோதி, திரும்பி கீழ்நோக்கி இறங்கி வந்து, தரையில் மோதி, எனது இரண்டு கால்களுக்கு நடுவாக பறந்து வந்து வெடித்து சிதறியது. இப்படித்தான் இந்த பட்டாசு வெடிக்கும் என "நான் நினைத்தி ருந்தது," எனது கால் சட்டையில் இரண்டு ஓட்டைகளை போட்டதோடு, இந்நாள் வரையில் இருக்கக்கூடிய இரண்டு சூட்டுக்கொப்புள தழும்புகளையும் உருவாக்கிவிட்டது.*

மனநல ஆலோசகர்கள் நாகமானின் இந்த எண்ணங்களை "சுயமாய் தனக்குதானே பேசுதல்" என அழைப்பார்கள்: இது ஒரு மனிதன் தன்னிடத்தில் தானே பேசிக்கொள்வதாகும். உங்கள் "தனக்கு தானே பேசுதல்" தவறானதாகவும்

தவறான தகவல்களின் அடிப்படையில் அமைந்ததாக இருக்குமானால் அது பெரும் தீங்கை விளைவிக்கும். நான் சில பரிதாபமான மக்களிடத்தில் பேசியிருக்கிறேன். அவர்கள் என்னிடம் இப்படிக் கூறினார்கள். "எனக்கு திருமணம் நடந்த போது என் வாழ்க்கை இப்படி இருக்கும் அல்லது அப்படி இருக்கும் என நினைத்திருந்தேன்." துக்கமாயிருந்த சிலருக்கு நான் ஆலோசனைகள் வழங்கியபோது, அவர்களும் இப்படித்தான் சொன்னார்கள்: "எனக்கு ஒரு வேலை கிடைத்த போது, நான் இப்படி நினைத்திருந்தேன் ... அல்லது இந்த குழந்தை பிறந்த போது ... அல்லது நான் பிரசங்கிக்க துவங்கினபோது ... எல்லாம் சிறப்பாக இருக்கும் என நினைத்திருந்தேன்." இதில் மிகப்பெரிய துயரம் என்னவென்றால், மக்கள் *மதரீதியாக* தவறாக வழிநடத்தப்பட்ட "தனக்கு தானே பேசுதல்" என்ற இந்த தவறுக்குள் சிக்கிக் கொள்வதுதான்: "ஆம் வேதாகமம் (இதை அல்லது அதை) போதிக்கிறது என்பதை நான் அறிவேன் - ஆனால் நான் எனது பெற்றோர் அல்லது எனது பிரசங்கியார் எனக்கு என்ன போதித்தார்களோ அதிலேயே நிலைத்திருப்பேன்." டோனால்ட் பார்ன்ஹவுஸ் இவ்விதம் கூறுகிறார், "ஒவ்வொருவரும் தேவனுடைய வழியில் பரலோகம் செல்வதற்கும் அல்லது தன் சுயவழியில் நரகம் செல்வதற்குமான சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள்."[4]

நாகமான் இன்னும் கத்திக்கொண்டிருந்தான்: "நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி உக்கிரத்தோடே திரும்பிபோனான்" (வசனம் 12). உலகத்தின் அந்த நதிகளைப் பார்த்தவர்கள் யோர்தானின் கலங்கலான தண்ணீரை விட தமஸ்குவின் "பொன்நிற ஓடைகள்"[5] விரும்பி தெரிந்தெடுக்கத் தக்கவைகள் என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். நாகமான் தன்னுடைய பெருமையை விட்டு விட்டு, தீர்க்கதரிசி கூறியதை செய்வதற்கு பதிலாக, இந்த சந்தர்ப்பத்தை, எந்த நதி சிறந்தது என்று ஒரு நதிநீர் போட்டியை கிளப்புவதற்கு பயன்படுத்தினார்.

நாகமான் செய்த தவறு மதவட்டாரத்தில் ஆண்டுகளாக திரும்ப திரும்ப செய்யப்பட்டு வருகிறது: "ஒரு குழந்தை வளர்ந்து பெரியவனாகி கர்த்தரை நிராகரித்து தன் ஆத்துமாவை இழந்துவிடும் வாய்ப்பைக் கொடுப்பதற்குப் பதில், அந்த குழந்தைக்கு குழந்தை 'ஞானஸ்நானம்' கொடுப்பது நிச்சயமாகவே சிறந்ததாய் இருக்கிறது"; "மக்களை தண்ணீரில் மூழ்கி அவர்கள் முழுவதும் நனையும்படி செய்வதைக்காட்டிலும், ஒரு சில சொட்டுகள் தண்ணீரை அவர்கள் மேல் தெளித்து 'ஞானஸ்நானம்' கொடுப்பது சிறந்ததாய் இருக்கிறது." நாகமானுக்கும் மற்றும் அவன் செய்த தவறை திரும்ப செய்கிற யாவருக்குமான என்னுடைய பதில் மிகவும் எளிமையானது: தேவன் என்ன கட்டளையிட்டுள்ளாரோ அதை, துல்லியமாக அவர் எப்படி செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறாரோ அதை அப்படியே செய்வதைக் காட்டிலும் "சிறந்தது" வேறு ஒன்றுமில்லை (மத்தேயு 7:21; லூக்கா 6:46; காண்க ஏசாயா 55:8, 9)!

"ஆகவே நாகமான் உக்கிரத்தோடே திரும்பிபோனான்" (வசனம் 12ஆ). அநேகமாக அவன், எலிசா வீட்டை விட்டு வெளியே வந்து, தன்னை ஒரு முக்கியமான ஆள் என்று அங்கீகரிக்காததை அவன் ஒரு அவமானமாக எடுத்துக்கொண்டான். அழுக்கு தண்ணீரில் தன்னை போன்ற ஒரு பெரிய ஆள் மூழ்க வேண்டுமென்ற ஆலோசனை தனக்கு சொல்லப்பட்டதால்,

தான் தரக்குறைவாக நடத்தப்பட்டதாக அவன் நினைத்திருந்தான். அவன் "மருத்துவரிடம்" சென்றிருந்தார். ஆனால் அவருடைய "மருந்து சீட்டை" அவர் விரும்பவில்லை. ஆகவே அவருக்கு கோபம் வந்தது. எப்படியிருந்தாலும் அவனுடைய கோபம் உண்மை நிலையை மாற்றவில்லை; அவன் இன்னும் "உயிரோடு செத்துக்கொண்டிருந்தான்."[6] நான் எனது குளியல் அறையிலுள்ள எடை பார்க்கும் இயந்திரத்தின் மேல் கோபப்படலாம், ஆனால் அது எனது அதிக எடை பிரச்சனையைத் தீர்க்காது. ஒரு காற்றுமானியில் மேல் கோபப்படுவது, வரும் புயலை தடுத்து நிறுத்தாது. மிகவும் முக்கியமாக, ஒரு சுவிசேஷ பிரசங்கியார் மேல் கோபப்படுவது நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுக்கும் அவசியத்திலுள்ள ஒரு பாவி என்ற உண்மையை மாற்றியமைக்காது.

சுகமாகுதல் (5:13-17)

தேவனுடைய வல்லமையினால் சுகமாக்கப்பட்டார்!

"அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து பேசியபோது" (2 இராஜாக்கள் 13ஆ), நாகமானின் புனிதப்பயணம் அழிவை நோக்கி சென்றுகொண்டிருந்தது. அவர்கள், "அவனை நோக்கி, தகப்பனே, அந்த தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தை செய்ய உமக்கு சொல்லியிருந்தால், அதை நீர் செய்வீரல்லவா? ஸ்நானம்பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல் லும் போது, அதை செய்ய வேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்?" (வசனம் 13ஆ). ஊழியக்காரர் அவனிடத்தில் பேசியது அவர்கள் குணங்களைக் காட்டுகிறது: அவர்கள் தங்கள் எஜமானுக்காக கரிசனைப்பட்டார்கள். இது அவர்களுக்கு நாகமானோடு இருந்த உறவைப் பற்றியும், நாகமானை பற்றியும் அதிகம் கூறுகிறது. பல எஜமான்கள் "இந்த இடையூறை" வெறுத்திருப்பார்கள், அநேகமாக அவர்கள் "துணிவுக்காக" அவர்களை தண்டித்தும் இருப்பார்கள். எப்படியிருந்தாலும், இவர்கள் நாகமானோடு தாராளமாக பேசமுடியும் என்பதை உணர்ந்தார்கள், நாகமானும் அவர்களுக்கு செவிகொடுக்க விருப்பமுள்ளவனாயிருந்தான்.

அவர்கள் உண்மையில் கூறியது என்னவென்றால், "நீங்கள் பலம் பொருந்திய எதிரியோடு நேரடியாக சண்டையிடுங்கள் அல்லது ஒரு காட்டு விலங்கோடு சண்டையிடுங்கள் என்று கூறியிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? அவர் தன் தேவனுக்கு தங்கத்தினால் ஒரு நினைவு சின்னத்தை எழுப்புங்கள் என்று சொல்லியிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? இந்த சாபத்திலிருந்து உங்களை விடுவித்துக் கொள்வதற்கு, *எதை வேண்டுமானாலும்* செய்வதற்கு நீங்கள் விருப்பமுள்ளவர்களாய் இருந்திருக்க மாட்டீர்களா? அப்படியிருக்கும் போது, அவர் செய்யும்படி கூறிய, இந்த சுலபமான காரியத்தை நீங்கள் ஏன் செய்யக்கூடாது?"

சிலர் பாவத்தின் குற்றத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு எதை வேண்டுமானாலும் மற்றும் எல்லாவற்றையும் - அதாவது கர்த்தருடைய எளிய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதை தவிர எதை வேண்டுமானாலும் மற்றும் எல்லாவற்றையும் செய்ய மனதாயிருப்பது எனக்கு எப்போதும் புரிந்து கொள்ள முடியாத ஒரு புதிராகவே இருக்கிறது.

பேதுரு அவர்களை நோக்கி, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள்" (நடபடிகள் 2:38).

"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானாஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்றான் (நடபடிகள் 22:16).

நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே (கலாத்தியர் 3:26, 27).

தேவனானவர் உங்களை "ஒரு பெரிய காரியத்தை" செய்யும்படி கூறினால், அதை செய்யமாட்டீர்களா? "ஸ்நானம் பண்ணி, சுத்தமாகு என்று அவர் கூறும்போது, அதை செய்வது எத்தனை அவசியமாயிருக்கிறது?"

வேலைக்காரரின் வார்த்தைகள், நாகமானை அவன் எலிசாவின் சுகமாக்குதலை முயன்றுபார்க்காமல் வீட்டிற்கு செல்வது மதியீனமான தாயிருக்கும் என உணரவைத்தது. இவ்விதமாக அவன், "யோர்தான் நதியில் இறங்கினான்" (2 இராஜாக்கள் 5:14அ). அவன் ஆற்றங்கறையில் நின்று, தன் உடைகளை களைந்து தண்ணீரில் இறங்குவதை உங்களால் பார்க்க முடிகிறதா? அவன் தண்ணீருக்குள் மூழ்கி பின் எழுந்து நின்றான். அவன் தன் கைகள் மற்றும் மார்பகத்தை பார்த்தான், ஆனால் அவன் மாம்சம் இன்னமும் தொழுநோயால் பாழ்ப்பட்டதாகவே இருந்தது. அவன் முகத்தில் ஏமாற்றம் காணப்பட்ட போது, அவன் வேலைக்காரரில் ஒருவன் கரையில் நின்றபடி, "அது ஒரு தரம்தான், தீர்க்கதரிசி 'ஏழு முறை' மூழ்கும்படி கூறியிருக்கிறார் என்று கத்தினான்."

வசனப்பகுதி நமக்கு உணர்த்துவது என்னவென்றால், நாகமான் ஒருமுறை மூழ்கின போது ஏழில் ஒரு மடங்கு அவன் சுகமாகவில்லை; மற்றும் அவன் இருமுறை மூழ்கினபோது, ஏழில் இருமடங்கு சுகமாகவில்லை. மாறாக, எந்த ஒரு சுகமும் கிடைப்பதற்கு முன்பாக அவன் ஏழு முறை மூழ்க வேண்டியிருந்தது. குருமாச்சார் என்பவர் இவ்விதம் கூறுகிறார், "அவன் ஒரு முறை மூழ்கினான், எந்த பயனும் இருக்கவில்லை; இரண்டாம் முறை மூழ்கினான், தொழுநோய் அகலவில்லை; மறுபடியும், மறுபடியும் மற்றும் மறுபடியும் மூழ்கினான், நிலமை அப்படியேதான் இருந்தது."[7] ராலிசன் என்பவர் பின்வருமாறு எழுதியுள்ளார், "எந்த ஒரு விளைவு/முடிவும் தெரியாமல், ஒரு காரியத்தை ஆறுமுறை திரும்ப திரும்ப செய்வது, மறுபடியும் விடாமுற்சியோடு ஏழாவது முறை அதை திரும்ப செய்வதற்கு, மனிதர்களிடம் பெரும்பாலும் இல்லாமலிருக்கிற, பெரிய அளவு விசுவாசமும் நம்பிக்கையும் தேவைப்படுகிறது."[8]

வேலைக்காரர்கள் ஆற்றங்கரையில் நின்று, "ஒன்று ... இரண்டு ... மூன்று ..." என்று எண்ணுவதை நான் கற்பனை செய்கிறேன். இறுதியாக, நாகமான் ஏழாவது முறையாக தண்ணீருக்கடியில் சென்றான். "தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது" என வசனம்

கூறுகிறது (வசனம் 14ஆ). ஏழாவது முறை அவன் தண்ணீருக்கடியில் மூழ்கினபோது, அவன் மாம்சத்தில் கூச்சம் ஏற்பட்டதா? அவன் ஒரு புதிய உயிர் நாளங்களின் வழியாக பாய்ந்தோடியதை பார்த்தானா? அவன் தன்னுடைய பெலன் புதுப்பிக்கப்பட்டதை உணர்ந்தானா?[9] எனக்கு தெரியாது, ஆனால் அவன் தண்ணீரில் இருந்து வந்தபோது, “அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைபோல[10] மாறி, அவன் சுத்தமானான்” என வசனம் கூறுகிறது (வசனம் 14இ). அடுத்த முறை நீங்கள் ஒரு குழந்தையை காணும்போது, அதின் மிருதுவான, இனிய மற்றும் பழுதற்ற தோலை கவனியுங்கள். நாகமானின் மாம்சம் அப்படி இருந்தது! ஒரு எழுத்தாளர் “புதிய நாகமானை” இவ்விதம் விவரிக்கிறார்:

> ... அவன் முகம் ஜொலித்தது மற்றும் அவன் கண்கள் ஒளிவீசின, இளமையும் வலிமையும் திரும்பியது; அவனுடைய அழுகிய மாம்சம், தோல் செதில்கள் தண்ணீர் வெள்ளத்தின் கீழ் மறைந்து, அவன் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஆரோக்கியமான மற்றும் ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல மிருதுவான மாம்சம் உருவாயிற்று![11]

நாகமான் தீர்க்கதரிசியிடம் திரும்பி சென்று, இந்த உணர்வுப்பூர்வமான அறிக்கையை செய்தான்: “இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்” (வசனம் 15ஆ). அந்த தண்ணீர் தன்னை சுத்தமாக்கவில்லை என்பதை நாகமான் புரிந்துகொண்டார். யோர்தானின் தண்ணீருக்கு தொழுநோயைக் குண மாக்கும் வல்லமை இருந்திருக்குமானால், அவன் உலகெங்கிலுமிருந்து வந்துள்ள தொழுநோயாளிகள் கூட்டத்தில் முண்டி அடித்து சென்றிருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்கும். மாறாக, *தேவன்* இஸ்ரவேலின் தேவன் - உண்மை யான தேவன் - அவரால் சுகமாக்கப்பட்டதை அவன் உணர்ந்திருந்தான் - அவரையே சேவித்துப் பணிய அவன் உறுதிமொழி எடுத்தான் (வசனம் 17ஆ).

தேவனுடைய கிருபையால் காப்பாற்றப்பட்டான்!

மறுபடியுமாக, கர்த்தருக்கு கீழ்ப்படிவது தொடர்பாக, நாம் நமது சொந்த சமன்பாடுகளை உருவாக்கலாம். கர்த்தர், பாவம் என்ற “தொழுநோயால்” சபிக்கப்பட்ட மனிதன் விசுவாசிக்க வேண்டும் (யோவான் 3:16; எபேசியர் 2:8), மனந்திரும்ப வேண்டும் (லூக்கா 13:3; நடபடிகள் 17:30), இயேசுவிலுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும் (மத்தேயு 10:32; ரோமர் 10:9, 10), மற்றும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறவேண்டும் என கட்டளையிட்டுள்ளார் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38). இதற்கு பதில ளிக்கும் விதமாக, ஒரு பாவி விசுவாசிக்கிறார். அவர் நான்கில் ஒரு பகுதி சுத்தமாகிவிட்டாரா? இல்லை, கர்த்தர் அவர் மனந்திரும்ப வேண்டும், அறிக்கை செய்யவேண்டும் மற்றும் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதையும் கட்டளையிட்டுள்ளார். அவர் மனந்திரும்புகிறார். அவர் ஒன்றில் பாதி அளவு சுத்தமாகிவிட்டாரா? இல்லை, அவர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றும் கர்த்தர் கூறியுள்ளார். அவர் இயேசு கிறிஸ்து ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என விசுவாசிப்பதாக அறிக்கையும் செய்கிறார்.

அவர் நான்கில் மூன்று பகுதி சுத்தமாகிவிட்டாரா? இல்லை, கர்த்தர் ஞானஸ்நானத்தையும் கட்டளையிட்டுள்ளார். ஒரு பாவி தன் இருதயத்தில் விசுவாசமுடையவராக ஞானஸ்நானமாகிய தண்ணீர் கல்லறைக்குள் சென்று வெளியே வரும்போது (காண்க ரோமர் 6:3, 4), ஒரு சிறு குழந்தையின் ஆத்து மாவைப்போல சுத்தமானதாக அது கழுவப்படுகிறது (நடபடிகள் 22:16; காண்க மத்தேயு 18:3)! அவர் கிறிஸ்துவுக்குள் புதிதான ஜீவனை உடையவராக இருக்கிறார் (ரோமர் 6:4); மற்றும் அவர் ஒரு புதிய சிருஷ்டியாக இருக்கிறார் (2 கொரிந்தியர் 5:17)!

ஞானஸ்நானத் தண்ணீரில் வல்லமை இருக்கிறது என்பது அதின் அர்த்த மாயிருக்கிறதா? யோர்தான் நதியின் தண்ணீரில் வல்லமை இல்லாதது போல, இதிலும் வல்லமை இல்லை. தேவனானவர் சுத்திகரிக்கிறார். அவர் மாத்திரமே அந்த வல்லமையை உடையவராக இருக்கிறார் மற்றும் அவர் மாத்திரமே அந்த உரிமை/அதிகாரம் உடையவராக இருக்கிறார். எப்படியிருப்பினும், தன் ஊழியக்காரனாகிய எலிசா சொன்னபடி, துல்லியமாக அவன் சொன்னபடி - நாகமான் செய்த போதுதான் - தேவன் அவனை சுகமாக்கினார். அப்படியே, நீங்கள் அவர் கேட்டுக்கொண்டபடி செய்யும்போது - நீங்கள் அவர் தன்னு டைய வசனத்தில் சொல்லியபடி துல்லியமாக செய்யும்போது, உங்கள் பாவக்குற்றத்திலிருந்து உங்களை கழுவி சுத்திகரிப்பதாக தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார்.

முடிவுரை

தேவன் நாகமானை அவன் தொழுநோயிலிருந்து குணமாக்க, படிப்படியாக அவர் செயல்பட்டவிதம் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, அவனை தன்னுடைய விசுவாசியாக மாற்ற அவர் செயல்பட்ட விதம் ஆகியவற்றை சிந்திக்கையில் அது ஆச்சரியமாக இருக்கிறது. எப்படியிருந்தாலும், நாகமான் இந்த தொடர் நிகழ்ச்சியில் எதாவது ஒரு கட்டத்தில் தேவனுடைய திட்டத்தை தோற்கடித்திருக்கக் கூடும். தீர்மானம் எடுக்கிற நிலைக்கு உங்களை கொண்டுவருவதற்கு உங்கள் வாழ்க்கையில் சம்பவித்த எல்லாவற்றையும் நினைத்துப்பாருங்கள். கர்த்தருடைய கரத்தை உங்களால் காண முடிகிறதா; அவருடைய கரிசனையை உங்களால் காணமுடிகிறதா? தேவனானவர் உங்கள் பாவம் என்னும் தொழுநோயை குணமாக்க விரும்புகிறார் (காண்க 2 பேதுரு 3:9); இருப்பினும், நாகமான் தனக்கான தேவனுடைய திட்டத்தை தோற்கடிக்க வாய்ப்பு இருந்தது போல, நீங்களும் செய்யக்கூடும். டிவிட் எல் மூடி என்பவர் பின்வருமாறு எழுதியுள்ளார். நாகமான், "கோபத்தை இழந்தார்; பின் தன் பெருமையை இழந்தார்; பின்னர் தன் தொழுநோயை இழந்தார்; மேட்டிமையான, முரட்டாட்டமான பாவிகள் பொதுவாக இந்த படிமுறையில் தான் மனமாற்றத்திற்குள் வருகிறார்கள்."[12] பெருமை நீங்கள் கீழ்ப்படியக்கூடாதபடி தடுத்துக் கொண்டிருக்குமானால், இன்றே அதை விட்டுவிடுங்கள். "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்ற சத்தியம் இன்றும் உண்மையுள்ளதாயிருக்கிறது (லூக்கா 14:11). மனத்தாழ்மை, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலோடு இன்றே கர்த்தரிடம் திரும்புங்கள்!

குறிப்புகள்

[1]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 37. [2]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 147. [3]Robert Lowry, "Nothing but the Blood," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [4]Quoted in Wiersbe, 38. [5]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadelphia: Herman Hooker, 1839), 93; J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 532. [6]This phrase is from Charles Swindoll, "Naaman and Gehazi: Characters in Contrast," radio sermon, n.d. [7]Krummacher, 149. See Elaine J. Fletcher, *Elisha, the Miracle Prophet* (Washington, DC: Review and Herald Publishing Association, 1960), 48. [8]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1 & 2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 94. [9]*இந்த வாக்கியமும் இதற்கு முந்தைய இரு வாக்கியங்களும் குருமாச்சூர் என்பவரால் கூறப்பட்டது, 150.* [10]*நாகமான் தொழுநோயால் தன் உடலின் பாகங்கள் எதையும் இழந்திருந்தால், அவைகளும் அவனுக்கு "திரும்ப வந்துவிட்டன" என்பதை இந்த வார்த்தை உணர்த்துகிறது.*

[11]Krummacher, 150. [12]Quoted in Wiersbe, 39.

எலிசாவின் காலத்தில் அரசாண்ட மன்னர்கள்

யூதாவின் இராஜாக்கள்	*இஸ்ரவேலின் இராஜாக்கள்*	*சீரியாவின் இராஜாக்கள்*
யோசபாத் *(கி.மு. 873-48)*	ஆகாப் *(கி.மு. 874-53)*	பெனாதாத் I *(கி.மு. 895-60)*
யோராம் *(கி.மு. 848-41)*	அகசியா *(கி.மு. 853-52)*	பெனாதாத் II *(கி.மு. 860-42)*
அகசியா *(கி.மு. 841)*	யோராம் *(கி.மு. 852-41)*	
அத்தாலியா *(கி.மு. 841-35)*	யெகூ *(கி.மு. 841-14)*	ஆசகேல் *(கி.மு. 842-798)*
யோவாஸ் *(கி.மு. 835-796)*	யோவாகாஸ் *(கி.மு. 814-798)*	
	யோவாஸ் *(கி.மு. 798-783)*	

(தேதிகள் தோராயமானவைகள், இந்த பாடங்களில் வரும் பெனாதாத் என்பவர் பெனாதாத் II ஆக இருக்கிறார்.)

12

வாழ்க்கை சபிக்கப்பட்ட ஒரு மனிதன்

[2 இராஜாக்கள் 4:14, 27, 29, 42, 43; 5:5, 10, 14-16, 19-27; 6:15; 8:4, 5]

நாகமானைப் பற்றிய சம்பவங்கள், நீண்டவைகள் என்பது உட்பட, அவை பல விதங்களில் குறிப்பிடத்தக்கவைகளாயுள்ளன. 2 இராஜாக்கள் 5ஆம் அதிகாரம் முழுவதும் இதற்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாம் இரண்டு பாடங்களை இதுவரை வழங்கியுள்ளோம், இருப்பினும் இன்னும் ஒரு பாடம் கொடுக்கப்படவேண்டியதாயிருக்கிறது: அது கேயாசியின் முடிவு பற்றிய பாடமாக உள்ளது. அதிகாரம் 5 நாகமான் மற்றும் கேயாசி ஆகிய இருவருக்கிடையிலுள்ள வேற்றுமை பற்றி கூறும் அதிகாரமாக கருதப்படலாம்: "நாகமான் ஒரு தொழுநோயாளியாக வந்து, கர்த்தருடைய வேலைக்காரராக திரும்புகிறார். கேயாசி கர்த்தருடைய வேலைக்காரனாகத் துவங்கி, ஒரு தொழுநோயாளியாக தன் வாழ்க்கையை முடிக்கிறார்."[1]

கேயாசியின் குணாதிசயங்கள்
(4:14, 27, 29, 42, 43; 6:15; 8:4, 5)

"கேயாசி" என்ற பெயர் "பள்ளத்தாக்கின் பார்வை" என்று அர்த்தப்படலாம்.[2] இதற்கப்பால், கேயாசி குறித்த பின்புல தகவல் நமக்கு இல்லை. எப்போது அல்லது எங்கிருந்து அவர் எலிசாவுக்கு ஊழியம் செய்யத் துவங்கினார் என்று நமக்குத் தெரியாது. தீர்க்கதரிசிகளின் புத்திரர் பள்ளிகள் ஒன்றிலிருந்து இவர் எலிசாவால் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது. அந்த மாணவர்களுக்கிடையில் இவர் ஒரு திறமைசாலியான, மிகவும் நம்பிக்கையூட்டக்கூடிய ஒருவராக இருந்திருக்கலாம். எப்படியிருந்த போதிலும், இவர் வாழ்நாள் முழுவதற்குமான ஒரு பணி வாய்ப்பை பெற்றிருந்தார்: எலிசா எலியாவிடம் நேரடியாக கற்றுக்கொண்டது போல, இவருக்கும் எலிசாவுடன் பயணம் செய்யவும் நேரடியாக கற்றுக்கொள்ளவும் வாய்ப்புப் பெற்றிருந்தார். கேயாசி அந்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தியிருந்தால், நாம் இன்று இஸ்ரவேலின் வட ராஜ்யத்தின் பிரபலமான *மூன்று* தீர்க்கதரிசிகளைக் குறித்து பேசுகிறவர்களாக இருப்போம்: எலியா, எலிசா, மற்றும் கேயாசி.

இதுவரை நாம் கேயாசியின் ஆற்றலைக் குறித்து பார்த்தோம். சூனேமியாப்பெண் ஒரு மகனை விரும்பினாள் என கேயாசி முடிவு செய்ததிலிருந்து, அவனுடைய உட்பார்வை/ஆழ்ந்த அறிவு காணப்படுகிறது (4:14). சிறுவன் மரித்தபோது, எலிசா கேயாசியிடம் தன் தடியைக்

கொடுத்தனுப்பியது கேயாசியின் நம்பகத்தன்மையை காண்பிக்கிறது (4:29). ராஜா கேயாசியிடம் தன் எஜமானின் அற்புதங்களை விவரிக்கும்படி கேட்டுக்கொண்டது, அவனுடைய புகழைக் காண்பிக்கிறது (8:4, 5).

அதே நேரத்தில், கேயாசியின் ஆவிக்குரிய முதிர்ச்சியின்மையும் அவ்வப்போது காணப்படுகிறது. துயருறும் ஒரு தாயை அவர் விலக்கிவிட ஆயத்தமாயிருந்தார் (4:27). ஒரு சிறிய சாக்குப்பையிலுள்ள உணவை நூறு பேருக்கு வழங்கும்படி சொல்லப்பட்டபோது, அதைக் குறித்து சந்தேகப்பட்டவர் அநேகமாக இந்த கேயாசியாகத்தான் இருந்திருக்கவேண்டும். சீரியாவின் இராணுவத்தைப் பார்த்து பயந்து செயலிழந்துபோனவர் இந்த கேயாசியாக இருந்திருக்கலாம் (6:15).[3]

எப்படியிருப்பினும், கேயாசியின் எல்லா தவறுகளும் மன்னிக்கப்பட்டிருப்பது மற்றும் மறக்கப்பட்டிருப்பது சாத்தியமாயிருந்தது. இவனுடைய தோல்விகள் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலருடைய தோல் விகளை விட பெரிதானவைகள் அல்ல, அவர்களில் பெரும்பாலானோர் பெரிய ஆவிக்குரிய தலைவர்களாக மாறினார்கள். முடிவாக, கேயாசியின் முடிவு, அவன் துக்ககரமான முறையில் தோல்வியடைந்த சில பரிசோதனை முடிவுகளின் மேல் அமையப்பெற்றது.

கேயாசி சந்தித்த சோதனைகள் *(5:5, 10, 14-16, 19-26)*

மனதுருக்கத்திற்கான ஒரு சோதனை

கேயாசி சந்தித்த முதல் சோதனை மனதுருக்கத்திற்கான ஒரு சோதனையாயிருந்தது. நமது முந்திய பாடத்தில் நாகமான் யோர்தானில் ஏழுமுறை மூழ்க வேண்டும் என்ற செய்தியை சொல்லியனுப்ப, எலிசா பயன்படுத்தினச் செய்தியாளர் கேயாசியாக இருந்தார் என கூறியிருந்தோம் (5:10). கேயாசி வீட்டிலிருந்து வெளியே வந்தபோது, அவன் கண்களை கவர்ந்திழுத்த அந்த ஜொலிப்பான செல்வத்தின் காட்சியை கற்பனை செய்ய முயற்சியுங்கள். நாகமானின் வேலைக்காரர் தங்கள் கைகளில் ஏந்தியிருந்த பொன், வெள்ளி மற்றும் விலையுயர்ந்த ஆடைகளைப் பார்த்தபோது, அநேக மாக கேயாசியின் இருதயம் வேகமாக துடித்தது (5:5ஆ). இந்த செல்வங்களின் பாரம் எல்லாம் விலங்குகளின் மேல் ஏற்றப்பட்டு, நாகமானின் பரிவாரங்களெல் லாம் கிழக்கில், யோர்தான் நோக்கி நகர்ந்தபோது, அநேகமாக அவன் பெரிய ஏமாற்றமடைந்தான்.

அவர் சந்தோஷப்படும்படி, சில நாட்களிலேயே நாகமான் அந்த செல் வங்களை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தான் (5:15). எப்படியிருப்பினும், இராணுவ வீரர் அவைகளை வற்புறுத்தி எலிசாவுக்கு கொடுத்தபோது, கேயாசிக்கு துக்கமுண்டாக, தீர்க்கதரிசி அதை ஏற்கமறுத்துவிட்டார் (5:16அ). கேயாசியின் எண்ணங்களை என்னால் கற்பனை செய்யமுடிகிறது: "எவர் ஒருவருக்கும் ஒரு வெகுமதி பெற தகுதி இருக்கிறதென்றால், அந்த தகுதி நமக்குத்தான் இருக்கிறது - மற்றவர்களைவிட அதிக தேவை நமக்கே இருக்கிறது. நமது பொருள் வைக்கும் அலமாரி காலியாக கிடக்கிறது, மற்றும் எலிசா ஒரு புதிய அங்கியை பயன்படுத்த முடியும். அந்த விஷயத்தில், நானும் பயன்பெறக்

கூடும்! மேலும், தீர்க்கதரிசிகளின் புத்திரர் பள்ளிகளின் தேவைகளைப் பற்றி என்ன? அந்த $ 80,000 (36,00000,00) தொகை என்பது அஞ்ஞான மனிதனுக்கு ஒரு பெரிய தொகையல்ல, ஆனால் அதை கொண்டு நாம் செய்ய சாத்தியமான நன்மையை சிந்தித்துப்பார்! எனது எஜமான் இதை பற்றி என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறாரோ?" இருந்தபோதிலும், எலிசா இந்த காரியத்தில் மிகவும் உறுதியாக இருந்தார் (5:16ஆ). ஆகவே நாகமானின் பிரயாணக் கூட்டம் புறப்பட்டுவிட்டது (5:19ஆ).

பிரயாணக் கூட்டத்தார் புறப்பட்டதைக் கவனித்த கேயாசியின் இருதயத்தில் என்ன இருந்தது என்பதை ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர் வெளிப்படுத்தியுள்ளார்: "அந்த சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையிலே வாங்காமல் அவனை விட்டுவிட்டார்" (5:20அ). "விட்டுவிட்டார்" என்ற வார்த்தையை கவனியுங்கள்: "அந்த சீரியனாகிய நாகமானை ... விட்டுவிட்டார்" (5:20ஆ). கேயாசியைப் பொருத்தவரை, நாகமான் இன்னமும் ஒரு விரோதியாக, "யூதா சிறுமிகளை கடத்திக்கொண்டுபோன அவன் ஒரு தொழுநோயாளியாக தனிமைப்படுத்தப்பட்ட சாகும்படி விடப்பட்டிருக்கவேண்டிய ஒரு பகைஞனாகவே இருந்தான்."[4] கேயாசியின் மனதை பொருத்தவரை, நாகமான் ஒரு தண்டனைக்குத் தகுதியானவன்; எலிசா அவன் கொடுத்த எல்லாவற்றையும் மற்றும் கூடுதலாகவும் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். அதற்கு பதிலாக, எலிசா (நாம் கூறுகிறபடி) "அவனை சும்மா போகவிட்டுவிட்டார்."

கேயாசி மனதுருக்கத்திற்கானப் போட்டியில் தவறிவிட்டார். தங்கள் வாழ்வில் சோகத்திலுள்ள மக்களுக்கு - அவர்கள் யாராயிருந்தாலும், எத்தேசத்தவரானாலும் யூதர்கள் அவர்கள் மனதுருக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என போதிப்பது இந்த கதையின் நோக்கமாயிருந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இருந்தபோதிலும், யூதர்களுக்கு இந்த பாடத்தை கற்றுக்கொள்வது கடினமானதாயிருந்தது (காண்க லூக்கா 4:27, 28). புதிய ஏற்பாட்டில், இயேசுவானவர் பிதாவாகிய தேவன் இரக்கத்தை விரும்புவதாக வலியுறுத்தினார் (மத்தேயு 9:13). மறுபடியும், மறுபடியும், இயேசு "மனதுருகினார்" என கூறப்படுகிறது (மத்தேயு 20:34; மாற்கு 1:41). "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தமும் பிரியமுமாய், உருக்கமான இரக்கத்தையும் ... தரித்துக்கொண்டு ..." என பவுல் எழுதினார் (கொலோசெயர் 3:12).

இயேசு, லூக்கா 10ஆம் அதிகாரத்தில் மனதுருக்கத்திற்கான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அதில் தவறின ஆசாரியன் மற்றும் பரிசேயனை பற்றி கூறியுள்ளார் (வசனங்கள் 30-32). பின்பு, அவர் அதே சோதனையில் வெற்றி பெற்ற சமாரியனைப் பற்றி கூறியுள்ளார் (வசனங்கள் 33-35). நீங்களும் நானும் ஒவ்வொரு நாளும் மனதுருக்கத்திற்கான சோதனையை எடுத்துக்கொள்கிறோம்; நாம் குறைவிலுள்ள மக்களால் சூழப்பட்டுள்ளோம். நாம் சுயத்தை மையமாக கொண்டு செயல்படுகிறவர்களாக மற்றும் "பக்கமாக விலகிப்போகிறவர்களாக" இல்லாமல் இருக்கவும் மேலும் தேவையிலுள்ளவர்களுக்கு உதவும் வழியில் அன்பின் வழியில் செயல்படவும் தேவன் நமக்கு உதவி செய்வாராக (கலாத்தியர் 6:10; எபேசியர் 4:28ஆ).

நேர்மையான ஒரு சோதனை

எலிசா நாகமானுடைய செல்வங்களை பெற்றுக் கொள்ளாவிட்டால், தான் பெற்றுக்கொள்வதாக கேயாசி தீர்மானித்தான். கேயாசி "நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே எதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன் மேல் ஆணையிடுவேன் ..." என நினைத்தான் (5:20). "கர்த்தருடைய ஜீவன் மேல்" (வசனம் 16 உடன் ஒப்பிடுக) என்ற கேயாசியின் ஆணை தொந்திரவு செய்யக்கூடியதாயிருக்கிறது; அவன் தனது பொய் மற்றும் வஞ்சகத்தை புனிதப்படுத்த தேவனுடைய பரிசுத்த நாமத்தைப் பயன்படுத்தினான். இன்றும், அந்த பரிசுத்த நாமத்தை சிறிதளவு அல்லது முழுவதுமாக பயமின்றி பயன்படுத்துகிறவர்களை எனக்கு நினைவிருக்கிறது. தேவனுடைய நாமம் "பரிசுத்தப்பட [பரிசுத்தமாய் வைக்கப்பட]" வேண்டும் (மத்தேயு 6:9); அவருடைய நாமம் வீணிலே வழங்கப்படக் கூடாது (காண்க யாத்திராகமம் 20:7).

நாகமானின் பிரயாணக் கூட்டத்தார் ஏற்கெனவே சென்றுவிட்டார்கள் (2 இராஜாக்கள் 5:19ஆ); ஆனால் பெரிய பிரயாணக் கூட்டமாய் இருந்தபடியால், சிலர் கால் நடையாகவும் பயணித்ததால், அவர்கள் மெதுவாக பிரயாணம் செய்திருக்கவேண்டும். கேயாசி ஓடிச் செல்வாரெனில், அவர்களை பிடித்துவிடமுடியும். "கேயாசி நாகமானைப் பின்தொடர்ந்தான்" (வசனம் 21அ).

நாகமான் கேயாசி தன் பிறகே ஓடிவருவதைக் கண்டு, பயணத்தை நிறுத்தினான். "அவனுக்கு எதிர்கொண்டு போக இரதத்திலிருந்து குதித்து ..." என்று வசனம் 21ஆ கூறுகிறது. இது கண்ணியத்திற்குரிய அந்த தலைவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றத்தைச் செயல்விளக்கப்படுத்துகிறதாயிருக்கிறது. அவன் தன் யோர்தான் நதி அனுபவத்திற்கு முன்பு, இரதத்திலிருந்து இறங்கி, ஒரு சாதாரண வேலைக்காரனை வாழ்த்துவதை "அவமானமானதாக" நினைத் திருப்பார்.

இராணுவத்தலைவர் "சுகசெய்தியா?" என கேட்ட போது, அவன் கவலை தோய்ந்த முகத்தையுடையவனாக இருந்திருப்பான் (5:21இ). கேயாசி அவ்வளவாய் ஓடின பின்பு, அவன் மூச்சு வாங்க சிரமப்படுவதை நான் பார்க்கிறேன். இறுதியில், "சுக செய்திதான்" என அவனால் பதிலளிக்க முடிந்தது (5:22அ).[5] அதன்பிறகு, வேலைக்காரன் உதட்டிலிருந்து கவனமாய் திட்டமிட்டத் தொடர் பொய்கள் வந்தன:

பொய் எண் #1: "என் எஜமான் என்னை அனுப்பினார்" (5:22ஆ).

பொய் எண் #2: "தீர்க்கதரிசிகளின் புத்திரரில் இரண்டு வாலிபர் இப்பொழுதான் எப்பிராயீம் மலைதேசத்திலிருந்து என்னிடத்தில் வந்தார்கள்" என [எலிசா சொல்ல சொன்னார்] (5:22இ). (இந்த கற்பனையான வாலிபர்கள் பெத்தேலிலுள்ள பள்ளியிலிருந்து வந்தி ருப்பார்கள்.)

பொய் எண் #3: "அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வஸ்திரங்களையும் தரவேண்டும் என்று கேட்க, என் [எஜமான் என்னை அனுப்பினார்]" என்றான் (5:22ஈ). (கேயாசி அதிகமானதை விரும்பினான். ஆனால் ஒரு நம்பதகுந்த பொய்யைச் சொல்ல

வேண்டுமென்பதற்காக பொய்யை மாற்றியமைத்தான்.)

நாகமான் கேயாசியை சந்தேகப்படுவதற்கு எந்த காரணமும் இருக்கவில்லை. ஆனால் அவன் வேண்டுகோளினிமித்தம் அநேகமாக சந்தோஷப்பட்டான். உரியவகையில் தனது பாராட்டைத் தெரிவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அது அவனுக்கு கொடுத்தது. கேயாசி ஒரு தாலந்து வெள்ளியை கேட்டான், ஆனால் நாகமான் அவனுக்கு இரண்டுதாலந்து கொடுத்தான் (5:23அ). தனக்கு அளிக்கப்பட்டதைக் குறித்து வேலைக்காரன் பெருமையடைந்திருப்பான், ஆனால் கிழக்கத்திய கலாச்சாரம் வெகுமதிகள் பெறுவதை நிராகரிக்கும்படி கோருகிறகிறது. நாகமான் கொடுத்தலில் தன் பங்கை நிறைவேற்றி, பெற்றுக்கொள்ளும்படி, அவனை "வருந்தி கேட்டுக் கொண்டான்"[6] (5:23ஆ). சம்பிரதாயங்கள் முடிந்தபின், கேயாசி சற்று "தயக்கத்தோடு" ஏற்றுக்கொண்டான், ஆகவே நாகமான் இரண்டு தாலந்து வெள்ளியையும், மாற்று வஸ்திரங்களையும் கொடுக்க கட்டளையிட்டான் (வசனம் 23இ). இந்த பொருட்கள் 120-150 பவுண்ட் (55-68 கிலோ) எடையுள்ளதாக இருந்திருக்கு மாகையால், பரிசுப்பொருட்களை எலிசாவிடம் கொண்டு சேர்க்க உதவியாக இரண்டு வேலைக்காரரை நியமித்தான் (5:23ஈ).

இறுதியாக, கேயாசியும் நாகமானுடைய வேலைக்காரரும் "மேட்டண்டைக்கு" வந்தனர் (5:24அ). "மேடு" என்பதற்கான எபிரேய வார்த்தை தெளிவாக இல்லாததால்[7] (KJV மொழிபெயர்ப்பில் "கோபுரம்" என்றுள்ளது), அந்த வார்த்தை பட்டணத்திற்கு வெளியே இருந்த ஒரு "பிரபலமான மலையை" குறிப்பதாக இருக்கக்கூடும்.[8] கேயாசி அந்த மனிதர் தொடர்ந்து முன்னேறி செல்வதை அனுமதிக்க அவனுக்கு தைரியமிருக்கவில்லை. அவர்கள் பட்டணத்திற்கு அருகாமையில் வந்தால் - அவர்கள் மக்களால் பார்க்கப்படுவார்கள் - பின் மக்கள் அவர்களோடு வினவக்கூடும். மேலும், நாகமானின் வேலைக்காரர் எலிசாவின் வீடுவரை சென்றால், அவர்கள் எலிசாவை பார்க்கவந்த இரண்டு வாலிப பயிற்சியாளரை சந்திக்க வாய்ப்புக் கேட்டிருப்பார்கள்.

கேயாசி மனிதரை நிறுத்தி, நாகமானிடத்திற்கு அனுப்பிவிட்டான் (5:24ஈ). அவன் அநேகமாக இவ்விதமாக ஏதோ சொல்லியிருப்பான்: "என்னால் இங்கிருந்து எடுத்துச் செல்ல முடியும், உங்கள் உதவிக்கு நன்றி. நாகமான் வீடு திரும்ப ஆசையாயிருக்கிறார், ஆகவே நீங்கள் பிரயாணக் கூட்டத்தாரோடு இருக்க வேண்டிய அவசியமிருக்கிறது. இது எந்த அளவுக்கு தீர்க்கதரிசிக்கு உதவியாக இருக்கும் என்பதை நாகமானிடம் சொல்ல மறந்துவிடாதீர்கள்." அந்த மனிதர்கள் ஆச்சரியப்பட்டிருப்பார்கள், ஆனால் அவர்கள் அந்த சாக்கு பைகளை கேயாசியிடம் கொடுத்துவிட்டு (5:24ஆ), போய்விட்டார்கள் (5:24உ).

கேயாசி, "அதை வீட்டிலே வைத்தான்" என வசனப்பகுதி கூறுகிறது (5:24இ). இது அந்த பகுதியிலிருந்த வேறு ஒரு வீடாக இருந்திருக்கலாம், ஆனால் அது கேயாசி தன் எஜமானோடு பகிர்ந்துகொண்ட ஒரு எளிய வீடாயிருந்தது. நான் பின்வரும் தொடர் நிகழ்வுகளை இவ்விதம் காட்சிப்படுத்துகிறேன்.

கேயாசி ஒவ்வொரு கையிலும் கனமான பைகளை வைத்துக் கொண்டு மலையிலிருந்து தடுமாறி கீழே இறங்கினான். அவன் அந்த பட்டணத்தின் வெளிப்பகுதியை அடைந்து, குறுகலான தெருக்கள் வழியாக சென்றான்.

அவ்வப்போது, அவன் நின்று மூச்சு வாங்கிக்கொண்டு, வலிக்கும் கை தசைகளுக்கு ஓய்வு கொடுத்தான். இறுதியாக, தன் வீட்டை அடைந்தான். அவன் சாக்கு மூட்டைகளை வைத்துவிட்டு, முன் கதவை திறந்து, உள்ளே எட்டிப்பார்த்தான். எலிசா அங்கு காணப்படவில்லை. நல்லது! அவன் அந்த பைகளை எடுத்துக்கொண்டு, தான் தூங்கும் இடத்திற்கு சென்றான். பைகளை ஒரு மூலையிலே வைத்து, கிழிந்த துணிகளால் அதை மூடிவைத்துவிட்டு, சற்றே பின் சென்று, தான் செய்திருந்ததை மீண்டும் பார்வையிட்டான். மிகவும் அருமை! கிழிந்த துணிகளின் கீழ் ஒரு புதையல் இருக்கிறது என்று ஒருவரும் சந்தேகப்படமாட்டார்கள். அவன் ஒரு நிம்மதி பெருமூச்சுவிட்டான். அவன் அதை செய்து முடித்துவிட்டான்! அவன் நாகமானை (போர்வீரன் அதற்கு பாத்திரனாயிருந்தான்) கொள்ளையிட்டான், ஆனால் அதே சமயத்தில் இவன் தன்னை ஐசுவரியவனாக்கிக் கொண்டான். அவன் அந்த பொன், வெள்ளி, விலையுயர்ந்த வஸ்திரம் இவற்றால் வரும் பணத்தை கொண்டு, எதையெல்லாம் வாங்கி குவிக்கமுடியும் என தன் மனதில் சிந்திக்க ஆரம்பித்தான்.[9] அவன் ஒரு வசதியான பிரபுவாக மாறி, ஒலிவத் தோப்புகள், திராட்சைத் தோட்டங்கள் மற்றும் ஆடுமாடுகளை கொண்டிருக்க முடியும் (வசனம் 26இ). அவனால் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்கக்கூடும் (வசனம் 26ஈ). அவன் ஒரு வேலைக்காரனாக இருப்பதற்கு பதிலாக, வேலை செய்யப்படும் நிலையில் இருப்பான்! எப்படியிருப்பினும், அவன் எலிசா சந்தேகப்படுவதை விரும்பவில்லை. ஏற்கெனவே, அவன் நீண்ட நேரம் போய் வந்திருக்கிறான். அவன் தன் உடைகளை சரிசெய்து கொண்டான், தன் உடையை தூசிதட்டினான், கண்ணிமையை சரிசெய்து கொண்டு தனது நீண்ட முடி மற்றும் தாடி வழியாக விரல்களை விட்டவாறே, எலிசாவை தேடிக்கொண்டு போனான்.

அவன் ஒன்றும் அறியாதவன் போல் காட்சியளித்துக் கொண்டு, "உள்ளே போய்த் தன் எஜமானுக்கு முன்பாக நின்றான்" (வசனம் 25அ). நான் ஒரு சிறுவனாயிருந்து, ஏதாவது ஒரு தவறைச் செய்திருந்தால், என் தாயார் அங்கு வந்து நின்றிருப்பார்கள். நான் குற்றமற்றவனாக என்னை காண்பித்துக் கொள்ள கடினமாய் முயற்சி செய்தேன்! ஒருவேளை, நீங்கள் இளைஞராக இருந்த போது, இப்படிப்பட்ட அனுபவங்களை உடையவர்களாக இருந்திருப்பீர்கள்.

எலிசா அவனை நோக்கி, "கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய்?" என்று கேட்டான் (5:25ஆ). அதற்கு அவன், "உமது அடியான் எங்கும் போகவில்லை" என்றான் (25இ). முன்பு, கேயாசி பகைக்கத் தக்க ஒரு எதிரியிடத்தில் பொய் சொல்லுவதில் ஒன்றும் தீமை இல்லை என நினைத்திருக்கலாம், ஆனால் இப்போது அவன் தேவனுடைய தீர்க்கதரிசியிடத்தில் பொய் சொல்லிக் கொண்டிருந்தான்! இது பொய்யின் பிரச்சனைகளில் ஒன்றாக உள்ளது: ஒரு முறை ஒருவன் பொய் சொல்லத் துவங்கினால், அதை அவன் தொடர்ந்து சொல்ல வேண்டியதாகும்; பழைய பொய்களை மறைக்க அவன் புதிய பொய்களைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிருக்கும். ஒரு பொய் இன்னொரு பொய்யைப் பெறுகிறது. "ஓ! முதல் முறை நாம் ஏமாற்ற முயற்சி செய்யும் போது, எப்படிப்பட்ட மாய வலையை நாம் பின்னக்கூடியவர்களாயிருக்கிறோம்!"[10] கேயாசி நேர்மைக்கான

சோதனையில் தவறிவிட்டான்.

அநேகர் இந்த சோதனையில் தவறிவருகிறார்கள் என நான் அஞ்சுகிறேன். நேர்மையின்மை அதிகமாக பெருகிவருவதாக தோன்றுகிறது. கேயாசி, ஒரு அஞ்ஞானியிடம் பொய் சொல்வது சரி என நினைத்திருக்கக்கூடும் மற்றும் இன்றும் சிலர் சில (தங்களை "நேர்மையானவர்கள்" என்று கருதுபவர்கள்) சந்தர்ப்பங்களில் பொய் சொல்வதில் தவறில்லை என நினைக்கிறார்கள்: உதாரணமாக, வருமான வரி செலுத்துவது தொடர்பாக அரசாங்கத்திடம் பொய் சொல்வது, வேகமாக வாகனத்தை ஓட்டியதை விசாரிக்கும் போக்குவரத்து காவலரிடம் பொய் சொல்வது, தவறாக காப்பீடு பணத்தைப் பெறுவதற்கு பெரிய நிறுவனங்களிடத்தில் பொய் சொல்லுதல் போன்றவைகளாகும். எப்படியிருந்தாலும், யார் சொன்னாலும் அல்லது யாரிடம் சொன்னாலும் - பொய் - பொய்யாகத்தான் இருக்கிறது. "... பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என வேதாகமம் பிரகடனப்படுத்துகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 21:8).

பவுலின் வார்த்தைகள் நம் ஒவ்வொருவருக்கும் சவாலாயுள்ளது. "... பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (எபேசியர் 4:25ஆ). மறுபடியுமாக, அவர் "நாம் அன்புடன் சத்தியத்தைப் பேசவேண்டும்" என வலியுறுத்திக் கூறியுள்ளார் (எபேசியர் 4:15). சிலருக்கு மற்றவர்களை விட, நேர்மையாயிருப்பது கடினமாக இருக்கிறது. ஆனால் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நாம் எல்லாரும் நேர்மைக்கான சோதனையை எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். ஒரு விதியின்படி, பொய்கள் ஆதாயத்திற்காக அல்லது ஒருவருடைய செய்கையின் விளைவுகளிலிருந்து தப்பிக்கொள்வதற்காக சொல்லப்படுகின்றன. அடுத்த முறை நீங்கள் உண்மையை சொல்வதைவிட பொய் சொல்வது ஆதாயமாயிருக்கும் அல்லது அதிக பாதிப்பில்லாதிருக்கும் என நீங்கள் நினைக்கும் போது, கேயாசியினுடைய பொய்யின் விளைவுகளை உங்களுக்கு நீங்களே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். தேவனானவர் பொய் கூறுதலை லேசானதாக எடுத்துக்கொள்வதில்லை; அவர் "பொய் நாவை" வெறுக்கிறார் (நீதிமொழிகள் 6:16, 17)!

பொருளாசைக்கான ஒரு சோதனை

கேயாசி, தான் எங்கே சென்றிருந்தான் என்பது பற்றி பொய் சொன்னபோது, அது தேவன் தன் எஜமானுக்கு அறிவியாமல் மறைத்து வைக்கிற சம்பவங்களில் ஒன்றாக இருக்கக்கூடும் என நம்பினான் (காண்க 4:27) - ஆனால் அது அப்படியிருக்கவில்லை. கர்த்தர் எல்லாவற்றையும் எலிசாவுக்கு வெளிப்படுத்தியிருந்தார். அப்பொழுது தீர்க்கதரிசி அவனை நோக்கி, "அந்த மனுஷன் (நாகமான்) உனக்கு எதிர் கொண்டுவர தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிறபோது என் மனம் உன்னுடன் கூடச் செல்ல வில்லையா?" என்றான் (5:26அ; ஒப்பிடுக யோவான் 1:48). இவ்வாறு கேயாசியின் செயல் வெளிப்படுத்தப்பட்டுவிட்டது.

எலிசா அவனை நோக்கி, "பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களை ... வாங்குவதற்கும் இது காலமா?" என்று கேட்டான் (5:26ஆ). தீர்க்கதரிசி பணம் தொடர்பான தன் வேலைக்காரனின் இருதய திட்டங்களையும் அறிந்திருந்தார்: "ஒலிவத் தோப்புகளையும், திராட்சை தோட்டங்களையும் ஆடுமாடுகளையும்

வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?" (5:26ஆ, இ) இப்படியாக, கேயாசியின் பேராசை வெளிப்படுத்தப்பட்டது.

இது யெகோவாவின் தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் மற்றும் சீரியாவின் கள்ள தீர்க்கதரிசிகளிடத்திலிருந்து வித்தியாசப்பட்டவர்கள் என்பதை நாகமானுக்குக் காண்பிப்பதற்கான நேரமாக *இருந்தது*. இது தேவனுடைய ஆசீர்வாதங்களை பணத்தினால் வாங்க முடியாது என்பதை காண்பிப்பதற்கான *நேரமாயிருந்தது*, தேவனுடைய கிருபையிலிருந்து ஒருவர் தனிப்பட்ட முறையில் லாபம் அடைவதற்கான நேரமாக அது *இருக்கவில்லை*. பொய் சொல்லுதல் மற்றும் ஏமாற்றுவதற்கான நேரமாக அது *இருக்கவில்லை*; எந்த காலமும் இதை செய்வதற்கான காலமாக *இருப்பதில்லை*.

வேதாகமம் கேயாசி எப்படி பேராசையின் உச்சிக்கு சென்று, அதை திருப்தி செய்ய எதையும் செய்யவிருப்பமுள்ளவனானான் என்று நமக்கு சொல்வதில்லை. ஒருவேளை அவன் எலிசாவோடு தன் பணி பயிற்சியை மிகவும் உற்சாகமாக துவங்கியிருந்தான். தீர்க்கதரிசியோடு இருப்பது தன் வாழ்க்கையை எளிதாக்கும் என ஒரு வேளை அவன் நினைத்தான். அப்படியானால், அது ஒரு கற்பனை என்பதை சீக்கிரமாகவே அறிந்து கொண்டான். அவன் இவ்விதம் சிந்திக்கிறதை நான் கற்பனை செய்கிறேன்; "நமக்கே கொஞ்சம் பொருள்கள் தான் இருக்கின்றன, யாராவது எப்போதாவது எதையாவது நமக்கு கொடுக்கும் போது, எலிசா அதையும் மற்றவர்களுக்கு கொடுத்துவிடுகிறார் [காண்க 4:42]! என் எஜமானுக்கு மட்டும் கொஞ்சம் புத்திசாலித்தனம் இருந்திருந்தால், நாங்கள் இருவருமே பணக்காரர்களாக இருக்கக் கூடும்!" மறுபடியுமாக, கேயாசியின் மனதில் என்ன நடந்தது என நமக்கு தெரியாது, ஆனால் இது மட்டும் நமக்கு நன்றாக தெரியும்: அவன் பொருளாசைக்கான சோதனையில் தவறிவிட்டான் - துக்ககரமான முறையில் தவறிவிட்டான்.

துவக்க காலத்திலிருந்தே, பொருளாசை (பேராசை) என்பது மனித இனத்தின் ஒரு மிகப்பெரிய பிரச்சனையாக இருந்து வருகிறது. பழைய ஏற்பாட்டில், பத்து கட்டளைகளின் கடைசி கட்டளை, "... இச்சியாதிருப்பாயாக" என போதித்தது (யாத்திராகமம் 20:17). புதிய ஏற்பாட்டில், இயேசுவானவர், "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்று போதித்தார் (லூக்கா 12:15). மனித இனத்தின் பாவத்தன்மையை குறித்து விளக்கியபோது, பவுல் "அவர்கள் ... பொருளாசையினாலும் ... இருக்கிறார்கள்" என கூறினார் (ரோமர் 1:29). மேலும் அவர், "எப்படியெனில், மனுஷர்கள் ... பணப்பிரியராயும் ... தேவபிரியராய் இராமலும் இருப்பார்கள்" என எழுதினார் (2 தீமோத்தேயு 3:2-4).

பொருளாசை என்ற பாவத்திற்கு எதிராக தடுப்பாற்றல் பெற்றவர்கள் ஒருவருமில்லை. ஏழைகளுக்கு எப்போதும் தேவையான அளவு பொருட்கள் இருப்பதில்லை. பணக்காரர்கள் ஒருபோதும் தாங்கள் விரும்பிய எல்லாவற்றையும் பெற்றிருப்பதில்லை. எபிரேயர் நிருபத்தின் ஆசிரியர் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு அறைகூவலை முன்வைக்கிறார். "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" (எபிரேயர் 13:5). எலிசா பொருளாசை கேயாசியின்

இருதயத்தை எப்போது சாம்பலாக்கியது என்பதை அறிந்திருந்தார், மற்றும் எப்போதும் இருக்கக்கூடிய இந்த சோதனைக்கு நாம் கீழடங்கும்போது கர்த்தர் அறிகிறார்: அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (எபிரேயர் 4:13). பொருளாசை என்ற சோதனையை நாம் சந்திக்கும் போது, அதை மேற்கொள்ள கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக!

கேயாசியின் சோகம் (5:27)

கேயாசி தன் நேர்மையின்மை வெளிப்படுத்தப்பட்டபோது, அதை எப்படி உணர்ந்திருப்பார், அவர் எவ்வளவு மனக்கலக்கம் அடைந்திருக்கக்கூடும் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? எப்படியிருப்பினும், மிகமோசமானது இனிமேல்தான் வரவேண்டியிருந்தது. எலிசா தொடர்ந்து பேசியபோது, "ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும்[11] என்றைக்கும் பிடித்திருக்கும்" என்றான் (2 இராஜாக்கள் 5:27அ). சிலர் இதை "poetic justice" என கூறுகிறார்கள்; சிலர் இது "குற்றத்திற்கு சரியான தண்டனை" என கண்டுள்ளனர்.

ஒரு சிலர் "ஒரு நிமிடம் பொறுங்கள். கேயாசி ஏன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன், ஆனால் அவன் சந்ததியார் ஏன் தண்டிக்கப்பட வேண்டும்? அவர்கள் குற்றமிழைத்தவர்களாக இருக்கவில்லையே" என வாதிடுகிறார்கள். தேவனானவர், "பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராக இருக்கிறார்" என மோசேயின் பிரமாணம் போதித்தது (யாத்திராகமம் 20:5; காண்க யாத்திராகமம் 34:7; எண்ணாகமம் 14:17; உபாகமம் 5:9). கிளைடு மில்லர் என்பவர் பின்வரும் ஆலோசனையை கொடுக்கிறார். "பாவம் பயங்கரமானது, அது அதை செய்தவர்களையும் தாண்டி அவரை சார்ந்தவர்களையும் பாதிக்கிறது என்ற உண்மையை வெளிப்படுத்துவதற்கு அநேகமாக இந்த கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டிருக்கலாம்."[12] "தேவனோடு வழக்காடுகிறவர்கள் யாரோ, அதை அவர்கள் செய்யட்டும்" என குர்மாச்சூர் எழுதினார்.[13]

அக்கிரமத்தின் *குற்றம்* அல்ல, அதின் *விளைவுகளே* பிள்ளைகள் மேல் வந்தது என்பதை நான் வலியுறுத்தி சொல்ல விரும்புகிறேன். இன்று நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்வதில்லை. எப்படியிருப்பினும் நாம், நம்மை பற்றி கவனிக்கும்போது, "பிதாக்களின் அக்கிரமம்" (யாத்திராகமம் 20:5) பிள்ளைகள் மேல் கடந்து வருகிறது என்பது இன்னமும் உண்மையாயிருக்கிறது:

- கடுமையாய் நடத்தும் பெற்றோரின் பிள்ளை, தங்கள் சொந்த பிள்ளைகளை கடுமையாய் நடத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.
- விவாகரத்து பெற்ற பெற்றோரின் பிள்ளை தாங்களும் விவாகரத்து பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.
- ஒரு குடிகாரனின் பிள்ளை தானும் ஒரு குடிகாரனாக மாற வாய்ப்பு இருக்கிறது.

உங்கள் பெற்றோர் அல்லது உங்கள் பெற்றோரின் பெற்றோர் ஒரு

குறிப்பிட்ட பாவத்தை செய்திருந்தால். நீங்களும் அதை செய்வதைத் தவிர்க்க முடியாது என நான் கூறுகிறேனா? இல்லை! தேவனுடைய உதவியினால், நீங்கள் அந்த சுழற்சியை முறிக்க முடியும். நான் என்ன கூற வருகிறேனென்றால், நீங்கள் ஒரு பாவத்தை செய்வதற்கு முன்பு, அது உங்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. நீங்கள் யாரை அதிகமாய் நேசிக்கிறீர்களோ, அவர்களே அதிகமாய் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கக் கூடும்!

தீர்ப்பு கூறப்பட்டுவிட்டது, தண்டனை உடனே நிறைவேறிவிட்டது. கேயாசி, "உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் [எலிசாவின்] சமூகத்தை விட்டுப் புறப்பட்டுப்போனான்" (2 இராஜாக்கள் 5:27ஆ; ஒப்பிடுக எண்ணாகமம் 12:10) ஒரு இமைப்பொழுதில், கேயாசியின் பேராசை கனவுகள் தகர்ந்து விட்டன. அவன் இனி ஒருபோதும் பணக்கார நில பிரபுவாக இருக்கமாட்டான்; அவன் ஒருபோதும் வேலைக்காரரைக் கொண்டிருக்க மாட்டான். அதற்கு மாறாக, அவன் தன் எஞ்சிய வாழ்நாளெல்லாம் சமூகத்தி லிருந்து தள்ளப்பட்டு தனிமையிலிருப்பான்; அவனிடத்தில் செல்வங்கள் நிறைந்திருக்கும் ஆனால் அதை யாரும் தொடமாட்டார்கள்.[14]

உலகம் பாவத்தை லேசாக எடுத்துக்கொள்கிறது, பாவம் செய்தால் அதற்கு தண்டனை உண்டு என்ற உண்மையை எள்ளி நகையாடுகிறது. கேயாசியின் மாம்சம் அழுகி, கீழே விழுகிறதை பார்த்து, "துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது" என்பதை கற்றுக்கொள்ளுங்கள் (நீதிமொழிகள் 13:15). இன்றைய நாட்களில் தண்டனைகள் சரீரபிரகாரமானவைகளாக இல்லாமல், ஆவிக்குரியவைகளாக உள்ளன, ஆனால் அது குறைவான தண்டனை என்பது அதின் பொருளல்ல. பவுல் "பாவத்தின் சம்பளம் மரணம் ..." என எழுதினார் (ரோமர் 6:23அ) - அது ஆவிக்குரிய மரணம் (காண்க எபேசியர் 2:1), தேவனிடத்தி லிருந்து பிரிந்திருப்பதாக இருக்கிறது (ஏசாயா 59:2; 2 தெசலோனிக்கேயர் 1:10). இயேசு [தங்கள்] "பாவங்களில் சாகிறவர்கள்," "நான் போகிற இடத்துக்கு [பரலோகம்] வர உங்களாலே கூடாது" என்றார் (யோவான் 8:21).

உங்கள் வாழ்க்கையில் மன்னிக்கப்படாத பாவம் இருக்குமானால், ஒரு இமைப்பொழுதுகூட தாமதிக்காதீர்கள் - தயங்காதீர்கள் - உடனே தேவனு டைய இரக்கங்களின் கீழ் உங்களை கொண்டு வாருங்கள்! "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரை தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்" (ஏசாயா 55:6)! யோவான், "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" என்று எழுதினார் (1 யோவான் 1:9). அவர் உங்கள் வாழ்க்கையை ஆசீர்வதிக்கும்படி, உங்கள் பாவத்தை அறிக்கையிடுங்கள். நீண்ட காலதாமதமாவதற்கு முன்பு அதை செய்யுங்கள் (எபிரேயர் 3:13; 2 கொரிந்தியர் 6:2)!

முடிவுரை

2 இராஜாக்கள் 5ஆம் அதிகாரத்தில் நமது பாடங்களில் நாகமான் மற்றும் கேயாசி ஆகிய இருவருக்கும் இடையிலான வேற்றுமைகளைப் பார்த்தோம். இன்று நீங்கள் நாகமானைப்போல இருக்கமுடியும்: பாவம் என்னும்

தொழுநோயிலிருந்து நீங்கள் கழுவப்பட்டு தேவனுடைய ஊழியக்காரனாக மாற முடியும். ஏனெனில், "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23). கிறிஸ்து தம் இரத்தத்தின் மூலமாக உங்களைக் கழுவி சுத்தி கரிக்க வல்லவர் (1 பேதுரு 1:18, 19)! இன்றே அவரண்டை கிட்டிச்சேருங்கள்!

குறிப்புகள்

[1]இது Charles Swindollலின் "நாகமானும் கேயாசியும்: எதிரிடை பண்புகள்" என்ற வானொலி பிரசங்கத்திலிருந்து n.d.சேகரிப்பட்டது. [2]M. A. Macleod, "Gehazi," in *The International Standard Bible Encyclopedia,* rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:423. [3]M. R. Wilson, "Gehazi," in *The Zondervan Pictorial Encyclopedia of the Bible*, ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 2:670. இந்த கதை அடுத்த பாடத்தில் கூறப்படும். [4]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 36. [5]நாகமானும் கேயாசியும் ஒரு வகையான வணக்கத்தை உபயோகித்தார்கள் (Adam Clarke, *The Holy Bible with a Commentary and Critical Notes,* vol. 2, *Joshua-Esther* [New York: Abingdon-Cokesbury Press, n.d.], 499. [6]"அவன் வருந்திக் கேட்டுக்கொண்டான்" என்ற வார்த்தைகள் சம்பிரதாயப்படி கேயாசி முதலில் அதை பெற்றுக்கொள்ள மறுத்தான் என்பதை உணர்த்துகிறது. [7]Clyde M. Miller, *First and Second Kings,* The Living Word Commentary series, vol. 7 (Abilene, Tex.: A.C.U. Press, 1991), 337. [8]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 322. [9]பெரும்பாலான எழுத்தாளர்கள் வசனம் 26இல் உள்ள எலிசாவின் வார்த்தைகள், அவை கேயாசியின் சிந்தையாக இருந்தது என்று நம்புகிறார்கள். பழங்காலத்து "டார்கூம்"களில் ஒன்று "அதை செய்ய அவன் தன் இருதயத்தில் நினைத்திருந்தான்" என கூடுதல் தகவல் தருகிறது (காண்க Clarke, 499). (டார்கூம் என்பது பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியை அரமாயிக் மொழியில் மொழிபெயர்த்தலாகும். இந்த மொழி பெயர்ப்புகள் வசனங்களுக்கான பொழிப்புரை மற்றும் விளக்கங்களை தருகின்றன.) [10]Sir Walter Scott, *Marmion* [1808], 6.17; quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 378.

[11]கேயாசி ஒருபோதும் திருமணமாகாமல் இருந்திருந்தால், குஷ்டரோகம் பரவும்படி அவனுக்கு பின் சந்ததியார் இருந்திருக்கமாட்டார்கள். ஒரு குஷ்டரோகியை மணக்க ஒருவரும் முன்வரமாட்டார்கள் என்ற நிலையில், அவன் நிலை இப்படியாக இருந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. [12]Miller, 337. [13]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 218. [14]ஒரு எழுத்தாளர், கேயாசி தன் பாவத்திலிருந்து மனந்திரும்பி, மீரியாம் சுகமானது போல சுகமானார் என்ற ஆலோசனையை கொடுத்துள்ளார் (எண்ணாகமம் 12:10-15). அதிகாரம் 8ல் கேயாசி ராஜாவுக்கு முன்பாக இருந்தார் என்பதினடிப்படையில் இந்த முடிவுக்கு வந்துள்ளார்கள். எப்படியிருந்தாலும், முன்பு குறிப்பிட்டபடி, அதிகாரம் 8:1-6 இன் சம்பவங்கள் அதிகாரம் 4:38இன் பஞ்சத்தோடு அநேகமாக தொடர்புடையதாக இருக்கிறது, இந்த அடிப்படையில் இது நாகமானின் கதைக்கு முன்னர் சம்பவித்தது. எலிசாவின் சமூகத்தை விட்டுச் சென்றபின் கேயாசிக்கு என்ன சம்பவித்தது என்பதை வேதாகமம் நமக்கு சொல்வதில்லை.

13

கண்களை திறந்த மற்றும் கண்களை மூடிய ஒரு மனிதன்

(2 இராஜாக்கள் 6:8-17)

எலிசாவின் வெளிப்படையான ஊழியத்தை நாம் வந்தடைந்துவிட்டோம். நமது பாடங்களின் ஆரம்பத்தில், எலிசா மூன்று இராணுவங்களைக் காப்பாற்றிய சம்பவம் நீங்கலாக, மற்ற பெரும்பாலான சம்பவங்கள் தனிப்பட்ட தன்மையுள்ளவைகளாக இருந்தன. நாகமானை சுகமாக்கியதில் துவங்கி, பெரும்பாலான எஞ்சிய கிளை கதைகள் எல்லாம் தீர்க்கதரிசி தேசிய தலைவர்களுடன் கொண்டிருந்த உறவைச் சுற்றி அமையப்பெற்றுள்ளது.

இந்த பாடத் தொடரின் முதல் பாடத்தில், எலியா "அமைப்பு முறைகளுக்கு" (அதாவது, அவருடைய நாளின் அரசியல் மற்றும் சமூக அமைப்புகளுக்கு வெளியே) வெளியே செயலாற்றினார் என கூறியிருந்தோம். ஆனால் எலிசா "அமைப்பு முறைகளுக்கு உள்ளே" செயலாற்றினார். எது சிறந்தது? அதற்கான பதில்: "சூழ்நிலைகளை பொறுத்தது" என்பதாகும். எலியாவின் நாட்களில் அமைவுபெற்ற அதிகாரிகளோடு வேலை செய்வதற்கான நம்பிக்கை இல்லாத நிலையில், "அமைப்பு முறைகளுக்கு" வெளியே செயலாற்றுகிற ஒரு மனிதனுடைய தேவை தேவனுக்கு இருந்தது. எலிசா தன் ஊழியத்தை துவங்கின போது, சூழ்நிலை ஓரளவு மேம்பட்டிருந்தது மற்றும் "அமைப்பு முறைகளுக்கு உள்ளே" செயலாற்றக்கூடிய ஒரு மனிதனின் தேவை தேவனுக்கு இருந்தது. நமது எஞ்சிய தொடர்பாடங்களில் எலிசா இவ்விதம் செயலாற்றினார் என்பதை நாம் பார்ப்போம்.

நாம் இந்த பாடம் மற்றும் அடுத்துவரும் பாடம் ஆகியவற்றில் எலிசாவின் வாழ்க்கையில் நன்கு அறியப்பட்ட ஒரு கிளை கதையைப் படிப்போம். இந்த சம்பவங்களில் தீர்க்கதரிசி, கண்களை திறந்தார் மற்றும் கண்களை மூடினார். நம் எல்லாருக்கும் தேவைப்படும் பாடங்கள் இந்த கதையில் நிறைந்துள்ளன.

ஒரு ஏமாற்றமடைந்த ராஜா (6:8-14)

"அக்காலத்தில் சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணி" (வசனம் 8அ) என இந்த கதை துவங்குகிறது. இந்த ராஜா அநேகமாக பெனாதாத்தாக இருந்தார் (காண்க வசனம் 24). சீரியா மற்றும் இஸ்ரவேலுக்கிடையில் ஒரு பகைச் சூழல் நிலவிவந்தது. கதையின் இந்த காலகட்டத்தில், இஸ்ரவேலோடு பெனாதாத் செய்த "யுத்தம்" பெரும்பாலும் தனது சேனைகளை இஸ்ரவேலின் எல்லையெங்கும் அனுப்பி, திடீர் தாக்குதல் நடத்தி, கொள்ளையடிப்பதாக இருந்தது (காண்க 5:2; 6:23ஆ).

தவறிப்போன திட்டங்கள்

பெனாதாத், "இன்ன இன்ன ஸ்தலத்திலே பாளையமிறங்குவேன்" (6:8ஆ) என தனது இராணுவ தலைவர்களை அழைத்து திட்டமிடுவான். "பாளைய மிறங்குதல்" என்ற வார்த்தையின் அர்த்தம் நிச்சயமானதாக இல்லை. ஆனால் அது ஒரு இடத்தை கண்டுபிடித்து அங்கே கூடாரங்களை அமைப்பதைவிட அதி கமானதாக இருக்கிறது. REB மொழிபெயர்ப்பில், "இந்த இந்த திசையில் நான் தாக்குதல் நடத்துவேன்" என்றுள்ளது. CJB மொழிபெயர்ப்பில், "இன்ன இன்ன இடத்தில் நான் எனது பதுங்கியிருந்து தாக்கும் பாளையங்களை அமைப்பேன்" என்றுள்ளது. ராஜாவின் நோக்கம், இஸ்ரவேல் படைவீரர்களை மறைந்திருந்து தாக்குவதாக இருந்தது, அல்லது இஸ்ரவேல் ராஜாவுக்கு ஒரு அதிர்ச்சியை கொடுத்து, அவரை சிறைப்பிடிப்பதாகவும் இருந்திருக்கலாம் (வசனம் 9இல் உள்ள "எச்சரிக்கையாயிரும்" என்ற வார்த்தையை கவனியுங்கள்). ஆனால் அவன் திட்டமிட்டபடி ஒவ்வொரு முறையும் தன் படைவீரர்களை அனுப்பியபோது, அந்த இடங்கள் பலமாய் பாதுகாக்கப்பட்டிருந்தது (காண்க வசனம் 10அ). ஆகவே அவர்கள் பின்வாங்க வேண்டியதாயிருந்தது.

ராஜாவின் ஏமாற்றத்திற்கு காரணம், கர்த்தர் அவனுடைய திட்டங்களை பற்றி எலிசாவுக்கு அறிவித்து வந்ததாகும். தீர்க்கதரிசி கேயாசியின் செயல்பாடுகளை அறிந்திருந்ததுபோல (5:26அ), அவர் பெனாதாத்தின் திட்டங்களையும் அறிந்திருந்தார். எலிசா இந்த தகவல்களை இஸ்ரவேலின் ராஜாவுக்கு (அநேகமாக யோராம்) தெரிவித்து வந்தான். எலிசா யோராமை விரும்பவில்லை (காண்க 3:13, 14), ஆனால் தேவனுடைய தேசத்தைப் பாதுகாப்பவர் என்ற தம் பணியை நிறைவேற்றுவதில், தனிப்பட்ட விரோதம் தலையிடுவதை அவன் அனுமதிக்கவில்லை.

எலிசா "இன்ன இடத்திற்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும்; சீரியர் அங்கே இறங்குவார்கள்" என்று ராஜாவுக்கு செய்தி அனுப்பினான் (6:9ஆ). "எச்சரிக்கையாயிரும்" என்ற வார்த்தை ராஜாவின் இராணுவத்தை அல்லது ராஜாவையே குறிக்கிறதாக இருக்கக்கூடும். இந்த காலகட்டத்தில், தீர்க்கதரிசி எதுவும் பேசினால் அதை கவனித்து நடக்க வேண்டும் என்பதை உணரும் அளவுக்கு யோராம் எலிசாவை பற்றி அறிந்திருந்தார் (காண்க 3:18, 24; 5:8) இப்படியாக அவன் தனக்கு சொல்லப்பட்ட தகவலின்படி செயல்பட்டான்: "... இஸ்ரவேலின் ராஜா தேவனுடைய மனுஷன் தன்னை எச்சரித்து; ... மனுஷரை அனுப்பி எச்சரிக்கையாயிருந்து, இப்படி அநேகந்தரம் தன்னைக் காத்துக் கொண்டான்" (6:10).

சீரியாவின் ராஜா, இது ஒரு இணை நிகழ்ச்சி என்று சொல்லப்படுவதற்கு ஏதுவில்லாதபடி, மறுபடியும் மறுபடியும், அடிக்கடி தன் திட்டங்களில் தோல்வி யடைந்தான். வசனம் 11இன்படி, "இந்த காரியத்தினிமித்தம் சீரியா ராஜாவின் இருதயம் குழம்பியது" (வசனம் 11அ). "இருதயம் குழம்பியது" என்ற எபிரேய வார்த்தை "புயல் அடித்தது" என பொருள்படும்.[1] CEV மொழிபெயர்ப்பில் ராஜா "மூர்க்கமடைந்தான்" என்றுள்ளது.

சீரியாவின் ராஜா, தன் படைவீரர்களில் யாரோ ஒரு உளவாளி இருந்து கொண்டு, எதிரிக்கு தன் திட்டங்களை அறிவித்துவருகிறான் என்ற முடிவுக்கு வந்துவிட்டான். அவன் தன் இராணுவ ஆலோசகர்களை அழைத்து, "நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார்

என்று நீங்கள் எனக்கு அறிவிக்கமாட்டீர்களா?" என்று கேட்டான் (வசனம் 11ஆ) செப்துவஜிந்து மொழிபெயர்ப்பில், "இஸ்ரவேலின் ராஜாவிடம் என்னை காட்டிக்கொடுத்தவன் யார்?" என்றுள்ளது.[2]

இது ஒரு நெருக்கடியான சமயமாக இருந்திருக்க வேண்டும். ராஜாக்கள் சந்தேகப்பட்டதால், தூக்கு தண்டனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அப்பொழுது அவன் ஊழியக்காரரில் ஒருவன்; "அப்படியில்லை என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான்" என்றான் (வசனம் 12). "நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகள்" என்பது மிகவும் தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் வார்த்தைகளை குறிக்கிற ஒரு உருவக மொழிநடையாக உள்ளது (ஒப்பிடுக பிரசங்கி 10:20).

நாம் எவைகளை செய்கிறோமோ, எவைகளை பேசுகிறோமோ மற்றும் எவைகளை சிந்திக்கிறோமோ அவைகள் யாவும் கர்த்தருக்கு மறைவாயிருப்பதில்லை என்பதை நீங்களும் நானும் நினைவில் வைக்க வேண்டிய அவசியமிருக்கிறது. "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" (எபிரேயர் 4:13). ஹென்றி பிளன்ட் என்பவர் கூறிய பின்வரும் கருத்து எப்போதும் சரியாயிருக்கிறது: "நாம் தேவன் எல்லாவற்றையும் காண்கிறார், எல்லாவற்றையும் கேட்கிறார் மற்றும் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என கூறுகிறோம் ஆனால் அவர் முழுக்க முழுக்க குருடராக, செவிடராக மற்றும் ஒன்றும் அறியாதவராக இருப்பதுபோல் நினைத்து வாழ்கிறோம்."[3]

எலிசாதான் தகவல் கொடுப்பவராக இருந்தார் என்பது பேசின அந்த மனிதனுக்கு எப்படி தெரிந்தது? வசனம் 12இல் குறிப்பிடப்பட்ட ஊழியக்காரன் நாகமானாக இருந்தார் என்ற ஒரு ஆலோசனை கூறப்பட்டதுண்டு. குணமாக்க முடியாத ஒரு வியாதியை குணமாக்கக் கூடிய ஒருவருக்கு, மறைவானவைகளை அறிந்து கொள்வதில் சிரமம் எதுவும் இருப்பதில்லை என நாகமான் யூகித்தான். எப்படியிருப்பினும், இதற்கு ஒரு எளிமையான பதிலுண்டு, சீரியர்கள் உளவாளிகளை வைத்திருந்தார்கள். அவர்களில் ஒருவன், இஸ்ரவேல் படைவீரர்கள் எலிசா தங்களுக்கு எவ்வாறு வெற்றியை தேடித்தந்தார் என பேசிக்கொண்டதை ஒட்டுக்கேட்டிருக்க வேண்டும்.

நிச்சயமாக தோற்கப்போகும் ஒரு திட்டம்

ராஜா அந்த மனிதன் எலிசாவை பற்றி கூறிய வார்த்தைகளை நம்பினான் என்பதிலிருந்து, நாகமானும் தீர்க்கதரிசியின் அற்புத வல்லமை குறித்து பெனாதாத்திடம் சொல்லியிருந்தார் என்பது விளங்குகிறது. ராஜாவுடைய மிகவும் அவசரமான இராணுவ இலக்கு இஸ்ரவேல் படையை தோற்கடிப்பதாகவோ அல்லது யோராமை சிறைப்பிடிப்பதாகவோ இருக்கவில்லை. மாறாக, அடுத்த இராணுவ தாக்குதல்களை தொடுப்பதற்கு முன்பாக, தீர்க்கதரிசியை செயலிழக்கச் செய்வதாக இருந்தது. அவன் இந்த அறிவுரைகளோடு உளவாளிகளை அனுப்பினான்: "நான் மனுஷரை அனுப்பி அவனை பிடிக்கும்படி, நீங்கள் போய் அவன் எங்கே இருக்கிறான் என்று

பாருங்கள்" என்றான் (2 இராஜாக்கள் 6:13அ).

"அவன் தோத்தானில் இருக்கிறான்" என்ற அறிக்கையோடு விரைவில் திரும்பினார்கள் (வசனம் 13ஆ). தோத்தான், சமாரியாவின் வடக்கில் பதினொன்று அல்லது பன்னிரெண்டு மைல்கள் தொலைவில் ஒரு மலையின் மேல் அமைந்திருந்த கிராமமாக இருந்தது. இந்த தோத்தானில்தான் ஆண்டுகளுக்கு முன்பாக, யோசேப்பின் சகோதரர் அவனை சிறைபிடித்து படுகுழியில் போட்டார்கள் (காண்க ஆதியாகமம் 37:17-24). ஒரு எழுத்தாளர் இது ஒரு "ஆபத்தான மற்றும் முடிவை தீர்மானிக்கும் இடமாக" இருந்தது என அழைக்கிறார்.[4] எலிசாவின் குடியிருப்பு சமாரியாவிலிருந்தது (காண்க 2 இராஜாக்கள் 5:3, 9; 6:24, 32அ). ஆனால் அவர் தன் ஊழியத்தினிமித்தம் பரவலாக எல்லா இடங்களுக்கும் பயணம் செய்தார். சில காலம் தங்கியிருக்கத் தக்கதாக அவர் தோத்தானில் அல்லது அதன் அருகாமையில் ஏதோ ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தார்.

எலிசா எங்கே இருந்தான் என்பதை பெனாதாத் அறிந்தபோது, "அவனைப் பிடிக்கும்படிக்கு" (வசனம் 13) "அவன் அங்கே குதிரைகளையும் இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான்" (6:14அ). அவன் போர்வீரர்கள் அவனை உயிரோடா அல்லது பிரேதமாகவா, எப்படி கொண்டு வரவேண்டும் என்பதை பற்றி அவன் கவலைப்படவில்லை. ராஜா தன் முழு படையையும் அனுப்பவில்லை (ஒப்பிடுக வசனம் 24), வழக்கமாக அனுப்புவதைவிட கூடுதல் படைகளை அனுப்பினான். இந்த படை பிரிவில் காலாட் படையினர், குதிரை படையினர் மற்றும் இரதங்களின் படைபிரிவும் இருந்தது. தோத்தான் போன்ற ஒரு சிறிய பட்டணத்தை முற்றுகையிடுவதற்கு கூட கணிசமான எண்ணிக்கையில் படைவீரர்கள் தேவைப்பட்டிருப்பார்கள்.

ராஜாவின் பகுப்பறிவை குறித்து ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. எலிசா அவனுடைய எல்லா இராணுவத் திட்டங்களையும் அறிந்திருந்தாரானால், அவர் இந்த திட்டத்தைக்குறித்து அறியாதிருப்பாரா? எலிசா அவர் படுக்கை அறையில் பேசின வார்த்தைகளை கூட அறிந்திருப்பாரானால் (வசனம் 12), ராஜா அவனை சிறைப்பிடிக்க முடியும் என எப்படி நம்பலாம்? அது துவக்கத்திலிருந்தே தோற்றுப்போவதற்கான ஒரு திட்டமாக இருந்தது. இருப்பினும், ஒரு மனித கண்ணோக்கில் அவன் திட்டம் நல்லதாகவே தெரிந்தது.

எலிசா இராணுவ வீரர்கள் வருவதை பார்க்க முடியாதபடியும் மற்றும் அவன் பட்டணத்திலிருந்து தப்பிவிடாதிருக்கவும், இராணுவம் நள்ளிரவில் தோத்தானுக்குள் பிரவேசிக்கும்படி நேரத்தை திட்டமிட்டார்கள் (வசனம் 14ஆ). அவர்கள் உடனே, "பட்டணத்தை வளைந்துகொண்டார்கள்" (வசனம் 14இ). தீர்க்கதரிசி தப்புவதற்கு வழியே இல்லாதது போலிருந்தது.

ஒரு பயமடைந்த வேலைக்காரன் (6:15)

எலிசா என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அநேகமாக அறிந்திருந்தார், ஆனால் அது அவர் தூக்கத்தை கெடுக்கவில்லை. அவர் "உறங்காதவரும் மற்றும் தூங்காதவருமாகிய" தேவன் பேரில் தன் நம்பிக்கையை வைத்திருந்தார் (காண்க சங்கீதம் 121:4).

ஒரு வெற்றிகொள்ளும் படைபிரிவு?

தேவனுடைய மனுஷனின் "வேலைக்காரன்" அதிகாலமே எழுந்து வெளியே

புறப்பட்டான் (2 இராஜாக்கள் 6:15அ). நாகமான் சுகமாவதற்கு முன்பு இந்த சம்பவம் நடந்திருந்தால், கேயாசி தான் அந்த வேலைக்காரனாக இருந்தான். கேயாசி எலிசாவை விட்டுப் போன பிறகு, அவர் வேறு ஒரு வேலைக்காரனை - ஒரு தீர்க்கதரிசி பயிற்சியாளரை பெற்றிருக்க அதிக வாய்ப்பு இருந்தது (5:27). அப்படியானால், அவன் 9:1ல் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனாக இல்லாத பட்சத்தில், இந்த இடத்தில் மாத்திரமே நாம் இந்தப்புதிய உதவியாளைப்பற்றி வாசிக்கிறோம்.

ஒருவேளை அந்த வேலைக்காரன் தண்ணீர் இறைப்பதற்காக மற்றும் அந்த நாளில் பிற பணிகளை ஆயத்தப்படுத்துவதற்காக அதிகாலையில் எழுந்திருக்கலாம். எலிசா சமாரியாவுக்கு திரும்புவதற்கான பணிகளை அவர் ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்திருக்கலாம். அவன் இரவில் இராணுவ நடமாட்டத்தின் சத்தத்தை கேட்டு, அது என்ன என்பதை ஆய்ந்தறிவதற்கு அதி காலையில் எழுந்திருக்கவும் வாய்ப்பு இருந்திருக்கலாம்.[5]

அவர் வெளியே சென்ற நோக்கம் எதுவாக இருப்பினும், அவர் எதை பார்த்தாரோ அது அவரைஅதிர்ச்சியில் ஆழ்த்தியது. "இதோ, இராணுவமும் குதிரைகளும் இரதங்களும் பட்டணத்தை சுற்றிக்கொண்டிருக்கக் கண்டான்" (6:15ஆ).

> அவன் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் மற்றும் மேற்கிலும் எவ்வளவு தொலைவு பார்க்க முடிந்ததோ அவ்வளவு தொலைவும் சீரியா இராணுவம் என்ற பெயரில் இருப்பு ஆயுதங்களால் சூழப்பட்டிருந்தது. ... கிழக்கில் மலைகளினூடே அப்போதுதான் சூரியன் உதிக்க துவங்கியது ... அது இராணுவ வீரர்களின் தலைச்சீரா மற்றும் கேடங்களில் பட்டு பிரதிபலித்தது. வேலைக்காரனால் இரதங்களின் இரைச்சல், குதிரைகளின் கணைத்தல் மற்றும் படையை வழிநடத்திய அதிகாரிகளின் உரையாடல் மற்றும் போர் ஒலிகளை கேட்க முடிந்தது.[6]

எலிசா இஸ்ரவேல் ராஜாவோடு கொண்டிருந்த தகவல் தொடர்புகளை நன்கு அறிந்திருந்த வேலைக்காரன், அந்த இராணுவம் தங்களைத்தான் பிடிக்க வந்திருக்கிறது என சரியாக முடிவு செய்தான். அவன் வீட்டிற்கு ஓடி எலிசாவை நோக்கி, "ஐயோ, என் ஆண்டவனே, என்ன செய்வோம்" என்றான் (வசனம் 15இ). அவனுடைய ஆச்சரியக்குரல், "எல்லாம் முடிந்து விட்டது! நாம் சிறை பிடிக்கப்பட்டு, அநேகமாக கொல்லப்படுவோம்!" என்று பொருள்பட்டது. "என்ன செய்வோம்" என்ற அவனுடைய கேள்வி, "நாம் *ஒன்றும்* செய்ய இயலாது! நமக்கு எந்த நம்பிக்கையும் இல்லை!" என்பதை உணர்த்துகிறது. இவன் ஒரு புதிய வேலைக்காரனாக இருந்திருந்தால், அவன் எலிசாவுடன் இருக்கிறவரையிலும் - அங்கே எப்போதும் நம்பிக்கை இருந்தது - என்பதை உணராமல் இருந்ததற்காக மன்னிக்கப்படக்கூடும்.

ஒரு வெற்றிகொள்ளும் உலகம்?

நீங்கள் எலிசாவின் சூழ்நிலையில் இருக்கிறீர்களா? சில சமயங்களில் உலகம் உங்களை மேற்கொண்டு விட்டதாக உணர்ந்திருக்கிறீர்களா? பாவம் மற்றும் பாவசோதனைகள் நம்மை சூழ்ந்திருப்பதை நீங்கள் பார்க்கும் போது,

சூழ்நிலை சில சமயங்களில் நம்பிக்கையற்றதாக தோன்றுகிறதா? நீங்கள் எப்போதாவது, "ஐயோ! நான் என்ன செய்வேன்?" என கதறவேண்டும் போல் உணர்ந்திருக்கிறீர்களா? அப்படியானால், வேலைக்காரனுக்கு என்ன செய்தி தேவைப்பட்டதோ அதே செய்தி உங்களுக்கும் தேவைப்படுகிறது.

பயப்படாத தீர்க்கதரிசி (6:16, 17)

பயப்படுகிறவர்களுக்கு ஆறுதல் அப்போது

எலிசா, "பயப்படாதே" என்று கூறி, பயந்து நடுங்கின தம் உதவியாளரை அமைதிப்படுத்த முயற்சித்தார் (வசனம் 16அ). இந்த வார்த்தைகள் தேவனுடைய வசனங்களில் அடிக்கடி காணப்படுகின்றன; அவைகள் எல்லா காலத்திலும் வாழும் எல்லா தேவனுடைய மக்களுக்கான செய்தியாயிருக்கிறது (காண்க மத்தேயு 10:28, 31; 1 பேதுரு 3:14; வெளிப்படுத்தின விசேஷம் 2:10). "எனக்கு விரோதமாக ஒரு பாளையமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது" என சங்கீதக்காரன் எழுதினார் (சங்கீதம் 27:3அ).

நாம் ஏன் பயப்படக்கூடாது? வேலைக்காரன் ஏன் பயப்படாமல் இருந்திருக்க வேண்டும்? எலிசா தொடர்ந்து பேசுகையில், "அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்" என்றான் (2 இராஜாக்கள் 6:16ஆ; காண்க 2 நாளாகமம் 32:7). அந்த உதவியாளர் வெளியே ஓடி பட்டணத்தைச் சூழ்ந்துள்ள போர் வீரர்களை, "ஒன்று ... இரண்டு ... மூன்று ... (பின்பு முணுமுணுத்து) ... தொண்ணூற்று ஐந்து ..." (முணுமுணுத்து) என்று எண்ணுவதை நான் காண்கிறேன் ... அங்கே *நூற்றுக் கணக்கானவர்கள்* இருந்தார்கள்!" பின்பு அவன் உள்ளே ஓடி, "எலிசா ஒருவர்; நான் ஒருவன் ஆக இங்கே நாம் இருவர்தான். *நூற்றுக்கணக்கானவர்கள்* வெளியில் இருக்கிறார்கள் மற்றும் நாம் *இருவர்* மட்டும் இங்கே இருக்கிறோம்! என எண்ணுவதை நான் பார்க்கிறேன். '*அவர்களோடிருக்கிறவர்களைப்* பார்க்கிலும் *நம்மோடிருக்கிறவர்கள்*' அதிகம் என்று சொன்னாரே, அதை எந்த அர்த்தத்தில் அவர் சொன்னார்?"

பின்பு எலிசா ஜெபித்தார். அவர் தனக்காக ஜெபிக்கவில்லை. அவன், எலியா எடுத்துக்கொள்ளப்பட்டபோது வந்த, "அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளையும்" பார்த்திருக்கிறார் (2 இராஜாக்கள் 2:11). ஆவிக்குரியவைகளின் நிஜத்தன்மையை அவர் நன்கு அறிந்திருந்தார். தேவன் தன்னை பாதுகாப்பார் என்பதை அறிந்திருந்தார். மாறாக, அவர் அஞ்சி நடுங்கிய தன் உதவியாளருக்காக ஜெபித்தார். "கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" என்றான் (வசனம் 17அ). அவனுடைய வேலைக்காரன் மாம்சக் கண்களால் பார்த்துக்கொண்டிருந்தான்; அவன் விசுவாச "கண்களால்" "பார்க்க" வேண்டியவனாக இருந்தான். பார்ட்டன் காப்மென் என்பவர் வசனம் 17ஐ "பழைய ஏற்பாட்டில் மிகவும் கட்டியெழுப்பக்கூடிய வசனங்களில் ஒன்று" என அழைத்தார்.[7]

"உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவை சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்" (வசனம் 17ஆ). தோத்தானின் கிழக்கில், ஒரு மலைத்தொடர் சமவெளிக்குள்ளாக சென்றிருந்தது.[8] சற்று முன்னர் அந்த மலைத்தொடரின் கீழிறங்கு பகுதி அமைதியாயிருந்தது, பசுமையான

மரங்களும் புதர்களும் அங்கும் இங்கும் என பரந்திருந்தன. இப்போது திடீரென அந்த மலைத்தொடர் "அக்கினி இரதங்கள் மற்றும் அக்கினி குதிரைகளால்" சூழப்பட்டிருந்தன. "அவைகள் ஒரு விநோதமான, பூமியில் காணப்படாத பேரொளியோடு ஜொலித்தன."[9]

வசனம் 17இல் பயன்படுத்தப்பட்டுள்ள உருவகம் வேதாகமம் "ஒலிமற்றும் ஒளி எல்லைக்கப்பால் சூழ்ந்துள்ள மகா பெரிய தேவதூதரின் சேனையை" குறிப்பிடும் ஒரு வழியாக உள்ளது.[10] இந்த "தூதரின் சேனை" எலிசாவை சுற்றிலுமிருந்ததாக பேசப்பட்டது (வசனம் 17இ). முன்னதாக, இந்த தூதரின் சேனை தேவனுடைய ஊழியக்காரராகிய எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவருடன் சென்றது; இப்போது தேவனுடைய ஊழியக்காரராகிய எலிசாவை பாதுகாத்துக்கொண்டிருந்தது.

பயப்படுகிறவர்களுக்கு ஆறுதல் இப்போது

எலிசாவின் செய்தி இன்றும் நமக்கு பேசக்கூடியதாயிருக்கிறது: "பயப்படாதே: அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடி ருக்கிறவர்கள் அதிகம்" (வசனம் 16). நமது கண்கள் ஆவிக்குரிய நிஜங்களை காணும்படி திறக்கப்படவேண்டியது, நமது தேவைகளில் மிகப்பெரிய ஒரு தேவையாயிருக்கிறது. நாம் மாம்ச கண்களோடு மாத்திரம் பார்ப்போமானால், நாம் தொடர்ந்து ஏமாற்றத்திலும் தோல்வியிலும் இருப்பதை கண்டுபிடிப்போம். நாம் விசுவாச கண்களால் பார்க்க கற்றுக்கொள்வோமானால் (காண்க எபிரெயர் 11:27) நாம் உற்சாகமடைவோம் மற்றும் பெலனடைவோம்.

பரலோக சேனை எலிசாவை சூழ்ந்திருந்தது போல, தேவனுடைய தூதர்கள் உதவி செய்யவும் மற்றும் பாதுகாக்கவும் அவருடைய பிள்ளைகளை சூழ்ந்தி ருக்கிறார்கள். தாவீது, "கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சூழப்பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" (சங்கீதம் 34:7) என எழுதினார். மறுபடியுமாக சங்கீதக்காரன், "பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்" என்றான் (சங்கீதம் 125:2). புதிய ஏற்பாட்டில் தூதர்கள், இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல் லவா? (எபிரெயர் 1:14) என குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

பொல்லாத ஆவிகளுடைய சேனையின் வல்லமையை நான் குறைத்து மதிப்பிடமாட்டேன் (காண்க எபேசியர் 6:12), ஆனால், "அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதி கம்" என்பது நம் இருதயங்களில் எழுதப்பட வேண்டும் (2 இராஜாக்கள் 6:16ஆ). இயேசு கிறிஸ்துவானவர், "பன்னிரெண்டு லேகியோனுக்கு அதிகம ான தூதர்கள்" அழைக்கப்படக்கூடும் என கூறினார் (மத்தேயு 26:53). அது 72,000க்கும் அதிகமான தூதர்களாக இருக்கும். வெளிப்படுத்தின விசேஷத்தி ன் உருவக நடையில், தேவனுடைய தண்டனையை நிறைவேற்றும் முகவர்கள் தொகை "இருபது கோடியாயிருந்தது" என கூறப்பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 9:16). இந்த எண்கள் சொல் அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்படக் கூடாது. ஆனால் அவைகள் எண்ணிலடங்கா பரலோக சேனையை நமக்கு காண்பிக்கிறது.

தேவ தூதர்களை குறித்து நாம் அதிகமாக அறியாதிருக்கிறோம். இன்று நாம் தேவதூதரைக்குறித்து கேள்விப்படும் பெரும்பாலான விஷயங்கள் கட்டுக்கதைகளாக மற்றும் கற்பனை கதைகளாக இருக்கின்றன. எப்படியிருப்பினும், அவர்கள் சர்வவல்லமையுள்ள தேவனுடைய முகவர்கள், அவர்கள் நமது நலனில் பிரத்தியேகமாக அக்கறையாயிருக்கிறார்கள் என்பதை நாம் அறிய முடியும் (காண்க சங்கீதம் 91:11), மேலும் நமது வாழ்க்கையை ஆசீர்வதிக்க தேவன் அவர்களை பயன்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டில் அதை எலிசா இவ்விதமாக விளக்குகிறார்: "அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்" (2 இராஜாக்கள் 6:16ஆ). புதிய ஏற்பாட்டில் யோவான் இதை இவ்விதமாக தெரிவித்துள்ளார்: "உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" (1 யோவான் 4:4).

அடுத்த முறை நீங்கள் ஒரு ஆவிக்குரிய போராட்டத்தில் இருப்பதை காண நேர்ந்தால், உங்களுக்காக யார் போராடுகிறார் என்பதை நினைவில் வையுங்கள். மோசே இஸ்ரவேலரை நோக்கி, "உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடேகூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்றான் (உபாகமம் 20:4). எசேக்கியா தன் நாட்களில் இருந்த ஜனங்களை நோக்கி, "நமக்கு துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தானே" என்று கூறினான் (2 நாளாகமம் 32:8ஆ). அவர்களுடைய யுத்தங்கள் மாம்ச பிரகாரமானவைகளாக இருந்த நிலையில், நம்முடைய யுத்தங்கள் ஆவிக்குரியவைகளாக இருக்கின்றன, ஆனால் அதே தேவனானவர் "நமக்காக யுத்தங்களை பண்ணும்படி" நம்மோடிருக்கிறார். பவுல், "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதியாயிருப்பவன் யார்?" என எழுதினார் (ரோமர் 8:31ஆ). தேவன் நம்மை பாதுகாக்க "நம்மோடிருப்பாரானால்," நம்மை அழிக்க யார் "நமக்கு எதிராக" இருக்கக்கூடும்? அதற்கான பதில் "இல்லை, ஒருவரும் இல்லை!" என்பதாகவுள்ளது.

எலிசா, "கர்த்தாவே இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" என விண்ணப்பம் பண்ணினான் (2 இராஜாக்கள் 6:17அ). அடுத்த முறை நாம் பயம் மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவற்றால் நிரப்பப்படும் போது, "கர்த்தாவே, எங்கள் கண்களை திறந்து, நீர் எங்களை நேசிக்கிறீர் என்பதையும் மற்றும் எங்களுக்காக கரிசனைப்படுகிறீர் என்பதையும் நாங்கள் புரிந்துகொள்ள எங்களுக்கு உதவி செய்தருளும்!" என்று ஜெபிப்போமாக.

முடிவுரை

"கண்களை திறந்த மற்றும் கண்களை மூடிய ஒரு மனிதன்" என்ற தலைப்பிலான படிப்பை நமது அடுத்த பாடத்திலும் தொடர்ந்து படிப்போம். எலிசா மற்றும் அவருடைய வேலைக்காரன் ஆகியோர் எப்படி காப்பாற்றப்பட்டார்கள் என்பதையும் மற்றும் எதிர்பாராத பலன்களைக் குறித்தும் நாம் பார்ப்போம். நாம் இந்த பாடத்தை முடிக்கையில், நாம் நமது கண்களை திறக்கவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

பவுல், "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்"

என எழுதினார் (2 கொரிந்தியர் 4:4). சாத்தான், ஒருவேளை இரட்சிப்பு மற்றும் பாதுகாப்பை பெற கர்த்தரிடம் விரைந்து செல்ல வேண்டிய அவசியத்தை நீங்கள் உணராதபடி உங்கள் மனக்கண்களை குருடாக்கியிருக்கிறான். ஏதோ ஒரு காரணத்திற்காக உங்கள் மனக்கண்களை நீங்கள் அடைத்திருக்கிறீர்கள் (காண்க மத்தேயு 13:15). ஜேம்ஸ் W. நிக்கல்ஸ் என்பவர் பின்வறுமாறு எழுதினார்.

> நான் ஒகு சிறுவனாயிருந்தபோது, கண்களை இறுக மூடிக்கொண்டு இருளில் நடக்கும் பழக்கத்தை உடையவனாக இருந்தேன். பல சந்தர்ப்பங்களில், தூரத்திலிருந்து பிரதிபலிக்கும் ஒளி நான் பார்ப்பதற்கு உதவியிருக்கக்கூடிய பகுதிகளுக்கு வருவேன், ஆனால் நான் எனது கண்களை இருக்க மூடிக்கொண்டு; வழியில் இடறுவேன், மீண்டும் இடறுவேன், கீழே விழுவேன். கண்களை திறந்து நான் செய்தது எவ்வளவு மதியீனமானதாயிருந்தது என வருத்தப்படுவேன், ஏனெனில் நான் எனது கண்களை திறந்திருந்தால், நான் எனது பாதையைப் பார்த்திருக்கக் கூடும்.
>
> நண்பர்களே, உங்களில் ஆயிரக்கணக்கானோர் உங்கள் வாழ்க்கைப் பாதையில் கண்களை மூடினவர்களாக விரைந்து போய் கொண்டிருக்கிறீர்கள் ... தேவன் மற்றும் அவருடைய ஆச்சரியமான அன்புக்கு உங்கள் கண்களை மூடினவர்களாக இயேசு கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் மீட்பின் வழிக்கு உங்கள் கண்களை மூடினவர்களாக விரைந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். இப்போது அன்றைய எலிசாவைப் போல "கர்த்தாவே, அவர்கள் பார்க்கும்படிக்கு அவர்கள் கண்களை திறந்தருளும்" என்பதே எனது ஜெபமாயிருக்கிறது.[11]

உங்கள் கண்கள் ''அடைக்கப்பட்டிருக்குமானால்/மூடப்பட்டிருக்குமானால்" இன்றைக்கே அவைகளை திறவுங்கள் மற்றும் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியுங்கள்!

குறிப்புகள்

[1]Clyde M. Miller, *First and Second Kings,* The Living Word Commentary series, vol. 7 (Abilene, Tex.: A.C.U. Press, 1991), 339. [2]Ibid. [3]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadelphia: Herman Hooker, 1839), 135. [4]J. Vernon McGee, *Danger and Destiny: Episodes in the Life of Elisha* (Pasadena, Calif.: Thru the Bible Radio Network, n.d.), 20. [5]இதர சாத்தியக்கூறுகள் கவனிக்கப்படக் கூடும். "அவர் ஒருவேளை அதிகாலையில் துயில் எழக்கூடியவராக இருந்திருக்கலாம்." நீங்கள் வாழும் பகுதியின் பழக்கவழக்கங்களுக்கேற்ப பொருத்திப்பார்க்கக்கூடும். [6]Joe D. Schubert, "Open Our Eyes That We May See," *The Preacher's Periodical* (June 1982): 17. [7]James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings,* James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 81. [8]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 326. [9]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1 & 2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 121. [10]James E. Smith, *The Books of History,* Old Testament Survey Series

(Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 568.

[11]James W. Nichols, "Lord, Open Our Eyes," *Churches of Christ Salute You: January and February Sermons* (Abilene, Tex.: Herald of Truth, 1955), 9.

14

இரக்கத்தைக் காண்பித்த ஒரு மனிதன்

[2 இராஜாக்கள் 6:18-23]

"அவன் எதைப் பெற தகுதியானவனோ, அதைப் பெற்றான்." நாம் சில நேரங்களில் இந்த சொற்றொடரை நேர்மறை அர்த்தத்தில் பயன்படுத்துகிறோம். "அவன் எந்த பதவி உயர்வைப் பெற தகுதியானவனோ அந்த பதவியுயர்வைப்பெற்றான்"; "அந்த பாராட்டைப் பெற அவன் தகுதி யானவனாக இருந்தான்." பெரும்பாலான நேரங்களில், நாம் இதை எதிர்மறை அர்த்தத்தில் பயன்படுத்துகிறோம். "அவனுக்கு நேரிட்ட எல்லா கெட்டதையும் பெற அவன் தகுதியானவனாக இருந்தான்; அவன் எதை பெற தகுதியானவனாக இருந்தானே, அதை அப்படியே பெற்றுவிட்டான்." ஒருவன் எதை பெற தகுதியானவனோ, அதையே அவனுக்கு கொடுப்பதுதான் மனித இனத்தின் குறிக்கோள் என்று உலகம் நம்புகிறது. இருப்பினும், ஒரு கிறிஸ்தவர் மேலான ஒரு இலக்கை கொண்டிருக்கிறார்: மக்கள் எதை பெற தகுதியானவர்களோ அதை அவர்களுக்கு கொடுக்காமல், மாறாக அவர்களுக்கு எது தேவையோ அதையே அவர்களுக்கு கொடுப்பது. ஒருவர் "கிருபை" அல்லது "இரக்கம்" என்பது, "உங்களுக்கு தேவையான ஒன்றாக இருக்கிறது, ஆனால் அதை பெற நீங்கள் தகுதியானவர் அல்ல" என விளக்கினார்.[1]

இந்த பாடத்தில், எலிசாவை சிறைப்பிடிக்க அனுப்பப்பட்ட சீரியா இராணுவத்தின் கதையை தொடருகிறோம். இந்த பாடத்தைப் படிக்கும்போது, தீர்க்கதரிசி எப்படி அந்த போர் வீரர்கள் எதைபெற தகுதியானவர்களாயிருந்தார்களோ, அதைத் தராமல், அவர்களுக்கு எது தேவையாயிருந்ததோ அதை கொடுத்தார் என்பதை நாம் பார்ப்போம். இந்த பாடத்திற்கு, "இரக்கத்தை காண்பித்த ஒரு மனிதன்" என்ற தலைப்பை நான் கொடுத்துள்ளேன்.

ஒரு ஆச்சரியமான மீட்பு (6:18, 19அ)

கடந்த பாடத்தில், எலிசாவின் வேலைக்காரன் சீரியரின் இராணுவத்தை விட, தேவனுடைய போர்வீரர்கள் மிகுதியான வலிமையானவர்கள் மற்றும் எண்ணிக்கையில் அதிகமானவர்களாயிருந்தார்கள் என்பதை கண்டான். அவன் ஒருவேளை, "பிரமாதம்! நாம் பாதுகாக்கப்பட்டுவிட்டோம்! தேவனுடைய இராணுவம் இப்போது சீரியரின் இராணுவத்தை திடீரென தாக்கி அழித்துவிடும்!" என நினைத்திருக்கலாம். இப்படி அவன் நினைத்திருந்தால், அவன் ஏமாற்றம் அடைந்திருப்பான், ஏனெனில் தேவன் இவ்விதமாக அவர்களை பாதுகாக்க விரும்பவில்லை. கர்த்தர் அந்த இராணுவப்பிரிவை அழித்திருந்தால்,

சீரியாவின் ராஜா வேறொரு படைப்பிரிவை அனுப்பியிருப்பான். சீரியர்கள் மற்றும் இஸ்ரவேலின் ராஜா ஆகிய இருவருக்கும் சில மதிப்புமிக்க பாடங்களை போதிக்கத்தக்கதாக, தேவனானவர் வித்தியாசமான ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தார்.

எலிசா மற்றும் அவன் வேலைக்காரன் ஆகிய இருவரும் பட்டணத்தை விட்டு வெளியேறி இராணுவம் இருந்த இடத்திற்கு மலையின் கீழ்[2] இறங்கி சென்றார்கள் (வசனம் 18அ). தீர்க்கதரிசி தேவனிடம் தன் வேலைக்காரனின் கண்களை திறக்கும்படி ஜெபித்திருந்தார்; இப்போது, அவர் தன் எதிரிகளை நெருங்குகையில் அவர்கள் கண்கள் மூடப்பட வேண்டுமென ஜெபித்தார்: "இந்த ஜனங்களுக்குக் கண் மயக்கம் உண்டாகும்படி செய்யும்" என்றான் (வசனம் 18ஆ).

இந்த பார்வையின்மை என்பது சரீரப்பிரகாரமானதாயிருந்திருக்கலாம். (இருநூறு அல்லது முன்னூறு போர்வீரர்கள் சாலையில் தடுமாறுவதை, ஒவ்வொருவரும் தன்னை வழிநடத்துகிறவனின் தோள்பட்டையில் கையை வைத்துக் கொண்டு நடப்பதை என்னால் பார்க்க முடிகிறது!) இருப்பினும், இந்த பார்வையின்மை என்பது சரீரபிரகாரமாயிருந்தது என்ற நிலைபாட்டில் சில பிரச்சனைகள் இருக்கின்றன. எல்லா போர் வீரர்களும் திடீரென குருடாக்கப்பட்டிருந்தால், அவர்கள் பயங்கரத்தினால் நிறைந்திருக்கமாட்டார்களா? இருளில் இருந்து தங்களிடம் பேசிய முன்பு அறியாத, காணக்கூடாத அந்த மனிதனை நம்பவும் பின்பற்றவும் எது அவர்களை இணங்கச் செய்யும்? ஜீ. ராலின்சன், "அவர்கள் சந்தேகப்பட்டிருப்பார்கள், பிறரிடம் விசாரித்திருப்பார்கள் மற்றும் வேகமாக பின் வாங்கியிருப்பார்கள்" என்ற ஒரு ஆலோசனையை கொடுத்துள்ளார்.[3] எப்படி இருந்தபோதிலும், திடீரென அவர்கள் சரீரப்பிரகாரமாக குருடாக்கப்பட்டிருந்தால், தங்களால் காணமுடியாத ஒரு மனிதனை தேடிக்கண்டுபிடிப்பதற்கான எல்லா ஆர்வத்தையும் இழந்திருப்பார்கள்.

''கண்மயக்கம்/பார்வையின்மை'' என்பதற்கான எபிரெய மற்றும் ஆங்கில வார்த்தை சரீரத்தில் ஏற்பட்டிராத ஒரு நிலையை குறிக்கக்கூடும். "கண்மயக்கம்/பார்வையின்மை" என்பது, விழிப்புணர்வு இன்மை அல்லது சிந்திக்க இயலாமை அல்லது அறிவுப்பூர்வமாக செயல்பட இயலாமை ஆகியவற்றை குறிக்கக்கூடும்.[4] பல எழுத்தாளர்கள் வசனம் 18இல் குறிப்பிடப்பட்டுள்ள "கண்மயக்கம்" என்பது இராணுவம் எலிசாவை நம்பி, பின்பற்றக்கூடிய விதத்தில் அவர்களை இணங்கச் செய்த ஒரு மனநிலை குழப்பத்தை[5] குறிக்கிறது என நினைக்கிறார்கள். இந்த முடிவுக்கு வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. முதலாவது, எலிசா தன் வேலைக்காரன் கண்கள் திறக்கப்பட வேண்டுமென்று ஜெபித்த போது, அவர் தன் வேலைக்காரனின் சரீர கண்களை மனதில் வைத்து ஜெபிக்கவில்லை. மேலும் அவர் தன் விரோதிகளின் கண்கள் மூடப்பட வேண்டும் என்று ஜெபித்த போது, அவர்கள் சரீர கண்களை மனதில் வைத்து ஜெபித்தார் என்ற முடிவுக்கு நாம் வரவேண்டிய அவசியமில்லை. இரண்டாவதாக, "குருட்டாட்டம்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்த எபிரெய வார்த்தை ஆதியாகமம் 19:11இல் மட்டும் வருகிறது. பல எழுத்தாளர்கள் ஆதியாகமம் 19:11, சரீர கண்பார்வையின்மையை குறிப்பதற்கு பதிலாக, மனதின் குழப்பநிலையையே குறிக்கிறது என நம்புகிறார்கள். மூன்றாவதாக,

வேதாகமம் "குருட்டுத்தன்மை" ஆக இருத்தல் என்பதை சரீரபிரகாரமான ஒரு குருட்டுத்தன்மையை குறிப்பதற்கு பயன்படுத்தாமல், மனதின் அல்லது ஆவிக்குரிய குருட்டு நிலையை குறிப்பதற்கே அடிக்கடி பயன்படுத்துகிறது (காண்க மத்தேயு 15:14; 23:16; 2 பேதுரு 1:9; வெளிப்படுத்தின விசேஷம் 3:17).

எலிசா சீரியா இராணுவத்திற்காக எந்த விண்ணப்பத்தை மனதில் வைத்திருந்தாரோ, கர்த்தர் அதற்கு பதிலளித்தார்: "எலிசாவுடைய வார்த்தையின்படியே அவர்களுக்குக் கண்மயக்கம் உண்டாகும்படி செய்தார்" (2 இராஜாக்கள் 6:18இ).

"அப்பொழுது எலிசா அவர்களை நோக்கி; இது வழி அல்ல; இது பட்டணமும் அல்ல; என் பிறகே வாருங்கள்; நீங்கள் தேடுகிற மனுஷனிடத்தில் நான் உங்களை வழிநடத்துவேன்" என்றான் (வசனம் 19அ). எலிசா போர்வீரர்களிடம் பொய் சொன்னாரா இல்லையா, இதற்காக அவர் கடிந்து கொள்ளப்பட வேண்டுமா இல்லையா என்பது தொடர்பான விவாதங்கள் பல பங்கங்களை நிரப்பியுள்ளன. குறைந்த பட்சம் மூன்று விவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

- *எலிசா எதிரியின்படையை கையாளுவதில் தேவனுடைய முகவராக இருந்தார். நமது தற்போதைய பாடத்தொடரில், மோவாபியர்கள் தண்ணீரை இரத்தம் என்று கருத அவர் அனுமதித்தார் (3:22-24) இனிவரும் பாடங்களில், சீரியரின் இராணுவம் எப்படி, "இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும்" கேட்டு, ஓடிப்போகும்படி செய்தார் என்பதை பார்ப்போம் (7:6). ஜெமிசன், பாசெட் மற்றும் பிரவுன் என்பவர்கள் "எலிசாவின் வார்த்தைகள் ஓர் போர் உபாயம் என்ற கோணத்தில் பார்க்கப்படவேண்டும். அவைகள் போரில் சட்டரீதியாக சரியானவைகளாக கருதப்பட்டன" என எழுதியுள்ளனர்.[6] ராலின்சன் என்பவர் "அந்த காலத்தின் நன்நெறி முறை மற்றும் இன்றுவரையுள்ள எல்லா காலத்திலுமான நன்நெறி முறையில், ஒரு பொதுவான எதிரியை ஏமாற்றுவது நியாயமானது என கருதப்பட்டுள்ளது என எழுதினார்."[7]*
- *எலிசாவின் வார்த்தைகள் பல அர்த்தங்களைக் கொடுக்கக்கூடியதாக இருந்தபோதிலும், "நுட்பரீதியாக, அவருடைய வார்த்தைகள் தவறானவைகளாக இருக்கவில்லை."[8] தோத்தான் என்பது அவர் வழக்க மாக வசிக்கும் பட்டணமாக இருக்கவில்லை - அவர் சமாரியாவில் தான் நிரந்தரமாக வசித்து வந்தார் - அவன் அவர்கள் யாரை தேடிவந்தார்களோ அவனிடத்தில் (தன்னிடத்தில்) "கொண்டுவந்தான்."*
- *பழைய ஏற்பாட்டின் கதாபாத்திரங்களிலிருந்து நாம் நிறைய கற்றுக்கொள்ள முடியும் (ரோமர் 15:4) ஆனால் புதிய ஏற்பாட்டின் தரத்தின்படி அவர்களை தீர்ப்பு செய்வது என்பது நியாயமானதாக இருக்காது.*

சீரியா இராணுவத்தினர் எலிசாவை பின்பற்ற சம்மதித்து, ஊர்வலம் தெற்கு நோக்கி துவங்கியது. அந்த காட்சியானது எப்படிப்பட்டதாக இருந்திருக்க வேண்டும்: நூற்றுக்கணக்கான குழப்பமான போர்வீரர்கள் எலிசாவையும் அவனுடைய வேலைக்காரனையும் பின் தொடர்ந்து சென்றார்கள்!

ஒரு திகைப்படைந்த ஆட்சியாளர் (6:19ஆ-23)

இறுதியாக, அவர்கள் சமாரியாவை வந்து சேர்ந்தார்கள் (வசனம் 19ஆ). எலிசா சீரியாவின் பலம்பொருந்திய இராணுவத்தை பட்டணத்து வாசல்களண்டை அழைத்துவந்தபோது, ஏற்பட்ட ஆச்சரியத்தையும் கவலையையும் உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? எலிசா பட்டணத்து வாயிற் காவல்களை வாயிற்கதவுகளை திறக்கும்படி சம்மதிக்க செய்து, இராணுவத்தை பட்டணத்தின் மையப்பகுதிக்கு நடத்திச் சென்றான் (வசனம் 20அ, ஈ) - ராஜாவின் அரண்மனைக்கு நடத்தி சென்றான் (காண்க வசனம் 21அ). எலிசா மறுபடியும், "கர்த்தாவே, இவர்கள் பார்க்கும்படி இவர்கள் கண்களைத் திறந்தருளும்" என்றான் (வசனம் 20ஆ).

"பார்க்கும்படிக்கு கர்த்தர் அவர்கள் கண்களை திறக்கும்போது, இதோ, அவர்கள் சமாரியாவின் நடுவிலே இருந்தார்கள்" (வசனம் 20இ). அவர்கள் மனங்கள் தெளிவடைந்துவிட்டன, அவர்கள் பார்வைத் தெளிவடைந்துவிட்டது மற்றும் அவர்கள் சுற்றிலும் பார்த்தார்கள். அவர்கள் எதை பார்த்தார்களோ, அது அவர்களுக்கு அதிர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். எலிசா தன் வார்த்தைபடி, அவர்கள் தேடி வந்த அந்த மனுஷனிடத்தில் அவர்களை வழி நடத்தியிருந்தான்: அங்கே அவர்கள் முன்பாக அவன் (எலிசா) நின்று கொண்டிருந்தான். இருப்பினும், அவர்கள் பார்த்தவைகள் இத்தோடு முடியவில்லை. முன்னதாக, அவர்கள் தோத்தானை சூழ்ந்திருந்தார்கள். இப்போது அவர்கள் சமாரியாவின் குடிமக்கள் மற்றும் அவர்களை நோக்கி தங்கள் ஆயுதங்களை திருப்பிவைத்திருந்த இஸ்ரவேல் ராஜாவின் சிறப்பு அதிரடிப்படையினரால் சூழப்பட்டிருந்தார்கள்!

செய்தி ராஜாவை எட்டியது, அவர் அந்த இடத்திற்கு விரைந்து வந்தார். அவன் சீரியாவின் இராணுவத்தைப் பார்த்தபோது, மெய்சிலிர்த்தார். அவன் எலிசாவை நோக்கி, "என் தகப்பனே, நான் அவர்களை வெட்டிப்போடலாமா" என்று கேட்டான் (வசனம் 21). "என் தகப்பனே" என்பது கனம் மற்றும் மரியாதைக்குரிய ஒரு வார்த்தையாயிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில், ராஜா தீர்க்கதரிசிக்கு மரியாதையை காண்பித்தார்.[9] எலிசா, முன்னதாக பெனாதாத்தின் தாக்குதலுக்கு ராஜா தப்பிக்கொள்ள உதவி செய்தான் மற்றும் இப்போது எலிசா பெனாதாத்தின் படைப்பிரிவை சிறைபிடித்து கொடுத்துள்ளார். நான் அவர்களை வெட்டிப்போடலாமா? நான் அவர்களை வெட்டிப்போடலாமா? என்ற அவருடைய கேள்விகள் அவருடைய ஆர்வம் மற்றும் எதிர்பார்ப்பை உணர்த்தி யது. ராஜா உற்சாகமிகுதியில் மேலும் கீழும் குதிப்பதை நான் என் மனதில் பார்க்கிறேன்.

எலிசா அவரை நோக்கி, "நீர் வெட்ட வேண்டாம்" என்றான் (வசனம் 22அ). எப்படியிருந்தாலும், அவர்கள் யோராமால் சிறைபிடிக்கப்படாமல், தேவனால் சிறைபிடிக்கப்பட்டவர்களாயிருந்தார்கள். "இஸ்ரவேல் தேசத்தின் உண்மை யான பாதுகாப்பு என்பது முடிவாக தேவனிடத்திலிருந்தது, அது அவர்கள் இராணுவ பலத்திலோ அல்லது இராணுவ யுக்தியிலோ இருக்கவில்லை"[10] என்ற ஒரு பாடத்தை இஸ்ரவேல் மக்கள் மற்றும் அவர்கள் ராஜா புரிந்துகொள்ள வேண்டுமென்பதை தேவன் விரும்பினார் என்ற ஒரு ஆலோசனையை ராபர்ட் வனாய் என்பவர் முன்வைக்கிறார்.

எலிசா ராஜாவை நோக்கி, "நீர் உம்முடைய பட்டயத்தாலும், உம்முடைய வில்லினாலும் சிறையாக்கிக் கொண்டவர்களை வெட்டுகிறீரோ?" என்றான்[11] (வசனம் 22ஆ). அதற்கான பதில் "வேண்டாம்" என்பதாக இருக்கும், போர்விதியின்படி, போர் கைதிகள் கொல்லப்படக்கூடாது, அப்படியிருக்கும் போது, யோராம் தான் போராடி சிறை*பிடிக்காதவர்களை* ஏன் கொல்ல வேண்டும்?

இந்த போர் வீரர்கள் "எந்த தண்டனையைப் பெற *பாத்திரராயிருக்கிறார்கள்?*" என்ற கேள்வியை கேட்கும் நேரம் வந்துவிட்டது. கடந்த காலத்தில் அவர்கள் தேவனுடைய ஜனங்களை அழித்திருக்கிறார்கள்; இப்போதைய அவர்கள் நோக்கமும் கூட, தேவனுடைய தீர்க்கதரிசியை சிறைப்பிடித்து, கூடுமானால் அவரை கொன்று போடுவதாக இருந்தது. அவர்களை மிக கடுமையாக தண்டிக்குமளவுக்கு ஏன் மரண தண்டனைகூட கொடுக்குமளவுக்கு அவர்கள் மேல் குற்றமுகாந்திரம் இருந்தது. அவர்கள் அப்படித்தான் செய்தார்கள் - ஆனால் தேவன் வேறு திட்டங்களை வைத்திருந்தார். கர்த்தர் அவர்களை அழித்திருந்தால், பெனாதாத் வேறொரு படைப்பிரிவை அனுப்பியிருப்பான் என்பதை நான் மறுபடியும் குறிப்பிட விரும்புகிறேன். தேவனானவர் வேறு ஒரு நோக்கத்தை தன் மனதில் வைத்திருந்தார். அதை அவர், சீரியர்கள் எதை பெற *பாத்திரராயிருந்தார்களோ* அதை அவர்களுக்கு கொடாமல், அவர்களுக்கு எது *தேவையாயிருந்ததோ,* அதை கொடுத்ததின் மூலம் நிறைவேற்றினார்.

அவர்களுக்கு என்ன *தேவையாயிருந்தது?* முதலாவது, அவர்கள் பெலன் புதுப்பிக்கப்பட வேண்டிய தேவை இருந்தது. பன்னிரெண்டு மைல்தூரம் ஏறி நடந்து இரவு முழுவதும் அணிவகுத்து நடந்திருந்தார்கள். இரண்டாவதாக, அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டிய - சீரியாவுக்கு மற்றும் தங்கள் குடும்பங்களிடம் திரும்பிச் செல்ல வேண்டிய அவசியம் இருந்தது. இப்படியாக எலிசா ராஜாவை நோக்கி, "அவர்கள் புசித்துக் குடித்து, தங்கள் ஆண்டவனிடத்துக்குப் போகும்படிக்கு, அப்பமும் தண்ணீரும் அவர்களுக்கெதிரில் வையும்" என்றான் (வசனம் 22இ).

எதிரிகளுக்கு உணவளித்து, விடுவித்து அனுப்பிவிடு என தீர்க்கதரிசி கூறியபோது யோராம் ராஜா ஆச்சரியப்பட்டாரா? அநேகமாக ஆச்சரியப்பட்டார் - ஆனால் எலிசா கூறியபடி செய்தார். உண்மையில், அதைவிட கூடுதலாக செய்தார்: "அப்பொழுது அவர்களுக்கு பெரிய விருந்துபண்ணினான்" (வசனம் 23அ).

ஒரு முக்கியமான முடிவு (6:23)

ராஜா ஆச்சரியப்பட்டிருப்பாரானால், சீரியா போர்வீரர்கள் இருமடங்கு ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். உணவு நிரப்பப்பட்ட மேசைகளுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர்கள் அடைந்த ஆச்சரியத்தை என்னால் பார்க்கமுடிகிறது. நான் அவர்கள் முகத்தில் சந்தேக கோடுகளுடன் அவர்கள் என்ன நினைத்திருப்பார்கள் என்பதை என்னால் பார்க்க முடிகிறது: "இது ஒரு சூழ்ச்சியா? உணவில் விஷம் வைக்கப்பட்டிருக்கக்கூடுமா?" உணவின் முதல் துண்டுகள் எச்சரிக்கையோடு உண்ணப்பட்டன; எந்த பாதிப்பும் இல்லாதபோது, அவர்கள் உணவை உற்சாகமாக உண்ண ஆரம்பித்தார்கள்.

அவர்கள் புசித்து குடித்து தங்கள் ஆண்டவனிடத்திற்கு சீரியாவுக்கு அனுப்பப்பட்டுவிட்டார்கள் (வசனம் 23ஆ). அவர்கள் இன்னமும் ராஜாவின் வில்

வீரர்கள் வழியில் அம்பு எய்து கொன்றுவிடுவார்களோ என்ற சந்தேகத்தோடே திரும்பி பார்த்தபடியே சென்றார்கள். அப்படி எதுவும் நிகழாதபோது, அவர்கள் தங்கள் வழியில் விரைந்து சென்றார்கள். அவர்கள் விநோதமான திருப்புமுனையாக அமைந்த சம்பவங்களைக்குறித்து பேசுகையில், அவர்கள் குரல்களில் ஒரு நிம்மதியையும் சிரிப்பையும் என்னால் கேட்க முடிகிறது.

இப்படியாக, "அவர்கள் தங்கள் ஆண்டவனிடத்துக்குப் போய்விட்டார்கள்" (வசனம் 23இ). தோத்தான் சமவெளியை தாண்டி மலைகள் வழியாக ஆராமுக்கு சென்றார்கள். இறுதியாக, அவர்கள் தமஸ்குவை அடைந்தார்கள். அவர்கள் பட்டணத்திற்குள் பிரவேசித்தபோது, "இராணுவம் திரும்பிவிட்டது" என்ற வார்த்தை பரவியது. அவர்கள் அரண்மனை மைதானங்களில் வந்தபோது, அநேகமாக ராஜா அவர்களை சந்தித்தார். அங்கே நடந்த உரையாடலை வெயின் கில்பாட்ரிக் என்பவர் பின்வருமாறு விவரிக்கிறார்.

> ராஜா இராணுவதளபதியை பார்த்து கேட்கிறார்,
> "நீ தீர்க்கதரிசியை கண்டு பிடித்தாயா?"
> "ஆம், நாங்கள் கண்டுபிடித்தோம்."
> "நீ அவரை கொன்று விட்டாயா?"
> "இல்லை."
> "நீ அவரை இங்கே கொண்டு வந்தாயா?"
> "இல்லை."
> பதற்றமடைந்த ராஜா கேட்டான், "நீ அவனை கண்டுபிடித்ததுண்டானால், நீ அவனை ஏன் கொன்று போட*வில்லை* அல்லது அவனை இங்கு உயிரோடு கொண்டுவர*வில்லை?*"
> தளபதி சொன்னார், "நீங்கள் முதலில் அமர்ந்து கேட்பது நல்லது ராஜாவே, ஏனெனில் இதை நீங்கள் நம்பப்போவ*தில்லை!*"[12]

எலிசா சீரியா இராணுவத்தை தான் விரும்பியபடி நடத்தியதின் முடிவு என்ன? வசனம் 23இன் கடைசியிலுள்ள இந்த கதையின் தத்ரூபமான முடிவைப் பாருங்கள்: "சீரியரின் தண்டுகள் இஸ்ரவேல் தேசத்திலே அப்புறம் வரவில்லை." இராணுவம் எதைப்பெற பாத்திரமாயிருந்ததோ அதை தராமல், அதற்கு எது தேவையாயிருந்ததோ, அதைக் கொடுத்தது - சமாதானத்தில் முடிந்தது. அந்த சமாதானம் குறுகியகாலம்மட்டும் இருந்திருக்கலாம் (காண்க வசனம் 24); நாம் அதை ஒரு தற்காலிக போர் நிறுத்தம் அல்லது ஒரு இடைக்கால அமைதி என அழைக்கலாம். இருப்பினும், அது சமாதான காலமாயிருந்தது.

சீரியாவின் ராஜா ஏன் கொள்ளையிடுகிற படைப்பிரிவுகளை இஸ்ரவேலுக்குள் அனுப்புவதை நிறுத்திவிட்டார்? யோராம் காண்பித்த பெருந்தன்மையான செயலால் இவர் மனமாறிவிட்டாரா? இஸ்ரவேலின் தீர்க்கதரிசி தன் எண்ணங்களை அறிந்து, ஒரு பட்டையத்தைக்கூட உருவாமல், பெரிய படைப்பிரிவை சிறைபிடிக்கிற வரையில், அவர்களை அங்கு அனுப்புவதில் எந்த பயனும் இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டாரா? பெனாதாத்தின் நோக்கத்தை நாம் அறியமுடிவதில்லை, ஆனால் சம்பவித்த முடிவில் நாம் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறோம்: இரக்கத்தைக் காண்பிப்பதின் நல்ல முடிவு சமாதானமாயிருந்தது.

ஆண்டுகளினூடே பலரோடு நான் பேசியிருக்கிறேன், அவர்கள் மற்றவர்கள் "எதை பெற தகுதியானவர்களோ" அதை மட்டும் அவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்பதில் ஆர்வமாயிருந்தார்கள். நான் ஒரு எதிர்ப்பாளரை அன்பு மற்றும் பரிவோடு நாம் நடத்த வேண்டும் என நான் அடிக்கடி ஆலோசனை கூறியபோது, "ஆனால் அவன் அல்லது அவள் அதை பெற தகுதியானவர்கள் அல்ல" என்ற பதில் வந்தது. இந்த பாடத்திலிருந்து நாம் வேறு எதையும் கற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட, மக்கள் எதை பெற தகுதியானவர்களோ அதை அவர்களுக்கு கொடாமல், அவர்களுக்கு எது தேவையாயிருக்கிறதோ அதை கொடுப்பதின் மதிப்பை நாம் கற்றுக்கொள்வோமாக. ஒரு தனிநபர் கடினமான வார்த்தைகளுக்கும், கடுமையான தண்டனைக்கும் பாத்திரராக இருக்கக்கூடும், ஆனால் அவருக்கு "என்ன/எது தேவையாயிருக்கிறது?" என கேட்போமாக. அவருக்கு இரக்கம் தேவைப்படுகிறதா? அவருக்கு அன்பு தேவைப்படுகிறதா? பெரும்பாலும் யாருக்கு அன்பு தேவைப்படுகிறதோ, அவரே அதைப் பெற அதிக தகுதியற்றவராக இருக்கிறார்.

இயேசுவானவர், மக்களுக்கு அவர்கள் எதை பெற தகுதியானவர்களோ அதை கொடாமல் அவர்களுக்கு எது தேவையாயிருக்கிறதோ, அதை கொடுப்பதின் அவசியத்தை வலியுறுத்தி போதித்துள்ளார். அவர் தமது மலைபிரசங்கத் தொடரில்,

> "உனக்கடுத்தவனை சிநேகித்து, உன் சத்துருவை பகைப்பாயாக" என்று எழுதியிருப்பதை கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள் இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களை சிநேக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படி செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் என போதித்தார் (மத்தேயு 5:43-48; காண்க லூக்கா 6:27-36).

பவுல் தாம் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்தில் அதே சத்தியத்தை வலியுறுத்தி போதித்தார்:

> "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால்,

> நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமா யிருந்தால், அவனுக்கு பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்" [காண்க நீதிமொழிகள் 25:21, 22]. நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு (ரோமர் 12:18-21).

நீங்கள், பிறர் எதைப்பெற தகுதியானவர்களோ, அதைக் கொடாமல் அவர்களுக்கு எது தேவையாயிருக்கிறதோ, அதைக் கொடுக்கும்போது, சமாதானம் உறுதிசெய்யப்படுகிறதா? இல்லை. எப்போதும் அப்படி அமைவதில்லை. இருப்பினும், கர்த்தர் நான் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறாரோ, அதை நான் நிறைவேற்றிவிட்டேன் என்ற மனநிறைவோடு நீங்கள் இருக்கலாம். "யாவரோடும் சமாதானமாயிருப்பதற்கு" *நீங்கள்* என்ன செய்ய வேண்டுமோ, அதை செய்துவிட்டீர்கள். நீங்கள் எப்போதும் ஒரு கிறிஸ்தவராக நடந்து கொள்வது உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஆனால் அது உங்களுக்கு உதவுகிறது. ஒரு விஷயம் மிகவும் நிச்சயமானது: பழிவாங்குதல் ஒருபோதும் சமாதானத்தைகொண்டு வருவதில்லை; அது விரோதங்களை தீவிரப்படுத்துகிறது. சமாதானத்திற்கான ஒரே நம்பிக்கை, மக்கள் எதை பெற தகுதியானவர்களோ அதை அவர்களுக்கு கொடுப்பதல்ல, மாறாக அவர்களுக்கு எது தேவையோ, அதை கொடுப்பதாகும்.

கணவர் மற்றும் மனைவிகளுக்கிடையில் கருத்து வேற்றுமைகள், பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கிடையில் உறவுமோதல்கள், அயலகத்தாரிடத்தில் பகை உணர்வுகள், அரசு நிர்வாகங்களில் எதிர்ப்புகள் - என இன்று பல நெருக்கடியான சூழ்நிலைகள் நிலவி வருகின்றன. இஸ்ரவேல் மற்றும் சீரியாவுக்கிடையில் இருந்தது போன்ற பகை நிலை இன்று நாடுகளுக்கிடையில் இருக்கின்றன. "எனது எதிரிக்கு அவன் பெறத் தகுதியானதை நான் கொடாமல், அவனுக்கு எது தேவைப்படுகிறதோ அதை நான் கொடுப்பேன்" என்ற கர்த்தருடைய யுக்தியை சண்டையிடுகிற யாவரும் பின்பற்றினால், அது ஆச்சரியமாயிராதா? அது சம்பவிக்குமானால், பல பிரச்சனைகளில் "விரோதங்கள் ஒழிந்துவிட்டன!" என்ற முடிவு அறிவிக்கப்படுவதைப் பார்த்து நான் ஆச்சரியப்படாமல் இருக்க மாட்டேன். ஆம். இது இந்த பாவக் கறைபட்ட உலகத்தில் - உலக அளவில் நிகழாது என்பதை அறிந்திருக்கிறேன் - ஆனால் இது உங்கள் வாழ்வு மற்றும் என் வாழ்வில் நடைபெறும் என நான் ஜெபிக்கிறேன். "எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பதற்கு" தேவையான எல்லாவற்றையும் *நாம்* செய்வோமாக.

முடிவுரை

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் எலிசா பலவழிகளில் இயேசுவை போல இருந்தார் என சொல்லப்பட்டதுண்டு. நமது பாடத்திலுள்ள இந்த சந்தர்ப்பத்தை தவிர, இதற்கு வேறு சிறந்த சான்று இருக்க முடியாது; தன் சத்துருக்களுக்கு அவர்கள் பெற தகுதியானதைக் கொடாமல், அவர்களுக்கு எது தேவைப்பட்டதோ அதை கொடுத்தார். அதை தான் ஆண்டவர் இயேசு நமக்கு செய்துள்ளார். நாம் எதைப் *பெற பாத்திரராயிருந்தோம்?* நித்திய தண்டனை (ரோமர் 3:23; 6:23). நமக்கு எது *தேவையாயிருந்தது?* யாரோ

ஒருவர் நமக்காக மரித்து நமது நித்திய மீட்புக்கான வழியை உண்டுபண்ணுவது நமக்கு தேவையாயிருந்தது! இயேசுவானவர் உங்களுக்காக செய்துள்ளவற்றை நீங்கள் நன்றியோடு பாராட்டுகிறீர்களா? அப்படியானால், அவருடைய அன்பின் அழைப்பை ஏற்றுக் கொள்ள நீங்கள் தாமதம் செய்யமாட்டீர்கள் (மத்தேயு 11:28-30). அப்போது, தேவனோடு சமாதானம் என்ற அந்த மிக முக்கியமான சமாதானத்தை பெற்றுக்கொள்வீர்கள் (ரோமர் 5:1). இன்றே அதை பெற வாருங்கள்!

குறிப்புகள்

[1]S. M. Lindsay, quoted in C. Roy Angell, *Baskets of Silver* (Nashville: Broadman Press, 1955), 49. [2]*தோத்தான் ஒரு குன்றின் மேல் கட்டப்பட்டிருந்ததால், அதை சூழ்ந்திருந்த இராணுவம் எலிசாவிடம் "கீழ் இறங்கி" செல்லாது. "அவர்கள் அவனிடத்தில் இறங்கி வந்தார்கள்" என்ற கருத்தை கல்வியாளர்கள் ஏற்பதில்லை. சீரியா இராணுவம் மலையின் மேலேறி எலிசாவிடம் "இறங்கி வந்தது" என்ற ஒரு பொதுவான கருத்தை அது கூறுகிறதா? தூதர்கள் எலிசாவிடம் "இறங்கி வந்தபோது," தீர்க்கதரிசி அந்த இராணுவத்தை குருடாக்கும்படி கேட்டுக்கொண்டார் என்பது அதின் பொருளாயிருக்கிறதா? "அவர்கள்" என்பது எலிசாவையும் அவன் வேலைக்காரனையும் குறிக்கிறது. "அவன்" என்பது சீரியா இராணுவத்தை குறிக்கும் கூட்டு பெயர்ச்சொல்லாக இருக்கிறது என சிலர் கருதுகிறார்கள்.* [3]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary*, vol. 5, *1 & 2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 122. [4]Encarta® World English Dictionary, Microsoft Word Ver. 10, Microsoft Corporation, Redmond, Wash., 1999. [5]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 326; James E. Smith, *The Books of History*, Old Testament Survey Series (Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 568; Clyde M. Miller, *First and Second Kings,* The Living Word Commentary series, vol. 7 (Abilene, Tex.: A.C.U. Press, 1991), 340. [6]Robert Jamieson, A. R. Fausset, and David Brown, *Commentary on the Whole Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1961), 274. [7]Rawlinson, 122. [8]J. Robert Vannoy; notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 534. [9]*அடுத்த பாடத்தில், யோராம் எலிசாவின் தலையை வெட்டி எடுக்க ஆயத்தமாயிருப்பான் (2 இராஜாக்கள் 6:31). அவன் ஒரு, "இருமனமுள்ள தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருந்தான்" (யாக்கோபு 1:8).* [10]Vannoy, 534.

[11]*ஒரு கிரேக்க வசனப்பகுதி எலிசாவின் வார்த்தைகளோடு "வேண்டாம்" என்ற வார்த்தையை சேர்க்கிறது. ஆனால், பெரும்பாலான பண்டைய மூலப்பிரதிகள்* NASB*யில் காணப்படும் வாசிப்பை அப்படியே வைத்துக்கொள்கிறது.* [12]David Roper, "Amazing Grace," in "Sermons I Like to Preach," *Truth for Today* (October 1997): 7.

15

சத்தியத்தை பேசிய ஒரு மனிதன்

[2 இராஜாக்கள் 6:24-7:20]

சத்தியம், உலகின் மிகவும் விலையுயர்ந்த பொருட்களில் ஒன்றாக இருக்கிறது. சாலொமோன், "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே" என எழுதினார் (நீதிமொழிகள் 23:23). எவ்வளவு விலை பெற்றாலும், சில காரியங்கள் விற்பனைக்கு உரியவைகள் அல்ல; அவைகளில் ஒன்று சத்தியம். டபிள்யு. ஜெ. டீன் மற்றும் எஸ். டி. டெய்லர் - டாஸ்வெல் என்பவர்கள்,

> *சத்தியத்தை மிக விலையுயர்ந்த காரியமாக கருது, அதை அடைவதற்கு எந்த வித வலியானாலும், விலையானாலும் அல்லது தியாகமானாலும் அதை செய், அதை அடைந்த பின் பத்திரமாய் பாதுகாத்துக் கொள்; அதை உலக ஆதாயத்திற்காக, அல்லது சிற்றின்பத்திற்காக விற்று விடாதே, அதற்கு அப்பால் சிந்தியாதே, அதை பார்த்து நகைத்துவிடாதே, "விற்று விடாதே" எந்த ஒரு சுய நலகாரியத்திற்காகவும் அதை விட்டுப் பிரிந்துவிடாதே.[1] என கருத்து தெரிவித்தனர்.*

இயேசுவானவர் சத்தியத்தின் விலை மதிப்பை குறித்து பேசுகையில், "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என வலியுறுத்திப்போதித்தார் (யோவான் 8:32).

எல்லா உண்மையும் விலையேறப்பெற்றது தான் (காண்க எபேசியர் 4:25), ஆனால் நாம் தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தை மையமாக கொண்டு இந்த பாடத்தில் படிக்கப்போகிறோம். சங்கீதக்காரன் கர்த்தரை நோக்கி, "உமது கற்பனைகளெல்லாம் உண்மை" என்றான் (சங்கீதம் 119:151; காண்க 2 சாமுவேல் 7:28; சங்கீதம் 119:160). யோவான் 17ஆம் அதிகாரத்திலுள்ள இயேசுவின் ஜெபத்தில், அவர், "உம்முடைய வசனமே சத்தியம்" என்றார் (யோவான் 17:17; காண்க 2 கொரிந்தியர் 6:7; கலாத்தியர் 2:5; கொலோசெயர் 1:5; 2 தீமோத்தேயு 2:15; யாக்கோபு 1:18). நாம் சத்தியத்தை "வாங்க வேண்டும்" மற்றும் ஒரு போதும், ஒரு போதும், ஒரு போதும், "அதை விற்கக்கூடாது"!

இந்த பாடத்தின் தலைப்பு "சத்தியத்தைப் பேசின ஒரு மனிதன்." நமது வசனப்பகுதி 2 இராஜாக்கள் 6ஆம் அதிகாரத்தின் கடைசி பகுதியும் 7ஆம் அதிகாரம் முழுவதுமாகும். எலிசாவின் வாழ்க்கை தொடர்பான எல்லா துணை நிகழ்வுகளையும் பரிசுத்த ஆவியானவர் ஏன் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பது நமக்கு நிச்சயமாக தெரிவதில்லை. ஆனால் அவர் இந்த பாடத்தை குறித்த ஒரு சந்தேகத்தில் நம்மை விட்டு விடவில்லை. 2 இராஜாக்கள் 7:18-20 ஆகிய வசனங்களை கவனியுங்கள்! மேலோட்டமாக, இவை திரும்ப திரும்ப

சொல்லப்படுவதாக தோன்றலாம். ஆனால், பரிசுத்த ஆவியானவர் இதை வாசிப்போர் இதின் மையகருத்தை தவற விட்டுவிடக்கூடாது என்பதை உறுதி செய்ய விரும்பினார். "தேவனுடைய மனுஷன் ... சொன்னதின்படியே நடந்தது" (7:18ஆ) என்ற திறவுகோல் வசனத்துடன் இந்த சுருக்கமான பகுதி துவங்குகிறது. மனிதர்கள் எலிசாவின் வசனத்தை குறித்து கேள்வி எழுப்பமுடியும், சந்தேகிக்க முடியும். அல்லது அவைகளை அசட்டை செய்யவும் கூடும், ஆனால் எலிசா தேவனுடைய சத்தியத்தை பேசினார் - தேவனுடைய சத்தியம் எப்போதும் உண்மையாயிருக்கிறது!

நமது வசனப் பகுதி நீண்ட ஒரு வசனப்பகுதியாய் இருப்பதால், நாம் இதை இரண்டு பாடங்களில் படிப்போம். இந்த பாடம் சத்தியம் தொடர்பான ஒட்டுமொத்தமான மற்றும் முக்கியமான குறிப்புகளை வழங்கும்.

சத்தியத்தை அசட்டை செய்வது, சத்தியத்தை மாற்றுவதில்லை (6:24-29)

சோகசம்பவம்: நிஜமானது

"இதற்குப் பின்பு, சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன் இராணுவத்தையெல்லாம் கூட்டிக்கொண்டுவந்து, சமாரியாவை முற்றிகைபோட்டான்" (வசனம் 6:24) என்ற வசனத்துடன் நமது கதை/பாடம் துவங்குகிறது. "இதற்குப் பின்பு" என்பது வசனம் 23ஐ குறிக்கிறது: "... சீரியாவின் தண்டுகள் இஸ்ரவேல் தேசத்திலே அப்புறம் வரவில்லை." ஒரு குறிப்பிட்ட சமாதான காலத்திற்கு பிறகு (எவ்வளவு காலம் என்பது நமக்கு தெரியவில்லை), பெனாதாத் இஸ்ரவேலுக்கு எதிராக ஒரு பெரிய தாக்குதலை தொடுத்தான். அவனுடைய இராணுவம் இஸ்ரவேலின் இராஜா அரண்மனை அமைந்திருந்த சமாரியாவரை முன்னேறி சென்றது. இந்த சமயத்தில், யோராம் அநேகமாக இஸ்ரவேலின் ராஜாவாக இருந்திருக்கலாம். ஜொசிபஸ் என்பவருடைய கூற்றுபடி, யோராமுடைய படைகள் பெனாதாத்தின் படைகளை எதிர்கொள்ள வலிமையற்றதாக இருந்தபடியால், அவன் பெனாதாத்தை திறந்த வெளிகளில் சந்திக்க பயப்பட்டான். அவன் போர் ஆபத்தை தவிர்த்து உடனே தலைநகருக்குள் தன்னை ஒளித்துக்கொண்டான்.[2]

சீரியர்கள் பட்டணத்தை முற்றுகையிட, "... சமாரியாவிலே கொடிய பஞ்சமுண்டாயிற்று" (வசனம் 25அ). இது 4:38 மற்றும் 8:1 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள பஞ்சத்தை குறிக்கக்கூடும், அல்லது முற்றுகையின் போது, பட்டணத்தின் குடிமக்களுக்கு உணவு இல்லாமல் போயிற்று என்பதை குறிக்கலாம். எப்படியிருப்பினும். பெனாதாத்தின் யுக்தி, பட்டினியால் பட்டணத்தை பணியவைப்பதாக இருந்தது.

குடிமக்கள் நம்பிக்கை இழக்கும் வரை, முற்றுகை நாட்கணக்கில் வாரக்கணக்கில் நீடித்தது. "ஒரு கழுதைத்தலை எண்பது வெள்ளிக்காசுக்கும் [இரண்டு பவுண்ட் சில்வர்[3]], புறாக்களுக்கு போடுகிற காற்படி பயறு ஐந்து வெள்ளிக் காசுக்கும் [இரண்டு அவுன்சுகள்] விற்கப்பட்டது" (6:25ஆ). பிரமாணத்தின்படி, கழுதை ஒரு அசுத்தமான விலங்கு, இஸ்ரவேலர்கள் அதை புசிக்கக்கூடாது (காண்க லேவியராகமம் 11:2-8; உபாகமம் 14:4-8). செத்துப்போன உடலின் உறுப்புகளில், கழுதையின் தலை என்பது விரும்பப்படாத ஒரு பகுதி

யாகவும் சிறிதளவே தசை உள்ளதாகவும் இருக்கும். இருப்பினும், அது அதிக விலைக்கு போனது.

"ஒரு காற்படி பயறு" என்பது அநேகமாக 12 அவுன்சாக இருந்தது.[4] "புறாகழிவு" (NASB) என்பது நேரடிப் பொருளில் எடுத்துக்கொள்ளப்படக் கூடும், ஏனெனில் பயங்கரமான பஞ்சகாலங்களில் புறாக்கழிவுகள் மனிதர் உண்ணுதவற்காக சேகரிக்கப்பட்டுள்ளன ... ;[5] ஆனால் அது துர்பாக்கியமான உணவைக்குறிப்பதற்காக உருவகமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.[6] சூழ்நிலை *மோசமாயிருந்தது* - மனித பயன்பாட்டிற்கு பொருத்தமில்லாதவைகள் என்று கருதப்பட்டவைகள் கூட - செல்வந்தர்களால் மட்டுமே வாங்கமுடியும் என்ற அளவுக்கு - நிலை மோசமாக இருந்தது.

மிகமோசமான நிலை இனிமேல்தான் வரவேண்டியதாயிருந்தது. ஒரு நாள் யோராம், எதிரிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும் பாதுகாப்பு அரண்களை மேற்பார்வையிடவும் அலங்கத்தின் மேல் நடந்து கொண்டிருந்தான் (2 இராஜாக்கள் 6:26அ). அப்படி அவர் செய்த போது, ஒரு ஸ்திரீ அவனை பார்த்து, "இராஜாவாகிய என் ஆண்டவனே, இரட்சியும்!" என்று கூறினாள் (வசனம் 26ஆ). அவளுக்கு உணவு தேவைப்பட்டது என்பதை ராஜா யூகித்துக்கொண்டார். அதற்கு அவன், "கர்த்தர் உன்னை இரட்சிக்காதிருந்தால் நான் எதிலிருந்து எடுத்து உன்னை இரட்சிக்கலாம்? களஞ்சியத்திலிருந்தா, ஆலையிலிருந்தா?" என்றான் (வசனம் 27). NCV மொழிபெயர்ப்பு, "கர்த்தர் உனக்கு உதவி செய்யாவிட்டால், நான் எப்படி செய்யக்கூடும்? களஞ்சியத்தி லிருந்து [அங்கே தானியம் இருக்க வில்லை] அல்லது ஆலையிலிருந்து [அங்கே திராட்சைரசம் இருக்கவில்லை] நான் உதவி பெற முடியுமா?" எனக் கூறுகிறது.

ராஜா இறுதியாக அந்த ஸ்திரீயை நோக்கி, "உனக்கு என்ன வேண்டும்?" என்றான் (வசனம் 28அ). (NIVஇல் "என்ன காரியம்?" என சுறுக்கமாக கூறப்பட்டுள்ளது.) அந்த பெண்ணுக்கு உணவுமட்டுமல்ல, அவள் எதை "நியாயம்" என்று நினைத்தாளோ அதுவும் தேவைப்படுவதாக காணப்பட்டது. அவளுடைய கதையை நான் (குழந்தைகளை தவறாக நடத்தும் கதைகள் என்னை சரீரத்தில் வியாதிப்படவைக்கிறது) விட்டு விட விரும்புகிறேன், ஆனால் அது அந்த பட்டணம் சந்தித்த சொல்லொண்ணா துயரத்தை விளக்குகிறது.

> அதற்கு அவள், "இந்த ஸ்திரீ என்னை நோக்கி: உன் மகனைத் தா, அவனை இன்று தின்போம்; நாளைக்கு என் மகனைத் தின்போம் என்றாள். அப்படியே என் மகனை ஆக்கித் தின்றோம்; மறுநாளில் நான் இவளை நோக்கி; நாம் உன் மகனைத் தின்ன அவனைத் தா என்றேன்; அவள் தன் மகனை ஒளித்து விட்டாள்" என்றாள் (வசனங்கள் 28ஆ, 29).[7]

இது தேவனுடைய ஜனங்கள் மனித உடலைத் தின்ற முதல் குறிப்பாக இருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமை, நெபுகாத்நேச்சார் கி.மு. 587ல் எருசலேமை முற்றுகையிட்டபோதும் நடந்தது. (காணவும் புலம்பல் 2:20; 4:10; எசேக்கியேல் 5:10) ஜெசிபஸ் என்பவர், தீத்து ராயன் கி.பி. 70இல் எருசலேமை இறுதியாக முற்றுகையிட்டபோது மனிதர் தரந்தாழ்ந்து நடந்துகொண்ட விதங்களை எழுதியுள்ளார்.[8]

சோகசம்பவம்: அதின் காரணம்

எது காரியங்களை இந்த அளவு மோசமாக்கியிருந்தன? முற்றுகை, கடும் பஞ்சம் மற்றும் பயங்கர பின்விளைவுகள் யாவும் பாவம் மற்றும் விக்கிரக ஆராதனை ஆகியவற்றால் உருவாயிருந்தன. மக்கள் தேவனோடு தங்களுக்குள்ள உடன்படிக்கையை கைக்கொள்ள தவறிவிட்டார்கள். மோசே, இஸ்ரவேலர் தங்கள் உடன்படிக்கையைக் கைக்கொள்ளத் தவறினால், அவர்களுடைய சத்துருக்கள் அவர்கள் பட்டணங்களை முற்றுகைபோடுவார்கள் என எச்சரித்திருந்தார் (உபாகமம் 28:52). மேலும், "உன் சத்துருக்கள் உன்னை முற்றுகைபோட்டு, நெருக்குங்காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக்கனியான உன் புத்திர புத்திரிகளின் மாம்சத்தை தின்பாய்" என எச்சரித்திருந்தார் (வசனம் 53). மறுபடியுமாக, மோசே ஜனங்களுக்கு தேவனுடைய செய்தியைக் கொடுத்திருந்தார்:

> *"... இன்னும் இவைகளெல்லாவற்றாலும் நீங்கள் எனக்குச் செவிகொடாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நான் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து நடந்து, நானே உங்கள் பாவங்களினிமித்தம் உங்களை ஏழத்தனையாய்த் தண்டிப்பேன். உங்கள் குமாரரின் மாம்சத்தையும் உங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் புசிப்பீர்கள்" (லேவியராகமம் 26:27-29).*

சமாரியாவின் மக்கள் தேவனுடைய சத்தியத்தை புறக்கணித்துவிட்டார்கள், ஆனால் அது சத்தியத்தை மாற்றியிருக்கவில்லை. அவர்கள் இன்னமும் அதின் பின்விளைவுகளை அனுபவிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். ஓசியா தீர்க்கதரிசி, "அவர்கள் காற்றை விதைத்து, சூறைக்காற்றை அறுப்பார்கள் ..." என்றார் (ஓசியா 8:7அ). பவுல், "... மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" என்று எழுதினார் (கலாத்தியர் 6:7ஆ).

இன்று, தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தைப் புறக்கணிக்கிற மக்கள் உலகத்தில் நிறைந்திருக்கிறார்கள். சிலர் தேவனுடைய வசனம் தங்களுக்கு போதிக்கப்படாததால் அப்படி செய்கிறார்கள்; மற்றவர்கள் பிடிவாதமாக அறியாமையில் இருப்பதால் அப்படிசெய்கிறார்கள். வேதாகமம் முக்கியமானதல்ல, மற்றும் அதின் போதனைகளுக்கு கீழ்ப்படிவது என்பது சிறிதளவே முக்கியத்துவமுள்ளது என்பது சாத்தானுடைய பொய்களில் ஒன்றாக உள்ளது. சத்தியத்தை புறக்கணிப்பது பின்விளைவுகளை கொண்டுவருகிறது - பயங்கரமான பின்விளைவுகளை கொண்டுவருகிறது என்பதை சமாரியாவின் விவரிக்க முடியாத சூழ்நிலைகளை பார்த்தாவது கற்றுக்கொள்ளுங்கள். பவுல் அப்படிப்பட்டவர்களைக் குறித்து, "அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து, ..." என்று எழுதினார் (எபேசியர் 4:18). நீங்கள் வேதாகமத்தின் தெளிவான போதனைகளை நிராகரிக்கிறவர்களாக இருந்திருந்தால், சத்தியத்தை புறக்கணிப்பது என்பது, சத்தியத்தை மாற்றுவதில்லை என்பதை நீங்கள் கற்றுக்கொள்ளும்முன், பாவம் உங்கள் வாழ்க்கையை அழிக்காமல் இருக்க வேண்டுமென நான் ஜெபிக்கிறேன்!

சத்தியத்தின்பால் கோபப்படுவது சத்தியத்தை மாற்றுவதில்லை (6:30-33)

ராஜாவின் நம்பிக்கையின்மை

"அந்த ஸ்திரீயின் வார்த்தைகளை ராஜா கேட்டவுடனே" அவன் நம்பிக்கையற்றவனாகி, 'தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான்" (வசனம் 30அ; ஒப்பிடுக 5:7). அவன் அலங்கத்தின் மேல் இருந்தபடியால், அவனுடைய செய்கைகள் கீழே இருந்தவர்களுக்கு காணக்கூடியதாயிருந்தது (வசனம் 30ஆ). "அவன் உள்ளே தன் சரீரத்தின் மேல் இரட்டு உடுத்தியிருக்கிறதை ஜனங்கள் கண்டார்கள்" (வசனம் 30இ).

இரட்டு என்பது விலைமலிவான நூல் இழைகளால் நெய்யப்பட்டதாயும் சாக்குப்பைகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டதாயும் இருந்தது. நான் சிறுவனாயிருந்தபோது அந்த வகை துணியை "burlap" என அழைப்போம். இவற்றிலிருந்து உருவான சாக்குகளை நாங்கள் "கோணி பைகள்"[9] என அழைப்போம். பொதுவாக சாக்கு இழைகளிலிருந்து உடைகள் தயாரிக்கப்படுவதில்லை, ஏனெனில் அதின் பருமனான இழைகள் தோலில் எரிச்சல் உண்டாக்கக்கூடியதாக இருக்கும். வேதாகம காலங்களில், மக்கள் சில சமயங்களில் அதை, தங்கள் மனத்தாழ்மை, துக்கம் மற்றும் மனந்திரும்புதலைக் காண்பிக்கும் அடையாளமாக உடுத்தியிருந்தார்கள் (காண்க ஆதியாகமம் 37:34; 2 சாமுவேல் 3:31; 2 இராஜாக்கள் 19:1).

ராஜா ஏன் இப்படி உடுத்தியிருந்தார்? அதற்கு பதிலளிக்க நாம் நம் கதையை பின்னோக்கி பார்க்க வேண்டும். "அந்த விவரிப்பு சுறுக்கமானதாயும் அண்டவடிவமானதாகவும் ... இருக்கிறது,"[10] ஆகவே, நாம் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். எலிசா முன்னதாக ஏவப்பட்ட ஒரு செய்தியை ராஜாவுக்கு கொடுத்திருந்தார் என யூகிக்கிறோம். அந்த செய்தி நிச்சயமாக இப்படிப்பட்ட சத்தியங்களை உள்ளடக்கியிருந்திருக்கும்:

- *"உன்னுடைய பிரச்சனைகள், உன் பாவத்திற்கு தண்டனையாக தேவனிடத்திலிருந்து வந்துள்ளன."*
- *"மக்கள் தங்கள் பொல்லாப்பிலிருந்து (ராஜாவாகிய உம்மிடத்தில் துவங்கி) மனந்திரும்புவார்களானால், கர்த்தர் அவர்களை பாதுகாப்பார்."*

எலிசா சீரியா இராணுவத்திடம் சரணடைவதற்கு எதிராகக்கூட புத்தி சொல்லி யிருந்திருக்கலாம்: "கொஞ்சம் காத்திருங்கள் மற்றும் கர்த்தர் உங்களை விடுதலையாக்குவார்."

ராஜா, தன் மனந்திரும்புதலின் அடையாளமாக ஏன் இரட்டு உடுத்தி யிருந்தார் என்பதற்கு இவ்விதமான ஒரு செய்தி விளக்கமளிக்கிறதாயிருக்கிறது. இதில் என்னதான் தவறு இருந்தது? தொடர்ந்து வரும் சம்பவங்களை கவனிக்கும் போது, அவன் ஒரு சிறிதளவு கூட மனந்திரும்பவே இல்லை என்பதை காட்டுகிறது: அவன் தன் பாவம் மற்றும் அவைகளின் பின்விளைவுகளுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்கவில்லை. பாவத்தைக் குறித்து உள்ளான மற்றும் இருதயப்பூர்வமான துக்கம் ஏற்படாத பட்சத்தில், மனந்திரும்பி விட்டதாக காட்டிக்கொள்ளும் வெளிப்புற சைகைள் வெறுமை மற்றும் அர்த்த

மற்றவைகளாயுள்ளன. (ஒரு சிறுவன் தன் தவறுக்காக உண்மையில் வருந்தாத நிலையில், அவன் தாய் என் சொல்லுக்காக வருந்துகிறேன் என சொல்ல வைப்பதால், "நான் வருந்துகின்றேன்" என முணுமுணுக்கும் ஒரு சிறுவனுடைய நிகழ்ச்சி என மனதிற்கு வருகிறது.)

இந்த பெண்ணின் பயங்கரமான கதை இந்த ராஜாவின் எண்ணத்தை மேற்கொண்டது. "இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை! என்னுடைய ராஜா வஸ்திரத்திற்கு அடுத்து இந்த அரிப்பை உருவாக்குகிற துணியை நான் உடுத்தியிருக்கிறேன். இருப்பினும் கர்த்தர் எங்களை காப்பாற்றவில்லை. உண்மையில் நிலமை ஒவ்வொரு நிமிஷமும் மோசமாகிக்கொண்டே வருகிறது," என அவன் சிந்திப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

ராஜாவின் தீர்மானம்

ராஜா என்ன செய்தான்? "நாம் தாண் மற்றும் பெத்தேலிலுள்ள விக்கிரகங்களை அகற்றிவிட்டு [காண்க 1 இராஜாக்கள் 12:28, 29], பாகாலின் வழிப்பாட்டை முழுமையாக அழித்துவிட்டு, யெகோவாவாகிய தேவனை மட்டும் தொழுதுகொள்ள வேண்டும் என அவன் தீர்மானித்தானா?" அவன் தன் மக்கள் மனந்திரும்பி, ஜெபிக்கும்படி கேட்டிருந்தால், கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்திருப்பார் (காண்க 2 நாளாகமம் 7:14). அப்படியாக முடிவெடுத்து, செயல்படுவதற்கு பதிலாக, யோராம் ஊழியர்மேல் கோபம் கொண்டவனாக மாறினான். அவன் "சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவின் தலை இன்றைக்கு அவன் மேல் இருந்தால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்" என்று சொன்னான் (2 இராஜாக்கள் 6:31) [அவனுடைய தாயின் வார்த்தைகளோடு ஒப்பிடுக (1 இராஜாக்கள் 19:2)], முன்னதாக, ராஜா எலிசாவை, "தகப்பனே" என அழைத்து அவன் ஆலோசனைக்கு செவிகொடுத்துவந்தான் (வசனங்கள் 21, 22, 23), ஆனால் இப்போது அவன் சாகவேண்டுமென்று விரும்பினான். தீர்க்கதரிசியின் தலை, "இஸ்ரவேல் எல்லாவற்றிலும் மிகவும் குற்றமற்றதும் விலைமதிப்பற்றதுமாயிருந்தது,"[11] ஆனால் ராஜா அதை அவன் உடலில் இருந்த எடுத்துவிட தீர்மானித்திருந்தான்.

அநேகமாக, எல்லா ஆபத்துகளுக்கும் (எலியாவுக்கு அவனுடைய தகப்பனின் வார்த்தைகளை கவனியுங்கள் [1 இராஜாக்கள் 18:17]), ராஜா எலிசாவை பொறுப்பாளியாக்கியிருந்தான். எலிசாவின் அறிவுரைகள் தவறானவைகள் என்றும் அந்த அற்புதங்களைச் செய்யும் தீர்க்கதரிசி, அவன் செய்து கொண்டிருப்பவைகளைவிட அதிகமானவற்றைச் செய்திருக்க வேண்டும் எனவும் அவன் எதிர்பார்த்தானா? ராஜா உணர்ச்சிவசப்பட்டு, கையில் அகப்பட்ட இலக்குகளை தாக்கிக் கொண்டிருந்தானா? காரணம் எதுவாக இருந்தாலும், தேசத்தின் பிரச்சனைகளுக்கான பொருப்பை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, ராஜா கோபப்பட்டு, இன்னொருவர்மேல் பழிபோடுவதை சுலபமானதாக கருதினார்.

யோராம் ஒரு கொலைகாரனை கூப்பிட்டு அனுப்பினான். அவன் அந்த மனிதனிடத்தில் எலிசா சமாரியாவின் எங்கு வாழ்ந்தான் என்ற தகவலையும் அவனை கொலை செய்ய வேண்டும் என்ற கட்டளையும் கொடுத்தான் (2 இராஜாக்கள் 6:32ஆ). கொலைகாரன் புறப்பட்டு சென்றவுடனே வேலை சரியாக முடிவதை உறுதிசெய்வதற்கு ராஜா தானும் எலிசாவின் வீட்டிற்கு செல்ல

விரும்பினான் (வசனம் 32ஈ),[12] அவன் தன் அரச பிரதானிகளில் ஒருவனோடு சென்றான் (7:2).

அதே நேரத்தில், எலிசா தன் வீட்டில் "மூப்பர்களோடு" - பட்டணத்தின் தலைவர்களோடு பேசிக்கொண்டிருந்தான் (6:32அ). இந்த மனிதர்கள் அரசரோடு இல்லாமல், தீர்க்கதரிசியோடு இருந்தது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு காரியமாயிருக்கிறது. அநேகமாக, அவர்கள் ஆலோசனை அல்லது ஆறுதலை பெற முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒருவேளை ஒரு ஜெபக்கூட்டத்தில் கூட தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருந்திருக்கலாம்.

கர்த்தர், எலிசாவை ராஜாவின் கொலை முயற்சி திட்டத்தைக் குறித்து எச்சரித்தார். தீர்க்கதரிசி இந்த தெய்வீக அறிவுறுத்தலை மூப்பர்களுக்கு தெரியப்படுத்தினான்: அவன் "என் தலையை வாங்க, அந்த கொலைபாதகனுடைய மகன் ஆள் அனுப்பினான் பார்த்தீர்களா?" என்றான் (வசனம் 32இ). "இன்னாருடைய மகன்" என்ற வார்த்தையானது, "அந்த சுபாவம் உள்ளவனாக இருக்கிறான்'' என்பதை குறிப்பிடுவதற்கு வேதாகமத்தில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே "இந்த கொலைபாதகனுடைய மகன்" என்பது "இந்த கொலைகாரன்" என பொருள்படக்கூடும். எப்படியிருப்பினும், இந்த சம்பவத்தில் ராஜா தாமே கொலைபாதகனின் மகனாக *இருந்தார்*. அவனுடைய தகப்பனாகிய ஆகாப் நாபோத்தின் கொலையில் ஈடுபட்டிருந்தார் (காண்க 1 இராஜாக்கள் 21:8-14), மேலும், தேவனுடைய தீர்க்கதரிசிகள் பெருமளவில் கொலை செய்யப்பட்டதிலும் அவன் ஈடுபட்டிருந்தான் (காண்க 1 இராஜாக்கள் 18:13). யோராம், சுபாவத்திலும் வம்சவழியிலும் ஒரு "கொலைகாரனின் மகனாக" இருந்தான்.[13]

எலிசா மூப்பர்களை நோக்கி, "அந்த ஆள் வரும்போது, நீங்கள் அவனை உள்ளே வரவொட்டாமல் கதவைப்பூட்டிப்போடுங்கள்; அவனுக்குப் பின்னாக அவன் ஆண்டவனுடைய காலின் சத்தம் கேட்கிறது அல்லவா?" என்றான் (2 இராஜாக்கள் 6:32ஈ). ராஜா அங்கு வருகிறவரையில், கொலைகாரன் உள்ளே வருவதைத் தடுப்பதற்கு அவனுக்கு உதவி தேவைப்பட்டது. அதன்பின் அவன் ராஜாவோடு பேசி அவனை அமைதிபடுத்த முயற்சிப்பான்.

எலிசா பேசிக்கொண்டிருக்கையில், "கொலைகாரன்"[14] அங்கு வந்து சேர்ந்தான் (வசனம் 33அ), மூப்பர்களால் அவன் உள்ளேபோக நுழைவதை தடுக்க முடிந்தது ("நான் உள்ளே போக விடுங்கள்! நான் இங்கே ராஜாவின் வேலையாக வந்திருக்கிறேன்!" என்று கூறி அவன் வெளியில் இருந்து கதவை தட்டிய போது, வயதான அவர்கள் பயம் கலந்த உணர்வோடு உள்ளிருந்து கதவை அழுத்திப்பிடித்துக்கொள்வதை நான் காண்கிறேன்).

வசனம் 33இன் கடைசிப்பகுதி, "அந்த ஆள் அவனிடத்தில் வந்து: இதோ, இந்த பொல்லாப்பு கர்த்தரால் உண்டானது; நான் இனி கர்த்தருக்காகக் காத்திருக்க வேண்டியது என்ன?" என்று கூறுகிறது. இலக்கண விதிகளின்படி "அந்த ஆள்" என்பது அந்த செய்தியாளனை/கொலைகாரனைக் குறிக்கிறது. ஆனால் பெரும்பாலான எழுத்தாளர்கள் எலிசாவின் பதிலுரைப்பிலிருந்து அந்த வாக்கியங்கள் ராஜாவினுடையதாயிருந்தது என்று ஒத்துக்கொள்கிறார்கள் (காண்க 7:17ஆ, கவனிக்கவும் வசனம் 1, 2). மொழிபெயர்ப்பில் "இராஜா, இந்த பொல்லாப்பு கர்த்தரிடத்திலிருந்து வந்தது ... என்றான்'' என்றுள்ளது. CJB மொழிபெயர்ப்பில் "செய்தியாளன் இந்த செய்தியோடு ராஜாவிடமிருந்து

வந்தான் ...'' என்றுள்ளது.

யோராம் மற்றும் அவனுடைய பிரதானி ஆகியோர் அங்கு வந்து சேர்ந்த போது ஆட்சியாளரும் தீர்க்கதரிசியும் சுருக்கமாக பேசிக்கொண்டார்கள். ராஜா கோபமுடையவனாக இருந்தான். அவன் முகம் சிவந்து, கண்கள் விரிந்து அவன் முகநாடிநரம்புகள் துடிப்பதை நான் காண்கிறேன். "இந்த பொல்லாப்பு கர்த்தரால் உண்டானது; நான் இனி கர்த்தருக்காகக் காத்திருக்க வேண்டியது என்ன?'' என்று அவன் கத்திய போது அவன் குரலில் ஒரு கர்ஜனை இருந்தது. அவனுடைய குற்றச்சாட்டு இவ்விதமாக இருந்தது. "கர்த்தர் தான் [எங்கள் சொந்த பாவங்கள் அல்ல] எங்கள் பிரச்சனைகளுக்கு காரணமானவர்! எலிசாவே, கர்த்தர் எங்களை விடுவிப்பார் என்று நீ வாக்குறுதிக்கொடுத்தாய், ஆனால் காரியங்கள் மேம்படுவதற்கு பதிலாக, மிகவும் மோசமாகிவருகின்றன. நான் இதுவரை ஒரு பொறுமையான மனிதனாக இருந்தேன். ஆனால் நான் நீண்ட காலம் காத்திருந்துவிட்டேன்!''

ராஜா, அந்த சூழ்நிலை மற்றும் தீர்க்கதரிசியின் மேல் மிகவும் கோபம் கொண்டிருந்தான், ஆனால் அது ஒரு தலைவன் என்ற விதத்தில் எல்லா துயரங்களுக்கும் அவன் தான் காரணமாயிருந்தான் என்ற சத்தியத்தை மாற்றி அமைக்கவில்லை. பவுல் கலாத்தியர்களை நோக்கி, "நான் உங்களுக்குச் சத்தி யத்தைச் சொன்னதினாலே உங்களுக்கு சத்துருவானேனோ'' என கேட்டார் (கலாத்தியர் 4:16). கத்தோலிக்கத்திலிருந்து மனம்மாறி குணப்பட்ட ஜோ மெலோன் என்பவர் வெளிப்படையாக பேசக்கூடியவர். அவர் ஒரு குறிப்பிட்ட கடினமான கருத்தைக்கூறிய பின், "நான் உங்களுக்கு சத்தியத்தை கூறுவதால் - உங்கள் சத்துரு அல்ல'' என கூறுவார்!

சத்தியத்தை குறித்து சந்தேகப்படுவது சத்தியத்தை மாற்றுவதில்லை (7:1-6)

வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டன

ஆபத்து சூழ்ந்திருந்தது. எலிசா சூழ்நிலையை இலகுவாக்காவிட்டால், அவனுடைய தலை சீக்கிரமாக அவன் உடலை விட்டு எடுபட்டுவிடும். நீண்டகாலமல்ல - ஒரே ஒரு நாள் மட்டும் காத்திருந்தால் போதும் - தேவன் காரியத்தை *மாற்றிவிடுவார்* என்ற உறுதியை எலிசா உடனே ராஜாவுக்கு கொடுத்தார். தீர்க்கதரிசி அதை பின்வருமாறு கூறினார்: "கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; நாளை இந்நேரத்தில் சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' என்றான் (வசனம் 1). "ஒரு மரக்கால் கோதுமை மா'' என்பது ஏறக்குறைய ஆறு ராத்தலைக்குறிக்கும். "இரண்டு மரக்கால் வாற்கோதுமை'' என்பது அரை புஷெல் அளவை (4 காலன்) குறிக்கும். குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் பட்டணம் முற்றுகை இடப்படுவதற்கு முன்பு இருந்த விலையை விட சற்று கூடுதலானதாக இருந்தது. எலிசா ஆறுராத்தல் மெல்லிய கோதுமை மா என்ன விலைக்கு விற்கப்படும் என்று எலிசா கூறினாரோ, அதைவிட *எட்டுமடங்கு* அதிக விலைக்கு ஒரு கழுதை தலை தற்போது விற்பனையாகிக் கொண்டிருந்தது

(6:25; 7:1)! தீர்க்கதரிசியின் கூற்றுப்படி நடப்புச் சூழ்நிலையில், இந்த தத்துரூப மான மாற்றம் ஒரு இருபத்திநான்கு மணி நேரத்தில் நடைபெறும்!

இது ஒரு ஆச்சரியமான தீர்க்கதரிசனம், ஒரு தைரியமான முன்னுரைப்பு. எதிரி இன்னமும் பட்டணத்தை முற்றுகை போட்டுள்ளான்; பட்டினியால் வாடின குழந்தைகள் உணவுக்காக கதறிக்கொண்டிருந்தன. ஒரு மனிதன் கண்ணோக்கிப்பார்க்கும் போது, எலிசாவின் வார்த்தைகள் நிறைவேறுவதற்கு எந்த ஒரு வழியும் இருக்கவில்லை. பர்ட்டன் கேப்மேன் என்பவர், "நிறைவேறுவதற்கு சாத்தியமே இல்லாத ஒரு தீர்க்கதரிசனம் எப்போதாவது இருந்ததென்றால், அது இதுவாகத்தான் இருக்கவேண்டும்" என எழுதினார்![15]

ராஜாவுடன் வந்திருந்த பிரதானி, "இதோ, கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும் இப்படி நடக்குமா?" என பரிகாசம் செய்தான் (7:2ஆ). அவனுடைய வார்த்தையை விரித்து கூறியிருந்தால், "தேவன் நோவாவின் நாட்களில் செய்தது போல், [ஒப்பிடுக ஆதியாகமம் 7:11] வானத்தின் மதகுகளை திறந்து, மழைக்கு பதிலாக தானியத்தை கீழே கொட்டினாலும், இப்படி ஒரு காரியம் நடக்காது!" என இருந்திருக்கும். மனிதன் தன் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் இது ஒன்றாக இருக்கிறது. பிரதானியானவன், தீர்க்கதரிசியின் வார்த்தைகள் எப்படி நிறைவேறும் என தர்க்கித்தது மட்டுமல்லாமல், தேவனுடைய வல்லமையை குறித்த சந்தேகத்தையும் தெரியப்படுத்தக் கூடியவனாக இருந்தான். "தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே!" என இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தைகள் இந்த மனிதனுக்கு பொருந்தக்கூடும் (லூக்கா 24:45).

எலிசா சந்தேகப்பட்ட அந்த மனிதனை நோக்கி, "உன்னுடைய கண்களினாலே அதை காண்பாய்; ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய்" என்றான் (2 இராஜாக்கள் 7:2ஆ) - "நிறைவேறுவதற்கு கடினமாய் காணப்பட்ட ... வேறு ஒரு தீர்க்கதரிசனமாக ... இது இருந்தது."[16] அந்த சந்தர்ப்பத்தில், ராஜாவும் பிரதானியும் அங்கிருந்து சென்றிருக்க வேண்டும். ராஜா சந்தேகப்படக்கூடியவனாக இருந்தான், ஆனாலும் என்ன நடக்கப்போகிறதென்பதை பார்க்க அவன் ஒரு நாள் காத்திருக்க விரும்பினான். பிரதானி, "காண்பேன், சாப்பிடமாட்டேனா ... காண்பேன், ஆனால் சாப்பிட மாட்டேனா ... இந்த கிறுக்கு கிழவன் என்ன தான் சொல்கிறான்? ஒன்றும் விளங்கவில்லையே" என முணுமுணுப்பதை நான் பார்க்கிறேன்.

வாக்குறுதிகள் நிறைவேறின

எலிசாவின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுவது எப்படி சாத்தியமா யிருக்கும்? எஞ்சியுள்ள கதை அதைத் தான் விவரிக்கிறது. வசனம் 3இன் காட்சி சமாரியா பட்டணத்தின் வாசலுக்கு வெளியே மாற்றியமைக்கப்படுகிறது. "குஷ்டரோகிகளான நாலுபேர் ஒலிமுக வாசலில் இருந்தார்கள்; அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன?" என பேசிக்கொண்டார்கள் (வசனம் 3). இறுதியாக, அவர்கள் எதிரியின் இரக்கத்தை நாடுவது என தீர்மானித்தார்கள் (வசனம் 4). அவர்கள் எதிரியின் முகாமுக்கு சென்றார்கள், ஆனால் அவர்கள் ஆச்சரியப்படத்தக்கதாக அது வெறுமை யாயிருக்கக் கண்டார்கள் (வசனம் 5).

> ஆண்டவர் சீரியரின் இராணுவத்திற்கு இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப் பண்ணினதினால், அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: "இதோ, நம்மிடத்தில் போருக்கு வர, இஸ்ரவேலின் ராஜா ஏத்தியரின் ராஜாக்களையும் எகிப்தியரின் ராஜாக்களையும் நமக்கு விரோதமாகக் கூலி பொருத்தினான் ..." (வசனம் 6).

சீரியா இராணுவத்தினர் எல்லாவற்றையும் விட்டு, தப்பி ஓடிப்போனார்கள் (வசனம் 7). குஷ்டரோகிகள் ஆள் அரவமில்லாத முகாமை கண்டபோது அதிக சந்தோஷப்பட்டார்கள். அவர்கள் புசித்து திருப்தியடைந்து, பாளையத்தை கொள்ளையிட துவங்கினார்கள் (வசனம் 8). பின்பு, அவர்கள் மனசாட்சியில் உணர்த்தப்பட்டு (வசனம் 9), வாயிற்காவலர்களிடத்தில்போய் எதிரிகள் வெளியேறிப்போயிருந்தார்கள் என்பதை அறிவித்தார்கள் (வசனம் 10). செய்தி ராஜாவுக்கு எட்டியது (வசனம் 11). முதலில் அவன் நம்பவில்லை (வசனம் 12); ஆனால் அவன் அது உண்மையாய் நடந்தது என்பதை உறுதிசெய்து கொண்டான்; எதிரி ஓடிப்போய்விட்டான் (வசனங்கள் 13-15)!

செய்தி வேகமாய் பரவியது மற்றும் வாயிற்கதவுகள் திறக்கப்பட்டன. மக்கள் பட்டணத்திற்கு வெளியே வெள்ளமென திரண்டு, முகாமை கொள்ளையிட்டார்கள் (வசனம் 16அ). எலிசா கூறியபடியே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும் அளவிற்கு முகாமில் பொருட்கள் விட்டுச் செல்லப் பட்டிருந்தன (வசனம் 16ஆ).

சந்தேகப்பட்ட அந்த பிரதானி விலைமலிவான உணவை காண்பான், ஆனால் அதை உண்ணமாட்டான் என்பது பற்றிய தீர்க்கதரிசனத்தைப் பற்றி என்ன? எதிரி இராணுவ முகாமை விட்டு ஓடி போயிருந்ததை மக்கள் கேள்விப்பட்டுள்ள நிலையில், கட்டுங்கடங்காத கூட்டம் அங்கு கூடும் என்பதை ராஜா எதிர்பார்த்தார். ஆகவே, ராஜா "அந்தப் பிரதானியை ... ஒலிமுகவாசலில் விசாரிப்பாயிருக்கக் கட்டளையிட்டிருந்தான்" (வசனம் 17அ). அந்த பிரதானி இதை ஒரு பெருமைக்குரியதாக கருதினான். அங்கே அவன் தன்னுடைய ஜொலிக்கிற கச்சைகளை கட்டிக்கொண்டு, நுழைவாயிலில் நின்று கொண்டு, தன் கையை உயர்த்தி, "ஒழுங்கை கடைப்பிடியுங்கள், ஓடவேண்டாம், நடந்து செல்லுங்கள்" என கூறுவதை நான் காட்சிப்படுத்துகிறேன். அவன் தன் குரலை உயர்த்தி: "ஒழுங்காகச் செல்லுங்கள்! அவசரமாக ஓடவேண்டிய அவசியமில்லை! எல்லாருக்கும் போதுமான உணவுப் பொருள் கிடைக்கும்!" என கூறுவதை நான் கேட்கிறேன். மக்கள் முண்டியடித்து அவனை மிதித்துக்கொண்டு சென்றபோது, அவன் மூர்க்கமாக கைகளை அசைத்து பதட்டத்தில், "வரிசையாக! வரிசையாக! வரி ..." என கூறுவதை நான் கேட்கிறேன். "ஒலிமுகவாசலிலே ஜனங்கள் அவனை நெருங்கி மிதித்ததினாலே ..." என்று வசனம் கூறுகிறது (வசனம் 17ஆ). தீ விபத்து மற்றும் இதர ஆபத்துக்களின்போது மக்கள் மோதியடித்துக்கொண்டு ஓடுவது தொடர்பான செய்திகளை நான் கேள்விப்பட்டுள்ளேன்.

இப்படியாக "... ராஜா தேவனுடைய மனுஷனிடத்தில் வந்தபோது சொல் லியிருந்தபடியே, அவன் செத்துப்போனான்" (வசனம் 17இ). "தேவனுடைய மனுஷன் ... சொல்லியிருந்தபடியே" என்ற வார்த்தைகளை அடிக்கோடிடுங்கள்.

சந்தேகப்பட்டவன் உணவைக் காண்பான், ஆனால், அதை புசிக்கமாட்டான் என எலிசா கூறியிருந்தார், அது துல்லியமாக அப்படியே நடந்தது. சத்தியத்தைக் குறித்து சந்தேகப்படுவது, சத்தியத்தை மாற்றியமைப்பதில்லை; அது இன்னமும் சத்தியமாகவேயிருக்கிறது.

சிலர் சத்தியத்திற்கு கீழ்ப்படிவதை காட்டிலும், அதைக் குறித்து ஏளனம் செய்வது சுலபமாயிருப்பதாக காண்கிறார்கள். வேதாகமம், இஸ்ரவேலர்கள் ஏன் பாபிலோனிய அடிமைத்தனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள் என்பதை பற்றி கூறும்போது, "ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாதிபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டை செய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின் மேல் மூண்டது; சகாயமில்லாமல் போயிற்று" என கூறியது (2 நாளாகமம் 36:16). புதிய ஏற்பாட்டில், பேதுரு, "... கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து ..." என எழுதினார் (2 பேதுரு 3:3). சந்தேகப் பேர்வழிகள், உயிர்த்தெழுதல் துவங்கி (காண்க நடபடிகள் 17:32), கர்த்தருடைய இரண்டாம் வருகைவரை உள்ள ஒவ்வொரு வேதாகம சத்தியங்களையும் பரியாசம் செய்திருக்கிறார்கள் (காண்க 2 பேதுரு 3:3, 4).[17]

தேவனுடைய வார்த்தைகளை பரியாசம் செய்கிறவர்கள். தங்களை புத்தி சாலிகள் என கருதுகிறார்கள், ஆனால் வேதாகமம் அவர்களை "மதிகேடர்கள்" என அழைக்கிறது (காண்க நீதிமொழிகள் 14:9). சந்தேகப்படுகிறவர்களின் உறுதியற்ற தன்மையை குறித்து யாக்கோபு, "... சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்" என எழுதினார் (யாக்கோபு 1:6ஆ). முடிவில், தேவனானவர் பரியாசக்காரர்களை பரியாசம் பண்ணுவார் (காண்க நீதிமொழிகள் 3:34). ஒருவன் தேவன் மற்றும் அவருடைய வார்த்தைகளை பரியாசம் செய்து விட்டு, அதன் பின்விளைவுகளை அனுபவிக்காமல் தப்பிக்கொள்ள இயலாது (காண்க கலாத்தியர் 6:7, 8)!

வேதாகமம் ஒரு சத்தியத்தை போதிக்கும்போது, அதை *விசுவாசியுங்கள்* நீங்கள் அதை முழுமையாக புரிந்து கொள்ளாவிட்டாலும், அதை விசுவாசியுங்கள். மனித ஆய்வறிவுக்கு அது எதிராக செல்லக்கூடியதாக காணப்பட்டாலும், அதை விசுவாசியுங்கள் (காண்க ஏசாயா 55:8, 9). சத்தி யத்தை குறித்து சந்தேகப்படுவது, சத்தியத்தை ஒருபோதும் மாற்றியமைப் பதில்லை; அது தொடர்ந்து சத்தியமாகவே இருக்கிறது.

"சத்தியம் சத்தியமாக, சத்தியமாக சத்தியமாகவே இருக்கிறது" (7:18-20)

இங்கே கதை முடிந்துவிடுவது போல தோன்றலாம், ஆனால் ஏவப்பட்ட எழுத்தாளர் இன்னமும் அதை முடிக்கவில்லை.

> "இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், நாளை இந்நேரத்திலே சமாரியாவின் ஒலிமுகவாசலில் விற்கும் என்று தேவனுடைய மனுஷன் ராஜாவோடே சொன்னதின்படியே நடந்தது" அதற்கு அந்த பிரதானி தேவனுடைய மனுஷனுக்கு பிரதியுத்தரமாக: "இதோ, கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும், இந்த வார்த்தையின்படி நடக்குமா என்று சொல்ல;"

> இவன், "இதோ, உன்னுடைய கண்களினாலே அதை காண்பாய், ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றானே." அந்தப் பிரகாரம்தானே அவனுக்கு நடந்தது; ஒலிமுகவாசலிலே ஜனங்கள் அவனை நெருங்கி மிதித்ததினாலே அவன் செத்துப்போனான் (வசனங்கள் 18-20).

முகவுரையில் குறிப்பிட்டபடி, வாசகர்கள் இந்த கதையின் மையகருத்தை பெற தவறிவிடக்கூடாது என எழுத்தாளர் விரும்பினார். ஆகவே, அதின் உச்சக்கட்ட காட்சியை திரும்ப கூறியுள்ளார் (ஒப்பிடுக வசனங்கள் 16, 18). இதில் கவனிக்க வேண்டிய மிகவும் முக்கியமான வார்த்தைகள் "தேவனுடைய மனுஷன் ... சொல்லியிருந்தபடியே அவன் செத்துப்போனான்" (வசனம் 18; காண்க வசனம் 17இ). ஒரு தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தையை பேசுகிறாரா அல்லது அவர் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியா என்பது அவர் உரைத்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுகிறதா இல்லையா என்பதின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது (உபாகமம் 18:21, 22). எலிசாவின் தீர்க்கதரிசனங்கள் துல்லியமாக நிறைவேறின. தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை விசுவாசிப்பது ராஜாவுக்கு கடினமாக காணப்பட்டது - மற்றும் - பிரதானி அவைகளை பரியாசம் செய்தான் - இருப்பினும் அவைகள் துல்லியமாக நிறைவேறின.

ஒரு கவிஞர் ஒரு சமயம், "ரோஜா மலர் ஒரு ரோஜா மலராக ஒரு ரோஜா மலராகத்தான் இருக்கிறது" என எழுதினார்.[18] இந்த வார்த்தைகளிலிருந்து நாம் எந்த கருத்தையும் பெறாவிட்டாலும், ஒரு ரோஜாமலர், ரோஜாமலராகவே இருக்கிறது என்ற உண்மை நமக்கு சரியாகப்படுகிறது. கவிஞரின் வார்த்தைகளை நம்முடைய தலைப்புக்கு பொருத்தி, "சத்தியம் சத்தியமாக, சத்தியமாக சத்தியமாகவே இருக்கிறது" என நாம் கூறலாம். அறிவீனம் அதை அசட்டை செய்யலாம், கோபம் அதை வெறுத்து ஒதுக்கலாம், சந்தேகம் அதை ஏளனம் செய்யலாம் - ஆனால் சத்தியம் இன்னமும் சத்தியமாகவே இருக்கிறது! சத்தியம் சூரிய வெளிச்சத்தை போன்றது: ஒரு மேகம் அதை மறைக்கலாம். இரவு அது இல்லாமல் போய்விட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தலாம், ஒரு விழியற்றவரால் அதை பார்க்க முடியாது - ஆனால் அது இன்னமும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, ஏனெனில் சூரிய வெளிச்சம் எப்போதும் சூரிய வெளிச்சமாகவே இருக்கிறது.

ஒரு விரும்பத்தகாத குணாதிசயத்தையுடையவனாயிருந்த பிலேயாம் ஒரு முறை சத்தியத்தை பேசினான்: "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண்ணாகமம் 23:19). தேவனானவர் தமது வார்த்தையில் எதையாவது சொல்லும்போது, அதை விசுவாசியுங்கள். சத்தியத்தை விசுவாசித்திருந்தால், அது சிறப்பானதாக இருந்திருக்கும் என்பதை பிரதானி கண்டுபிடித்ததுபோல, அதை விசுவாசியுங்கள் - ஏனெனில் "சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது, சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது."

முடிவுரை

இந்தப் பாடத்தொடரின் இரண்டாவது பகுதியில் எலியாவின் செய்தி இரண்டு மடங்காக இருந்தது என்பதை வலியுறுத்திக் கூறியிருந்தோம்:

- தேவன், அவருடைய செய்தியாளர் மற்றும் அவருடைய செய்தியை மதித்து நட - நீ ஆசீர்வதிக்கப்படுவாய்.
- தேவன், அவருடைய செய்தியாளர் மற்றும் அவருடைய செய்தியை மதித்து நடக்க தவறினால் - நீ சபிக்கப்படுவாய்.

இந்தப் பாடத்தில், செய்தியின் இரண்டாம் பகுதியாக தேவன் மற்றும் அவருடைய செய்தியாளரை மதிக்க தவறினால் ஏற்படும் பின்விளைவுகளின் தெளிவான மற்றும் பயங்கரமான செயல்விளைவைப் பார்த்தோம். நாம் இதை சமாரிய குடிமக்கள் அனுபவித்த துன்பங்களில் பொதுவாகவும், எலிசாவின் வார்த்தைகளை ஏளனம் செய்த பிரதானிக்கு ஏற்பட்ட சோகமுடிவில் குறிப்பாகவும் பார்த்தோம். இந்தப் பாடத்தை நாம் நிறைவு செய்கிற வேளையில், தேவனுடைய வசனத்தின் சத்தியத்தைப் பொருத்தவரையில், *உங்கள்* நிலைப்பாடு என்ன என்பதை உங்களை *நீங்களே* வினவிக்கொள்ளுங்கள்: நீங்கள் தேவனுடைய வசனத்தை மதிக்கிறீர்களா, அதை விசுவாசிக்கிறீர்களா மற்றும் அதற்கு கீழ்ப்படிகிறீர்களா? அல்லது தேவனுடைய வசனத்தை மதிக்காதிருக்கிறீர்களா, அதை ஏளனம் செய்கிறீர்களா மற்றும் அதற்கு கீழ்ப்படிய தவறுகிறீர்களா? ஒரு புத்திமான் மற்றவர்களுடைய அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்கிறான். சமாரியா முற்றுகையின் கீழ் இருப்பதை கவனியுங்கள் மற்றும் இப்போதே மனந்திரும்பி தேவனிடம் வர தீர்மானியுங்கள்!

குறிப்புகள்

[1]W. J. Deane and S. T. Taylor - Taswell, "Proverbs," *The Pulpit Commentary,* vol. 9, *Proverbs, Ecclesiastes, Song of Solomon,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 443. [2]Josephus *Antiquities* 9.4.4. [3]இந்த தகவல் என்னுடைய NIV மொழிபெயர்ப்பின் அடிக்குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது. நீங்கள் உங்கள் பகுதியில் விலையுயர்ந்த உலோககங்களை கையாளுகிறவர்களிடத்திலிருந்து வெள்ளியின் தற்கால மதிப்பைத் தெரிந்து கொள்ளலாம். [4]இந்த தகவல் என்னுடைய NASB மொழிபெயர்ப்பு வேதாகமத்தின் அடிக்குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது. [5]Josephus *Wars* 5.13.7. [6]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 328. புறாக் கழிவுகளுக்கான இதர சாத்தியக் கூறுகள் ஆலோசிக்கப்படுகின்றன. விலங்கு கழிவுகளில் பொதுவாக சீரணிக்காத சில உணவுப் பகுதிகள் உள்ளன. ஒருவேளை அதை தோண்டிப் பார்த்து அந்த உபயோகமான பகுதிகளை கண்டுபிடிப்பது நோக்கமாக இருக்கலாம் அல்லது கழிவுகள் எரிபொருளாக உபயோகிக்க விலைக்கு வாங்கப்பட்டது. [7]இந்த அவபக்தியானப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னரே, அந்த இரண்டு பிள்ளைகளும் ஊட்டச்சத்து குறைவால் இறந்து போயிருக்க வாய்ப்பு இருந்தது, இருப்பினும் அது திகிலூட்டக்கூடிய கதையாக இருக்கிறது. [8]Josephus *Wars* 6.3.4. [9]ஆஸ்திரேலியாவில் இந்த வகை பொருள் "கெசியன்" என அழைக்கப்படுகிறது. நமது பகுதியில் இது சணல் பை அல்லது கோனிப் பை என அழைக்கப்படுகிறது. [10]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1 and 2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eermans Publishing Co., 1950), 125.

[11]Matthew Henry, *Commentary on the Whole Bible,* ed. Leslie F. Church (Grand Rapids,

Mich.: Zondervan Publishing House, 1961), 408. [12]*யோராம் தன் மனதை மாற்றிக்கொண்டு, கொலைகாரனுக்கு கொடுத்த உத்தரவை மாற்றியமைக்க அவன் பிறகே விரைந்து சென்றான் என பல எழுத்தாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் ராஜாவின் இருதயத்தில் எந்த மாற்றமும் ஏற்பட்டதற்கான எந்த அறிகுறியையும் நான் காணவில்லை. யோராமின் இருதயத்தை அறிந்திருந்த எலிசா ராஜா தன் வீட்டை நெருங்கி வருகையில் அவனை "அந்த கொலைபாதகனுடைய மகன்" என அழைத்தார் (2 இராஜாக்கள் 6:32).* [13]Keil and Delitzsch, 329. [14]*பல மொழிபெயர்ப்புகளில் "செய்தியாளர்" என்பதற்கு பதிலாக "ராஜா" என்றுள்ளது (காண்க* RSV; REB; NLT; TEV*) "செய்தியாளர்" மற்றும் "ராஜாவை" குறிப்பதற்கான எபிரேய வார்த்தை ஒரேவிதமாக இருக்கிறது.* [15]James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings,* James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 87. [16]Ibid., 88. [17]*நீங்கள் வாழும் பகுதியில் எந்த வேதாகம சத்தியங்களை மக்கள் ஏளனம் செய்கிறார்களோ மற்றும் சந்தேகிக்கிறார்களோ, அவைகளை பயன்படுத்தவும்.* [18]Gertrude Stein (1874-1946), *Sacred Emily* (1913); quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations,* 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 627.

16

நற்செய்தியைப் பகிர்ந்து கொண்ட மனிதர்கள்

[2 இராஜாக்கள் 7:3–16]

நமது முந்திய பாடம் சீரியர்கள் சமாரியாவை முற்றுகையிட்டதை சுற்றி அமைந்திருந்தது. உணவு பற்றாக்குறை ஏற்பட்டபடியால், பட்டணத்தில் இருந்த மக்கள் மிகவும் நம்பிக்கையற்றவர்களாக மாறினார்கள். போஷாக்கை பெறும்படியான அவர்களுடைய தீவிர முயற்சியில், அவர்கள் தேவன் மற்றும் இயற்கைக்கு எதிராக பாவம் செய்தார்கள்.

பட்டினிகிடந்தவர்களில் நான்கு தொழுநோயாளிகள் இருந்தனர். இந்த பாடம் அந்த நான்கு நபர்களின்மேல் கவனம் செலுத்துகிறது. நான் அவர்களை, "நற்செய்தியை பகிர்ந்து கொண்ட மனிதர்கள்" என அழைக்கிறேன். அவர்களுடைய கதையை நாம் மீள்பார்வையிடும் போது, நாம் எனக்கும் உங்களுக்கும் நற்செய்தியை அறிவிப்பதில் உள்ள பொருப்பினை வலியுறுத்துவோம்.

அப்போதைய நற்செய்தி (7:3-16)

அவர்களுக்கான நற்செய்தி

"குஷ்டரோகிகளான நாலுபேர்[1] ஒலிமுகவாசலில் இருந்தார்கள்" (வசனம் 3அ). நாகமானைப் பற்றிய நமது பாடத்தில், பயங்கரமான வியாதியாகிய குஷ்டரோகத்தை குறித்து நாம் விவாதித்தோம். இஸ்ரவேல் தேசத்தில், குஷ்டரோகிகள் பட்டணங்கள் மற்றும் நகரங்களுக்குள் அனுமதிக்கப்பட வில்லை (காண்க லேவியராகமம் 13:46; எண்ணாகமம் 5:2, 3). இந்த நான்கு பேரும் பட்டணத்தின் நுழைவு வாயிலுக்கு அருகாமையில், அவ்வழியாக வந்து போகிறவர்கள் ஏதாவது உணவு துண்டுகளை தங்கள் பக்கம் வீசி எறிவார்கள் என்ற நம்பிக்கையோடு நெருக்கமாய் தங்கிருந்தார்கள். இருப்பினும், இவ்விதம் பகிர்ந்து கொள்வதற்கான உணவு கூட இப்போது இருக்கவில்லை. பட்டணத் திற்கு உள் இருந்தவர்களைப்போல, இந்த குஷ்டரோகிகளும் பட்டினியால் மடிந்து கொண்டிருந்தார்கள்.

இந்த நால்வரும் ஒரு ஆலோசனை செய்தார்கள்: "இங்கே இருந்து சாக வேண்டியது என்ன?" (2 இராஜாக்கள் 7:3ஆ). அவர் *ஏதாவது* செய்ய வேண்டியிருந்தது, அதை *சீக்கிரமாக* செய்ய வேண்டியிருந்தது. " 'பட்டணத்திற்குள் போவோமென்றாலும் பட்டணத்தில்' பஞ்சம் உண்டாயிருக்கிறதினால் அங்கே சாவோம்" (வசனம் 4அ). அவர்கள் ஒருவழியாக பட்டணத்திற்குள் பிரவேசித்தாலும், அவர்களுடைய சூழ்நிலை

மேம்படப்போவதில்லை. இருப்பினும், "நாம் இங்கே இருந்தாலும் சாவோம்" (வசனம் 4ஆ).

முடிவாக, "ஆகையால், இப்போது சீரியருடைய இராணுவத்துக்குப் போவோம் வாருங்கள்; அவர்கள் நம்மை உயிரோடே வைத்தால் பிழைக்கிறோம்; நம்மை கொன்றால் சாகிறோம் ..." என்று தீர்மானித்தார்கள் (வசனம் 4இ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "அவர்கள் நமக்கு செய்ய சாத்தியமான மிக மோசமான காரியம் நம்மை கொல்வதாக இருக்கும், மேலும் எப்படி இருந்தாலும் நாம் சாகத்தான் போகிறோம். பட்டினியால் மெல்ல மெல்ல சாவதைக் காட்டிலும் பட்டயத்தால் உடனே சாவது விரும்பித் தெரிந்தெடுக்கப்படுவதாக இருக்கிறது. மேலும் யாருக்கு தெரியும்? அவர்கள் ஒருவேளை நம்மை போர் கைதிகளாக வைத்து நமக்கு உணவளிக்கலாம்."

இப்படியாக, "சீரியருடைய இராணுவத்திற்குப் போக இருட்டோடே எழுந்திருந்து ..." (வசனம் 5அ). அவர்கள் ஏன் இருட்டோடே போனார்கள் என்பது பற்றி எழுத்தாளர்கள் பல்வேறு விதமாக யூகிக்கிறார்கள். அதற்கான பதில் சுலபமானது. அவர்கள் முடிவெடுத்தவுடனே, செயல்படத் துவங்கினார்கள்.

குஷ்டரோகிகள் பட்டணத்து வாசலை விட்டு சென்றபோது பயத்தோடு சென்றார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள், "யார் அங்கே! நில்லுங்கள்?" என்ற சத்தத்தை எந்த நேரத்திலும் கேட்கக்கூடும் என எதிர்பார்த்திருக்கலாம். அவர்கள் தரையில் முகங்குப்புற விழுந்து இரக்கத்திற்காக கெஞ்ச ஆயத்தமாயிருந்தார்கள்.

அவர்கள் முகாமை நோக்கி நெருங்குகையில், முகாமிலிருந்து குழப்பமான சத்தங்களை அவர்களால் கேட்க முடிந்தது (காண்க வசனம் 7அ); ஆனால் அவர்கள் அந்த இடத்தை அடைந்தபோது, அங்கே அமைதி நிலவியது (காண்க வசனம் 10). "சீரியருடைய பாளையத்தின் முன்னணியில்[2] வந்தார்கள்; அங்கே ஒருவருமில்லை" (வசனம் 5ஆ). அவர்கள் இருளில் அங்கும் இங்கும் உற்றுநோக்குவதை கவனியுங்கள். குஷ்டரோகிகள், பிற்பாடு ராஜா நினைத்ததுபோல (காண்க வசனம் 12), இது தங்களைப் பிடிப்பதற்கான ஒரு கண்ணி என நினைத்தார்கள்; ஆனால் உண்மையில் அங்கே ஒருவரும் இருக்கவில்லை. முகாம் கைவிடப்பட்டிருந்தது.

"ஆண்டவர் சீரியரின் இராணுவத்திற்கு இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப்பண்ணினதினால் ..." (வசனம் 6அ). சில விளக்கவுரையாளர்கள் கர்த்தர் இதை *எப்படி* செய்தார் என்பதை விளக்குவது தங்கள் கடமை என நினைத்தார்கள். சிலர், இது ஒரு இயற்கையான நிகழ்வு என்று "விளக்குவதற்கு" முயற்சித்தார்கள். விசுவாசிகளை பொருத்தவரை, தேவன் சீரியர் இந்த இரச்சலைக் கேட்கும்படி செய்தார் என்பதை அறிந்து கொள்வது போதுமானதாக இருக்கிறது. "கர்த்தர் மோவாபியர்களை ஒரு காட்சியின் அற்புதத்தால் தோற்கடித்திருந்தார் [2 இராஜாக்கள் 3:20-23] மற்றும் அவர் இப்போது சீரியரை ஒரு இரைச்சலின் தொனியின் அற்புதத்தால் தோற்கடித்தார்."[3]

இராணுவ வீரர்கள் இந்த இரைச்சலைக் கேட்டபோது, "இதோ, நம்மிடத்தில் போருக்கு வர, இஸ்ரவேலின் ராஜா ஏத்தியரின் இராஜாக்களையும் எகிப்தியரின்[4] இராஜாக்களையும் நமக்கு விரோதமாகக் கூலி பொருத்தினான் ..." (வசனம் 6ஆ). "ஏத்தியர்கள்" என்பவர்கள் வடக்கு ஆராமிலிருந்த நகர

நாடுகளின் குடிமக்களாயிருந்தார்கள். இவர்கள் ஏத்திய பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் எழுந்தவர்களாயிருந்தார்கள்.[5] *இஸ்ரவேலின் ராஜா, வடக்கிலிருந்து தங்களை தாக்குவதற்கு ஏத்தியரையும், தெற்கிலிருந்து தங்களை தாக்குவதற்கு எகிப்தியரையும் கூலி பொருத்தினான் என்ற முடிவுக்கு சீரியர்கள் வந்தார்கள்.*

திகிலினால் நிறைந்தவர்களாக, போர் வீரர்கள், "இருட்டோடே எழுந்திருந்து ஓடிப்போய் [குஷ்டரோகிகள் பட்டணத்திலிருந்த புறப்பட்ட அதே நேரத்தில்], தங்கள் கூடாரங்களையும் தங்கள் குதிரைகளையும் தங்கள் கழுதைகளையும் தங்கள் பாளையத்தையும் அவைகள் இருந்த பிரகாரமாக விட்டு, தங்கள் பிராணன் மாத்திரம் தப்பும்படி ஓடிப்போனார்கள்" (வசனம் 7). அவர்கள் குதிரைகளின் மேல் ஏறி வேகமாய் தப்புவது சாத்தியமாயிருந்த போதிலும், அவைகளையும் விட்டு விட்டு ஓடிபோனார்கள் என்பது அவர்கள் எந்த அளவு பயத்தில் உரைந்து போயிருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

குஷ்டரோகிகள் எச்சரிக்கையோடு பாளையத்தினுள் நுழைந்தார்கள் (வசனம் 8அ). அவர்கள் அநேகமாக அங்கே எரிந்து கொண்டிருந்த இரவு நெருப்பையும், விலங்குகள் கட்டப்பட்டிருந்ததையும் கண்டார்கள் (காண்க வசனம் 10), ஆனால் மனிதர் எவரையும் காணவில்லை. கூடாரத்திற்குள் எட்டிப்பார்த்து, ஆயத்தப்படுத்தப்பட்ட, ஆனால் உண்ணப்படாத உணவைக்கண்டார்கள்! அவர்கள் "புசித்துக் குடித்தார்கள்" (வசனம் 8ஆ); உணவு ஒருபோதும் இதுபோல் சுவையாக இருந்ததில்லை! பின்பு, அவர்கள் வெள்ளி, பொன் மற்றும் வஸ்திரங்களை கண்டு, எடுத்துக்கொண்டுபோய் இருளில் ஒரு இடத்தில் ஒழித்துவைத்தார்கள். அவர்கள் ஒவ்வொரு கூடாரமாக சென்று கொள்ளையிட்டார்கள் (வசனம் 8இ). அவர்கள் இனிமேலும் பிச்சைக்காரர்கள் அல்லை; இப்போது அவர்கள் செல்வந்தர்கள்!

மற்றவர்களுக்கான நற்செய்தி

நீண்ட நேரங்கழித்து, ஒருவழியாக அவர்கள் மனச்சாட்சி அவர்களை உணர்த்தியது. அவர்கள் மற்றொரு ஆலோசனை கூட்டம் நடத்தினார்கள். "பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து ..." (வசனம் 9அ). அங்கே அவர்கள் தேவைக்கு தக்கதாகவும் தேவைக்கு அதிகமாகவும் உணவைப் பெற்றிருந்தார்கள், ஆனால் பட்டணத்திற்குள் மக்கள் இன்னமும் பட்டினியால் வாடிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய விவாதத்தில் ஒரு நடைமுறை குறிப்பு அறிமுகம் செய்யப்பட்டது: "பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம் மேல் சுமரும் ..." (வசனம் 9ஆ). இது ஒரு நல்ல முடிவாயிருந்தது. பொழுது புலரும்போது, காவலாளிகள் எதிரிகள் போய்விட்டதை அறிந்து கொள்வார்கள். குஷ்டரோகிகள் இந்த செய்தியை தங்களோடு வைத்துக்கொண்டார்கள் என்பதை மக்கள் அறிந்து கொள்வார்கள். தேவனிடத்திலிருந்து, ராஜாவிடத்திலிருந்து மற்றும் மக்களிடத்திலிருந்து வரும் தண்டனையைத் தவிர்க்க முடியாததாயிருந்தது.

நீண்ட காலத்திற்கு முன்னர், பின்வரும் விதத்தில் அமைந்திருந்த ஒரு பழங்காலத்து கதை ஒன்றை வாசித்தேன்: தனது அயலகத்தாருக்கு பயன்படக்கூடிய ஒரு நன்மையான காரியத்தை அறிந்து, அதை அவருக்கு

மறைத்து வைத்தால், அந்த மனிதன் திருட்டு குற்றமுடையவனாக இருப்பான். உதாரணமாக, ஒரு மனிதன் தன் அயலகத்தாருக்கு அவருடைய குடும்பத்திற்காக உணவு தேவைப்படுகிறது என்பதை அறிந்திருக்கிறார். தன் அயலகத்தார் எங்கே இலவசமாக ஒரு மூட்டை உணவைப் பெற முடியும் என்பதையும் அவர் அறிந்திருந்தும், அதை அவருக்கு தெரிவிக்க தவறிவிட்டார் என வைத்துக்கொள்வோம். அந்த சூழ்நிலையில், அவர் தன் அயலகத்தாரின் வீட்டிற்குள் சென்று, ஒரு சாக்கு மாவை திருடி வந்துவிட்ட குற்றத்திற்கு உள்ளானவனாக கருதப்படுவான். இந்த குஷ்டரோகிகள் கிடைக்கும் உணவைக் குறித்து சமாரிய மக்களுக்கு சொல்லத் தவறினால், அவர்கள் திருடராக கருதப்படுவார்கள்.

அவர்கள், “இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள்” என்றார்கள் (வசனம் 9இ). அப்படியே அவர்கள் பட்டணத்து காவலாளிகளிடத்தில் வந்து தாங்கள் சீரியரின் இராணுவமுகாமில் கண்டதை உறக்கக் கூறினார்கள் (வசனம் 10). வாயிற்காவலர்கள் அதை அரண் மனைக்கு அறிவித்தார்கள் (வசனம் 11).

உதவியாளர்கள் ராஜாவை எழுப்பி, செய்தியை அறிவித்தார்கள் (காண்க வசனம் 12அ). “ஆகவே இப்படித்தான் எலிசாவின் முன்னுரைப்பு [7:1] உண்மையாகுமா” என ராஜா பதிலுரைத்திருந்தால் அது பாராட்டப்படக் கூடியதாக இருந்திருக்கும். அதற்கு பதிலாக, “இது உண்மையாயிருக்க சாத்தியமில்லை” என அவன் நினைத்தான். அவன் தன் வேலைக்காரரை நோக்கி, “சீரியர் நமக்குச் செய்கிற காரியத்தை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நாம் பட்டினியாயிருக்கிறோம் என்று அவர்கள் அறிவார்கள்; ஆகையால் நாம் பட்டணத்திலிருந்து புறப்பட்டுப் போனால் நம்மை உயிரோடே பிடித்துக்கொண்டு பட்டணத்திற்குள் பிரவேசிக்கலாம் என்று எண்ணி, அவர்கள் பாளையத்தைவிட்டு புறப்பட்டு வெளியில் ஒளித்துக்கொண்டிருக்கிறார்கள்” என்றான் (2 இராஜாக்கள் 7:12ஆ). யோசுவா, ஆயி பட்டணத்தைத் தோற்கடிப்பதற்கு இப்படிப்பட்ட ஒரு யுக்தியைப் பின்பற்றினான் (யோசுவா 8).

ராஜாவின் வேலைக்காரரில் ஒருவன் ராஜா தனக்கு சொல்லப்பட்ட செய்தி உண்மையா இல்லையா என்பதை பரிசோதித்துப் பார்க்கவேண்டும் என்று ஆலோசனை கூறினான். வேலைக்காரன் அவரை நோக்கி, “இங்கே மீதியான குதிரைகளில் ஐந்து குதிரைகளைக் கொண்டுபோக உத்தரவு கொடும்” என்றான் (2 இராஜாக்கள் 7:13அ). அநேகமாக பட்டணத்தின் மற்ற குதிரைகளெல்லாம் மரித்து போய்விட்டன (அநேகமாக அவைகள் உணவாக உட்கொள்ளப்பட்டிருக்கலாம்). வேலைக்காரன் “இதோ, இங்கே மீதியான இஸ்ரவேலின் சகல ஏராளத்திலும், மாண்டுபோன இஸ்ரவேலின் சகல கூட்டத்திலும், அவைகள் மாத்திரம் மீந்திருக்கிறது; அவைகளை நாம் அனுப்பிப் பார்ப்போம்” என்றான் (வசனம் 13ஆ). அடிப்படையில் அவன் கூறியது என்னவென்றால், “அனுப்பப்பட்டவர்களுக்கு நேரிடச் சாத்தியமான மிக மோசமான காரியம் அவர்கள் கொல்லப்படுவதாக இருக்கும். அவர்கள் பட்டணத்தில் இருந்தாலும் சாகத்தான் போகிறுர்கள். ஆகவே அவர்களை ஏன் அனுப்பக் கூடாது? நாம் இழப்பதற்கு என்ன இருக்கிறது?”

இறுதியாக, “இரண்டு இரதக் குதிரைகளை” அனுப்புவது என்று முடிவானது (வசனம் 14). குஷ்டரோகிகள் கூறியபடி, சாரதிகள் முகாம் காலியாயிருப்பதைக்

கண்டார்கள். அவர்கள் தப்பி ஓடிய சீரியரை யோர்தான் வரை பின்தொடர்ந்து சென்றார்கள்.[6] "சீரியர் தீவிரித்து ஓடுகையில், அவர்கள் எறிந்து போட்ட வஸ்திரங்களாலும் தட்டுமுட்டுகளாலும் வழியெல்லாம் நிறைந்திருந்தது" (வசனம் 15அ).

செய்தியாளர்கள் திரும்பி வந்து, அதை ராஜாவுக்கு அறிவித்தார்கள் (வசனம் 15ஆ). செய்தி விரைவாக பட்டணத்தை எட்டியது மற்றும் கதவுகள் சீக்கிரமாக திறக்கப்பட்டன. "அப்பொழுது ஜனங்கள் புறப்பட்டு, சீரியரின் பாளையத்தைக் கொள்ளையிட்டார்கள்" (வசனம் 16அ). அவர்கள் புசித்து திருப்தியடைந்தார்கள்; அவர்கள் விடுதலையடைந்திருந்தார்கள்! கர்த்தர் தான் அவர்கள் விடுதலைக்கு காரணமானவராக இருந்தார், ஆனால் அவர் தன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, இவர்கள் கூட இதற்கு பயன்படுவார்களா என யோசிக்கத் தோன்றும் நான்கு பேரை பயன்படுத்தினார்: நற்செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள விருப்பமாயிருந்த நான்கு குஷ்டரோகிகள்!

நிகழ்காலத்துக்கான நற்செய்தி

இந்த கதையிலிருந்து, பல கருத்துக்களை பொருத்திப்பார்க்கலாம். ஆனால் நான் வசனம் 9இல் "நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; நாம் போய் ... இதை அறிவிப்போம் வாருங்கள்" என்ற குஷ்டரோகிகளின் வார்த்தைகள் மேல் நமது கவனத்தை வைக்க நான் விரும்புகிறேன். அந்த குஷ்டரோகிகளின் சூழ்நிலை மற்றும் நமது சூழ்நிலைக்கிடையில் நாம் பல ஒப்பீடுகளை உருவாக்க முடியும்.

நமக்கான நற்செய்தி

குஷ்டரோகிகளின் வாக்கியத்தில் நமது கவனத்தை முதலில் ஈர்ப்பது "நற்செய்தி" என்ற வார்த்தையாகும். "சுவிசேஷம்" என்பது சொல் அர்த்த ரீதியாக "நற்செய்தி" என பொருள்படுகிறது என்பது நமக்கு நினைவூட்டப்படுகிறது. சுவிசேஷத்தின் இருதயம் போன்ற பகுதியானது, இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலாக இருக்கிறது (1 கொரிந்தியர் 15:1-4). நாம் இன்றும், "இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்" என கூறமுடியும்: நாம் பாவத்தில் இழந்துபோனவர்களாயிருந்தோம், ஆனால் இயேசுவானவர் நமது பாவங்களை தம்மேல் ஏற்றுக்கொண்டு நமக்காக மரித்தார் (1 கொரிந்தியர் 15:3; 2 கொரிந்தியர் 5:21; ஏசாயா 53:6)! குஷ்டரோகிகள், பகிர்ந்து கொள்வதற்கு சரீர நன்மைகளைக் குறித்து ஒரு நற்செய்தியை உடையவர்களாக இருந்தார்கள்; நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை குறித்து பகிர்ந்து கொள்வதற்கான ஒரு நற்செய்தியை உடையவர்களாக இருக்கிறோம்!

பல ஒப்பீடுகள் உருவாக்கப்பட முடியும். இந்த உலகம் பாவத்தால் "முற்றுகையிடப்பட்டுள்ளதாக" நாம் எடுத்துக்கொள்ளலாம் (காண்க எபேசியர் 6:12). கிறிஸ்துவை சாராதவர்கள் நம்பிக்கையற்றவர்களாக ஆவிக்குரிய முறையில் "பட்டினியாயிருக்கிறார்கள்" (காண்க எபேசியர் 2:12). இருப்பினும், தேவனானவர் தம்முடைய இரக்கத்தினாலே, மனுக்குலம் மீட்கப்படுவதற்கான ஏற்பாட்டை செய்துள்ளார் (காண்க தீத்து 3:4, 5; நடபடிகள் 2:38). இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஒவ்வொரு நபரும் பாவத்தின்மேல் வெற்றி கொள்ள

முடியும் (1 கொரிந்தியர் 15:56, 57). பங்கு பெற விரும்புகிற யாவருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களின் ஒரு "விருந்து" கிடைக்கக்கூடியதாயிருக்கிறது (காண்க மத்தேயு 22:9).

அந்த நான்கு தொழுநோயாளிகளைப் போல நம்மில் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாயிருக்கிறவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களின் அளிப்பை அனுபவிக்கிறவர்களாயிருக்கிறோம். "பட்டினியாயிருத்தல்" என்ற நிலையிலிருந்து "திருப்தியாயிருத்தல்" என்ற நிலைக்கு நாம் கடந்து வந்திருக்கிறோம் (காண்க மத்தேயு 5:6). நாம் ஆவிக்குரிய முறையில் "தரித்திரர்கள்" என்ற நிலையிலிருந்து "ஐசுவரியவான்கள்" என்ற நிலைக்கு முன்னேறி சென்றுள்ளோம் (காண்க 2 கொரிந்தியர் 6:10; மத்தேயு 5:3). எத்தனை அருமையான வாக்குத்தத்தங்களும் ஆசீர்வாதங்களும் நமக்கு அருளப்பட்டுள்ளன! (காண்க எபேசியர் 3:20; பிலிப்பியர் 4:19; எபிரெயர் 7:25.) நாமும் பவுலுடன் சேர்ந்து, "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக (2 கொரிந்தியர் 9:15) - அவருடைய குமாரனுடைய ஈவுக்காக - அவருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோமாக!

மற்றவர்களுக்கான நற்செய்தி?

நமக்குரிய கேள்வி இது தான்: நமக்கு இருப்பதிலிருந்து உலகத்தின் மிக அவசரமான தேவை என்ன என்பதை நாம் புரிந்து கொள்கிறோமா? பாவத்தில் இழந்துபோனவர்களோடு நாம் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளத் தவறினால், அந்த தொழுநோயாளிகளைப் போல, "நாம் செய்கிறது நியாயம் அல்ல" என நாம் கூறவேண்டும்.

துக்கப்படும் விதத்தில், நாம் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை எப்போதும் மற்றவர்களுக்கு கூறவில்லை. காரியம் ஏன் இப்படி இருக்கிறதென்று எனக்கு நிச்சயமாக தெரியவில்லை. சிலர், "கர்த்தர் தயையுள்ளவரென்பதை உண்மையில் ருசிபார்த்திராமல்" இருப்பதற்கான சாத்தியக்கூறும் இருக்கலாம் (1 பேதுரு 2:1); வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் தாங்களே இன்னமும் இரட்சிக்கப்படாமல் இருக்கலாம். அந்திரேயா கர்த்தரை கண்டுபிடித்தவுடனே, ஓடிப்போய் மற்றவருக்கு அறிவித்தான் (யோவான் 1:40-42); அதுதான் இயல்பான பதில் செயலாயிருக்கிறது. ஒருவர் நற்செய்தியை அறிவிக்க வேண்டுமென்ற வற்புறுத்தல் உணர்வு இல்லாமல் இருப்பாரானால், அவர் கர்த்தரோடு தனக்குள்ள உறவை பரிசோதித்து பார்க்க வேண்டும்.

கர்த்தர் நமக்காக என்ன செய்துள்ளார் என்பதை நாம் முழுமையாக பாராட்டாமலிருப்பது இன்னொரு சாத்தியக்கூறாயிருக்கலாம் (காண்க 2 பேதுரு 1:9ஆ). நாம் உண்மையில் அதை பாராட்டக் கூடியவர்களாயிருப்போமானால், நாம் செய்தியை பகிர்ந்து கொள்ளவும் விரும்புவோம் (லூக்கா 8:39)!

சில சமயங்களில் நாம் மற்றவர்களுக்கு நற்செய்தியை சொல்லத்தவறுவது என்பது மற்றவர்கள்மேல் நமக்கு கரிசனை இல்லாமல் இருக்கிறது என்பதை காட்டுகிறது. நமது அயலகத்தார் சரீரபிரகாரமாக பட்டினியாயிருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்தால், அவர்களுக்கு உணவை மறுக்கும் அளவுக்கு நாம் இதயமற்றவர்களாக இருக்கமாட்டோம். நம்மை சுற்றிலுமுள்ளவர்கள் ஒருவேளை சரீரபிரகாரமாய் பட்டினியாய் இருக்கமாட்டார்கள், ஆனால் அவர்கள் ஆவிக்குரிய முறையில் "பட்டினியாயிருக்கிறார்கள்." நாம் அவர்களுக்கு

திருவசனமாகிய "ஞான பாலை" மற்றும் "ஞான ஆகாரத்தை" எடுத்துச் செல்ல தவறினால் (1 பேதுரு 2:3; எபிரேயர் 5:12; KJV), அது நம்மை பற்றி என்ன கூறுகிறது? உண்மையில், "நாம் செய்கிறது நியாயமல்ல."

நாம் எப்படியோ கிறிஸ்துவத்தின் சாராம்சத்தைத் தவறவிட்டுவிட்டோம் என்பது நமது பிரச்சனையாக இருக்கலாம். ஆரம்பகால கிறிஸ்தவர்கள் தாங்கள் சந்தித்த யாவரோடும் நற்செய்தியை பகிர்ந்து கொள்ள ஆவலோடிருந்தார்கள் (காண்க நடபடிகள் 5:42; 8:1, 4). அப்படிச் செய்ததினால், அவர்கள் கர்த்தரின் பிரதான கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள் (மத்தேயு 28:18-20; காண்க 10:27).

கர்த்தருக்கு கீழ்ப்படிவதற்கான நம்முடைய விருப்பம், மற்றும் இழந்துபோனவர்களுக்கான நம்முடைய அன்பு என இயேசு கிறிஸ்துவை மற்ற வர்களுக்கு அறிவிப்பதற்கு பல காரணங்களை உடையவர்களாயிருக்கிறோம். தொழுநோயாளிகளை உணர்த்தின, "நாம் மவுனமாயிருந்தால் ... தண்டனை நம்மேல்வரும்" என்ற இன்னொரு காரணத்தையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம். எசேக்கியேல் 3:18ல் " 'சாகவே சாவாய்' என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்கு சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்" என்ற கர்த்தருடைய தெளிவான வசனத்தை நாம் கவனிக்கிறோம்.

உண்மையிலே, இது ஒரு "நற்செய்தியின் நாள்" ஆக இருக்கிறது! நமது கடந்த காலத்தைப் பொருத்தவரை, நாம் அமைதலாயிருந்தபடியால், நாம் நியாயமானதை செய்யவில்லை என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும்; ஆனால் எதிர்காலத்தை பொருத்தவரை, "ஆகவே நாம் போய் ... அதை அறிவிப்போம் வாருங்கள்" என்ற அந்த தொழுநோயாளிகளின் வார்த்தைகளைப் பிரதிபலிப்போமாக!

முடிவுரை

நாம் ஒவ்வொருவரும் நற்செய்தியாகிய சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை ஊக்குவிக்கும்படி இந்த பாடம் கிறிஸ்தவர்கள் வசமாய் விவாதிக்கப்பட்டது. இருப்பினும், நாம் முடிக்கும் நிலையில், கர்த்தருடைய அளிப்பை இன்னும் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தாதவர் எவரோ அவருக்காக நான் இதை பொருத்திபார்க்க விரும்புகிறேன். அந்த தொழுநோயாளிகள் பட்டணத்திற்கு வெளியே பட்டினியால் வாடிக்கொண்டிருக்கையில், "நாம் இங்கேயிருந்து சாக வேண்டியது என்ன?" எனக் கேட்டார்கள் (2 இராஜாக்கள் 7:3). அவர்களுடைய கேள்விக்கு இணையான ஒரு கேள்வியை நான் கேட்க விரும்புவேன்: "நீங்கள் ஏன் அசையாதவர்களாக, அசைக்கப்படமுடியாதவர்களாக - நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சிலும் மரணத்தை நெருங்கிக்கொண்டு, அங்கே ஏன் அமர்ந்திருக்கிறீர்கள்?" நீங்கள் மரிக்கும் வரையிலும் அங்கேயே அமர்ந்திருக்கமாட்டீர்களென்று நான் என் முழு இருதயத்தோடு உங்களுக்காக ஜெபிக்கிறேன்! நீங்கள் இயேசுவை விசுவாசித்தால் (யோவான் 3:16) மற்றும் உங்கள் பாவங்களிலிருந்து மனந்தி

ரும்பியிருப்பீர்களானால் (லூக்கா 13:3), அனனியா சவுலை நோக்கி, "இப்போழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என கேட்டதுபோல, நான் உங்களை வருந்தி கேட்கிறேன்" (நடபடிகள் 22:16)!

குறிப்புகள்

[1]*ஏவுதல் பெறாத ஒரு யூத பாரம்பரியம் இந்த மனிதர்கள் கேயாசி மற்றும் அவனுடைய மூன்று மகன்களாயிருந்தார்கள் என கூறுகிறது* (Adam Clarke, *The Holy Bible with a Commentary and Critical Notes,* vol. 2, *Joshua - Esther* [New York: Abingdon - Cokesbury Press, n.d.], 504; Matthew Henry, *Commentary on the Whole Bible,* ed. Leslie F. Church [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1961], 409). [2]*"முன்னணி புறநகர்" என்பது சமாரிய பட்டணத்தின் மிக அருகில் அமைந்திருந்த சீரியா இராணுவ முகாமைக் குறிக்கிறது.* [3]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 55. [4]*கல்வியாளர்கள் இது முத்தாரி அல்லது முசூர் அல்லது வேறு ஒரு இடமாக இருக்க வேண்டுமெனக் கருதுகிறார்கள். நான் பரிசோதித்த ஒவ்வொரு மொழிபெயர்ப்பிலும் "எகிப்தியர்கள்" என்றுள்ளது.* [5]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 535. [6]*இராணுவம் ஆராமுக்கு செல்வதற்கு இரண்டு வழித்தடங்கள் இருந்தன. அவர்கள் வடக்கு திசையில் சென்று பின் கிழக்கு நோக்கி செல்லலாம் அல்லது அவர்கள் யோர்தானை கடந்து கிழக்கில் சென்று, பின் வடக்கு நோக்கி செல்லலாம். அவர்கள் இரண்டாவது வழித்தடத்தை தெரிந்துகொண்டிருந்தார்கள்.*

17

துக்கித்து அழுத ஒரு மனிதன்

(2 இராஜாக்கள் 8:7-10:36)

சாலொமோன், "அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு" என எழுதினார் (பிரசங்கி 3:4அ). கர்த்தர் தம் பிள்ளைகள் மகிழ்ச்சியாயிருக்கும்படி விரும்புகிறார் (சங்கீதம் 32:11; பிலிப்பியர் 4:4); ஆனால் சில நேரங்களில் துக்க மாயிருப்பது சரியாயிருக்கிறது (மத்தேயு 5:4; ரோமர் 12:15). சில நேரங்களில் மகிழ்ச்சியாயிருப்பது தவறாயிருக்கிறது.

எரேமியா தேவ ஜனங்களின் பாவத்தினிமித்தமும், அதைத் தொடர்ந்து எருசலேமுக்கு வரவிருந்த அழிவினிமித்தமும் அழுதார் (எரேமியா 9:1; புலம்பலின் புத்தகம்). இயேசுவானவர் தன் நண்பர் மரித்தபோது (யோவான் 11:35), எருசலேமின் அழிவைக்குறித்து சிந்தித்தபோது (லூக்கா 19:41-44), மற்றும் சிலுவையை எதிர்கொண்டபோதும் அழுதார் (எபிரெயர் 5:7). பவுல் கொரிந்தி யர்களுக்கு, "அதிகக் கண்ணீரோடு ... எழுதினார்" (2 கொரிந்தியர் 2:4).

இந்த பாடத்திற்கான வசனப்பகுதியில், "தேவனுடைய மனுஷன் ... அழுதான்" என வாசிக்கிறோம் (2 இராஜாக்கள் 8:11ஆ). இந்த பாடத்தில் எலிசாவின் ஆழமான செல்வாக்கை குறித்து நாம் பார்ப்போம்: அவர் அரசியல் அதிகாரமுடையவராக இருந்தார், இரண்டு நாடுகளில் அரசர்களை உருவாக்குபவராக இருந்தார். இருப்பினும், இஸ்ரவேலுக்கு நேரிடவிருந்த அழிவுக்கு முன்பாக அது ஒன்றுமில்லாமையாக இருந்தது (வசனம் 12). அவரின் முயற்சிகள் ஒரு புறம் இருந்தாலும், தேசமும் அதின் தலைவர்களும் தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்வதில் உறுதியாயிருந்தார்கள் - அது அவருடைய இருதயத்தை உடைத்தது.

இந்த படிப்பு 2 இராஜாக்கள் 8-10 அதிகாரங்களிலிருந்து வருகிறது. இந்த அதிகாரங்கள் எலிசாவின் பின்பகுதி ஊழியத்தை குறித்து அதிகம் கூறுகிறது. இது இஸ்ரவேலின் வரலாற்றில் ஒரு குரூரமான காலமாயிருந்தது, எந்த ஒரு இளகிய மனமுள்ளவனையும் அழச்செய்யும் சம்பவங்கள் நிறைந்திருந்தன.

இரண்டு நீதியின் பட்டயங்கள் (8:7-10:36)

ஆசகேலின் பட்டயம்

இந்த கதையானது, "எலிசா தமஸ்குவுக்கு வந்தான்" என துவங்குகிறது (8:7ஆ). தமஸ்கு, இஸ்ரவேலின் நீண்டகால எதிரியாகிய சீரியாவின் தலை நகரமாக இருந்தது. எலிசாவை கைது செய்து, கூடுமானால் கொலை செய்ய வேண்டும் என்ற திட்டம் இந்த தமஸ்குவில் தான் தீட்டப்பட்டது (காண்க 6:8-13). இப்போது தீர்க்கதரிசி தைரியமாக அந்த பட்டணத்தில் வந்திருக்கிறார்.

அவர் ஏன் அங்கிருந்தார்? ஒரு வேளை அவர் நாகமானை சந்தித்து அவன் எடுத்த முடிவில் உறுதியாயிருக்கும்படி உற்சாகப்படுத்த முடியுமென

நம்பியிருந்தார் (5:15, 17), ஆனால் அவருடைய பிரதான நோக்கம் நீண்ட காலத்திற்கு முன் கொடுக்கப்பட்ட தெய்வீக கட்டளையை நிறைவேற்றுவதாக இருந்தது. ஓரேப் மலையில் எலிசாவுக்கு முன்னிருந்த எலியாவை நோக்கி கர்த்தர் இவ்வாறு கூறியிருந்தார்,

> *நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிபோய், ஆசகேலைச் சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, ஆபெல்மெகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணு. சம்பவிப்பதாவது: ஆசகேலின் பட்டயத்திற்க்குத் தப்பினவனை யெகூ கொன்று போடுவான்; யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்று போடுவான் (1 இராஜாக்கள் 19:15-17).*

நமது தொடரின் முதல் பாடத்தில், எலியா இந்த கட்டளையின் மூன்றாவது பகுதியை நிறைவேற்றியதை நாம் பார்த்தோம்: எலிசாவை பரிசுத்த ஊழியத் திற்காக பிரித்தெடுத்ததை நாம் பார்த்தோம். எலியா ஏன் கட்டளையின் முதல் மற்றும் இரண்டாம் பகுதியை உடனே நிறைவேற்றவில்லை? அநேகமாக அவருடைய ஊழிய காலத்தில், ஆசகேல் மற்றும் யெகூவை அபிஷேகம் செய்வதற்கான காலம் கனிந்திருக்கவில்லை. இப்படியாக, அந்தப் பொருப்பு எலிசாவுக்கு வந்து சேர்ந்தது. "நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப் போய், ஆசகேலை ... அபிஷேகம் பண்ணு" என்பது முதல் கட்டளையாக இருந்தது (1 இராஜாக்கள் 19:15). இந்த கட்டளையை நிறைவேற்றுவதற்கான காலம் வந்துவிட்டது - ஆகவே எலிசா தமஸ்குவுக்கு சென்றிருந்தார்.

"சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் வியாதியாயிருந்தான்" (2 இராஜாக்கள் 8:7அ). அது என்ன வியாதி என்று நமக்கு சொல்லப்படவில்லை. அது எந்த வியாதியாயிருந்தபோதிலும் அது கடுமையான, உயிருக்கு ஆபத்தான ஒன்றாக இருந்தது.

ஒரு செய்தியாளன் ராஜாவை நோக்கி, "தேவனுடைய மனுஷன் இவ்விடத்தில் வந்திருக்கிறான்" என்று அறிவித்தான் (8:7இ). முந்தைய காலமாக இருந்திருந்தால், "எலிசாவை சிறைபிடித்து - அவன் தலையை என்னிடம் கொண்டுவாருங்கள்" என ராஜா சொல்லியிருப்பான். இப்போது அவன் போர் திட்டங்களை வகுக்கக்கூடிய கடுமையான இராணுவ தளபதியாக இருக்கவில்லை. அவன் இப்போது வியாதியஸ்தனாக, வயது முதிர்ந்தவனாக இருக்கிறான். வியாதி ஒரு மனிதனுடைய கண்ணோட்டத்தை மாற்றிவிடும் (காண்க சங்கீதம் 119:71).

எலிசாவின் அற்புத வல்லமைகள் இராஜாவுக்கு தெரிந்திருந்தன; அவைகள் அவனுடைய திட்டங்களை கடந்தகாலத்தில் நாசம் செய்திருந்தன (2 இராஜாக்கள் 6:8-23). மேலும், நாகமான் தான் சுகமாக்கப்பட்ட கதையை பலமுறை சொல்லியிருக்கக்கூடும். ஆட்சியாளர் தன் நம்பிக்கைக்குரிய ஆசகேல் என்ற உதவியாளனை அழைத்தான் (தேவன் எலியாவிடம் குறிப்பிட்டிருந்த மனிதன்), அவன் ஆசகேலை நோக்கி, "நீ உன் கையிலே ஒரு காணிக்கையை

எடுத்துக் கொண்டு, தேவனுடைய மனுஷனுக்கு எதிர்கொண்டுபோ ..." என்றான் (8:8அ).

முன்னர், ராஜா நாகமான் கொடுப்பதற்காக நிறைய உச்சிதமான பரிசுகளை அனுப்பியிருந்தார்; இப்போது அவன் தன் சொந்த பரிசு பொருட்களை அனுப்புகிறான். கொள்கையளவில், அந்த பரிசுபொருட்கள்/காணிக்கைகள் அஞ்ஞான கடவுள்களை சாந்தப்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டன; நடைமுறை உண்மையில், அவைகள் கள்ள ஆசாரியர்கள் மற்றும் கள்ள தீர்க்கதரிசிகளுக்கு லஞ்சமாக கொடுக்கப்பட்டன: பொதுவாக, பரிசுப்பொருள் எந்த அளவு பெரிதாக இருந்ததோ, அந்த அளவு பரிசளிப்பவர் தனக்கு சாதகமான "வெளிப்பாடுகளை" பெற்று கொண்டான். ராஜாவின் பரிசுப்பொருட்களை குறித்து நான் வாசித்தபோது, எலிசா இப்படிப்பட்ட பரிசு பொருட்களை ஏற்றுக்கொள்ளும் விருப்பமுடையவர் என்பதான கேயாசியின் வேண்டுகோளை (பொய்) நாகமான் ராஜாவிடம் சொல்லியிருந்திருப்பாரா என நான் ஆச்சரியப்படுகிறேன்.

ராஜா ஆசகேலை நோக்கி, "நான் இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று அவனைக் கொண்டு கர்த்தரிடத்தில் விசாரிக்கச் சொன்னான்" (8:8ஆ). அநேகமாக, ராஜா ஏற்கனவே தன் அஞ்ஞான விக்கிரகங்களோடு ஆலோசனை கலந்திருந்தான் (காண்க 5:18) ஆனால் திருப்திகரமான பதிலை அவன் பெற்றிருக்கவில்லை.

ஒரு வியப்புக்குரிய பரிசு சேகரிக்கப்பட்டது. "தமஸ்குவின் சகல உச்சிதங்களிலும் நாற்பது ஒட்டகங்களின் சுமையான காணிக்கை ..." (8:9அ). தமஸ்கு, எகிப்து, சின்ன ஆசியா மற்றும் மொசொப்பொத்தாமியா ஆகிய நாடுகளுக்கிடையிலான வணிக மையமாக இருந்தது, ஆகவே அங்கிருந்த "உச்சிதமான பொருட்கள்" உண்மையிலேயே "உச்சிதமானவைகளாயிருந்தன." விலையுயர்ந்த உலோகங்கள், மெல்லிய உடைகள், பல்வகை கலைப்பொருட்கள் மற்றும் மிகவும் ராஜபோகமான உணவு மற்றும் பானங்கள் அதில் இருந்தன. இதைவிட ஒரு சிறந்த பரிசளிப்பை கற்பனை செய்வது கடினமானதாக இருக்கும், ஆனால் அது அங்கு கொண்டு செல்லப்பட்டபோது, எலிசா அதை ஏற்றுக்கொண்டார் என்பதற்கான அறிகுறிகள் இருக்கவில்லை.

ஆசகேல் எலிசா தங்கியிருந்த இடத்தை கண்டுபிடித்தான் (8:9ஆ). அவன், "அவனுக்கு முன்பாக நின்று, சீரியாவின் ராஜாவாகிய பெனதாத் என்னும் உம்முடைய குமாரன் என்னை உம்மிடத்தில் அனுப்பி, இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று கேட்கச் சொன்னார்" என்றான் (8:9இ). "உம்முடைய குமாரன்" என்பது மரியாதையை காண்பிக்கும் ஒரு வார்த்தையாக இருந்தது, மேலும் அது சார்ந்திருத்தலையும் உணர்த்தியது.

எலிசாவின் பதில் ஆராய்ச்சியாளர்களுக்கு குழப்பமாயிருக்கிறது: "நீ போய், வியாதி நீங்கி பிழைப்பீர்[1] என்று அவனுக்குச் சொல்லும்; ஆனாலும் அவன் சாகவே சாவான் என்பதைக் கர்த்தர் எனக்கு காண்பித்தார்" என்றான் (8:10). எலிசா எந்த அர்த்தத்தில் இதை சொன்னார்? பர்ட்டன் கோப்மேன் என்பவர், அந்த வாக்கியத்தின் கடைசி பகுதி "கர்த்தரிடம்" இருந்து வந்திருப்பதாகவும், ஆனுல் முதல் பகுதி அப்படிவரவில்லை எனவும் கூறுகிறார்.[2] அவருடைய முடிவு கருத்து (மற்றும் பல எழுத்தாளர்களின் முடிவு கருத்தும்) ஆசகேல் ராஜாவிடம் என்ன பொய் சொல்ல போகிறார் என்பதை குறித்து எலிசா விழிப்புணர்வு

பெற்றிருந்தார் என்பதை காட்டுகிறது. எலிசாவின் வார்த்தைகள் இவ்விதமாக கூறப்படக்கூடும்: "நீ ராஜாவினிடத்தில் போய் அவன் நிச்சயமாக சுகமாவான் எனச் சொல் - நீ திட்டமிட்டபடியே - *ஆனால்* அவன் நிச்சயம் மரிப்பான் என கர்த்தர் எனக்கு காண்பித்துள்ளார்."

"வியாதி நீங்கி பிழைப்பேனா?" என்ற கேள்விக்கு எலிசாவின் சாத்தியமான இன்னொரு பதில் என்னவென்றால் "ஆம் மற்றும் இல்லை" என்பதாகும்: இந்த பதிலை நானும் மற்ற எழுத்தாளர்களும் தேர்ந்தெடுக்கிறோம். "*ஆம்*, உங்கள் வியாதி மரணத்திற்கேதுவானதாக இல்லாமலிருப்பதால், நீங்கள் சுகமாவீர்கள். இதுதான் உங்கள் கவலையாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் பிழைப்பீர்கள். இருப்பினும் நீ மரிப்பாய் என கர்த்தர் காண்பித்திருக்கிறபடியால், பதில் *இல்லை* என்பதாக இருக்கிறது." "வேறு வார்த்தைகளில் கூறுவதெனில், வியாதி முடிவைத்தரக்கூடியதல்ல, ஆனுல் ராஜாவின் வாழ்க்கை முடிவு கட்டப்படக்கூடியதாயிருந்தது."[3]

வசனம் 11 இல் வியாக்யானம் செய்வதற்கான இன்னொரு சவாலை நாம் பார்க்கிறோம். "... தன் முகத்தை திருப்பாமல் அவன் சலித்துப் போகுமட்டும் அவனை நோக்கிக் கொண்டு ..." (8:11அ). அந்த இரண்டு "அவன்" என்பது யாரை குறிக்கிறது என்பது தெளிவாக இல்லை. சிலர் அந்த முதல் "அவன்" என்பது "ஆசகேலை" குறிப்பதாகவும் சிலர் கருதுகிறார்கள். மற்றவர்கள் முதல் "அவன்" என்பது ஆசகேலை குறிப்பதாகவும், இரண்டாவது "அவன்" என்பது எலிசாவைப் பற்றி பேசுகிறதென்றும் உறுதிபட கூறுகிறார்கள் (காண்க NCV மொழிபெயர்ப்பு). சிலர் அந்த இரண்டு "அவன்" என்பது எலிசாவையும் குறிக்கலாம் அல்லது ஆசகேலையும் குறிக்கலாம் என கருதுகிறார்கள். முதல் சாத்தியக்கூறாக சொல்லப்பட்டது எனது தெரிவாக இருக்கிறது. CJB மொழிபெயர்ப்பில், "தேவனுடைய மனுஷன் [எலிசா] அவன் [ஆசகேல்] மேல் பார்வையை வைத்து அவன் சலித்து போகுமட்டும் நோக்கிக் கொண்டிருந்தான்" என கூறுகிறது.

இதோ ஒரு சாத்தியமான தொடர்ச்சி: எலிசா ஆசகேலிடம் பெனாதாத் மரித்துப் போவான் என கர்த்தர் உரைத்தார் என தெரிவித்தான். பின்பு அவன், ஆசகேலின்மேல் அர்த்தமுள்ள விதத்தில் தன் பார்வையை பதித்து, ராஜா *எப்படி* மரிப்பான் என்பது தனக்கு தெரிந்திருந்தது என்பதை பார்வையால் சுட்டிகாட்டினான். ஏற்கனவே ராஜாவை கொலை செய்ய திட்டமிட்டிருந்த ஆசகேல் வியப்படைந்து, எலிசாவின் கண்ணை பார்க்க இயலாதவனாக இருந்தான்.

ராஜா மரிப்பான் என்பதை எலிசா வெளிப்படுத்தியபடியால், சில எழுத்தாளர்கள் அந்த செயலுக்கு எலிசாவை (மற்றும் தேவனை) பொருப்பாளியாக்குகிறார்கள். பெனாதாத் மரிப்பான் என்பதை தேவன் அறிந்திருந்தார் என்பது உண்மைதான் (8:10). மேலும், அவர் ஆசகேல் செய்யப்போகும் கொடுமைகளையும் அறிந்திருந்தார் (8:12), அவர் இந்த இரண்டு சம்பவங்களையும் எலிசாவை கொண்டு முன்கூட்டியே அறிவிக்கும்படி செய்தார். எப்படியிருந்தாலும், தேவன் மற்றும் எலிசா ஆகிய இருவரும் இந்த தீமையான செயல்களுக்கு காரணமாய் இருந்தார்கள் என்பதோ அல்லது இதை செய்தவர்கள் தண்டனைக்கு தப்பிவிடுவார்கள் என்பதோ அதின் பொருள் அல்ல (காண்க ஆமோஸ் 1:3-5). ஒரு முந்திய பாடத்தில், ஒருவர் கடந்த

காலத்தில் என்ன செய்தார் என்பதை அவருடைய சுயாதீனத்தில் தலையிடுகிற அறிவு இல்லாமலே நான் அறிந்திருந்தேன் எனக் குறிப்பிட்டிருந்தேன். அதே விதத்தில், எல்லாவற்றையும் அறிந்திருக்கிற தேவனானவர், ஒரு நபருடைய சுயாதீனத்தில் தலையிடாமலேயே, அவன் என்ன செய்வான் என்பதை முன் கூட்டியே அறிந்தவராக இருக்கிறார்.

எலிசா மற்றும் ஆசகேல் ஆகிய இருவரும் நின்று ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டபோது, ஆசகேல் இஸ்ரவேலருக்கு என்னவெல்லாம் செய்வார் என்ற காட்சி எலிசாவின் மனதில் ஓடியது. அந்த சமயத்தில், "தேவனுடைய மனுஷன் அழுதான்" (8:11ஆ). அப்பொழுது ஆசகேல், "என் ஆண்டவன் அழுகிறது என்ன?" என்றான் (8:12அ). எலிசா அவனை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரருக்கு செய்யும் தீங்கை நான் அறிந்திருக்கிறபடியினால் அழுகிறேன்; நீ அவர்கள் கோட்டைகளை அக்கினிக்கு இரையாக்கி, அவர்கள் வாலிபரைப் பட்டயத்தால் கொன்று, அவர்கள் குழந்தைகளை தரையோடே மோதி, அவர்கள் கர்ப்பவதிகளை கீறிப்போடுவாய்" என்றான் (வசனம் 12ஆ). இப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனங்கள் பண்டைய போர்களில் "சாதாரண" நிகழ்வுகளாக இருந்தன (காண்க 2 இராஜாக்கள் 15:16; ஓசியா 13:16).[4] இப்படியாக, "ஆசகேலின் பட்டயம்" (1 இராஜாக்கள் 19:17) கர்த்தரை விட்டு விலகினவர்கள்மேல் பயங்கரமான விதத்தில் பழிதீர்த்துக்கொள்ளும்.

அப்பொழுது ஆசகேல்: "இத்தனை பெரிய காரியத்தைச் செய்ய நாயாகிய உமது அடியான் எம்மாத்திரம்?" என்றான் (2 இராஜாக்கள் 8:13அ). சில மொழிபெயர்ப்புகள் ஆசகேல், "இப்படிப்பட்ட பயங்கரமான காரியங்களை செய்வதற்கு நான் என்ன ஒரு நாயா?" [ஒரு இழிவான மனிதன்] என்றுகேட்டதாக அர்த்தம் சொல்கின்றன (காண்க KJV; NCV). எப்படியிருந்தபோதிலும், ஆசகேல் "இத்தனை பயங்கரமான காரியங்கள்" என்று சொல்லாமல் "இத்தனை பெரிய காரியங்கள்" என்று சொன்னான். அவன் "நாய்" என்ற வார்த்தையை இழிவானவனாய் இருத்தல் என்ற அந்த அர்த்தத்தில் பயன்படுத்தாமல், முக்கியத்துவம் இல்லாதவனாயிருத்தல் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தினான். REB மொழிபெயர்ப்பில், "ஆனால் நான் ஒரு நாய் ... ஒருவருமில்லாதவன் ... என்றுள்ளது." அசீரிய பதிவுகள் "ஒருவருமில்லாதவனுடைய மகன்" என்று பொருள்படும்படி குறிப்பிடுகிறது.[5]

எலிசா ஒருவேளை தன் தலையை அசைத்து, "நீ சீரியாவின் மேல் ராஜாவாவாய் என்பதைக் கர்த்தர் எனக்குத் தெரிவித்தார்" என்றான் (8:13ஆ).[6] ஆசகேல் அநேகமாக அந்த முன் அறிவிப்பை கேட்டதில் சந்தோஷப்பட்டான்.

ஆசகேல், எலிசாவை விட்டு புறப்பட்டு, தன் ஆண்டவனிடத்தில் வந்தபோது, "எலிசா உன்னிடத்தில் என்ன சொன்னான்?" என்று கேட்டான் (8:14அ). "நான் இந்த வியாதி நீங்கி பிழைப்பேனா?" (8:8), என்ற கேள்விக்கு, தீர்க்கதரிசியின் பதில் "ஆம் மற்றும் இல்லை" என்பதாயிருந்தது - ஆனால் ஆசகேல் ராஜாவுக்கு "ஆம்" என்ற பகுதியின் பதிலை மட்டும் கொடுத்தான்: "நீர் வியாதி நீங்கிப் பிழைப்பீர்" என்று எனக்குச் சொன்னான் (8:14ஆ).

எலிசாவின் பதிலின் "இல்லை" என்ற பகுதியானது மறுநாளில் நிறைவேற்றப்பட்டது: "மறுநாளிலே (ஆசகேல்) ஒரு சமுக்காளத்தை எடுத்து, தண்ணீரிலே தோய்த்து அவன் முகத்தின்மேல் விரித்தான்; அதினால் அவன் செத்துப் போனான்" (8:15அ). மூச்சுத்திணறி செத்துப்போனான். "சமுக்காளம்"

என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை கரடுமுரடான நூலினால் நெய்யப்பட்ட ஒரு துணியை குறிக்கிறது. அது ராஜாவின் படுக்கையிலிருந்த ஒரு போர்வையை (NCV) அல்லது ஒரு தரை விரிப்பை குறிக்கலாம். ராஜா இயற்கையாக மரித்தார் என்ற ஒரு தோற்றத்தை உருவாக்கும்படி, ஆசகேல் இவ்விதமான ஒரு கொலை முறையை பயன்படுத்தினான். பெனாதாத்தின் மரணத்தை தொடர்ந்து, தமஸ்குவில் ஒரு அதிகாரப்போட்டி நிலவியது என்பதில் சந்தேகம் இல்லை; எப்படியிருப்பினும், முடிவாக, எலிசாவின் வார்த்தை உண்மையாயிற்று: "ஆசகேல் அவனுக்கு பதிலாக ராஜாவானான்" (8:15ஆ).

"ஆசகேல் சீரியாவின் வலிமையான ராஜாவாயிருந்தான் (கி.மு. 843-796/7 தோராயமாக)."[7] எலிசை முன்னுரைத்தவைகளை அவன் செய்தானா? ஆம். அதிகாரம் 8 இன் பின் பகுதியில் அவன் இஸ்ரவேல் ராஜாவோடு போர்புரிவதை பார்க்கிறோம் (8:28; காண்க 9:14). "அந்நாட்கள் முதல் கர்த்தர் இஸ்ரவேலைக் குறைந்துபோகப்பண்ணினார்; ஆசகேல் அவர்களை இஸ்ரவேலின் எல் லைகளிலெல்லாம் முறிய அடித்து ..." என வசனம் 10:32 கூறுகிறது. குறைந்தது ஒரு சந்தர்ப்பத்தில், ஆசகேல் தன் படைகளை தென் ராஜ்யமாகிய யூதாவுக்குள் கொண்டுவந்திருந்தான் (12:17, 18).

2 இராஜாக்கள் 13 இல் "ஆகையால் கர்த்தருக்கு இஸ்ரவேல்மேல் கோபமூண்டு, அவர்களை சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலின் கையிலும் ... அந்நாட்களிலெல்லாம் ஒப்புக்கொடுத்தார்" என சுருக்கமாய் சொல் லப்பட்டுள்ளது. "யோவாகாசின் நாட்களிலெல்லாம் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேல் இஸ்ரவேலை ஒடுக்கினான்" (13:22). தேவனுடைய ஜனங்கள் தேவனோடு தங்களுக்கிருந்த உடன்படிக்கையை கைக்கொள்ளவில்லை மற்றும் அதின் விளைவுகள் பயங்கரமானவைகளாயிருந்தன.

யெகூவின் பட்டயம்

தேவன் எலியாவிடம் ஆசகேலை அபிஷேகம் பண்ணும்படி மட்டுமல்ல, "நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் பண்ணுபடி ..." கூறினார் (1 இராஜாக்கள் 19:16). கர்த்தர், "ஆசகேலின் பட்டயத் திற்குத் தப்பினவனை யெகூ கொன்று போடுவான் ..." என கூறியிருந்தார் (1 இராஜாக்கள் 19:17). ஆசகேல் பாவம் நிறைந்த தேசத்தை வெளியிலிருந்து தண்டிப்பான்; யெகூ பாவம் நிறைந்த மக்களை தேசத்தின் உள்ளிருந்து தண்டிப்பான். யெகூவை அபிஷேகம் பண்ணும் பொருப்பு எலிசாவின் மேல் விழுந்தது - மற்றும் அந்த பொருப்பை நிறைவேற்றும் காலம் வந்துவிட்டது.

2 இராஜாக்கள் 8 ஆம் அதிகாரத்தின் இறுதி பகுதி யோராம் தென் இராஜ்ய மாகிய யூதாவை அரசாண்டது குறித்து ஒரு சுருக்கமான தகவலை தருகிறது (8:16-23). யோராம் மரித்தபோது, அவனுடைய மகன் அகசியா ராஜாவானான் (8:24-27). அகசியா யூதாவின் ராஜாவானபோது, அவன் தென் இராஜ்யத்தில் பாகாலின் வழிபாட்டை அறிமுகப்படுத்தினான் (காண்க 8:26, 27; 11:18). இதன் பின் சில காலம் கழித்து, அவனும் இஸ்ரவேலின் ராஜாவான அவன் மாமா யோராமும், கீலேயாத்திலுள்ள ராமோத்திற்கு ஆசகேலுடன் யுத்தம் செய்ய சென்றார்கள் (8:28; காண்க 9:14ஆ), இது யோர்தானின் கிழக்கு பகுதியில் அமைந்திருந்த இஸ்ரவேலின் வலிமையான ஒரு கோட்டையாயிருந்தது (*எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற நாடுகள்* என்ற வரைபடத்தை காணவும்).

யுத்தத்தின் போது, யோராம் காயமடைந்தான் (8:28).

யோராமின் துருப்புகள் கீலேயாத்திலுள்ள ராமோத்தில் இருந்துவிட்டார்கள் (காண்க 9:1-4). ராஜா யெஸ்ரயேலிலிருந்த தன் குளிர்கால அரண்மனைக்கு கொண்டு செல்லப்பட்டான் (*எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்கள்* என்ற வரைபடத்தை காணவும்) (8:29அ). (ஒருவேளை அவன் யெஸ்ரயேலிலிருந்த தன் தாய் யொசபேலை பார்க்கச் சென்றான் [காண்க 9:30]; நம்மில் பெரும்பாலானவர்கள் நோயுறும் போது தாயின் பராமரிப்பை விரும்புகிறோம்.) அதன் பின்னர், யோராமை பார்க்க அகசியா யெஸ்ரயேலுக்கு வந்தான் (8:29ஆ). இப்படியாக, யோராம் மற்றும் அகசியா ஆகிய இருவரும் தண்டிக்கப்படுவதற்கான களம் அமைந்துவிட்டது (காண்க 2 நாளாகமம் 22:6, 7).

அதிகாரம் 9 யெகூ ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுவதோடு துவங்குகிறது. நாம் வசனப்பகுதியை பார்ப்பதற்கு முன்பாக, சில பின்புலத் தகவல்கள் தேவைப்படுகின்றன. வசனம் 9:25 லிருந்து எலியா ஆகாபையும் அவன் குடும்பத்தாரையும் சபித்தபோது, யெகூ ஆகாபுடன் நாபோத்தின் திராட்சை தோட்டத்தில் இருந்தான் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம், அச்சமயத்தில் கர்த்தர் எலியாவை நோக்கி,

> நீ எழுந்து, சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைச் சந்திக்கும்படி போ; இதோ, அவன் நாபோத்தின் திராட்சை தோட்டத்தை சொந்தமாய் எடுத்துக்கொள்ள அங்கே போயிருக்கிறான். நீ அவனைப் பார்த்து: நீ கொலை செய்ததும் எடுத்துக்கொண்டதும் இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார் (1 இராஜாக்கள் 21:18, 19).

எலியா திராட்சை தோட்டத்திற்கு வந்தபோது, ஆகாப் யெகூ மற்றும் ஒரு அதிகாரியோடு தன் புதிய திராட்சை தோட்டத்தை பார்வையிட்டுக் கொண்டிருந்தான் (2 இராஜாக்கள் 9:25). ராஜா எலியாவை கண்டபோது, "என் பகைஞனே, என்னைக் கண்டு பிடித்தாயா?" என்றான் (1 இராஜாக்கள் 21:20அ). அதற்கு எலியா பிரதியுத்திரமாக,

> கண்டு பிடித்தேன்; கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய், நான் உன்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, உன் சந்ததியை அழித்துப்போட்டு, ஆகாபுக்கு சுவரில் நீர்விடும் ஒரு நாயாகிலும் இராதபடிக்கு இஸ்ரவேலில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சுங்கரித்து, நீ எனக்கு கோபமுண்டாக்கி, இஸ்ரவேலை பாவஞ்செய்யப் பண்ணினதினிமித்தம், உன்னுடைய குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரோபெயாமின் குடும்பத்துக்கும் [காண்க 1 இராஜாக்கள் 15-28-30], அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சமானமாக்குவேன் என்றார் என்று சொன்னான். யேசபேலையும் குறித்து கர்த்தர்: நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும் என்றார் (1 இராஜாக்கள் 21:20ஆ-23).

ஆகாபின் பதிலுரைப்பு, இந்த பயங்கரமான தீர்கதரிசனத்தின் நிறைவேறுதலை தாமதப்படுத்தியது, ஆனால் அதை தள்ளிவிடவில்லை (1 இராஜாக்கள் 21:27-29).

ஆகாபின் மரணத்தை தொடர்ந்து, யெகூ ஆகாபின் மகனாகிய யோராமை சேவித்து, அதிகாரத்திற்கு வந்தான். அவன் அநேகமாக இஸ்ரவேல் படைப்பிரிவின் தலைவனாக இருந்துள்ளான் (காண்க 2 இராஜாக்கள் 9:5; NIV). 2 இராஜாக்கள் 9 ஆம் அதிகாரத்திற்கு வரும்போது, அவன் தன் படையுடன் கீலேயாதிலுள்ள ராமோத்தில் (99:1, 2) ஆசகேலுக்கு எதிராக யுத்தம் செய்துகொண்டிருந்தான் (9:14).

யெகூவை அபிஷேகம் பண்ணும் நேரம் வந்துவிட்டது, ஆனால் எலிசா தாமே அதை செய்வதற்கு ராமோத்திற்கு செல்லவில்லை. அவர் பிரயாணம் செய்ய முடியாத அளவுக்கு வயதானவராயிருந்தார் என்ற ஒரு ஆலோசனை முன் வைக்கப்பட்டு, ஆனால் அவர் அநேகமாக தன் நாற்பதுகளில் இருந்தார். மக்கள் தன்னை அடையாளம் கண்டு கொள்வார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார், அது இரகசியமாய் செய்யப்படவேண்டிய அவசியம் இருந்தது. ஆகவே, அவர் “தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனை” அனுப்பினார் (9:1-3). அநேகமாக, அவர்தான் கேயாசிக்கு பதிலாக பணி அமர்ந்தவராக இருந்தார்.[8]

அந்த வாலிபன் யெகூவை கண்டுபிடித்து, மற்ற சேனாதிபதிகளிடத்திலிருந்து பிரித்து மற்றும் அவன் தலையின்மேல் தைலத்தை வார்த்தான் (9:4-6அ). கர்த்தருடைய பிரதிநிதி ஒருவரால் வட ராஜ்யமாகிய இஸ்ரவேலின் ராஜா ஒருவர் அபிஷேகம் பண்ணப்படுவதாக கூறப்படும் வசன பதிவு இது ஒன்றுதான். பின்பு, தீர்க்கதரிசி - பயிற்சியாளர் யெகூவுக்கு இந்த அச்சமூட்டும் கட்டளையை கொடுத்தார்:

> இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் உன்னைக் கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினேன். நான் என் ஊழியக்காரராகிய தீர்கதரிசிகளின் இரத்தப்பழியையும், கர்த்தருடைய சகல ஊழியக்காரரின் இரத்த பழியையும், யேசபேலின் கையிலே வாங்கும்படிக்கு நீ உன் ஆண்டவனாகிய ஆகாபின் குடும்பத்தை அழித்துவிடக்கடவாய். ஆகாபின் குடும்பமெல்லாம் அழியும்படிக்கு, நான் ஆகாபுக்குச் சுவரில் நீர் விடும் ஒரு நாய் முதலாய் இராதபடிக்கு, இஸ்ரவேலிலே அவனுடையவர்களில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் கருவறுத்து ... யேசபேலை யெஸ்ரயேலின் நிலத்திலே நாய்கள் தின்றுவிடும், அவளை அடக்கம் பண்ணுகிறவன் இல்லையென்கிறார் (9:6ஆ-10ஆ).

யெகூ பிரதானிகளிடத்தில் திரும்பியபோது, அவர்கள் அந்த மனிதனுடைய வேலை என்னவாயிருந்தது என்று ஆச்சரியப்பட்டார்கள். முதலில் யெகூ அவர்களின் கேள்விகளை தவிர்த்தான், பின்பு, “நான் உன்னை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொன்னான்” என்றான் (9:12ஆ). மற்ற பிரதானிகள் தங்கள் புதிய ஆட்சியாளராக அவனை உற்சாகமாக ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் “எக்காளம் ஊதி: யெகூ ராஜாவானான்” என்றார்கள் (9:13ஆ). யெகூ பட்டணத்திலிருந்து யாரும்

வெளியேறி இதை யோராமுக்கு அறிவித்துவிடாதபடி எச்சரித்தான் (9:15ஆ). பின்பு, அவன் தன் இரதத்தை பூட்டி, நாற்பத்தி ஐந்து அல்லது ஐம்பத்தி ஐந்து மைல் தொலைவில் மேற்கு திசையில் உள்ள யெஸ்ரயேலுக்கு விரைந்தான் (காண்க 9:20ஆ; 9:16).

யெகூவும் அவன் கூட்டாளிகளும் யெஸ்ரயேலை நெருங்கினபோது, அவர்களை சந்திக்க ஒரு குதிரைவீரன் அனுப்பப்பட்டான் (9:17), அநேகமாக யுத்தம் எப்படி நடந்துகொண்டிருந்தது என்பதை கேட்டு தெரிந்துக் கொள்ள அவன் அனுப்பப்பட்டிருந்தான். யெகூ அவனை தன்னோடு சேர்த்துக்கொண்டு பயணித்தான் (9:18). இரண்டாவது குதிரைவீரன் அனுப்பப்பட்டான், அவனுக்கும் இதே முடிவுதான் ஏற்பட்டது (9:19, 20). இறுதியில், யோராம் ராஜாவும், அகசியா ராஜாவும் தங்கள் இரதங்களில் ஏறி யெகூவை சந்திக்க சென்றார்கள் (9:21அ). வசனம் 21 இல் உள்ள: "... *யெஸ்ரயேலியனாகிய நாபோத்தின் நிலத்திலே அவனுக்கு எதிர்ப்பட்டார்கள்*" என்ற இந்த குறிப்பை கவனிக்க தவறிவிடாதீர்கள் (வலியுறுத்தல் என்னுடையது).

யெகூ யோராமின் மேல் அம்பு எய்து (9:24) மற்றும் தன் சேனாதிபதியாகிய பித்காரை நோக்கி:

> ... அவனைஎடுத்து, யெஸ்ரயேலியனாகிய நாபோத்தின் வயல் நிலத்தில் எறிந்து போடு; நானும் நீயும் ஒரு சோடாய் அவன் தகப்பனாகிய ஆகாபின் பிறகே குதிரை ஏறி வருகிறபோது, கர்த்தர் இந்த ஆக்கினையை அவன் மேல் சுமத்தினார் என்பதை நினைத்துக்கொள். நேற்று நாபோத்தின் இரத்தத்தையும், அவன் குமாரரின் இரத்தத்தையும் கண்டேன் அல்லவா என்றும், இந்த நிலத்தில் உனக்கு நீதியைச் சரிக்கட்டுவேன் என்றும் அப்பொழுது கர்த்தர் சொன்னாரே; இப்போதும் அவனை எடுத்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே இந்த நிலத்தில் எறிந்துபோடு என்றான் (9:25, 26).

அகசியா ராஜா காயம் பட்டவனாய் தப்பி ஓடி, சிறிது காலம் கழித்து மரித்துப் போனான் (9:27, 28).

யெகூ யெஸ்ரயேலை வந்தடைந்தபோது, தளபதி தன் மகனை கொன்றுபோட்டான் என்ற செய்தி கெட்ட பெயரை எடுத்திருந்த யெசபேலை எட்டியது (காண்க 9:30, 31). அவள், "தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக் கொண்டு ..." (9:30ஆ). அவள் யெகூவை மயக்க/வசப்படுத்த முடியும் என நம்பிக்கொண்டிருந்தாளா? ஒருவேளை அப்படி எண்ணியிருக்கலாம்; அவள் இளமையாக இல்லாதிருந்தபோதிலும், அநேகமாக அவள் இன்னமும் கவர்ச்சியாக இருந்தாள். அநேகமாக, அவள் ஒரு "அரசியைப் போல மரிக்க விரும்பினாள்." அவள் துக்கங்கொண்டாடுகிறவர்கள் தன் பிரேதத்தை பார்த்து, தன் அழகை பாராட்டுவார்கள் என எதிர்பார்த்தாள்.

யெகூ பட்டணத்தின் நுழைவாயிலில் பிரவேசித்தபோது, அவள் அரண்மனை ஜன்னல் வழியாய் எட்டிபார்த்து,[9] "தன் ஆண்டவனை கொன்ற சிம்ரி க்ஷேமம் அடைந்தானா?" என்றாள் (9:30இ, 31). அவள் யெகூவை "சிம்ரி" என அழைத்தாள், ஏனெனில் அவன் நாற்பத்தி ஐந்து வருடங்களுக்கு முன்பு சிம்ரி செய்ததுபோல கொலை செய்து ஆட்சியை பிடித்தான் (காண்க 1 இராஜாக்கள்

16:8-10). அநேகமாக அதில் "சிம்ரி தற்கொலை செய்து கொண்டு சாவதற்கு முன், ஏழுநாட்கள் மட்டும் தான் அரசாண்டான், உன் கதி என்னவோ" என்ற அர்த்தத்தில் அவள் சொல்லியிருக்கலாம் (9:15).

இந்த நேரத்தில் அரண்மனை ஜன்னல் வழியாக சிலர் எட்டிபார்த்தார்கள். அப்பொழுது யெகூ, "என் பட்சத்தில் இருக்கிறது யார்? யார்?" என்றான் (9:32அ). இரண்டு/மூன்று பயந்த பிரதானிகள் தலையசைத்தனர் (9:32ஆ). "அவளை கீழே தள்ளுங்கள்" என்று யெகூ கட்டளையிட்டான் (9:33அ). அதைத் தொடர்ந்து நடந்த பயங்கர காட்சி வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. "அப்படியே அவளைக் கீழே தள்ளினதினால், அவளுடைய இரத்தம் சுவரிலும் குதிரைகளிலும் தெளித்தது; அவன் [யெகூ] அவளை மிதித்துக் கொண்டு [தன் இரதம் மற்றும் குதிரைகளால்] ..." (9:33ஆ) சென்றான்.

அவனை எதிர்க்க ஒருவரும் இல்லாதிருந்ததால், யெகூ அரண்மனையை தன் வசம் எடுத்துக்கொண்டு, ஒரு புதிய ராஜாவாக அங்கே தன் முதல் உணவை சாப்பிட்டான் (9:34அ). அந்த உணவு அவனை ஓரளவு மென்மையானவனாக மாற்றியிருக்க வேண்டும் - ஏனெனில் யெசபேல் பேய்த்தனமான வழிகளில் நடந்திருந்தாலும் - அவள் ஒரு நல்லடக்கத்திற்குத் தகுதியானவள் என்று அவன் தீர்மானித்தான்.[10] அவன் தன் பணியாளர்களை நோக்கி, "நீங்கள் போய் சபிக்கப்பட்ட அந்த ஸ்திரியை பார்த்து, அவளை அடக்கம்பண்ணுங்கள்; அவள் ஒரு ராஜ குமாரத்தி" என்றான் (9;34ஆ). யேசபேல் சீதோனிய ராஜாவின் மகளாயிருந்தது (1 இராஜாக்கள் 16:31) மட்டுமல்ல, அவள் ஒரு ராஜாவின் மனைவியாயும், ஒரு ராஜாவின் தாயாயும், பல ராஜாக்களுக்கு பாட்டியாயும் இருந்தாள்.

இருப்பினும், அவர்கள் யேசபேலை அடக்கம் செய்ய சென்றபோது, "அவளுடைய தலையோட்டையும் கால்களையும் உள்ளங்கைகளையும் அல் லாமல் வேறொன்றையும் காணவில்லை" (2 இராஜாக்கள் 9:35); உடலின் பிற பகுதிகளை நாய்கள் தின்றுவிட்டன. கொடூரமான பிணந்தின்னிகள் "ஒரு செத்த மானை தின்பது போல், செத்த ராணியை விரைவாக தின்றுவிட்டன" என சிலர் கூறுகின்றனர். வேலையாட்கள் என்ன நடந்தது என்பதை கூறியபோது, யெகூ அதில் எலியாவின்,

> *... இது கர்த்தர் திஸ்பியனாகிய எலியா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக் கொண்டு சொன்ன வார்த்தை; யெஸ்ரயேலின் நிலத்திலே நாய்கள் யேசபேலின் மாம்சத்தை தின்னும் என்றும், இன்னது யேசபேலென்று சொல்லக்கூடாதபடிக்கு, யேசபேலின் பிரேதம் யெஸ்ரயேலின் நிலத்திலே வயல்வெளியின்மேல் போடும் எருவைப் போல் ஆகும் என்றும் சொன்னாரோ என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறினதை கண்டான் (9:36, 37).*

யேசபேல் "அழகு நிலைப்பதில்லை" (நீதிமொழிகள் 31:30; LB*) என்பதை கடினமான வழியில் கற்றுக்கொண்டாள். துக்கங்கொண்டாடுகிறவர்கள் அவள் அழகை பாராட்டும்படி அவள் உடல் பார்வைக்கு வைக்கப்படாது; அவள் உடல் ஒருபோதும் பார்வைக்கு வைக்கப்பட்டு அடக்கம் செய்யப்படாது.*

இப்படியாக, யெகூ தன் இருபத்தி எட்டாண்டு கால ஆட்சியை

துவங்கினான் (10:36). அதிகாரம் 10ல், யெகூ எப்படி ஆகாபின் குடும்பத்தாரை கொல்லும் தன் பணியை செய்தான் மற்றும் பாகால் வணக்கத்தாரை முற்றிலும் அழித்தான் என்பது விவரிக்கப்பட்டுள்ளது. உடலை காப்பாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையில், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பையும் அடியோடு வெட்டி எடுத்துவிடுகிற ஒரு அடிப்படை அறுவை சிகிச்சையை நினைத்துக் கொள்ளுங்கள்.

நான்கு சத்திய வாக்கியங்கள்

ஆசகேல் மற்றும் யெகூ ஆகியோரின் கதை இரத்தம் தோய்ந்த பயங்கரமான கதையாயிருக்கிறது. இதிலிருந்து நாம் என்ன சத்தியமான பாடங்களை ஆராய்ந்து அறிய முடியும்? நாம் நம் இருதயத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய நான்கு சத்தியங்களை நான் ஆலோசனையாக சொல்லட்டும்.

1. தேவனானவர் காரியங்களை கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.

நீங்களும் நானும் ஆசகேல் மற்றும் யெகூ ஆகியோரின் போராட்ட நாட்களில் வாழ்ந்திருந்தால், "தேவன் இது சம்பவிக்க ஏன் அனுமதிக்கிறார்?" என ஆச்சரியப்பட்டிருப்போம். 2 இராஜாக்கள் 8-10 அதிகாரங்கள், தேவனானவர் சூழ்நிலையின் மேல் கட்டுப்பாட்டை இழப்பதற்கு பதிலாக, தேவன் முழுமை யான கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பதை தெரிவிக்கின்றன. ஆசகேலும் யெகூவும் அவபக்தியுள்ளவர்களாயிருந்தபோதிலும், அவர் அவர்களை நீதியை செலுத்தும் கருவிகளாக பயன்படுத்தினார்.

நாம் குழப்பத்தால் சூழப்பட்டிருக்கும்போது, அதில் ஒரு காரணத்தையும் நோக்கத்தையும் பார்ப்பது கடினமானதாக இருக்கிறது. அவ்விதமான காலங்களில், "தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறார்" என்பதை நினைவுபடுத்திக்கொள்வது நன்மையானதாக இருக்கும் (சங்கீதம் 47:8அ; காண்க 22:28). அவர் ஜாதி களை பெருகவும் அழியவும் பண்ணுகிறார் (யோபு 12:23); கர்த்தர் ஜாதி களின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார் (சங்கீதம் 33:10). எல்லாவற்றிக்கும் மேலாக, வாழ்க்கை எவ்வளவு கடினமுள்ளதாக மாறினாலும், "அன்றியும், அவருடைய தீர்மானத் தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்ற வாக்குத்தத்தத்தை நாம் பற்றிக்கொள்ளவேண்டும் (ரோமர் 8:28).

காரியங்கள் ஏன் இப்படி நடக்கிறது என்பதை நாம் எப்போதும் புரிந்து கொள்ள முடியும் என நான் கூறுவதில்லை, ஆனால் தேவன் அந்த தீமை யிலிருந்து நன்மை வரும்படி செய்யக்கூடியவர் என்பதை நினைவுகூருவது நமக்கு உதவி செய்கிறது. நாம் தரிசித்து நடப்பதற்குப் பதிலாக விசுவாசித்து நடப்பது சுலபமானதாயிருப்பதில்லை (காண்க 2 கொரிந்தியர் 5:7), ஆனால் நமது தேவனானவர் இன்னமும் தம் சிங்காசனத்தில் இருக்கிறார்; அவர் எல்லா வற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

2. தேவனுடைய வசனம் நிச்சயமானது.

தேவனுடைய வசனம் நிச்சயமானது என்ற பாடத்தை எல்லா வாசகர்களும் கற்றுக்கொள்ள வேண்டும் என பரிசுத்த ஆவியானவர் விரும்பினார்.

2 இராஜாக்கள் 8-10 அதிகாரங்களில் தேவனுடைய வசனம் நிறைவேறியது என்ற செய்தி மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனுடைய தீர்க்கதரிசி எலிசா, பெனாதாத் மரிப்பான் என முன்னுரைத்தார் (8:10), அவ்விதமே அவன் மரித்தான் (8:15). எலிசா ஆசகேல் சீரியாவின் ராஜாவாக மாறுவார் என வாக்குத்தத்தம் செய்தார் (8:13), அவ்விதமே அவன் ராஜாவானான் (8:15). எலிசா, ஆசகேல் இஸ்ரவேலை ஒடுக்குவான் எனச் சொன்னார் (8:12), தீர்க்கதரிசி சொன்னபடியே அது நடந்தேறியது (காண்க 10:32, 33; 13:3, 22). எலிசா, நாபோத்திடமிருந்து பிடுங்கப்பட்ட திராட்சை தோட்டத்தில் அவனுடைய இரத்தத்திற்காக பழிவாங்கப்படும் என கூறினார் (1 இராஜாக்கள் 21:19), அது அவ்விதமே சம்பவித்தது (2 இராஜாக்கள் 9:21, 25, 26). எலியா ஆகாபிடம் அவன் சந்ததியார் எல்லாரும் அழிக்கப்படுவார்கள் என கூறினார் (1 இராஜாக்கள் 21:21), இந்த தீர்க்கதரிசனமும் அப்படியே நிறைவேறியது (2 இராஜாக்கள் 10:17).

யெகூவுக்கு தீமையான ஒரு நோக்கம் இருந்த போதிலும், அவன், "கர்த்தருடைய வார்த்தைகளில் ஒன்றும் தரையிலே விழவில்லை" என்று அவன் பேசியபோது, அவன் உண்மையை பேசுகிறவனாயிருந்தான் (2 இராஜாக்கள் 10:10). "தரையில் விழுவது" என்பது "அழிந்து போவது" அல்லது "நிறைவேறாமல் போவது" என்பதாயிருந்தது, NIV மொழிபெயர்ப்பில், "கர்த்தர் பேசினவைகளில் ... ஒரு வார்த்தைகூட ... தவறாது" என்றுள்ளது.

இரண்டு இராஜாக்கள் 8-10 அதிகாரங்கள், கர்த்தர் இது நடக்கும் என்று கூறும்போது, அது கண்டிப்பாக நடக்கும் என்பதை தெளிவுபடுத்துகிறது. எல்லா தீய சக்திகளும் ஒன்று சேர்ந்து சதி செய்தாலும், தேவனுடைய வார்த்தை நிறைவேறும் என்பது நிச்சயமானதாயிருக்கிறது. இது உண்மை யாயிருக்கிறபடியால் துன்மார்க்கர் அழுது புலம்புவார்கள் (காண்க மத்தேயு 7:13, 14; 1 கொரிந்தியர் 6:9-10; 16:22; கலாத்தியர் 5:19-21). இது நிச்சயமான தாயிருக்கிறபடியால், தேவபக்தியுள்ளவர்கள் மகிழ்ந்து களிகூருவார்கள் (காண்க ஏசாயா 1:18; யோவான் 14:1-3; 1 யோவான் 1:7; 3:2).

3. பாவத்தின் விளைவுகள் பயங்கரமானவைகளாயிருக்கின்றன.

பாவத்தின் விளைவுகள் பயங்கரமானவைகள் என்பது 2 இராஜாக்கள் 8-10 அதிகாரங்களின் தாக்கத்தக்க செய்தியாகவுள்ளது. சாத்தான் கீழ்ப்படியாமையின் வழியை கவர்ச்சியானதாக காட்டுகிறான்; ஆனால் முடிவில், "துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது" என கர்த்தர் கூறுகிறார் (நீதிமொழிகள் 13:15; KJV). "மனுஷனுக்குச் செம்மையாகத் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதிமொழிகள் 16:25). கவனமுள்ள தனிநபர்கள், கலாத்தியர் 6:7, 8அ இல் உள்ள: "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்"; என்பது உண்மையான சத்தியம் என்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பாவமானது சம்பத்தப்பட்ட பாவிக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் பயங்கரமான விளைவுகளை கொண்டுவருகிறது என்பதை மக்கள் மனதில் பதிய வைப்பதற்காக, தேவன் அவ்வப்போது தெளிவான மற்றும் உணர்ந்துகொள்ளக் கூடிய பாடங்களை கொடுத்துள்ளார். பெருவெள்ளம் ஆயிரக்கணக்கான முரட்டாட்டமுள்ள ஆத்துமாக்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களை அழித்துச் சென்றதை சிந்தியுங்கள். சோதோம் மற்றும் கொமோரா என்ற இரண்டு

பட்டணங்கள் சுவடு தெரியாமல் முற்றிலுமாக அழிக்கப்பட்டதை பரிசீலியுங்கள். எகிப்தில் குடும்பங்களின் முதல் ஆண்பிள்ளை மரணம் மற்றும் இஸ்ரவேலரை பின் தொடர்ந்த எகிப்திய போர்வீரர்கள் செங்கடலில் மூழ்கி மாண்டதை சிந்தியுங்கள். ஆசகேல் இஸ்ரவேலரை தண்டித்தது மற்றும் யெகூ ஆகாபின் குடும்பத்தாரையும், பாகால் வழிபாட்டுக்காரரையும் அழித்தது ஆகியவை, தேவன் கீழ்ப்படியாமையை லேசானதாக எடுத்துக்கொள்வதில்லை என்பதை உணர்த்தும் கூடுதல் சம்பவங்களாக உள்ளன.

இரண்டு இராஜாக்கள் 8-10 அதிகாரங்கள், நாம் நமது இருதயங்களையும் வாழ்க்கையையும் சோதித்துப் பார்க்கும்படி தூண்டவேண்டும். நம்மிடத்தில் பாவம் மற்றும் முரட்டாட்டம் இருப்பதை காண்போமானால், நாம் மனந்திரும்பி, உடனே தேவனிடத்தில் திரும்ப வேண்டிய அவசியமிருக்கிறது!

4. நமது இருதயங்கள் தொடப்படவேண்டும்.

இந்த நான்காவது சத்தியம் "துக்கித்து அழுத ஒரு மனிதன்" என்ற நமது பாடத்தின் மைய கருத்துக்கு நம்மை மீண்டும் அழைத்துச் செல்கிறது. ஆண்டுகளாக, இஸ்ரவேல் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்து வந்தது. அவர்கள் தேவனை விட்டு விலகி, புற "தெய்வங்கள்" பின்னாய் சென்றுவிட்டனர். அவர்கள் பொல்லாப்பிற்கு அளவில்லாமல் போய்விட்டது. கர்த்தர் தீர்க்கதரிசிகளை அனுப்பி அவர்களை மனந்திரும்ப அழைத்தபோது, அவர்கள் தேவனுடைய செய்தியாளர்களை அவமதித்து, அவர்களில் பலரை கொலைசெய்துவிட்டனர். அவர்கள் இந்த மிகக் கடுமையான தண்டனையை தங்கள் மேல் வருவித்துக்கொண்டார்கள். இருந்த போதிலும், எலிசா அவர்கள் முடிவை அறிந்தபோது (8:12) அவர் மகிழ்ந்து, "தண்டனையின் காலம் வந்துவிட்டது, அவர்கள் தங்கள் தகுதிக்கேற்றதை பெறுகிறார்கள்!" என்று கூறவில்லை. மாறாக "தேவனுடைய மனிதர் அழுதார்" (8:11).

சற்று முன்னர், நான் பாவங்களின் விளைவுகளைக் குறித்து குறிப்பிட்டேன். பாவத்தின் விளைவுகளில் சில இந்த உலகத்திலேயே இருக்கின்றன (காண்க ரோமர் 1:27ஆ); பெரும்பாலானவைகள் இனிவரும் உலகத்தில் இருக்கப்போகின்றவைகளாக இருக்கின்றன (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15). துன்மார்க்கர் "எதை விதைத்தார்களோ, அதை அவர்கள் அறுக்க" நாம் காணும்போது (காண்க கலாத்தியர் 6:7, 8), அல்லது கீழ்ப்படியாதவர்கள் மேல் வரவுள்ள நித்திய தண்டனையை குறித்து நாம் வாசிக்கும் போது (மத்தேயு 7:21-23; 8:12; மாற்கு 9:47, 48; வெளிப்படுத்தின விசேஷம் 21:8), நம்முடைய பதிலளிப்பு என்னவாக இருக்கிறது? நாம் சந்தோஷப்படுகிறோமா அல்லது துக்கப்படுகிறோமா? இஸ்ரவேலருக்கு நேரிடவிருந்த தற்காலிக தண்டனையை குறித்து சிந்தித்தபோது, எலிசா அழுதாரென்றால், நாம் அன்றாடமும் எந்த மக்களை சந்திக்கிறோமோ, அந்த மக்கள் பெறப்போகும் நித்திய தண்டனையை குறித்து சிந்திக்கும் போது நாம் எத்தனை அதிகமாய் அழவேண்டும்!

ஒரு சபை ஊழியர் இல்லாமல் இருந்தது. அவர்கள் பல சகோதரர்கள் வந்து பிரசங்கம் செய்யும்படி அழைத்தனர். ஒரு ஞாயிற்றுக் கிழமை, ஒருவர் வந்து நரகத்தை குறித்து பிரசங்கம் செய்தார். அடுத்த ஞாயிறன்று வந்தவரும், அதே நரகத்தை குறித்தே பிரசங்கம் செய்தார். அவர்கள் இரண்டாவது நபரை தங்கள் பிரசங்கியாராக இருக்கும்படி கேட்க தீர்மானித்தார்கள். சிறிது காலம்

சென்றபின், யாரோ ஒருவர் அவர்கள் ஏன் அந்த தெரிவை செய்தார்கள் என கேட்டார். அதற்கு அவர்கள், "முதல் பிரசங்கியார் மக்கள் நரகத்திற்குச் செல்ல இருக்கிறார்கள் என்று பிரசங்கித்தார், மற்றும் அவர் மகிழ்ச்சியாக நடந்து கொண்டார். இரண்டாவது பிரசங்கியாரும் மக்கள் நரகத்திற்கு செல்ல இருக்கிறார்கள் என்று பிரசங்கித்தார், ஆனால் அவர் துக்கமாக நடந்து கொண்டார். நாங்கள் எல்லாரும் இரண்டாவது செய்தியாளரை விரும்பி தெரிந்தெடுத்தோம்" என்றார்கள்.

எங்கோ ஒரு இடத்தில் ஒரு கருத்தரங்கு நடந்தது, அதின் தலைப்பு, "நகரத்தை நோக்கிச் செல்லும் ஒரு உலகில், வரண்ட கண்களையுடைய ஒரு சபை" என்றிருந்ததை நான் பார்த்தேன். நம்மை சுற்றிலும் இருக்கிறவர்கள் நரகத்தை நோக்கி விரைந்து செல்வதை பார்த்துக்கொண்டு, நாம் வாளாயிருப்பது சாத்தியமானதா? இயேசுவானவர் தம்மை நிராகரித்த, தம்மை சிலுவையில் அறையவிருந்த, அதே சமயத்தில் அழிக்கப்படவிருந்த அந்த எருசலேம் பட்டணத்தை பார்த்தபோது - அவர் அழுதார் (லூக்கா 19:41-44; காணவும் மத்தேயு 23:37, 38). பவுல், சிந்திக்க சாத்தியமான எல்லா பிரச்சனைகளும் நிறைந்திருந்த கொரிந்து சபைக்கு எழுதினபோது - அவர் அழுதார் (2 கொரிந்தியர் 2:4). அவன், "ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?" என்று கேட்டார் (2 கொரிந்தியர் 11:29ஆ).

நாம் இழந்துபோனவர்களைப் பற்றி கரிசனையுள்ளவர்களாக இருக்கிறோமா? நாம் அவர்களுக்காக உண்மையில் கரிசனைப்படுவோமானால், சாக்குபோக்குகளை கூறுவதை நிறுத்திவிட்டு, மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல துவங்குவோம். இதுதான் அவர்களுடைய ஒரே நம்பிக்கையாயிருக்கிறது (ரோமர் 1:16)!

முடிவுரை

ஒரு சோகமான நிகழ்விலிருந்துகூட, ஒன்றும் கற்றுக்கொள்ளாமலிருப்பது மற்றும் எதையும் மேம்படுத்தாமலிருப்பது தான் மிகப்பெரிய சோகமாக இருக்கிறது. 2 இராஜாக்கள் 8-10 அதிகாரங்களின் சோக நிகழ்வுகளில் இருந்து, நாம் நான்கு அடிப்படை சத்தியங்களை எடுத்துள்ளோம்: (1) *தேவனானவர் காரியங்களை கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்:* நாம் அமைதியாக இருக்க வேண்டும். (2) *தேவனுடைய வசனம் நிச்சயமானது:* நாம் நம்பிக்கையோடு இருக்கமுடியும். (3) *பாவத்தின் விளைவுகள் பயங்கரமானவைகளாயிருக்கின்றன:* நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். (4) *நம் இருதயங்கள் தொடப்படவேண்டும்:* நாம் கரிசனையுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியம்.

இந்த சத்தியங்களை நாம் கற்றுக்கொள்வோமா? என்பதுதான் இப்போது நமக்கு முன்பாக உள்ள கேள்வியாக உள்ளது. மிக முக்கியமாக இவைகளின் வாயிலாக நமது ஜீவியங்கள் மேம்படுத்தப்படுமா?

குறிப்புகள்

[1]சில மூலப்பிரதிகளில், "நீ உண்மையிலேயே சுகமாகமாட்டாய்" என்றுள்ளது. ஆனால் "நீ சுகமாவாய்" "என்பது தெரிந்து கொள்ளப்படத்தக்க வாசிப்பாயிருக்கிறது"

(J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible*, ed. Kenneth Barker [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985], 537). [2]James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings*, James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 100-102. [3]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 61. [4]Coffman added that "even today, there is no such thing as a 'kind' war" (Coffman, 103). [5]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary*, Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 214. [6]*சிலர் இந்த சந்தர்ப்பத்தில் எலிசா எண்ணையை ஊற்றி ஆசகேலை "அபிஷேகம்" செய்தார் என்று நம்புகிறார்கள், ஆனால் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை. ஆசகேலுடைய "அபிஷேகம் பண்ணப்படுதல்" என்பது எலிசா தாமே பெற்றதைப் போல இருந்திருக்கும் - தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக (வார்த்தை அல்லது செய்கையில்) "பிரித்து வைக்கப்பப்படுதலாக" இருந்தது.* [7]Wiseman, 214. [8]*"அரிதாக பாரம்பரியம் என்றழைக்கப்படக்கூடிய ரபிகளின் கதை 'அமித்தாயின் மகனாகிய யோனா' " தான் இந்த வேலைக்காரன் என்றழைக்கிறது* (G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary*, vol. 5, *1 & 2 Kings*, ed. H. D. M. Spence and Joseph S. Exell [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950], 188). [9]*"க்ஷேமம் அடைந்தானா?" (shalom) என்ற வார்த்தையில் ஒப்புரவாகுதலுக்கான ஒரு முயற்சி இருப்பதாக காண்கிறார்கள். ஆனால் பின்வரும் வார்த்தைகள் இந்த கேள்வி ஒரு வஞ்சக புகழ்ச்சியாக இருக்கும்படி எதிர்பார்க்கப்பட்டதென்ற ஆலோசனையை கொடுக்கிறது.* [10]*யேசபேல் அடக்கம் பண்ணப்படமாட்டாள் என்று தீர்க்கதரிசியின் புத்திரன் கூறியதை அவன் மறந்து போயிருந்தானா? (காண்க 2 இராஜாக்கள் 9:10.)*

18

அழிக்கப்பட முடியாதிருந்த ஒரு மனிதன்

[2 இராஜாக்கள் 11:1-13:25]

நாம் எலிசாவின் வாழ்க்கையில் இறுதி ஆண்டுகளினூடே விரைவாக கடந்து போகிறோம். 2 இராஜாக்கள் 11ஆம் அதிகாரத்தில் அத்தாலியாள் யூதாவின் ஆட்சியை கைப்பற்றுவதையும், பின்பு யோவாஸ் தனக்குரிய இடத்தில் ராஜாவாக ஏற்படுத்தப்படுவதையும் குறித்து வாசிக்கிறோம். அதிகாரம் 12 யோசியா தேவாலயத்தையும் அதின் வழிபாட்டையும் மீட்டமைப்பதைக் கூறுகிறது. அதி காரம் 13இல் நாம் மீண்டும், எலிசா தன் ஊழியத்தை செய்து கொண்டிருந்த, வட இராஜ்யமாகிய இஸ்ரவேலின் கதையை எடுக்கிறோம். யெகூ மரித்தபோது, அவன் மகன் யோவாகாஸ் இஸ்ரவேலின் ராஜாவாக முடிசூட்டப்பட்டான் (13:1; காண்க 10:35). பதினேழு ஆண்டு கால ஆட்சிக்குபின், யோவாகாஸ் மரித்தான்; பின் அவன் மகன் யோவாஸ்[1] ராஜாவானான் (13:9). யோவாஸ் பதினாறு வருஷம் அரசாண்டு, "கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்" (13:11). அந்த பத்தாண்டுகளில் எலிசா குறிப்பிடப்படவில்லை. எப்படியிருப்பினும், "போராட்ட காலங்களுக்கான தேவனுடைய மனிதர்" பணி ஓய்வு பெற்றிருக்கவில்லை. அவர் தொடர்ந்து தன் ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தார் என்ற ஒரு ஆலோசனையை நான்முன் வைக்கிறேன். இரண்டு உண்மைகளின் அடிப்படையில் நான் இந்த முடிவுக்கு வருகிறேன்:

- *நமது முந்திய படிப்புகளில், எலிசாவின் குணாதிசயம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை பார்க்கும்போது, அவர் பணியை விட்டு விடக்கூடிய ஒரு மனிதராக தெரியவில்லை.*
- *எலிசா தன் வாழ்க்கையின் முடிவை நெருங்கினபோது, யோவாஸ் ராஜா, "என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாயிருந்தவரே!" என்று குறிப்பிட்டான் (13:14ஆ). இந்த வார்த்தைகள் எலிசா தொடர்ந்து தேசத்தின் ஆவிக்குரிய ஆலோசகராக (தகப்பன்) மற்றும் தேவனுடைய பாதுகாப்பு முகவராக ("இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமானவர்") இருந்தார் என்பதை சுட்டிக்காட்டுகிறது.*

எப்படியிருப்பினும், எவ்வளவு பெரிய ஒரு வாழ்க்கையாக இருந்தாலும், அது ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும் (காண்க எபிரெயர் 9:27அ). இந்த பாடத்தில், தீர்க்கதரிசியின் வாழ்க்கையின் அஸ்தமனத்தை நாம் காண்போம் - அது எவ்வளவு பிரமிக்கத்தக்க அஸ்தமனமாக இருந்தது![2] நான் இந்த இறுதி பாடத்தை "அழிக்கப்படமுடியாதிருந்த ஒரு மனிதன்" என அழைக்கிறேன்.

அவர் மரித்து கொண்டிருந்தார், ஆனால் இன்னமும் தேவனுடைய தீர்க்கதரிசன மனிதராயிருந்தார் (13:14-19)

இந்த கதை துவங்குகையில், "எலிசா மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்தான்" (வசனம் 14அ). அவர் எண்பது மற்றும் தொண்ணூறு வயதுக்கு இடைப்பட்டவராக இருந்தார்.[3] அவருடைய வியாதி, வயது முதிர்ந்தவர்களை பாதிக்கக் கூடிய வியாதிகளில் ஒன்றாக இருந்திருக்கக் கூடும்.

"இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ்" கரிசனப்பட்டு, "அவனிடத்திற்கு போனான்" (வசனம் 14ஆ). எலிசா எங்கிருந்தார் என்பது நமக்கு தெரிவதில்லை, ஆனால் அவர் சமாரியாவிலிருந்து சற்று தொலைவில் இருந்திருக்கலாம். சம்பிரதாயப்படி, ராஜாக்கள் மக்களிடம் செல்லமாட்டார்கள்; மக்கள் அவர்களிடத்தில் வரவழைக்க கூடுவார்கள். யோவாஸ் பயணம் செய்து போய் எலிசாவை பார்த்தது, தீர்க்கதரிசியின்மேல் அவன் வைத்திருந்த மரியாதையைக் காட்டுகிறது.

யோவாஸ் எலிசாவின் படுக்கை அருகே வந்து, "அவன் மேல் விழுந்து, அழுது,[4] என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாயிருந்தவரே!" என்றான் (வசனம் 14இ). எலியா இந்த உலகத்தைவிட்டு பிரிந்து சென்றபோது, எலிசாவால் பேசப்பட்ட அவனுடைய வார்த்தைகளை எதிர் ஒலித்தன (2:12). அந்த வார்த்தைகள் எலியாவைப் போல், எலிசாவும் தேசத்திற்கு பெலனாக இருந்தார் என்பதை அங்கீகரித்தது. இருப்பினும், எலியாவை போல, எலிசா தனக்குப்பின்வரும் ஒருவரை விட்டுச்செல்லவில்லை. ராஜாவின் வாக்கியத்தில் உணர்த்தப்படும் கேள்வி என்னவென்றால்: "நாங்கள் இப்போது என்ன செய்வது?"

எலிசா தன் பெலத்தை இழந்த நிலையிலும், தன்னுடைய மரணம் என்பது தேவன் தம்முடைய ஜனங்களோடும் இனிமேலும் இருப்பதில்லை என பொருள்படாது என்பதை உறுதிசெய்கிறார். எலிசா இதை ஒரு அடையாள செயல் மூலம் செய்தார் (தீர்க்கதரிசிகள் அடிக்கடி செய்தபடியாக; காண்க நடபடிகள் 21:10, 11). அவன் ராஜாவை நோக்கி, "வில்லையும் அம்புகளையும் பிடியும்" என்றான் (2 இராஜாக்கள் 13:15அ). ஆயுதமணிந்தவர்கள் ராஜாவோடு வந்திருப்பார்கள். இவர்கள் ஒருவனிடத்திலிருந்து வாங்கி, யோவாஸ் "அப்படியே வில்லையும் அம்புகளையும் பிடித்தான்" (வசனம் 15ஆ).

எலிசா யோவாசை நோக்கி, "உம்முடைய கையை வில்லின் மேல் வையும்" என்றான் (வசனம் 16அ). வேறு வார்த்தைகளில் கூறுவதெனில், "எய்யத்தக்க நிலையில் வில்லை பிடித்துக் கொள்" என்று கூறலாம். ராஜா இப்படியாக வில்லை பிடித்திருக்கையில், "எலிசா தன் கைகளை ராஜாவுடைய கைகளின் மேல் வைத்து ..." (வசனம் 16ஆ). தீர்க்கதரிசி இதை செய்வதற்கு எழுந்து நிற்க தள்ளாடினாரா? அல்லது ராஜா எலிசா தன் தளர்ந்த கைகளை இளவயது மனிதனுடைய கைகளின் மேல் வைக்கத்தக்கதாக அவன் அவருடைய படுக்கையருகில் முழங்காலில் நின்றானா? எனக்கு தெரியாது - ஆனால் யெகோவாவின் உதவியில்லாமல் யோவாஸ் எதிரிகளை தோற்கடிக்க முடியாது என்பதை இந்த செய்கை வலியுறுத்தியது. "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"

என்று பின்னாளில் ஒரு யூத தலைவருக்கு சொல்லப்பட்டது (சகரியா 4:6).

எலிசா அங்கிருந்த ஒருவனை நோக்கி, "கிழக்கே இருக்கிற ஜன்னலை திறவும்" என்றான் (2 இராஜாக்கள் 13:17அ). "கிழக்கே இருக்கிற" என்பது ஆசகேல் இஸ்ரவேலரிடமிருந்து கைப்பற்றிய, யோர்தானுக்கு கிழக்கு திசையிலிருக்கிற பகுதியாக இருந்திருக்கலாம் (காண்க 10:32, 33). ஜன்னல் கள் திறக்கப்பட்டபோது, எலிசை ராஜாவை பார்த்து "எய்யும்!" என்று கட்டளையிட்டான். அவன் "எய்தான்" (13:17ஆ).

பின்பு தீர்க்கதரிசி, "அது கர்த்தருடைய ரட்சிப்பின் அம்பும், சீரியரினின்று விடுதலையாக்கும் ரட்சிப்பின் அம்புமானது; நீர் ஆப்பெக்கிலே சீரியரைத் தீர முறிய அடிப்பீர்" என்றான் (வசனம் 17இ). ராஜாவுக்கு சொல்லப்பட்ட செய்தி இரண்டு வகையாக இருந்தது: முதலாவது, அவன் எதிரியை தாக்குவதில் ஒரு அம்பு எய்வது போல, தைரியமாயிருக்க வேண்டியிருந்தது (ஒப்பிடுக யோசுவா 8:18). இரண்டாவதாக, அவன் அவ்விதம் செய்வானானால், கர்த்தர் அவனுக்கு வெற்றியை கொடுப்பார். ஆப்பெக்கில் வெற்றி என்பது குறிப்பாக சொல்லப்பட்டது. ஆப்பெக் என்பது சமாரியாவிலிருந்து தமஸ்கு செல்லும் வழியில், கலிலேயாக் கடலின் கிழக்கே சில மைல்கள் தொலைவில் அமைந்தி ருந்தது (*எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்கள்* என்ற வரைபடத்தை காணவும்). ஒரு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், ஆகாப் ஆப்பெக்கிலே சீரியருக்கெதிரான ஒரு யுத்தத்திலே பெரிய வெற்றி பெற்றான் (1 இராஜாக்கள் 20:26-30).

தேவன் வெற்றியை வாக்குத்தத்தம் செய்தார் - ஆனால் தேவனு டைய வாக்குத்தத்தங்கள் - வார்த்தைகளினால் சொல்லப்பட்டிருந்தாலும் அல்லது உணர்த்தப்பட்டிருந்தாலும் - நிபந்தனைக்கு உட்பட்டவைகளாக இருக்கின்றன. எலிசா ராஜாவை நோக்கி, "அம்புகளை பிடியும்" என்றான் (2 இராஜாக்கள் 13:18அ). அவைகள் அம்பறாத்தூணியிலிருந்த அம்புகளாக இருந்திருக்கலாம். பின்பு தீர்க்கதரிசி ராஜாவை நோக்கி, "தரையிலே அடியும்" என்றுன் (வசனம் 18ஆ).[5]

ராஜா இந்த அறிவுரையினால் குழம்பிப்போயிருந்தானா? அவன் அம்புகளை எடுத்து, "தரையிலே மூன்று தரம் அடித்து நின்றான்" (வசனம் 18இ). அவன் மூன்று தரம் அடித்து நிறுத்தியபோது, "தேவனுடைய மனுஷன் அவன் மேல் கோபமாகி; நீர் ஐந்து ஆறு விசை அடித்தீரானால், அப்பொழுது சீரியரைத் தீர முறிய அடிப்பீர், இப்பொழுதோ சீரியரை மூன்றுவிசைமாத்திரம் முறிய அடிப்பீர்" என்றான் (வசனம் 19).[6]

"அது நியாயமல்ல, எத்தனை முறை தரையில் அடிக்க வேண்டும் என்று எலிசா சொல்லவில்லை. அவன் தரையில் அடியும் என்று மட்டும் சொன்னான் மற்றும் ராஜா அவன் சொன்னபடி செய்தான். எலிசா கோபப்படவும் மற்றும் ராஜாவை தண்டிக்கவும் உரிமைபெற்றிருக்கவில்லை!" என நாம் சிந்திக்கலாம். அநேகமாக, ராஜா எலிசா நிறுத்தும் என்று சொல்லுகிறவரை தொடர்ந்து அடிக்கும்படி எதிர்பார்க்கப்பட்டார். யோவாஸ் "இந்த அம்புகளைப்பற்றிய நிகழ்ச்சிக்கும்" அவன் சீரியரை ஜெயிக்க முடியுமா அல்லது ஜெயிக்க முடியாதா என்பதற்கும் எந்த சம்பந்தமும் இருக்கவில்லை என நினைத்தானா? அவன், "வயதான மனிதனின் விளையாட்டை விளயாடுவதில் சோர்வுற்றுனா"? அவன் தன் மனிதர் முன்பாக "இப்படிப்பட்ட ஒரு மதியீனமான காரியத்தை"

செய்வதற்கு சங்கடப்பட்டானா? யோவாஸின் இருதயத்தை நாம் அறிவதில்லை, ஆனால் தேவன் அறிந்திருந்தார். ராஜாவின் வெற்றிகளை எது மட்டுப்படுத்தியது? அவனுடைய அளவிடப்பட்ட விசுவாசம், வைராக்கியம் மற்றும் விடாமுயற்சி தான் அவைகளை மட்டுப்படுத்தியது.

இந்த சம்பவத்திலிருந்து, "குறைந்த அளவு செய்தல்" என்ற ஆபத்தான பாடம் உட்பட, பல பாடங்களை நாம் எடுக்க முடியும். எப்படியிருந்தபோதி லும், தன் மரண படுக்கையில் கூட, எலியா தேவனுடைய தீர்க்கதரிசன மனிதனாக இருந்தார் என்பதை நான் வலியுறுத்தி கூற விரும்பிகிறேன். அவர், "சீரியரை மூன்று விசை மாத்திரம் முறிய அடிப்பீர்" என்றார் (வசனம் 19ஆ), மற்றும் அது அப்படியே நடந்தேறியது. ஆறு வசனங்கள் கழித்து, "மூன்று விசை யோவாஸ் அவனை (சீரிய ராஜாவை) முறிய அடித்து இஸ்ரவேலின் பட்டணங்களைத் திரும்பக் கட்டிக் கொண்டான்" (வசனம் 25ஆ) என்று நாம் வாசிக்கிறோம்.

அவர் மரித்துப் போயிருந்தார், ஆனால் இன்னமும் தேவனுடைய வல்லமையின் மனிதராயிருந்தார் *(13:20, 21)*

யோவாஸ் பார்த்துச் சென்ற சிறிது காலம் கழித்து, "எலிசா மரண மடைந்தான்" (வசனம் 20அ). எலியா சுழல்காற்றில் உலகத்தை விட்டு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தார். ஆனால் எலிசா அப்படிப்பட்ட ஒரு பிரமிப்பான விதத்தில் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மாறாக, அவர் மனுக்குலத்தின் பொதுவான மரணத்தை அவர் பகிர்ந்து கொண்டார் (காண்க எபிரெயர் 9:27அ). அவருடைய மரணத்திற்கு பிறகு, "அவனை அடக்கம் பண்ணினார்கள்" (2 இராஜாக்கள் 13:20ஆ). அடக்கத்தில் உடலை குளிப்பாட்டுவது, தூய வஸ்திரங்ளையும் மற்றும் வாசனை திரவியங்களையும் கொண்டு உடலை சுற்றிகட்டுவது போன்றவை அடங்கியிருந்தன. CJB மொழி பெயர்ப்பு, "அவர்கள் அவனை ஒரு கல்லறை குகையில் வைத்தார்கள்" என்று கூறுகிறது. "ஜொசிபஸின் கூற்றுப்படி, ... அவனுடைய அடக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருந்தது."[7]

எலிசா மரிக்கும் காலத்தில், கொள்ளைக்காரர்கள் இஸ்ரவேலுக்கு அடிக்கடி தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். "மறுவருஷத்திலே மோவாபியரின் தண்டுகள் தேசத்திலே வந்தது" (வசனம் 20இ). சீரியாவிலிருந்து தண்டுகள் வந்து இஸ்ரவேலை தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தார்கள் (5:2); இப்போது அவர்கள் மோவாபிலிருந்து வரும் கொள்ளையர்களையும் சமாளிக்க வேண்டியிருந்தது.[8]

ஒருநாள் ஒரு அடக்கத்தின் போது, துக்கங்கொண்டாடுபவர்கள் தூரத்திலே மோவாபியரின் தண்டுகள் இருப்பதை பார்த்தார்கள் (13:21அ). அவர்கள் தங்கள் உயிருக்கு பயந்து, தப்பி ஓட ஆயத்தப்பட்டார்கள். அவர்களுக்கு அடக்கத்தை முடிப்பதற்கு நேரம் இருக்கவில்லை, ஆனால் அவர்கள் உடலை தங்களோடு எடுத்துச் செல்லவும் முடியவில்லை, ஏனெனில் அது அவர்கள் வேகத்தை குறைத்துவிடும். அதே சமயத்தில் மோவாபியர்கள் அந்த உடலை அவமானப் படுத்தத்தக்கதாக, அதை அங்கேயே விட்டு செல்லவும் அவர்கள் விரும்ப வில்லை. அவர்கள் விரைவாக அருகிலிருந்த ஒரு குகை கல்லறையின் முகப்பு

கல்லை புரட்டி தள்ளிவிட்டு, சடங்குகள் எதுவுமின்றி அந்த உடலை அதனுள் வைத்தார்கள் (13:21அ), முகப்பு கல்லை மீண்டும் புரட்டி வைத்துவிட்டு, அவர்கள் உயிர் தப்ப ஓடிப்போனார்கள்.[9]

சம்பவம் இவ்விதமாக நடக்கையில், அந்த குகை கல்லறை எலிசாவினுடையதாயிருந்தது. "அந்த மனுஷனின் பிரேதம் அதிலே விழுந்து எலிசாவின் எலும்புகளின் மேல் பட்டபோது, அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான்" (வசனம் 21ஆ).[10] அவனுடைய நண்பர்கள் பிற்பாடு அவனுடைய உடலை எடுத்துச்செல்ல வந்தபோது, அவர்களுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? பழைய ஏற்பாட்டில், மரித்தோரை உயிரோடே எழுப்புவது தொடர்பான மூன்று சம்பவங்கள் மட்டும் சொல்லப்பட்டுள்ளன. அவைகளில் இரண்டு எலிசாவோடு தொடர்புடையவைகள், அவைகளில் ஒன்று எலிசா மரித்த பிற்பாடு நடந்தது! "யூதர்கள் இந்த அற்புதத்தை எலிசாவின் மிகப்பெரிய ஒரு மகிமையாக கருதினார்கள்."[11]

மறுபடியாக, இந்த சம்பவத்திலிருந்து பல பாடங்களை எடுத்து நம் வாழ்க்கைக்கு அவைகளை பொருத்தி பார்க்கலாம். அநேகமாக இது வசனப்பகுதியில் உள்ளடக்கப்பட்டிருப்பது, தீர்க்கதரிசியானவர் மரணம் அடைந்திருந்தாலும், அவர் சேவித்த தேவனானவர் மரிக்கவில்லை என்ற உறுதியை கொடுப்பதற்காக இருந்தது. இப்படியாக எலிசா வாக்குத்தத்தம் செய்த வெற்றி நிச்சயமானதாயிருந்தது. இருப்பினும், நான் இன்னொரு சத்தியத்தை வலியுறுத்தி கூறுவேன்: ஒரு மனிதன் செய்யக்கூடிய நன்மை என்பது இந்த உலக வாழ்க்கை பயணத்தோடு முடிவடைவதில்லை. ஒரு தேவபக்தியுள்ள மனிதனுடைய செல்வாக்கு என்பது அவனுடைய வாழ்நாளுக்கு அப்பாலும் தாண்டிச் செல்கிறது.

நீங்கள் மரித்த பிற்பாடு, உங்கள் எலும்புகள் மற்ற பிரேதங்களை தொட்டு அவைகளை உயிர்ப்பிக்காது; ஆனால் உங்கள் வாழ்க்கை தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்ததானால், நீங்கள் பேசின வார்த்தைகள் தொடர்ந்து இருதயங்களை தொட்டுக்கொண்டே இருக்கும். நீங்கள் வாழ்ந்த வாழ்க்கையின் நினைவுகள் பிறருடைய வாழ்க்கையை தொடும். உங்கள் தேவபக்தியுள்ள முன்மாதிரி உங்களை அறிந்தவர்களை தொடும் - மற்றும் வாழ்க்கை, ஆவிக்குரிய வாழ்க்கை பெலப்படுத்தப்பட்டிருக்கும். "அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" என்று ஆபேலைக்குறித்து சொல்லப்பட்டதுபோல், உங்களைக் குறித்தும் சொல்லப்படக்கூடும் (எபிரெயர் 11:4ஆ).

முடிவுரை

ரால்ப் வால்டோ எமர்சன் என்பவர், "ஒரு நாடு எப்படிப்பட்ட மனிதனை உருவாக்குகிறது என்பது தான் மனித இனத்திற்கான பரிசோதனையாயிருக்கிறது" என்று சொன்னார்.[12] ஜார்ஜ் டுரூட் என்பவர், "ஒழுக்கம் குணாதிசயம் ஒரு நாகரீகத்தில் முதன்மையானதாக உயர்த்தப்படாவிட்டால், அதின் வணிகம் எவ்வளவு ஆரவாரமுள்ளதாயிருந்தாலும் அல்லது பொருளியல் நடவடிக்கைகளில் அதன் சாதனைகள் எவ்வளவு ஆச்சரியமானவைகளாயிருந்தாலும், அந்த மனித சமூகம் சோகமானதாக மற்றும் விரைவாக தோற்றுப்போனதாகவே இருக்கும்" என்றார்.[13] இஸ்ரவேலின் வட இராஜ்யத்தில் ஒழுக்கம் உயர்த்திப் பிடிக்கப்படவில்லை, ஆனால் தேவன் அப்படிப்பட்ட ஒரு மனிதனை

உடையவராக இருந்தார்: போராட்ட நாட்களுக்கான அவருடைய மனிதர். நாம் இன்னமும் போராட்ட காலங்களில் நெருக்கடியான காலங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் - நமக்கு இன்னமும் எலிசாவின் குணாதி சயங்களையுடைய ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமியர் தேவையாயிருக்கிறார்கள். டேல் கார்ட்மேன் என்பவர், "அசாதாரணமான குணாதிசயங்களையுடைய சாதாரண மனிதர்கள்" நமக்கு தேவையாயிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.[14] நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், தேவன் நம்பத்தகுந்த ஒரு ஆண் அல்லது ஒரு பெண்ணாக இருக்க தீர்மானியுங்கள்!

குறிப்புகள்

[1]மறுபடியுமாக, இஸ்ரவேலிலும் யூதாவிலும் அதே பெயரையுடைய ராஜாக்கள் இருக்கிறார்கள்: யோவாஸ் (யோவகாஸ்). [2]நீங்கள் கண்ட ஒரு அழகான சூரிய அஸ்தமனத்தை விவரிக்கலாம். [3]எலிசாவின் உண்மையான வயதை நாம் தீர் மானிப்பதற்கு, அவர் எந்த வயதில் எலியாவின் பயற்சி உதவியாளரானார் என்பதை அறிய வேண்டியிருக்கிறது. [4]என்னுடைய NASB வேதாகமத்தின் ஓரக்குறிப்பின்படி, அவன் "அவருடைய முகத்தின்" பக்கமாய் அழுதான். ராஜாவின் கண்ணீர் துளிகள் ஒருவேளை தீர்க்கதரிசியின் முகத்தின் மேல் விழுந்திருக்கலாம். [5]மூலமொழி, "அம்புகளை தரையில் எய்" என்ற அர்த்தத்தை கொடுக்கலாம். [6]சீரியரை மேற்கொண்டு, தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் பொருப்பு யெரோபெயாம் - II வுக்கு விடப்பட்டிருந்தது (2 இராஜாக்கள் 14:25, 28). [7]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary*, vol. 5, *1 & 2 Kings*, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 265; Josephus *Antiquities* 9.8.6. [8]ஒரு முந்தைய பாடம் மோவாபியர் இஸ்ரவேலுக்கு விரோதமாக கலகம் செய்ததை குறிப்பிட்டிருந்தது (காண்க 2 இராஜாக்கள் 3:4, 5). [9]2 இராஜாக்கள் 13:21 ஆம் வசனத்தின் முதற்பகுதியிலே காணப்படும் குறிப்பை விவரித்து கூறும் முயற்சி-யாக இந்த பத்தி அமைந்துள்ளது. [10]செத்துப்போன ஒரு மனிதனின் எலும்புகளால் செய்யப்பட்ட ஒரு உண்மையான அற்புதத்தை பற்றிய ஒரு பதிவு இருப்பது இதுதான் முதல் முறை என்றும், இதுவே கடைசி முறை என்றும் நான் நம்புகிறேன்; இருப்பினும் இதின் பேரிலும் இது போன்ற பிற அற்புதங்களின் பேரிலும் அற்புதம் செய்வது தொடர்பான புனை கதைகள் [கத்தோலிக்க சபையால்] புனையப்பட்டுள்ளன. (Adam Clarke, *The Holy Bible with a Commentary and Critical Notes*, vol. 2, *Joshua-Esther* [New York: Abingdon-Cokesbury Press, n.d.], 525.)

[11]Albert Barnes, "Kings," *The Bible Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1953), 264; quoted in James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings*, James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 171. [12]Quoted in George W. Truett, *The Prophet's Mantle* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1948), 19. [13]Ibid. [14]Dale Hartman, sermon preached at the Eastside church of Christ, Midwest City, Oklahoma, 21 December 2003.